தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு

முனைவர் சு.சக்திவேல்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பழமொழிகள்- ஓர் ஆய்வு

முனைவர் சு. சக்திவேல்

பேராசிரியர்-தலைவர் (ஓய்வு)

நாட்டுப்புறவியல்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-337-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 277

திருவள்ளுவராண்டு 2035, மார்கழி - திசம்பர் 2004

நூல்	:	தமிழ்ப் பழமொழிகள் - ஓர் ஆய்வு
ஆசிரியர்	:	முனைவர் சு. சக்திவேல்
மொழி	:	தமிழ்
பொருள்	:	நாட்டுப்புறவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2004
பக்கம்	:	460
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ
அளவு	.	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரு. 120/-
படிகள்	:	1000 படிகள்
அச்சு	.	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

துணைவேந்தர்

அணிந்துரை

பழமொழிகள் வாழ்க்கையின் அனுபவ மொழிகளாகத் திகழ்வன. மாந்தர்தம் மூதுரைகளாகத் திகழும் இப்பழமொழிகளை நாட்டுப்புற ஆய்வியலறிஞர் பல்வேறு வகைகளாகப் பகுத்து ஆராய்ந்துள்ளனர். வாழ்வியல் உண்மைகளின் வெளிப்பாடுகளைப் பழமொழிகள் மிகச் சுருக்கமாக எடுத்துரைக்கும். இப்பழமொழிகள் நாட்டுமக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் எளிதாகப் புலப்படுத்துவன. பழமையும் எளிமையும் இனிமையும் நிறைந்த இப்பழமொழிகள் வாழ்க்கைக்குக் கைவிளக்குப் போல் அமைவன.

வாய்மொழி இலக்கியங்களில் மிகப் பழமையான சுருங்கியவடிவம் உடையது பழமொழியாகும். பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்று பழமொழி நானூறு. அறங்கூறும் இலக்கியமான பழமொழியை நாட்டுப்புற இலக்கியவகையுள் வகைப்படுத்துவர். மக்களின் நாவில் வழங்கும் பழமொழிகளை அறிஞர்பலர் தொகுத்துப் பதிவு செய்துள்ளனர். பெர்சிவல், ஜான்லர்சரஸ் முதலாய அயல் நாட்டுப் பெருமக்களும் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்துப் பதிவு செய்துள்ளனர். 1842 ஆம் ஆண்டில் பெர்சிவல் தமிழகப் பழமொழிகளைத் தொகுத்து ஆராய்ந்தார். தொடர்ந்து இன்று நூற்றிற்கும் மேற்பட்ட நூல்கள் பழமொழி பற்றித் தோன்றியுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையில் பணியாற்றிய முனைவர் சு. சக்திவேல் அவர்கள் ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்

இந்நூலினை உருவாக்கியுள்ளார். இயற்கை, விலங்கு பறவை இனங்கள், தாவரங்கள், சமூகமும் பண்பாடும், மனிதப்பண்புகள் எனத் தமிழ் மொழிகளைப் பல்வேறு வகைப்படுத்தி ஆராய்ந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பழமொழிகளின் வழக்காறுகளைச் சூழல், வெளிப்படுத்தும் முறை, செயல்படும் முறை ஆகியவற்றுடன் இணைந்து நோக்கி இந்நூலினை நன்கு உருவாக்கியுள்ளார். பழமொழிகள் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதையும் உரிய தரவுகள் மூலம் ஆய்ந்துள்ளார்.

காலந்தோறும் தோன்றிய பழமொழிகளைத் தொகுத்து வரையறை செய்து ஆராய்ந்தால் தொன்மைத் தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இயலும்.

நூலாசிரியர் முனைவர் சு. சக்திவேல் இவ்வகையில் பழமொழிகளை ஆராய்ந்து எழுதிய இந்நூல் நாட்டுப்புற இயலுக்கு ஒரு புதிய வரவாகும்.

நூலாசிரியருக்கும், நூலினை நன்கு உருவாக்கம் செய்து வெளியிடும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
11.12.2004

இ. சுந்தரமூர்த்தி

முகவுரை

இந்நூற்றாண்டு தந்த அறிவியல் துறைகளுள் நாட்டுப்புறவியலும் ஒன்று. வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்ந்து வருகின்ற நாட்டுப்புறமக்களின் வாழ்வையும் வாழ்வுக் கூறுகளையும் படம்பிடித்துக்காட்டும் இயல் நாட்டுப்புறவியல். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் விளக்குவது நாட்டுப் புறவியலாகும். மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். அந்த நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறே பழமொழிகள். மூதறிவிலிருந்து தோன்றிய பழமொழி நினைவுக்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள 'மொழி' உறுதிப்படுத்துகின்றது. 'பழமொழி' என்ற சொல்லே பழமொழி பற்றிய சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார் ஜான் லாசரஸ் எனும் அறிஞர். அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (Fixed phrase genre) பயின்றுடன் வருகின்றன. பழமையான நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் வரலாற்றினையும் பண்பாட்டினையும் மனித உணர்வுகளையும் காட்டுபவை பழமொழிகள் என்பதை இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பல்துறை ஆய்வும் கோட்பாட்டு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யப் பெருந்துணையாக இருக்கும். முன்னைய கள ஆய்வுகளில் சேகரித்த தரவுகளும் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வுத் திட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் ஆலோசனையும் அளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களுக்கு எனது நெஞ்சுநிறை நன்றி உரித்தாகுக. களப்பணியில் தகவலாளர்களாகப் பணியாற்றியவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் நன்றி உரித்தாகுக. இவ்வாய்வுத் திட்டம் தொடர்பான ஆலோசனை நல்கிய டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியன், டாக்டர் பி. தங்கவேலு ஆகியோருக்கும் எனது நெஞ்சுநிறை நன்றி உரித்தாகுக. சிறந்த முறையில் தட்டச்சு செய்த திரு. மோ. கோ. கோவைமணி அவர்களுக்கும் எனது நெஞ்சுநிறை நன்றி உரித்தாகுக.

சு. சக்திவேல்

பொருளடக்கம்

1. முன்னுரை 1

2. தமிழ்ப் பழமொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் 23

3. தமிழ்ப் பழமொழிகளை வகைப்படுத்தல் 76

4. தமிழ்ப் பழமொழிகள் காட்டும் சமுதாயமும் பண்பாடும் 250

5. தமிழ்ப் பழமொழிகள் - நடையியல் ஆய்வு 405

6. தமிழ்ப் பழமொழிகள் - அமைப்பியல் ஆய்வு 415

7. தமிழ்ப் பழமொழிகள் - உளவியல் ஆய்வு 427

பின்னிணைப்பு 444

துணைநூற்பட்டியல் 449

1. முன்னுரை

இந்நூற்றாண்டு தந்த அறிவியல் துறைகளுள் நாட்டுப்புறவியலும் ஒன்று. வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்ச்சிபெற்று வருகின்ற நாட்டுப்புறமக்களின் வாழ்வையும் வாழ்வுக் கூறுகளையும் படம் பிடித்துக்காட்டும் இயல் நாட்டுப்புறவியல். ஏட்டிலே வராத எழுத்திலே காண முடியாத ஆனால் உள்ளத்தே ஊறிக் கிடக்கும் எத்தனையோ எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் அப்படியே படம் பிடித்துக்காட்டுவது நாட்டுப்புறவியலே. இதனால்தான் இன்று நாட்டுப்புறவியல் ஆராய்ச்சி வளர்ச்சிபெற்று வரக் காண்கிறோம்.

உலகில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்ந்தன எனக் கூறலாம். மனித இனம் தோன்றி வளரத்தலைப்பட்ட காலத்தே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். மண்ணின் மைந்தர்தம் மனக் கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புறவியலை நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட படைப்புக்கள் (Traditional) என்பர்.

நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வழக்கிலுள்ளன. நாட்டுப்புற வழக்காறுகள் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்க வேண்டும் என அமெரிக்கப் பேரறிஞர் ரிச்சார்ட் டார்சன் (Richard M.Dorson) கூறுகிறார். எழுத்திலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புற இலக்கியம் சமுதாயம் காட்டும் கண்ணாடி எனலாம். பிரான்சிஸ் லீ உட்லி வாய்மொழியாகப் பரப்பப்படுவது நாட்டுப்புறவியல் என வரையறை செய்கிறார். மரபு சார்ந்த நாட்டுப்புற மக்களின் அறிவியல் என்கிறார் ஜோன்ஸ் பால்ஸ் அவர்கள். மானிடவியல் பேரறிஞர் வில்லியம் பாஸ்கம் அவர்கள் புராண மரபுக் கதைகள், கதைகள், பாடல்கள், பழமொழி,

விடுகதை, கலையின் கூறுகள் அனைத்தின் அறிவையும் நாட்டுப்புறவியல் என்ற சொல் உணர்த்துகின்றது எனக் கூறுவதோடு இலக்கியத்தைப் போலவே நாட்டுப்புற இலக்கியமும் இசை, நடனம், ஓவியம் முதலியவற்றோடு தொடர்புடையது. ஆனால் வெளிப்படுத்தும் முறையில்தான் வேறுபடுகிறது என்கிறார்.

'Folklore' என்பது மக்களால் பரம்பரை பரம்பரையாக மரபுவழி உண்டாக்கப்பட்ட ஆக்கங்கள் எனவும் எழுத்துருவமில்லாத மொழிகளைக் கொண்ட மக்களிடையே காணப்படுவன எல்லாம் இதில் அடங்கும் எனவும் நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் கலாச்சாரத்தின் ஒரு பகுதி எனவும் பழமையான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுச் சின்னங்கள் என்றெல்லாம் அறிஞர்கள் விளச்கமளிக்கின்றனர். வழக்காறுகளைக் குறித்த இச்சொல் காலப்போக்கில் வழக்காறுகளைப் பற்றிய ஆய்வையும் குறிப்பதாயிற்று என இரஷ்யப் பேரறிஞர் செக்கொலோவ் (Sokolav) கூறுகிறார். பண்டைய நம்பிக்கைகள், வழக்கங்கள் பற்றிய அறிவியலே நாட்டுப்புறவியல் என ஸ்ரிஃபன் பியூக்ஸ் கூறுகிறார். வழக்காறுகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவுவதைப் பற்றி ஆராய்வதே நாட்டுப்புறவியல் என்கிறார் ஆர்ச்சர் டெய்லர் (Archer Taylor). நாட்டுப்புறவியல் என்பது மக்களது பண்பாட்டை ஆராயும் ஆய்வு என தியோடர் கஸ்டர் (Theodor gaster) கூறுகிறார். நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும் என எஸ்பினோசா குறிப்பிடுகிறார்.

மக்களது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், பாடல், ஆடல், கதைகள் ஆகியவற்றை விளக்குவதே நாட்டுப்புறவியல் என்றும் அஃது அனைத்து மக்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பெற்று, தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்று பயிற்சிபெற்ற ஆய்வாளர்களின் முயற்சியால் எழுத்துருவாக்கம் பெறுகின்றது என்று கெர்ட்ருத் கூரத் (Gertrude kurath) கூறுகிறார். நாட்டுப்புற இலக்கியம் என்பது உயிரோடுள்ள

புதை வடிவமாகும். அஃது அழிந்து போக மறுப்பதுடன் மனித சமுதாயத்தின் பல்லாயிரம் ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் பண்பாட்டின் அறிவியலின் படிவங்களாகும் என்கிறார் சார்லஸ் பிரான்சிஸ் போட்டர் (Charles Francis Potter). மக்களது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றில் காணப்படும் பதிவுபெறா மரபுகளை (Unrecorded tradition) ஆராயும் அறிவியலே நாட்டுப்புறவியல் என்று குரோகன் டை (Krohen Die) குறிப்பிடுகிறார். நாட்டுப்புறச் சமுதாயத்தில் நிலவும் வாய்மொழியாக வழங்கும் கதை, பாடல், பழமொழி, விடுகதை மற்றும் கலைகள், சடங்குகள் பற்றி ஆராய்வது நாட்டுப்புற இயல். மரபு வழிப்பட்ட உரைநடை, பாடல்களைத் தவிர பண்பாட்டு மானிடவியலாளர் குறிப்பிடும் கலை, கைவினைப்பொருள், நம்பிக்கை, வழக்கங்கள் பற்றியும் நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது என்கிறார் வோக்லின் (Voegelin) அவர்கள். நாட்டுப்புற மக்களின் வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாடல், கதை, பழமொழி, விடுகதை, மந்திர தந்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, தனி மனிதர்களின் கூட்டு முயற்சியாகப் பரிணமிப்பதோடு மாற்று வடிவங்களை மீண்டும் மீண்டும் வருதலுமாகிய பண்புகளையும் கொண்டது என மரியா லீச் (Maria Leach) குறிப்பிடுகிறார். வழக்காறுகள் நாட்டுப்புற மக்களிடையே மட்டுமின்றி நகர்ப்புற மக்களிடையேயும் நிலவுவதால் அதைப்பற்றி ஆய்வதையும் நாட்டுப்புறவியல் எனக் கூறலாம் என ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) குறிப்பிடுகிறார். சுருங்கக் கூறின் நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட நாட்டுப்புற மக்களின் படைப்புக்கள் எனலாம்.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற இரண்டு பெரும்பிரிவில் அடக்குவர். நாட்டுப்புற இலக்கியப் பிரிவில் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, விடுகதை, புராணங்கள் அடங்கும். தமிழ்ப் பழமொழிகளை ஆராய்வதே இவ்வாய்வுத் திட்டத்தின் நோக்கமாகும்.

மனித இன வரலாற்றில் நாகரிகப் பண்பாட்டுப் பழமையினை உணர்த்தும் சாதனங்களில் வாய்மொழி இலக்கியமும் ஒன்று. மூதறிவிலிருந்து தோன்றிய மொழி

பழமொழி. பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழ-மொழியிலுள்ள 'மொழி' என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாகப் பழமொழிகளும் விடுகதைகளும் திகழ்கின்றன. பேச்சுமொழியே முதன்மையானது என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும். Sayings, Old Sayings என்ற ஆங்கிலச் சொற்களை நோக்கின் இவ்வுண்மை புலனாகும். பழங்காலத்திலிருந்தே மக்கள் நாவில் பயின்று வருபவை பழமொழி. பழ-மொழி என்ற சொல்லே இதனை உறுதிப்படுத்துகிறது என ஜான் லாசரஸ் கூறியுள்ளார்.

தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், பழஞ்சொல் என ஆறு சொற்கள் இருப்பதாக சேந்தன் திவாகரம் கூறுகிறது. பழமொழியைக் குறிக்க முப்பத்து நான்கு சொற்கள் இருப்பதாக பெருமாள்[1] குறிப்பிடுகிறார். 1. பழகுமொழி, 2. தொன்னெறி மொழி, 3. முதுமொழி 4. முதுசொல் 5. தொன்றுபடு கிளவி 6. தொன்றுபடு பழமொழி 7. பழமொழி 8. வாய்மொழி 9. அறம் 10. நெடுமொழி 11. பல்லவையோர் சொல், 12. பண்டைப் பழமொழி, 13. சொலவு, 14. மூதுரை, 15. பழஞ்சொல், 16. மூத்தோர் சொல் வார்த்தை, 17. வழக்கு, 18. உரை, 19. பழைய நெறியனாய் வரும் சொல், 20. பழவார்த்தை 21. உலகமொழி, 22. உபகதை, 23. சுலோகம், 24. சொலவடை, 25. வசனம், 26. எழுதா இலக்கியம், 27. வாய்மொழி இலக்கியம், 28. எழுதாக் கிளவி 29. கேள்வி, 30. சுருதி, 31. நீதிமொழி, 32. முதுமை, 33. மொழிமை, 34. முன்சொல். வையகத்தார் வழக்கு, சொலவு என்ற சொற்களும் பழமொழியைக் குறித்து வழங்குவதாக இலக்கியங்களில் காணப்படுகின்றன.

அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (Fixed Phrase genre) பயின்று வருகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களில் குறுகிய அமைப்புக்கொண்ட பழமொழிகளும் விடுகதைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய

1. வ. பெருமாள், பலநோக்கில் பழமொழிகள் பக். 105-106

தொடர்புடையனவாகும். பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன.

'பழமொழி' என்ற சொல்லே பழமொழி பற்றிய சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார் ஜான் லாசரஸ் அவர்கள். 'பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவதாகும். அது முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும்போது முழுக் கருத்தும் வெளிப்படும்' என்கிறார் துர்கா பகவத்.[1] பழமொழியானது எளிதில் கவனிக்கக்கூடிய, சேகரிக்கக்கூடிய தொன்மை வாய்ந்ததாக இருப்பினும் புரிந்து கொள்ளல் கடினம் என்கிறார் ரிச்சார்ட் டார்சன்[2] அவர்கள். பலரின் அறிவையும் ஒருவரின் உண்மைத் தன்மையையும் உணர்த்துவனவாகும் என்கிறார் ஜான் ரஸ்ஸல். எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைச் சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்துவன பழமொழிகள் என ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தியம்புகிறது.

பழமொழி என்ற சொல்லே மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் அறியமுடியும் அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம்.[3] பழமொழிகள் மக்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்து விட்டன. பழமொழி மூலம் மக்களது

1. A proverb is a pithy sentence which tells on unpalatable truth in a condensed way. The state of truth however is incomplete its exaggerated and expressed metaphorically.
 - Durga Bhagawat, An outline of Indian Folklore, P. 46

2. Proverbs are one of the most early observed and collected genres of traditional expression yet one of the least understood.
 - Richard M.Dorson, Folklore and Folklife an Introduction, p. 117.

3. Proverbs is one of the ancient and significant genre of oral folklore. The wisdom of many and the wit of the one. Proverb may be said to the abridgement of wisdom.
 - Standard Dictionary of Folklore mythology and legend, pp. 902 - 905.

பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம். சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் பண்பாட்டை அறியத் துணைபுரிகிறது.[4] பொருட்செறிவும் ஆழ்ந்த கருத்துக்களும் நிரம்பிய சொற்றொடர்கள் பழமொழி என்ற குறியுடன் நின்று நிலவுகின்றன. பழமையும் எளிமையும் இனிமையும் வாய்ந்தது. பழமொழிகள் அறிவுரையையும் கொண்டிலங்குவதோடு வாழ்க்கைக்குக் கை விளக்காகவும் பயன்படுகின்றன.

அறிவு வளர்ச்சியிலே பிறந்து சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய பண்புகளால் என்றும் இறவாமல் இவ்வுலகில் வாழ்கின்றன என்கிறார் அரிஸ்டாட்டில் எனும் பேரறிஞர். வாழ்க்கை அனுபவ அடிப்படையில் எழுந்த குறுகிய அமைப்புடையது என்கிறார் ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் செல்வந்தே அவர்கள். டிரென்ச் (R.E. Trench) 'பழமொழிகளும் அவற்றின் படிப்பினைகளும்' என்ற நூலில் பழமொழி ஒரே மூச்சில் சொல்லககூடியதாகவும் சுருக்கமாகவும் செறிவாகவும் கூர்மையாகவும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இவர் கூறும் வரையறை தொல்காப்பியர் கூறும் வரையறை போன்று உள்ளதெனலாம். ஆலன் டான்டிஸ் (Alan Dundes) அமைப்பியல் அடிப்படையில் வரைவிலக்கணம் அளிக்கிறார். ஒவ்வொரு பழமொழியும் விளக்கக்கூறு (Descriptive element) ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும். அவ்விளக்கக்கூறு தலைப்பையும் (Topic) முடிபுரையை (Comment) யும் பெற்றிருக்க வேண்டும். இவ்விளக்க அடிப்படையில் ஒருசொல் பழமொழிக்கு வாய்ப்பில்லை என்று உணரலாம். வாழ்வை ஊன்றிக் கவனித்து உணர்ந்த

4. Proverbs and proverbial expressions are new and apparently have been an integral part of people's life. They are an element of the culture of people on all levels of society from the most ignorant to the most sophisticated. The various levels to be sure possess and employ proverbs in different ways.
- Ray B. Browne, The wisdom of many - The Proverb and Proverbial expression, American Folklore, pp. 217-218

உண்மைகளின் துணுக்குகளே பழமொழிகள் என ஆக்ஸ்போர்டு அகராதி கூறுகிறது.

பழமொழி பற்றி ஒவ்வொரு நாட்டினரும் கருத்து கூறியுள்ளனர்.

'அறிவின் குழந்தைகள் பழமொழிகள்'
- இங்கிலாந்து

'பழமொழிக்கு மேற்சொல் இல்லையாகையால்
அதனை யாரும் மறுக்க முடியாது.'
- அயர்லாந்து

'உண்மையில் குழந்தைகள்'
- வேல்ஸ்

'மக்கள் எப்படியோ அப்படியே பழமொழிகள்'
- ஸ்காட்லாந்து

'திருடனையும் அறிவாளியாக்கவல்லது'
- பிரான்ஸ்

'பழமொழி அறிவிலிருந்து வருகிறதென்றும்
அறிவு பழமொழியிலிருந்து வருகிறதென்றும்
அவற்றை மக்கள் புழங்கும் நாணயங்கள்
எனப் பாராட்டுகிறது.' - இரஷ்யா

'நாள்தோறும் அனுபவம் பெற்ற குழந்தைகளே பழமொழிகள்'
- டச்சு

'பழமொழிகளைக் குட்டிச்சுவிசேடம் என்பர்'
- ஸ்பெயின

'இறைவனுடைய குரல் பழமொழி'
- ஸ்பெயின்

பல்லாண்டு கால மனித சமுதாயத்தின் அனுபவ அறிவு பழமொழி. வரலாற்றுப் பெட்டகம் என்றும் கூறுவர். பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்த பண்பாட்டுக் கருவூலங்களாகும். ஒருவன் தான் பெற்ற அனுபவத்தை முத்திரை வார்த்தைகளால் பழமொழியாகப் பொறிக்கிறான். அனுபவங்களின் அணிவகுப்பு என்றே கூறலாம். பழைய மொழியே பழமொழியாகும். பழமொழிகள் மூலம் மக்களது பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறியலாம். ஒரு நாட்டின் பழக்க வழக்கங்கள் சாதி, சமயம், அன்பு, பண்பு, சமூக அமைப்பு ஆகியனவற்றை அறிவதற்கேற்ற கருவி பழமொழியாகும்.

கதை மூலம் பழமொழி தோற்றம் பெறுகின்றன. கதை, செய்யுள், தனிமனிதர் மற்றும் பிறமொழியினின்றும் கடன்வாங்கல் மூலமும் பழமொழிகள் உருவாகின்றன. நிகழ்ச்சி, செயலினின்றும் பழமொழிகள் உருவாகின்றன. நிகழ்ச்சியின் குறியீடாகவோ, உருவகமாகவோ இருக்கும். முன்பே வழக்கிலுள்ள பழமொழிகளிலிருந்து பல்வேறு வடிவங்களுடைய பழமொழிகள் தோற்றம் பெறுவதுண்டு. மனித அச்சமும் மற்ற மனிதரிடமுள்ள வெறுப்பும் பழமொழி தோன்றக் காரணமாகின்றன. தத்துவம், சமயம் முதலியவைகளும் பழமொழித் தோற்றத்திற்குக் காரணமாகும். சுற்றுச்சூழல் அடிப்படையிலும் பழமொழி தோன்றுகிறது. குறியீடாகவோ உருவகமாகவோ பயன்படுத்தும் நிகழ்ச்சியினின்றும் உருவாதல் உண்டு. புதியனவற்றைக் காண விழையும் மனித மனமும் மாற்றத்தில் விருப்பமும் பழமொழியை உருவாக்குகிறது. பழமரபுக் கதைகளினின்றும் பழமொழிகள் உருவாகின்றன. பெரும்பாலான நாடுகளில் நீதிக்கதைக்கும் பழமொழிக்கும் அதிக வேறுபாடு இராது.

வாய்மொழி இலக்கியங்களில் மிகப் பழமையானதும் சுருங்கிய வடிவமுடையதும் மக்களது வாழ்வைப் பிரதிபலிப்பதும் பழமொழிகளாகும். அனுபவத்தின் சாரமாகத் திகழ்கிறது. மனிதன் கண்ட அனுபவங்கள் பழமொழிகளாக வெளிப்படுகின்றன. வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். அப்பழமொழிகள் மக்கள் பேசும் மொழியிலேயே அமைந்துள்ளது. பழமொழி என்ற சொல்லோ மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலருடைய அறிவையும் ஒருவரது

நுண்ணுணர்வையும் அறியமுடியும். அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம்.[5] பழமொழிகள் மக்கள் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்துவிட்டன. சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் பண்பாட்டை அறிய பெருந்துணைபுரிகிறது.[6] பொருட்செறிவும் ஆழ்ந்த கருத்துக்களும், நிரம்பிய சொற்றொடர்கள் பழமொழி என்ற குறியுடன் நின்று நிலவுகின்றன. சில சொற்களால் பலவகை உணர்வுகளையும் எழுப்பவல்ல சிறந்த இலக்கியக் கூறாகவும் பண்பாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சியை வரையிட்டுக் காட்டும் வாயிலாகவும் திகழ்கின்றது. வாழ்க்கையில் உயிர்ப் பண்பும் உணர்வுப் பண்பும் அறிவுக்கூறுகளும் பழமொழிகளில் கருவாக அமைந்து வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது. சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணையாக உள்ளது. பழமொழிகள் அறவுரையையும் அறிவுரையையும் கொண்டிலங்குவதோடு வாழ்க்கைக்குக் கைவிளக்காகவும் பயன்படுகிறது. தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியம் என்றே கூறலாம். இத்தகைய வாழ்க்கை இலக்கியம் முறையாகத் தொகுத்துப் பாதுகாக்கப்படவில்லை

---

5. Proverbs reflect wisdom of community. It reveals experienced fact. Proverb is a short sentence based on long experience. A proverb is what man thinks. Proverbs are daughters of experience. They are an index of folk mind and they provide valuable record of vocabulary and language of common people. Proverbs are words of ancient or saying of the community.
   - Standard Dictionary of Folklore, Mythology and Legend, pp.902 - 905.

6. Proverbs are an element of the culture of people on all levels of society from the most ignorant to the most sophisticated. The old difinition - The Wisdom of many and wit of one is perhaps as sharp and effective as any.
   - American Folklore, pp. 217 - 228

என்பதை லாங் பாதிரியார் (1881) அவர்கள்[7] தமது நூலின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.

'ஆராய்ச்சிக்கு நாணயங்களும் கல்வெட்டுக்களும் எவ்வளவு தூரம் இன்றியமையாததோ அவ்வளவு பழமொழிகளும் முக்கியமானவை என்பதனைக் கீழைத்தேசக் கல்வியாளர்கள் இப்பொழுதுதான் உணர்ந்து வருகிறார்கள். முன்னையனை அரசர், மேல்வகுப்பினர் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் தருவதுபோல பழமொழிகள் சமூக வாழ்க்கையின் இருண்ட பகுதிகளை உணர்த்துவனவாக உள்ளன. பழமையான நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் வரலாற்றினையும் மனித உணர்வுகளையும் காட்டுபவையாக உள்ளன பழமொழிகள்.'

பழமொழிகளின் தன்மைகளை அல்லது இயல்புகளை இவண் காண்போம்.

1. அளவில் சிறியதாக இருக்க வேண்டும்.
2. பொருளுடையதாகவும் இருக்க வேண்டும்.
3. மோனை, ஒலியியைபு கொண்டதாகவும் இருக்கும்.
4. எளிதில் நினைவில் நிற்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
5. எளிதாக பொருள் விளங்கும்படியும் இருக்க வேண்டும்.
6. சொற்கள் கூர்மையுடன் இருக்க வேண்டும்.
7. அன்றாட வாழ்வில் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
8. ஒரே மூச்சில் சொல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
9. குறைந்தது இருசொல் பழமொழியாக இருக்க வேண்டும். ஒருசொல் பழமொழியே இருக்காது.
10. உருவகமாகவும் உண்மைப் பண்பு கொண்டதாகவும் இருக்கும்.
11. தற்சார்பற்றது மட்டுமின்றி நேர் பொருளை உணர்த்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
12. பொதுவான (Universal) உண்மையின் அடிப்படையில் அமைய வேண்டும்.

---

7. J. Long, Eastern Proverbs and Emblems, London, 1881.

13. புகழத்தக்க நடையையும் கவர்ச்சியையும் உடையதாக இருக்க வேண்டும்.
14. வழக்கில் பயின்று வருவனவாகவும் இருக்க வேண்டும்.
15. அறக்கோட்பாட்டை வலியுறுத்துவனவாக அமைய வேண்டும்.
16. தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.
17. அனுபவ அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.
18. உணர்ந்து கூறக்கூடிய கருத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.
19. மக்கள் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவும் இருக்க வேண்டும்.
20. மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
21. நிலைத்த தொடரமைப்பு (Fixed Phrase genre) உடையதாகவும் இருக்க வேண்டும்.
22. எளியோர் நாவில் வழங்கத்தக்கதாக இருக்க வேண்டும்.
23. அனுபவ உண்மைகளாக இருக்க வேண்டும்.
24. குறிக்கோள் உடையதாகவும் இருக்க வேண்டும்.
25. மக்கள் நாவில் வழங்கி வழங்கி பழமையுடையதாகவும் இருத்தல் வேண்டும். தொன்றுதொட்டு வரும் பழமையுடையதாக இருத்தல் வேண்டும்

பழமொழியும் விடுகதையும்

பழமொழியும் விடுகதையும நிலைத்த தொடரமைப்பு வகையைச் (Fixed phrase genre) சார்ந்ததெனினும், அவற்றினிடையே ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. அவற்றை அறிந்து கொள்வது பழமொழி, விடுகதையைப் புரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக இருக்கும். ஆர்ச்சர் டெய்லர் (Archer Taylor), சொக்கொலாவ் (Sokolav), ஆலன் டாண்டிஸ் (Alan Dundes), பாஸ்கொஸ் (Basgos), போன்றோர் இவ்விரண்டுக்குமிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்துள்ளனர். பழமொழிகளும் விடுகதைகளும் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றுகளாக அமைகின்றன. அனுபவ முதிர்ச்சிக்குச் சான்றான பழமொழிகள் யாவும் சமுதாயத்தின் செழுமையான பட்டறிவின் அடிப்படையிலே விளைந்த அறிவுரைகளாகவும் சிந்தனைக் கருவூலங்களின் திரண்ட சாரமாகவும் அமைகின்றன. குறுகிய அமைப்புக்கொண்ட பழமொழிகளும் விடுகதைகளும் நெருங்கிய தொடர்புடையதாகும். சொல்லக்கூடும் கருத்துக்களையும் வலியுறுத்த விரும்பும்

கருத்துக்களையும் ஆணித்தரமாகச் சுருங்கிய மொழியிலே எடுத்தோதுவதற்குப் பழமொழிகளும் விடுகதைகளும் பயன்படுத்தப்படுகின்றன. உயிர்ப் பண்புகளாகிய உணர்வுப் பண்பும் அறிவுக்கூறும் கருவாக அமைய அவற்றினூடே படைப்போனின் உணர்வுக்கும் அறிவுக்கும் தக உருவம் பெற்று சாவா மூவாப் பெருவாழ்வு பெற்றுள்ள சமூகப் பண்பாட்டுக் கூறுகளே பழமொழிகளும் விடுகதைகளுமாகும். பழமொழி விடுகதையாகவும் விடுகதை பழமொழியாகவும் மாறுவதுண்டு.

> நடக்கத் தெரியாதவன் நட்டுவனாருக்கு வழி காட்டுவானா?
> - பழமொழி
>
> நடக்கத் தெரியாதவன் நட்டுவனாருக்கு வழி காட்டுகிறான். அவன் யார்? - விடுகதை (கைக்காட்டி)

விடுகதையில் அவன் யார்? என்ற வினா வருகிறது.

ஒற்றுமைகள் (Similarities)

1. இவ்விரண்டிற்கும் அடிப்படை வாக்கியங்களே. செய்யுளுக்குரிய நடையும் உண்டு.
2. இவ்விரண்டிலும் கூறுகளின் பொருத்தத்தின் மூலம் குறிப்பிட்டதை (Referents) உணர முடிகிறது.
3. உடன்பாட்டு (Non-oppositional) எதிர்மறை (Oppositional) பழமொழிகள் இருப்பது போன்று, உடன்பாட்டு, எதிர்மறை விடுகதைகளும் உண்டு.
4. பழமொழி இல்லாமல் விடுகதையோ விடுகதை இல்லாமல் பழமொழியோ உள்ள சமூகத்தைக் காண முடியாது. பழமொழி உள்ள சமுதாயத்தில் விடுகதையும் விடுகதையுள்ள சமுதாயத்தில் பழமொழியும் நிச்சயமிருக்கும்.

---

1. Both have sentences as their linguistic framework and device of poetry as the stylistic basis.
2. In the case of both, referents are to be inferred through the aptness of their elements.
3. As there are oppositional and non-oppositional proverbs so there are oppositional and non-oppositional riddles also.
4. There is no culture which has the one genre the without other. Structurally the existence of one makes the presence of the other logically possible.

வேற்றுமைகள் (Differences)

1. பழமொழிகள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படுகின்றன. விடுகதைகள் விடுகதை அமர்வில் போடப்படுகின்றன.
2. பழமொழியில் எளிமையும் தெளிவும் உள்ளன. வினா எழுப்பி விடைகூற வேண்டிய நிலையில் சிந்தனைத் தடுமாற்றம் விடுகதையில் உண்டு.
3. பழமொழி விடை கூறுகின்றது. விடுகதை வினா எழுப்புகின்றது.
4. இயல்பான நிலையைப் பழமொழியிலும் மிக்கூறு இயல்பை விடுகதையிலும் காணலாம்.
5. பழமொழியில் மறைத்துக் கூறுவதை விடுகதையில் வெளிப்படையாகவும் விடுகதையில் வெளிப்படையாக உள்ளதைப் பழமொழியில் மறைத்தும் கூறுவதைக் காணலாம்.
6. பழமொழிகள் மறைவான கேள்விக்கு வெளிப்படையாகப் பதில் கூறினால், விடுகதைகள் வெளிப்படையான கேள்விக்கு மறைவான பதிலைத் தருகின்றன.
7. அமைப்பியல் அடிப்படையில் விடுகதைகள் மேல்நிலைச் சொற்றொடர்களையும் பழமொழிகள் சொல் துணுக்குகளையும் கொண்டிலங்குகின்றன.

தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்புக்கள்

மூன்றுரை அரையனாரின் 'பழமொழி நானூறு' முதல் பழமொழித் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து 'பழமொழி

Differences

1. Proverbs are used in everyday speech while riddles are used in riddle sessions.
2. While proverbs persuade and clarify, riddles confuse.
3. Proverbs provide answers, Riddles pose questions.
4. Proverbs are normative in character but riddles are aggressive in nature.
5. What is ostonsible in proverb is virtual in riddle and vice versa.
6. If proverb is an overt answer to covert questions, riddle is an overt question to a covert answer.
7. Structurally riddles are paraphrasal where as proverbs are phrasal cliches.

விளக்கம்' அல்லது 'தண்டலையார் சதகம்' என்பதைக் குறிப்பிடலாம். மேலைநாட்டாரின் வருகைக்குப் பின் தான் முறையான தொகுப்புப்பணி தொடங்கியது எனக் கூறலாம். முக்கியமான பழமொழித் தொகுப்புக்கள் மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

1.	1842	பெர்சிவல்	தமிழகப் பழமொழிகள்
2.	1870	லாரி	பழமொழிகள்
3.	1874	இராமசுவாமி அய்யங்கார்	மாணவர்களுக்கான தமிழ்ப் பழமொழிகளும் ஒத்த ஆங்கிலப் பழமொழிகளும்
4.	1877	எஸ். வேணுகோபால் நாயுடு	பழமொழி புத்தகம்
5.	1888	குப்புசாமி நாயுடு & த. கருப்பண்ணபிள்ளை	பழமொழித் திரட்டு
6.	1893	சுந்தரசாஸ்திரியார்	தமிழ்ப் பழமொழிகளும் அவற்றிற்கிணையான ஆங்கிலப் பழமொழிகளும்
7.	1894	ஜான் லாசரஸ்	தமிழ்ப் பழமொழிகளின் அகர வரிசை
8.	1894	கிருஷ்ணசாமி செட்டியார்	ஆங்கிலப் பழமொழிகளும் அவற்றிற்கு நேரான தமிழ்ப் பழமொழிகளும்
9.	1896	கிருஷ்ணசாமி செட்டியார்	பயிர்த்தொழில் தொடர்பான பழமொழிகளும் வழக்குத் தொடர்களும்
10.	1897	ஹெர்மன்ஜென்சன் பாதிரியார்	தமிழ்ப் பழமொழிகளின் வகைப்படுத்தப்பட்ட தொகுப்பு
11.	1899	தி. செல்வக்கேசவராய முதலியார்	இணைப் பழமொழிகள்
12.	1902	பார்த்தசாரதி பிள்ளை	பழமொழித் திரட்டு
13.	1913	அனவரதவிநாயகம் பிள்ளை	பழமொழி அகராதி.

14.	1914	சி.ஆர்.சீனிவாச சாஸ்திரி	பழமொழிப் போதனை
15.	1916	வெ.ஆ. சிதம்பரம் பிள்ளை	பழமொழித் தீபிகை
16.	1946	கஸ்தூரி திலகம்	1001 அபூர்வப் பழமொழிகள்
17.	1950	இனியன்	பழமொழி விளக்கக் கதைகள்
18.	1952	நீலாம்பிகை அம்மையார்	ஆராய்ந்தெடுத்த 600 பழமொழிகளும் அவற்றிற் கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்
19.	1952		கழகப் பழமொழி அகர வரிசை
20.	1955	சுப்பிரமணிய நாவலர்	பழமொழித் திரட்டு
21.	1957	நந்தகோபாலன்	பழமொழிக் கொத்து
22.	1960	துர்க்காதாஸ் எஸ்.கே. சாமி	தமிழ்நாட்டுப் பழமொழிகள்
23.	1962	கே.எஸ். இலட்சுமணன்	தமிழகப் பழமொழிகள்
24.	1962	எஸ்.கே. நாயர் முதலியோர்	தென்மொழிப் பழமொழிகள்
25.	1964	கே.எஸ். இலட்சுமணன்	உலகப் பழமொழிகள்
26.	1965	செந்துறைமுத்து	பழமொழியும் பண்பாடும்
27.	1966	பூவை எஸ். ஆறுமுகம்	பகுத்தறிவுப் பழமொழிகள்
28.	1967	கே.எஸ். இலட்சுமணன்	வாழ்வியல் பழமொழிகள்
29.	1968	எஸ்.ஏ. சுலைமான்	பழமொழி ஆயிரம்
30.	1971	எஸ். குமாரசாமி	தமிழில் பழமொழிகள்
31.	1975	சாலை இளந்திரையன்	சமுதாய நோக்கில் பழமொழிகள்
32.	1976	தமிழ்வாணன்	பழமொழிகள்
33.	1980	ந.வீ. செயராமன்	பழமொழிகளில் வேளாண்மை அறிவியல்

34.	1982	தே. லூர்து	தமிழ்ப் பழமொழிகள் (முனைவர் பட்ட ஆய்வு)
35.	1982	ஜே. குமாரபிள்ளை	வேளாளர் பழமொழிகள் (நாஞ்சில் நாடு)
36.	1987	திருமதி. மீனாட்சி சுந்தரம்	Kongu Proverbs - A study
37.	1987	எம். குருமலேசு	படுகு பழமொழிகள்
38.	1987	ஆ. இராமகிருஷ்ணன்	படுகு தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஒப்பீடு
39.	1987	வ. பெருமாள்	பல நோக்கில் பழமொழிகள்
40.	1988	எஸ். சௌந்திர பாண்டியன்	தமிழில் பழமொழி இலக்கியம்
41.	1990	கி.வா. ஜகந்நாதன்	தமிழ்ப் பழமொழிகள்
42.	1992	ப. முருகன்	புதிய நோக்கில் பழமொழி

1894ல் பெர்சிவல் 'தமிழகப் பழமொழிகள்' என்ற நூலை வெளியிட்டார். 1870இல் லாரி என்பவர் 'பழமொழிகள்' என்ற நூலை வெளியிட்டார். 1894ஆம் ஆண்டு ஜான் லாசரஸ் வெளியிட்ட 'தமிழ்ப் பழமொழிகளின் அகரவரிசை' என்ற நூலில் பொருட்பாகுபாடும் பயன்பாடும் விளக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பண்பாட்டு வரலாற்றிலே பழமொழிகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விரிவாக விளக்கியவர் லாசரஸ். பண்பாட்டுத் தாக்கத்தை அறிய கால அடிப்படையில் அணுகவேண்டும் என்கிறார். 1897இல் ஹெர்மன் ஜான்சன் வெளியிட்ட 'தமிழ்ப் பழமொழிகளின் வகைப்படுத்தப்பட்ட தொகுப்பில்' பொருட்பாகுபாடும் விளக்கமும் ஆங்கில இணைப்பழமொழி களையும் கொடுத்துள்ளார். பழமொழி ஆய்வைத் தொடங்கி வைத்த பெருமை இவரையே சாரும். 1913இல் அனவரதவிநாயகம் பிள்ளை அவர்கள் 'பழமொழி அகராதி' என்ற ஒரு நூலை வெளியிட்டார். பழமொழி நானூறு, பழமொழி விளக்க வரிசையில் சீனிவாச சாஸ்திரிகள் (1914), 'பழமொழிப் போதனை'யும் இடம் பெறுகிறது. சேதுப்பிள்ளை முதலானோர் (1962) வெளியிட்ட 'தென்மொழிகளில் பழமொழிகள்' என்ற நூலில் நான்கு திராவிட மொழிகளில் இணையாகக் காணப்படும் பழமொழிகளைத்

தேர்ந்தெடுத்து வெளியிட்டுள்ளார்கள். திராவிடப் பண்பாட்டை அறிய இஃது பெருந்துணையாக அமையும். ஒப்பியல் ஆய்வில் முதல் முயற்சி என்றே கூறலாம். துர்க்காதாஸ் சாமி (1960) கே.எஸ். இலட்சுமணன் (1962) போன்றோர் பழமொழிகளைச் சேகரித்து அகரவரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் (1975) அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வைச் 'சமுதாய நோக்கில் பழமொழிகள்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்கள். பழமொழிகளைப் பதினாறு தலைப்புக்களில் நன்கு ஆராய்ந்துள்ளார். டாக்டர் வ. பெருமாள் (1987) அவர்கள் 'பல நோக்கில் பழமொழிகள்' என்ற நூலில் பழமொழிகளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். வாழ்நாள் முழுவதும் பழமொழியைப் பற்றியே சிந்தித்து எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரைப் 'பழமொழிப்பெருமாள்' என்றே அழைப்பர். கொங்கு நாட்டில் வழங்கப்படும் ஆயிரக்கணக்கான பழமொழிகளைத் தொகுத்து விளக்கமும் அளித்துள்ளார்கள். 'Kongu Proverbs - A Study' என்ற நூலில் திருமதி மீனாட்சிசுந்தரம் அவர்கள். பழமொழிகளைப் பேச்சு வடிவிலும், பின்னர் ஒலிபெயர்ப்பும் செய்து எழுத்து வடிவிலும் கொடுத்து விளக்கமும் அளித்துள்ளார். கொங்கு நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பற்றி அறிய பெரிதும் துணையாக உள்ளது. பழமொழி ஆய்வில் இந்நூல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். கி.வா. ஜகந்நாதன் அவர்கள் பல்லாண்டு காலம் சேகரித்த இருபதாயிரத்துக்கு மேற்பட்ட பழமொழிகளை அகரவரிசைபபடுத்தி 'தமிழ்ப் பழமொழிகள்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். பழமொழித் தொகுப்பில் இந்நூல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். சௌந்திரபாண்டியன், முருகன் போன்றோர்கள் பழமொழிகளைத் தொகுத்து நன்கு ஆராய்ந்துள்ளார்கள். தொகுப்பாக இருந்த நிலை மாறி ஆய்விலும் காலூன்ற ஆரம்பித்துவிட்டார்கள். பெரும்பாலான தொகுப்புக்கள் பழமொழிகளை அகரவரிசை இடப்பட்டு வெளியிடப்பட்டனவாகும். பொருள் அடிப்படையில் ஒருசில தொகுப்புக்களே உள்ளன. பழமொழியின் பரப்பை எண்ணும்போது தொகுப்புக்கள் மிகக் குறைவு என்றே கூறவேண்டும்.

நாட்டுப்புற வழக்காறுகளைச் சூழல், வெளிப்படுத்தும் முறை, செயல்படும் முறை இவற்றுடன் இணைந்து நோக்க வேண்டும். எந்தெந்த நேரத்தில் யார் யாருக்கு, எதற்காகப்

பழமொழி பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் நோக்க வேண்டும். பழமொழிகளைப் பொதுவாகப் பெரியவர்கள் சிறியவர்களுக்குக் கூறுவர். நமது சமூக அமைப்பில் சிறியவர்கள் பெரியவர்களுக்குப் பழமொழி கூறுவதில்லை. பெண் திருமண விஷயமாகப் பேசும்போது 'தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், பெண்ணை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை' என்பர். பெண்ணின் குணத்தைக் குறிப்பிடும்போது 'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்பர். 'அயிரைக்கு எதுக்கு வெலாங்குச் சேட்டை' என்ற பழமொழி மூலம் சிறியவர்கள் வயதுக்கு மீறிய செயல்களைச் செய்து வெற்றி பெறாதபோது மூத்தவர்கள் இப்பழமொழியைப் பயன்படுத்துவர். சிறியவர்களுக்கு எச்சரிக்கவும் இப்பழமொழியைப் பயன்படுத்துவர். தகுதிக்கு மீறிய பணியை மேற்கொண்டு தோல்வியுறுதலை நினைவு கூர்கிறது. 'அறுக்க மாட்டாதவன் இடுப்பிலே அஞ்சாறு கறுக்கருவாளாம்' உழைக்கும் விவசாயப் பெருங்குடிமக்கள் உழைக்காத மக்களைச் சுட்ட இப்பழமொழியைப் பயன்படுத்துவர். இப்பழமொழியை முழுமையாக அறிய சூழல் மிகவும் முக்கியமாகும். 'பெருமை ஒரு முறமாம் பொடச்சி பார்த்தா வெறும் முறமாம்' மூத்த பெண்கள் பயன்படுத்துவர். தலைக்கனம் பிடித்த பெண்களை ஏசப் பயன்படுத்துவர். மாமியார் மருமகள் வீட்டைத் தாழ்வாகக் குறிப்பிடவும் இப்பழமொழியைப் பயன்படுத்துவர். பெருமையடிப்போரின் பெருமையைப் புடைத்தால், உமியே மிஞ்சுகிறது. மனக்கசப்பு இப்பழமொழி பிறக்க அடிப்படையாகிறது. 'ஆவுரான் அவுசாரி போக தேவூரான் தெண்டம் கட்டினானாம்?' இப்பழமொழி மூலம் எவனோ செய்த தவறுக்கு மற்றவன் தண்டனைப் பெறுதலைக் குறிக்கிறது. இதில் ஒருவர் செய்த தவறுக்கு மற்றவர் தண்டனை பெறுதலை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. அத்துடன் விதியை நொந்து கொள்கிற தன்மை புலப்படுவதாகவும் கூறுவர். பழமொழிகள் பெரியவர்கள் வழி உரிய சூழலுக்கேற்ப வெளிப்படுகிறது. அச்சூழலை நோக்கினால்தான் உண்மையான பொருள் கிடைக்கும். கூறியவர், கூறக் கேட்டவர் மெய்ப்பாடுகளை நினைவில் கொள்ள வேண்டும். பழமொழியின் உயிர்த்தன்மையும் உணர்த்தும் திறனும் வெளிப்படுகிறது. இத்தகைய ஆய்வைச் சூழல் கோட்பாட்டாய்வு என்பர். 'பேசும் இனமரபு' என்றும் கூறுவர். பழமொழியைத்

தொகுக்கும்போது சூழலையும் நோக்க வேண்டும் என்பதை ஆலன் டண்டிஸ்[8] தனது கட்டுரை ஒன்றில் வலியுறுத்திக் கூறுகிறார்.

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்களைப் பற்றிப் பழமொழி பேசுகின்றது. பழமொழி தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழிகள் வெவ்வேறு காலத்தில் தோன்றியவையாக இருப்பினும், எக்காலத்துக்கும் பொருந்துவனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றைப் பிரதிபலிக்கின்றன. பழமொழிகள் மக்களின் பண்பாடு, நாகரிகத்தை அறிந்துகொள்ள உதவுகின்றன.

இவ்வாய்வுத் திட்டத்திற்காகச் சேகரிக்கப்பட்ட பழமொழிகளை ஆறு பெரும் பிரிவாகவும் முப்பத்திரண்டு சிறு பிரிவுகளாகவும் வகைப்படுத்தியுள்ளேன். வகைப்பாட்டில் அடங்காத பல்பொருள் பழமொழிகளை பல்பொருள் பற்றிய பழமொழிகள் என வகைப்பாடு செய்துள்ளேன். குறிப்பாக மனிதப் பண்புகள், பல்பொருள் பற்றியது போன்றவற்றில் எண்ணற்ற உட்பிரிவுகள் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

---

8. 'One needs to ask not only for proverbs and for what counts as a proverb but also for information as to other components of the situations in which proverbs are used. What are the rules governing who can use proverbs or particular proverbs and to whom? Upon what occasions? In what places? with what other persons present or absent? Using what channel? Do restrictions or prescriptions as to the use of proverbs or a proverb have to do with particulars topics? With the specific relationship between speaker and addressee? What exactly are the contributing factors which make use of proverbs or of a particular proverb, possible of not possible appropriate or inappropriate.

- Alan Dundes, 'Proverbs and Ethnography of speaking Folklore', Essays in Folkloristics, pp. 52 - 53.

பெரும் பிரிவுகள்

1. இயற்கை
2. விலங்கு, பறவையினங்கள்
3. தாவரங்கள்
4. சமூகமும் பண்பாடும்
5. மனிதப் பண்புகள்
6. பல்பொருள் பற்றியது

முப்பத்திரண்டு உட்பிரிவுகளைப் பற்றிய விளக்கம் 'தமிழ்ப் பழமொழிகளின் வகைப்பாடு' என்ற இயலில் விரிவாகக் கொடுத்துள்ளேன். இத்தகைய வகைப்பாடுகள் ஆய்வைச் செம்மையாக செய்வதற்குப் பெருந்துணையாக அமையும்.

பழமொழிகள் பெரும்பாலும் உவமைகளாகவும் சிலேடைகளாகவும் சொற்றொடர்களாகவும் மரபுத் தொடர்களாகவும் கேலித்தன்மையினவாகவும் விடுகதைத் தன்மையினவாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இவை நேர்முகக் கூற்றாகவும் மறைமுகக் கூற்றாகவும் அமைவதுடன் காரண காரியத் தொடர்போடு பொருள் மரபினை விளக்குவதும் உண்டு.

பழமொழிகளை உலகிலுள்ள எல்லா சமுதாய மக்களும் பயன்படுத்துகின்றனர். மக்கள் வாழ்வில் அனுபவித்த சாரம் என்பதால் மக்களிடையே அதற்கொரு செல்வாக்குண்டு. 'பழமொழி பொய்யின்னா பழையதும் சுடும்', 'பால் புளிக்குமா? பழமொழி பொய்க்குமா?' 'பழமொழியில் உமி இல்லை', 'வானம் இடிந்து விழுவதில்லை, 'பழமொழி பொய்யாவதில்லை' என்பதிலிருந்து மக்கள் பழமொழி மீது வைத்துள்ள நம்பிக்கை புலனாகிறது. பழமொழிகளில் பொதுவான அடிப்படை உண்மைகளைக் காணலாம். பழமொழிகள் மனித இயல்புகளையும் நடத்தைகளையும் அறிவுத்திறனையும் விளக்குகிறது. பழமொழிகள் பண்பாட்டினதும் வாழ்வியல் மரபினதுமான களஞ்சியமாக அமைந்துள்ளது. வாழ்வின் முதிர்ச்சியிலே தோன்றிய அனுபவங்களாலும் வாழ்க்கைத்

தத்துவத்தையும் சமுதாயக் கூறுகள் பற்றியும் பழமொழிகள் விளக்குகின்றன. இலக்கியங்களின் பின்னணியில் அறியமுடியாத மக்களின் சமுதாய நம்பிக்கைகள், வழக்குகளைப் பழமொழி விளக்குகின்றன. உள்ளார்ந்த பண்பாடும் வரலாறுமே மனிதனது முழுமையை உணர்த்துவதாகும். மனிதனையும் சமுதாயத்தையும் மதிப்பிடும் போதுதான் முப்பரிமாணம் கொண்ட சமுதாயத் தோற்றம் புலப்படும். பழமொழிகள் மனித சமுதாய வரலாற்றை நன்கு விளக்க உதவும் வாயில்களாக மதிப்பீடு செய்வது இன்றியமையாததாகும். பழமொழி வாயிலாகச் சமுதாய அமைப்பிலுள்ள சாதி முறைகள், சமயநிலை, உறவுமுறை, பொருளியல் நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை அறியலாம். நமது சமூக அமைப்பு சாதி அடிப்படையில் அமைந்துள்ளதைப் பழமொழிகள் நன்கு விளக்குகின்றன. பழமொழிகள் மனித சமுதாய வரலாற்றை நன்கு விளக்கி உதவும் வாயில்களாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். குறிப்பிட்ட பழமொழி குறிப்பிட்ட சூழலில் பயன்படுத்தப்படுகின்றது. அறிவுரை கூறவும் ஒருவரது தவறைச் சுட்டிக்காட்டவும் பழமொழி பயன்படுத்தப் படுகின்றது. செயலைச் செய்வதற்குமுன் எச்சரிக்கிறது. வாழ்க்கை அனுபவத்தைச் சுருக்கித் தருகிறது. இதனையே தான் ஜான் லாகாஸ் அவர்கள் 'ஒத்துக்கொள்ள, கண்டிக்க வசைகூற, முறையிட, உண்மையுரைக்க, கட்டளையிட, மறுக்க, உடன்பட அன்றாட வாழ்வில் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர்' எனப் பழமொழியின் பயன்பாட்டைத் தெள்ளத்தெளிவாக விளக்குகின்றார்.

மக்கள் இனத்தில் பண்பாட்டுக் கூறுகளை விளக்கும் பழமொழிகளின் வாயிலாக மக்களிடையே வழங்கும் சாதி, சமயம், தொழில், உறவுமுறை, மிருகங்கள், பறவைகள், செடி கொடி மரங்கள், இயற்கை, வானிலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை அறிகிறோம். சமுதாயத்தை எதார்த்த நிலையில் படம் பிடித்துக் காட்டுவது பழமொழியே. பழமொழி மூலம் குடும்பத்தைப் பற்றியும் மண உறவுகளைப் பற்றியும் மாமியார் -

மருமகள் போராட்டங்களைப் பற்றியும் அறிந்துகொள்கிறோம். வாழ்க்கை முறையின் சிக்கனம் நாட்டுப்புற மருத்துவம் பற்றியும் அறிகிறோம். வாழ்க்கையில் நிலவும் அங்கதச் சுவையும் வாழ்க்கை அனுபவத்தையும் புலப்படுத்துகின்றன. தனி மனிதனின் இயல்பு, சமூக நிலை, வறுமை, செல்வம், பணத்தின் மதிப்பு, ஒழுக்க தத்துவ நம்பிக்கைகள், குடும்ப சமூக அமைப்பு, பெண்களின் நிலை பற்றி விரிவாக விளக்குகிறது. ஒரு இனத்தைப் பற்றி மற்றொரு இனம் கூறும் இன அவதூறு பற்றியும் பழமொழிகளில் நிறையக் காண்கிறோம். பல்லாண்டுக்கால மனித சமுதாயத்தின் அனுபவ அறிவாகவும் வரலாற்றுப் பெட்டகமாகவும் திகழ்கின்றது. சொல்லக் கூசும் கருத்துக்களையும் வலியுறுத்த விரும்பும் கருத்துக்களையும் ஆணித்தரமாகப் பழமொழிகள் எடுத்தோதுகின்றன. பழமொழிகள் மக்களது பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்குகின்றன. ஒரு நாட்டின் பழக்க வழக்கங்கள், சாதி, சமயம், அன்பு, பண்பு பற்றி அறிவதற்கேற்ற கருவி பழமொழிகளாகும். பழமொழிகள் மக்களது சமூக பண்பாட்டுப் பிரதிபலிப்பனவாகும். உண்மையாகக் கூறப்போனால், வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளைப் பற்றியும் பழமொழியில் காணலாம்.

பழமொழிகள் சிந்தனையைத் தூண்டி வாழ்வின் ஊன்றுகோலாக அமைந்துள்ளன. அனைத்துப் பழமொழிகளையும் தொகுத்து வகை செய்து ஆய்வு செய்தால் தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய பெருந்துணையாக அமையும்.

2. தமிழ்ப் பழமொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

பழமொழி மிகப் பழங்காலத்திலிருந்தே மக்கள் நாவில் பயின்று வழங்கி வருவது. பழமொழியிலுள்ள மொழி இதனை உறுதிப்படுத்துகிறது. காலத்தால் பழமையானது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே மக்கள் வழக்கில் வாய்மொழியாகப் பழமொழி பயின்று வந்தமையால் தான் பழமொழிக்கு இலக்கணம் வகுக்க முற்பட்டார். தொல்காப்பியர் முதுசொல், முதுமொழி என்ற சொற்களால் பழமொழியைக் குறிப்பிட்டுள்ளார். பழமொழியின் தொன்மையை நன்கு விளக்குகின்றது. தொல்காப்பியர்,

> 'நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
> மென்மை என்றிவை விளங்கத் தோன்றிக்
> குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
> ஏது நுதலிய முதுமொழி'
>
> (செ. 177)

என பழமொழியைப் பற்றி குறிப்பிடுகிறார். கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளும் அமைந்திருத்தல் வேண்டும். இந்நூற்பாவுக்குப் பேராசிரியர் கீழ்வருமாறு விளக்கம் தருகின்றார்.

'கூரியதாய்ச் சுருங்கி விழுமியதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்தற்கு வருமாயின் அங்ஙனம் வந்ததனைப் பொருள் முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி எனப் பலவர் என்றவாறு'. பருப்பொருளை மட்டும் உணர்த்தாமல் நுட்பமான பொருளையும் கூர்மையான முறையில் உணர்த்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியரின் நூற்பாவில் நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை, எண்மை குறித்த பொருளை

முடித்தற்கு வரூஉம் ஏது நுதலிய முதுமொழி என்ற தொடர்கள் ஊன்றி கவனித்தற்குரியது.

சங்க காலமும் பழமொழியும்

அகநானூற்றில் முதன் முதலாக பழமொழி எனும் சொல்லாட்சி காணப்படுகிறது.

'பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி'
(அகநானூறு 66)

அதே அகநானூற்றில் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனும் புலவர் இயற்றிய பாடலில் பழமொழியைத் 'தொன்றுபடு கிளவி' எனக் குறிப்பிட்டுள்ளார்.

'. . . . . அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி'
(அகநானூறு,
களிற்றியானைநிரை 5 பாலை)

தொன்றுபடு கிளவி எனின் தொன்று தொட்டு வழங்கி வருதல் எனும் பொருளாகும்.

அகநானூற்றில் மாமூலனார் பாடலில் தொன்றுபடு 'பழமொழி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நன்றுசெய் மருங்கில் தீதுஇல் என்னும்
தொன்றுபடு பழமொழிஇன்று பொய்த்தன்றுகொல்'
(அகநானூறு 101)

'நன்று செய் மருங்கில் தீது' என்பது அக்காலத்தில் வழங்கிய பழமொழியாகும்.

பதிற்றுப் பத்தில் பாலைக் கௌதமனார் தமது பாடலில் பழமொழியை வாய்மொழி என்று குறிப்பிட்டுள்ளார்.

'எவ்வம் சூழாது விளங்கிய கொள்கைக்
காலையன்ன சீர்சால் வாய்மொழி'
(பதிற்றுப்பத்து 21)

மள்ளனார் எனும் புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பழமொழியை வாய்மொழி என்று குறிப்பிட்டுள்ளார்.

'நுண்ணூல் தடக்கையின் நாமருப்பாக
வெல்லும் வாய்மொழி'
(புறநானூறு 388)

கலித்தொகையில் மருதனிளநாகனார் எனும் புலவர் பழமொழியை 'முதுமொழி' (கலித்தொகை 68) எனக் குறிப்பிட்டுள்ளார்.

பரிபாடலும், முதுமொழி எனும் சொல்லைப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'பதினா யிரங்கை முதுமொழி முதல்வ ......
(பரிபாடல் 3 : 42)

'ஏவலின் முதுமொழி கூறும்'
(பரிபாடல் 13 : 40)

புறநானூற்றில் 'விரைவளர் கூந்தல் வரைவளியுலர' என்பதும் பரிபாடலில் 'களிறு போர் உற்ற களம் போல' என்பதும் பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்றவற்றில் 'பழுமரம் உள்ளிய பறவை போல' என்ற அக்கால பழமொழிகளைக் காண்கிறோம்.

நற்றிணையில் புலவர்கள் பாடிய பாடல்களில் அக்காலப் பழமொழிகளைக் காணலாம்.

'வழிபடு தெய்வம் கண்கண்டங்கு'
(நற்றிணை 9)

'அலாவாய்ப் பெண்டிர் ஆம்பலொடு ஒன்றிப்
புரையில் தீமொழி பயிற்று உரைஎடுத்து'
(நற்றிணை 36)

'அழுத்துபடு விழுப்புண் வழம்பு வாய்புலரா
அவ்வ நெஞ்சத்து எஃகு எறிந்தாங்கு'
(நற்றிணை 97)

'கண்டூறு வி(ம் கைபோல் உதவி'
(நற்றிணை 216)

'பெ ந்தேன் கண்ட இருக்கை மு வன்'
(குறுந்தொகை 60)

'யாமை பார்ப்பின் அன்ன'
(குறுந்தொகை 152)

'இன்று வளிவது துறை ரோடு
இலங்கு எயிறு தோன்ற நக்கதன் பயனே'
(குறுந்தொகை 381)

'தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னும் முதலை'
(ஐங்குறுநூறு 24)

'தாய்முக நோக்கி வளர்ந்திசினாங்கு'
(ஐங்குறுநூறு 44)

'புளியங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே'
(ஐங்குறுநூறு 51)

'புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்று ஒளியே'
(ஐங்குறுநூறு 71)

'கூற்றம் வரினும் தொலையான்'
(கலித்தொகை குறிஞ்சிக்கலி 7)

'தாவா விருப்பொடு கன்று யாத்துழிச் செல்லும் ஆபோல'
(கலித்தொகை 16)

'வெந்த புண்ணில் எறிந்தற்றால்'
(கலி. மருதம் 18, 19)

'கரந்ததூஉம் கையோடு கோட்பட்டான்'
(கலி. முல்லை 15)

'நெருப்பைக் கைகொட்டவர்போல விதிர்த்திட்டு'
(கலி. முல்லை 15)

'தொல்வினை பயன்துய்ப்ப'
(கலி. 1)

'வெந்ததோர் புண்ணில் கண் வேல்கொண்டு நுழைப்பான் போல'
(கலி. 3)

'பகல் கொண்ட சுடர் போன்றோர்'
(கலி. 15)

'ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தில்'
(புறம். 34)

'முட்டை கொண்டு வற்புலம் சேரும்'
(புறம். 174)

'செருப்பிடைப்பட்ட சிறுபரல் அன்ன'
(புறம். 257)

'இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப்படாஅ உறவி போன்றனம்'
(அகம். 339)

'இருதலைக் கொள்ளி எறும்பு'

என்பதன் வடிவமாக மேற்கண்ட பழமொழி அகநானூற்றில் உள்ளது.

'பழுமரம் முள்ளிய பறவையின் யானுமவன்'
(பொரு. 64)

'பழுமரம் உள்ளிய பறவைபோல'

என்ற பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது. அதே பழமொழி பெரும்பாணாற்றுப்படையிலும் மதுரைக்காஞ்சியிலும் பயின்று வந்துள்ளது.

'பழுமரந் தேடும் பறவை போல'
(பெரும். 20)

'பழுந்தேர் வாழ்க்கை பறவை போல'
(மதுரைக்காஞ்சி 576)

சங்க இலக்கியங்கள் மிகப்பழமையானவை. அதைவிட பழமையானவை மக்கள் நாவிலே பயின்று வநத பழமொழிகள். வாய்மொழி இலக்கியமாகிய பழமொழிகள் பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களிடையே வழங்கி வந்ததைச் சங்கப் புலவர்களும் பாடல்களிடையே எடுத்தாண்டுள்ளனர்.

சங்க மருவிய காலமும் பழமொழியும்

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் பழமொழியை நெடுமொழி என்றும் 'பல்லவையோர் சொல்' என்றும் கூறியுள்ளார்.

நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ
அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்

என்ற பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

மணிமேகலை ஆசிரியர் பழமொழியை 'முதுமொழி' என்று குறிப்பிடுகிறார்.

முதுமொழி கூற முதல்வன் கேட்டு
(மணிமேகலை 25. 119)

நாலடியாரில்,

ஒருவர் பொறை இருவர் நட்பு
கைக்குமாம் தேவுரே தின்னினும் வேம்பு

போன்ற பழமொழிகள் இடம் பெற்றுள்ளன.

உண்ணாது வைக்கும்
பெரும்பொருள் வைப்பின்னா
(இன்னாநாற்பது 16)

மான மழிந்தபின் வாழாமை முன் இனிதே
(இனியவை நாற்பது 13)

'மானம் பெரிதோ பிராணன் பெரிதோ' என்ற பழமொழியை நினைவூட்டுகின்றது.

சிறுபஞ்சமூலத்தில் பழமொழிகள் காணப்படுகின்றன.

1. *மெய்யெலாம் வெண்ணீறு கண்ணித்த மேனியான் தாள் தொழாதே*

   ....

   கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே

2. என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டென்னையோர்
உருவமாக்கி
....
முன்பிருக்கும் விதியன்றி முயல்விட்டுக் காக்கைப்பின்
போனவாறே

3. பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங்
குண்டர்கள் தஞ்சொல் கேட்டு
....
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்
விலைக்குக் கொண்'_வாறே

4. குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநானா துழிதர்வேனைப்
....
பண்டலொம் அறியாதே பனிநீராற் பரவை செயப்
பாவித்தேனே

5. துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர் சொற்கேட்டுத்
துவர்வாய்க் கொண்டு
....
என்னாகத் திருத்தாதே ஏதன்போர்க் காதனாய்
அகப்பட்டேனே

6. பம்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு தலையோடே
திரதிரவேனை
....
எப்போது நினையாதே இருட்டறையில் மலடுகறந்
தெய்த்தவாறே

7. கதியொன்றும் அறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையிலுண்டு
....
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்னித்
தீக்காய்ந்தவாறே

8. பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற சமன்சீர்
சொல்லே கேட்டுக்
....
பாவியேன் அறியாதே பாழூரிற் பயிக்கம்புக்
கெய்த்தவாறே

9. ஒட்டாத வாளவுணர் புரமூன்றும் ஓரம்பின் வாயில்
வீழக்
....
தட்டானைச் சாராதே தவமிருக்க அவஞ்செய்து
தருக்கினேனே

10. மறுத்தானார் வல்லரக்கன் ஈரைந்து முடியினொடு
தோளுந்தாளும்
....
கறுத்தானைக் கருதாதே கரும்பிருந்து இரும்பு
கடித்தெய்த்தவாறே

முதுமொழிக் காஞ்சியிலும் பழமொழிகளை நிறைய காணலாம். பழமொழியின் தொகுப்பே முதுமொழிக்காஞ்சி என்பாருமுளர்.

திருக்குறளில் பழமொழி கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

ஊழிற் பெருவலி யாவுள் மற்றொன்று
(குறள்)
ஊழிற் பெருவலி ஒன்று உண்டோ
(பழமொழி)

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு
(குறள்)

இறைக்க ஊறும் மணற்கேணி,
ஈயப்பெருகும் செல்வம்
(பழமொழி)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
(குறள்)
கனியிருக்கக் காய் தின்பதா?
(பழமொழி)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்
(குறள்)
அடக்கமே அறிவுக்கு வித்து
அடக்கம் உடையார் அறிஞர் அடங்காதவர் கல்லார்
(பழமொழி)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லாதார் அறிவிலா தார்
(குறள்)
ஊர்ஓட உடன்ஓடு நாடோட நடுஓடு
(பழமொழி)

இளைதாக முள்மரங் கொல்லுங் களையுநர்
கைகொள்ளுங் காழ்த்த விடத்து
(குறள்)
முளையில் கிள்ளாததை முற்றினால் கோடலிகொண்டு
வெட்டவேண்டும்
(பழமொழி)

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்
(குறள்)
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
(பழமொழி)

பழமொழி கருத்துக்களைத் திருக்குறளில் காண்கிறோம். திருக்குறள் கருத்துக்களும் பழமொழிகளாக முகித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழமொழி நானூறு

மூன்றுரை அரையனார் இயற்றிய பழமொழி நானூறு நானூறு பாடல்களைக் கொண்டது. தமிழில் பழமொழி பற்றிய முதல் நூலாகும். நானூறு தொகுப்பு மரபைத் தழுவியதாகும். இந்நூலை முதலில் அச்சிட்டவர் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் (1874). இதனையடுத்து சு. ஆறுமுக நயினார் (1904) பதிப்பு வெளிவந்தது. அடுத்து திருமணம் செல்வக்கேசவராய முதலியார் (1914) பதிப்பு வெளிவந்தது. உரையுடன் செம்மையாகப் பதிப்பிக்கப்பட்ட பதிப்பாகும். பின்னர் இந்நூலுக்குப் பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பழமொழி நானூற்றில் காணப்படும் பழமொழிகளைத் தொகுத்துக் காண்போம்.

1. அகலுள் நீராலே துடும்பல் எறிந்துவிடல்
2. அக்காரம் பால் செருக்கும் ஆறு
3. அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு
4. அஞ்ஞாதே தின்பது அழுவதன் கண்
5. அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற் றுடனியைந்து துஞ்ச
   வருமே துயக்கு.
6. அஞ்சுவார்க் கில்லை அரண்
7. அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாமெனல்
8. அனங்காகும் தான்செய்த பாவை தனக்கு
9. அணியாரே தம்மைத் தமவேனும் கொள்ளாக்கலம்
10. அணியெல்லாம் ஆடையின் பின்
11. அம்பலம் தாழ்க் கூட்டுவார்
12. அம்புவிட்டு ஆக்கறக்குமாறு
13. அயலறியா அட்டூணோஇல்
14. அயிரையிட்டு வரால் வாங்குபவர்
15. அயிலாலே போழ்ப அயில்
16. அரங்கினுள் வட்டு கரையிருந்தார்க்கு எளிய போர்

17. அரிந்தரிகால் நீர்ப்படுக்குமாறு
18. அரிவாரைக் காட்டார் நரி
19. அழகொடு கண்ணின் இழவு
20. அளறாடிக் கண்ணும் மணி மணியாகிவிடும்
21. அள்ளில்லத்து உண்ட தனிசு
22. அறஞ்செய்ய அல்லவை நீங்கிவிடும்
23. அறிதுயில் யார்க்கும் எழுப்பலரிது
24. அறிமடமும் சான்றோர்க்கணி
25. அறியும் பெரிதாள்பவனே பெரிது
26. அறிவச்சம் ஆற்றப்பெரிது
27. அறிவினை ஊழே அடும்
28. அறுமோ குளநெடிது கொண்டது நீர்
29. அறுமோ நரி நக்கிறதென்று கடல்
30. ஆகாதார்க்கு ஆகுவதில்
31. ஆகாதே உண்டது நீலம் பிறிது
32. ஆகுமோ நந்துழுத வெல்லாம் கணக்கு
33. ஆடு பனைப் பொய்க்காலே போன்று
34. ஆயிரம் காக்கைக்கோல் கல்
35. ஆராயானாகித் தெளிந்தான் விளித்துவிடும்
36. ஆலென்னிற் பூலொன்று மாறு
37. ஆற்றக் கரும்பன்னை யன்ன துடைத்து
38. ஆற்றாதவரழுத கண்ணீரவை அவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்துவிடும்
39. ஆற்றுணா வேண்டுவதில்
40. ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்றுவிடும்
41. இடைதவிர்ந்து வீழ்தரின் நட்டறானாதலே நன்று
42. இண்டநாயிற் கென்பிடுமாறு
43. இடையன் எறிந்த மரம்
44. இரந்தூட்குப் பன்மையோ தீது
45. இருதலையும் காக்கழித்தார்
46. இருளிலிருந்தும் வெளி
47. இல்லுள் வில்லேற்றி இடைக்கலத் தெய்துவிடல்
48. இல்லை உயிருடையார் எய்தா வினை
49. இருதலைக் கொள்ளி யென்பார்

50. இல்லையே அட்டாரை ஒட்டாக் கலம்
51. இல்லையே உய்வதற்கு உய்யாவிடம்
52. இல்லையே ஒன்றுக்குதவாத வொன்று
53. இல்லையே தாம்தர வாரா நோய்
54. இல்லையே யானைதொடு வுண்ணின் மூடுங்கலம்
55. இழவென்று எருது உண்ட உப்பு
56. இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை
57. இழுகினா னாகாப்பதில்லையே முன்னம் எழுதின ஓலை பழுது
58. இளைதென்று பாம்பிகழ்வாரில்
59. இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெற்றுவிடும்
60. இளையனே ஆயினும் மூத்தானே யாடுமகன்
61. இறக்கு மையாட்டை உடம்படுத்து வெளவுண்டாரில்
62. இறந்தது பேர்த்தறிவாரில்
63. இறைத்தோறும் ஊறும் கிணறு
64. இனங் கழுவேற்றினாரில்
65. இன்சொல் இடர்ப்படுப்பதில்
66. இன்னாது இருவர் உடனாடல் நாய்
67. இன்னதே பேயோடானும் பிரிவு
68. ஈடில்லதர்க் கில்லை பாடு
69. ஈனுமோ வாழை இருகால் குலை
70. உடுத்தாரை உண்டி வினவுயாரில்
71. உண்ட இல் தீயிடுமாறு
72. உண்ணா இரண்டேறு ஒரு துறையுள் நீர்
73. உண்ணுந் துணைக் காக்கும் கூற்று
74. உண்ணோட் டகலுடைப் பார்
75. உமிக்குற்றுக் கைவருந்துமாறு
76. உமையாள் ஒரு பாலாக் கட்டங்கம் வெல்கொடி கொண்டாலும் கொண்டான்
77. உயக் கொண்டு புல்வாய் வழிப்படுவாரில்
78. உயவு நெய்யுட் குளிக்கும் ஆறு
79. உருவு திருவூட்டு மாறு
80. உரைத்தால் உரைபெறுதல் உண்டு
81. உரையார் இழித்தக்க காணிற் கனா

82. உலகினுள் இல்லதற் கில்லை பெயர்
83. உலக்கைமேல் காக்கை என்பார்
84. உவர்நிலம் உட்கொதிக்குமாறு
85. உவவாதார்க்கு ஈத்ததையெல்லாம் இழவு
86. உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்
87. உள்ளிருந்து அச்சாணிதாங் கழிக்குமாறு
88. உறற்பால தீண்டாவிடுதல் அரிது
89. உறற்பால யார்க்கும் உறும்
90. ஊரறியா மூரியோ இல்
91. ஊர்ந்துருளின் குன்றுவழி அடுப்பதில்
92. ஊர் மேற்றதாம் அமணர்க்கு ஓடு
93. ஊழம்பு வீழா நிலத்து
94. எய்ப்பினில் வைப்பென்பது
95. எருக்கு மறைந்து யானை பாய்ச்சிவிடல்
96. எருத்திடை வைக்கோல் தினல்
97. எருமை எறித்தொருவர் காயக்கு லோபிக்கும் ஆறு
98. எல்லாம் பொய் அட்டூணே வாய்
99. எழுப்புபவோ துஞ்சு புலியைத் துயில்
100. எளியாரை எள்ளாதா ரில்லை
101. என்றும் மனநல மாகாவாம் கீழ்
102. ஏப் பிழைத்துக் காக்கொள்ளுமாறு
103. ஏமரார் கோங்கேறினார்
104. ஏவலாள் ஊருஞ் சுடும்
105. ஏற்றுக்கண் றோறாய் விடும்
106. ஒக்கலை வேண்டி அழல்
107. ஓடியெறியத் தீராப் பகை
108. ஒரு பக்கம் நீரொழுகிப் பாலொழுகுமாறு
109. ஒருவர் பொறை இருவர் நட்பு
110. ஒள்ளியக் காட்டாளர்க் கரிது
111. ஒறுக்கல்லா மென்கண்ணன் ஆளான் அரக
112. ஒன்றுநா முன்றிலோ இல்
113. ஒன்றேற்றி வெண்படைக்கோ னொன்று
114. ஓம்புவார் இல்லெனின் சென்றுபடுமாம் உயிர்
115. ஓடுக ஊரோடு மாறு

116. ஓரறையுள் பாம்பினோடுடன் உறையும் ஆறு
117. ஓர்த்த திசைக்கும் பறை
118. கடம் பெற்றான் பெற்றான் குடம்
119. கடலுளால் மாவடித்தற்று
120. கடலுள்ளும் காண்பவே நன்கு
121. கடலோடு காட்டொட்ட லில்
122. கடல் நீந்திக் கற்றடியு ளாழ்த்திவிடல்
123. கடல் படாவெல்லாம் படும்
124. கடனன்றோ ஊரறிய நார்ட்டார்க்கு உணா
125. கடிஞையில் கல்லிடுவார் இல்
126. கடித்தோடும் பாம்பின்பல் கொள்வாரோ இல்
127. கடிய களைத்து விடல்
128. கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால நாயும் உடையானைக் கவ்விவிடும்.
129. கணையிலும் கூரியவாம் கண்
130. கண்சொரீஇ இட்டிகை தீற்றுபவர்
131. கண்டது காரணமா மாறு
132. கண்ணிற் கண்டதூ உம் எண்ணிச் சொலல்
133. கயவர்க் குரையார் மறை
134. கருக்கினால் கூரை கொள்வார்
135. கல் தேயும் தேயாது சொல்
136. கல்லொடு கை யெறியுமாறு
137. கவுட்கொண்ட நீர்
138. கள்ளினைக் காணாக் களிக்கும் களி
139. கள்ளைக் குடித்துக் குழைவாரோ இல்
140. கழிவிழாத் தோரேற்றுவார்
141. கற்கிள்ளிக் கையுய்ந்தாரில்
142. கற்றலில் கேட்டலேநன்று
143. கற்றறிவு போகா கடை
144. கற்றொறுந் தான் கல்லாதவாறு
145. கனா முந்துறாத வினை யில்லை
146. காக்கையைக் காப்பிட்ட கோது
147. காணார் எனச் செய்யார் மாணாவினை
148. காதலோ டாடார் கவறு

149. காப்பாரிற் பார்ப்பார் மிகும்
150. காகைத் துக்க நிலா
151. குடர் ஒழிய மீவேலி போக்குபவர்
152. குடிகெட வந்தால் அடிகெட மன்றிவிடல்
153. குரங்கின் கைக்கொள்ளி கொடுத்துவிடல்
154. குரங்கினுள் நன்முகத்தவில்
155. குருட்டுக்கண் துஞ்சிலென் துஞ்சாக்காலென்
156. குருவி குறங்கறுப்பச் சோருங்குடர்
157. குலவிச்சை கல்லாமல் பாகம்படும்
158. குவளையைத் தன்னாரால் யாத்துவிடல்
159. குழிப்பூழி ஆற்றா குழிக்கு
160. குழுவத்தார் மேயிருந்த என்றூ டறுப்பனு மன்று
161. குளந்தொட்டுத் தேணாவழிச் சென்றாரில்
162. குறுநரிக்கு நல்ல நாராயங் கொளல்
163. குறுமக்கள் காவு நடல்
164. குறும்பியங்கும் கோப்புக்கழிச் செய்வதில்
165. குறும்பூழ்க்குச் செய்யுளதாகு மனம்
166. குறைப்பர் தம்மேலே வீழாப் பனை.
167. குன்றின் மேலிட்ட விளக்கு.
168. கூதறைகள் ஆகார் குடி
169. கூரம்பு அடியிழுப்பின் இல்லை அரண்
170. கூரிதெருத்து வலியதன் கொம்பு
171. கூலிக்குச் செய்துண்ணு மாறு
172. கூற்றங் குதித்துய்ந்தறிவாரோ இல்
173. கூற்றம் புறங்கொம்மை கொட்டினாரில்
174. கூன்மேல் எழுந்த குரு
175. கெடுமே கொடும்பா டுடையான் குடி
176. கெட்டார்க்கு நட்பிரோ இல்
177. கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு
178. கொடுத் தேழையாயினாரில்
179. கொடுப்பவர் தாமறிவார் தஞ்சீரளவு
180. கொண்டார் வெகுடல் நகைமேலும் கைப்பாய்விடும்
181. கொல்லிமேல் கொட்டு வைத்தார்
182. கொல்லையுள் கூழ் மரமே போன்று

183. கொற்சேரி துன்னூசி விற்பவரில்
184. சால்பினைச் சார்பறுக்கு மாறு
185. சாவாதான் முன்கை வளையுந் தொடும்
186. சான்றவர் கையுண்டும் கூறுவர் மெய்
187. சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு
188. சான்றோர் கடங்கொண்டும் செய்வார் கடன்
189. சிறுகுரங்கின் கையாற் றுழா
190. சீர்த்தது செய்யாதா ரில்
191. சுமையொடு மேல் வைப்பா மாறு
192. சுரத்திடைப் பெய்த பெயல்
193. சுரம் போக்கி உல்கு கொண்டாரில்
194. சுரையாழ் அம்மி மிதப்பு
195. சுனாயாழ நரம்பறுத்தற்று
196. குட்டறுத்து வாயிலிடல்
197. செய்கென்றான் உண்கென்னுமாறு
198. செய்தானை ஒவ்வாத பாவையோ இல்
199. செய்யாத எய்தா வெனில்
200. செய்வதென் வல்லை அரசாட் கொள்ளின்
201. செருப்பிடைப்பட்ட பரல்
202. செல்வம் தொகற்பால போழ்தே தொகும்
203. சேணோக்கி நந்து நீர் கொண்டதே போன்று
204. சொல்லாக்கால் சொல்லுவதில்
205. சோரம் பொதியாத வாறு
206. தஞ்சாகா மேனும் உயவாமல் செறலோ வில்
207. தஞ்சாதி மிக்கு விடும்
208. தட்டாமல் செல்லாது உளி
209. தண்கோல் எடுக்குமாம் மெய்
210. தந்நீர ராதல் தலை
211. தமக்கு மருத்துவர் தாம்
212. தமரை இல்லார்க்கு நகரமும் காடு போன்றாங்கு
213. தம்மைத்தாம் ஆர்க்கும் கயிறு
214. தம்மை உடைமை தலை
215. தயிர் சிதைத்து மற்றொன் றடல்
216. தலையுள் குறுங்கண்ணி யாகிவிடும்

217. தனக்கின்னா இன்னா பிறர்க்கு
218. தனிமரம் காடாதல் இல்
219. தன்னாசை அம்பாயுள் புக்குவிடும்
220. தாமிருந்த கோடு குறைத்துவிடல்
221. தாயர் அலைத்துப் பால் பெய்துவிடல்
222. தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு
223. தாய் மிதித்து ஆகாமுடம்
224. தால வடைக்கலமே போன்று
225. தாறாப் படினும் தலைமகன் தன்னொளி
நூறாயிரவர்க்கு நேர்
226. தானொன்றிட வரும் சால்பு
227. திங்களை நாய் குரைத்தற்று
228. திருவினும் திட்பம் பெறும்
229. திருவுடையார் பண்டம் இருவர் கொளல்
230. திருவோடும் இன்னாது துச்சு
231. திரையவித் தாடார் கடல்
232. தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல்
233. தீங்குரைக்கும் நானிற்கு நல்குரவில்
234. தீநாய் எழுப்புமாம் எண்கு
235. தீநாள் திருவுடையார்க் கில்
236. தீயன ஆவதே போன்று கெடும்
237. தீ யில்லை யூட்டும் திறம்
238. தீற்றாதோ நாய் நட்டால் நல்ல முயல்
239. துளி யீண்டில் வெள்ளந் தரும்
240. துறவா உடம்பினான் என்ன பயன்
241. துன்னினா ரல்லார் பிறர்
242. துன்னூசி போம் வழி போகு மிழை
243. தெளியானைத் தேற லரிது
244. தேனார் பலாக் குறைத்துக் காஞ்சிரை நட்டுவிடல்
245. தொளை யெண்ணார் அப்பந் தின்பார்
246. தோற்பன கொண்டு புகார் அவை
247. நகையாகும் யானைப்பல் காண்பான் பகல்
248. நடை கொன்றான் செல் உலகமில்
249. நரகர்கட் கில்லையோ நஞ்சு

250. நரிக்கூ உக்கடற் செய்தாவாறு
251. நரியிற்கூண் நல்யாண்டும் தீயாண்டு மில்
252. நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலாவாறு
253. நல்லறம் செய்வது செய்யாது கேள்
254. நற்காப்பின் தீச்சிறையே நன்று
255. நன்றோடு வந்த தொன் றன்று
256. நாய் காணின் கற்காணாவாறு
257. நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு
258. நாய் கௌவின் பேர்த்து நாய் கௌவினாரில்
259. நாய் பெற்ற தெங்கம் பழம்
260. நாய் மேல் தவிசிடுமாறு
261. நாய் வால் திருந்துதல் என்றுமோ இல்
262. நாகும் கடலுள் துழாம் பணணினார்
263. நாவற்கீழ்ப் பெற்ற கனி
264. நாவிதன் வாள் சேப்பிலைக்கும் கூர்த்துவிடல்
265. நிறையுள்ளே இன்னா வரைவு
266. நிறைகுடம் நீர் தளும்ப லில்
267. நின்றது சென்றது பேராதவர்
268. நின்நடை நின்னின் றறிகிற்பா ரில்
269. நீத்தம் மலைப் பெயர் காட்டுந் துணை
270. நீரற நீர்ச்சாவு அறும்
271. நீர் போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல்
272. நீர் மிகின் இல்லை சிறை
273. நீர் வரைய வாம் நீர்மலர்
274. நீள் கயத்துள் யாமை நனைந்துவா என்று விடல்
275. நுகத்துப் பகலாணி போன்று
276. நுணலுந் தன் வாயால் கெடும்
277. நெடும்பகை தற்செய்யத் தானே கெடும்
278. நெடுவேல் கெடுத்தான் குடத்துளும் நாடிவிடும்
279. நெய்தலைப் பால் புக்குவிடல்
280. நெய்பெய்த கலனே நெய் பெய்து விடும்
281. நோவச் செய் நோயின்மை இல்
282. நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி

283. பசி பெரிதாயினும் புன்மேயாதாகும் புலி
284. பகக் குத்தின் குத்துவாரில்
285. படையின் படைத்தகைமை நன்று
286. பயின்றது வாகைமாகிவிடும்
287. பரிசழிந்தாரோடு தேவரு மாற்ற லில்
288. பலிப்புறத் துண்பார் உணா
289. பல் கட்டப் பெண்டீர் மகார்
290. பஞ்ச் செய்வோர் பின்றுவிடல்
291. பள்ளியுள் ஐயம் புகல்
292. பழம்பகை நட்பாதலில்
293. பறைக்கண் கடிப்பிடுமாறு
294. பனியால் குள நிரைத லில்
295. பனைப் பதித் துன்னார் பழம்
296. பனை முதிரின் தாய்தான்மேல் வீழ்ந்துவிடும்
297. பனையின் மேல் பஞ்சிவைத் தெஃகி விட்டற்று
298. பன்னையின் பாடுடைய தில்
299. பாண்சேரிப் பற் கிளக்குமாறு
300. பாம்பறியும் பாம்பின் கால்
301. பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ
302. பால்தலைப் பாலூற வில்
303. பினியீ டழித்து விடும்
304. பிரம்பூரி என்றும் பதக்கேழ் வரும்
305. பிறரைக் கள்ளராச் செய்குறுவார்
306. பின்னின்னா பேதையார் நட்பு
307. புதற்குப் புலியும் வலியே புலிக்குப் புதலும் வலியாய்விடும்
308. புலத்தகத்துப் புள்ளரைக்கால் விற்பே மெனல்
309. புல்புல வண்ணத்தத புள்
310. புலித்தலையை நாய் மோத்த லில்
311. புலிமுகத் துண்ணி பறித்துவிடல்
312. புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில்
313. புலைப்பொருள் தங்கா வெளி
314. புல்லத்தைப் புல்லம் புறம்புல்லு மாறு
315. புழுப்பெய்து புண் பொதியுமாறு
316. புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்

317. பூசை எலியில் வழிப் பெறா பால்
318. பூசையைக் காப்பிடுதல் புன்மீன்றலை
319. பூண்ட பறை யறையார் போயினா ரில்
320. பூவோடு நாரியைக்கு மாறு
321. பெண் பெற்றான் அஞ்சான் இழவு
322. பெய்யுமாம் பெய்யா தெனினும் மழை
323. பெரிதகழின் பாம்பு காண்பாரும் உடைத்து
324. பெரியதன் ஆவி பெரிது
325. பெரிது உக்கு ஒடிக் காட்டி விடும்
326. பெரியவாம் ஆற்றவும் முன்கை நெடியோர்க்குத் தோள்
327. பெரியாரைச் சார்ந்து கெழிஇயிலா ரில்
328. பெரும் பழியும் பேணாதார்க் கில்
329. பேதைக் குரைத்தாலும் தோன்றா துணர்வு
330. பைங்கரும்பு மென்றிருந்து பாகு செயல்
331. பொருந்தா மண் ஆகா சுவர்
332. பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள்
333. பொறியும் தொடர்பாலார் கண்ணே தொடும்
334. போகாறே நீர் குறிதாகப் புகல்
335. போமாறறியா புலன்மயங்கி னார்க்குச்
சாமாகண் காணா தவாறு
336. போகாதே நாய் பின்னதாகத் தகர்
337. மகனறிவு தந்தை யறிவு
338. மகன் மறையாத் தாய் வாழுமாறு
339. மச்சேற்றி ஏணி களைவு
340. மதிப்புறத்துப் பட்ட மறு
341. மதியம்போல் பன்மீனும் காய்கலா வாகுநிலா
342. மயில் போலும் கள்வர் உடைத்து
343. மரங்குறைப்பு மண்ணா மயிர்
344. மரத்தின் கீழ் ஆகா மரம்
345. மறையார் மருத்துவர்க்கு நோய்
346. மற்றதன்பாற் றேம்பல் நன்று
347. மன்றஞ் சுவர்க்குப் பரிவிரம் யாதொன்று மில்
348. மன்றல் மையல் சேர்ந்தற்று
349. மனை மரமாய மருந்து

350. மாக்காய்த்துத் தன்மேல் குணில் கொள்ளுமாறு
351. மாயா நரையான் புறத்திட்ட சூடு
352. மிக்கவை மேவிற் பரிகார மில்
353. மிளகுளு வண்பான் புகல்
354. முடவன் பிடிப்பூணி யானையோடாடல் உறவு
355. முதலிலார்க்கு ஊதிய மில்
356. முயல் விட்டுக் காக்கை தினல்
357. முலையிருப்பத் தாயணல் தான் சுவைத்தற்று
358. முழங்குறைப்பச் சாண்கு மாறு
359. முழநட்பிற் சாணுட்கு நன்று
360. முழந்தாள் கிழிந்தானை மூக்குப் பொதிவு
361. முள்ளித் தேன் உண்ணுமவர்
362. முள்ளினால் முட்களையு மாறு
363. முறைமைக்கு மூப்பிளமை யில்
364. முனிவில்லார் முன்னியது எய்தாமை இல்
365. முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டு விடும்
366. முன்னின்னா மூத்தார் வாய்ச்சொல்
367. மூக்கற்றதற் கில் பழி
368. மூரி உழுது விடல்
369. மூரியைத் தீற்றிய புல்
370. மைமைப்பின் நன்று குருடு
371. மோரின் முதுநெய் தீதாகலோ வில்
372. யாதானும் ஒன்று கொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகிவிடும்
373. யாப்பி னுள் அட்டிய நீர்
374. யாரானும் சொற் சோராதாரோ இலர்
375. யாரே நமநெய்யை நக்குப்வர்
376. யாருளரோ தங்கன்று சாக்கறப்பர்
377. யானை போய் வால் போகாவாறு
378. யானையால் யானை யாத்தற்று
379. வண்டு தாதுண்டு விடல்
380. வருந்தாதார் வாழ்க்கை திருந்தத லின்று
381. வலியலாந் தாக்கு வலிது

382. வளிதோட கிடுவாரோ இல்
383. வாங்கும் எருதாங் கெழாஅமைச் சாக்காடெழில்
384. வாடியக் கண்ணும் பெருங்குதிரை யாப்புள்
வேறாகி விடும்
385. வாயுறைப் புற் கழுத்தில் யாத்து விடல்
386. வாழைக்காய் உப்புறைத்த லில்
387. விண்டற்கு விண்டல் மருந்து
388. விண்ணியங்கும் ஞாயிற்றைக் கை மறைப்பாரில்
389. வித்தின்றிச் சம்பிரத மில்
390. விரையிற் கருமம் சிதையும்
391. வில்லொடு காக்கையே போன்று
392. விளக்கெலி கொண்டு தனக்கு நோய் செய்துவிடல்
393. வெண்ணெய் மேல்வைத்து மயில் கொள்ளுமாறு
394. வெண்பாட்டம் வெள்ளம் தரும்
395. வெண்மாத் தலை கீழாக் காதிவிடல்
396. வெந்நீரில் தண்ணீர் தெளித்து
397. வெள்ளாடு தன்வளி தீராது அயல்வளி தீர்த்துவிடல்
398. வேண்டாமை வேண்டியதெல்லாம் தரும்
399. வேள்வாய்க் கவட்டை நெறி இரண்டுலகும்
400. வேற்குத்தின் காணியின் குத்தே வலிது.

புல்லவர் காலமும் பழமொழிகளும்

பெருங்கதை ஆசிரியர் பழமொழி, முதுமொழி என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

'வண்டே யனையர் மைந்தர் என்பது
பண்டே உரைத்த பழமொழி மெய்யர்க் கண்டேன்'
- இலாவண காண்டம் 36 - 3

'வண்டே யனையர் மைந்தர்' என்பது அக்காலத்தில் பழமொழியாக இருந்துள்ளது. பெருங்கதையில், 'வெந்துயர்க் கண்ணில் மேலிட்டதுபோல இடியே றுண்ட நாகம் போல' என்பது பழமொழியாக விளங்கியுள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த சேந்தன் திவாகரம் பழமொழியை ஏழு சொற்களால் குறிப்பிடுகிறார்.

1. பழமொழி
2. மூதுரை
3. முதுமை
4. மொழிமை
5. முன்சொல்
6. முதுசொல்
7. பழஞ்சொல்

முத்தொள்ளாயிரத்தில்,

'இருமி னிடி முரசார்ப்ப'

(முத். 14)

'இடியோசை கேட்ட நாகம்போல'

என்ற பழமொழியையும்,

'இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பு போல்'

(முத். 89)

'இருதலைக் கொள்ளி எறும்புபோல' என்ற பழமொழிகளை நினைவூட்டுகின்றது.

திருமந்திரம் (திருமூலர்)

'புரை அற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல'

(திருமந்திரம் முதல்தந்திரம் 22)

'சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே'

(திருமந்திரம் முதல்தந்திரம் 5)

'புளிக் கண்டவர்க்குப் புனல் ஊறுமா போல்'

(திருமந்திரம் ஒன்பதாம் தந்திரம் 57)

அப்பர்

நான்காம் திருமுறையில் ஐந்தாம் பத்தில் ஒவ்வொரு பாட்டிலும் பழமொழி வைத்துப் பாடியுள்ளார்.

'கரும் பிருக்க இரும்புகடித் தெய்த்த வாறே'

(நான்காம் திருமுறை திருவாரூர்ப்பதிகம் 10)

'கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்'
'முயல் வீட்டுக் காக்கைப் பின் போனவாறு'
'அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டவாறு'
'பனிநீரால் பரவை செயப் பாவித்தேன்'
'இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறு'
'விளக்கிருக்க மின்மினி தீக்காய்ந்தவாறு'
'பாழூரில் பயிக்கம்புக்கு எய்த்தவாறு'
'தவமிருக்க அவம் செய்து தருக்கினேன்'
(நான்காம் திருமுறை-திருவாரூர்ப் பதிகம்)
'மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரம் எய்தி'
(திருவதிகை வீரட்டானம் 6)
'மத்தார் தயிர்போல் மறுகும் என் சிந்தை'
(திருச்சந்தி முற்றம் 3)
'தோளாத சுரையோ தொழும்பர் செவி'
(ஐந்தாம் திருமுறை 3)
'ஆலைப்படு கரும்பின் சாறுபோல'
(திருவீழிமிழலை 2)

திருஞானசம்பந்தர்

'பாம்பின் வாய் தேரை'
(இரண்டாம் திருமுறை)
'நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறமாகும்'
(முதல் திருமுறை 5)
'ஊமனாத் தங்கனா ஆக்கினான்'
(மூன்றாம் திருமுறை 3)

சுந்தரர்

'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்'
(7ஆம் திருமுறை, திருக்கேதாரம் 1)
'ஆதன் பொருளானேன்'
(திருவெண்ணெய் நல்லூர் 5)
'பலவின் கனி ஈயது போல்'
(திருநெல்வாயிரத்துறை 3)

'இன்பம் உள்ளதேல் துன்பம் உண்டு'
(திருஎதிர்கொள்பாடி 8)
'பிழுக்கை வாரியும் பால் கொள்வர்'
(திருவொற்றியூர் 1)
'முயல்வலை யானை படும்'
(திருக்கழுமலம் 7)
'கழுதை குங்குமம் தான் சுமந்து எய்த்தால் கைப்பர்'
(திருவிடைமருதூர் 1)
'பேயோடேனும் பிரிவொன்று இன்னாது'
(திருவாரூர் 9)

மாணிக்கவாசகர்

'பேய்த்தேரினை நீர்நசை தாவரும் நெடுங்கண் மான்கணம்'
(தில்லை திருவண்டப்பகுதி 79-80)
'தழலது கண்ட மெழுகது போல'
(தில்லை போற்றித் திருஅகவல் 60)
'கொடிறும் பேதையும் கொண்டது விடா'
(தில்லை போற்றித் திருஅகவல் 63)
'பசு மரத்தாணி அறைந்தாற் போல'
(தில்லை போற்றித் திருஅகவல் 65)
'மத்திடு தயிராகி'
(திருப்பெருந்துறை திருச்சதகம்
- ஆத்துமசுத்தி 40)
'எள்ளும் எண்ணெயும் போல்'
(திருப்பெருந்துறை திருச்சதகம்
- ஆத்துமசுத்தி 46)
'பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை'
(திருப்பெருந்துறை - திருச்சதகம் -
காருணியத் திரங்கல் 66)
'கல்லை மென்கனி ஆக்கும் விச்சை'
(ஆனந்தா தீதம் 94)

'தீப்புகு விட்டில்'
(நீத்தல் விண்ணப்பம் -
உத்தரகோசமங்கை 5)
'கடலினுள் நாய் நக்கியாங்கு'
(நீத்தல் விண்ணப்பம் -
உத்தரகோசமங்கை 13)
'வெள்ளத்துள் நா வற்றி யாங்கு'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 14)
'ஆனை வெம்போரில் குறுந்நூறு என'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 21)
'நெய்க்குடந்தன்னை எறும்பெனவே'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 24)
'பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 26)
'வாழைப்பழத்தின் மனங்கனிவித்து'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 34)
'பலாப் பழத்து ஈயின் ஒப்பாய்'
(நீத்தல் விண்ணப்பம்
- உத்தரகோசமங்கை 45)
'கல்லைப் பிசைந்து கனியாக்கி'
(திருவம்மானை - திருவண்ணாமலை 5)
'நாய் சிவிகை ஏற்றுவித்த'
(திருக்கோத்தும்பி - தில்லை 8)
'நாய்மேல் தவிசிட்டு'
(திருக்கோத்தும்பி - தில்லை 20)
'கல்நார் உரித்தென்ன'
(திருத்தெள்ளேணம் - தில்லை 9)
'சிறைபெறா நீர்போல'
(கோயில் திருப்பதிகம் - தில்லை 5)

'வற்றல் மரம் போல்'
(பிரார்த்தனைப்பத்து - திருப்பெருந்துறை 11)
'தோலின் பாவைக் கூத்தாட்டாய்'
(ஆனந்தமாலை - தில்லை 3)
'புண்ணின் நுழைவேல்'
(திருக்கோவையார் - 259)
'இடுவது புல் ஓர் எருதுக்கு ஒன்றினுக்கு
வையிடுதல்'
(திருவிசைப்பா - கோயில் 6)

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் பத்தாம் பத்தில் ஒன்பதாம் திருமொழி ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார். பழமொழி என்னும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

'ஊமனார் கண்ட கனவிலும்'
(பெரியதிரு. 1:1:3)

*மெய்யெலாம் வெண்ணீறு சுண்ணித்த
மேனியான் தாள் தொழாதே*
... ...
*கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே*

*என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டென்னையோர்
உருவாக்கி*
... ...
*முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போனவாறே*

*பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங்
குண்டர்கள் தஞ்சொல் கேட்டு*
... ...

அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்
விலைக்குக் கொண்டவாறே.

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநாணா துழிதர்வேனைப்
... ...
பண்டலொம் அறியாதே பனிநீராற் பரவை
செயப்பாவித்தேனே

துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர் சொற்கேட்டுத்
துவர்வாய்க் கொண்டு
... ...
என்னாகத் திருத்தாதே ஏதன் போர்க் காதனாய்
அகப்பட்டேனே

பம்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு
தலையோடே திரதிரவேனை
... ...
எப்போது நினையாதே இருட்டறையின் மலடுகறந்
தெய்த்தவாறே

பெரியாழ்வார் பழமொழியை 'மூதுரை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

... ...
மூழை உப்பு அறியாது என்னும் மூதுரையும் இலனே
(பெரியாழ்வார் திருமொழி 3 : 7 : 4)

சோழர் காலமும் பழமொழிகளும்

சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணியில் பழமொழி 'வையகத்தார் வழக்கு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பழம் பகை நட்பாதல்'
'இலைப்புரை கிளைத்தல் போல'

'பழுமரம் உள்ளிய பறவைபோல'

(சீவக. 828)

'இடியோசை கேட்ட நாகம்போல'

(சீவக. 3071)

'புலிக்கு வால் உருவிவிடலாமா?'

(சீவக. 2197)

வளையாபதி

'கண்ணின்று காம நனி காமுறுவாரை வீழ்க்கும்'

(வளையாபதி 26)

குண்டலகேசி

'நகையழ லழுவந்தன்னை
நெய்யினா லவிக்க லாமோ?'

(குண்டலகேசி 5)

நந்திக்கலம்பகம்

'அங்காடிக்கு இட்ட பதர்போல' என்ற பழமொழி நந்திக்கலம்பகத்தில் பயின்று வந்துள்ளது.

'. . . . . அங்காடிக்கிட்ட
பதராக்கி என்னையும் பற்றாமல் ஆக்கிய பாலகனே'

(நந்தி 109)

பிங்கல நிகண்டு

'மொழிமை முதுரை முன்சொல் பழஞ்சொல்
முதுசொல் என்பர் பழிமொழியு மாமே'

(பிங்கல நிகண்டு 2025)

பெரியபுராணம்

'முன்னவே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ'

(திருநகரச் சிறப்பு 47)

'ஈன்ற ஆன் கனைப்புக்கேட்ட கன்றுபோல'

(தடுத்தாட்கொண்டபுராணம் 68)

'அச்சம் தாய்தலை அன்பின்முன் நிற்குமே'
(எறிபத்தநாயனார் புராணம் 24)
'வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்பு'
(கண்ணப்பநாயனார் புராணம் 116)
'கண்ணிற்கரிய கணிகழிய வாழ்வார்போல'
(பெருமிழலைக்குறும்பநாயனார் புராணம் 9)
'மறி கடலிற் கலங்கவித்தாற்போல'
(திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 481)
'கும்பிட்ட பயன் காண்பார் போல'
(திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 1022)

கம்ப இராமாயணம்

கம்பர் பழமொழியை 'வழக்கு' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

கம்பர் 'பழமொழி' என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார்.

'பாம்பறியும் பாம்பின்கால் என மொழியும் பழமொழியும் பார்க்கி லீரோ'
(ஆரண்ய காண்டம், சூர்ப்பனகை படலம் 139)

கம்பரும் பழமொழியை முதுரை எனக் குறிப்பிடுகின்றார்.

'ஏது ஏந்திய தட்க்கையர் பிறைவெயிலு இலங்க
முதுரை பெருங்கதைகளும் பிதிர்களும் மொழிவார்'
(சுந்தரகாண்டம், ஊர்தேடும் படலம் 139)

'கைந்நெல்லி கணியாக்கி'
(கிட்கிந்தா காண்டம் 17
மகேந்திர படலம் 1)

'வெந்த கொடும்புணில் வேனுழைந்த தொப்ப'
(அயோத்தியா காண்டம்,
கைகேசி சூழ்வினைப்படலம் 20)

'இருதலைக் கொள்ளி யொப்பேன்'
(யுத்தகாண்டம் 18,
நாகபாசப் படலம் 212)
'எள்தனை இடவும் ஓர் இடமிலா வகை'
(அயோத்தியா காண்டம்,
தைலமாட்டு படலம் 8)

'இடியுண்ட அராவென'
(பாலகாண்டம்,
உலாவியற்படலம் 30)

'தீயிடை யுருக்கு நெய்யில்'
(ஆரண்யகாண்டம்,
மாரீசன்வதைப் படலம் 66)

'எரியிடை வீழ்ந்த விட்டில்'
(யுத்தகாண்டம்,
மாயாகதைப் படலம் 68)

'தீயெரி செவியில் வைத்தனைய'
(அயோத்தியா காண்டம்,
பள்ளிபடைப் படலம் 46)

'வஞ்சர் வான்முகம் கண்டதோர் பொழுதினில் தெரியும்'
(விபீடணனடைக்கலப்படலம் 90, 91)

'உண்ணா நஞ்சங் கொல்கில'
(அயோத்தியா காண்டம்
பள்ளிபடைப் படலம் 85)

'புல்லிலே சிந்திவிட்ட அமுதம் போல'
'இராமன் உள்ள இடம் அயோத்தி'
'தாழையிற் பன்னுவான் குலைப்பதடி'
'பாம்பறியும் பாம்பின் கால்'
(ஆரண்யகாண்டம்,
சூர்ப்பனகை படலம் 139)

'கதிரோன் திசை போர்த்த மென்பனி போக்கியதென்ன'
(ஆரண்ய காண்டம்,
சுரன்வதைப் படலம் 186)

'நன்மையும் தீமையன்றே நாசம் வந்துற்றபோது
இரும்புண்ட நீர்மீன் கினுமென்'
(ஆரண்ய காண்டம்,
சடாயு உயிர்நீத்த படலம், 154)

'கதலியின் கனியினைக் கழியச் சேருஞ் சூசியில்'
(கிட்கிந்தா காண்டம்,
வாலிவதைப்படலம் 57)

'கடந்த சொல்லில் பயனில்லை'
'புகையுடைத் தென்னினுண்டு பொங்கனல்'
(கிட்கிந்தா காண்டம்,
அரசியல் படலம் 8)

'அஞ்சில் ஐம்பதில் ஒன்றறியாதவன்'
(கிட்கிந்தை படலம் 8)

'பிழைத்தது பொறுத்தலென்னும் பெரியவர் கடனே'
(யுத்தகாண்டம், வருவனைவழி
வேண்டும் படலம் 73)

'இரைத்துவந்தமிழ்தின் மொய்க்கும் ஈயினம்'
(பாலகாண்டம், உலாவியற்படலம் 5)

'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ'
(ஆரண்யகாண்டம்,
சடாயு உயிர்நீர்த்த படலம் 15)

'புல்வாய் புலி கண்டதுபோல'
(ஆரண்யகாண்டம்,
சடாயு உயிர்நீர்த்த படலம் 98)

'மான்திரள் புலி கண்டதாம் என'
(யுத்தகாண்டம்,
இலங்கை வேள்விப்படலம் 56)

'பொய்த்த சான்றவன் குலமென'
(யுத்தகாண்டம்,
வருணனை வழிவேண்டும் படலம் 25)

'உழுந்து பேர்வதன் முன்'
(சுந்தரகாண்டம், பாசப்படலம் 53)

'அறம் வெல்லும் பாவந் தோற்கும்'
(யுத்தகாண்டம், வேலேற்றபடலம் 45)

'பேசுவது மானம் இடைபேணுவது காமம்'
(யுத்தகாண்டம்,
இராவணன் மந்திரப்படலம் 52)

'தம்பி உடையான் பகை அஞ்சான்'
(யுத்தகாண்டம்,
இந்திரசித்து வதைப்படலம் 69)

'நீரைக்கொடு நீரெதிர் நிற்கொணுமே'
(யுத்தகாண்டம்,
அதிகாயன் வதைப்படலம் 83)

'நாய்தரக் கொள்ளுஞ் சீயம் நல்லரசு'
(யுத்தகாண்டம்,
அங்கதன் தூது படலம்)

'புற்றுறை அரவென'
(யுத்தகாண்டம்.
இராவணன் மந்திரப்படலம் 46)

'கனலின் வீழ்ந்த பஞ்சென'
(யுத்தகாண்டம்,
மூலபலவதைப் படலம் 59)

'பாலின் பஞ்சென தீந்த'
(யுத்தகாண்டம்,
மீட்சிப்படலம் 85).

'எரி தவழ் பஞ்சின்'
(யுத்தகாண்டம்,
மீட்சிப்படலம் 233)

'கண்ணிலா னொருவன் கைக்கொடு திருத்துவான் சித்திரமனைய'
(யுத்தகாண்டம்,
இராவணன் மந்திரப்படலம் 67)

'கற்றவர் கற்றவர் உணர்வு காண்கிலர்'
(யுத்தகாண்டம்,
வருணனை வழிவேண்டு படலம் 56)

'இரண்டு கன்றினுக்கு இரங்குமோர் ஆஎன'
'முரிபுற் காணிடை எரி பரந்தன என'
(கிட்கிந்தா காண்டம்,
வாலி வதைப்படலம் 50)

'பெண் கொலை செய்கை பெரும்பழி அன்றோ'
(யுத்தகாண்டம்,
மாயாசீதைப்படலம் 35)

'கருத்து வேறு உற்றபின் அமிழ்தும் கைக்குமால்'
(கிட்கிந்தா காண்டம்,
கிட்கிந்தைப்படலம் 4)

'பாலுறு பிரையென்'
(பாலகாண்டம்,
மிதிலைக் காட்சிப்படலம் 10)

பிற்காலத்தில் கம்பரைப் பற்றியும் இராமாயணத்தைப் பற்றியும் பழமொழிகள் முகிழ்ந்தன.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்'

'படிப்பது இராமாயணம்
இடிப்பது பெருமாள் கோயில்'

'இராமன் ஆண்டாலென்ன?
இராவணன் ஆண்டாலென்ன?'

உரையாசிரியர்களும் பழமொழியும்

சேனாவரையர் தொன்னெறி மொழிக்கு முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன, இயைந்தனவாய் வருவனவும் என்றவாறு உரை எழுதி,

'ஆற்றுள் செத்த எருமையை ஈர்த்தல் ஊர்க்குயவருக்குக் கடன்' என்ற பழமொழியை எடுத்தாண்டுள்ளார். அவர் கால வழக்கில் இப்பழமொழி இருந்திருக்கும்.

நச்சினார்க்கினியர் தொன்னெறி மொழிக்கு உரை எழுதும்போது,

'ஆட்டுளான் இன்னுரை தாரான்'

என்னும் பழமொழியை மேற்கோளாகக் காட்டுகிறார்.

இவரே சீவகசிந்தாமணி உரையில் பழமொழியைப் 'பழவார்த்தை' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

வில்லிபாரதம்

வில்லிபுத்தூரார் 'தன்நிலத்தில் குறுமுயல் யானையைவிட வலியது' என்ற பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

'தன்நிலத்தினில் குறுமுயல் தந்தியின் வலிது என்று
இந்நிலத்தினில் பழமொழி அறிதிநீ! இறைவ
எந்நிலத்திலும் உனக்கு எளிதாயினும் இவர்நம்
நன்னிலத்தில் வரஅமர் தொடங்குதல் நன்றால்'
(விராடபருவம் 4,
நிறைமீட்சிச்சருக்கம் 50)

'தன்நிலத்தில் குறுமுயல் தந்தியின் வலிது'
என்னும் பழமொழி இடம்பெற்றுள்ளது.

பொன்னாருந் திகிரியினான் போனாலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னாலும் அவன்கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் தோன்றா தன்றோ
எந்நாளும் உவர்நிலத்தில் நெல்முளைவித்
திடினும் விளைவெய் திடாது
பன்னாகந் தனக்கு அமிர்தம் கொடுத்தாலும்
விடமொழியைப் பயன் கொடாதே
(கிருஷ்ணன் தூது, சருக்கம் 25)

'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது'
'உவர்நிலத்தில் நெல் விளைத்தாலும் விளையாது'

'பாம்புக்குப் பால் வார்த்தாலும் நஞ்சையே
கொடுக்கும்'

என்ற மூன்று பழமொழிகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.

சூடாமணி நிகண்டில்,

'மொழிமை முதுரை முன்சொல்லமுது சொல்லும்
பழஞ்சொல்லும் பழமொழி முதுமையாகும்'
(சூடாமணி நிகண்டு)

எனக் குறிக்கப்பட்டுள்ளது.

அருணகிரியார் திருப்புகழில் திருக்குறளைப் பழமொழி என்று பாராட்டியுள்ளார்.

'திருவள்ளுவ தேவர் வாய்மையென் கின்ற
பழமொழியை ஓதியே யுணர்ந்து'
(திருச்செந்தூர் 53)

கொன்றைவேந்தன் : ஔவையார் இயற்றிய கொன்றைவேந்தன் பழமொழியைப் போன்றே விளங்குவது குறிப்பிடத்தக்கது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'
'தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை'

உலகநீதி,

'நாழி முகவாது நானாழி'
'நல்லார் சொற் கேட்பதும் நன்றே'

நல்வழி,

'ஊரெல்லாம் ஒன்றாக வெறுத்தாலும் போமோ விதி'
'வெறும்பானை பொங்குமோ'

பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம்

படிக்காசுப் புலவர் இயற்றிய தண்டலையார் சதகம் பழமொழிக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. பல்லவராயன் என்ற அரசனிடம் (1651-1686) பரிசுகள் பல பெற்றனர். பண்டுதொட்டு மக்கள் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை மக்கள் அறிவறிந்து நடந்து நலம்பெற எளிய முறையில் வழங்கும் பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அதற்கொத்த அறமுறைகளை ஆசிரியர் கோத்து எளிய இனிய சொற்களால் அழகிய சதகமாக ஆக்கித் தந்துள்ளார். தொண்ணூற்றாறு வகை நூல் தொகுதிகளுள் சதக வகையும் ஒன்றாகும்.

தண்டலையார் சதகத்தில் காணப்படும் பழமொழிகள்

1. கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா
2. சக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல
3. காட்டுக்கு எறித்த நிலவும் கானலுக்குப் பெய்த மழையும்
4. மழை விட்டும் தூவானம் விடவில்லை
5. வீட்டில் அடங்காத பிள்ளை ஊரில் அடங்கிவிடும்
6. பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்
7. எண்ணமெல்லாம் பொய் எழுத்தின்படி மெய்
8. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
9. கொடிறும் பேதையும் கொண்டது விடா
10. நாய் அறியுமோ ஒரு சந்திப் பானையை பெற்றவள் அறிவாள் பிள்ளை அருமையை
11. எட்டிப் பழுத்தால் என்?
    ஈயாதார் வாழ்ந்தால் என்?
12. தன் உயிரைப்போல மன் உயிரை நினை
13. சருகு .அரிக்க நேரமேயொழிய குளிர் காய நேரமில்லை
14. தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது
15. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிட்டாது
16. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தாற்போல
17. ஆடு கிடந்தவிடத்து அதன் மயிரும் கிடவாது
18. கோடரிக் காம்பு குலத்துக் கீனம்
19. துறவிக்கு வேந்தன் துரும்பு
20. ஆரியக் கூத்தாடினும் காரியத்திற்மேற் கண்ணாயிரு

21. மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்
22. காதுக்குக் கடுக்கண் முகத்துக்கு அழகு
23. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
24. சொர்க்கத்தே போம் போதும்
கக்கத்தே ராட்டினத்தைச் சுமத்தல்
25. ஏன் கருடா சுகமா என்றால்
இருக்கும் இடத்திலே இருந்தால் சுகம்
26. நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே
27. எய்தவன் இருக்க அம்பை நோவதேன்?
28. சாங் காலத்திற் சங்கரா என்றால் முடியுமோ?
29. பெற்றதாய் பசித்திருக்கப் பிராமண போசனமோ
30. நல்ல மாட்டிற்கு ஓரடி
நற்பெண்டிருக்கொரு வார்த்தை
31. இரப்பார்க்கு வெண்சோறு பஞ்சமோ?
32. அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில்
குடைபிடிப்பர்
33. பசுவினைக் கொன்று செருப்பைத் தானங் கொடுத்தல்
34. குரங்கின் கையில் கொடுத்த பூமாலை
35. அக்காள் இருந்தால் மச்சான் உறவு உண்டு
36. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமோ?
37. சிவபூசை வேளையில் கரடி வந்தது போல
38. தன்வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்
39. தாயைப் பழித்து மகள் அவிசாரியானாள்
40. வெண்ணையைக் கையில் வைத்துக்கொண்டு
நெய்க்கு அலைவானேன்?
41. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை
42. பணமில்லாதவன் பிணம்
43. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே
44. பணம் பத்தும் செய்யும்
45. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
46. ஊரில் ஒருவனே தோழன்
ஆரும் அற்றதே தாரம்
47. கொடிறும் பேதையும் கொண்டது விடா

48. அன்னநடை நடக்கப்போய் தன்னடையும் கெட்டது
49. உள்ளே பகை, உதட்டில் உறவு
50. ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோட
51. தினை விதைத்தவன் தினையறுப்பான்
வினை விதைத்தவன் வினையறுப்பான்
52. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
53. ஊரோட உடன் ஓடு
நாடு ஓட நடுவோடு
54. நெருப்பைச் சிறிதென்று நினைக்கலாமா?
55. பெண் என்றால் பேயும் இரங்கும்
56. கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேணுமா?
57. பனையடியிலிருந்து பாலைக் குடித்தாலும்
கள் குடித்தான் என்பர்
58. அரைக் காசுக்குப் போன மானம்
ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
59. நிறைகுடம் தளும்பாது
குறைகுடம் கூத்தாடும்
60. நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலு திக்கும் வாயில்
61. இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி
62. நாழி நெல்லுக்கு ஒரு புடவை விற்றாலும்
நாய் நிர்வாணந்தான்
63. அச்சிக்குப் டே னாலும் அகப்பை அரைக்காசுதான்
64. பித்தளை நாற்றம் போகாது
65. கடுந்தேட்டுக் கண்ணைக் கெடுக்கும்
66. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது
67. குங்குமஞ் சுமந்த கழுதை
68. இரக்கப் போனாலும் சிறக்கப் போ

படிக்காசுப் புலவர் தண்டலையார் சதகக் காப்பில்,

> 'இசைந்த பழமொழி விளக்கம் இயம்பத்தானே'
> 'விளங்கு பழமொழி விளக்கம் அறிந்து பாட'
> 'பரவு பழமொழி விளக்கம் பரிந்து கூறல்'

எனக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குமரேச சதகத்தில் குருபாததாசர் பழமொழியை 'உலகமொழி' (91) எனக் குறிப்பிடுகிறார்.

சோமேசர் முதுமொழி வெண்பாவில் மாதவச் சிவஞான யோகியார் பழமொழியை 'முதுமொழி' எனக் குறிப்பிடுகிறார்.

ஜெயங்கொண்டார் சதகம்
(பாடுவார் முத்தப்ப செட்டியார்)

பாடுவார் முத்தப்பர் இந்நூல் முழுமையும் நேமம் கோயில் இறைவனையும் இறைவியையுமே பாடிப் பணிகின்றார். இதே நூலை கீழ்த்திசைச் சுவடி நூல் நிலையம் 'செயங்கொண்டார் வழக்கம்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது. நேமம் சிவன் கோயிலில் வீற்றிருக்கும் செயங்கொண்ட சோழீசரைப் பாடுவதாகும். பாடலின் அடிப்படையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழி காணப்படுகிறது. ஒவ்வொரு பாடலும் செயங்கொண்டாரை விளிப்பதாகவும் துதிப்பதாகவும் பாடப்பட்டிருக்கிறது. பழமொழிகளை விளக்க பல்வேறு கதைகளையும் வரலாறுகளையும் கையாண்டுள்ளார். இராமாயணக் கதைகளையொட்டி இருபத்திரண்டு பழமொழிகளும் பாரதக் கதையையொட்டி பன்னிரண்டு பழமொழிகளும் எழுந்துள்ளன.

கா.சு.பிள்ளை, நா. நடராசன், சோமலே ஆகியோரின் ஆய்வு அடிப்படையில் பாடுவார் முத்தப்பசெட்டியார் 18ஆம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்த புலவர் என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

1913ஆம் ஆண்டிலேயே இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயங்கொண்டார் சதகம்

1. பெருமரத்தைச் சுற்றி நின்ற வல்லியுஞ் சாகாது (2)

2. தருமமே தலை காக்கும் அதர்மம் அழிந்துவிடும் (3)
3. தொழுவாரெல்லாம் உழுவார் தலைக்கடை (4)
4. வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும் (5)
5. பெரியாரைத் துணைக்கொளல் (6)
6. யானை நிழல் பார்க்கையிலே தவளை வந்து கலக்கிவிடும் (7)
7. படைக்குப் போகாதவர் நல்ல சேவகர் (8)
8. ஊர் இரண்டு பட்டதென்றால் கூத்தாடிக்கே இலாபம் (9)
9. நெல்லோடே பதரும் அசத்தினில் அதரும் (10)
10. சுங்க மாறியபோது சுண்ணாம்புங் கொடுக்கார் (11)
11. பார்ப்பார்க்கு வாய்ப்போக்காதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே (12)
12. வெண்ணீறே வினையகற்றும் (13)
13. முள்ளாலே எடுப்பதைக் கோடாலியால் எடுக்க வந்த முறைமையாமே (14)
14. கொண்டவன் தூற்றும்போதே கூரையொக்கத் தூற்றும் (15)
15. உடை குலைந்த பின்பு சொந்த முறைமைகள் கொண்டாடுவரோ (16)
16. புத்திமான் பலவான் (17)
17. நாழிப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வாரறிவுமிகு நடுவுள்ளோரே (18)
18. பழி கிழமதாகி விட்டுப் போவதில்லை (19)
19. சரச மிஞ்சினால் கை போடொண்ணாது (20)
20. வல்லவர்க்குப் புல்லும் ஆயுதம் (22)
21. சிறுக்கி மனதறியாமல் செடிதனைக் கையாற்றூக்கித் திரிந்ததுபோல (23)
22. பதிவிரதையானாற் தேவடியாள் வீட்டினிந் தந்தரிக்கலாமே (24)
23. கண்டதைக் கற்கின்றவனே பண்டிதனாவான் (25)
24. புண்ணியத்துக்கு உழும் எருதைப் பல்பிடித்துப் பார்த்தாற்போல (26)
25. அயல் வீட்டான் மகன் ஆபத்துக்கு உதவான் (27)

26. மெண்ணெய்தனைத் துடைத்திடலாம் எழுத்துதன்னை துடைத்தாரில்லை (28)
27. உண்டென்ற பேருக்குண்டு இல்லை என்ற பேர்க்கில்லை உண்மை (29)
28. தன்னுயிர் போல் மண்ணுயிரை எண்ணு (30)
29. வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்தாற்போல (31)
30. துர்ப்புத்தி மந்திரியால் அரசுக்கீனம் (32)
31. கோபமே பெரும்பாவம் சண்டாளம் (33)
32. காத்திருந்தோன் பெண்டுதனை நேற்று வந்தோன் கொண்டு போன கதை (34)
33. குதிரை நடவாவிடில் மாவித்தர் பறப்பாரோ? (35)
34. பாத்திரத்தை அறிந்து பிச்சையிட வேண்டும் (36)
35. முன் பானை தனைச் சாயப் பிடிப்பதுண்டோ (37)
36. சின்ன பாம்பானாலும் பெரிய கொம்பால் அடி (38)
37. காணியை நட்டுக் களத்தினிற்பதுவே நன்மை (39)
38. உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?(40)
39. மூணருத்தங் கருமமிழந்திடுவரென்ற பழமொழி உண்மைதானே (41)
40. உனக்கு மழை பெய்யும் இப்போ எனக்கு இரவை கொடுத்தால் (42)
41. நல்ல வார்த்தை சொன்னால் பொல்லாப்பு இல்லை (43)
42. அனுபோகம் தொலையும்போது அவிழ்தம் சித்திக்கும் (44)
43. நிழல் அருமை வெய்யிலிற் போனால் தெரியும் (45)
44. குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி நிறத்திலொன்றும் குறையாதே (46)
45. கணக்கனுக்கு கைக்கூலி கட்டி குடியிருப்பது கடன் (47)
46. படைக்கு ஓடி வாழ் பஞ்சத்திற்கு இருந்து வாழ் (48)
47. உறவுதனைப் போலிருந்து குளவியைப் போல் கொட்டுவது (49)
48. எறும்பிற்கும் தன் கையால் எண்சாண் உடம்பு (50)

49. நாளையென்பார் கொடை தனக்குச் சடுதியிலே இல்லை (51)
50. முகடுமுட்ட வரும் கோபம் துரும்!!குத்த வேலை (52)
51. பெண்ணென்றால் பேயும் இரங்கும் (53)
52. வெள்ளம் வருமுன் அணை கோல வேண்டும் (54)
53. நீச்சலறியா மைந்தரை வெள்ளம் கொண்டுபோம் (55)
54. மன்னவன் எப்படியோ மண்ணுயிரும் அப்படி (56)
55. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது (57)
56. மாமி தலைமேற் கையும் வேலிப்புறத்திலே கண்ணும் (59)
57. காதமோடியும் முயல்தான் கைத்தூக்கு (58)
58. கண்ணாரக் கண்டதும் பொய் தீர்க்க விசாரிப்பதே மெய் (60)
59. போறதல்லா ஓடக்காரனுக்கு அரைக்காசு கொடுக்கப் பொருந்திடாதே (61)
60. தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளைந்திட வேண்டும் (62)
61. குலவித்தை கல்லாமல் பாகம் படும் (63)
62. கொன்றாரைக் கொல்லும் கொலை (64)
63. மலை பெரிதானாலுமென்ன சிற்றுளிக்குப் பயஞ்சனிக்கும் (65)
64. நாவிதன் செய்தியை அறிந்து குடுமியைப் பத்திரப் படுத்தல் நலம் (66)
65. கம்மாளன் பசுவைக் காதறுத்துக்கொள்ள வேண்டும் (67)
66. நெடுங்கிணறும் வாயாலே தூறும். (68)
67. வம்புவிழக் கையிலிழை கட்டினான் மெய்யினிற் புண்ணாறிடாதே (69)
68. வேச்சிலரக்கர்களாண்டி லென்னொன்று இரக்கர் நாளிருந்தன்றே (70)
69. யாரென்னு மானுமிழந்துயிர் காப்பதென்ன (71)
70. நெருப்பை அறியாமல் தொட்டிலும் சுடும் (72)
71. மந்திரம் கால் மதி முக்கால் (74)
72. செய்த தீவினை தானுஞ் செய்தவர்க்கே சேரும் (73)

73. பசுத்தோல் போர்த்திய புலியது போல (75)
74. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்காலளவு (76)
75. வித்துவானும் மதயானையும் சரி (77)
76. காமத்துக்குக் கண்கண்ட விடத்திலே (78)
77. நித்தியங்கட்டப்பாவை முற்றவுந்தான் பகுத்திடுமோ (79)
78. காளுலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும் வரை கட்டுவாரே (80)
79. பேருலகின் மனங்கலங்கிப் பிரியாமற் பிடித்தவர்க்குப் பேறுண்டாமே (81)
80. பத்தருளத் தினிலீசன் குடியிருப்பான் (82)
81. தகப்பன் ஒரு பாக்கு பிள்ளையொரு தோப்பு (83)
82. எண்சாணுடம்பிற்கு சிரசே பிரதானம் (84)
83. மூத்தது மோழை இளையது காளை (85)
84. தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வான் (86)
85. கீர்த்தி அபகீர்த்தி வந்தால் போகாது (87)
86. வர்ற விதி வந்ததென்றால் வளைந்தாடும் பானை (88)
87. பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும் (89)
88. சானியொரு கூடை சவ்வாது ஒரு பணவெடை (90)
89. வலியாருக்கு வலியாருமிருப்பர் (91)
90. புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைக் கொண்டுபோனது (92)
91. பகட்டிப் பங்கெடுத்தாலென்? இடிபடிபொரியரிசி (93)
92. வேணுமென்று நூற்றால் மெல்லிய நூலால் நூற்றிடுவர் (94)
93. துர்ச்சனரைக் கண்டார் தூரப்போ (95)
94. நல்லது கண்டானாலன்றனக்கே என்பார் நல்லோர் (96)
95. உரைசெய்தவ மறந்தாற்கை தவமாகும் (97)
96. இடுவது பிச்சை பெறுவது மோட்சம் (98)
97. சாட்சிக்காரனைப் பணியார் சண்டைக்காரனைப் பணியத்தகும் (99)
98. தனமுடையோர் மனமழுங்கச் செய்யப்படாது (100)

தாயுமானவர்

'அவனன்றி ஓரணுவும் அசையாது'
(தா.பா. எங்கும் நிறை 1)
'அரிய கொம்பில் தேனை முடவன் இச்சித்தபடி'
(தா.பா. சின்மயா 2)
'பள்ளத்துள் வீழும் புனல்போல்'
(தா.பா. பாயப்புலி 40)
'காயாத மரமீது கல்லேறு செல்லுமோ?'
(தா.பா. சச்சிதா 8)
'காகமானவை கோடிகூடி நின்றாலும்
ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ?'
(தா.பா.எங்கும் நிறை 10)
'நேற்றுளார் இன்று மாளா நின்றனர்'
(தா.பா. ஆசையெனும் 16)

குற்றாலக் குறவஞ்சி (திரிகூடராசப்பக் கவிராயர்)

இந்நூலைத் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றியுள்ளார்.

'ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்க மாட்டாரா?'
'சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டுவிப்பான் இறைவன்'
'ஆசாரக் கள்வர்போல் நாரை திரியுது'
'ஆற்றில் போட்டுக் கன குளத்தில் எடுப்பது'

போன்ற பழமொழிகளை இந்நூலில் காண்கிறோம்.

இராமநாடகம் (அருணாசலக் கவிராயர்)

'பெண் என்றால் பேயும் இரங்குமே'
'ஊமை கண்ட கனா'
'தம்பி உடையான் படைக்கஞ்சான்'
'வெண்ணெய் திரண்டு வரும்போது
தாழி உடைத்தாற்போல'

'மந்திரத்தில் மாங்காய் விழுமோ'
'புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ'

போன்ற பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

கதாமஞ்சரி (தாண்டவராய முதலியார்)

'மீசையிலே மண் படவில்லை'
'கோத்திர மறிந்து பெண்ணைக் கொடு'
'பாத்திர மறிந்து பிச்சையிடு'

வள்ளலார்

'ஆற்று வெள்ளம் வருவதன்முன் அணை போடவறியீர்'
'இலவு காக்கின்ற கிள்ளை போல்'
'பாலுக்குங் காவல்லெம் பூனைக்குந் தோழன்'
'அடித்தாலும் நீயே அணைத்தாலும் நீயே'
'பள்ளத்திலே செலு நீர்போல'
'பாம்புக்கும் பாலுண வீகின்'
'ஆற்றிலே கரைத்த புளியென'

போன்ற பழமொழிகளை இவரது படைப்புக்களில் காணலாம். 'கடலிலே கரைத்த பெருங்காயம்' என்பது சில வட்டாரங்களில் 'ஆற்றிலே கரைத்த புளியென' வழங்குவதை வள்ளலார் நூலில் காண்கிறோம்.

சர்வ சமய சமரசக் கீர்த்தனங்கள் (மாயூரம் வேதநாயகம்பிள்ளை)

'கரும்பு தின்னக் கைக்கூலி ஏனோ'
'செத்தால் தெரியுமே செட்டியார் வாழ்வு'
'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'
'எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்'

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை

'பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ'
'எடுப்பார் கைப்பிள்ளை'
'நெருப்பையும் கறையான் அரிக்குமோ?'
'நானே பிடித்த முயற்கு மூன்றேகால்'
'மணற் சோற்றில் கல் தேடுதல்'
'புளியம் பழமும் தோடும் போலாம்'
'பிடித்தாற் கற்றை விட்டால் கூளம்'
'ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை'
'தாய்க்கு மொளித்த சூலோ?'
'அங்கைப் புண்ணுக்கு ஆடியும் வேண்டுமோ?'
'வெளுத்த தெல்லாம் பாலா?'
'அப்பந் தின்னவோ? அலால்குழி என்னவோ?'
'கள்ள மனந்தான் துள்ளும்'
'குற்றமுள்ளோர் கோழையர்'
'இருதலைக் கொள்ளி எறும்பானேன்'
'கைக்கொட்டியது தன் வாய்க்கெட்டுதற்குள்'
'கிழவி பேச்சேற்குமோ கின்னரக் காரிக்கு?'
'நொந்தபுண் அதனிலே வந்திடும் நூறிடி'

பாரதியாரும் பழமொழிகளும்

'பொருத்தமுறத் தணிகையினால் புலமை சேரும்
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்னும்
அருத்தமிக்க பழமொழியும் தமிழிலுண்டாம்
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன்'

'பொறுத்தார் பூமியாள்வார்' என்ற பழமொழியையும் 'பழமொழி' என்ற சொல்லையும் தனது பாடலில் எடுத்தாண்டுள்ளார்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்'

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பழமொழியை இப்பாடலில் காண்கிறோம்.

> 'பெண்ணென்று சொல்லிடிலோ ஒரு
> பேயும் இரங்கும் என்பார்; தெய்வமே நினது
> எண்ணம் இரங்காதோ - அந்த
> ஏழைகள் அங்கு சொரியுங் கண்ணீர் வெறும்
> மண்ணிற் கலந்திடுமோ?'

இப்பாடலில் 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்ற பழமொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

> 'பண்ணிய பாவமெல்லாம்
> பரிதிமுன் பனியே போல
> நண்ணிய நின்முன் இங்கு
> நசித்திடல் வேண்டும் அன்னாய்?'

இப்பாடலில் 'ஆதவனைக் கண்ட பனிபோல' என்ற பழமொழியைக் கையாண்டுள்ளார்.

> 'நம்பினார் கெடுவதில்லை
> நான்குமறைத் தீர்ப்பு
> அம்பிகையைச் சரண்புகுந்தால்
> அதிக வரம் பெறலாம்'

என்ற பாடலில் 'நம்பினார் கெடுவதில்லை' என்ற பழமொழியை இடமறிந்து பயன்படுத்தியுள்ளார்.

> 'சாகத் துணியிற் சமுத்திர மெம்மட்டு
> மாயையே - இந்தத்
> தேகம் பொய்யென்றுணர் தீரரையென்
> செய்வாய் - மாயையே'

இப்பாடலில் 'சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்' என்ற பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

'மரத்தினை நட்டவன் தண்ணீர் - நன்கு
வார்த்ததை ஓங்கிடச் செய்வான்
சிரத்தையுடையது தெய்வம் இங்கு
சேர்ந்த உணவெல்லை யில்லை'

இப்பாடலில் 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்ற பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

பாரதியார் பழமொழியை 'முன்னோர் வாக்கு' என்றும் குறிப்பிடுகிறார்.

'..... ....
தாயைப் போலே பிள்ளை என்று முன்னோர்
வாக்குளதன் றோபெண்மை அடிமையுற்றால்
மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன் றாமோ?'

'காற்றுள்ள போதே நாம் தூற்றிக் கொள்வோம்
கனமான குருவையெதிர் கண்ட போதே
மாற்றான அகந்தையினைத் துடைத்துக்
கொள்வோம்!'

இப்பாடலில் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழி பயின்று வருகிறது.

'தேவர் முன்னே அன்புரைக்கச் சிந்தை வெட்கங்
கொள்வதுண்டோ?
காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார்?
ஆசைதான் வெட்கம் அறியுமோ என்று பல
நேசவுரை கூறி நெடிதுயிர்த்து'

இப்பாடலில் 'ஆசை வெட்கமறியாது' என்ற பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

'தாயைப்போலப் பிள்ளை'
'அவனை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு'
'நத்தை வயிற்றிலே முத்து பிறக்கும்'
'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'

போன்ற பழமொழிகளைத் தனது பாடலில் புகுத்திப் பாடியுள்ளார்.

பழமொழி விளக்கக் கதைகள் (இனியன்)

இனியனின் பழமொழி விளக்கக் கதைகளில் அறுபதுக்கு மேற்பட்ட பழமொழிகளுக்குக் கதை கூறி விளக்குகிறார். பழமொழியை உபகதை என்று கூறுவதையும் பழமொழிக்கும் கதைக்குமுள்ள தொடர்பையும் நன்கு அறியலாம்.

திரைப்பாடல்களிலும் பழமொழியின் செல்வாக்கைக் காணலாம்.

'சட்டி சுட்டதடா கை விட்டதடா'
'ஆடற மாட்டை ஆடிக்கறக்கணும்
பாடுற மாட்டைப் பாடிக் கறக்கணும்'
'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'

பழமொழியே திரைப்படத் தலைப்பாக அமைவதும் உண்டு.

'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே'
'ஆயிரம் காலத்துப் பயிர்'

நாவல், சிறுகதைகளில் பழமொழிகள்

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பழமொழிகளை நாவல்களிலும் சிறுகதைகளிலும் காண்கிறோம். கதையை விறுவிறுப்பாகச் சொல்லவும் விவரிக்கவும் கருத்தை விவரிக்கவும் பின்னணிச் சூழலை உணர்த்தவும் ஆசிரியர் கூற்றாகவும் பாத்திரங்கள் மூலமும் பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

'பட்டி கொரைச்சா படி தொறக்குமோ'
(தலைமுறைகள்)

'செட்டிமுறை எட்டு முறை'
(தலைமுறைகள்)

'வலிய வரப்பட்ட சீதேவிய சவட்டித் தள்ளலாமோ'
(தலைமுறைகள்)

'இறைஞ்ச நாயக்கரு பெரிய நாயக்கரு'
(கோபல்ல கிராமம்)

'காலக் கிரகத்துக்குப் பெருச்சாளி காவடி எடுத்து ஆடுச்சாம்'
(கரிசல்)

'மொசக் கடிக்கிற நாயை மூஞ்சியை பார்த்தா தெரியாது'
(கரிசல்)

'தடியை எடுத்தவனெல்லாம் தண்டல்காரனாயிட்டா?'
(கரிசல்)

'கரிசல நம்பி கெட்டவன் இல்ல'
(வாடிய பயிர்)

'நீலிக்குக் கண்ணீரு நெத்தியிலே'
(சேற்றுப்பட்டாளம்)

'காஞ்சிபுரம் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்'
(வேள்வித் தீ)

'கள்ள மறவர் கனத்ததோர் அகம்படியார்
மெல்ல மெல்லவந்து வெள்ளாளரானார்'
(கறிச்சோறு)

'ஆடத் தெரியாத தேவடியா முத்தம் கோணல்னு சொன்னாளாம்'
(கறிச்சோறு)

'~~எண்ணத்தால்~~ கிளியாட்டம் பொண்டாட்டி இருந்தாலும் கொரங்காட்டம் ஒரு வைப்பாட்டி வேணும்'
(நெஞ்சின் நடுவே)

தொல்காப்பியம் தொடங்கி இற்றைநாள் இலக்கியங்கள் வரை பழமொழிகளின் செல்வாக்கினையும் வளர்ச்சியினையும் கண்டோம்.

3. தமிழ்ப் பழமொழிகளை வகைப்படுத்தல்
(Classification of Tamil Proverbs)

அறிவியல் ஆய்வில் சேகரித்தலும் (Collection) வகைப்படுத்தலும் (Classification) ஆய்வு செய்தலும் (Analysis) இன்றியமையாததாகும். இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். இம்மூன்றும் தன்னிச்சையானவைகள் என்றாலும் ஒன்றையொன்று சார்ந்ததாகும். சேகரிப்பும் வகைப்படுத்தலும் நல்ல முறையில் அமைந்தால்தான் ஆய்வும் சிறப்பாக அமையும். வகைப்படுத்தல் என்பது ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு வகைப்படுத்தலாகும். வகைப்படுத்தல் எவ்வளவுக்கெவ்வளவு நுணுக்கமாகவும் செம்மையாகவும் அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வுகள் நுணுக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப் பழமொழிகளைப் பொறுத்த மட்டில் பெரும்பாலான தமிழ்ப் பழமொழி தொகுப்புக்கள் அகர வரிசையில்தான் தொகுக்கப்பட்டுள்ளன. அகராதி அடிப்படையில் எழுந்த முயற்சியாகும். தமிழ் பழமொழிகளைப் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளேன். உலகிலுள்ள அனைத்துப் பொருட்களைப் பற்றியும் பழமொழிகள் கூறுகின்றன. எனவே, பழமொழிகளை வகைப்படுத்துவதில் சிரமங்கள் உள்ளன. சேகரித்த பழமொழிகளைப் பொருள் அடிப்படையில் இங்கு வகைப்படுத்த முயன்றுள்ளேன். இதுவரை வகைப்படுத்திய முறையை இரண்டாகப் பகுக்கலாம்.

1. அகர வரிசையில் வகைப்படுத்துதல்
2. பொருள் அடிப்படையில் வகைப்படுத்துதல்

1. சுமித் (Smith) அவர்கள் பழமொழிகளை ஏழாக வகைப்படுத்துகிறார்.

1. உவமைத் தன்மையன
2. கேலித் தன்மையன
3. சிலேடைத் தன்மையன

4. மரபுத் தொடர்கள்
5. சொற்றொடர்கள்
6. விடுகதைத் தன்மையின
7. ஒலி இயைபின

2. ஆப்ரஹாம் (Roger D. Abraham) அவர்கள் பழமொழிகளை நான்காக வகைப்படுத்துகிறார்.

1. நேர் சம மதிப்பு (Positive equivalence)
   காலம் பொன்னானது
2. எதிர்மறை சமமதிப்பு (Negative equivalence)
   ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை
3. நேரடி காரணகாரியத் தொடர்பு (Positive Causational)
   பதறிய காரியம் சிதறிப்போகும்
4. எதிரிடை காரண காரியத் தொடர்பு (Negative Causational)
   இரண்டு குற்றங்கள் நியாயமாகாது

3. பிரெவ்னே (Browne) அவர்கள் பழமொழியை இரண்டாக வகைப்படுத்துகிறார்.

1. இலக்கியப் பழமொழி (Literary)
2. இலக்கியமில்லாப் பழமொழி (Non-Literary)

4. டாக்டர் சு. சக்திவேல் அவர்கள் தமிழ்ப் பழமொழிகளை ஐந்தாக வகைப்படுத்தலாம் என்கிறார்.

1. அளவு அடிப்படை (Size basis)
2. பொருள் அடிப்படை (Subject basis)
3. அகரவரிசை அடிப்படை (Alphabetic basis)
4. அமைப்பியல் அடிப்படை (Structural basis)
5. பயன் அடிப்படை (Functional basis)

5. டாக்டர் க. சாந்தி அவர்கள் தமிழ்ப் பழமொழிகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கின்றார்.

1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்
2. பொருளை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்

1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள் →
- வாக்கிய அமைப்புள்ள பழமொழிகள்
- மேற்கோள் பழமொழிகள்
- ஒலியியைபு பழமொழிகள்
- கேள்வி பழமொழிகள்
- உவமைப் பழமொழிகள்

2. பொருளை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்

1. வேளாண்மைப் பழமொழிகள்
2. மிருகங்கள் பற்றிய பழமொழிகள்
3. பறவைகள் பற்றிய பழமொழிகள்
4. வேடிக்கைப் பழமொழிகள்
5. நெருப்புப் பழமொழிகள்
6. வானவியல் பழமொழிகள்
7. அறிவுரைப் பழமொழிகள்
8. பொருளின் குணத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்
9. நம்பிக்கைப் பழமொழிகள்
10. விலக்குப் பழமொழிகள்
11. எதிரான கருத்துப் பழமொழிகள்
12. இரட்டைப் பொருள் பழமொழிகள்
13. குறிப்புடன் கூடிய பழமொழிகள்
14. திருமணம் பற்றிய பழமொழிகள்
15. ஒரே பொருளைத் தரும் பழமொழிகள்

6. பேராசிரியர் வ. பெருமாள் அவர்கள் தமிழ்ப் பழமொழிகளைப் பதினெட்டுப் பிரிவாக வகைப்படுத்துகிறார்.

1. பொருள் அடிப்படை
2. தகுதி அடிப்படை
3. சமுதாய அடிப்படை
4. சமய அடிப்படை
5. ஒத்த கருத்து அடிப்படை
6. ஒரே கருத்து பல்துறை அடிப்படை
7. வட்டார அடிப்படை
8. நில எல்லை அடிப்படை
9. சொல் அடிப்படை
10. அளவு அடிப்படை
11. கருத்து எண்ணிக்கை அடிப்படை
12. அமைப்பு அடிப்படை
13. கதை அடிப்படை
14. நூல் அடிப்படை
15. இலக்கண இலக்கிய அடிப்படை
16. செவிப்புல அடிப்படை
17. அணியியல் அடிப்படை
18. பல்பொருள் அடிப்படை

இவ்வாய்வுத் திட்டத்திற்காகச் சேகரித்த பழமொழிகளை ஆறு பெரும் பிரிவாகவும் முப்பத்தி நான்கு சிறு பிரிவுகளாகவும் வகைப்படுத்தியுள்ளேன். வகைப்பாட்டில் அடங்காதவற்றைப் பல்பொருள் பற்றிய பழமொழிகள் என்ற வகைப்பாட்டில் சேர்த்துள்ளேன். தமிழ்ப் பழமொழிகள் எண்ணற்ற பொருள்களைப் பற்றிப் பேசுவதால், அனைத்தையும் வகைப்படுத்துவது எளிதான காரியமல்ல.

பெரும் பிரிவுகள்

1. இயற்கை
2. விலங்கு, பறவையினம்
3. தாவரங்கள்
4. சமூகமும் பண்பாடும்

5. மனிதப் பண்புகள்
6. பல்பொருள்

இவற்றில் பல உட்பிரிவுகளும் உண்டு. இவ்வாய்வுத் திட்டத்திற்குச் சேகரித்த பழமொழிகளை முப்பத்திநான்கு பிரிவாக வகைப்படுத்தியுள்ளேன். குறிப்பாக மனிதப் பண்புகள், பல்பொருள் பற்றியது போன்றவற்றில் எண்ணற்ற உட்பிரிவுகள் உண்டு என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

1. இயற்கை
2. விலங்கு, பறவையினங்கள்
3. தாவரங்கள்
4. தொழில்
5. பொருளாதாரம்
6. கல்வி
7. தத்துவம்
8. அரசு
9. திருமணம்
10. உறவுகள்
11. பாலின உறவு
12. பெண்கள்
13. பரத்தமை
14. சாதியும் இன அவதூறும்
15. உணவு
16. ஆடை அணிகலன்கள்
17. நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்
18. தெய்வங்கள்
19. திருவிழாக்களும் பண்டிகைகளும்
20. சமயம்
21. இல்லறநெறி உலகியல்பு
22. மொழி / பேச்சு
23. நுண்கலை
24. நகைச்சுவை
25. பொருட்கள்
26. மனித உடல் உறுப்புக்கள்

27. உடல் நலம்
28. இறப்பு
29. ஊரும் பேரும்
30. கிழமை, மாதங்கள்
31. நாட்டுப்புற மருத்துவம்
32. இலக்கியமும் இதிகாச புராணங்களும்
33. மனிதப் பண்புகள்
34. பல்பொருள் பற்றியது

இயற்கை பற்றிய பழமொழிகள்

1. சூரியனைக் கண்ட தாமரை போல
2. சூரியனைக் கண்ட பனிபோல
3. சூரியனைக் கையால் மறைக்க முடியுமா?
4. சூரியன் நுழையா இடத்தில் வைத்தியன் நுழைவான்
5. சந்திரன் இல்லாத வானம் போல
6. சந்திரனுக்கும் களங்கம் உண்டு
7. மின்னலுக்குப் பின் மழை
8. ஈசானிய மின்னலுக்கு எருதும் நடுங்கும்
9. சித்திரை மின்னல் ஆகாது
10. ஆனி ஆறில் இடி இடித்தால்
    ஆறு மாதத்திற்கு மழையில்லை
11. ஆவணி ஆறில் இடி இடித்தால் நல்ல மழை
12. கோடை இடியும் மாரி மின்னலும் மழை அதிகம்
13. பொழுத்துக்கால் மின்னல் விடியற்காலை மழை
14. ஆடி மாதம் அடி மின்னலைப் பார்த்துப் பட்டறை திற
    ஐப்பசி மாதம் அடி மின்னலைப் பார்த்துப் பட்டறை திற
15. ஈழமும் கொங்கும் எதிர்த்து மின்னினால்
    பள்ளத்திலிருக்கிற குடிலை மேட்டில் போடு
16. கோடை இடியும் மாரி மின்னலும் மழை அதிகம்
17. மாரி இடியும் கோடை மின்னலும் மழை இல்லை
18. சித்திரை மின்னலாகாது
    கண்டக்கால் மார்கழி மழையுமாகாது
19. ஐப்பசி மாதம் இடி இடித்தால்
    கிணற்றடியில் அருகு முளைக்கும்

20. காலை மோடமும் கழுதை வாடையும்
மாலைத் தென்றலும் மழையில்லை
21. அடிவானம் கருக்கின் அப்போதே மழை
22. ஆகாயம் மணற்கொளித்திருந்தால் அப்போதே மழை
23. மாரி அடைக்கில் ஏரி உடைக்கும்
24. காலை உப்பலும் கருத்தணி வெயிலும்
மாலை மேகமும் மழைதனில் உண்டு
25. தென்றலும் வாடையும் சிறக்கும் பயிர்கள்
26. கச்சானுக்கு மச்சான் மழை
27. ஆடித் தென்றல் நாடு நடுங்கும்
28. மாரித் தென்றல் அடித்தால்
மாட்டை விற்று ஆட்டை வாங்கு
29. ஆடிக் கீழ்க்காற்றும் ஆவணி மேல்காற்றும் அடித்தால்
சொற்பனத்திலும் மழையில்லை
30. கடுங்காற்று மழை காட்டும்
கடுஞ்சினமே பகை காட்டும்
31. வட காற்றடிக்க வந்தது மழையே
32. குழறியடித்தால் காற்றுக்கு கைமேல் மழை
33. அந்தி கிழக்கு அதிகாலை மேற்கு
கொரடு போட்டால் வராத மழை வரும்
34. மேல்தலை வில்லு கீழ்தலை மழை
35. கீழ்தலை வில்லு மேல்தலை வெள்ளம்
36. ஆனி மாதம் கொரடு போட்டால்
அடுத்த மாதம் மழையில்லை
37. மாரி யல்லது காரியமில்லை
38. மாரி பொய்ப்பின் மண் பொய்க்கும்
39. வானஞ் சுருங்கின் தானம் சுருங்கும்
40. பிள்ளை பிறப்பதும் மழை பெய்வதும்
மகாதேவனின் சித்தம்
41. மழை காணாத பயிர்
தாய்முகங் காணாச் சேய்போல
42. காலைச் செவ்வானம் கடுக மழை
அந்திச் செவ்வானம் அப்போதே மழை
43. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
44. தட்டான் தாழப்பறந்தால் மழை

45. அந்தி ஈசல் அடைமழை
46. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை
47. தவளை கத்தினால் மழை
48. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
49. கொக்கு மேடேறினால் மழை
50. வானம் அதிர்ந்தால் மழை
51. சித்திரை பெய்தால் பொன்னேற் கட்டலாம்
52. ஆனி அடைச்சாரல் ஆவணி முச்சாரல்
53. ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
அடுத்த அமாவாசை வரை மழை இல்லை
54. புரட்டாசி பெய்தாலும் பெய்யும் காய்ந்தாலும் காயும்
55. புரட்டாசி பெய்து பிறக்கணும்
ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
56. ஐப்பசி அடை மழை
கார்த்திகை கன மழை
57. மார்கழி பிறந்தால் மழை இல்லை
பாரதம் முடிந்தால் படை இல்லை
58. மார்கழி மழை மண்ணுக்கு உதவாது
59. மாசி மின்னல் மரம் தழைக்கும்
60. பங்குனி மழை பத்துக்கு நஷ்டம்
61. பனி பெய்தால் மழை இல்லை
பழம் இருந்தால் பூ இல்லை
62. விண் பொய்த்தால் மண் பொய்க்கும்
63. விட்டுவிட்டு பெய்கிற மழையினும்
விடாமல் பெய்கிற தூவானம் நல்லது
64. காலமறிந்து பெய்யாத மழையும்
நேரமறிந்து உண்ணாத உணவும் சரியல்ல
65. ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்து போகும்
66. ஆனி குமுறினால் அறுபது நாளைக்கு மழை கிடையாது
67. அசுவினி கார்த்திகையில் இடி இடித்தால்
ஆறு கார்த்திகைக்கு மழையில்லை
68. துலாத்தில் வெள்ளி உலாத்தில் பெய்யும் மழை
69. பரணி மழை தரணி யெல்லாம் பெய்யும்
70. காய்ந்த வானம் பெய்தால் விடாது
71. அகல்வட்டம் பகல் மழை

72. அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்
73. கார்த்திகைக்குப் பின் மழையில்லை
கர்ணனுக்குப் பின் கொடையில்லை
74. அடிவானங் கறுத்தால் அப்போதே மழை
75. வடக்கே கறுத்தால் மழை வரும்
76. ஈசல் பறந்தால் மழை
77. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை
78. தட்டான் தாழப் பறந்தால் தப்பாமல் மழை
79. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
80. புற்றிலே ஈசல் புறப்பட்டாலும்
மண்ணிலே கரையான் கூடினாலும் மழை வரும்
81. வடகாற்று அடித்தால் மழை
82. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
83. மின்னலுக்குப் பின் மழை
84. காலைச் செவ்வானம் கடுக மழை
அந்திச் செவ்வானம் அப்போதே மழை
85. தவளை கத்தினால் மழை
86. கொக்கு மேடேறினால் உடனே மழை
87. வடகாற்றடித்தால் உடனே மழை
88. கச்சானுக்கு மச்சான் மழை
89. ஆடி ஆவணி கிழ்க்காற்றும்
ஐப்பசி மேல்காற்றும் அடித்தால் மழை இல்லை
90. ஆனி ஆறில் இடி இடித்தால் ஆறு மாதத்திற்கு
மழையில்லை
91. ஆவணி ஆறில் இடி இடித்தால் நல்ல மழை
92. வானம் அதிர்ந்தால் மழை
93. சித்திரை மின்னல் ஆகாது
94. கோடை இடியும் மாரி மின்னலும் அதிகம்
95. கடுங்காற்று மழை காட்டும்
கடுநட்பு பகை காட்டும்
96. ஆனி அடைச்சாரல்
ஆவணி முச்சாரல்
97. ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
அடுத்த அமாவாசை வரை மழை இல்லை

98. புரட்டாசி பெய்து பிறக்கணும்
ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
99. ஐப்பசி அடை மழை
கார்த்திகை கன மழை
100. மார்கழி பிறந்தால் மழை இல்லை
பாரதம் முடிந்தால் படை இல்லை
101. மாசி மின்னல் மரம் தழைக்கும்
102. பங்குனி மழை பத்துக்கு நஷ்டம்
103. பனி பெய்தால் மழை இல்லை
பழம் இருந்தால் பூ இல்லை
104. ஏரி பெருகில் எங்கும் பெருக்கு
105. ஏரி நீரைக் கட்டுதல் அரிது, உடைத்தல் எளிது
106. ஏரி உடைவதற்கு முன் அணைபோட வேண்டும்
107. ஏரி மேலே கோபித்துக் கொண்டு
கால் கழுவாமல் போனானாம்
108. ஏரி நிறைந்தால் கரை கசியும்
109. மாடக்குளம் உடைந்தால் மதுரை அழியம்
110. கிணற்றில் போட்ட கல்லு மாதிரி
111. கிணற்று தண்ணீரை வெள்ளமா கொண்டு போகும்
112. கிணற்றுத் தவளைக்கு கிணறுதான் சமுத்திரம்
113. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்
114. கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்
115. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல
116. கிணற்றுக்கு அழகு தண்ணீர்
பெண்ணுக்கு அழகு திலகம்
117. கிணறு இறைக்க இறைக்க சுரக்கும்
118. கிணற்றில் தள்ளி கல்லையும் போட்டான்
119. கிணற்றுத் தவளைக்கு வளம் ஏன்?
120. தாகம் ஏற்படுமுன் கிணற்றை வெட்டுங்கள்
121. தூர்ந்த கிணற்றைத் தூர்வாராதே
122. இறைத்த கிணறு ஊறும்
இறையாத கிணறு நாறும்
123. வீடு கட்டும் முன் கிணறு தோண்ட வேண்டும்
124. கல் உள்ளதே கிணறு
கரையுள்ளதே தோட்டம்

125. ஆறு நீந்தின எனக்கு
குளம் நீந்துதல் அரிதோ?
126. ஆறு நீந்தினவனுக்கு வாய்க்கால் எம்மாத்திரம்?
127. ஆறு போவதே கிழக்கு
அரசன் சொல்வதே வழக்கு
128. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
129. கடலைத் தாண்ட ஆசையுண்டு
கால்வாயைத் தாண்ட கால் இல்லை
130. கடல்நீர் நிறைந்து என்ன?
காஞ்சிரை பழுத்து என்ன?
131. கடலில் கரைத்த புளிபோல
132. கடலில் கரைத்த பெருங்காயம் போல
133. கடலில் மூழ்கிப் போனாலும்
கடனில் மூழ்கிப் போகக் கூடாது
134. கடல் ஆழத்தைக் கண்டாலும்
பெண்ணின் மன ஆழத்தைக் காணமுடியாது
135. ஓடுகிற வெள்ளம் அணையிலே நிற்குமா?
136. அணை கட்ட இறங்கி ஆற்றோடு போய்விட்டான்
137. காட்டாற்று வெள்ளத்திற்கு அணைபோட முடியுமா?
138. தண்ணீர் மிஞ்சினால் உப்பு
உப்பு மிஞ்சினால் தண்ணீர்
139. தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்
140. தண்ணீரில் இருக்கிற தவளை
குடித்ததைக் கண்டது யார்? குடியாததைக் கண்டது யார்?
141. தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா?
142. தண்ணீரில் வளர்ந்த உப்பு
தண்ணீரில்தான் கரையவேண்டும்
143. தண்ணீர் தேங்கி நின்னா
பயிர் ஏங்கி நிற்கும்
144. தண்ணீருக்குப் பயந்தால் நீச்சல் வருமா?
145. தண்ணீர் அடித்தால் தண்ணீர் விலகுமா?

விலங்குகள் பறவைகள் பற்றிய பழமொழி

1. ஆனைக்கும் அடி சறுக்கும்
2. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?
3. தாய் எட்டடி பாய்ந்தால்
   குட்டி பதினாறடி பாயும்
4. வேலியற போற ஓணானைப் பிடிச்சு
   வேட்டிக்குள்ள விட்டுட்டு குத்துதே குடையுதே
   என்றானாம்
5. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
6. அதிகம் படிச்ச மூஞ்சுரு
   காடிப் பானையிலே விழுந்திச்சாம்
7. ஆனை அசைந்து தின்னும்
   வீடு அசையாமல் தின்னும்
8. ஆடுமாடு இல்லாதவன் அடைமழைக்கு ராஜா
9. இனம் இனத்தோட, வெள்ளாடு தன்னோட
10. தானம் கொடுத்த மாட்டைப்
    பல்லைப் பிடுங்கிப் பார்த்தானாம்
11. உழக்கு நெல்லுக்கு உழைக்கப் போய்
    பதக்கு நெல்லைப் பன்றி தின்றதாம்
12. யானைக்கொரு காலம் வந்தால்
    பூனைக்கொரு காலம் வரும்
13. நாய் விற்ற காசு குரைக்காது
14. உயர உயரப் பறந்தாலும்
    ஊர்க்குருவி பருந்தாகுமா?
15. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
16. பாம்பின் கால் பாம்பறியும்
17. காகம் வலமானால் ஆயுசு விருத்தியாகும்
18. நாய் இருக்கிற இடத்திலே சண்டை உண்டு
19. பாம்பை முட்டையிலும் புலியைக் குட்டியிலும்
    கொல்ல வேண்டும்
20. முதலையும் மூர்க்கனும் விடா
21. கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை
22. குதிரையைத் தேர்ந்தெடுக்கும் போது ஓர்
    இளைஞனின் பார்வை வேண்டும்

23. இருட்டிலே எல்லாப் பெண்களும் பூனைகளும் கருப்பாகத்தான் இருக்கும்
24. மனைவி, கப்பல், குதிரை இம்மூன்றையும் மற்றவரை நம்பி ஒப்படைக்காதே
25. குழந்தையின் வயிறும் பன்றியின் வயிறும் நிறைந்தே இருக்கும்
26. பாலைப் பார்த்து பகுவைக் கொள்
27. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்
28. காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது
29. கோழி மிதித்து குஞ்சு சாகாது
30. வெள்ளாட்டின் வெண்ணெயும் பெண்டாட்டி சொத்தும் வீட்டுக்கு வேண்டாம்
31. ஆடே எரு ஆரியமே வெள்ளாண்மை
32. ஆடு கொடாத இடையன் ஆவைக் கொடுப்பானா
33. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்
34. ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாய்ப் பிறந்தால் எருமை
35. ஆமை புகுந்த வீடும் அமீனா நுழைந்த வீடும் உருப்படாது
36. ஆனை மதத்தால் வாழைத்தண்டு ஆண்பிள்ளை மதத்தால் கீரைத்தண்டு
37. ஆனையும் அறுகம்புல்லினால் தடைபடும்
38. ஆனையைக் கொடுத்துவிட்டு துறட்டிக்கு மன்றாடினாற்போல
39. ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே
40. ஆனை விழுந்தால் தந்தம் புலி விழுந்தால் தோல்
41. இந்தப் பூனையும் பால் குடிக்குமா?
42. இருதலைக் கொள்ளி எறும்பு போல
43. இரும்பு அடிக்கிற இடத்திலே ஈக்கு என்ன வேலை
44. உழைக்கிற கழுதை என்றைக்கும் உழைத்துதான் ஆகவேண்டும்

45. எருது கொழுத்தால் தொழுவத்தில் நிற்காது
பறையன் கொழுத்தால் பாயில் இரான்
46. எருமை மாட்டின் மேல் மழை பெய்ததுபோல
47. எலிக்குத் திண்டாட்டம்
பூனைக்குக் கொண்டாட்டம்
48. எல்லாம் சொல்லுமாம் பல்லி
கழனிப் பானையில் விழுமாம் துள்ளி
49. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்
இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்
50. கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்
51. காக்காய்க்கு தன்குஞ்சு பொன்குஞ்சு
52. ஈ நுழையாத இடமில்லை
53. ஈ எறும்பு நுழையாத இடமில்லை
54. எறும்பு ஊரக் கல்லும் தேயும்
55. எறும்பு போல சுறுசுறுப்பு
56. எறும்பு புற்றின் கீழ் நீரூற்று
57. அணில் வாயால் கெடும்
58. அணில் கொம்பிலே ஆமை கிணற்றிலே
59. ஆமை புகுந்த வீடு உருப்படாது
60. எருதுபுண் காக்கைக்குத் தெரியுமா?
61. எலிக்கு அறுவடை காலத்தில் ஐந்து பெண்டாட்டி
62. தணித்த ஓநாய் சிங்கத்திற்குச் சமம்
63. காகம் இல்லாத ஊர் இல்லை
துயரம் இல்லாத வீடு இல்லை
64. குளவி கூடு கட்டினால் பிறப்பு
நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
65. கொக்குக்கு உண்டோ வீரசைவம்
66. கொக்குக்கு ஒன்றே மதி
67. சிங்கத்திற்குக் காடு ஆதரவு
காட்டுக்குச் சிங்கம் ஆதரவு
68. நாய்க்கு நாற்பத்திரண்டு பல்
69. நாய்க்கும் பேய்க்கும் உறவில்லை
70. பூனை திருடு, யானை கவடு
71. வௌவால் வாயால் தின்று வாயால் கக்கும்
72. பூனைக்கு மணி கட்டுவது யார்?

73. குரங்கு மத்தியஸ்தம் செய்ததுபோல
74. ஆப்பு அசைத்த குரங்கு போல
75. வால் அறுந்த நரிபோல
76. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டது போல
77. மாட்டுக்கு மேய்ப்பும் குதிரைக்குத் தேய்ப்பும்
78. ஆலம்பாடி அழகெருது உழவுக்குதவாத எழவெருது
79. வால் நீளம் வயசு நீளம்
80. மாடு வாங்க அறியாதவன் மடக்கொம்பு மாடுவாங்கு
81. மாட்டை நடையில் பார்
ஆட்டை கெடையில் பார்
82. கறவை மாடு கண்ணுக்குச் சமானம்
83. ஆவும் தேவும் ஐந்து வருடத்தில் பலன்தரும்
84. வைக்கோல் தின்கிற மாட்டுக்கும் பால்மதுரம் அதிகம்
85. வடலி வெட்டி ஆள் எருமையைக் கட்டி ஆள்
86. மாடு மேயாத மட்டபுறக் காட்டையை
ஆடு மேய்ந்து அதிதிருப்தியாகும்
87. காடு கெட ஆட்டை விடு
88. கண்டதெல்லாம் தின்னும் ஆடு
நின்றுநின்று மேய்ந்து போகும் மாடு
89. யானை வயிறு நிறைந்தாலும் ஆடு வயிறு நிறையாது
90. காக்காய் உட்கார பனம்பழம் விழுந்தகதை
91. காட்டுக்குப் புலி ஆதரவு
புலிக்குக் காடு ஆதரவு
92. கிணற்றுத் தவளைக்கு வளப்பம் ஏன்?
93. கிலி பிடித்ததோ புலி பிடித்ததோ?
94. கிளி அழுதால் பூனை விடுமா?
95. கீரிக்கும் பாம்புக்கும் தீராப்பகை
96. கீரியும் பாம்பும் போல
97. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்
98. குட்டி போட்ட பூனைபோல அலைகிறான்
99. குண்டுச் சட்டியிலே குதிரை ஓட்டுகிறான்
100. குதிரை இருப்பு அறியும்
கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள்
101. குதிரை ஏறாமல் கெட்டது
கடன் கேளாமல் கெட்டது

102. குரங்கு எல்லாம் கூட்டம் கூட்டமாக இருக்கும்
103. குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி
104. குரங்குப்புண் ஆறாது
105. குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போடு
106. குலைக்கிற நாய் வேட்டைக்கு உதவாது
107. கூகைக்குப் பகலில் கண் தெரியாது
108. கூறை ஏறி கோழி பிடிக்காத குருக்களா
வானத்தைக் கீறி வைகுண்டம் காட்டுவான்
109. கைக்கோளனுக்குக் காற்புண்ணும்
நாய்க்குத் தலைப்புண்ணும் ஆகாது
110. கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பதுபோல
111. கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி
112. கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பது போல
113. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
114. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததுபோல
115. சன்னியாசி பூனை வளர்த்ததுபோல
116. சிங்கத்திற்குப் பங்கமில்லை
117. சூடுகண்ட பூனை அடுப்பங்கடிக்கு வராது
118. தவளை தன் வாயால் கெடும்
119. தாயைப் பார்த்து பெண்ணைக்கொள்
பாலைப் பார்த்து பசுவை கொள்
120. நரிக்கு இடம் கொடுத்தால்
கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்
121. நல்ல மாடானால் உள்ளூரில் விலை போகாதா?
122. நாயைக் கண்டால் கல்லைக் காணோம்
கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
123. நாய் வேஷம் போட்டால் குரைக்கத்தான் வேண்டும்
124. பசுவுக்குப் பிரசவ வேதனை
காளைக்குக் காம வேதனை
125. படித்தவனுக்கும் படிக்காதவனுக்குமுள்ள வித்தியாசம்
கொக்குக்கும் அன்னத்திற்குமுள்ள வித்தியாசம்
126. பன்றிக்குப் பல குட்டி
சிங்கத்திற்கு ஒரு குட்டி
127. பாம்பு அறியும் பாம்பின் கால்
128. பாம்பு என்றால் படையும் நடுங்கும்

129. பாம்புக்குப் பால் வார்த்தாற்போல
130. பாம்பும் கீரியும் போல வாழ்க்கை
131. பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி
132. பாலைப் பார்த்து பசுவைக்கொள்
தாயைப் பார்த்து மகளைக்கொள்
133. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது
134. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?
135. பூனைபோல ஒடுங்கிப் புலிபோல பாய்வான்
136. பூனையைக் கண்டு புலி அஞ்சுமா?
137. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
138. மதில் மேல் பூனை
139. யானை தன்தலைமீது மண்ணை வாரிப்போட்டுக்
கொள்ளும்
140. யானை மிதிக்கப் பிழைப்பார்களா?
141. யானைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்டதுபோல
142. ருசி கண்ட பூனை உறியைத் தாவும்
143. வௌவாலுக்கு இரவில் கண் தெரியும்
144. வௌவாலுக்கு மரமே கதி
அதன் குஞ்சுக்கும் அதுவே கதி
145. வௌவாலைப் போல தொங்குகிறான்
146. காடு வெட்டி நன்செய் பண்ணு
மாடு கட்டி வைக்கோல் போடு
147. அறுகங்காட்டை விட்டவனும் கெட்டான்
ஆனமாட்டை விற்றவனும் கெட்டான்
148. கருடன் இடமானால் கையில் பொருள் சேரும்
149. காடை இடமானால் நாட்டை ஆளலாம்
150. காகம் வலமானால் ஆயுசு விருத்தியாகும்
151. மடியிலே பூனையைக் கட்டிக்கொண்டு
சகுணம் பார்த்தாற்போல
152. ஈசல் பறந்தால் மழைவரும்
153. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழைவரும்
154. ஆறு நிறைய தண்ணீர் ஓடினாலும்
நாய் நக்கித்தான் குடிக்கணும்
155. ஆசை இருக்குத் தாசில் பண்ண
அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க

156. ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைத்துள்ளான்
157. இளங்கன்று பயமறியாது
158. இனம் இனத்தோட வெள்ளாடு தன்னோடே
159. மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவார்களா?
160. யானைக்கொரு காலம் வரும்
பூனைக்கொரு காலம் வரும்
161. நண்டு கொழுத்தால் வளையில் தங்காது
162. நாய் விற்ற காசு குரைக்காது
163. மீன் விற்ற காசு நாறாது
164. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
165. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
166. யானை வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே
167. நாய் வேஷம் போட்டால் குரைத்துதான் ஆகவேண்டும்
168. அடியாத மாடு படியாது
169. ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கணும்
பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கணும்
170. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை போகாது
171. ஈக்கு விஷம் தலையிலே
தேளுக்கு விஷம் கொடுக்கிலே
172. ஒரு பெண்ணுக்குப் பின் செல்வதைவிட
ஒரு சிங்கத்திற்குப் பின் செல்வதே மேல்
173. பிறர் புகழும் குதிரையை வாங்கு
பிறர் குறைபேசும் பெண்ணை மணந்துகொள்
174. ஒருவன் நீதிமன்றம் போகிறான் என்றால்
ஒரு பூனையை மீட்க மாட்டை இழக்கப்போகிறான்
என்று பொருளாகும்
175. எஜமானின் தயவு வேண்டுமானால்
அவன் நாய்க்கு உணவு வைக்கவேண்டும்
176. எலி அழுதால் பூனை விடுமா?
177. சிறுமீன் எல்லாம் பெருமீனுக்கு இறை
178. மானைக் காட்டி மானைப்பாய்
179. உபதேசியாரிடம் குதிரை வாங்காதே
விதவையிடம் பெண் கொள்ளாதே
180. ஆடே எரு ஆரியமே வெள்ளாண்மை

181. நீருள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளும்
182. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
183. பூனை வயிற்றில் எது பிறந்தாலும் அது எலி பிடிக்கும்
184. அங்குசம் இல்லாத ஆனையும்
கடிவாளம் இல்லாத குதிரையும் அடங்காது
185. அதிகாரிக்கு முன்னும் கழுதைக்குப் பின்னும்
போகக்கூடாது
186. அரணை கடித்தால் உடனே மரணம்
187. ஆசை இருக்கிறது ஆனைமேல் ஏற
அம்சம் இருக்கிறது கழுதை மேய்க்க
188. ஆடு கட்ட இடமில்லை
ஆனை வாங்கப் போறானாம்
189. ஆடு கொடாத இடையன்
ஆவைக் கொடுப்பானா?
190. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்
191. ஆடு மலைமேல் மேய்ந்தாலும்
கோணான் ஆடு கோணான் ஆடுதான்
192. ஆடுமாடு இல்லாதவன் அடைமழைக்கு இராஜா
பெண்டு பிள்ளை இல்லாதவன் தண்டுக்கு இராஜா
193. ஆடு மிதியாக் கொல்லையும்
ஆளன் இல்லாப் பெண்ணும் வீண்
194. ஆடு மேய்ந்தாற் போலவும்
அண்ணனுக்குப் பெண் பார்த்தாற் போலவும்
195. ஆணுக்கு மீசை அழகு
ஆனைக்குத் தந்தம் அழகு
196. ஆமை புகுந்த வீடும்
வெள்ளைக்காரன் புகுந்த ஊரும் உருப்படாது
197. ருசிகண்ட பூனை உறியை உறியைத் தாவுமாம்
வரிசை கண்ட மாப்பிள்ளை வந்து வந்து நிற்பானாம்
198. உழவு மாடானால் உள்ளூரில் விலை போகாதா?
199. உழுகிற எருமையும்
உள்ளூர் மருமகனும் ஒன்று
200. உள்ளூர் மருமகனும்
உழுகிற கடாவும் ஒன்று
201. உழுகிற மாட்டைக் கொம்பிலே அடித்தாற்போல

202. உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன்
உடையார் பாளையம் சென்று உடும்பு பிடிப்பானா?
203. ஊமை ஊரைக் கெடுக்கும்
பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்
204. ~~ஊருக்கு~~ அரசன் காவல்
வீட்டுக்கு நாய் காவல்
205. எச்சில் நாய்க்குக் கண்டதெல்லாம் ஆசை
206. எரு இல்லா பயிர் மாடு இல்லாக் கன்றுபோல
207. எரு இல்லா வயல் கன்று இல்லா மாட்டுக்குச் சமம்
208. எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா?
209. எருது நோயை நினைக்கும்
காக்கை பசியை நினைக்கும்
210. எருமை மாட்டின்மீது மழை பெய்ததுபோல
211. எருமை வாங்கும் முன்பே
நெய்விலை கூறுவதா?
212. எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்
213. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
214. எறும்பு ஊரக் கல்லும் தேயும்
215. ஒருநாய் வீட்டிலிருந்தால் பத்துபேர் காவல் காத்ததுபோல
216. ஒரு முருங்கையும் ஒரு எருமையும் உண்டானால்
வருகிற விருந்தைச் சமாளிப்பேன்
217. ஓடுற நாயைக் கண்டால்
துரத்தற நாய்க்குக் கொண்டாட்டம்
218. ஓடுற பாம்பைப் பிடிக்கிற வயசு
219. ஓணான் கடித்தால் ஒரு நாழிகையில் சாவு
அரணை கடித்தால் அரை நாழிகையில் சாவு
220. ஓணானுக்கு வேலி சாட்சி
வேலிக்கு ஓணான் சாட்சி
221. கச்சேரிக்கு முன்னே போகாதே
கழுதைக்குப் பின்னே போகாதே
222. கம்மாளன் இருந்த இடமும்
கழுதை இருந்த இடமும் சரி
223. கரும்பு கட்டுக்கு எறும்பு தானே வரும்
224. கழுதை கெட்டால் குட்டிச்சுவர்
நாய் கெட்டால் குப்பைத் தொட்டி

225. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனகதை
226. கழுதை புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து
227. கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சிபுரத்தில் பிறக்கவேணும்
228. கள் உண்ட குரங்கு போல
229. கன்றை இழந்த பசுவைப் போல
230. காட்டில் புலி கொல்லும்
நாட்டில் புளி கொல்லும்
231. காரியம் ஆகிறவரையில் கழுதை காலைப்பிடி
232. கிணற்றுத் தவளைக்கு கிணறுதான் சமுத்திரம்
233. கிளியை வளர்த்து குரங்கு கையில் கொடுத்தாற்போல
234. கிளிபோல பெண்டாட்டி இருந்தாலும்
குரங்கு போல கூத்தியாள் வேணும்
235. குட்டி போட்ட நாய் போல
236. குதிரை எட்டடி பாய்ந்தால்
குட்டி பதினாறடி பாயும்
237. குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல
238. குரங்குப் பிணமும் குறப்பிணமும் கண்டவர் இல்லை
239. குருடன் கூடி ஆனையைக் கண்ட கதை
240. குளவி கூடு கட்டினால் பிறப்பு
நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
241. கூகைக்குப் பகலில் கண் தெரியாது
242. கொண்டவன் குறிப்பு அறிவாள்
குதிரை இருப்பு அறியும்
243. கோத்திரத்திலே குரங்கானாலும் கொள்
244. சகுணம் பார்க்கையில் மடியில் பூனையைக்
கட்டிக்கொண்ட மாதிரி
245. சிறகில்லா பறவை போல
246. சீறிய பாம்புக்குச் சிறியாநங்கைவேர்
247. செக்குக்கு மாடு கொடுத்தாலும்
சீவலப்பேரியில் பெண் கொடுக்கக் கூடாது
248. செத்த ஆடு கால் பணம்
சுமை கூலி முக்கால் பணம்
249. தவளை கத்தினால் உடனே மழை வரும்
250. பாலைப் பார்த்து பசுவைக் கொள்
251. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்

252. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
253. நரி நாலு கால் திருடன்
இடையன் இரண்டுகால் திருடன்
254. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு
நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை
255. நட்சத்திரத்தை எண்ண முடியாது
நாய்வாலை நிமிர்த்த முடியாது
256. நாய் இருப்பது ஒரு ஆள் இருப்பது மாதிரி
257. நாய் உதறினால் நல்ல சகுணம்
258. நாய் ஊளையிட்டால் ஊர் நாசம்
259. நாய்க்கடிக்கு நாற்பது நாள் பத்தியம்
260. நாய்க்கடி விஷம் நாற்பத்தெட்டு நாள்
261. நாய்க்கு எலும்புத்துண்டை போட்ட மாதிரி
262. நாய்க்குத் தெரியும் நமன் வருகை
263. நாய்க்கு நாய் பகை
கோழிக்கு கோழி பகை
வைத்தியனுக்கு வைத்தியன் பகை
தாசிக்கு தாசி பகை
264. நாய்க்குப் புண்வந்தால் நக்கும்
கோழிக்குப் புண்வந்தால் கொத்தும்
265. நாய்க்கு வேலையும் இல்லை
நிற்க நேரமும் இல்லை
266. நாய்ப்புண்ணுக்குச் சாம்பல் மருந்து
267. நாய் மாதிரி காத்துக் கிடந்தேன்
268. நாய் வீட்டைக் காக்கும்
புலி காட்டைக் காக்கும்
269. நாய் வேட்டை ஆடும்
குதிரை ஓட்டம் ஓடும்
270. நாயை அடக்க நான்குபேர்
நாவை அடக்க நாலாயிரம் பேர்
271. நாயைக் கொன்ற பாவம் நாலு ஜென்மம்
எடுத்தாலும் போகாது
272 பசுத்தோல் போர்த்திய புலி
273. பசுவிலே சாதுவையும் பார்ப்பனிலே ஏழையையும்
நம்பக்கூடாது

274. பாம்பு என்றால் படையும் நடுங்கும்
275. பாம்புக்கு விஷம் பல்லிலே
பரத்தைக்கு விஷம் உடம்பிலே
276. யானைப் பாகனுக்கு யானையாலே சாவு
277. பாம்பை அடித்தால் பால் வார்த்துப் புதைக்க வேண்டும்
278. மயில் இரவில் கத்தினால்
தப்பாமல் மழை வரும்
279. வண்ணானுக்கு வண்ணாத்தி மேல் ஆசை
வண்ணாத்திக்கு கழுதைமேல் ஆசை
280. வீட்டுச் செல்வம் மாடு
தோட்டச் செல்வம் முருங்கை
281. வெள்ளாளன் கால் வைத்த இடமும்
வெள்ளாடு கால்வைத்த இடமும் உருப்படாது
282. வெறிநாய் கடித்தால் உடனே மரணம்
283. வேசிமேல் ஆசைப்படுவது
வெள்ளெலும்பை நாய் கவ்வின மாதிரி
284. வேந்தனும் பாம்பும் நெருப்பும் சரி
285. வௌவாலுக்கு இரவில் கண் தெரியும்
286. பசு கருப்பு என்றால் பாலுமா கருப்பு
287. கோழி கறுப்பானால் முட்டையும் கருப்பா?
288. ஆனை கொழுத்தால் வாழைத்தண்டு
ஆண்பிள்ளை கொழுத்தால் கீரைத்தண்டு
289. எலி பூனையை வெல்லுமா?
290. கன்றைத் தேடும் பசுவைப் போல
291. எந்தப் புற்றில் எந்தப் பாம்போ
292. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
293. ஆனைக்கும் அடி சறுக்கும்
294. ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்
295. ஆடு பகையும் குட்டி உறவுமா?
296. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
297. நாய் வேடம் போட்டால் குரைத்துத்தான் ஆகவேண்டும்
298. ஆயிரம் காகத்திற்கு ஒரு கல்
299. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
300. கொக்கு மேடேறினால் உடனே மழை
301. அரிசி அள்ளிய காகம் போல

302. ஆந்தை விழிப்பது போல
303. இஞ்சி தின்ற குரங்கு போல
304. இணைபிரியா அன்றில் போல
305. சூடுகண்ட பூனை போல
306. பச்சோந்தி போல
307. பாம்பின் வாய்த் தேரைபோல
308. பூனையிடம் அகப்பட்ட எலி போல
309. மதில் மீது பூனை போல
310. நாய்க்கு விரோதி நாயே
311. பூனைக்கு யார் மணிகட்டுவது?
312. வளத்த கடா மார்பில் பாய்கிறது
313. பாம்புக்குப் பால் வார்த்த கதை
314. காட்டுக்காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்
315. கருடன் இடமானால் எவர் கைப்பொருளும் தன்வசமாகும்
316. காகம் இடமானால் ஆயுள் விருத்தியாகும்
317. செம்போத்து வலமானால் சம்பத்து உண்டு
318. ஆடு கிடந்த இடத்தில் நெல்லை விதை
319. ஆமை சுடுவது மல்லாக்க
அதுதானும் சொன்னா பொல்லப்பு
320. யானை வயிறு நிறைந்தாலும் ஆடு வயிறு நிறையாது
321. ஆயிரம் ரூபாய் மாடாகயிருந்தாலும் அரைக்காசு
தார்க்குச்சி வேணும்
322. ஊருக்கு ஒரு வெள்ளாளனும்
காட்டுக்கு ஒரு வெள்ளாடும் போதும்
323. கடிக்க வந்த நாய்க்கு எலும்பு துண்டு போட்ட மாதிரி
324. கழுதை தப்பினால் குட்டிச்சுவர்
325. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறிச்சதாம்
326. திறந்த வீட்டில் நாய் நுழைந்தாற்போல
327. பூனை கருவாட்டை வெறுத்த மாதிரி
328. பூனை வளர்த்த சாமியார்
பெண்டாட்டி கட்டின கதை மாதிரி
329. மேயுற மாட்டை நக்குற மாடு கெடுத்தாப்பில
330. யானைக்கொரு காலம் வந்தால்
பூனைக்கொரு காலம் வரும்

331. ஆனை வால் பிடித்து கரை ஏறலாம்
ஆட்டின் வால் பிடித்துக் கரை ஏறலாமா?
332. வைக்கோல் போருக்கு நாய் காவல் வைத்ததுபோல
333. குட்டிபோட்ட பூனைபோல
334. தூங்குகிற புலியை இடறிவிட்டதுபோல
335. யானையைக் கட்டித் தீனி போட்டதுபோல
336. உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும்
337. உழுகிற மாடு பரதேசம் போனால்
அங்கொருவன் கட்டி உழுவான்
338. மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது
339. ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர் உண்டா?
340. இருதலைக் கொள்ளி எறும்புபோல
341. கழுதை விட்டையானாலும் கைநிறைய வேண்டும்
342. நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன?
343. நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமும் இல்லை
344. நாய்க்கு எச்சிலை பேய்க்கு வேப்பிலை
345. நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா?
346. பாம்புக்குத் தலையைக் காட்டி
மீனுக்கு வாலை காட்டுவது
347. பாம்பு தின்கிற ஊருக்குப் போனால்
நடுக்கண்டம் நமக்கு
348. பாம்பு பகையும் தோல் உறவுமா?
349. பாம்பு தன் பசியை நினைக்கும்போது
தேரை தன் விதியை நினைக்கும்
350. இறகு முற்றிய பறவையானால்
எல்லாம் தன்வயிற்றைத்தான் பார்க்கும்
351. குற்றாலத்துக் குரங்கே கொம்பை விட்டு இறங்கு
352. பாபனாச மீனாகயிருந்தாலும் பாவமெல்லாம் போகும்
353. வேலிக்கு ஓணான் சாட்சி
354. பாம்புக்கு இரண்டு நாக்கு
355. ஆனை கொடுத்தவன் அங்குசம் கொடானா?
356. பெட்டி பாம்பு போல அடங்கினான்/
357. பால் நக்காத பூனையும்
தானம் வாங்காத பிராமணனும் உண்டா?

358. கன்றுகுட்டி கிட்டவும் கடன்காரன் கிட்டவும்
இருக்கப்படாது
359. குரங்கு மத்தியஸ்தம் செய்ததுபோல
360. ஆப்பு அசைத்த குரங்குபோல
361. வால் அறுந்த நரிபோல
362. ஆடு நுனிப்புல் மேய்வதைப் போல
363. கெண்டையைப் போட்டு வராலை இழு
364. கோல் எடுத்தால் குரங்காடும்
365. மாடு மேய்க்காமல் கெட்டது
பயிர் பார்க்காமல் கெட்டது
366. நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல
367. குரங்குக்குத் தேங்காய் கிடைத்ததுபோல
368. நத்தை வயிற்றிலே முத்து பிறக்கிறது
369. அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை
குடியானவன் வீட்டு அம்மியை உடைத்தது
370. குரங்கு கையில் பூமாலை
371. கழுதை முடமானாலும் சத்தத்தில் தாழ்ச்சியில்லை
372. ஒணான் கரைக்கு இழுக்கிறது
தவளை தண்ணிக்கு இழுக்கிறது
373. புல் உண்ணாத பசுவும் வேண்டும்
பூரணமாகக் கறக்கவும் வேண்டும்
374. அஞ்சு பைசா குதிரையும் வேண்டும்
ஆறு கடக்கவும் வேண்டும்
375. அரண்மனை நெல்லுக்கு பெருச்சாளி
அடிச்சுட்டு கிடந்த மாதிரி
376. கூரையில் சோறு போட்டால் ஆயிரம் காக்கை வரும்
377. ஏழாயிரம் பொன்பெத்த குதிரை
ஏரவாரத்தட்டைக்கு அழுதிச்சாம்
குருட்டுப்பய குதிரை கோதுமைரொட்டி கேட்டுச்சாம்
378. தண்ணிக்குள்ள கிடக்கிற தவளை
குடிச்சதைக் கண்டது யாரு, குடியாததைக் கண்டது யாரு
379. நண்டு கொழுத்தால் வளையிலே தங்காது
380. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
381. குருவி உட்கார பனம்பழம் விழுந்தது

382. பெருமைக்குச் சொன்னால்
எருமைக்குப் புல்லாகுமா?
383. காசுக்கொரு துணி விற்றாலும்
நாய்க்குட்டி அம்மணந்தானே
384. கழுதை விட்டையிலே முன்விட்டை வேறா?
பின்விட்டை வேறா?
385. யானை வாங்கிட்டு தொரட்டிக்கா மன்றாடணும்
386. வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோல் கடிவாளம்
387. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால்
கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்
388. நமன் அறியாத உயிரும்
நாரை அறியாத குளமும் உண்டா?
389. நாயை ஏவ நாய் வாலை ஏவுகிறது
390. நன்றி செய்த கீரிப்பிள்ளையைக் கொன்ற கதைபோல
391. சேற்றிலே புதைந்த யானையைக் காகமும் குட்டும்
392. வாய் இல்லாவிட்டால் நாய்கூடச் சிந்தாது
393. தேளுக்கு அதிகாரம் கொடுத்தால்
நிமிடத்திற்கொரு கொட்டு கொட்டும்
394. ஆனை கட்டச் சங்கிலி தானே எடுத்துத்தரும்
395. கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்க
396. மொச கடிக்கிற நாயை மூஞ்சியைப் பார்த்தால் தெரியாது
397. மேய்த்துத் தெளியாத மாடு தேய்த்துத் தெளியும்
398. காடு கெட ஆட்டை விடு
399. கண்டதெல்லாம் தின்னும் ஆடு
நின்றுநின்று மேய்ந்து போகும் மாடு
400. நாய் இருக்கிற இடத்திலே சண்டை உண்டு
401. குரங்குப் புண்ணிற்கு வைத்தியம் இல்லை
402. ஆனையும் அறுகம் புல்லினால் தடைபடும்
403. இந்தப் பூனையும் பால் குடிக்குமா?
404. இருதலைக் கொள்ளி எறும்பு போல
405. உழைக்கிற கழுதை என்றைக்கும் உழைத்துதான்
ஆகவேண்டும்
406. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்
இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்
407. கீரிக்கும் பாம்புக்கும் தீராப்பகை

408. குட்டி போட்ட பூனைபோல அலைகிறான்
409. குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி
410. குலைக்கிற நாய் வேட்டைக்கு உதவாது
411. கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுபோல
412. கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பதுபோல
413. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
414. சிறுமீன் எல்லாம் பெருமீனுக்கு இரை
415. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
416. புலிக்குப் பயந்தவர்கள் என்மேல் படுங்கள்
417. பூனையைக் கண்டு புலி அஞ்சுமா?
418. பெருமாள் இருக்கிற வரையில் கருடன் உண்டு
419. போர் மிதிக்கிற மாடு வைக்கோலைத் தின்னாதா?
420. யானை மிதிக்கப் பிழைப்பார்களா?
421. யானைமீது போகிறவனைச் சுண்ணாம்பு கேட்டதுபோல
422. யானைவாய்க் கரும்பு போல
423. வௌவாலைப் போல தொங்குகிறான்
424. வீட்டுக்கு எலி
காட்டுக்குப் புலி
425. வௌவால் தின்னாத பழமில்லை
426. ஒரு பெண்ணுக்குப் பின் செல்வதைவிட
மனிதன் ஒரு சிங்கத்தின்பின் செல்வதுமேல்
427. குரைக்கிற நாய்க்குக் குத்து சோறும்
சிலைக்கிற பண்ணுக்குப் பொட்டுத்தேங்காய் எண்ணெயும்
428. அங்குசமில்லாத ஆனையும்
கடிவாளம் இல்லாத குதிரையும் அடங்காது
429. அட்டை மாதிரி உறிஞ்சுகிறான்
430. ஆடு கட்ட இடமில்லை
ஆனை வாங்கப் போறானாம்
431. ஆடு மிதியாக் கொல்லையும்
ஆளன் இல்லாப் பெண்ணும் வீண்
432. ஆணுக்கு மீசை அழகு
ஆனைக்குத் தந்தம் அழகு
433. ஆனை அசைந்து வரும்
பூனை பாய்ந்து வரும்

434. ஆனை அம்பலம் ஏறும்
435. ஆனை அரசு செய்த காட்டிலே
பூனை அரசு செய்ததுபோல
436. ஆனையால் பாகன் சாவு உண்டு
437. ஆனை இருந்தால் சேனைக்குப் பலம்
438. ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன்
ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன்
439. ஆனை ஏற அங்குசம் வேண்டாமா?
440. ஆனை ஏறினால் மாவுத்தன்
குதிரை ஏறினால் ராவுத்தன்
441. ஆனைக்கு அம்பாரி அழகு
அரசனுக்கு முடி அழகு
442. ஆனைக்குக் கரும்பு
கழுதைக்குத் தாள்
443. ஆனைக்குக் கோவணம் கட்ட முடியுமா?
444. ஆனைக்குப் பகை சுள்ளெறும்பு
445. ஆனைக்குப் புண்வந்தால் ஆறாது
446. ஆனைகட்டித் தீனிபோட முடியுமா?
447. ஆனை தரைக்கு இராஜா
முதலை தண்ணீருக்கு இராஜா
448. ஆனை தன்பலம் அறியாது
449. ஆனைப் பசிக்குச் சோளப்பொறியா?
450. ஆனைப் பாகன் மனைவி ஆறு மாசத்திற்கு விதவை
451. ஆனை பழக்க ஆனை வேண்டும்
452. ஆனை மதத்தால் கெட்டது
அரசன் பயத்தால் கெட்டான்
453. ஆனை முட்டத் தேர் நகரும்
454. ஆனையை அடக்கலாம்
ஆசையை அடக்க முடியாது
455. ஆனையை அடக்கலாம்
அடங்காப் பிடாரியை அடக்க முடியாது
456. ஆனையை நம்பி பிழைக்கலாம்
பூனையை நம்பி பிழைக்க முடியுமா?
457. இலவு காத்த கிளி போல

458. ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவுமாம்
வரிசை கண்ட மாப்பிள்ளை வந்துவந்து நிற்பானாம்
459. உழுகிற எருமையும் உள்ளூர் மருமகனும் ஒன்று
460. உள்ளூர் மருமகனும் உழுகிற கெடாவும் ஒன்று
461. ஊமை ஊரைக் கெடுக்கும்
பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்
462. ஓணானுக்கு வேலி சாட்சி
வேலிக்கு ஓணான் சாட்சி
463. கச்சேரிக்கு முன்னே போகாதே
கழுதைக்குப் பின்னே போகாதே
464. கழுதை கெட்டால் குட்டிச்சுவர்
நாய் கெட்டால் குப்பைத் தொட்டி
465. காரியம் ஆகிறவரையில் கழுதை காலைப்பிடி
466. குட்டிப்போட்ட நாய் போல
467. நாய்க்கடிக்கு நாற்பது நாள் பத்தியம்
468. நாய்க்குப் புண் வந்தால் நக்கும்
கோழிக்குப் புண் வந்தால் கொத்தும்
469. நாய் மாதிரி காத்துக் கிடந்தேன்
470. பாம்புக்கு விஷம் பல்லிலே
பரத்தைக்கு விஷம் உடம்பிலே

தாவரங்கள் பற்றிய பழமொழிகள்

1. அரசு பழுத்தால் இங்கே
ஆல் பழுத்தால் அங்கே
2. அவரை விதைக்கத் துவரை முளைக்குமா?
3. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் சொத்தை
4. அத்திப்பூவை யாரறிவார்
5. அரசமரத்தைப் பிடித்த பேய்
பிள்ளையாரையும் பிடித்ததாம்
6. அறுக்க ஊறும் பூம்பாளை
அணுக ஊறும் சிற்றின்பம்
7. ஆடு பயிர் காட்டும்
ஆவாரை நெல் காட்டும்
8. ஆடிப் பருவத்தைத் தேடிவிதை
9. ஆடி வாழை தேடி சூடு

10. ஆடிக்காற்றில் இலவம்பஞ்சு பறந்தது போல
11. ஆமணக்கும் பருத்தியும் அடி விதைத்தால் ஆகாது
12. ஆல விழுது தாங்கியது போல
13. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி
14. ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்பு போல
15. ஆவாரை இலையும் ஆபத்துக்குதவும்
16. ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலன் தரும்
17. இஞ்சி லாபம் மஞ்சளிலே
18. எட்டடி வாழை
பத்தடி பனை
பதினாறடி தென்னை
19. எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சஇலை உதிராது
20. எள்ளும் கரும்பும் இறுக்கினால்தான் பலன்தரும்
21. கருவேல மரத்துக்கு நிழல் இல்லை
கண்ணானுக்கு முறை இல்லை
22. ஓதி பெருத்தாலும் உத்திரத்திற்கு ஆகாது
23. களர் நிலத்தில் கரும்பு வை
24. தென்னை செழித்தால் பண்ணை செழிக்கும்
25. மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்
26. மா பழுத்தால் கிளிக்குக் கொண்டாட்டம்
வேம்பு பழுத்தால் காக்கைக்குக் கொண்டாட்டம்
27. முருங்கையை ஒடித்து வளர்க்கணும்
பெண்ணை அடித்து வளர்க்கணும்
28. வாழ்கிற வீட்டுக்கு வாழை வைத்துப்பார்
29. வாழை இரண்டு குலைகள் கண்டதில்லை
30. வாழை வடக்கினும் வான்கமுகு தெற்கினும்
31. வீட்டுப் பெண்சாதி வேம்பு
நாட்டுப் பெண்சாதி கரும்பு
32. வெட்டிக் கெட்டது வேம்பு
வெட்டாமல் கெட்டது பூவரசு
33. இளைத்தவன் எள்ளு விதை
கொழுத்தவன் கொள்ளு விதை
34. பொங்குங்காலம் புளி
மங்குங்காலம் மா

35. ஒரு மரத்திலுள்ள பழங்களை எண்ணிவிடலாம்
ஒரு மரத்தில் உருவாகும் மரங்களை எண்ண முடியாது
36. தழைத்த மரத்துக்கு நிழலுண்டு
பிள்ளை பெற்றவளுக்குப் பாலுண்டு
37. பனை மரத்து நிழலும் சரி
பரதேசி வரவும் சரி
38. மரத்தை இலை காக்கும்
மானத்தைப் பணம் காக்கும்
39. தென்னையும் ஆவும் ஐந்து வருடத்தில் பலன் தரும்
40. காய்ந்த மரத்திற்குக் கல்லடி படும்
41. காய்ந்த மரம் துளிர்க்குமா?
42. தீட்டின மரத்திலே கூர் பார்க்கிறது
43. காத்துச் சாயுற நாணல்தான்
காலத்துக்கும் நிலைக்கும்
44. ஆல மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம்
45. கொடிக்குக் காய் பாரமா?
46. சேற்றிலே முளைத்த செந்தாமரை போல
47. பலா உத்தமம்
மா மத்திமம்
பாதிரி அதமம்
48. பலாப் பழத்தை ஈ மொய்ப்பது போல
49. பழம் பழுத்தால் கொம்பிலே தங்காது
50. இராஜாவும் பெண்ணும் கொடியும்
கிட்ட இருக்கிறதைத் தழுவிக் கொள்ளும்
51. வளைந்த மூங்கில் அரசன் முடிமேல்
வளையாத மூங்கில் கழைக்கூத்தன் காலடியில்
52. வாய் கரும்பு கை இரும்பு
53. வேல மரத்திற்கு நிழலில்லை
வெள்ளாளனுக்கு உறவு இல்லை
54. கத்தரிக்காய்க்கு காம்பு ருசி
வெள்ளரிக் காய்க்கு விதை ருசி
55. தை ஈனாப் புல்லும் இல்லை
மாசி ஈனா மரமும் இல்லை
56. பங்காளியையும் பனங்காயையும்
பதம் பார்த்து வெட்டணும்

57. பகல் உணவுக்குப் பாகல்
58. பருவம் தப்பினால் பனங்கிழங்கும் பயிராகும்
59. பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார்
மரத்துக்கு நீரிட்டுப் பார்
60. மக்களைக் காக்கும் மணத்தக்காளி
61. மகன் இல்லாத வீடு பாழ்
மரம் இல்லாத தோட்டம் பாழ்
62. மாம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்
63. மரமிருந்தால் மழையிருக்கும்
64. மாசி மின்னல் மழை தழைக்கும்
65. வாழை இரண்டு குலை கண்டதில்லை
66. கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாமா?
67. உள்ளங்கை நெல்லிக்கனி போல
68. அண்ணன் பிள்ளையை வளர்க்க
தென்னம் பிள்ளையை வளர்க்கலாம்
69. ஆண் பிள்ளையை அடித்து வளர்
முருங்கையை ஒடித்து வளர்
70. ஆல மரத்தை விழுது தாங்குவது போல
71. எட்டடி வாழையும் பத்தடி பிள்ளையும்
72. சூரியனைக் கண்ட தாமரை போல
73. தென்னை மரத்தின் நிழலும்
தேவடியாள் உறவும் ஒன்று
74. நாவல் பழுத்தால் நாடு செழிக்கும்
75. பனை வைத்தவன் பார்த்துச் சாவான்
தென்னை வைத்தவன் தின்று சாவான்
76. வேல் மரத்துக்கு நிழல் இல்லை
வெள்ளாளனுக்கு உறவில்லை
77. வைகாசி மாதம் வாழை பெருகும்
78. காய்ந்த மரம் தளிர்க்குமா?
79. சேர இருந்தால் செடியும் பகை
தூர இருந்தால் தோட்டியும் உறவு
80. சந்தன மரம் போல மகனும்
சம்பங்கி போல பொண்ணும்
81. கொடிகள் அருகிலுள்ள மரத்தில் தாவும்
82. கோழையை அறுக்கும் குப்பைமேனி

83. வாழ்கிற வீட்டிற்கு வாழை வைத்துப்பார்
84. சிறு விதையாகிய ஆலமரம் பெருநிழலைக் கொடுக்கும்
85. முற்றத்து முல்லைக்கு மணமில்லை
86. மரம் நட்டவன் தண்ணீர் ஊற்றுவான்
87. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி
88. தூதுவளை ஆயுளை விருத்தி செய்யும்
89. விடாச்சுரத்துக்கு விஷ்ணுகரந்தை
90. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்
91. வில்வம் பித்தம் போக்கும்
92. ஏழைக்குக் கரிசாலை
93. கடலோர வேருக்குச் சாரமில்லை
கட்டாத உப்புக்கு வீரமில்லை
94. பனை மரத்திலே தேள்கொட்ட
தென்னை மரத்திலே நெறி கட்டிச்சாம்
95. காணிக்கு ஒரு கருவேலும்
வேலிக்கு ஒரு மூங்கிலும்
96. பலர் முகர்ந்த ரோஜாவில் மணமிருக்காது
97. ஒவ்வொரு ரோஜாவுக்கும்
ஒரு முள் நண்பனாயிருக்கும்
98. பனை மரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும்
கள்ளைக் குடித்தான் என்பார்கள்.
99. பெண் வளர்த்தி பீர்க்கங்கொடி
100 வில்வப்பழம் தின்பார் பித்தம் போக
பனம்பழம் தின்பார் பசிபோக
101. சிறியா நங்கை செல்வம் போல
102. வேம்புக்குப் பல் அழகு பெறும்
வேலுக்குப் பல் இறுகும்
103. ஆலமரம் பழுத்ததென்று பறவைக்குச்
சீட்டனுப்பியது யார்?
104. ஆல விழுது தாங்கினாற் போல
105. ஈச்சங்கள்ளு எதிலும் குளிர்ச்சி
106. உடை மரத்தை வளர்த்தால் ஊரெல்லாம் முள்
107. கள்ளிக்கு நாடெல்லாம் காடு
108. தென்னை மரத்திற்குத் தண்ணீர் வார்த்தால்
தலையாலே தரும்

109. புளிய பழமும் தோடும் போல
110. பூவரசி இருக்கப் பொன்னுக்கு அலைவானேன்
111. மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்
112. முருங்கையும் வேம்பும் உண்டானால்
வருகிற விருந்துக்கு மனம் களிக்கச் செய்வேன்
113. அடியற்ற பனைமரம் விழுந்தது போல
114. அழுதாரை வாழ வைக்கும் தழுதாழை
115. ஆடிப் பனங்காய் தேடிப் பொறுக்கு
116. ஆவாரை இலையும் ஆபத்துக்குதவும்
117. ஆனை உண்ட விளாங்கனி போல
118. ஈயாதார் வாழ்ந்தென்ன?
இண்டஞ்செடி தழைத்தென்ன?
119. உள்ளங்கை நெல்லிக்கனி போல
120. எட்டியுடன் சேர்ந்த இலவும் தீப்படும்
121. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?
122. ஐப்பசி மருதாணி அரக்காகப் பற்றும்
123. ஓதிய மரமும் சமயத்துக்குதவும்
124. ஒரு பிள்ளை பிள்ளையல்ல
ஒரு மரம் தோப்பல்ல
125. கத்தரிக்காய் என்று சொன்னால் பத்தியம் முறிந்து போகுமா?
126. கடுகு போன இடம் ஆராய்வார்
பூசணிக்காய் போன இடம் தெரியாது
127. களர் நிலத்தில் கரும்பு வை
128. களர் முறிக்க வேப்பந்தழை
129. களரை ஒழிக்கக் காணம் விதை
130. களர் கெடப் பிரண்டை இடு
131. கர்க்கையில் கரிது களாப்பழம்
132. காட்டுவாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்
133. காயும் கனியும் உண்டானால் கார்த்திகை மாதம் கல்யாணம்
134. சுண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்காற் பணம்
135. தழைத்த மரத்துக்கு நிழலுண்டு
உழைத்த தொழிலுக்குப் பலனுண்டு
136. தனி மரம் தோப்பாகுமா?
137. தோட்டத்துப் பச்சிலை மருந்துக்குதவாது

138. நிலத்துக்குத் தகுந்த கனியும்
குலத்துக்குத் தகுந்த குணமும்
139. பருத்தி புடவையாய்க் காய்ந்தது போல
140. பருத்திச் செடியும் பாலும் உள்ளானுக்குப் பஞ்சமில்லை
141. பலமரம் கண்ட தச்சன்
ஒருமரமும் வெட்ட மாட்டான்
142. பனி பெய்தால் மழையில்லை
பழமிருந்தால் பூ இல்லை
143. புங்க நிழலும் புது மண்ணும் போல
144. பூ மலர்ந்து கெட்டது
வாய் பிரிந்து கெட்டது
145. மக்களைக் காக்கும் மணத்தக்காளி
146. மகன் இல்லாத வீடு பாழ்
மரமில்லாத தோட்டம் பாழ்
147. வாழைக்குத் தான் பெற்ற தாயே கூற்றம்
148. விதை முந்தியா? மரம் முந்தியா?
149. விட்டதடா ஆசை விளாம்பழத்து ஓட்டோட
150. விதைத்ததெல்லாம் மரமாகுமா?
பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா?
151. ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல
ஒரு மரமும் தோப்பல்ல
152. மரத்தை இலை காக்கும்
மானத்தைப் பணம் காக்கும்
153. மரம் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் கொடுக்கும்
154. அடவி சென்றும் விறகுக்குப் பஞ்சமா?
155. நுனிக் கொம்பேறி அடிமரத்தை வெட்டுவார்களா?
156. மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்க மாட்டானா?
157. கடன் வாங்கிச் செலவு செய்தவனும்
மரமேறி கைவிட்டவனும் சரி
158. காடு அழிந்தால் நாடு அழியும்
159. காடுகளிருப்பின் நாடுகள் செழிக்கும்
160. மலைவளம் தானே நிலவளம் என்பர்

தொழில் பற்றிய பழமொழிகள்

1. தொழுதூண் சுவையில் உழுதூன் இனிது
2. செட்டுடன் வாழ்பவன் செட்டியாவான்
3. கூலிக்கு அறுத்தாலும் குறுணி அறுக்கலாம்
   வீணுக்கு அறுத்து வெளியே நிற்கிறேன்
4. அரைப் பணம் சேவகமானாலும்
   அரண்மனைச் சேவகம் போல் ஆகுமா?
5. பாம்பாட்டிக்குப் பாம்பிலே சாவு
6. யானைப் பாகனுக்கு யானையாலே சாவு
7. எமன் ஒருவரைக் கொல்லும்
   ஏற்றம் மூவரைக் கொல்லும்
8. கள்ளனுக்குக் களவிலே சாவு
9. இருட்டு வீட்டிற்குப் போனாலும்
   திருட்டுக் கை நிற்காது
10. உதட்டுக்கு மிஞ்சின பல்லும்
    திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது
11. கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை
12. கள்ளன் பிள்ளைக்கு கள்ள புத்தி
13. கள்ளன் பெண்சாதி கைம்பெண்
14. கள்ளன் பெரிதா? காப்பான் பெரிதா?
15. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
    விலைமகளும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்
16. தான் கள்ளன் பிறரை நம்பான்
17. தான் திருடி அயல்வீடு நம்பாள்
    கூத்திக் கள்ளன் பெண்சாதி நம்பான்
18. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
19. உளவில்லாமல் களவில்லை
20. திருடனுக்கு திருட்டுப்புத்தி
21. கள்ள மாப்பிள்ளைக்குக் கண்ணீர் முந்தும்
22. கையிலிருப்பது செபமாலை
    கட்கத்திலிருப்பது கன்னக்கோல்
23. திருடப் போனாலும் திசை வேணும்
    அவிசாரி ஆனாலும் அதிர்ஷ்டம் வேணும்
24. திருடன் தலையாரி வீட்டில் ஒதுங்கினாற் போல

25. திருடி என்று தெருவிலே போகக்கூடாது
அவிசாரி என்று ஆனைமீது ஏறலாம்
26. உள்ளிருந்து கள்வன் உளவறிந்து சொல்வான்
27. கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது
28. அதிகாரியும் தலையாரியும் கூடி விடியமட்டும் திருடலாம்
29. பத்தமடை பாய்க்குப் பழுதா சொல்வார்கள்
(பாய்த்தொழில்)
30. காஞ்சிக்குப் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்
(நெசவுத்தொழில்)
31. புதிய வண்ணான் பொந்து கட்டி வெளுப்பான்
(சலவைத்தொழில்)
32. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது
(உழவு)
33. பால சோதிடன் விருத்த வைத்தியன்
34. கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்
35. வாணியன் ஆசை கோணி கொள்ளாது
36. தட்டான் காற்பொன்னிலும் மாப்பொன் திருடுவான்
37. அவிசாரிக்கு ஆணை இல்லை
திருடிக்குத் தெய்வமில்லை
38. கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு
39. தோட்டக்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு
40. தூண்டில் காரனுக்கு மிதப்புமேல கண்
41. கடல் மீனுக்கு நுளையன் இட்டதே பெயர்
42. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வை
43. ஆற்றைக் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒருசொட்டு
44. மாரடித்த கூலி மடிமேலே
45. தும்பைப் பூ சலவை
46. வேண்டும் என்று நூற்றால் வெண்ணெய் போல் நூற்கலாம்
47. கொல்லன் தெருவிலே ஊசி விற்றாற்போல
48. குயவனுக்கு ஆறு மாதம்
தடியனுக்கு அரை நாழி
49. எங்கள் வீட்டுக்காரருக்கு கச்சேரியில் சேவகம்
50. ஊறிற்றாம் கள் உதித்தாளாம் சாணாத்தி
வற்றிற்றாம் கள் வறண்டாலும் சாணாத்தி

51. வேசியின் ஆசை காசிலும் பணத்திலும் தான்
52. செட்டி பணத்தைக் குறைத்தான்
சேணியன் நூலைக் குறைத்தான்
53. குலவித்தை கற்றுப்பாதி கல்லாமல் பாதி
54. நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக்காட்ட வேண்டுமா?
55. ஆண்டிமகன் ஆண்டியானால்
நேரமறிந்து சங்கூதுவான்
56. செட்டிக்கும் பயிருக்கும் சென்மப்பகை
57. உழுபவன் ஊர்க்கணக்குப் பண்ணுவானா?
58. கணக்கன் கணக்கறிவான்
தன் கணக்கைத் தானறியான்
59. தடி எடுத்தவன் தண்டல்காரன்
60. இருப்பவன் ஒழுங்காயிருந்தால்
சிரைப்பவன் ஒழுங்காய்ச் சிரைப்பான்
61. கோடி வித்தையும் கூழுக்குத்தான்
62. ஓடி ஒரு கோடி தேடுவதிலும்
இருந்து ஒரு காசு தேடுவதேமேல்
63. தோட்டிபோல் உழைத்து தொண்டைமான்போல் வாழணும்
64. நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும்
தோட்டிக்குப் புல்சுமை போகாது
65. மாடு மேய்க்காமல் கெட்டது
பயிர் பார்க்காமல் கெட்டது
66. உப்பு வணிகன் அறிவானா கற்பூர விலையை
67. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்
68. என்ன மாயம் இடைச்சி மாயம்
மோரோடு தண்ணீர் கலந்த மாயம்
69. [illegible] பாரா வேலை ஒரு முழங்கட்டை
70. [illegible] ஒருபாரமும் வெட்டமாட்டான்
71. [illegible] தொழில் எல்லாம் சீர்தூக்கி நோக்கில்
[illegible] தொழிலுக்கு நிகரில்லை
72. ஆண்டை கூலியைக் குறைத்தால்
சாம்பான் வேலையைக் குறைப்பான்
73. வேலைக்குத் தக்க கூலி
வேசிக்கு வேண்டியது காசு

74. கூலியைக் குறைக்காதே
வேலையைக் கெடுக்காதே
75. செய்கிறது சிரைக்கிற வேலை
நினைக்கிறது சிரஸ்தார் வேலை
76. தன் தொழிலைப் பாராதவனுக்குத் தலையளவு பஞ்சம்
77. வேலையில்லாத அம்பட்டன் பெண்டாட்டி மயிரைச் சிரைச்சர்னாம்
78. அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிரு
79. வாத்தியாரிடம் பொய் சொன்னாலும்
வைத்தியரிடம் பொய் சொல்லாதே

வேளாண்மைத் தொழில்

1. உழுதொழில் நிற்கில் மறுதொழில் நடவா
2. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே
3. ஊன் மிச்சம் உழவில் இல்லை.
4. எண்ணிப்பார் குடித்தனத்தை
எண்ணாமல் பார் வெள்ளாமையை
5. உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது
6. பாராதே கெட்டது பயிர்
ஏறாதே கெட்டது குதிரை
கேளாதே கெட்டது கடன்
7. கச்ச நிலமானாலும் கை சேர்க்கை
8. உத்தரத்தில் பிள்ளையும்
ஊர் ஓரத்தில் வயலும் சரி
9. ஊர் ஓரத்தில் கொள்ளை உழுதவனுக்குப் பயிரில்லை
10. வெள்ளமேயானாலும் பள்ளம் பார்த்துப் பயிர்செய்
11. கடைமடை பள்ளத்துக்கு முதல்மடை மேட்டுநிலம்
12. ஒருக்கால் நஞ்சை இருக்கால் புஞ்சை
13. மலையடி புஞ்சை மதகடி நஞ்சை
14. புஞ்சையில் புதிது நஞ்சையில் பழசு
15. ஆறை பற்றிய நஞ்சை
அருகு பற்றிய செவ்வல்
கோரைப் பற்றிய கரிசல்
16. ஆறை பற்றிய நஞ்சையும்
அருகு பற்றிய புஞ்சையும் நலம்

17. காணி தேடினும் கரிசல் தேடு
18. அளர் உழுதவன் ஆண்டான்
மணல் உழுதவன் மாண்டான்
19. களரை நம்பி கெட்டவனுமில்லை
மணலை நம்பி வாழ்ந்தவனுமில்லை
20. உவர் நிலத்திட்ட விரையும்
சமரிடத்தில் சென்ற சேனையும் இரண்டாவது பஷம்
21. மணல் உழுது வாழ்ந்தவனுமில்லை
மண் உழுது கெட்டவனுமில்லை
22. ஆயிரம் பயிர் செய்தாலும்
அலுத்துப் போகாது செம்மண் நிலம்
23. களர் கெட பிரண்டை புதை
24. களர் முறிக்க வேப்பந்தழை
25. உவட்டை மாற்றிட வேப்பம் புண்ணாக்கு
26. ஒருகல விரையடி உவட்டை மாற்றிட
அறுபல வேப்பம் புண்ணாக்கை விதையுடனிரு
27. உழவில்லாத நிலமும்
மிளகில்லாத கரியும் வழவழ
28. உழவால் பயிராகிறது எருவாலுமாகாது
29. வெண்ணெய் போல் உழவு குன்னுப்போல் விளையும்
30. ஓடி ஓடி நூறு குழி உழுவதைப் பார்க்கிலும்
அமர்ந்து அமர்ந்து ஆறுகுழி உழு
31. ஈர நிலத்தில் ஏரைப் பிடி
32. உழுவிற்கு ஏற்ற கொழு
33. கார் அடித்தால்தான் கலப்பை உழும்
34. கையைப் பார்த்து கலப்பையை வெட்டு
காலைப் பார்த்து மேழியை வெட்டு
35. நஞ்சைக்கு ஏழு உழவு
புஞ்சைக்கு நாலு உழவு
36. உழவு பகையானால் எருவால் தீராது
37. எரு குழையின்றி ஏர் பிடியாதே
38. குப்பையில்லாத வெள்ளாண்மை சப்பை
39. ஆட ஊடாடாக் காடு விளையாது
40. ஆட்டு உரம் ஓராண்டு நிற்கும்
மாட்டு உரம் ஆறாண்டு நிற்கும்

41. ஆடு அப்பூ அவாரை மூப்பூ
42. ஆடு பயிர்காட்டும்
43. ஆவாரை நெல் காட்டும்
44. கார் ஆடு பிசானம் குழை
45. கூளம் பரப்பி கோமயம் சேர்
46. மாட்டெரு புஞ்சைக்கு
தழையெரு நஞ்சைக்கு
47. நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்
48. வேப்பம் புண்ணாக்கு விலையுள்ள எருவாம்
49. புற்று மணல் போட்டால் பூமி பலன் தரும்
50. ஆற்று வண்டல் தேற்றும் பயிரை
51. சேரி எரு எல்லா எருவைவிட சேகரமுண்டாகும்
52. ஈரம் போகாமல் எருவை மூடு
53. காய்ந்த எரு காசுக்கு உதவாது
54. ஊற்றுப் பாய்ச்சல் ஆற்றுப் பாய்ச்சல்
பத்து குழியும் ஏரிப் பாய்ச்சல் நூறு குழியும் சரி
55. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்
56. புற்று கண்டு கிணற்றை வெட்டு
57. இறைத்த கிணறு ஊறும்
இறையாத கிணறு நாறும்
58. முடப் புல்லும் முக்குறுணித் தண்ணீரைச் செறுக்கும்
59. நிழலுக்கிடங் கொடுத்தாலும்
நீருக்கிடங் கொடாதே
60 நூசில் பண்ணினாலும் பண்ணலாம்
தண்ணி மாற முடியாது
61. தேங்கிக் கெட்டது நிலம்
தேங்காமல் கெட்டது குளம்
62. பாய்ச்சலும் வேண்டும்
காய்ச்சலும் வேண்டும்
63. கல் உள்ளதே கிணறு
களர் உள்ளதே தோட்டம்
64. களை பிடுங்காப் பயிர் கால் பயிர்
65. வெட்டி களையெடுத்தால் கட்டு முக்கலங் காணும்
66. கவடிருந்த நெஞ்சும் களையிருந்த பயிரும் கடைத்தேறா
67. கோரை குடியைக் கெடுக்கும்

68. அருகு முளைத்த கொல்லையும்
அரசரோடெதிர்த்த குடியும் ஈடேறாது
69. கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுணி
70. கிளைக்கிறபோதே களையைக் கிள்ளு
71. ஈயந்தனையும் எருவை காயந்தனையும் களையெடு
72. கதிர் களைத்தும் களையைப் பிடுங்கு
73. கோரையைக் கொல்ல கொள்ளு விதை
74. வித்தைப் பொறுத்து விளைவின் திறமை
75. விதை பாதி வேலை பாதி
76. ஆய் விதை என்றும் காய்வது நன்று
77. காய்ந்த வித்துக்குப் பழுதில்லை
78. அந்து அரித்த வித்து முளையாது
79. ஓடுகள் விதையைக் கேடறக் காக்கும்
80. சொத்தைப் போல் வித்தைப் பேணு
81. விருட்சியிலே விதையேல்
82. ஈரம்தானே பீரம் பயிருக்கு
83. விதைகள் ஆழம் புதைவது பழுதாம்
84. தெளித்த விதையை மறைத்து மூடு
85. விரை அகல இடு
86. அடர விதைத்தால் போர் உயரும்
கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்
87. காலப்பயிர் கடக்க நிற்கும்
88. பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு
89. காலத்து விரை கரம்பில் போடு
90. ஆடிப்பட்டம் தேடி விதை
91. காருக்குப்பின் பட்டமில்லை
கார்த்திகைக்குப் பின் மழையுமில்லை
92. அடை காத்தவன் காட்டைப் பார்
மேய்த்தவன் மாட்டைப் பார்
93. வேலை வைத்து காப்பாற்றாத கன்னும்
ஆலை வைத்து ஆட்டாத வாணியனும் சரியல்ல
94. அடைப்பில்லா காடும்
விடுப்பில்லா ஏரும்
95. வெக்கைக்கு வேலி மறைப்பு
96. விதைப்பதுமுன் வேலி அடை

97. கள்ளி வேலியே வேலி
கரிசல் நிலமே நிலம்
98. செம்பாடு அடிச்சா எம்பாடு தீர்ந்தது
99. நெல்லைக் கெடுக்கும் நாவாய்ப்பூச்சி
100. கருப்பைக் கெடுக்கும் கரையான் பூச்சி
101. கரையான்பட்ட பயிர் ஒரு முழக்கட்டை
102. கம்பளிப்புழு பயிர்த்தெம்பினை வாங்கும்
103. அசுவினிப் பூச்சி அவரைக்கு ஆகாது
104. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்து
105. புழுவைத் தின்று புள்ளினம் உதவும்
106. கருக்கண்ணிப்பட்டால் கரையான் கண்ணாலும் திரும்பிப்பாராது
107. வரப்புயர நெல் உயரும்
108. ஒரு ஒடு தண்ணீர் ஒரு கலம் நெல்லு
109. மோட்டை போனால் கோட்டை போகும்
110. உழுதசேர் காய்ந்தால் உழக்கு நெல்லும் காணாது
111. நட்டன்று மழையும் கெட்டன்று விருந்தும்
112. நெல்லடுவை கொள்ளடுவை யாகாது
113. பெருகிய நீர் நெல்லுக்குப் பகையாம்
114. கல்லில் ஈனவேண்டும் கசத்தில் விளைய வேண்டும்
115. பாய்ச்சி அறுத்தால் பதக்குநெல் கூடக்காணும்
116. நடவுக்குத் தூவல் நாலுக்கொரு பங்கு
117 வேலி ஒன்றுக்குப் பன்னிரெண்டு கலம் விதைப்பாடு
118 ஆடி விதைப்பு ஆவணி முளைப்பு
119. ஆடிப்புழுதி ஆவணிச்சேறு
120. ஆவணி மாதம் நெல் விதைத்தால் ஆனைக்கொம்பு விழும்
121. ஐப்பசி மாதம் நெல் விதைத்தால் அவளுக்கும் நெல் ஆகாது
122. புரட்டாசி பதினைந்தில் நடவு
123. நண்டு நுழையாத நடவு
124. கார்ப்பயிர் கலந்து கெட்டது
பிசானப்பயிர் நெருங்கி கெட்டது
125. அள்ளிய சம்பா கிள்ளிய நவரை பொற்சாலி
126. ஆனிக்கார் சாவியும் குரங்குப் பிணமும் கண்டதில்லை
127. மின்னிக் கெட்டது கார்
முழங்கிக் கெட்டது பிசானம்

128. காருக்குக் களையெடுத்தால் போல
129. வெண்கார் அழிந்தால் விரைமுதலும் காணாது
130. எட்டுக்கார் தீய்ந்தாலும் ஒரு பிசானும் தீயாது
131. காய்ந்து கெட்டது அன்றறுத்த பிசானம்
காயாமல் கெட்டது கார்
132. ஆண்டு மாறின கார் அன்றறுத்த சம்பாவிற்கு ஈடாகாது
133. எல்லா தானியத்தைவிட கருட பட்சி, குண்டு சம்பா
சன்ன சம்பா சிரேஷ்டம்
134. கொஞ்சித் தழைபோட்டுச் சேடை விழுந்தால்
கெட்டிச் சம்பா சன்ன விளையும்
135. வெம்பா பேய்ந்தால் சம்பா விளையும்
136. நுவரைக்குச் சேறு கூடாது
137. நவரைக்கு நிலமும் மோருக்குச் சாதமும்
138. போசனத்திற்கு மோசனம்
139. மழை வறண்டால் மணக்கத்தை விதை
140. நட்டாலும் தில்லைநாயகம் நடவேண்டும்
141. சேத்தில் முப்பது
நாத்தில் முப்பது
சாத்தில் முப்பது
அது நாற்றுக்கு முப்பது
142. கதிருக்கு முந்நூல் நெல் இருந்தால் முழு வெள்ளாண்மை
143. கட்டுக் கலம் காணும்
கதிர் உழக்கு நெல் காணும்
144. உழவின் மிகுந்த ஊதியமில்லை
145. ஏர் நடந்தால் பேர் நடக்கும்
146. அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிரு
147. உழுகிறவன் கணக்குப் பார்த்தால் தார்குச்சி மிஞ்சாது
148. எண்ணிச் செய்வது செட்டு
எண்ணாமல் செய்வது வேளாண்மை
149. காடுவெட்டி நன்செய் பண்ணு
மாடுகட்டி வைக்கோல் போடு
150. சிறுபிள்ளை இட்ட வேளாண்மை வீடு வந்து சேராது
151. செட்டிக்கும் பயிருக்கும் சென்மப்பகை
152. சோம்பேறிக்குச் சோளம் வெள்ளாண்மை

153. தொழுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையில்
ஓதுவாரெல்லாம் உழுவான் தலைக்கடையில்
154. நெல் இருக்கப் பொன்
என் இருக்க மண்
155. மேனா மினுக்கியைக் கொண்டவன் கெட்டான்
மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்
156. வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை
157. எண்ணிப்பார் குடித்தனத்தை
எண்ணாதேபார் வெள்ளாமையை
158. உழுவற உழுதவன் ஊரில் பெரியவன்
159. ஆடே பாட்டாமை ஆரியமே வெள்ளாமை
160. ஆவும் தேவும் ஐந்து வருஷத்தில் பலன்தரும்
161. ஊன் மிச்சம் உழவில் இல்லை
162. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது
163. அகல உழுவதைவிட ஆழ உழு
164. ஆழ உழுதாலும் அடுக்க உழு
165. முன் ஏர் போன வழி பின் ஏர்
166. எருவிலும் வலியது உழவே
167. வெண்ணெய் போல் உழவு
குன்றுபோல் விளைவு
168. அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி
169. நன்செய்க்கு ஏழு உழவு
புன்செய்க்கு நான்கு உழவு
170. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்
171. எள்ளுக்கு ஏழு உழவு
172. அதிர அடித்தால் உதிர விளையும்
173. காலப் புழுதி இல்லாதவன் கைமுதல் இழப்பான்
174. ஏழு உழவு உழுதால் எருப்போட வேண்டாம்
175. கொம்பால் உழுது கொண்டியால் மரமடி
176. மண்ணைப் புரட்டும் பண்ணைக் கலப்பை
177. நாட்டுக் கலப்பையால் நான்குமுறை உழு
178. அடர விதைத்து ஆழ உழு
179. ஆடிப்பட்டம் தேடி விதை
180. ஆடி விதைப்பு ஆவணி முளைப்பு

181. ஆடிக்கொரு விதை போட்டால்
கார்த்திகைக்குக் காய் காய்க்கும்
182. ஆடி வாழை, தேடி நாடு
183. ஆடிப்பிள்ளை தேடிப்புதை (வாழை, தென்னை)
184. ஈர விதையும் ஈருர் வேளாண்மையும்
தார மிரண்டும் தனக்குப் பகை
185. விரை ஒன்றுபோட சுரை ஒன்று முளைக்குமா?
186. எள்ளு விதைக்க எறக்காடு
கொள்ளு விதைக்க கல்லங்காடு
187. காய்ந்த வித்துக்குப் பழுதில்லை
188. சொத்தைப் போல வித்தைப் பேணு
189. கலப் பயிர் விதைத்து
உழக்குப் பயிர் விளைந்தாலும்
புதுப்பயிர் புதுப்பயிர்தான்
190. வரப்பு உயர்ந்தால் நெல் உயரும்
191. ஆள் ஏற நீர் ஏறும்
192. அடை மழையில் நாற்று நட்டால் அடியோடு போகும்
193. அறுநான்கில் பெற்ற பிள்ளையும்
புரட்டாசி பதினைந்துக்குள் நட்ட நடவும்
பெரியோர்கள் வைத்த தனம்
194. முடிமுடியாய் நட்டால் பிடிபிடியாய் விளையுமா?
195. அத்தத்தில் நாற்று நடு
196. நட்டாலும் தில்லை நாயகம் நடவேணும்
197. காலத்தே பயிர் செய்தால்
கடன் வாங்க வேண்டாம்
198. காரையும் எள்ளையும் கருதிப் பயிரிடு
199. எள்ளும் கரும்பும் எடுக்கும் பயிராம்
200. இனம் இனத்தைக் காக்கும்
வேலி பயிரைக் காக்கும்
201. உடையவன் பாராப்பயிர் உருப்படுமா?
202. காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்
203. காயும் கனியும் உண்டானால்
கார்த்திகை மாதம் கல்யாணம்
204. அவரை எம்மாதம் போட்டாலும் தைமாதம் முளைக்கும்
205. பெண் வளர்த்தி பீர்க்கங்கொடி

206. சுரைப் பூவுக்கும் பறைப் பாட்டுக்கும் மணமில்லை
207. காட்டுப் பேய்ச்சுரை கறிக்கு ஆகுமோ?
208. முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்க முடியுமா?
209. அகத்தி ஆயிரங் காய்ந்தாலும் புறத்தி புறத்திலே
210. பொன்னை எறிந்தாலும் பொடிக்கீரையை எறியலாமா?
211. ஆனை கொழுத்தால் வாழைத்தண்டு
ஆண்பிள்ளை கொழுத்தால் கீரைத்தண்டு
212. வாழ்கிற வீட்டுக்கு வாழை வைத்துப்பார்
213. இஞ்சி லாபம் மஞ்சளிலே
214. வரவுக்குத் தகுந்த செலவு
மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சள்
215. களை பிடுங்காப் பயிர் கால் பயிர்
216. கார்த்திகைக்கு மேற்பட்டுக் கைப்பயிர் எறியவேண்டும்
217. களர் முறிக்க வேப்பந்தழை
218. உடையவன் பாராப்பயிர் ஒரு முழங்கட்டை
219. எள்ளும் திணையும் எழுபது நாள்
220. விளையும் பயிர் முளையிலே
221. அம்பா பாக்கியம் சம்பா விளைந்தது
பாவி பாக்கியம் பதராய் விளைந்தது
222. காடு விளைந்தாலும் ஒருமேடு விளைந்தாலும்
கடன் கழிந்து போம்
223. மஞ்சள் வைப்பது மதவை நிலத்தில்
224. கதிருக்கு முந்நூறு இருந்தால் முழு விளைச்சல்
225. கொம்பில் ஒரு நெல் விளைந்தாலும் சம்பாவுக்கு ஈடாகாது
226. பனிக்குப் பலிக்கும் வரகு, உளுந்து
மழைக்குப் பலிக்கும் நெல்லு
227. உழுகிற காலத்தில் ஊர் சுற்றிவிட்டு
அறுக்கிற காலத்தில் அரிவாள் கொண்டு வந்ததுபோல
228. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கரும்புள்ளபோதே ஆட்டிக்கொள்
229. அம்மா குதிர்போல
அய்யா கதிர்போல (குலுக்கை, தொம்பை, குதிர்)
230. காணி தேடினும் கரிசல் தேடு
231. ஆற்றை அடுத்த வயலும்
அரசனை அடுத்த குடியும் முன்னுக்கு வராது

232. ஊர் ஓரத்தில் கொல்லை
உழுதவனுக்குப் பயிர் இல்லை
233. மதகடி நன்செயும் மலையடிப் புன்செயும்
234. வெள்ளமேயானாலும் பள்ளமே பயிரிடவேண்டும்
235. வேலி ஒன்றுக்கு ஈரணை மாடும் இரண்டு ஆளும்
236. வேலி ஒன்றுக்குப் பன்னிரண்டு கலம் விதைப்பாடு
237. பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு
238. அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி
239. ஆவணியில் நெல் விளைத்தால்
ஆனைக்கொம்பு விழும்
240. மூலக் காற்று புழு விழும்
241. கீரைக்குப் புழு வேரில்
242. ஆடி வாழை தேடிப்போடு
243. ஆடி அவரைத் தேடிப் போடு
244. ஆறு கொத்து நூறு தண்ணி வாழை
245. எட்டடி வாழை கமுகு
ஈரடி கரும்பு கத்திடு
இருபதடி பிள்ளை
246. கார்த்திகைக் கார் கடைவிலை
தைச்சம்பா தலைவிலை
247. சித்திரை மாதம் சிறந்து மழை பெய்யாது போனால்
வில்லாத்தை விற்று வெள்ளாடு கொள்
248. மேழிக்குடையவன் வெள்ளாளனே
249. ஆண்டைக் கூலியைக் குறைத்தால்
சாம்பான் வேலையைக் குறைப்பான்
250. கடன் வாங்கிப் பயிரிட்டவனும்
மரமேறிக் கைவிட்டவனும் ஒன்று
251. ஏர் பிடித்தவன் என்ன செய்வான்
பானை பிடித்தவள் பாக்கியசாலி
252. ஆழ உழுது அரும்பாடு பட்டாலும்
பூமி விளைவது புண்ணியவான்களுக்கே
253. சனிப்பயிர் சாத்திரத்திற்கு உதவும்
254. காலத்தில் பெய்த மழை போல
255. ஆடு தழை திண்பது போல
256. எலுமிச்சம் செடிக்கு எருப்போட்டாற்போல

257. ஆட்டுக்கிடையில் ஓனாய் புகுந்ததுபோல
258. நடு உழவிலே நத்தை தெறித்தாற்போல
259. ஆடு கிடந்த இடத்தில் நெல்லை விதை
260. ஊரடி நஞ்சைக்கு கடை எருவும் வேண்டாம்
261. கள்ளி வேலியே வேலி
கரிசல் நிலமே நிலம்
262. கொள்ளுக்கு ஐப்பசி, எள்ளுக்கு மாசி
263. புஞ்சை விளைந்தால் பஞ்சம் தீரும்
264. புரட்டாசி விதைப்பாகாது
ஐப்பசி நடவாகாது
265. கொடுத்தால் கட்டபொம்மு கொடுக்கணும்
விளைந்தால் கரிசல்காடு விளையணும்
266. எரு உதவுவதுபோல இனத்தார் உதவார்
267. வீட்டுச் செல்வம் மாடு
தோட்டச் செல்வம் முருங்கை
268. நட்டவனுக்குத் தெரியும் நாற்றின் அருமை
269. மேழிச் செல்வம் கோழைபடாது
270. மாடு மேய்க்காமல் கெட்டது
பயிர் பார்க்காமல் கெட்டது
271. காடு அறியாதவன் கல்லாங்காட்டை உழவேண்டும்
272. எல்லாரும் ஏர் வச்சான் என்று
ஈழுவன் ஏர் வச்சான்
273. வெங்கன் பயலுக்கு இரண்டு மாடு
அதைப் பிடித்துக்கட்ட இரண்டு ஆளு
274. ஆடு மறிச்சவன் புஞ்சை விளையுமா?
அங்கலாச்சவன் புஞ்சை விளையுமா?
275. கெட்டிக்காரன் புஞ்சையிலே எட்டுப்பாதை
276. ஆற்று மண்ணுக்கு வேற்று மண்
277. நன்செய் லாபம் புஞ்சையிலே
278. காணிக்கு ஒரு கருவேலும்
வேலிக்கு ஒரு மூங்கிலும்
279. நெல் விளைகிற நிலமும் தெரியாது
நிலா காய்கிற இடமும் தெரியாது
280. கரிசலை நம்பி கெட்டவன் இல்லை
281. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்

282. கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்
283. இறைக்க ஊறும் மணற்கேணி
ஈயப்பெருகும் பெருஞ்செல்வம்
284. ஏரி பெருகில் எங்கும் பெருக்கு
285. ஏரியின் நீரைக்கட்டுதல் அரிது, உடைத்தல் எளிது
286. காட்டாற்று வெள்ளத்துக்கு அணைபோட முடியுமா?
287. கடல்நீர் நிறைந்து என்ன? காஞ்சிரை பழுத்து என்ன?
288. அணை கடந்த வெள்ளத்தை மறிப்பவர் யார்?
289. அரண் கடந்துபோன வெள்ளம்
அழுதால் திரும்பி வருமா?
290. ஓடுகிற வெள்ளம் அணையிலே நிற்குமா?
291. ஆற்றுப் பெருக்கும் அரகம் அரை நாழி
292. வெள்ளம் வருவதற்கு முன்பே அணை போடவேண்டும்
293. தண்ணீரில் விளைந்த உப்பு தண்ணீரில் கரைய வேண்டும்
294. தூர்ந்த கிணற்றைத் தூர் வாராதே
295. தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே
296. ஆறு போவதே கிழக்கு
அரசன் சொல்வதே வழக்கு
297. ஆணி அரை ஆறு
ஆவணி முழு ஆறு
298. கல் உள்ளதே கிணறு
கரையுள்ளதே தோட்டம்
299. புடைக்கட்டுப் பயிருக்கு மடைக்கட்டுத் தண்ணீர்
300. முடப்புல்லும் முக்குறுணித் தண்ணீரைச் செறுக்கும்

தொழில் செய்வோர் பற்றிய பழமொழிகள்

1. கணக்கன் கணக்கு அறிவான்
தன் கணக்கைத் தானறியான்
2. கணக்கன் கண் வைத்தால்
கால் காணி பொட்டை
3. கணக்கனைப் பகைத்தாயோ?
காணி இழந்தாயோ?
4. கணக்கனைக் கண்ட இடத்தில் குத்து
5. கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்

6. சும்மா இருக்கிற மணியாரனைத் தூண்டிவிடுவானேன்
போனவருஷ வாய்தாவைப் போட்டுக் கொள்வானேன்
7. கம்மாளன் இருந்த இடமும்
கழுதை இருந்த இடமும் சரி
8. கம்மாளன் பணம் கரியும் பொரியுமாய் போய்விட்டது
9. கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால்
தேவடியாள் வீட்டில் சர்க்கரை வழங்குவர்
10. கம்மாளன் வீட்டுப் பசுவைக் காது அறுத்துப்பார்த்தால்
அங்கும் செவ்வரக்குப் பாய்ந்திருக்கும்
11. கஞ்சனுக்கு காசு பெரியது
கம்மாளனுக்கு மானம் பெரியது
12. கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு
13. ஆண்டிக்கு எதுக்கு அரிசி விலை?
14. ஆண்டிகள் கூடி மடம் கட்டினாற்போல
15. ஆண்டி மகன் ஆண்டி
16. செட்டிக்கு உறக்கமுண்டு
வட்டிக்கு உறக்கமில்லை
17. செட்டிக்கும் வேளாண்மைக்கும் சென்மப்பகை
18. செட்டி கூடிக் கெட்டான்
சேணியன் பிரிந்து கெட்டான்
19. செட்டி சுற்றாமல் கெட்டான்
தட்டான் தட்டாமல் கெட்டான்
20. செட்டிப்பிள்ளை கெட்டி
21. செட்டியார் மிடுக்கா? சரக்கு மிடுக்கா?
22. செட்டி வீட்டு நாயும் கணக்குப் பார்த்து கடிக்கும்
23. செட்டிக்கு ஒரு தட்டு
தேவடியாளுக்கு ஒரு மெட்டு
24. வைத்தியன் சொல்வதெல்லாம் மருந்து
25. வைத்தியன் தகப்பனைப் போல
26. வைத்தியன் பாராத நோய் தீருமா?
27. வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு
28. வைத்தியனுக்கு ஊரில் அனைவரும் சிநேகிதம்
29. வைத்தியனுக்கும் அஞ்சவேண்டும்
வம்பனுக்கும் அஞ்சவேண்டும்
30. வைத்தியனுக்கு தன்மருந்து பலிக்காது

31. வைத்தியன் பெரிதோ? மருந்து பெரிதோ?
32. சாகிற வரையில் வைத்தியன் விடான்
செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
33. வைத்தியருக்கு நோயைக் காட்டிலும் அஞ்ச வேண்டும்

மீனவர் பழமொழிகள்

1. கடல் மீனுக்கு நுளையன் (மீனவன்) இட்டதே பெயர்
2. தூண்டில்காரனுக்கு மிதப்புமேலே கண்
3. கடல் மீனுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா?
4. நீர் உள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளும்
5. மீனை மீன் விழுங்கினாற்போல—
6. பொடி மீனெல்லாம் பெருமீனுக்கு இரை
7. கெண்டையைப் போட்டு வராலை இழுக்கிறது
8. கெண்டை பட்டாலும் பட்டது
கெடாரம் பட்டாலும் பட்டது
9. கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று
உடல் வற்றிச் செத்ததாம் கொக்கு
10. கனத்தைக் கனங்காக்கும்
கருவாட்டுப் பானையைப் பூனை காக்கும்
11. சூலாடும் மீன்கள் ஒன்றையொன்று மோந்து கொள்ளும்
12. தூண்டிலைப் போட்டு வராலை இழுக்கிறது
13. சிறுமீன் எல்லாம் பெருமீனுக்கு இரை
14. கடல் தாண்ட ஆசையுண்டு
கால்வாய் தாண்ட காலில்லை
15. கழுவிய மீனிலும் நழுவிய மீன்
16. மன்னன் மதப்பனைப் போலிருக்கிறான்
17. சுக்காணி இல்லாத கலம்
18. தண்ணீரில் விளைந்த உப்பு
தண்ணீரில்தான் கரையவேண்டும்
19. கருவாடு விற்ற பணம் நாறுமா?
20. உன் சொல்லிலே உப்பில்லை, புளியில்லை, பசையுமில்லை
21. கரை காணாத தோனி போய் தவிக்கிறது
22. காற்றிலே அகப்பட்ட கப்பலைப் போல் மனம் அலையுது
23. காசுக்கு ஒரு குட்டி வித்தாலும்
துலுக்கக்குட்டி வாங்காதே

24. ஆமை புகுந்த வீடு உருப்படாது
25. ஆமையைக் கடித்த ஈக்கு வாய்தான் நோவும்
26. நத்தை வயிற்றிலே முத்துப் பிறக்கிறது
27. முத்திலும் சொத்தையுண்டு
பவழத்திலும் பழுதுண்டு
28. முத்தும் பவளமும் முறையாகக் கோர்த்தது போல
29. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
30. உடல் உள்ளவரை கடல் கொள்ளாக் கவலை
31. ஏலேலசிங்கன் பொருள் ஏழுகடல் போனாலும் திரும்பும்
32. கடலில் பெருங்காயம் கரைத்ததுபோல
33. ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
34. பசி தீர்ப்பது வீட்டில்
ருசி தீர்ப்பது கடற்கரையில்
35. சகல தீர்த்தங்களுக்கும் சமுத்திரமே காரணம்
36. சமுத்திர அலை ஓயப் போவதில்லை
தம்பி தலைமுழுகி தர்ப்பணம் பண்ணப் போவதில்லை
37. பனிப் பெருக்கிலே கப்பல் ஓடுமா?
38. இரண்டு தோனியில் கால்வைத்தவன் பாடு திண்டாட்டம்
39. கருவாடு மோட்சத்திற்குப் போனாலும்
பிச்சைக்காரன் போக மாட்டான்
40. அப்பன் அருமை செத்தால் தெரியும்
உப்பின் பெருமை உப்பில்லாதபோது தெரியும்
41. சொல்வார் புத்தியெல்லாம் கேட்டால்
காட்டில் மீன் பிடிக்கவும், கடலில் முயல் பிடிக்கவும்
செல்லவேண்டும்
42. வந்ததெல்லாம் கொள்ளும் மகராசன் கப்பலிலே
43. சமுத்திரம் நீந்தியவனுக்கு வாய்க்கால் எம்மாத்திரம்
44. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்

பொருளாதாரம் (பணம்) பற்றிய பழமொழிகள்

1. திரைகடலோடியும் திரவியம் தேடு
2. தோட்டி போல உழைத்து
துரைபோல சாப்பிடணும்
3. குந்தித் தின்றால் குன்றும் கரையும்
4. பொருளாசையும் மனசாட்சியும் பொருந்துமா?

5. கைப்பொருளற்றால் கட்டியவளும் பாரள்
6. சுண்டைக்காய் கால் பணம்
சுமைகூலி முக்கால் பணம்
7. கீரைக் கடையானாலும் எதிர்கடை வேண்டும்
8. உழவின் மிகுந்த ஊதியமில்லை
9. உழைத்தால் ஊழையும் வெல்லலாம்
10. கப்பல்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி
கப்பல் கவிழ்ந்தால் பிச்சைக்காரி
11. குறையச் சொல்லி நிறைய அள
12. கொச்சியில் குறுணி விற்றாலும்
இங்கே என்ன செய்வது?
13. பாய்க்குத் தகுந்தபடி காலை நீட்டு
14. விரலுக்கேற்ற வீக்கம்
15. வெறுங்கை முழம் போடுமா?
16. செக்குப் போல பொன் இருந்தாலும்
செதுக்கித் தின்றால் எத்தனை நாளைக்கு வரும்
17. இளமையிற் சோம்பல்
முதுமையில் வறுமை
18. பணம் பத்தும் செய்யும்
19. பணம் இல்லாதவன் பிணம்
20. ஈட்டி எட்டுகிற மட்டும் பாயும்
பணம் பாதாள மட்டும் பாயும்
21. கண்ணாடியில் கண்ட பணம் கடனுக்கு உதவுமா?
22. காசில்லாதவனை வேசியும் விரும்பாள்
23. குலம் குப்பையிலே பணம் பந்தியிலே
24. சேர சேரப் பண ஆசை
பெறப் பெற பிள்ளை ஆசை
25. பண ஆசை தீமைக்குவேர்
26. பணத்திற்குப் பெயர் ஆட்கொல்லி
27. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்
28. பணம் இருக்கவேண்டும்
இல்லாவிட்டால் பத்து சனம் இருக்கவேண்டும்
29. வேப்பெண்ணை விற்ற காசு கசக்குமா?
30. நாய் விற்ற காசு குலைக்குமா?
31. பணமிருந்தால் படையையும் வெல்லலாம்

32. பணமென்றால் மனிதன் பேயாகப் பறப்பான்
33. உறவுக்கும் பகைக்கும் பொருளே காரணம்
34. அடக்கமுள்ளவன் பொருளுக்கு ஆபத்தில்லை
35. கனவில் கண்டபொருள் கைக்கு எட்டுமா?
36. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை
37. பொருளும் போகமும்கூட வராது
38. செல்வம் சகடக்கால் போல வரும்
39. அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்
40. செல்வம் சீரழியும்
41. தாட்சண்யம் தன நாசம்
42. தைரியலட்சுமி தனலட்சுமி
43. வீட்டுச் செல்வம் மாடு
தோட்டச் செல்வம் முருங்கை
44. ஆகும் காலம் ஆகும்
போம் காலம் போகும்
45. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
46. ஊசி போகிறது கணக்குப் பார்ப்பான்
பூசணிக்காய் போகிறது தெரியாது
47. செலவு அதிகம் வரவு போதாது
48. வரவுக்குத்தக்க செலவு செய்யவேண்டும்
49. சிறுதுளி பெருவெள்ளம்
50. பலதுளி பெருவெள்ளம்
51. வட்டி குட்டி போடும்
52. ஒருகாசு பேணின் இருகாசு தேறும்
53. மலிந்த சரக்குச் சந்தைக்குத்தானே வரும்
54. புழுத்த சரக்குச் சந்தையிலே கொள்ளை விலை
55. சந்தைக் கூட்டமும் பொம்மலாட்டமும்
56. யார் குடிகெட்டாலும் சந்தைக்குக் கால்காசு உண்டு
57. படித்தவன் சந்தைக்குப் போனால்
விற்கவும் மாட்டான் வாங்கவும் மாட்டான்
58. சந்தையில் துட்டுக்கு இரண்டு துக்காணிக்கு மூன்று
59. சந்தை வாக்கு பொய்க்காது
60. கடன்பட்டார் நெஞ்சம்போல
61. கடன்காரனுக்கு கடனும்
உடன்பிறந்தானுக்குப் பங்கும் கொடுக்கவேண்டும்

62. கடலில் மூழ்கிப் போனாலும்
கடனில் மூழ்கிப் போகாதே
63. கடன் வாங்கியும் கல்யாணம் செய்
64. கடன் வாங்கியும் பட்டினி
கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி
65. கடன் வாங்கி காரியத்தை முடி
66. சில்லறைக் கடன் சீரழிக்கும்
67. உண்ணாமல் கெட்டது உறவு
கேளாமல் கெட்டது கடன்
68. ஊர்க்கடன் உள்ளங்கை சிரங்குபோல
69. ஆர் கடன் வைத்தாலும் மாரி கடன் வைக்கக்கூடாது
70. கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை
71. கடனில்லாத கஞ்சி கால்வயிறு
72. அண்டை வீட்டுக்கடனும் அரையாப்புக் கட்டியும் ஆகாது
73. கடன் வாங்கிச் செலவு செய்தவனும்
மரமேறி கைவிட்டவனும் சரி
74. கடன் கொடுத்தவனுக்குக் கோபம் கூடாது
கடன் வாங்கினவனுக்கு ரோசம் கூடாது
75. கடன்பட்டும் பட்டினியா?
76. காலையில் கடன்காரனாக எழுந்திருப்பதைவிட
இரவில் பசியுடன் படுத்திருப்பதே மேல்
77. கடன் கொடுத்தால் தீரும்
வழி நடந்தால் தீரும்
78. கன்றுகுட்டி கிட்டவும்
கடன்காரன் கிட்டவும் இருக்கக்கூடாது
79. அள்ளிக் கொடுத்தால் சும்மா
அளந்து கொடுத்தால் கடன்
80. கடன் கேளாமல் கெடும்
பயிர் பாராமல் கெடும்
81. பாராமல் கெட்டது பயிர்
சேராமல் கெட்டது உறவு
கேளாமல் கெட்டது கடன்
82. கடன் வாங்குதல் வறுமையின் முதல் குழந்தை
83. கடன் வாங்குகிறபோது இனிப்பு
கடன் கொடுக்கிறபோது கசப்பு

84. காடு விளைந்தாலும் தெரு மேடு விளைந்தாலும்
கடன் கழியும்
85. குதிரை ஏறாமல் கெட்டது
கடன் கேளாமல் கெட்டது
86. சில்லறைக்கடன் சீரழிக்கும்
87. புதுப்பணக்காரனிடம் கடன் வாங்காதே
88. வாங்கினக் கடன் கொடாத வல்லாளக் கண்டன்
89. கடன் வாங்கி கல்யாணம் செய்

கல்வி பற்றிய பழமொழிகள்

1. கல்வி கரையில் கற்பவர் நாள் சில
2. கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
3. இளமையிற் கல்
4. கல்லாதவன் கண்ணில்லாதவன்
5. பொன்னழகும் பூவழகும் அழகல்ல
கல்வியழகே அழகு
6. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
7. அறிவுடையவனை அரசனும் விரும்புவர்
8. கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்
9. கல்லார் உறவினும் கற்றார் பகை நலம்
10. அல்லும் பகலும் கசடறக்கல்
11. கல்வியழகே அழகு
12. எழுத்து இல்லாதவன் கண்ணில்லாதவன்
13. கற்கையில் கல்வி கசப்பு
கற்றபின் கல்வி இனிப்பு
14. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு
15. கறக்கச் சுரப்பது பசுவின்பால்
படிக்கச் சுரப்பது கல்வி
16. கல்வியில்லாச் செல்வமும் கற்பில்லா அழகும் பிரகாசிக்காது
17. இளமையில் கல்வி எப்போதும் நிற்கும்
18. இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து
19. நுனிப்புல் மேய்வதைப் போல
20. குறையறக் கற்றவன் கோடியில் ஒருவன்
21. கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்

22. நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு
23. உடமை என்பது கல்வியுடைமையே
24. பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது
25. ஏட்டுச் சுரைக்காய் கறிசமைக்க உதவாது
26. எழுத்தறச் சொன்னாலும் பெண்புத்தி பின்புத்தி
27. சென்ற இடமெல்லாம் சிறப்பே கல்வி
28. செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும்
    கல்வியைச் செலவழித்தால் வளர்ந்து வரும்
29. கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது
30. எழுத்து எண்ணிப் படித்தவன்
31. ஒருமொழி அறிந்தவன் ஊமை
    பலமொழி அறிந்தவன் பண்டிதன்
32. கல்வி அழியாச் செல்வம்
33. கற்றது கடுகளவு, கல்லாதது கடலளவு
34. கற்றவனுக்கு மயிர் அத்தனை
    கல்லாதவனுக்கு மலை அத்தனை
35. கீழ்க்குலத்தவன் ஆனாலும் கற்றவன் கற்றவன்தான்
36. குணமில்லாக் கல்வி பாழ்
37. செல்வப் பொருள் கொடுத்தால் குறையும்
    கல்விப் பொருள் குறையுமோ?
38. கல்விக்கு இருவர், களவுக்கு ஒருவர்
39. நூல் கற்றவனே மேலவன் ஆவான்
40. கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது
41. பெத்தப்பிள்ளை பின்னுக்கு உதவும்
    கற்ற வித்தை காலத்துக்கும் உதவும்
42. படித்தவள் புத்தி பானைக்குள்ளே
43. சென்ற இடத்தில் எல்லாம் சிறப்பே கல்வி

ஆசிரியர் குரு பற்றிய பழமொழிகள்

1. எழுத்தறிவித்தவன் இறைவன்
2. கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்
3. குரு இல்லார்க்கு வித்தை இல்லை
4. குருமொழி தெய்வ மொழி
5. கரு இல்லாத முட்டையும் இல்லை
   குரு இல்லாத வித்தையும் இல்லை

6. குரு துரோகம் குல நாசம்
7. குருமொழி கேளாதவனும்
   தாய்மொழி கேளாதவனும் தண்டம்
8. குரு இல்லாத வித்தை அவித்தை
9. சுட்டிக் காட்டாத வித்தைச் சுட்டுப் போட்டாலும் வராது
10. முதலிலார்க்கு ஊதியமில்லை
    குரு இல்லார்க்கு ஞானமில்லை
11. சுருதி, குரு, சுயானுபவம் மூன்றும் சேர்ந்தால் மெய்ஞ்ஞானம்
    சுருதி, சுயானுபவம் இரண்டும் சேர்ந்தால் முக்தி
12. குரு மொழிக்கு எதிர் மொழி இல்லை
13. குணம் கொடுப்பவன் குரு
14. குரு வாய்மொழி திருவாய்மொழி

தத்துவம் பற்றிய பழமொழிகள்

1. தத்துவம் அறிந்தவன் தவசி
2. இல்லாது பிறவாது
   அள்ளாது குறையாது
3. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
4. இன்றிருப்பார் நாளையில்லை
5. செத்த பிணங்களைக் கண்டு
   சாகும் பிணங்கள் அழுகின்றன
6. நமன் அறியா உயிர் உண்டா?
   நாரை அறிய குளமுண்டா?
7. எண்ண மெல்லாம் பொய்
   எமன் கை ஓலை மெய்
8. செருக்கு நீங்கினால் வீடு
9. பந்தம் விட்டால் மோட்சம்
10. பந்தம் விட்டால் மோட்சம்
11. அறியாத நாள் எல்லாம் பிறவாத நாளே
12. ஆசையே துன்பத்தின் பிறப்பிடம்
13. பக்தி உண்டானால் முக்தி உண்டு
14. மோனம் என்பது ஞான வரம்பு
15. அவனின்றி ஓர் அணுவும் அசையாது
16. அறிவுடன் ஞானம், அன்புடன் ஒழுக்கம்

17. கர்மத்தில் வந்தது தருமத்தில் போகும்
18. வாழ்வாவது பொய்
    மண்ணாவது திண்ணம்
19. மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின்மேல் கலம்
20. நீரில் குமிழி யாக்கை
21. பிறந்தன இறக்கும்
    இறந்தன பிறக்கும்
22. தன்னையறிந்தவன் தத்துவம் அறிந்தவன்
23. தன்னையறிந்தவன் தத்துவஞானி
24. மெய்ஞ்ஞானம் உடையார்க்கு அஞ்ஞானமில்லை
25. அஞ்ஞானிக்கு இல்லை மறுபிறப்பு
26. நான் போனால் வீடு
27. செருக்கு நீங்கினால் வீடு
28. பந்தம் விட்டால் மோட்சம்
29. சூட்சமத்திலிருக்கின்றது மோட்சம்
30. சத்தியமே சத்தி
    தத்துவமே சித்தி
31. சட்டி சுட்டது கை விட்டது
32. சுடலை ஞானம் திரும்பிப்போகிற வரைக்கும்
33. அவனே இவனே என்பதைவிடச்
    சிவனே சிவனே என்பதுமேல்
34. எல்லாம் அறிந்தவனும் இல்லை
    ஒன்றும் அறியாதவனும் இல்லை
35. கட்டை இருக்கிற மட்டும் கஷ்டமுண்டு
36. சூலி மயக்கமும் சுடுகாட்டு ஞானமும் அப்போதுக்கு அப்போது
37. நால்வர் வாக்கு தேவ வாக்கு
38. துறக்கத் துறக்க ஆனந்தம்
    துறந்தபின் பேரின்பம்
39. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
40. எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடாதே

ஊழ்வினை பற்றிய பழமொழிகள்

1. தினை விதைத்தவன் தினை அறுப்பான்
   வினை விதைத்தவன் வினை அறுப்பான்

2. இல்லாதது வராது உள்ளது போகாது
3. எழுதின விதியை யாராலும் மாற்ற முடியாது
4. ஊத்தை போனாலும் ஊழ்வினை போகாது
5. வியாதிக்கு மருந்துண்டு விதிக்கு மருந்துண்டா?
6. ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே
7. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
8. வந்த வினை போகாது
   வராத வினை வாராது
9. வரும் வினை வழியில் நில்லாது
10. வியாதிக்கு மருந்துண்டு விதிக்கு மருந்துண்டா?
11. முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் மூண்டது
12. தன் நிழல் தன்னோடே வரும்
13. காசி போனாலும் கருமம் தொலையாது

அரசு பற்றிய பழமொழிகள்

அரசன்

1. அரசனில்லாத நாடு அச்சில்லாத தேர்
2. துறவிக்கு வேந்தன் துரும்பு
3. அரசனில்லாத நாடு புருஷனில்லாத வீடு
4. ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான்
   பலபேரைக் கொன்றவன் பட்டம் ஆளுவான்
5. அரசனுக்குச் செங்கோல்
   சம்சாரிக்கு உழவுகோல்
6. அரசனும் சரி அரவும் சரி
7. ஆறு போவதே போக்கு
   அரசன் சொல்வதே தீர்ப்பு
8. ஊருக்கு அரசன் காவல்
   வீட்டுக்கு நாய் காவல்
9. அரசனும் நெருப்பும் பாம்பும் சரி
10. அரசனை நம்பி புருஷனை கைவிட்டது போல
11. ராஜாவும் பெண்ணும் கொடியும்
    கிட்ட இருக்கிறதைத் தழுவிக் கொள்ளும்
12. ஆற்று அருகிலிருந்த மரமும்
    அரசன் அருகிலிருந்த வாழ்வும் நிலையல்ல

13. புத்தி கெட்ட ராஜாவுக்கு
மதி கெட்ட மந்திரி
14. அரசனும் சரி நெருப்பும் சரி
15. அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்
16. இராஜா எவ்வழியோ அவ்வழியே குடிகள்
17. அரசன் முதல் ஆண்டி வரை
18. மந்திரி இல்லாத யோசனையும்
ஆயுதமில்லாத சேனையும் கெடும்
19. மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி

போர், படை, வீரன் பற்றிய பழமொழிகள்

1. அகல இருந்தால் பகையும் உறவாகும்
2. அஞ்சியவனைக் குஞ்சும் விரட்டும்
3. அஞ்சி நடக்கிறவனுக்குக் காலமில்லை
4. அதிகாரியுடன் எதிர்வாதம் செய்யாதே
5. அரசனில்லாத படை வெட்டுமா?
6. அரசனில்லாத படை வெல்வது அரிது
7. ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மீது குறை சொல்லுவார்
8. ஆயுதப் பரிட்சை அறிந்தவன் நூற்றில் ஒருவன்
9. ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது
10. ஆள் இல்லாப் படை அம்பலம்
11. ஆள் கொஞ்சமாயினும் ஆயுதம் மிடுக்கு
12. அரசன் இருக்கப் பட்டணம் அழியுமா?
13. உண்ணப் படையுண்டு, வெல்லப் படையில்லை
14. உருவிய வாளை உறையிடாத வீரன்
15. வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே
16. எளியாரை வலியார் அடித்தால்
வலியாரைத் தெய்வம் அடிக்கும்
17. ஒரு குண்டிலே கோட்டையைப் பிடிக்க முடியுமா?
18. ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான்
பலரைக் கொன்றவன் பட்டமாளுவான்
19. ஓடுபவனைக் கண்டால் துரத்துபவனுக்கு எளிது
20. கண்டது சொன்னால் மூள்வது பகை

21. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
22. கல்லின்மீது எய்த அம்பு போல
23. கிட்ட நெருங்க முட்டப் பகை
24. குட்டிக் கலகம் செய்பவன் குட்டுபட்டுச் சாவான்
25. குண்டு பட்டுச் சாகாதவன்
    வண்டு கடித்துச் சாவான்
26. கையாளாகாத ஆயுதம் துருப்பிடிப்பது போல்
27. சமிக்ஞை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறார்
28. சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு
29. தம்பியுடையான் படைக்கஞ்சான்
30. தீயை மிஞ்ச வைத்தாலும்
    பகையை மிஞ்ச வைக்கலாகாது
31. துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்ததுபோல
32. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்
33. தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினாற்போல
34. நடுப்படையில் சென்றால் வடுப்படாமல் மீள்வான்
35. பகைவர் உறவு புகைஎழா நெருப்பு
36. படை மிகுந்தால் அரணில்லை
37. படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்
38. படைக்கும் ஒருவர் கொடைக்கும் ஒருவன்
39. மந்திரி இல்லாத யோசனையும்
    ஆயுதமில்லாத சேனையும் கெடும்
40. வளைகின்ற வில்லே அம்பெய்யும்
41. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
42. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு
43. வெற்றி பெற்றவன் சுத்த வீரன்

திருமணம் பற்றிய பழமொழிகள்

1. ஊர் எல்லாம் கல்யாணம்
   மார் எல்லாம் சந்தனம்
2. உபநயனம் இல்லாமல் கல்யாணம் பண்ணினானாம்
3. கோத்திரத்திலே குரங்கானாலும் கொள்
4. கல்யாணப் பந்தலிலே தாலிகட்ட மறந்ததுபோல

5. கல்யாணம் பண்ணியும் சந்நியாசி
கடன் வாங்கியும் பட்டினி
6. கல்யாணம் பண்ணும் வரையில் பிள்ளை
கண்ணை மூடும் வரை பெண்
7. சீப்பை ஒளித்துவைத்தால் கல்யாணம் நின்றுவிடுமா?
8. சீர் கொண்டு வந்தால் சகோதரி
9. உயர்ந்த இடத்தில் பெண்ணைக் கொடு
தாழ்ந்த இடத்தில் பெண்ணை எடு
10. அவத்தனைக் கட்டி வாழ்வதைவிட
சமர்த்தனைக் கட்டி அறுத்துப் போடலாம்
11. அரிசி பருப்பு இருந்தால் ஐப்பசி கல்யாணம்
காய்கறி இருந்தால் கார்த்திகைமாசம் கல்யாணம்
12. நடக்க மாட்டாதவன் சிற்றப்பன் வீட்டில் கல்யாணம் செய்தது போல
13. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம்
14. இடையன் கல்யாணம் விடியும் நேரத்தில்
15. கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி
16. கல்யாணம் பண்ணின வீட்டில் ஆறுமாதம் கருப்பு
17. கன்னியிருக்க காளை மணம் ஏறலாமா?
18. பருப்பில்லாக் கல்யாணம் உண்டோ?
19. வீட்டைக் கட்டிப்பார்
கல்யாணம் பண்ணிப் பார்
20. அசடுக்கு வாழ்க்கைப்பட்டு அறுபது வருஷம் வாழ்வதைவிட
சமத்துக்கு வாழ்க்கைப்பட்டு சட்டென்று தாலியறுப்பதே மேல்
21. கிழவனுக்கு வாழ்க்கைப்படுவதைவிட
கிணற்றிலே விழுந்து சாகலாம்
22. விடியற்காலம் கல்யாணம்
பிடிடா வெற்றிலை பாக்கு
23. ஆயிரம் காலத்துப் பயிர்
24. கிழமானாலும் கட்டிக் கொண்டவள் பிழைப்பாள்.
25. கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு
பாத்திரமறிந்து பிச்சையிடு
26. பழங்கால் தூர்க்க வேண்டாம்
புதுக்கால் வெட்ட வேண்டாம்

27. ஒரு வீட்டுச் சம்பந்தம் ஏற்பட
ஏழுஜோடி செருப்பு தேயவேண்டும்
28. தாரம் உள்ளவனுக்குப் பெண்ணைக் கொடுத்தாலும்
தானே ஆக்கித் தின்னிக்குப் பெண் கொடுக்காதே
29. ரோசக்காரனுக்குக் கடனைக் கொடு
மழுங்கப் பயலுக்குப் பெண்ணைக் கொடு
30. வளவிக்காரனுக்குப் பெண் கொடுக்காதே
31. கல்யாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தானாம்
32. அரை பணத்திலே கல்யாணம்
அதிலே கொஞ்சம் வானவேடிக்கை
33. அழுமூச்ஞ்சிக்குக் கல்யாணம் அன்று பிடித்ததாம் அடைமழை
34. மேனுமினுக்கியைக் கட்டினவனும் கெட்டான்
மேட்டுப் புஞ்சையை உழுதவனும் கெட்டான்
35. அஞ்சும் மூன்றும் எட்டு
அத்தை மகளைக் கட்டு
36. அத்தை மகளானாலும் சும்மா வருவாளா?
அரிசி பருப்பு சீர் செனத்திக் கொடுக்க வேண்டாமா?
37. இல்லறம் நல்லறம்
38. என்னிலும் கதிகெட்டவன்
என்னை வந்து மாலை இட்டானாம்
39. கோத்திரத்தில் குரங்கானாலும் கொள்
40. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன
41. நச்சுவாயன் வீட்டிலே நாறவாயன் பெண்கொண்டதுபோல
42. பணம் பார்த்துப் பண்டம் கொள்
குணம் பார்த்துப் பெண்ணைக் கொள்
43. பணமும் பத்தாயிருக்க வேண்டும்
பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும்
முறையிலே அத்தை மகளாய் இருக்க வேண்டும்
44. பரிசம் போட்டா பாதி பெண்டாட்டி
45. பாத்திரம் அறிந்து பிச்சையிடு
கோத்திரம் அறிந்து பெண்ணை எடு
46. புதுப்பெண் மோடு தூக்கும்
47. பெண் பிறந்தபோதே புருஷன் பிறந்திருப்பான்

48. மரமாயிருக்கிற மட்டும் மடியில் வைத்திருந்தேன்
தோப்பான பிறகு மடியில் வைத்திருக்கலாமா?
49. மாயூரத்தில் பெண் எடுக்காதே
மன்னார்குடியில் பெண் கொடுக்காதே
50. ரதிக்கு மன்மதன் வாய்த்தாற்போல
51. வேலையைப் பார்த்துப் பெண்ணைக் கொள்
சாலையைப் பார்த்து ஊருக்கு நட
52. வேளையும் விதியும் வந்தால்
வேலியால் வரும் மாப்பிள்ளை
53. மனைவியில்லாத புருஷன் அரைமனிதன்
54. ஆடு மிதியாக் கொல்லையும்
ஆடவனில்லாப் பெண்ணும் வீண்
55. துழாவிக் காய்ச்சாதது கஞ்சியுமல்ல
வினவிக் கட்டாதது பெண்ணுமல்ல
56. தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்
பாலைப் பார்த்து பசுவைக் கொள்
57. சேலைமேல் சேலை கட்டும் தேவரம்பை ஆனாலும்
ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது
58. ஈரூரில் உழுதான் கெட்டான்
இரண்டு பெண்டாட்டிக்காரனும் கெட்டான்
59. கடன் வாங்கி கல்யாணம் செய்
60. ஏரு கண்டு பயிரிடு
இனங்கண்டு பெண் எடு
61. உள்ளூர்ப் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது
62. தாயைப் பார்த்து பெண் எடு
தரத்தைப் பார்த்து வரவிடு
நிலத்தைப் பார்த்துப் பயிரிடு
நேரம் பார்த்து முடிவெடு
63. கை நிறைந்த பொன்னைப் பார்க்கிலும்
கண் நிறைந்த கணவனே மேல்

உறவுகள் பற்றிய பழமொழிகள்

1. அகல இருந்தால் பகையும் உறவாகும்
2. அகன்று இருந்தால் நீண்ட உறவு
   கிட்ட இருந்தால் முட்டப் பகை
3. இட்ட உறவு எட்டு நாளைக்கு
   நக்கின உறவு நாலு நாளைக்கு
4. உறவு உண்ணாமல் கெட்டது
   உடம்பு உடுக்காமல் கெட்டது
5. உறவு போலிருந்து நஞ்சு கலக்கிறதா?
6. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
7. கொண்டவன் உறவு உண்டானால்
   மண்டலமெல்லாம் ஆளலாம்
8. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
9. தூர இருந்தால் சேர உறவு
10. தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவு
11. நல்லவன் உறவை நாலுபணம் கொடுத்து சம்பாதிக்கணும்
    கெட்டவன் உறவை பத்துப்பணம் கொடுத்து நீக்கணும்
12. பனைமர நிழலும் நிழலோ
    பகைவன் உறவும் உறவோ
13. மச்சானைப் பார்க்க உறவுமில்லை
    மயிரைப் பார்க்க கறுப்புமில்லை
14. சேர இருந்தால் செடியும் பகை
    தூர இருந்தால் தோட்டியும் உறவு
15. உயிரும் உடலும் போல உறவு
16. நகமும் சதையும் போல உறவு
17. பூவும் மணமும் போல உறவு

மாமியார் மருமகள் உறவு

18. அன்பற்ற மாமிக்குக் கைப்பட்டாலும் குற்றம்
    கால் பட்டாலும் குற்றம்
19. அவசரப்பட்ட மாமியார் மருமகனைக் கணவனென்று
    அழைத்தாளாம்
20. ஊருக்கு ஏற்ற மாடு வாங்கினவனும் இல்லை
    தாய்க்கேற்ற பெண் கட்டினவனும் இல்லை

21. என் மகளுக்கு வாரத்திற்கு ரெண்டுமுறை தலைக்கு ஊத்துவேன்
என் மருமகளுக்குத் தீபாவளிக்குத் தீபாவளி தலைக்கு ஊத்துவேன்
22. கைக்கு அடங்காத விளக்குமாறும்
வாய்க்கு அடங்காத மருமகளும்
23. மகன் செத்தாலும் பரவாயில்லை
மருமகள் தாலி அறுக்க வேண்டும்
24. பானை ஒட்டினாலும் ஒட்டும் மாமியார் ஒட்டாள்
25. பெண்ணுக்கு மாமியாரும்
பிள்ளைக்கு வாத்தியாரும்
26. பொறுமையில் உயர்ந்தது பூமி
பொல்லாங்கில் உயர்ந்தவள் மாமி
27. மருமகளும் மாமியாராவாள்
28. மருமகனுக்கு ஆக்கிய சோற்றை
மகனுக்குப் போட்டு வயிறு எரிந்தாளாம்
29. மாமியார் உடைத்தால் மண்சட்டி
மருமகள் உடைத்தால் பொன்சட்டி
30. தீயை மிஞ்ச வைத்தாலும்
பகையை மிஞ்ச வைக்கலாகாது
31. துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது போல
32. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்
33. மாமியார் செத்த நாளும் இல்லை
நான் வாழ்ந்த நாளும் இல்லை
34. மாமியாரோடு போகும் மாபாதகன்
35. வரவர மாமியார் கழுதை போலானாள்
36. மாமியார் சாகாளோ மனக்கவலை தீராதோ
37. பானை ஒட்டினாலும் ஒட்டும்
மாமியாரும் மருமகளும் ஒட்டமாட்டார்கள்
38. மாமியார் மெச்சிய மருமகள் இல்லை
மருமகள் மெச்சிய மாமியார் இல்லை
39. வாத்தியார் மெச்சின பிள்ளையுமில்லை
மருமகள் மெச்சிய மாமியாரும் இல்லை
40. வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி

41. மாமியார் வீடு மகா சௌக்கியம்
42. வாயைப் பெருக்கினால் வாயாடி மாமியார்
43. பொன்னான மருமகளானாலும்
மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும்
44. மாமியார் உடைத்தால் குழவிக்கல்
மருமகள் உடைத்தால் வைரக்கல்
45. மாமியார் செய்யும் கொடுமை
மருமகள் செய்யும் அடிமை

தாய் மகள்

46. தாய் அற்றால் சீர் அறும்
47. தாய் உள்ள மட்டும் சீராட்டு
48. தாய் இல்லாத பிறந்தகமும்
கணவனில்லாத புக்ககமும்
49. தாய் ஏழடி பாய்ந்தால்
மகள் எட்டடி பாய்வாள்
50. தாய் அறியாத சூலா?
51. தாய் செத்தால் மகள் திக்கற்றாள்
52. தாய் தவிட்டுக்கு அழுகிறாள்
மகள் இஞ்சிப் பச்சடி கேட்கிறாள்
53. தாயைத் தண்ணித் துறையில் பார்த்தால்
பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம்
54. தாயைப் பார்த்து பெண்ணைக் கொள்
பாலைப் பார்த்து பசுவைக் கொள்
55. தாய்போல பெண்ணும்
தகப்பன் போல பிள்ளையும்
56. தாயைப் போல பிள்ளை
நூலைப் போல சேலை
57. பெண்ணின் பிழை பொறுக்க
பெற்றதாய் வேண்டாமா?
58. தேரோடு போச்சுது திருநாள்
தாயோடு போச்சுது பிறந்த வீடு

தாய் மகன்

59. அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் உதவான்
60. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன் பிள்ளை தானே வளரும்
61. தாயற்றவனுக்கு ஊரெல்லாம் தாய்
62. தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான்
63. தாய் இட்ட பேரை ஊர் இட்டு அழைக்கும்
64. தாய்ச்சொல் துறந்தால் வாசகமில்லை
65. தாய் தூற்றினால் ஊர் தூற்றும்
கொண்டவன் தூற்றினால் கண்டவன் தூற்றுவான்
66. தாயைப் பழித்த பிள்ளையை ஊர் தூற்றும்
67. தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு
68. தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா?
69. தாய் மனம் பித்து
தந்தை மனம் கல்லு
70. நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவில் சோறு
71. பெற்ற தாயிடத்திலா கற்ற வித்தையைக் காட்டுவது
72. பேயானாலும் தாய் சொல்லைத் தட்டலாமா?
73. மாதா பிதா செய்தது மக்கள் தலைமேல்
74. ஆரும் ஆரும் உறவு
தாயும் பிள்ளையும் உறவு
75. ஒருவனுக்குத் தாரம்
மற்றவனுக்குத் தாய்
76. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
77. தாயும் தகப்பனும் தவிர அனைத்தும் வாங்கலாம்
78. தாய் முகம் காணாப் பிள்ளையும்
மழை முகம் காணாப் பயிரும் உருப்படாது
79. தாய்க்குப் பின் தாரம்
80. பிள்ளை அருமை பெற்றவளுக்குத் தெரியும்
81. தந்தை தாய் பேண்
82. தேங்காய்க்கு மூன்று கண்
தாய்க்கு ஒரே கண்
83. பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்
வந்தவள் மடியைப் பார்ப்பாள்

84. தாயையும் தண்ணீரையும் பழிக்காதே
85. பேயானாலும் தாய்
நீரானாலும் மோர்
86. தந்தை எவ்வழி தனயன் அவ்வழி
87. தாயில்லாப் பிள்ளை தறுதலை

சகோதரர்கள்

88. ஐந்து வயதில் அண்ணன் தம்பி
பத்து வயதில் பங்காளி
89. அண்ணன் தம்பி ஜென்மப்பகை
90. தம்பியுடையான் படைக்கஞ்சான்
91. உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்

மனைவி

92. அகத்துக்கு அழகு ஆமுடையாள்
93. அரைக்காசை ஆயிரம் ஆக்குவதும் பெண்சாதி
ஆயிரத்தை அரைக்காசு ஆக்குவதும் பெண்சாதி
94. ஆடு மிதியாக் கொல்லையும்
ஆளன் இல்லாப் பெண்ணும் வீண்
95. ஆளன் இல்லாத பெண்ணுக்கு வாழ்வு இல்லை
96. ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ்
97. இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மச்சினி
98. உள்ளூர்ப் பெண்ணும் அசலூர் மண்ணும் ஆகாது
99. உற்ற கணவனும் ஒரு நெல்லும் உண்டானால்
சித்திரம் போல் குடும்பம் நடத்தலாம்
100. கட்டின பெண்டாட்டி பட்டிமாடு மாதிரி
101. கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்
102. கார்த்திகைக் கீரை கணவனுக்குக் கொடுக்காதே
103. குல ஸ்திரி தன் பர்த்தாவையும்
பர ஸ்திரி தன் மேனியையும் பேணுவாள்
104. கூத்தாடி பெண்ணுக்குச் சூதாடி கணவன்
105. கைப் பொருளற்றவனைக் கட்டிய பொண்டாட்டியும்
எட்டிப் பாரான்

106. கைப்பொருள் அற்றால்
கட்டுக் கழுத்தியும் பாராள்
107. கல்லானாலும் கணவன்புல்லானாலும் புருஷன்
108. அடுப்பே திருப்பதி அகமுடையானே கைலாசம்
109. அரிசிப் பகையும் ஆம்படையான் பகையும் எத்தனை நாளைக்கு
110. ஊரில் ஒருவனே தோழன்
யாரு மற்றதே தாரம்
111. குருவும் தாரமும் தலை விதிப்படி
112. தாரம் வாய்ப்பது புண்ணியவானுக்கு
113. சிறுகுழந்தை இல்லாத வீடும் வீடல்ல
சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறியல்ல
114. குழந்தை இல்லா வீடு சுடுகாடு
115. குழந்தை வாக்கு தெய்வவாக்கு
116. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே
117. குழந்தையே கண்கண்ட தெய்வம்
118. குழந்தையுள்ள வீடு கோயில்
119. உண்ட பிள்ளை உரம் செய்யும்
120. உற்றார்க்கு ஒரு பிள்ளை கொடான்
நமனுக்கு நாலு பிள்ளை கொடுப்பான்
121. ஊர்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன்பிள்ளை தானே வளரும்
122. எடுப்பார் கைப்பிள்ளை
123. ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உரியிலே சோறு
நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு
124. கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால்
தேவடியாள் வீட்டில் சர்க்கரை கொடுப்பர்
125. கள்ளப் பிள்ளைக்குக் கள்ளப் புத்தி
126. குமரி ஒரு பிள்ளைக்கு, கோடி ஒரு வெள்ளைக்கு
127. கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்துக்கு ஆகாது
128. சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை
129. சிறுபிள்ளை இட்ட வெள்ளாண்மை
வீடு வந்து சேராது

130. சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்கு
திருவாய்மொழி கற்றுத் தரணுமா?
131. தழைத்த மரத்திற்கு நிழலுண்டு
பிள்ளை பெற்றவளுக்குப் பாலுண்டு
132. தாயைப் போல பிள்ளை
நூலைப் போல சேலை
133. தூக்கி வளர்த்த பிள்ளையும்
தொடையில் வைத்து தைத்த இலையும் உருப்படாது
134. தேவடியாள் வீட்டில் பிள்ளை பிறந்தது போல
135. பிச்சையிட்டுக் கெட்டவனுமில்லை
பிள்ளை பெற்றுக் கெட்டவளுமில்லை
136. பிள்ளையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதா?
137. பிள்ளை வரத்துக்குப் போன இடத்திலே
புருஷனைப் பற்றி கொடுத்ததுபோல
138. பெண்சாதி முகத்தைப் பார்க்காவிட்டாலும்
பிள்ளை முகத்தைப் பார்க்கவேண்டும்
139. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு
140. பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை
141. மழைமுகம் காணாத பயிரும்
தாய்முகம் காணாத சேயும்
142. வேலை களைப்பிற்கு பிள்ளைமேல் சாக்கு
வெட்கங்கெட்ட தாசிக்கு ஆம்படையான்மேல் சாக்கு
143. மண் பிள்ளையானாலும் தன்பிள்ளை வேண்டும்
144. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு
145. அழுகிற பிள்ளை பால் குடிக்கும்
146. அடிக்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் பாழ்
147. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
148. சந்தன மரம் போல மகனும்
சம்பங்கி போல பெண்ணும்
149. செல்லம் சீரழிக்கும்
150. கக்கின பிள்ளை நக்கும்
151. விளையும் பயிர் முளையிலே
152. இளமையிற் முயற்சி
முதுமையில் காக்கும்

153. ஒருபிள்ளை என்று ஊட்டி வளர்த்தால்
அது ஊர்மேல் போச்சுது

நார்த்தனார் உறவு

154. நார்த்தங்காய்க்கு இட்ட உப்பும்
நார்த்தனாருக்கு இட்ட சாதமும் எவ்வளவானாலும் போதா
155. நார்த்தங்காய்க்குப் போடுற உப்பும்
நார்த்தனாருக்குப் போடுற சாதமும் வீண் போகாது

மைத்துனன் உறவு

156. புருஷன் அடிக்க கொழுந்தனைக் கோபித்தது போல
157. மச்சினன் உண்டானால் மலையேறிப் பிழைக்கலாம்
158. மலையேறினாலும் மைத்துனனைக் கைவிடாதே

பாலின உறவு பற்றிய பழமொழிகள்

1. ஆசை அறுபது நாள்
மோகம் முப்பது நாள்
2. இட வசதியில்லாத பதி விரதை
3. பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்
பெண்சாதி மடியைப் பார்ப்பாள்
4. சிரித்தாயோ சேலை அவிழ்த்தாயோ?
5. தன் இச்சையை அடக்காவிட்டால்
அது தன்னையே ஆளும்
6. காமத்துக்குக் கண் இல்லை
7. காமத்துக்குப் பெத்த மகளுமில்லை
8. காமனுக்குக் கண்ட இடத்தில் கண்
9. கன்னி அறிவாளோ காமரசம்
10. பெண்டு ருசி கண்டவனும்
உண்டு ருசி கண்டவனும் விடான்
11. எதுக்கும் உருகாதவன்
இச்சைக்கு உருகுவான்
12. பெண்ணாசை ஒரு பக்கம்
மண்ணாசை ஒரு பக்கம்

13. பள்ளத்தில் இருந்தால் பெண்சாதி
மேட்டில் இருந்தால் அக்காள்
14. முலை சாய்ந்தால் வயிறல்லவோ தாங்க வேண்டும்
15. குடிக்கிற முலையும் சரி
பிடிக்கிற முலையும் சரி
16. தனக்கு தனக்கு என்றால் புடுக்கும் களை வெட்டும்
17. கெட்டது தான் கெட்டாய் மகளே
கிட்ட வந்து படுத்துக்கொள்
18. சிற்றின்பம் எண்ணார்
மற்றின்பம் காண்பார்
19. கோடித் தனம் இருந்தாலும்
குணம் இல்லா மங்கையருடன் கூடாதே
20. சமர்த்தன் பெண்சாதியும் சோரம் போவாள்
21. துணிந்தவளுக்கு வெட்கமில்லை
அழுதவளுக்குத் துக்கமில்லை
22. அடியிலே பகையில்லை
இழுவையில் கொன்னுட்டான்
23. பத்துக்கு மேலே பத்தினி இல்லை
24. சும்மா கிடைத்தால் எனக்கொருத்தி
எங்கப்பனுக்கு ஒருத்தி
25. என்னைக் கெடுத்தது நரை
என் மகளைக் கெடுத்தது முலை
26. மாரியாத்தாளைப் பெண்டு பிடிக்கிறவனுக்கு
பூசாரி பெண்சாதி எம்மாத்திரம்
27. நாயக்காரன் பெண்டாட்டி
நாலு பேருக்கு வைப்பாட்டி
28. வேலையத்த மாமியார்
மருமகன் கிட்டே போனாளாம்
29. காமத்துக்குப் பெத்தமகளும் இல்லை
செத்த நாயும் இல்லை
30. தாசிக்குப் பணம் கொடுத்தால்
தானும் போகலாம் தகப்பனும் போகலாம்
31. தலை தங்கச்சி
குண்டி கொழுந்தியா?

32. தூமத் தீயை பார்க்கிலும்
காமத் தீ கொடியது
33. தின்று ருசி கண்டவன் திண்ணையை விட்டுப் போகான்
பெண்டுருசி கண்டவன் பின்னையும் போகான்

பெண்களைப் பற்றிய பழமொழிகள்

1. வானத்திற்கு அழகு சூரியன்
வீட்டிற்கு அழகு பெண்
2. பெண் இன்றிப் பெருமையும் இல்லை
கண் இன்றிக் காட்சியும் இல்லை
3. பெண்ணுக்குக் குணம் தானே சீதனம்
4. அடக்கமே பெண்ணுக்கு அழகு
5. குலத்திற்கேற்ற பெண்
நிலத்திற்கேற்ற நெல்
6. ஆண் நிழலில் நின்றுபோ
பெண் நிழலில் இருந்துபோ
7. ஆணாய்ப் பிறந்தால் அருமை
பெண்ணாய்ப் பிறந்தால் பெருமை
8. கல்யாணம் பண்ணும் வரையில் பிள்ளை
கண்ணை மூடும் வரை பெண்
9. பெண் சம்பாதித்தால் பழங்கலம் ஏறும்
10. பெண் பாவம் பொல்லாதது
11. பெண்ணுக்கு இரங்காதார் உண்டா?
12. பேதமை பெண்களுக்கு அணிகலன்
13. பெண் வாய்க்கும் புண்ணியவானுக்கு
பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு
14. கட்டின வீட்டையும் கட்டின பொண்டாட்டியையும்
பழுது சொல்லாதே
15. பெண்ணுக்குப் பெண்தான் சீதனம்
16. புத்தியுள்ள மனைவி புதையலுக்குச் சமம்
17. பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும்
18. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
19. அடக்கமுள்ள பெண்ணுக்கு அழகு எதற்கு?

20. பெண் வாய்க்கும் புண்ணியவானுக்கு
பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு
21. அவணியில் இல்லை ஈடு அவளுக்கு அவளே சோடு
22. உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கு அழகு
23. பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும்
24. பெண்ணுக்குப் பெண் பேராசை கொள்ளும் பேரணங்கு
25. ரதிக்கு மன்மதன் வாய்த்தாற்போல்
26. அழகு இருந்து அழும்
அதிர்ஷ்டம் இருந்து உண்ணும்
27. ஆடவர் கண்ணுக்கு ரம்பை
28. காந்தளே ருசி கருப்பே அழகு
29. கிளியைப் போல பேச்சும் மயிலைப் போல அழகும்
30. கூந்தலழகி குடியைக் கெடுப்பாள்
31. பறக்கிற கிளிபோல இருக்கிறாள்
32. பெண்ணுக்குச் சத்துரு அழகு
33. ரதிக்கு மன்மதன் வாய்த்தாற்போல
34. மயிர் போலும் கண்ணி
35. அவள் அழகுக்குப் பத்துப்பேர் வருவார்கள்
கண்சிமிட்டினால் ஆயிரம் பேர் வருவார்கள்
36. அவளைக் கண்ட கண்ணாலே இன்னொருத்தியைக் காண்பதா?
37. கிளிபோல இருக்கிறாள்
38. பணமும் பத்தாயிருக்க வேண்டும்
பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும்
முறையிலும் அத்தை மகளாக இருக்கவேண்டும்
39. அவள் சொல்தான் அவனுக்கு வேதவாக்கு
40. மகளே உன் சமர்த்து
41. அவள் சமர்த்து பானை சந்தியில் கவிழ்ந்தது
42. இந்திரனை சந்திரனை இலையாலே மறைப்பாள்
எமதருமராஜனைக் கையாலே மறைப்பாள்
43. கடைந்த மோரிலே வெண்ணெய் எடுப்பாள்
44. மயிர் உள்ள சீமாட்டி இடக்கையாலும் முடிப்பாள்
வலக்கையாலும் முடிப்பாள்
45. வாயிருந்தால் மகளே வாழ்ந்துவிட்டு வருவாள்

46. வாழைப்பழம் கொண்டு போனவளுக்கு நடுவாசல்
வாயைக் கொண்டு போனவளுக்கு நடுவீடு
47. விலைமோரில் வெண்ணெய் எடுத்து
தலைமகனுக்குக் கல்யாணம் பண்ணுவாள்
48. கல்வியில்லாச் செல்வமும்
கற்பில்லா அழகும் கடுகளவும் பிரகாசிக்காது
49. கற்பில்லா அழகு வாசனையில்லாத பூ
50. பத்தினி வாக்கும் உத்தமி வாக்கும் பலித்தே தீரும்
51. பத்தினிப் பெண்ணைப் பதற்றமாய்ப் பேசாதே
52. பத்தினி வாக்குக்குப் பழுது வராது
53. பதிவிரதையானால் தேவடியாள் வீட்டிலும் தங்கலாம்
54. கற்பு எனப்படுவது கணவன்சொல் தவறாமை
55. கூழைக் குடித்தாலும் குப்பை சுமந்தாலும்
குப்பைக் காட்டுப் பெண்கள் உருக்குமணி
56. மண்ணின்மீது நின்று பெண்ணை ஓரம் சொல்லாதே
57. பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும்
58. மலைச்சாரல் மழையும் மங்கையர் மனமும் திடீரென மாறும்
59. தாமரை இலை நீர்போல்
பெண் மனம் நிலையற்றது
60. சந்திரனின் பின்பக்கத்தைக் கண்டவர்களும் இல்லை
பெண்களின் உள்ளத்தை அறிந்தவர்களும் இல்லை
61. அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு?
62. சேலைமேற் சேலைகட்டும் தேவரம்பை ஆனாலும்
ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது
63. எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்
பெண்புத்தி பின் புத்தியே
64. தையல் சொல் கேளேல்
65. அரிவை மொழி கேட்டால்
அறிஞனும் அபத்தன் ஆவான்
66. பெண்புத்தி பின்புத்தி
67. பெண்சாதி பேச்சைக் கேட்டவன் பேய்போல் அலைவான்
68. இருமனது மங்கையோடு இணங்குகிறது அவலம்
69. எட்டாம்பேறு பெண் பிறந்தால்
எட்டிப்பார்த்த வீடு குட்டிச்சுவர்

70. அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது
71. ஆறாம் பேறு பெண்ணாய்ப் பிறந்தால்
ஆறான குடித்தனம் நீறாய் விடும்
72. பெண் என்று பிறந்தபோதே
புருஷனும் பிறந்திருப்பான்
73. நம்பமாட்டாதவன் பெண்சாதிக்கு
நாற்பதுபேர் மாப்பிள்ளை
74. மனையாளுக்கு உற்றது சொல்லாதே
மற்றவனை ஒருநாளும் நம்பாதே
75. மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பாதே
76. பேயை நம்பினாலும் பெண்ணை நம்பாதே
77. பொம்பளை சிரிச்சாப் போச்சு
புகையிலை விரிச்சாப் போச்சு
78. அழுகிற ஆணையும் சிரிக்கிற
பெண்ணையும் நம்பக்கூடாது
79. ஆண்பிள்ளை அழுதால் போச்சு
பெண்பிள்ளை சிரிச்சால் போச்சு
80. அரச மரத்தைச் சுற்றி அடிவயிற்றைத் தடவின மாதிரி
81. அழுதாலும் பிள்ளை அவன்தானே பெறவேண்டும்
82. சுக்கு கண்ட இடத்திலே பிள்ளை பெறுவாளோ?
83. தலைச்சனுக்குத் தாலாட்டும்
கணவன் செத்தால் அழுகையும் தானே வரும்
84. தழைத்த மரத்திற்கு நிழலுண்டு
பிள்ளைப் பெற்றவளுக்குப் பாலுண்டு
85. தாய் அறியாத சூல் இல்லை
86. தான் தின்னி பிள்ளை வளர்க்காள்
தவிடு தின்னி கோழி வளர்க்காள்
87. பிச்சையிட்டுக் கெட்டவனுமில்லை
பிள்ளைப் பெற்றுக் கெட்டவனுமில்லை
88. பிள்ளை அருமை பெற்றவளுக்குத் தான் தெரியும்
89. பிள்ளை பெற்ற வயிறு மண்ணெடுத்த கிணறு
90. பெண் குழந்தை வளர்த்தி பீர்க்கங்காய் வளர்த்தி
ஆண்குழந்தை வளர்த்தி அவரைக்காய் வளர்த்தி
91. முலைக்குத்து கவலைப் பிள்ளைக்குத் தெரியுமா?

92. ஆணை அடித்து வளர்
பெண்ணைப் போற்றி வளர்
93. ஆஸ்திக்கு ஒரு ஆணும்
ஆசைக்கொரு பொண்ணும்
94. கொண்டாலும் பெண்
கொடுத்தாலும் பெண்
95. பெண் என்றால் பேயும் இரங்கும்
96. பெண் பாவம் பொல்லாதது
97. பெண்ணைக் கொடுத்தாயோ
கண்ணைக் கொடுத்தாயோ
98. பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்
99. மண்மேல் நின்று பெண் ஓரம் சொல்லாதே
மண்ணின் மேலிருந்து பெண்ணைப் பழிக்காதே
100. மனிதன் ஆரம்பமாவதும் பெண்ணாலே
அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே
101. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
102. மண் விற்ற காசும் பெண் விற்ற காசும் மண்
103. வேண்டாத பெண்டாட்டி கைப்பட்டாலும் குற்றம்
கால்பட்டாலும் குற்றம்
104. நல்ல மாட்டிற்கு ஓரடி
நற்பெண்டிடுக்கு ஒரு சொல்
105. பெண்டு மிரண்டால் காடு கொள்ளாது
106. பாலைக் குடித்தாலும் பட்டைக் கட்டினாலும்
பட்டணத்துப் பெண்கள் பறக்கை (தட்டுவாணி)
107. தில்லைப் பெண் எல்லைவிட்டுப் போகாள்
108. மதுவும் மாதும் தீமையின் அஸ்திவாரம்
109. உயிரோடு ஒரு முத்தம் தராதவளா
செத்தாள் உடன்கட்டை ஏறுவாள்
110. நாலு ஆண்கள் கூடினால் ஒற்றுமை
நான்கு பெண்கள் கூடினால் வேற்றுமை
111. பெண்கள் இருந்த இடம் சண்டைகள் பெருத்த இடம்
112. பெண்சாதி கால் விலங்கு பிள்ளை களவாணி
113. பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை
114. பெண்சாதி கால்கட்டு பிள்ளை வாய்க்கட்டு
115. பெண்சாதியைத் தாய்வீட்டில் விட்டவனுக்கு ஒருசொட்டு

116. பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்
117. இராசாவும் பெண்ணும் கொடியும்
கிட்ட இருக்கிறதைத் தழுவிக் கொள்ளும்
118. திருடன் பெண்சாதி என்றைக்கும் கைம்பெண்
119. ஆம்பளை இரக்கப்பட்டால் கடனாளியாவான்
பொம்பளை இரக்கப்பட்டால் புள்ளைதாய்ச்சியாவாள்
120. கயவனிடம் காசு என்றால்
கட்டின பெண்டாட்டியையும் விற்றுவிடுவான்
121. முலை கொடுத்து வளர்த்தவள் மூதேவி
முந்தானை விரித்தவள் சீதேவி
122. அடுக்களைக்குப் பெண்ணும்
அம்பலத்துக்கு ஆணும் வேண்டும்
123. ஒரு பெண் வாழ மற்றவள் பொறுக்கமாட்டாள்
124. இரண்டு பெண்டாட்டிக்காரன் வீட்டில் நெருப்பேன்?
125. ஆணாய் பிறந்தால் அருமை
பெண்ணாய் பிறந்தால் எருமை
126. பெண்ணையும் புத்தகத்தையும் இரவல் கொடுக்காதே
127. ஆண் பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருப்பார்கள்
அக்காள் தங்கச்சி ஒத்திருக்கமாட்டார்கள்
128. இராசாவும் பெண்ணும் கொடியும்
கிட்ட இருக்கிறதைத் தழுவிக் கொள்ளும்
129. பட்டவளுக்குப் பதவி, படாதவளுக்கு நரகம்
130. மேனுமினுக்கியைக் கட்டினவனும் கெட்டான்
மேட்டுப்புஞ்சையை உழுதவனும் கெட்டான்
131. யாருமில்லாப் பெண்ணுக்கு
அண்டை வீட்டுக்காரன் மாப்பிள்ளை
132. யாருக்கும் அஞ்சாதவன் மனைவிக்கு அஞ்சுவான்
133. கொலையும் செய்வாள் பத்தினி

வாழாப்பெண்

134. வாழாக்குமரி மூளா நெருப்பு
135. வாழாப்பெண் தாயோடே
136. வாழாத பெண்ணை தாயார் கெடுத்தாள்

மலடி

137. சக்களத்திக்கு ஆண்பிள்ளை பெற்றால் பொறாமை
மலடிக்கு எவள் பிள்ளை பெற்றாலும் பொறாமை
138. மலடி அறிவாளா பிள்ளையின் அருமை
139. பூக்காத பெண்ணும் பூக்காத மரமும்
மண்ணுக்குப் பாரம்

விதவை

140. அச்சில்லாத தேர் ஓடுமா?
அகமுடையான் இல்லாதவள் பிள்ளைபெறவும் கூடுமா?
141. அமைச்சன் இல்லாத அரசும்
ஆமுடையான் இல்லாத ஆரிழையும் ஒன்றே
142. அறுத்தவள் ஆண் பிள்ளை பெற்றார்போல
143. ஆளன் இல்லாதவள் ஆற்று மணலுக்குச் சரி
144. ஆளன் இல்லாத பெண்ணுக்கு வாழ்வு இல்லை
145. ஆளன் இல்லாத மங்கைக்கு அழகு பாழ்
146. இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
147. உதறுகாலி முண்டை உதறிப்போட்டாள்
148. கைம்பெண்டாட்டி வளர்த்த கழிசடை
149. செத்தவன் பெண்ணைக் கட்டினாலும்
விட்டவன் பெண்ணைக் கட்டக்கூடாது
150. தாலியை அறுத்த வீட்டில் ஆளுக்கு ஆள் அதிகாரம்
151. தாலி அறுத்தவள் ஏன் இருக்கிறாள்
தாரந் தப்பினவனுக்குப் பொங்கிப் போட
152. துணிந்த முண்டையைத் தொடையில் சுட்டால்
அதுவும் ஓர் ஈக்கடி என்றாளாம்
153. நாழிப் பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது
154. நூல் இழந்த நங்கை போல
155. முகதாட்சண்யத்துக்கு முண்டைச்சி கர்ப்பிணி
ஆனதுபோல
156. முண்டைச்சி சம்பந்தக்காரன் முன்னுக்கு வருவானா?
157. வெட்கங்கெட்டு வெளிப்பட்ட முண்டைக்கு முக்காடு
எதற்கு?

158. ஆருமில்லாத பெண்ணுக்கு
அண்டை வீட்டுக்காரன் மாப்பிள்ளை
159. கொழு கொம்பில்லாத கொடி போலானாள்

தாசி பற்றிய பழமொழிகள்

1. ஊருக்கொரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்
2. உலகம் அறிந்த தாசிக்கு வெட்கமேது?
3. காசு கொடுத்தால் வேசி வருவாள்
கலம் நெல் கொடுத்தால் அவள் ஆத்தாளும் வருவாள்
4. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
தாசியும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்
5. கூத்தியார் பிள்ளைக்குத் தகப்பன் யார்?
6. கூத்தியார் ஆத்தாள் செத்தால் கொட்டு முழங்கும்
கூத்தியார் செத்தால் ஒன்றுமில்லை
7. ஆட மாட்டாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்
8. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இருக்கா?
9. உதட்டுக்குப் பால்மாறின தாசியும்
மேட்டுக்குப் பால் மாறின கணக்கனும்
10. எழுத்துக்குப் பால்மாறின கணக்கனும்
படுக்கைக்குப் பால்மாறின தாசியும் வருத்தமடைவார்கள்
11. கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால்
தேவடியாள் வீட்டில் சர்க்கரை வழங்குவர்
12. காசைக் கொடுத்து நோயை விலைக்கு வாங்காதே
13. இரண்டு சாஸ்திரிகள்
இரண்டு ஜோசியர்கள்
இரண்டு புலவர்கள்
இரண்டு வைத்தியர்கள்
இரண்டு நாய்கள்
இரண்டு தாசிகள் சேர்ந்து போகமாட்டார்கள்
14. கைகண்ட வேசிக்கு கண்ணீர் குறைச்சலா?
15. கோயில் தாசிக்குச் சதிர் ஆடக் கற்றுக்
கொடுத்தது போல
16. சிறைச்சாலைக்கு அழகில்லை
தேவடியாளுக்கு முறையில்லை

17. தாசிக்குப் பாளையும் கொடுத்தால்
தகப்பனும் போகலாம் பிள்ளையும் போகலாம்
18. திருச்சினாப்பள்ளி தேவடியாளுக்கு இருத்தினாற்போல
கொண்டையாம்
19. தெற்கு விழுந்த கருக்கலும்
தேவடியாளிடம் போன காசும் திரும்பா
20. தென்னை மரத்தின் நிழலும்
தேவடியாள் உறவும் ஒன்று
21. தேளுக்குக் கொடுக்கில் விஷம்
தேவடியாளுக்கு உடம்பெல்லாம் விஷம்
துஷ்டனுக்குச் சர்வாங்கமும் விஷம்
22. தேவடியாள் குடியில் குமரிப்பெண்ணை
ஈடுவைக்கலாமா?
23. தேவடியாள் செத்தால் பிணம்
தேவடியாள் தாய் செத்தால் மணம்
24. தேவடியாளுக்குத் தினமும் ஒரு கணவன்
25. தேவடியாள் வீட்டில் ஆண் குழந்தை பிறந்தாற்போல
26. தேவடியாள் வீட்டில் பெண் குழந்தை பிறந்தாற்போல
27. நாய்க்கு நாய் பகை
கோழிக்கு கோழி பகை
வைத்தியனுக்கு வைத்தியன் பகை
தாசிக்குத் தாசி பகை
28. பணம் கண்ட தேவடியாள் பாயிலே படுக்கமாட்டாள்
29. பட்டப் பகலிலே போகிற தேவடியாளுக்கு
தட்டுக் கூடை மறைப்பா?
30. மிருகம் முறை பார்க்கிறதா
வேசி முறை பார்க்க
31. வாலிபத்தில் தேடாத தேவடியாள்
வயது சென்றபின் தேடப்போகிறாளா?
32. விலை மகளுக்கு அழகு மேனி மினுக்குதல்
33. வெட்கங்கெட்ட வேசியும் வெட்கங்கெட்ட சம்சாரியும்
உதவார்
34. வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசிக்கு மஞ்சளும் போல
35. வேசிக்கு ஆசை பணத்து மேலே
36. வேசி உறவு காசிலே

37. வேசி காசு பறிப்பாள்
38. வேசிக்குக் காசுமேல் ஆசை
விளையாட்டுப் பிள்ளைக்கு மண்மேலே ஆசை
39. வேசி கூச்சப்பட்டால் வெண்காசு கிடைக்குமா?
40. வேசி தளுக்குப் பண்ணிக் கெட்டாள்
வெள்ளாளன் மினுக்குப் பண்ணிக் கெட்டாள்
41. வேசியைப் பெண்டாக வைத்துக் கொண்டால்
விளக்குதான் பிடிக்க வேண்டும்
42. வேசியைப் பெண்டுக்கு வைத்துக்கொண்டால்
வேறே வினை தேவையில்லை
43. வேசிமேல் ஆசைப்படுவது வெள்ளெலும்பை நாய்
கௌவியதற்கு ஒப்பம்
44. வேசிக்கு விழிநீர் அரிதோ?
45. வேசி வீடு போவதும் வெந்து சாம்பலாவதும் ஒன்றுதான்
46. பேத்திக்கு இட்டாலும் கூத்திக்கு இடாதே
47. அரைக்கீரைப் புழுவைத் தின்னாதவனும்
விலைமாது கையில் சென்று சோறு உண்ணாதவனும்
அகிலத்தில் இல்லை
48. கைகண்ட வேசிக்குக் கண்ணீர் குறைச்சலா?
49. செட்டுக்கு ஒரு தட்டு, தேவடியாளுக்கு ஒரு மெட்டு
50. அவிசாரிக்கு ஆணையில்லை
திருடிக்குத் தெய்வமில்லை
51. அவிசாரியாகப் போக ஆசை இருக்கிறது
அடிப்பானென்றும் பயமாயிருக்கிறது
52. ஆயிரமானாலும் அவிசாரி சம்சாரி ஆகமாட்டாள்
53. ஆருமில்லாப் பெண்ணுக்கு அண்டைவீட்டுக்காரன்
மாப்பிள்ளை
54. ஏழு அறைகட்டி அதில் வைத்தாலும்
ஒரு அறையில் சோரம் போவாள்
55. கள்ள புருஷனை நம்பி கணவனைக் கைவிடலாமா?
56. காசில்லாதவனை வேசியும் விரும்பாள்
57. கூத்திக்கு இட்டு குரங்கானான்
வேசிக்கு இட்டு விறகானான்
58. தாலி அறுத்தவளுக்கு மருத்துவச்சி ஏன்?

59. தேளுக்குக் கொடுக்கில் விஷம்
தேவடியாளுக்கு உடம்பெல்லாம் விஷம்
60. பத்து ரூபாய்க்கு மிஞ்சிய பதிவிரதை இல்லை
61. யாரும் அகப்படாத தோஷம் பதிவிரதை
62. வேசி ஆடினால் காசு
வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு
63. வேடக்காரனுக்கும் ஆடக்காரனுக்கும் பகை
வேசிக்கும் தாசிக்கும் பகை
64. அப்பனோட போகிறவளுக்கு அண்ணன் ஏது?
தம்பி ஏது?
65. இட வசதியில்லாத பதிவிரதை
66. அவிசாரியாக போக ஆசை இருக்கிறது
அடிப்பான் என்ற பயமும் உள்ளது
67. இத்தனை பெரியவன் கையைப் பிடித்தால்
எப்படி மாட்டேன் என்பது
68. சிரித்தாயோ சேலை அவிழ்த்தாயோ
69. நாணமில்லாத சிறுக்கிக்கு
நாலு திக்கும் வாசல்படி
70. தாசிக்குப் பணம் கொடுத்தால்
மாமனும் போகலாம் மருமகனும் போகலாம்
71. நாயக்காரன் பெண்டாட்டி நாலு பேருக்கு வைப்பாட்டி
72. நீட்டு வெற்றிலை காவியேறுமா?
கூத்தியார் பிள்ளை கொள்ளி வைக்குமா?
73. வாதுக்கு ஆடின தேவடியாள்
வயது சென்றால் கழுதை மேய்ப்பாள்
74. அழிந்தவள் யாரோடு போனால் என்ன?
75. காசு கொடுத்தால் வேசி வருவாள்
கலம் நெல் கொடுத்தால் அவள் அக்காளும்
ஆத்தாளும் வருவாள்
76. ஊரைத் தேவடியாள் கெடுப்பாள்
சீரை மூதேவி கெடுப்பாள்
77. ஓடிப்போனவளைத் தேடிப் போகாதே
78. வேசிக்கு விடியுமட்டும் உறவு
79. குன்றக்குடி தேவடியாளுக்கு நின்றார்போல பயணம்

80. விபசாரி என்று வீதி வழியே போனாலும்
கள்ளி என்று சொல்லி கடைத்தெருவே போகாதே
81. பணக்கார அவிசாரி பந்தியிலே
அஃதிலா அவிசாரி சந்தியிலே
82. துணிந்தவளுக்கு வெட்கமில்லை
அழுதவளுக்குத் துக்கமில்லை
83. திருடி தேர்மீது வருகிறாள்
அவிசாரி யானைமீது வருகிறாள்
84. தேவடியாள் வீட்டுத் தாழ்ப்பாள்
எப்போதும் திறந்திருக்கும்
85. அவிசாரிக்கு வாய் பெரிது
ஐந்தாறு அரிசிக்குக் கொதி பெரிது
86. அவிசாரிக்கும் ஆற்றில் விழுகிறவளுக்கும்
காவல் போட முடியுமா?
87. அங்கத்தைக் காட்டித் தங்கத்தைச் சேர்
88. ஊரிலேயும் போவாள் சொன்னால் அழுவாள்
89. கதைக்குக் கால் இல்லை
கண்ட புருஷனுக்கு முறையில்லை
90. கை போடாத புருஷனில்லை
விரல் போடாத பெண் இல்லை
91. கொடியும் பெண்டிரும் கொண்டதை விடார்
92. பிடித்தவர்க்கெல்லாம் பெண்டாவாள்
93. முகம் சந்திர பிம்பம்
அகம் பாம்பின் விஷம்
94. மை விழியார் மலர விழித்தால்
மண்டல பத்து ராஜாக்களும் பெண்டாள வருவார்கள்
95. வெய்யில் விதையும் சரி வைப்பாட்டி பிள்ளையும் சரி
96. நாணமில்லாத வாத்தி நாலு திக்குக்கும் கூத்தி
97. வெட்கமுள்ள வேசியும்
வெட்கங்கெட்ட குலப்பெண்ணும் விளங்கார்

சாதி (Caste), *இனஅவதூறு* (Ethics slur) *பற்றிய பழமொழிகள்*

1. இடைச்சி சம்பத்தும்
சாணாத்தி வாழ்வும் சரி

2. இடைச்சிக்கு எட்டுத்தாலி
பறைச்சிக்கு பத்துதாலி
3. ஆசாரி பெண்ணுக்கு அழகா பார்க்கிறது?
4. அலுத்துச் சலித்து அம்படையன் வீட்டுக்குப் போனா
இழுத்துப் பிடித்துத் தலையைச் சிரைத்தானாம்
5. ஐயங்காரைக் கெடுத்தவள் ஐயங்காரிச்சி
தாதச்சியைக் கெடுத்தவன் தாதன்
6. கடல் தண்ணி வற்றினாலும் பள்ளிச்சி தாலி வற்றாது
7. கிட்டிற்று முட்டிற்று வடுகச்சி கல்யாணம்
8. குசத்தி நாக்கைக் கூழ் கூழாய் அ[illegible]லும்
குடம் இரண்டு காசு என்பாள்
9. குயவன் வீட்டில் பானை இருந்தால் கேட்க மாட்டார்களா
பெண் இருந்தால் கேட்க மாட்டார்களா?
10. சக்கிலிப் பெண்ணும் சாமைக்கதிரும்
பக்குவத்தில் பார்த்தால் அழகு
11. சாமைப் பயிரும் சக்கிலியப் பெண்ணும் சமைந்தால் தெரியும்
12. செட்டியை நீலி தொடர்ந்தாற்போல
13 தச்சன் பெண்சாதி தரையிலே
கொல்லன் பெண்சாதி கொம்பிலே
14. துலுக்கச்சிக்கு எதற்கு உருக்குமணி?
15. பள்ளிக்கு ஓர் இடம் எச்சில்
பார்ப்பனுக்குக் கண்ட இடம் எச்சில்
16. பறைச்சி முலை அழகு
பாப்பாத்தி தொடை அழகு
செட்டிச்சி குறி அழகு
இடைச்சி இடை அழகு
17. மறத்தி தாலியும் பள்ளித் தாலியும் வற்றாது
18. வண்ணானுக்கு வண்ணாத்தி மேலே ஆசை
வண்ணாத்திக்கு கழுதை மேலே ஆசை
19. வற்றிற்றாம் கள்
வறண்டாளாம் சாணாத்தி
20. ஊறிற்றாம் கள்
உதித்தாளாம் சாணாத்தி
21. ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போவானோ
22. சோழியன் குடுமி சும்மா ஆடாது

23. பறையனை நம்பலாம்
பார்ப்பானை நம்பக்கூடாது
24. ஆத்தருகே போனாலும்
அகம்படியான் அருகே போகாதே
25. ஊருக்கு ஒரு வெள்ளாளனும்
காட்டுக்கு ஒரு வெள்ளாடும் போதும்
26. எட்டுப் பிள்ளை கொடுத்தாலும்
செட்டிப் பிள்ளை கிடைக்காது
27. கடையன் உறவு கால் உறவு
28. காயில் கெட்டது கத்தரிக்காய்
சாதியில் கெட்டவன் சக்கிலியன்
29. கொலையாளியை நம்பினாலும்
மலையாளியை நம்பாதே
30. சாணான் வீட்டு உறவு சட்டிக்குள்ளும் பெட்டிக்குள்ளும்
31. தட்டினால் தட்டான்
தட்டாவிட்டால் கெட்டான்
32. திணிக்குத் தக்க லத்தி
சாதிக்குத் தக்க புத்தி
33. துலுக்கன் சொத்து துண்டத்துக்கு
பிராமணன் சொத்து பிண்டத்துக்கு
மறவன் சொத்து தண்டத்துக்கு
34. பனைமரத்து நிழலும் சரி
மறவன் உறவும் சரி
35. ஆசாரி பழுகிக் கெட்டான்
ஆசாரி அடிச்சுக் கெட்டான்
36. மறவன் புத்தி தலை மறையும் மட்டும்
37. முதலியார் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு
38. வண்ணானுக்கு உழைத்த கழுதையும்
வாணியனுக்கு உழைத்த காளையும் சரி
39. வளவிக்காரனுக்குப் பெண் கொடுக்காதே
40. வேலியருகே குடியிருந்தாலும்
வெள்ளாளன் அருகே குடியிருக்காதே
41. கடல் தண்ணி வற்றினாலும் பள்ளச்சி தாலி வற்றாது
42. செட்டி பணத்தைக் குறைத்தான்
சேணியன் நூலைக் குறைத்தான்

43. எல்லாருஞ் செட்டின்னா எருது ஓட்டறது யாரு?
44. செட்டி நட்டம் ஊர்மேலே
45. கெட்டாலும் செட்டி செட்டியே
கிழிந்தாலும் பட்டு பட்டே
46. எண்ணிச் செய்கிறவன் செட்டி
எண்ணாமல் செய்கிறவன் மட்டி
47. செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை
48. ஆதாயமற்ற செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானா?
49. செட்டியாருக்கு ஒரு காலம்
சேவகனுக்கு ஒரு காலம்
50. செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
51. சாணனுக்கு ஏறுகையில் ஒரு புத்தி
இறங்குகையில் ஒரு புத்தி
52. செட்டி கூடிக் கெட்டான்
சேணியன் பிரிந்து கெட்டான்
53. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிர்
54. கம்மாளன் பணம் கரியும் பொரியுமாகப் போகும்
55. இடையன் புத்தி பிடறியிலே
56. பனைமரத்து நிழலும் சரி
பறவன் உறவும் சரி (மீனவன்)
57. பால் நக்காத பூனையும்
தானம் வாங்காத பிராமணனும் உண்டோ?
58. பத்து விதத்திலும் பறையனை நம்பலாம்
பார்ப்பானை நம்பக்கூடாது
59. பறைப்புத்தி அரைப்புத்தி
60. முட்டாள் துலுக்கனும் முரட்டு நாயக்கனும்
பட்டாளத்துக்கு இலாயக்கு
61. பட்டால் தெரியும் பாப்பானுக்கு
கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு
62. கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை
குறவனுக்கு முறையுமில்லை
63. கண்டால் காமாட்சி நாயக்கர்
காணாவிட்டால் பூனை தின்னி
64. எதிர்த்த வீடு ஏகாலி வீடு
அடுத்த வீடு அம்பட்டக் குடி

65. கள்ளர் மறவர் கனத்ததோர் அகம்படியார்
மெல்லமெல்ல வந்து வெள்ளாளர் ஆனார்
66. ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?
67. உப்பு கண்டம் பறி கொடுத்த பாப்பாத்தி போல
68. செட்டி முறுக்கா சரக்கு முறுக்கா?
69. இடையன் தோளில் ஆட்டைப்போட்டு தேடுகிற மாதிரி
70. இடைச்சி என் மோர் புளிக்கும் என்பாளா?
71. அடுத்துக் கெடுப்பான் கபடன்
கொடுத்துக் கெடுப்பான் மார்வாடி
தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை
72. அவன் சாதிக்கு என்ன புத்தியோ
குலத்துக்கு எந்த ஆசாரமோ அதுவே வரும்
73. ஆறுகெட நாணல் இடு
ஊரு கெட நூலை இடு
காடு கெட ஆடு விடு
மூன்றுங்கெட முதலியை விடு
74. எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது
பறையன் கொழுத்தால் பாயில் இரான்
75. கம்மாளன் துணி வாங்கினால்
கால்மயிர் தெரிய வாங்குவான்
அதை சலவைக்குப் போட்டாலும் வேகாது
76. கம்மாளம் பல்லக்கு ஏறினால்
கண்டவர்க்கெல்லாம் இறங்கவேண்டும்
77. கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால்
விலைமகள் தெருவில் சர்க்கரை வழங்குவர்
78. கைக்கோளனுக்குக் காற்புண்ணும்
நாய்க்குத் தலைப்புண்ணும் ஆகாது
79. தட்டானும் செட்டியும் ஒன்றானால்
தங்கம் கொடுத்தவன் வாயில் மண்ணு
80. தட்டான் தாய்பொன்னிலும் மாப்பொன் திருடுவான்
81. தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை
82. நெல்லு வகையை எண்ணினாலும்
பள்ளு வகையை எண்ண முடியாது
83. கண்டால் முறை சொல்வது
காணாவிட்டால் பேர் சொல்வது

84. கண்டால் ரங்கசாமி
காணாவிட்டால் வடுகப்பயல்
85. வயிற்று வலியை நம்பினாலும்
வடுகப்பயலை நம்பாதே
86. பட்டால் அறிவான் சண்டாளன்
மழைபெய்தால் அறிவான் வேளாளன்
87. பள்ளி கையில் பணமிருந்தால்
பாதி ராத்திரியில் பாடுவாள்
88. பறையன் பொங்கலிட்டால் பகவானுக்கு ஏறாதோ?
89. பார்ப்பான் கறுப்பும் பறையன் சிவப்பும் ஆகாது
90. புதிய வண்ணானையும் பழைய அம்பட்டனையும்
தேடவேண்டும்
91. புலையனுக்குப் பூமுடி பொறுக்குமா?
92. புலையனுக்கு வாக்குச் சுத்தமும் ஆணையும் இல்லை
93. வடுகனையும் வயிற்று வலியையும் நம்பக்கூடாது
94. வாணியன் ஆசை கோணியும் கொள்ளாது
95. வெளுப்பானுக்கு வெளுப்பான் ஜாதி வண்ணான்
96. வெள்ளாளன் செய்யாத வேளாண்மை வேளாண்மையல்ல
97. வெள்ளாளன் மினுக்குப் பண்ணிக் கெட்டான்
வேசி தளுக்குப் பண்ணிக் கெட்டாள்
98. நாவிதரில் பழையவன் வண்ணாரில் புதியவன்
99. பஞ்ச காலத்தில் குடியானவனிடம் போ
செழிப்பில் சேணியனிடம் போ
100. அரை மிளகுக்கு ஆற்றைக் கட்டி இறைத்தான் செட்டி
101. ஆசாரி வீட்டுக்கு அடுப்பு இரண்டு
102. ஆனை ஏறினால் மாவுத்தன்
குதிரை ஏறினால் ராவுத்தன்
103. இடைச்சிக்கு எட்டு தாலி
பறைச்சிக்கு பத்து தாலி
104. உண்டு கெட்டான் பார்ப்பான்
உடுத்திக் கெட்டான் துலுக்கன்
105. உப்புக்குக் கேடு சக்கிலியன் உறவு
106. ஊர்ச் சக்கிலி எல்லாம் சேர்ந்து தோலைக் கெடுத்தானாம்
107. ஏற ஆசைப்பட்டால் சாணானாய்ப் பிறக்கவேண்டும்

108. கஞ்சனுக்கு காசு பெரிது
கம்மாளனுக்கு மானம் பெரிது
109. கடல் தண்ணி வற்றினாலும் பள்ளச்சி தாலி வற்றாது
110. வேல் மரத்துக்கு நிழலில்லை
வெள்ளாளனுக்கு உறவில்லை
111. வெள்ளாளன் வைத்துக் கெட்டான்
துலுக்கன் உடுத்திக் கெட்டான்
112. இடையன் கல்யாணம் விடியும்போது
113. பறையனைப் போல உழைத்து
பார்ப்பனைப் போல சாப்பிட வேண்டும்
114. கோமுட்டிப் புத்திக்கு மோசமில்லை
115. சாணான் புத்தி சாணுக்குள்ளே
116. சாதிக்குத் தகுந்த புத்தி
117. செக்கானிடம் சிக்கிய மாடும்
பார்ப்பானிடம் சிக்கிய ஆளும் உருப்படமாட்டார்கள்
118. செட்டிக்கு உறக்கமுண்டு
வட்டிக்கு உறக்கமில்லை
119. செட்டி சுற்றாமல் கெட்டான்
தட்டான் தட்டாமல் கெட்டான்
120. செட்டி பிள்ளை கெட்டி
121. செட்டி வீட்டு நாயும் கணக்குப் பார்த்து சடிக்கும்
122. செல்லும் செல்லாததற்குச் செட்டியாரைக் கேள்
123. சேணியன் நூலை விற்பான்
சௌராஷ்டிரன் சேலை விற்பான்
124. தட்டானும் செட்டியும் கண்
சட்டியும் பானையும் மண்
125. தேரோடு போனாலும் தெலுங்கனோடு போகாதே
126. பச்சை நெல்லுக்கு பறையனிடத்தில் சேவிக்கலாம்
127. பசித்த பறையனும் குளித்த சைவனும் சாப்பிடாமல் இரார்
128. பசு சாதும் பார்ப்பான் ஏழையும் உண்டா?
129. பசுவிலே சாதுவையும் பார்ப்பானிலே ஏழையையும்
நம்பக்கூடாது
130. பரிகாரி உறவு தெருவாசல் மட்டும்
131. பள்ளனுக்குப் பல் தேய்த்தால் பசிக்கும்
பார்ப்பானுக்குக் குளித்தால் பசிக்கும்

132. பள்ளி முத்தினால் படையாட்சி
133. பள்ளுப் பறை பதினெட்டு சாதி
134. பறைப்புத்தி அரைப்புத்தி
135. பார்ப்பான் வீட்டு வாழையும்
குடியானவன் வீட்டுக்கோழியும் உருப்படாது
136. பார்ப்பானுக்கு பல்லிலே விஷம்
137. பார்ப்புக்கு இடமும் பள்ளுக்கும் வலமும் கொடுக்காதே
138. பிராமணனுக்கு இடம் கொடாதே
139. மலை வாயிலே சூரியன்
மறவன் வாயிலே சோறு
140. மறத்தி தாலியும் பள்ளி தாலியும் வற்றாத தாலி
141. வெள்ளாளன் கால் வைத்த இடமும்
வெள்ளாடு கால் வைத்த இடமும் உருப்படாது
142. வெள்ளி எதிரில் போனாலும்
வெள்ளாளன் எதிரில் போகக்கூடாது
143. கவுண்டனுக்கு எருதுபோயிற்று என்று வருத்தம்
சக்கிலியனுக்கு கொழுப்பில்லை என்று வருத்தம்
144. கொங்கனுக்கு முறையுமில்லை
கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை
145. சக்கிலியனை நம்பினாலும் ஒக்கலியனை நம்பாதே
146. செட்டி கெட்டாலும் எட்டு நாளில் பிழைப்பான்
147. செட்டி நட்டம் குடியானவன் தலையிலே
148. பசுவுக்கும் பார்ப்பானுக்கும் இளக்காரம் காட்டாக்கூடாது
149. வேளாளன் புத்தி வேலி வரை
வடுகன் புத்தி வாயில்படி வரை
150. உடுத்திக் கெட்டான் வெள்ளைக்காரன்
உண்டு கெட்டான் சோணகன்
புதைத்துக் கெட்டான் தமிழன்
151. வயிற்றிலிருக்கும் பிள்ளையை நம்பினாலும்
வல்லத்தானை நம்பக்கூடாது.
152. செத்தவன் பின்னே போகலாம்
நத்தமான் பின்னே போகக்கூடாது
153. மாடு ஒரு தனமும் இல்லை
மலையாளி ஒரு உறவும் இல்லை

154. அண்டை வீட்டுப் பார்ப்பான்
சண்டை மூட்டிப் பார்ப்பான்
155. பள்ளி பாக்கு தின்றால்
பத்து விரலும் சுண்ணாம்பு
156. எழுபது சென்றாலும் பறை ஏவினால்தான் செய்யும்
157. உண்டு கெட்டான் பார்ப்பான்
உடுத்திக் கெட்டான் துலுக்கன்
இரண்டுங் கெட்டான் குடியானவன்

உணவு பற்றிய பழமொழிகள்

1. கோடி வித்தையும் கூழுக்குத்தான்
2. அகப்பை குறைந்தால் கொழுப்பெல்லாம் அடங்கும்
3. அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒன்று குறையா?
4. இந்த கூழுக்கா இத்தனைத் திருநாமம்
5. இறுகினால் களி, இளகினால் கூழ்
6. கஞ்சி கண்ட இடம் கைலாசம்
சோறு கண்ட இடம் சொர்க்கம்
7. கஞ்சி வார்க்க ஆள் இல்லாவிட்டாலும்
கச்சை கட்ட ஆள் இருக்கிறது
8. பண்டாரம் பிண்டத்துக்கு அழுகிறான்
லிங்கம் பாற்சோற்றுக்கு அழுகிறது
9. பருப்பிலே நெய் விட்டது போல
10. நீர்ச்சோறு தின்று நிழலில் இருந்தால்
மலடிக்கு மசக்கை வரும்
11. பசித்தவன் தின்னாததுமில்லை
பகைத்தவன் சொல்லாததுமில்லை
12. பசித்துப் புசி
13. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்
14. கஞ்சி குடித்த மலையாளி
சோற்றைக் கண்டால் விடுவானா?
15. குடிப்பது கூழ், ஏறுவது பல்லாக்கு
16. உண்ட உடம்பிற்கு உறுதி
உழுத நிலத்தில் நெல்லு
17. மாதா ஊட்டாத சோற்றை
மாங்காய் ஊட்டும்

18. மகாராசன் கல்யாணத்திலே நீராகாரத்திற்கு வழியில்லை
19. மாவைத் தின்றால் அப்பமில்லை
20. குலைக்கிற நாய்க்குக் கொழுக்கட்டை போட்டாற்போல
21. ஒட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் போதும்
22. கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை
கோயிலாண்டிக்கு முறையுமில்லை
23. நாயும் களிச்சட்டியும் போல
24. மாவுக்குத் தக்க பனியாரம்
25. ஆனைக்குக் குறடும் அன்னத்துக்கு மிளகாயும் வேண்டும்
26. சாப்பிடும் கலம் பொன்னானாலும்
ஊறுகாய் கேளாமல் கடியுமா?
27. வெந்தால் தெரியும் வெங்காய மணப்பு
28. அஞ்சும் மூன்றும் உண்டானால்
அறியாச் சிறுக்கியும் கறியாக்குவாள்
29. பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரை தான்
30. ஏகாதசிக்கு மாவு இடித்தாற்போல
31. கோட்டுச் சம்பா ஆக்கி வைத்தால்
போட்டுச் சாப்பிட வருவாள்
32. கடைசிச் சோற்றுக்கு மோரும்
கால்மாட்டிற்குப் பாயும் வேண்டும்
33. மறுசாதம் போட்டுக்கொள்ளாதவன் மாட்டுப் பிறப்பு
34. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
35. கட்டிக் கொடுத்த சோறும்
கற்றுக் கொடுத்த சொல்லும் எதுவரைக்கும்?
36. அரண்மனைக் காத்தவனும்
அடுப்பங்கரைக் காத்தவனும் வீண் போனதில்லை
37. அரிசி ஆழக்கானாலும் அடுப்புகட்டி மூன்று வேண்டும்
38. உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணலாமா?
39. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
40. பொன்னாங் கண்ணிக்குப் புளிவிட்டு ஆக்கினால்
உண்ணாப் பொண்ணும் ஒரு உழக்கு உண்ணும்
41. கூழ் என்றாலும் குடிக்கிறவன் பிழைப்பான்
42. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
43. உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கழகு

44. கூழானாலும் குளித்துக்குடி
    கந்தையானாலும் கசக்கிக் கட்டு
45. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
46. உப்புப் போட்டு சாப்பிட்டால் சுரணை இருக்கும்
47. பசி ருசி அறியாது
    நித்திரை சுகமறியாது
48. பசிக்குக் கறி வேண்டாம்
    தூக்கத்திற்குப் பாய் வேண்டாம்
49. சித்திரை மாவடு சிறக்க ருசிக்கும்
50. சத்திரத்து சாப்பாட்டுக்குத்
    தாத்தைய்யங்கார் உத்திரவா?
51. காடிக் கஞ்சியானாலும் மூடிக்குடி
52. தாயை மறக்கடிக்கும் தயிரும் பழைய சோறும்
53. வெண்டைக்கு விதைதான் ருசி
    கத்தரிக்காய்க்கு காம்புதான் ருசி.
54. உண்டால் தின்றால் உணவு
    கொண்டால் கொடுத்தால் உறவு
55. ஊரெல்லாம் உறவு
    ஆனால் ஒருவாய் சோறில்லை
56. மொட்டைச் சோற்றை மோர் மறைக்கும்
    குறுமட்டைப் பெண்டாட்டியைப் பிள்ளை மறைக்கும்

ஆடை, அணிகலன்கள் பற்றிய பழமொழிகள்

1. ஆள்பாதி ஆடைபாதி
2. ஆடையில்லா மனிதன் அரை மனிதன்
3. ஆடை உடையான் அவைக்கஞ்சான்
4. பருத்திச் செடியும் பாலும் உள்ளவனுக்குப் பஞ்சமில்லை
5. பருத்தி புடவையாய்க் காய்த்ததுபோல
6. பருத்திக்கு உழுமுன்னே தம்பிக்கு எட்டுமுழம்
7. பட்டு குலைந்தால் பொட்டு
8. பட்டு நூலுக்குள் சிக்கெல்லாம் இருக்கிறது
9. பட்டு நூல் தலை கெட்டாற்போல்
10. பட்டுப்புடவை இரவல் கொடுத்ததுமல்லாமல்
    பாயும் தூக்கிக்கொண்டு அலையவேண்டியுள்ளது

11. பட்டுப்புடவை இரவல் கொடுத்து
மனை எடுத்துக்கொண்டு திரிவதுபோல
12. பட்டுப்புடவையில் ஊசித்தட்டுருவிப் பாய்ந்தாற்போல
13. பட்டு மக்கினாலும் பெட்டியிலே
14. பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும்
காற்காசுக் கந்தை ஓடி உலாவும்
15. பட்டும் பாழ் நட்டும் சாலி
16. கம்பளி விற்ற பணத்திற்கு மயிர் முளைத்திருக்கிறதா?
17. கம்பளி மூட்டையொன்று கரடி மூட்டையை அவிழ்த்தானாம்
18. கம்பளியில் ஒட்டின கூழைப்போல
19. கம்பளியில் சோற்றைப் போட்டு
மயிர் மயிர் என்கிறதா?
20. நெய்கிறவனுக்கு ஏன் குரங்குக்குட்டி
21. நெய்கிறதை விட்டு நினைத்துக்கொண்டான் கைக்கோளன்
22. கைக்கோளனுக்குக் காற்புண்ணும்
நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறாது
23. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
24. உடையவன் இல்லாச்சேலை ஒருமுழம் கட்டை
25. ஈரச்சீலையைப் போட்டு கழுத்தறுக்கிறான்
26. கிழிந்த சீலை காசுக்கு இரண்டு
27. கையால் ஆகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு
ஆசைப்பட்டாளாம்
28. சீலை இல்லையென்று சின்னாயி வீட்டுக்குப் போனாளாம்
அவள் ஈச்சம் பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்
29. முந்தானை இருக்கிறது நாலு வீடு இருக்கிறது
30. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
கூழானாலும் குளித்துக்குடி
31. சுவருக்கு மண் இட்டுப்பார்
பெண்ணுக்கு பொன் இட்டுப்பார்
32. பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்
33. பெண்ணைத் திருத்தும் பொன்
34. பொன்னும் பத்தாய் இருக்கவேணும்
பொண்ணும் முத்தாய் இருக்கவேணும்
35. உடுத்திக் கெட்டான் துலுக்கன்
உண்டு கெட்டான் பார்ப்பன்

36. நிர்வாண தேசத்தில் ஆடை கட்டினவன் பைத்தியக்காரன்
37. நிர்வாண நாட்டில் உடைகள் கேவலமானவை
38. உண்ணாமல் ஒன்பது வீடு போகலாம்
உடுக்காமல் ஒரு வீடும் போகலாகாது
39. உறவு உண்ணாமல் கெட்டது
உடம்பு உடுக்காமல் கெட்டது
40. ஆடை வாய்க்கவும் ஆபரணம் வாய்க்கவும் அதிர்ஷ்டம் வேண்டும்

நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் பற்றிய பழமொழிகள்

1. மாலையுடன் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது
2. அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கொடுக்க மாட்டார்கள்
3. ஆறாவது பெண் பிறந்தால் தரித்திரம்
4. எட்டாவது பெண் எட்டிப்பார்த்த வீடு குட்டிச்சுவர்
5. ஆறாவது பிள்ளை யானை கட்டி வாழ்வான்
6. இறங்கும் படர்தாமரை
ஏறும் தேமல்
கூடும் புருவம்
குடியைக் கெடுக்கும்
7. கணுக்கால் பெருத்தால் கணவனுக்கு ஆகாது
8. காட்டுக்காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்
9. கருடன் இடமானால் எவர் கைப்பொருளும் தன்வசமாகும்
10. காகம் வலமானால் ஆயுள் விருத்தியாகும்
11. காடை கத்தினால் பாடை கட்டவரும்
12. செம்போத்து வலமானால் சம்பத்து உண்டு
13. நாரையும் விறகுவெட்டியும் வலமானால் நல்ல லாபம்
14. செத்தார்க்குச் சீரிட்டு அழு
15. கருமாந்திரம் கல்லெடுப்பு எடுக்க
16. வாய்க்கரிசிக்கு வழியில்லை
17. ஆணையும் வேண்டாம்
சத்தியமும் வேண்டாம்
துணியைப் போட்டுத் தாண்டினால் போதும்
18. திருநீறு இல்லா நெற்றி பாழ்
19. ஆரக்கழுத்தி அரண்மனைக்கு ஆகாது

20. கொள்ளிக்கு எதிரே போனாலும்
வெள்ளிக்கு எதிரே போகக்கூடாது
21. காலனுக்கு எதிரே போனாலும்
சூலத்துக்கு எதிரே போகக்கூடாது
22. இளமைப் பழக்கம் சுடுகாடு மட்டும்
23. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
24. காடை இடமானால் நாட்டை ஆளலாம்
25. திங்கள் பயணம் திரும்பாப் பயணம்
26. சுருட்டை சோறுபோடும்
பம்பை பால் வார்க்கும்
கோரை குடி கெடுக்கும்
27. அட்டமத்து சனியன் நட்டம் வரத்தான் செய்யும்
28. அடுத்து முயன்றாலும் ஆகும் நாளில்தான் ஆகும்
29. அதிர்ஷ்டம் இருந்தால் அரசும் பண்ணலாம்
30. தை பிறந்தால் வழி பிறக்கும்
31. தாரமும் குருவும் தலைவிதிப்படி
32. அவிட்டத்தில் பெண் பிறந்தால்
தவிட்டுப் பானையெல்லாம் பொன்
33. ஆண்மூலம் அரசாளும்
பெண்மூலம் நிர்மூலம்
34. நாலாம் பேற்றுப் பெண் நாதங்கியை விற்றுத்தின்னும்
35. மகத்துப் பெண் முகத்துக்கு ஆகாது
36. அதிர்ஷ்டக்காரன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்
37. ஆந்தை பஞ்சையாய் இருந்தாலும் சகுணத்திற்குப் பஞ்சமில்லை
38. பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுணம் பார்த்தாற்போல
39. ஆழ உழுது அரும்பாடுபட்டாலும்
பூமி விளைவது புண்ணியவானுக்கே
40. சனிப்பயிர் சாத்திரத்திற்கு உதவும்
41. கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்திற்கு ஆகாது
42. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை
43. சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
44. விண்ணோறு தப்பினாலும் கண்ணோறு தப்பாது

45. அடியந்திரம் எடுத்து கடன்பட்டவன்
நாஞ்சில்நாட்டு மக்கள்
46. ஆமை புகுந்த வீடும்
அமீனா புகுந்த வீடும் உருப்படாது
47. கல்லெறிக்குத் தப்பினாலும்
கண் எறிக்குத் தப்பமுடியுமா?
48. சனிப்பிணம் தனியே போகாது
49. நம்பிக்கையே ஏழை மனிதனின் வருமானம்
50. ஆலமரத்தைச் சுற்றி வந்து
அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்தாளாம்
51. ஆறாம் குழந்தைப் பெண்ணாகப் பிறந்தால்
ஆனான குடித்தனமும் நீராய்விடும்
52. ஐயனார் கோவிலே செங்கல் அத்தனையும் தெய்வம்
53. குடப்பாலில் கையை விட்டு சத்தியம் செய்
54. சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும்கூடும்
55. உண்ட இலையில் உட்கார்ந்தால் சண்டைவரும்
56. கடுகு சிந்தினாலும் கலகம் வரும்
57. காலையில் எழுந்து காக்கை முகத்தில் விழிக்காதே
58. குளவி கூடுகட்டினால் பிறப்பு
நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
59. சேர்க்கைக்குத் தக்க பழக்கம்
60. ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர் நாய்படாத பாடுபடுவர்
61. ஞாயிற்றுக்கிழமை ருதுவானால் நாய்படாதபாடு
62. ஊத்தை போகக் குளித்தவனுமில்லை
பசிபோகத் தின்றவனுமில்லை
63. நம்பின பேருக்கு நடராசா
நம்பாத பேருக்கு யமராசா
64. நாய்க்குத் தெரியும் நமன் வருகை
65. நாயைக் கொன்ற பாவம்
நாலு ஜென்மம் எடுத்தாலும் போகாது
66. நாவல் பழுத்தால் நாடு செழிக்கும்
67. நாலும் சூலும் சேரக்கூடாது
68. அஞ்சாவது பெண் பிறந்தால்
அரசனும் ஆண்டியாவான்

69. மூலத்தில் பிறந்தவன் காலத்தில் வாழ்வான்
70. காலமே எழுந்திருந்து காக்கை பார்க்கிறது ஆகாது
71. திங்களும் சனியும் தெற்கே நோக்கவேண்டும்
72. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி
ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் மடத்தில் ராஜா
73. சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனும்
ஐப்பசி மாதத்தில் பிறந்த அதிர்ஷ்டவானுமில்லை
74. மலையும் மலையும் சேர்ந்தாலும்
தலையும் தலையும் சேரக்கூடாது
75. தாய்க்குத் தலைமகன்
தகப்பனுக்குச் சின்னமகன்
76. நான்கு பிள்ளை பெற்றால் நாதங்கியும் இருக்காது
77. அன்று எழுதியதை அழித்து எழுத முடியாது
78. தாரமும் குருவும் தலைவிதிப்படி
79. மகத்துப் பிள்ளை சகத்திலே கிடைக்காது
80. மகம் சகத்தை ஆளும்
81. கேட்டை கோட்டை கட்டும்

நட்சத்திரங்களும் கிரகங்களும் பற்றிய பழமொழிகள்

1. பஞ்சாங்கம் போனாலும்
நட்சத்திரம் போகாது
2. பஞ்சாங்கம் பொய் என்றால்
கிரகணத்தைப் பார்
3. பரணி பிறந்தவன் தரணி ஆள்வான்
4. பரணி அடுப்புப் பாழ் போகாது
5. ஆண்மூலம் தரணியாளும்
பெண்மூலம் நிர்மூலம்
6. பூராடகாரனோடு சண்டைபோட்டு மீளமுடியாது
7. அவிட்டம் தொட்டதெல்லாம் பொன்
8. அவிட்டம் தவிட்டுப் பானையும் பொன்
9. உத்திராடத்தில் பிள்ளையும்
ஊர் வாரியில் ஒரு நிலமும்
10. கெட்ட கேட்டுக்கு ஒரு கேட்டை பிறந்தது
11. கேட்டையில் பிறந்தால் எட்டுச்சேவகன் உண்டு

12. கேட்டையில் பிறந்தவன்
கோட்டைகட்டி ஆள்வான்
13. மகத்துப்பிள்ளை ஜெகத்திலே கிடையாது
14. மூலத்தில் பிறந்தவன் காலத்தில் வாழ்வான்
15. அஸ்வினி சர்வ நாசனும்
16. பரணி பேய்ந்தால் தரணி விளையும்
17. மூலமழை பெய்யின் நவதான்யத்திற்குக் கேடு
18. விசாகத்தில் மழை பெய்யின் பயிர்களுக்கு நல்லது
19. சோதி மின்னிடில் சோறகப்படும்
20. ஸ்வாதி சுக்கிரன் ஓயா மழை
21. தெற்கே போன வெள்ளி
வடக்கே வந்தால் மழை
22. கும்பத்து வெள்ளி குடம்கொண்டு சாய்க்கும்
23. கண்ணிச் செவ்வாய் கடலும் வற்றும்
24. சூரியனும் புதனும் தன்னைவிட்டு நீங்காது
25. லக்கனத்திற்கு எட்டில் சந்திரன் இருந்தால்
யார் பேச்சையும் கேட்கமாட்டான்
26. இரண்டில் செவ்வாய் விவாதிக்கச் செய்யும்
27. புதன் எட்டில் கணக்காலும் வழக்காலும் தொல்லை
28. வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது
29. குரு பார்க்க கோடி பலன் உண்டாகும்
30. குரு பார்க்க கோடி பாவம் நீங்கும்
31. ஜன்மகுரு இராமர் சீதை வனவாசம்
32. மூன்றில் குரு துரியோதனன் படை மாண்டது
33. நான்கில் குரு தர்மர் சூதாடித் தோற்றார்
34. ஆறில் மகாபலி தொலைந்தான்
35. எட்டில் வாலி மாண்டான்
36. பத்தில் பரமசிவன் பிச்சை
37. பன்னிரண்டில் இராவணன் மறைந்தான்
38. குரு பார்வை (வியாழன்) கோடி தோஷம் நீங்கும்
39. ராகு திசையில் வாழ்ந்தவனுமில்லை
குரு திசையில் கெட்டவனுமில்லை
40. அஷ்டமத்து சனி பிடித்தது
41. சனி பிடித்ததோ சளி பிடித்ததோ

42. பொங்கு சனி போய் மங்கு சனி வந்தது
மங்கு சனி போய் குங்கு சனி வந்தது
43. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச்சனி
ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்து இராஜா
44. ஆறு மாசத்துக்குச் சனி பிடித்ததுபோல
45. அஷ்டமத்துச் சனியனை விலை கொடுத்து வாங்கினார்கள்
46. கடன் ஒரு காலச் சனி
47. மகத்துச் சனி ஜகத்துக்காகாது
48. ஆறில் சனி முடி சூடும்
49. சனி கொடுத்தால் வினை கொடுப்பவர் உண்டோ?
50. சனியன் பிடித்தவனுக்குச் சந்தையிலும் கந்தை அகப்படாது
51. போன சனியனைத் தாம்பூலம் வைத்து அழைத்ததுபோல
52. ராகு போல் கொடுப்பாருமில்லை
கேதுபோல் கெடுப்பாருமில்லை

தெய்வம் பற்றிய பழமொழிகள்

1. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை
2. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
3. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
4. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்
5. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
6. இறைவன் தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான்
7. நம்பினோர் கெடுவதில்லை
இது நான்குமறை தீர்ப்பு
8. நம்பினோர்க்கு நடராசா
நம்பாதவர்க்கு எமராசா
9. அவனின்றி ஓரணுவும் அசையாது
10. திக்கற்றவர்க்கு ஆகாயமே துணை
11. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு
கொடுக்கும்
12. தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
13. தேடிப்போன தெய்வம் எதிரே வந்ததுபோல
14. தெய்வத்திற்குச் சத்தியம்
மருந்துக்குப் பத்தியம்
15. தெய்வமே துணை

16. யாரு குறையிருந்தாலும் சாமிகுறை இருக்கக் கூடாது
17. உயிரைக் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடு
18. அடிதடி இல்லாத மணியமும்
ஆடல்பாடல் இல்லாத கோயிலும் சிறப்பில்லை
19. சிவனுக்கு மேல் தெய்வமில்லை
சித்திக்குமேல் சாத்திரமில்லை
20. எங்கும் சுற்றி ரங்கனைப் பாரு
21. கும்பிடப்போன சாமி குறுக்கே வந்ததாம்
22. கணபதி பூஜைக்கு கைமேல் பலன்
23. அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்
24. அரியும் சிவனும் ஒண்ணு
அறியாதவன் வாயில் மண்ணு
25. எளியாரை வலியார் அடித்தால்
வலியாரை தெய்வம் அடிக்கும்
26. மனதிற்கு மனதே சாட்சி
மற்றதற்குத் தெய்வமே சாட்சி
27. அன்று எழுதிய எழுத்தை யாரால் மாற்ற முடியும்
28. அய்யனார் கோவில் செங்கல் அனைத்தும் தெய்வம்
29. எல்லாம் ஈசன் செயல்
30. வையம் தோறும் தெய்வம் தொழு
31. தெய்வ அருளிருந்தால் செத்தவனும் எழுவான்
32. விஷம் தீர வைத்தியன் வேண்டும்
பாவம் தீர தெய்வம் வேண்டும்
33. ஆர் கடன் வைத்தாலும்
மாரி கடன் வைக்கக் கூடாது
34. கும்பிட்ட தெய்வம் குல தெய்வம்
35. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே
36. கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும்
37. சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க மாட்டான்
38. சிவன் சொத்து குல நாசம்
39. நடக்கிறது நடக்கட்டும் தெய்வம் இருக்கிறது
40. நீ பிறருக்கு உதவி செய்தால்
தெய்வம் உனக்கு உதவி செய்யும்

41. விஷ்ணுவைப் பெரிது என்பர் ஸ்ரீரங்கத்தில்
சிவனைப் பெரிது என்பர் அருணாசலத்தில்
42. நம்பினால் தெய்வம்
நம்பாவிட்டால் கல்
43. அண்ணாமலையாருக்கு அறுபத்துநாலு பூஜை
ஆண்டிகளுக்கு எழுபத்திநாலு பூஜை
44. ஆண்டவன் ஒருவன் இருக்கிறான்
45. ஆண்டவன் விட்ட வழி
46. ஆற்றைக் காணாத கண்களும்
அழகரை வணங்காத கைகளும் இருந்தும் பயன் இல்லாதவை
47. உண்டான தெய்வங்கள் ஒதுங்கி நிற்கையில்
சுற்றுப்பட்ட தெய்வம் ததியோதனத்துக்கு அழுததாம்
48. உண்டு என்ற பேருக்கு ஈசன் உண்டு
இல்லை என்ற பேருக்கு இல்லை
49. உயிர் இருக்கும்போது குரங்கு
இறந்தபின் அனுமார்
50. அய்யனார் கோயில் ஆனையைப் போல
51. செத்துத் தெய்வமாக நிற்கிறார்
52. தில்லை காளி எல்லைக்கு அப்பால்
53. சுக்குக்கு மிஞ்சின மருந்துமில்லை
சுப்பிரமணிய சுவாமிக்கு மிஞ்சின தெய்வமில்லை
54. சுக்குக்கு மிஞ்சின மருந்துமில்லை
சூரியனுக்கு மிஞ்சின தெய்வமுமில்லை
55. மனமிருந்தால் மாரியம்மா
இல்லாவிட்டால் காளியம்மா

திருவிழா, பண்டிகை பற்றிய பழமொழிகள்

1. இருந்தால் ஓணம்
இல்லாவிட்டால் ஏகாதசி
2. இருந்தால் துவாதசி
இல்லாவிட்டால் ஏகாதசி
3. உள்ள அன்றுக்கு ஓணம்
இல்லாத அன்றைக்கு ஏகாதசி
4. பெருமாள் இருக்கிறவரை திருநாள் உண்டு

5. காஞ்சுபோன கார்த்திகை வந்தாலென்ன?
தீஞ்சுபோன தீபாவளி வந்தாலென்ன?
மகாராசன் பொங்கல் வந்தால் மார்முட்டச் சோறு
6. கர்ணனுக்குப் பின் வள்ளலுமில்லை
தீபத்திற்குப் பின் மழையுமில்லை

சமயம் பற்றிய பழமொழிகள்

1. சிவனுக்கு மேல் தெய்வமில்லை
சித்திக்கு மேல் சாத்திரமில்லை
2. எங்கும் சுற்றி ரங்கனைப் பாரு
3. உன்னைப்போல் பிறரை நேசி
4. எல்லாச் சொத்தும் அல்லாவுக்கு
5. ஆசையை விட்டால் மோட்சம் கிட்டும்
6. தன்னுயிரைப் போல் மன்னுயிரை நினை
7. எம்மதமும் சம்மதம்
8. ஆரூரில் பிறக்க முக்தி
தில்லையில் தரிசிக்க முக்தி
காசியில் இறக்க முக்தி
9. மன்னார்குடி மதில் அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
வடுவூர் சுவாமி அழகு
10. திருவாசகத்திற்கு உருகார்
ஒருவாசகத்திற்கும் உருகார்
11. தில்லை பாதி புராணம் பாதி
12. எந்தப் பொருளும் கந்தப்புராணத்திலே
13. படிப்பது திருவாசகம்
இடிப்பது சிவன்கோயில்
14. யாரு குறை இருந்தாலும்
சாமி குறை இருக்கக்கூடாது
15. இராமேஸ்வரம் போயும் சனியன் தொலையவில்லை
16. கஞ்சி கண்ட இடம் கைலாசம்
17. சிவன் சொத்து குல நாசம்
18. வாக்கிற்கு அருணகிரி
19. நினைக்க முக்தி அண்ணாமலை

20. சித்தன்போக்கு சிவன்போக்கு
21. சைவப்பழம் வில்வக்கிளை

உலகியல்பு பற்றிய பழமொழிகள்

1. நாலுபேர் வாக்கு தெய்வவாக்கு
2. பொய் சொன்ன வாய்க்குப் போசனமில்லை
3. ஒருவனைக் கொன்றால் தூக்கு
   பலரைக் கொன்றால் பாராட்டு
4. உழுது பிழைப்பார் ஒருகோடி
   ஏய்த்துப் பிழைப்பார் ஏழுகோடி
5. ஒரு வீட்டிலே மணக்கோலம்
   மற்றொரு வீட்டிலே பிணக்கோலம்
6. அடுத்துக் கெடுப்பான் கபடன்
   தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை
7. சந்தை வாக்கு பொய்க்காது
8. பொய் சொல்லி வாழ்ந்தார் இல்லை
9. ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் முடி
10. பிணத்தை மறைத்து மணத்தை முடி
11. கல்விழுந்து தப்பித்தவனும் உண்டு
    கல் இடறிச் செத்தவனும் உண்டு
12. நன்றாக இருக்கவும் பார்க்க மாட்டார்கள்
    கெட்டுப் போகவும் பார்க்க மாட்டார்கள்
13. வாழ்ந்தாலும் பொறுக்க மாட்டார்கள்
    தாழ்ந்தாலும் சகிக்க மாட்டார்கள்
14. எல்லாம் தனக்கு வந்தால்தான் தெரியும்
15. யானைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
16. இன்ப துன்பம் சுழல் சக்கரம்
17. பொய் இருந்து புலம்பும்
    மெய்யிருந்து விழிக்கும்
18. ஆபத்தும் சம்பத்தும் யாருக்குமுண்டு
19. உள்ளது சொல்ல ஊருமில்லை
    நல்லதைச் சொல்ல நாடுமில்ல
20. உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பொல்லாதவன்
21. ஒரூர் நடப்பு, ஒரூர் பழிப்பு
    ஒரூர் பேச்சு, ஒரூர் ஏச்சு

22. வண்டியில் ஓடம் ஏறும்
ஓடத்தில் வண்டி ஏறும்
23. வாழ்வு ஒரு காலம் தாழ்வு ஒரு காலம்
24. முப்பதாண்டு வாழ்ந்தாருமில்லை
முப்பதாண்டு தாழ்ந்தாருமில்லை
25. ஊர் ஒக்க ஓடவேண்டும்
26. ஊர் ஓட ஒக்க ஓடு
நாடு ஓட நடுவே ஓடு
27. பத்துப்பேரோடு பதினோராம் பேராயிருக்க வேண்டும்
28. கேட்காமல் கொடுக்கிறது உத்தமம்
கேட்டுக் கொடுக்கிறது மத்திமம்
கேட்டும் கொடாதிருப்பது அதர்மம்
29. விரலுக்குத் தகுந்த வீக்கம்
30. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து
31. கடனில்லாக் கஞ்சி கால் வயிறு போதும்
32. இன்றைக்குச் சிரிப்பு
நாளைக்கு அழுகை
33. சுகத்துக்குப் பின் துக்கம்
துக்கத்துக்குப் பின் சுகம்
34. சுகம் துக்கம் சுழல் சக்கரம்
35. இன்பமும் துன்பமும் எழுந்த உடலுக்கு இயல்பு
36. இன்பமும் துன்பமும் யாருக்கும் உண்டு
37. அடக்கம் ஆயிரம் பொன்பெறும்
38. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
39. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு
40. விரலுக்கேற்ற வீக்கம் தேவை
41. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே
42. சில்லறைக் கடன் சீரழிக்கும்
43. வாழ்வு சிலகாலம், தாழ்வு சிலகாலம்
44. வாழ்வதும் தாழ்வதும் வண்டி உருளை போல
45. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்
46. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
47. பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்
48. தாய்க்குப் பின் தாரம்
49. அடிக்கிற கையே அணைக்கும்

50. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
51. தூர இருந்தால் சேர உறவு
52. பெத்தமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு
53. பொம்பளை சிரிச்சா போச்சு
புகையிலை விரிச்சா போச்சு
54. இல்லறம் பெரிது துறவறம் சிறிது

மொழி, பேச்சு, சொல் பற்றிய பழமொழிகள்

1. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு
2. வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழவழ
3. சொல்லாது பிறவாது
அள்ளாது குறையாது
4. சொல்கிறவனுக்கு வாய்ச்சொல்
செய்கிறவனுக்கு தலைச்சுமை
5. சொற்பேச்சு கேளான் சுயபுத்தியும் இல்லை
6. பேசப்பேச எந்த மொழியும் வரும்
7. மொழி தப்பியவன் வழி தப்பியவன்
8. ஒரு மொழி அறிந்தவன் ஊமை
பலமொழி அறிந்தவன் பண்டிதன்
9. அரிசி சிந்தினால் அள்ளலாம்
வார்த்தை சிந்தினால் அள்ள முடியுமா?
10. அன்றைக்குச் சொன்ன சொல்
சென்மத்திற்கும் உரைக்கும்
11. ஏழைச்சொல் அம்பலம் ஏறாது
12. சொல்லுக்கு அரிச்சந்திரன்
13. சொல்லம்போ வில்லம்போ
14. பல்லுப்போனால் சொல்லுப்போச்சு
15. கண்டால் ஒரு பேச்சு
காணாவிட்டால் ஒரு பேச்சு
16. நூற்றுக்கு ஒரு பேச்சு
17. வெட்டு ஒன்று துண்டு இரண்டு
18. காலம் போகும் வார்த்தை நிற்கும்

நுண்கலை பற்றிய பழமொழிகள்

1. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இராது
2. பாடப்பாட ராகம் மூடமூட ரோகம்
3. சுவரை வைத்து சித்திரம் எழுதவேண்டும்
4. இங்கிதம் தெரியாதவளுக்கு சங்கீதம் தெரிந்து பயனில்லை
5. அவள் பாடுவது குயில் போல
6. பாடத் தெரியாத பாகவதருக்கு பக்க வாத்தியம் ஏன்?
7. நெற்றிக்குக் குங்குமம்
   முற்றத்துக்குக் கோலம்
8. கோலமிடுவது கோழி கூவுமுன்னே
   கோபுரம் காண்பது கதிரவன் பின்னே
9. திலகமில்லா நெற்றி பாழ்
   கோலமில்லா முற்றம் பாழ்
10. நீ தடுக்குள்ள போனா
    நான் கோலத்துக்குள்ளே போவேன்
11. பூமிக்குத் திலகம் கோலம்
12. வேகாத நெல்லை விரலாலே கீறிக்கோலமிட்டேன்
    சாகாத பிள்ளையாக வரந்தரவேண்டும்
13. சாணத்தானம் தங்கத்திற்குச் சமம்
14. சாணம் தெளியா சண்டாளி எழுந்திரு
    முற்றம் தெளியா மூதேவி எழுந்திரு
15. சாஸ்திரத்தில் பொய் இருக்கலாம்
    சானத்தில் பொய் இல்லை
16. நளனைச் சனிபிடித்த மாதிரி
    சானந் தெளிக்காத வீட்டைச் சனி பிடிக்கும்
17. முற்றம் தெளித்தோம் மூதேவியோ போ
    வாசல் தெளித்தோம் மகாலட்சுமியே வா
18. துலுக்கங் கொடியாட்டம் முற்றம்
    தெளிக்காம இருக்கியே மூதேவி
19. தெளித்துப் பெருக்கணும்
    பெருக்கித் தெளிக்கணும்
20. ஏற்கனவே மாமி பேய்க்கோலம்
    அதிலும் கொஞ்சம் மாக்கோலம்
21. மண்ணுக்கு மண்ணிட்டுப் பாரு
    பொண்ணுக்குப் பொன்னிட்டுப் பாரு

நகைச்சுவை பற்றிய பழமொழிகள்

1. அரைப்படி அன்னதானம் விடிய விடியச் செய்தானாம்
2. ஏண்டா விழுந்தாய் என்றால்
   கரணம் போட்டுப் பார்த்தேன் என்றானாம்
3. இடாள், தொடாள் மக்கள் மீது உயிராம்
4. பட்டுப்புடவையைக் கொடுத்துவிட்டு
   மனைக்கட்டையைத் தூக்கிக்கொண்டு அவள்
   பின்னாலே திரிந்தானாம்
5. கையைப் பிடித்துத் தூக்கிவிடு
   பிணக்காடாக்கிக் காட்டுகிறேன்
6. இஞ்சி என்றால் தெரியாத
   எலுமிச்சம் பழம்போல் இருக்கும்
7. நாதசுரம் தெரியாதா? மத்தளம் போல் இருக்கும்
8. பஞ்சபாண்டவர் என்றால் தெரியாதா?
   கட்டில் காலைப் போல மூன்று என்று சொல்லி
   இரண்டு விரலைக்காட்டி ஒன்றை எழுதி
   அதையும் அழித்துவிட்டானாம்
9. எழுந்திருப்பான், கால்தான் இல்லை
10. காட்டுக்குள்ளிருந்து கைகாட்டும் கள்ளி
    காக்கா பறக்கக்கண்டு திடுக்கிட்டுப்போனேன் என்றாளாம்
11. காக்கைக்குச் சோறுவைக்கக்
    காதவழி போனானாம் ஒருவன்
12. யானை காணாமல் போய்விட்டது என்று
    குண்டுச் சட்டியில் கைவிட்டுத் துழாவினானாம்
13. அவள் பெயர் கூந்தழலகி, தலை மொட்டை
14. அங்காடிக்காரியைப் பாடச்சொன்னால்
    வெங்காயம், வெண்டைக்காய் என்று பாடினாளாம்
15. மதுரையில் அடிபட்ட சூரனுக்கு
    மானாமதுரையில் மீசை துடித்ததாம்
16. மத்தளம் பொத்தல் என்று சிற்றெறும்புத்
    தோலால் மூடினானாம்
17. ஆண்டியும் ஆண்டியும் கட்டிப் புரண்டால்
    சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும்
18. வெந்த முகத்தைக் காட்டு
    வந்த விருந்தினரை ஓட்டு

19. பழஞ்சோறு இருந்தால் போடு
பசிக்காமலிருக்க வரந் தருகிறேன்
20. நாவிதன் வேலை கேட்டானாம்
அரசன் குடுமி தன் கைக்குள் வேண்டுமென்று
21. ஆசை இருக்கு தாசில் பண்ண
அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க
22. அங்கே பார்த்தால் ஆடம்பரம்
இங்கே பார்த்தால் கஞ்சிக்கு சாவு
23. காசில்லாதவனுக்கு வராகன் பேச்சு எதற்கு
24. தாய் கிண்ணிப் பிச்சை எடுக்கிறாள்
மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்
25. தாய் சீலைக்குச் சாண் துணியில்லை
தலைக்கு மேலே சரிகை வேஷ்டி
26. தாய் தவிட்டுக்கு அழுகிறாள்
மகள் இஞ்சிப் பச்சடி கேட்கிறாள்
27. அப்பன் சோற்றுக்கு அழுகிறான்
பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்
28. ஊரெங்கும் பேர், வீடு பட்டினி
29. தான் தின்னத் தவிடு இல்லை
வாரத்திற்கு இரண்டு பன்றிகுட்டி வளர்க்கிறான்
30. கும்பி கூழுக்கு அழுகிறது
கொண்டை பூவுக்கு அழுகிறது
31. ஒற்றைக்கால் இல்லாதவன் தாண்டவராயன்
32. ஆத்தாள் அம்மணம் கும்பகோணத்தில் கோதானம்
33. குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர்
34. சூத்திலே கட்டத் துணியில்லை, கூத்தியார் இரண்டு
35. வரப்பேறி தாண்டாதவனுக்குத் தாண்டவராயன் என்றுபெயர்
36. ஆண்டி அன்னத்துக்கு அலையும்போது
லிங்கம் பால்சோற்றுக்கு அழுததாம்
37. அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்தராத்தியில் குடை பிடிப்பான்
38. இரவல் சேலையை நம்பி
இடுப்புக் கந்தையை எறிந்தாளாம்
39. தான் தின்னத் தவிடில்லை
தங்கத்தாலே தாலிபோடச் சொன்னாளாம்

40. கட்டக் கரிமணியில்லை பேர் முத்துமாலை
41. முதலியார் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு
42. ஆலிலை தெரியாதா? வேப்பிலை போல வேலியில் படர்ந்திருக்கும்

பொருட்களைப் பற்றிய பழமொழிகள்

1. ஓடம் வண்டியிலே, வண்டியிலே ஓடம்
2. ஒட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
3. பாய்மரமில்லாத கப்பலைப்போல
4. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
5. உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை
அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் பெருமை
6. உப்புக்குக் கேடு சக்கிலியன் உறவு
7. உப்பு சப்பில்லாத விஷம்
8. உப்பு தின்றவன் தண்ணீர் குடிப்பான்
9. உப்புப் போட்டு சாப்பிட்டால் சுரணை இருக்கும்
10. உப்பும் இல்லை சப்பும் இல்லை
11. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
12. கடலிலே பிறந்த உப்புக்கும்
மலையிலே பிறந்த நார்த்தங்காய்க்கும் உறவுண்டு
13. ஒரு விளக்கைக் கொண்டு ஓராயிரம் விளக்கு ஏற்றலாம்
14. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் அவசியம்
15. உடைந்த கண்ணாடி ஒன்று சேருமா?
16. செருப்பாக உழைத்தான்
17. உச்சந்தலையில் செருப்பால் அடித்ததுபோல
18. செருப்புக்காக காலைக் குறைக்க முடியுமா?
19. செருப்புக்கேற்றாற்போல காலை வெட்டுவதா?
20. காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறி
21. காலுக்குத் தக்க செருப்பும்
கூலிக்குத் தக்க உழைப்பும்
22. செருப்பால் அடித்தாலும் திருட்டுக் கை நிற்காது
23. வீட்டில் கடிகாரமே எஜமானனாக இருக்கவேண்டும்
24. உரலுக்கு ஒரு பக்கம் இடி
மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி

25. அடி நாக்கிலே நஞ்சு
நுனி நாக்கிலே அமிர்தம்
26. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
27. உண்கிற சோற்றில் நஞ்சைக் கலக்கிறதா?
28. கலப்பாலில் துளி விஷம் கலந்தாற்போல
29. நஞ்சு மரமானாலும் நட்டவர்கள் வெட்டுவார்களா?
30. விஷத்தின் மேல் விஷம் விஷத்தைப் போக்கும்
31. ஏணி ஒருவரைக் கொல்லும்
ஏற்றம் மூவரைக் கொல்லும்
32. வேப்பெண்ணெய் ஆபத்துக்குதவும்
33. வேப்பெண்ணெய் மருந்து எண்ணெய்
34. நெருப்பை நெருப்பு அணைக்காது
35. புத்தகத்தையும் பெண்ணையும் இரவல் கொடுக்காதே

உடல்நலம் பற்றிய பழமொழிகள்

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2. நொறுங்கத் தின்றால் நூறு வயது
3. சுத்தம் சோறுபோடும்
4. சுவரை வைத்துதானே சித்திரம் எழுதவேண்டும்
5. கூழானாலும் குளித்துக்குடி
6. கந்தையானாலும் கசக்கிக்கட்டு

மனித உடல் உறுப்புக்கள் (Human body parts) *பற்றிய பழமொழிகள்*

1. தலை இருக்க வால் ஆடுமா?
2. தலை எழுத்திற்குத் தலையைச் சிரைத்தால் போதுமா?
3. தலை வலியும் காய்ச்சலும்
தனக்கு வந்தால் தெரியும்
4. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று
5. காலால் இட்ட வேலையை
தலையால் செய்வான்
6. எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்
7. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது
8. ஒரு கண்ணில் வெண்ணெய்
ஒரு கண்ணில் சுண்ணாம்பு

9. கண் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?
10. கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்
11. கண்ணில் புண் வந்தால் கண்ணாடி பார்க்கக்கூடாது
12. கண்ணை இமை காப்பதுபோல
13. கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல
14. கல்லெறிக்குத் தப்பினாலும்
கண்ணெறிக்குத் தப்பமுடியாது
15. காமத்துக்குக் கண்ணில்லை
16. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்
17. விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது
18. ஆற்றைக் காணாத கண்களும்
அழகரை வணங்காத கைகளும் இருந்தும் பயனில்லை
19. கண்ணாலே கண்டாலும் மண்ணாலே மறைக்க வேண்டும்
20. கண்ணுக்கு இமை, பெண்ணுக்கு நாணம்
21. கண்ணைக் காட்டினால் வராதவள்
கையைப் பிடித்து இழுத்தால் வருவாளா?
22. கண்ணாலே கண்டதற்கு சாட்சி ஏன்?
23. தன் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
24. காதும் காதும் வைத்தாற்போல இருக்கவேண்டும்
25. சுவருக்கும் காதுகள் உண்டு
26. செவிடன் காதில் ஊதிய சங்குபோல
27. காதுக்கு இட்டால் முகத்திற்கு அழகு
28. வெறுங் காதுக்கு ஓலைக்காது மேல்
29. உலைவாயை மூடலாம்
ஊர்வாயை மூட முடியுமா?
30. கூனி வாயால் கெட்டதுபோல
31. சூதாடி கையும் கோள்காரன் வாயும் சும்மா இராது
32. தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது
33. நெருப்பென்றால் வாய் வெந்தா போகும்?
34. பூ மலர்ந்து கெட்டது
வாய் விரிந்து கெட்டது
35. வாயுள்ள பிள்ளை பிழைக்கும்
36. வாய் நல்லதானால் ஊர் நல்லது
37. வாழ்வதும் கெடுவதும் வாயாலே தான்
38. பெருமையும் சிறுமையும் வாயால் வரும்

39. வாயிருந்தால் மகளே வாழ்ந்து வருவாய்
40. வாய் கரும்பு, கை இரும்பு
41. வாயிலே உறவு, மனதிலே பகை
42. வாயில்லாவிட்டால் நாய்கூடச் சட்டை செய்யாது
43. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இராது
44. எலும்பில்லா நாக்கு எல்லாப் பக்கமும் பேசும்
45. செந்தமிழும் நாப்பழக்கம்
46. நா அசைய நாடு அசையும்
47. நாவால் பிறக்கும் நன்மையும் தீமையும்
48. பல்லுக்கு நாக்குப் பகை
49. கறக்கிறது நாழிப்பால், உதைக்கிறது பல்லுப்போக
50. நல்லார் பொல்லாரை நாவினால் அறியலாம்
51. நாவுள்ளவன் கழுவேற மாட்டான்
52. உடல் ஒருவனுக்குப் பிறந்தது
நாக்கு பலருக்குப் பிறந்தது
53. எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும்
54. நாவை அடக்கி ஆளாவிட்டால் அது தன்னையே ஆளும்
55. நாக்குக் கத்தியைக் காட்டிலும் ஆழமாய் பதியும்
56. கழுகுக்கு மூக்கிலே வியர்ப்பதுபோல
57. மூக்கரையானுக்கு வாழ்க்கைப்பட்டால்
முன்னும் போகான் பின்னும் போகான்
58. மூக்குத்தூள் போடாத முண்டத்துக்கு
முப்பது பணத்தில் வெள்ளி டப்பா
59. மூக்கைப் பிடித்தால் சீவன் போகிறது
60. மூக்கு உள்ளமட்டும் ஜலதோஷம்
61. மூக்கு உள்ளம்ட்டும் சளி உண்டு
62. மூன்று முடிச்சு கழுத்தில் விழட்டும்
முப்பது இலை குப்பையில் விழட்டும்
63. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
64. தன் முதுகு தனக்குத் தெரியாது
65. குருவுக்குத் துரோகம் செய்தாலும்
குடலுக்குத் துரோகம் செய்யாதே
66. இடுப்புக்கு மேலே அந்தரங்கமில்லை
67. கறந்தபால் முலை ஏறுமா?

68. குடிக்கிற முலையும் சரி
பிடிக்கிற முலையும் சரியா?
69. முதுகைத் தேய் என்றால்
முலைமீது கை இட்டானாம்
70. முலை சரிந்தால் வயிறு தாங்கும்
71. தாய்முலை குடித்துத் தாகம் தணியவேண்டும்
72. என்னைக் கெடுத்தது நரை
என் மகளைக் கெடுத்தது முலை
73. ஓங்கின கை நிற்காது
74. கண்ணைக் காட்டினால் வராதவள்
கையைப் பிடித்து இழுத்தால் வருவாளா?
75. முன்கை நீண்டால் முழங்கை நீளும்
76. கைபட்டால்தான் கண்ணாடி
77. கையிலே காசு, வாயிலே தோசை
78. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்
79. கையை ஊன்றித்தான் கரணம் போடவேண்டும்
80. கையிலே உண்டானால் காத்திருப்போர் ஆயிரம்பேர்
81. கை காய்த்தால் கழுகு காய்க்கும்
82. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
83. தனக்கு தனக்கு என்றால் புடுக்கும் களை எடுக்கும்
84. ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒரு காலும்
85. கடலைத் தாண்ட காலுண்டு
கால்வாயைத் தாண்ட காலில்லை
86. காலில் பட்டது கையிலும் படும் மூக்கிலும் படும்
87. காலுக்குதவாத செருப்பைக் கழற்றி எறி
88. காலுக்குத் தக்க செருப்பும்
கூலிக்குத் தக்க வேலையும்
89. காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது
90. முன்வைத்த காலைப் பின்வைக்காதே
91. வேலிக்குப் போட்ட முள்
காலுக்கும் வினையாச்சு
92. ஓடிப் பழக்கமுள்ள கால் ஒடுங்காது
93. விரலுக்குத் தகுந்த வீக்கம்
94. அவன் கைவிரலைக் கொண்டே
அவன் கண்ணைக் குத்துகிறான்

இறப்பு பற்றிய பழமொழிகள்

1. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
2. ஆறிலே செத்தால் அறியா வயசு
   நூறிலே செத்தால் நொந்த வயசு
3. சுடுகாட்டுத் தத்துவம் வீடுவரை வராது
4. செத்த பிணத்திற்கு அருகே
   நாளை சாகும் பிணம் அழுகிறது
5. இழவுக்கு வந்தவள் தாலியறுப்பாளா?
6. சாகிற வரையில் வைத்தியன் விடான்
   செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
7. தாயிலே கெட்டவளுமில்லை
   சாவிலே நல்லதுமில்லை
8. சாகிறவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்
9. சாகிறவரையில் கஷ்டமானால் சுகம் எப்போது?
10. சுடுகாடு போன பிணம் திரும்பாது
11. செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
12. செத்துத் தெய்வமாக நிற்கிறான்
13. சொல்லிப் போகவேணும் சுகத்துக்கு
    சொல்லாமல் போகவேணும் துக்கத்துக்கு
14. தாய் செத்தால் மணம்
    மகள் செத்தால் பிணம்
15. மகன் செத்தாலும் பரவாயில்லை
    மருமகள் தாலியறுக்க வேணும்
16. மாமியாரும் சாகாளோ
    என் மனக்கவலையும் தீராதோ
17. வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளக்கூடாது
18. பணமில்லாதவன் பிணம்
19. ஏகாதசி மரணம்
    துவாதசி தகனம்
20. செத்தவன் பாரம் சுமந்தவன் தலையில்
21. செத்தவன் பொண்டாட்டியைக் கட்டினாலும்
    விட்டவன் பொண்டாட்டியைக் கட்டக்கூடாது
22. செத்தும் கொடுத்தாள் சீதக்காதி

23. தேவடியாள் செத்தாள் பிணம்
தேவடியாள் தாய் செத்தால் மணம்
24. சாகிறவன் சனியனுக்குப் பயன்படுவானா?
25. செத்த பிணத்தைக் கண்டு
சாகும் பிணம் அழுகிறது
26. பிறந்தவன் இறப்பது உறுதி
27. பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை
28. இறந்தவன் இருப்பவனுக்கு வழிகாட்டி
29. சனிப் பிணம் துணை தேடும்
30. தாய் செத்தபிறகு தகப்பன் சிற்றப்பன்
31. காட்டிலே செத்தாலும் வீட்டிலேதான் தீட்டு
32. கிழவி செத்தது பாதமில்லை
இழவு சொல்லி மாளவில்லை
33. வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும்
34. எட்டுக்கும் கூடுவான்
இழவுக்கும் கூடுவான்
35. செத்த பிணத்துக்கு கண் ஏன்?
சிவசிவா ஆண்டிக்குப் பெண் ஏன்?
36. எண்ணமெல்லாம் பொய்
எமனோலை மெய்
37. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் மீளார்
38. செத்ததற்குப் பின்னே தலை மாடாவது கால் மாடாவது
39. எமன் ஒருவரைக் கொல்லும்
ஏற்றம் மூவரைக் கொல்லும்
40. எமன் வாயிலிருந்து மீள்வது போல
41. நமன் அறியாத உயிரும்
நாரை அறியாத குளமும் உண்டா?

ஊர் பற்றிய பழமொழிகள்

1. ஆரூரில் பிறக்க முக்தி
2. தில்லையில் தரிசிக்க முக்தி
3. காசியில் இறக்க முக்தி
4. அண்ணாமலை நினைக்க முக்தி

5. காசி போயும் கருமம் தொலையவில்லை
6. காசியில் கங்கா ஸ்நானம் பண்ணினால் மட்டும் பண்ணின பாவம் தொலையுமா?
7. காசி போனால் ஏதாவது ஒன்றை விடவேண்டாமா?
8. காசிக்குப் போனாலும் தன்பாவம் தன்னோட
9. காசி முதல் இராமேசுவரம் வரை தெரிந்தவன்
10. ஏழைக்கேற்ற இராமேசுவரம்
11. இராமேசுவரம் போகையிலே பாம்பம் குறுக்கிட்டதுபோல
12. இராமேசுவரம் போயும் செய்த பாவம் தொலையவில்லை
13. குருவிக்கேற்ற இராமேசுவரம்
14. எங்கே போனாய் என்றால் குன்றக்குடி காவடி எடுக்க என்பான்
15. அன்னக் காவடிகள் எங்கே இருக்கும் என்றால் குன்னக்குடியில் என்பர்
16. பண்டாரப் பரதேசிகள் எங்கே இருப்பர் குன்னக்குடியில்
17. பழனியில் முருகனைவிடப் பரதேசிகள் அதிகம்
18. அண்ணாமலைக்கு அரோகரா
19. சைவர்க்கு அண்ணாமலை வைணவர்க்குத் திருவரங்கம்
20. சிதம்பரம் ரகசியம்போல
21. சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத் திருவாசகம் சொல்லித் தரவேண்டுமா?
22. திருவண்ணாமலையில் பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவைச் சொல்லித்தர வேண்டுமா?
23. ஸ்ரீரங்கத்து உலக்கை மாதிரி
24. விருத்தாசலம் போனால் பாவம் தொலையும்
25. திருப்பதி நடையழகு, குடையழகு, வடையழகு
26. திருப்பதியில் எத்தனை மொட்டை?
27. திருப்பதியில் தாதனைத் தேடிய கதை
28. திருப்பதி அம்பட்டன் கதை
29. திருப்பதி போயும் பரதேசி காலில் விழுந்தானாம்
30. திருவாரூர் தேர் அழகு
31. திருவாரூர் தெரு அழகு
32. திருவாரூர் தேர் அசைகிற மாதிரி அசைகிறான்

33. திருவாரூத் தேருக்கு உலுக்குமரம் போடுவதுபோல
34. காஞ்சிபுரத்து உபசாரம்
35. காஞ்சிபுரம் குடையழகு
36. காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிக் கொண்டே சாப்பிடலாம்
37. காஞ்சி காமாட்சி
மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி.
38. காஞ்சிபுரம் குடை
திருப்பதி வடை
ஸ்ரீரங்கத்து நடை
39. திருநெல்வேலி உபசாரம்
40. திருநெல்வேலி நாட்டான் திரும்பச் சொல்லமாட்டான்
41. திருத்துறைப்பூண்டி உபசாரம்
42. அய்யம்பேட்டை சமாச்சாரம் பண்ணாதே
43. மதுரை ஆட்சியா? சிதம்பரம் ஆட்சியா?
44. கடல் பாதி கடம்பங்குளம் பாதி
45. மாடக்குளம் உடைந்தால் மதுரை அழியும்
46. சீதை பிறக்க இலங்கை அழிந்தது
47. செஞ்சி அழிய சென்னை வளர்ந்தது
48. இலங்கையில் பிறந்தவர்களெல்லாம்
இராவணர்கள் அல்லர்
49. மன்னார்குடி மதில் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
50. ஸ்ரீரங்கம் நடை
பெருமாள் குடை
திருப்பதி வடை
திருநாரணபுரம் முடியழகு
51. கொச்சியில் மிளகு குறுணி இரண்டு ரூபாய்க்கு
விற்று என்ன லாபம்?
52. ஈழத்தில் தேங்காய் காசுக்கு இரண்டு என்று
வாங்கப்போன கதை
53. திருப்பதி போனாலும் துடைப்பம் மூன்று காசுதான்
54. தில்லைப் பெண் எல்லை தாண்டாள்

55. மயிலாடுதுறையில் பெண் எடுக்காதே
மன்னார்குடியில் பெண் கொடுக்காதே
56. தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும்
ஒன்று சேர்ந்தாற்போல
57. அதிராம்பட்டினத்து கழுதை மொச்சைக் கொட்டையை
நினைத்துக் கொண்டதாம்
58. விருதுபட்டி சனியனை விலைக்கு வாங்கிய கதைபோல
59. வேதாரண்யத்தில் பாம்பு கடிக்காதாம்
60. செக்குக்கு மாடு கொடுத்தாலும்
சிவலப்பேரிக்குப் பெண் கொடுக்காதே
61. எட்டுரு தீய்ந்தாலும் நெட்டுரு தீயாது
62. நீ என்ன சொக்கப்பட்டி தானாவதியா?
63. கடம்பூர் வழி துணையே கணபதிக்குப் பலி துணையே
64. குற்றாலத்துக் குரங்கே கொம்பை விட்டு இறங்கு
65. பாபநாச மீனாக பிறந்தாலும் பாவமெல்லாம் போகும்
66. பத்தமடை பாய்க்குப் பழுதா சொல்வார்கள்?
67. நாங்குனேரி எண்ணெய்க் கிணறுபோல
68. இதென்ன தென்காசி வழக்கா?
69. தூத்துக்குடி சந்தையிலே துட்டுக்கொரு வைப்பாட்டி
70. இருக்க பறக்க, சுகிக்க சுசீந்திரம்
71. வாங்குபோட்ட இடம் திருவிதாங்கூர்
72. எல்லாருக்கு அண்ணாமலை
எவனோ ஒருவருக்குத் திருவரங்கம்
73. விருத்தாசலம் போனால் திரண்ட பாவம் தொலையும்
74. உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன்
உடையார் பாளையத்தில் உடும்பு பிடிப்பானா?
75. நாகூர் உபசாரமாய் உள்ளது
76. வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போயும்
வயிற்றுவலி தீரவில்லை
77. ராமேசுவரத்திற்குப் போனாலும் சனீஸ்வரன் தொலையவில்லை
78. அண்ணாமலையில் பிறந்தவனுக்கு
அருணாசலபுராணம் படிக்கவேண்டுமா?
79. அவல் பெருத்தது ஆர்க்காடு
80. ஆயிரமானாலும் மாயூரமாகாது

81. ஆளிலும் ஆள் அம்மாபேட்டை ஆள்
82. ஊருக்குக் கடைசி உலகம்பட்டி
83. கங்கைக்கு நிகரான நதியுமில்லை
காசிக்கு நிகரான பதியுமில்லை
84. கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சிபுரத்தில் பிறக்கவேண்டும்
85. சிக்கலில் வேல் வாங்கிச்
செந்தூரில் சங்காரம்
86. ஸ்ரீரங்கத்து நடையழகு
காஞ்சிபுரத்து குடையழகு
87. சீரங்கம் நடை
பெருமாள் குடை
திருப்பதி வடை
திருநாராயணபுரம் முடி
88. திண்டுக்கல் உப்பு இரண்டுக்கு ஒன்று
89. திருச்சிராப்பள்ளி தேவடியாளுக்கு
இருத்தினாற்போலக் கொண்டையாம்
90. திருச்செந்தூர் முக்காணிச்சி
சொருக்கை நினைத்து அழுதாளாம்
91. திருத்தணி முருகன் வழித்துணை வருவான்
92. திருவாரூத் தேர் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
மன்னார்குடி மதில் அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
கும்பகோணம் கோயில் அழகு
93. தில்லை மூவாயிரம்
செந்தில் ஆறாயிரம்
94. தென்காசி ஆசாரம்
திருநெல்வேலி உபசாரம்
95. நெல்லூர் மாடுபோல் இருக்கிறாள்
96. பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால்
கொட்டைப்பாக்கு விலை என்ன என்றான்
97. பெய்து விளைகிறது மலையாளச் சீமை
பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர்ச் சீமை
காய்ந்து விளைகிறது இராமநாதபுரச் சீமை

98. மாடக்குளம் பெருகினால் மதுரை பாழ்
99. மெலட்டூர் மீனுக்கு திருவாரூர் திப்பிசம்
100. வயிற்றுச் சோற்றுக்கு வைத்தீஸ்வரன் கோயில் வரை
101. வெல்லம் பெருத்தது வேலூர்

கிழமை, மாதங்கள் பற்றிய பழமொழிகள்

1. நாள் செய்வது நல்லோர் செய்யமாட்டார்
2. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை
3. ஞாயிறு பிறந்தால் நாய் பிறப்பு
4. ஞானிக்கில்லை ஞாயிறும் திங்களும்
5. ஞாயிற்றுக்கிழமை நாய்கூட எள்ளுக்காட்டுக்குப் போகாது
6. ஆனால் ஆதிவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்
7. திங்களும் சனியும் தெற்கே நோக்க வேண்டும்
8. செவ்வாயோ வெறுவாயோ
9. கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை
10. செவ்வாய் வெள்ளி செலவிடாதே
11. செவ்வாய் நட்டு புதன் அறுக்கலாகாது
12. செவ்வாயும் வெறுவாயும்
13. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
14. தங்கின வியாழன் தன்னோடு மூன்று பெயர்
15. வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது
16. கொள்ளிக்கு எதிர் போனாலும்
    வெள்ளிக்கு எதிர் போகலாகாது
17. வெள்ளிக்கிழமை கொள்ளிக்கு ஆகாது
18. வெள்ளி எண்ணெய் கொள்ளிக்கு ஆகாது
19. வெள்ளி எதிரே போனாலும்
    வேளாளனுக்கு எதிரே போகலாகாது
20. சனி நீராடு
21. சனி விரதம் பீடை கழிக்கும்
22. சனிப்பிணம் தனியே போகாது
23. சனிப்பிணம் துணை கூட்டும்
24. சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால்
    சீரும் சிறப்பும் கெடும்
25. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்

26. சித்திரை அப்பன் தெருவிலே வைக்கும்
27. சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனும் இல்லை
ஐப்பசி மாதத்தில் பிறந்த அதிர்ஷ்டவானும் இல்லை
28. சித்திரை மாதம் சீர் கூட்டும்
29. சித்திரை பெய்தால் பொன்னேர் கட்டலாம்
30. சித்திரை மின்னல் ஆகாது
31. வைகாசி மாதத்தில் ஆற்றில் தண்ணீர்
32. வைகாசி மழை வாழை பெருகும்
33. வைகாசி மாதம் வாய்மடையில் ஏர்பூட்டப்
பொய்யாமல் பூக்கும் பூமி
34. ஆனி அடியிடாதே கூனி குடி புகாதே
35. ஆனி ஆறாந்தேதி இடித்தால்
அறுபது நாளைக்கு மழையில்லை
36. ஆனி அடைச்சாரல் ஆவணி முச்சாரல்
37. ஆடிப்பட்டம் தேடிவிதை
38. ஆடிவிதை தேடிப்போடு
39. ஆடிப்பருத்தி தேடி விதை
40. ஆடி வாழை தேடி எடு
41. ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்து போகும்
42. ஆடிக்காற்றிலே இலவம் பஞ்சு பறந்தாற்போல
43. ஆடிக்கொரு தடவை அமாவாசைக்கொரு தடவையா?
44. ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
அடுத்த அமாவாசை வரை மழையில்லை
45. ஆடி ஞாயிறு ஐந்தானால்
அரிசி விற்றவிலை நெல் விற்கும்
46. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
47. ஆடிக்காற்றில் உதிரும் சருகு போல
48. ஆடிக்கு அழையாத மாமியாரைத்
தேடிப்பிடித்து செருப்பால் அடி
49. ஆடி மழையில் ஆயிரம் காளான்கள்
50. ஆடிக்கொரு தடவை அமாவாசைக்கொரு தடவை
51. ஆடி பதினெட்டில் விதைத்த விதையும்
அறுநான்கில் பிறந்த பிள்ளையும்
52. ஆவணி மாதம் அழுகைத் தூற்றல்

53. ஆவணி ஆறில் இடிஇடித்தால் நல்லமழை
54. புரட்டாசி நடுகை திரட்சியான படுகை
55. புரட்டாசி மாத நடவு பெரியோர் தேடிய தனம்
56. புரட்டாசி மாதம் முப்பதும் ஒரு கந்தாயமா?
57. புரட்டாசி பெய்தாலும் பெய்யும்
காய்ந்தாலும் காயும்
58. புரட்டாசி பெய்து பிறக்கணும்
ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
59. ஐப்பசி மாதம் அடை மழை
கார்த்திகை மாதம் கனமழை
60. ஐப்பசி மாதம் அழுகைத் தூற்றல்
61. ஐப்பசி மாதம் நடலாகாது
62. கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை
கர்ணனுக்கு மிஞ்சின கொடையுமில்லை
63. கார்த்திகைப் பிறை கண்டவன் போல
64. கார்த்திகை மாதத்துப் பூமாதேவி போல
65. கார்த்திகை கால் கோடை
66. காயுங்கனி உண்டானால்
கார்த்திகை மாதம் கல்யாணம்
67. கார்த்திகை மாதம் கனமழை
68. கார்த்திகை மாதத்து மழையில்
கல்லுக்குள் உள்ள புல்லும் கதிராகும்
69. அசுவினி கார்த்திகையில் இடிஇடித்தால்
ஆறு கார்த்திகையில் மழையில்லை
70. மார்கழி மண்ணுக்கு மழை உதவாது
71. மார்கழி பிறந்தால் மழையில்லை
பாரதம் முடிந்தால் படையில்லை
72. தை பிறந்தால் வழி பிறக்கும்
73. தை மழை நெய் மழை
74. தை மாதம் தரையும் குளிரும்
75. தைப்பனி தரையைத் துளைக்கும்
76. தை பிறந்தது தரை வறண்டது
77. தை வாழை தரையில் போடு
78. தையும் மாசியும் வையகத்தே

79. தை பிறந்தால் தலைக்கோடை
80. மாசி மின்னல் மரம் தழைக்கும்
81. மாசிப்பனி மச்சையும் துளைக்கும்
82. மாசி மழை மாதுளை பூக்கும்
83. பங்குனி மழை பத்துக்கும் நட்டம்
84. பங்குனி மாதம் பந்தலைத் தேடு
85. பங்குனி மாதம் பகல்வழி நடப்பவன் பெரும்பாவி
86. சித்திரை என்று சிறப்பதுமில்லை
பங்குனி என்று பருப்பதுமில்லை
87. ஆணி அரை ஆறு
ஆவணி முழு ஆறு
88. ஆடி மாதம் அவரை போட்டால்
கார்த்திகை மாதம் காய் காய்க்கும்
89. ஆடிக்கொரு விரை போட்டால்
கார்த்திகைக்கொரு காய் காய்க்கும்
90. புரட்டாசி விரையாகாது
ஐப்பசி நடவாகாது
91. அரிசி பருப்பிருந்தால் ஐப்பசி மாதம் கல்யாணம்
காய்கறியிருந்தால் கார்த்திகை மாதம் கல்யாணம்
92. மாசி பங்குனியில் கரும்பறு
93. தையில் வளராத புல்லுமில்லை
94. மாசியில் முளையாத மரமுமில்லை
95. ஆடி முதல் பத்து
ஆவணி நடுப்பத்து
புரட்டாசி கடைப்பத்து
96. தை எள்ளு தரையில்
மாசி எள்ளு மடியில் (பணம்)
வைகாசி எள்ளு வாயில்
97. ஆடிக் காற்றில் இலவம் பஞ்சு பறந்ததுபோல
98. ஆவணி தலைவெள்ளமும்
ஐப்பசி கடைவெள்ளமும் கெடுதி

நாட்டுப்புற மருத்துவப் பழமொழிகள்

1. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

2. நோய்க்கு இடங்கொடேல்
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
4. சுக்குக்கு மிஞ்சிய கஷாயமில்லை
5. பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்
6. ஒரு மிளகும் நான்கு உப்பும் போதும்
7. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி
8. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்
9. பேராமுட்டிப் பேரை உரைத்தால்
காதவழி தூரம் கண் தெரியும்
10. சனி நீராடு
11. ஆற்றுநீர் வாதம் போக்கும்
கிணற்றுநீர் பித்தம் போக்கும்
சோற்றுநீர் இரண்டும் போக்கும்
12. கொழுத்தவனுக்குக் கொள்ளும்
இளைத்தவனுக்கு எள்ளும்
13. வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு
14. காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்துவிட்டால் நம்புவதற்கு இல்லை
15. மாதாவுக்குச் சுகமிருந்தால் கர்ப்பத்திற்கும் சுகமுண்டு
16. பாலும் தழையும் சேராத மருந்தும்
பாகும் நெய்யும் சேராத லேகியமும் வீண்
17. நொறுங்கத் தின்றால் நூறு வயது
18. தூதுவளை ஆயுளை விருத்தி செய்யும்.
19. தன் காயம் காக்க வெங்காயம் வேண்டும்
20. தின்ற மண்ணுக்குத் தக்க சோகை
21. நன்னாரி மேனியைப் பொன்னாக்கும்
22. நெய்யுருக்கி? மோர் பெருக்கி, நீர் சுருக்கி
23. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்
24. மூலிகை அறிந்தால் மூவுலகும் ஆளலாம்
25. ஊனும் உறக்கமும் ஒத்தார்க்கு ஒத்தபடி
26. பால ஜோசியம் விருத்த வைத்தியம்
27. தாது அறியாதவன் பேதை வைத்தியன்
28. மண்டை உள்ளமட்டும் சளி போகாது
29. விருந்தும் மருந்தும் மூன்றுநாள்

30. கட்டியைக் கீறி ஆற்றவேண்டும்
31. உணவே மருந்து மருந்தே உணவு
32. பொன்னாங் கண்ணிக்குப் புளியிட்டு ஆக்கினால்
உண்ணாப் பெண்ணும் உழக்கு உண்பாள்
33. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்கவேண்டும்
34. விடாச்சுரத்து விஷ்ணுகரந்தை
35. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்
ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்
36. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்
37. வில்வம் பித்தம் தீர்க்கும்
38. வேப்பெண்ணெய் விருந்தெண்ணெய் அல்ல
மருந்தெண்ணெய்
39. வேப்பெண்ணெய் ஆபத்துக்கு உதவும்
40. வாதத்துக்கு மருந்துண்டு
பிடிவாதத்துக்கு மருந்தில்லை
41. லங்கணம் பரம ஔவிதம்
42. விந்து விட்டவன் நொந்து கெட்டான்
43. நித்திரை சத்துரு
44. அண்டத்திற்குள்ளது பிண்டத்திற்கு
45. பிரம் பேணின் பாரம் தாங்கும்
46. கக்கின பிள்ளை தக்கும்
47. காலை இஞ்சி
கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய்
48. நோய் கொண்டார் பேய் கொண்டார்
49. 'ஏழைக்குக் கரிசாலை
50. இளைத்தவனுக்கு இரும்பைக்கொடு
51. கோழையை அறுக்கும் குப்பைமேனிச்சாறு
52. உயர் வாந்தி தீர நீருடன் கடுகு அரைத்திடு
53. வைத்தியன் பாராத நோய் தீருமா?
54. வைத்தியத்தில் இரண வைத்தியமும்
வயதில் இளமையும் நன்மை தரும்
55. வியாதிக்கு மருந்துண்டு
விதிக்கு மருந்துண்டா?

56. நாள் இரண்டு (மலம் கழித்தல்)
வாரம் இரண்டு (எண்ணெய் குளியல்)
மாதம் இரண்டு (போகம்)
வருஷம் இரண்டு (குடலைத் தூய்மைசெய்தல்)
57. கறந்த பாலைக் காய்ச்சாமல் குடித்தால்
காசநோய் தானாக வரும்
58. வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதம்
59. நோய்க்கிடங்கொடேல்
60. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்
இஞ்சி சுரம் போக்கும்
61. மூடி வைத்த புண் ஆறாது
62. கொடிமுள்ளி நாறும் கபத்தைப் போக்கும்
63. உண்டபின் ஒரு மைல் நட
64. சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை
சுப்பிரமணியருக்கு மிஞ்சிய சாமியுமில்லை
65. ஒருபோது உண்பான் யோகி
இருபோது உண்பான் போகி
முப்போது உண்பான் ரோகி
66. எருது புண்ணிற்குச் சாம்பல் மருந்து
67. எருதுக்கும் தன்புண் அழற்சி
68. என்ன தின்னாலும் அதற்குமேல்
நான்கு பேரீச்சம்பழம் தின்றால் போதும்
69. ஆறின புண்ணிலும் அசடு நிற்கும்
70. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
71. ஆவிரை இலையும் ஆபத்துக்கு உதவும்
72. மூக்குள்ள மட்டும் சளிதான்
73. பல்லுப் போனால் சொல்லுப் போச்சு
74. மனக்கவலை பலக்குறைவு
75. விந்து விட்டாயோ? நொந்து கெட்டாயோ?
76. காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்துவிட்டால் நம்பக்கூடாது
77. அரவந் தீண்டினால் அழுஞ்சிவேர்ப்பட்டை இடு
78. அரிப்புக்கு மூத்திரம் கைகண்ட ஔடதம்
79. அருஞ்சுனை நீருண்டால் அப்போதே ரோகம்
80. அனைத்து வியாதிக்கும் அருகம்புல் சாறு

81. ஆசன வெடிப்புக்கு துத்திக்கீரை
82. ஆரம்ப கஷாயத்திற்கு ஆகாசத் தாமரைக் கஷாயம்
83. இடுப்பு வலிக்கு கண்டந்திப்பிலி லேகியம்
84. இருதய வியாதிக்கு வெண்தாமரைக் கஷாயம்
85. இளநீர் நீர்க்கடுப்புக்கு நல்லது
86. உண்டவுடன் உடலுறவு ஆகாது
87. எந்த வீக்கத்திற்கும் எருக்கன்பாலை அடி
88. கடுப்பு வாதத்திற்கு வேம்புக் கஷாயம்
89. துளசி இலைச்சாறு கபத்தைப் போக்கும்
90. கழிச்சலைப் போக்க மாதுளம் பிஞ்சு
91. காமாலைச் சோகைக்குக்கையான் சாறேற்று
92. கீரைப் பூச்சிக்கு இருமா முருங்கைச்சாறு
93. கோழையை அகற்ற சித்தரத்தை
94. சீரகம் தின்னச் சீரணம் ஆகும்
95. சீரான மாதவிடாய்க்கு வெந்தயக் கீரை
96. நரம்புத் தளர்ச்சியைப் போக்க மணத்தக்காளிக்கீரை
97. நோயைக் கட்ட வாயைக் கட்டு
98. பாம்புக் கடிக்கு வாழைப்பட்டைச் சாறு
99. முடக்கு வாதத்திற்கு முடக்கத்தான்
100. வயிற்று இரணத்திற்கு வாழைப்பிஞ்சு
101. வாத நோய்க்குப் புளிச்ச கீரை
102. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் சாப்பிடவேண்டும்
103. விரை வாதத்திற்கு வெந்தயக் கஷாயம்
104. இருதய நோய்க்கு வெந்தயக்கீரை
105. அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாது
106. காமாலைக் காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்
107. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்
108. இறங்கு பொழுதில் மருந்துகுடி
109. புழக்கடைப் பச்சிலை மருந்துக்கு உதவாது
110. மனநோய்க்கு மருந்துண்டா?
111. வைத்தியன் சொன்னதெல்லாம் மருந்து
112. வைத்தியன் மருந்திலும் கை வைத்தியமே நலம்
113. நரம்புச் சிலந்திக்கு மல்லிகைப்பூ
114. மஞ்சள் காமாலைக்கு வேளைச்சாற்றைக் கண்ணில் பிழி

115. பித்தம் தனிய இலந்தைப்பழம் உண்ணு
116. அரணைக் கடிக்கு சிறு குறிஞ்சான்
117. சன்னிக்குக் கஸ்தூரி
118. மயில் மாணிக்கம் ஆண்மை உண்டாக்கும்
119. நல்லெண்ணெய் காதில் ஊற்ற போதை நீங்கும்
120. பீலி சுரத்திற்குப் பெருஞ்சுங்காங் கோரையிடு
121. பைத்தியம் தீர்க்கும் பாதரட்சைத் தோல்
122. மேகத்தைத் நீக்கும் பரங்கிச் சக்கை
123. வன்னியலை யுண்ண முதுமேகந் தீரும்
124. ஓமம் உண்டால் நோய் அணுகாது
125. வேளையைத் தின்ன பல் பிணிப்போம்
126. உயர்வாந்தி தீர நீருடன் கடுகை அரைத்திடு
127. வெக்குக்கை வேலி மறைப்பு
128. கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து
129. கூழானாலும் குளித்துக்குடி
130. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
131. ஆலுக்குப் பல் இறுகும்
வேலுக்குப் பல் துலங்கும்
132. சளி பிடித்ததோ? சனி பிடித்ததோ?
133. மாதா பிதா செய்தவை மகனுக்கு
134. ஆண்டிக்கு வாய்த்தது ஐந்தும் குருடு
135. சுக்கு கண்ட இடத்தில் பிள்ளை பெறுவது
136. மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யும்
137. சுகத்தைக் கொடுத்தும் சுகத்தைத் தேடு
138. நோயோ பேயோ?
139. எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்
140. நோய் கொண்டார் பேய் கொண்டார்
141. அஸ்தியிலே ஜுரம்
142. அரணைக் கடித்தால் அப்போதே மரணம்
143. அறுகங்கட்டையும் ஆபத்துக்குதவும்
144. அன்னமயமே பிராணமயம்
145. அன்னம் இறங்குவதே அபான வாயுவால்
146. அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்

147. இரசவாதிக்கு ஏது பஞ்சம்
148. இரும்பு பிடித்தவன் கையும்
சிரங்கு பிடித்தவன் கையும் சும்மாயிராது
149. உப்புக்கட்டினால் உலோகம் கட்டும்
150. உல்லாச நடை மேலுக்குக் கேடு
மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு
151. ஊத அறிந்தவன் வாதி
உப்பை ஒழித்தவன் யோகி
152. ஊழிக் காய்ச்சல் அதிகமானால்
சூன்யக்காரன் பாடு கொள்ளை
153. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்
இஞ்சி சுரம் சளி போக்கும்
154. எருதுக்குப் பின்னாக்கு
ஏழைக்குக் கரிசாலை
155. இளம்பிள்ளை தாய்ச்சிக்கு எட்டே கடுக்காய்
156. ஏறும் தேமல் இறங்கும் படர்தாமரை
157. ஆவிரை இலையும் ஆபத்துக்குதவும்
158. நாய்க்கடிக்குக் காடியைக் கொடு
159. கடுக்காய்க்கு அக்னி நஞ்சு
சுக்கிற்குப் புறணி நஞ்சு
160. கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்
161. கண்ணில் புண் வந்தால்
கண்ணாடி பார்க்கலாகாது
162. கடலோர வேருக்குச் சாரமில்லை
கட்டாத உப்புக்கு வீரமில்லை
163. கொல்லைப் பச்சிலை மருந்துக்கு உதவுமா?
164. கோரைக் கிழங்கும் வேளையில் உதவும்
165. சாப்பிணி மருந்தேற்காது
166. சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம்
167. பேதியில்லை என்றால் சேர்வாளத்தைப் பார்

168. பாலும் தழையும் சேராத தைலம்
பாகும் நெய்யும் சேராத லேகியம்
நாலும் இரண்டும் பாராத கல்வி நன்றாகாது
169. சுங்கிலைத் தின்றால் வெண்கலமாகும்
170. சாகிற வரையில் வைத்தியன் விடான்
செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
171. சித்தி பெறாத மருந்தும் மருந்தோ?
172. சிறியார்க்கினியதைக் காட்டாதே
சேம்புக்குப் புளி விட்டாக்காதே
173. கார்த்திகை மாதம் கருணைக்கிழங்கு சாப்பிடவேண்டும்
174. குமரிக்கு மூப்பில்லை, கோவைக்குத் தோப்பில்லை
175. குடலேற்றம் தெரியாமல் கோடி பணம் செலவழித்தால் தீருமா?
176. கைக்கோளனுக்குக் கால் புண்ணும்
நாய்க்குத் தலைப்புண்ணும் ஆகாது
177. கொடி முள்ளி நாலும் கபத்தை அறுக்கும்
178. திரிமலை தின்றால் துவரேறும்
கறிவேம்பு தின்றால் பசியேறும்
179. நாகம் சேராத மருந்தில்லை
காகம் இல்லாத ஊரில்லை
180. நாடிப் பார்க்கத் தெரியாத வைத்தியன்
நமனுக்கே சவால் விட்டானாம்
181. படமுள்ளு நாலும் திடவாயு போக்கும்
182. பீதரோகினி பேரையுரைத்திடில்
ஊரைவிட்டு ஓடுஞ்சுரம்
183. மருந்து கால், மதி முக்கால்
184. துக்கத்தைச் சொல்லி ஆற்ற வேண்டும்
கட்டியைக் கீறி ஆற்ற வேண்டும்
185. வாதி மகன் வைத்தியன்
186. வெட்டிவேரில் விசிறியும்
விளமிச்சவேரில் தட்டியும் பண்ணு
187. வைத்தியனுக்குத் தன்மருந்து பலிக்காது
188. வைத்தியனும் கைவிட்டால் ஆண்டவனே கதி

189. வைத்தியன் தகப்பன் போன்றவன்
190. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை
191. இருப்பவன் இரும்பைத் திண்பான்
போறவன் பொன்னைத் தின்பான்
192. மாதுளை தூதுவளை வளர்ந்த வீடு
வயிற்றிலே நெஞ்சிலே களங்கமில்லை
193. நாய்ச்சூல் நாற்பது நாள்
194. அருஞ்சுனை நீருண்டால் அப்போதே சுரம்
195. வைத்தியன் சொன்னதெல்லாம் மருந்து
196. நீர்ச்சோறு தின்று நிழலிலிருந்தால் மலடிக்கும் மசக்கை வரும்
197. வைத்தியனுக்கும் அஞ்சவேண்டும்
வம்பனுக்கும் அஞ்சவேண்டும்
198. வைத்தியன் பெரிதோ, மருந்து பெரிதோ
199. உள்ளங்கை புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
200. தூங்கினவன் சாகிறதில்லை
வீங்கினவன் பிழைக்கிறதில்லை
201. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்

இலக்கியம் பற்றிய பழமொழிகள்

1. அவ்வைச்சொல் அமிழ்தம்
2. உலாவுக்கு ஒட்டக்கூத்தர்
3. கல்வியில் பெரியவன் கம்பன்
4. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்
5. இலக்கியம் இன்றேல் இலக்கணமில்லை
6. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்
7. கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே
8. கந்தபுராணத்தில் எல்லாமுண்டு
9. காஞ்சிபுராணத்தில் எல்லாமுண்டு
10. தமிழுக்கு இருவர் கதி
11. திருவாசகத்திற்கு உருகாதார்
ஒரு வாசகத்திற்கும் உருகார்
12. நைடதம் புலவர்க்கு ஔடதம்
13. பக்திக்குச் சேக்கிழார்
14. பரணிக்குச் செயங்கொண்டார்

15. வெண்பாவிற்கு புகழேந்தி
16. வனத்திற்கு வியாசர்
போருக்கு வால்மீகி
17. ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்
18. காரிகை கற்றுக் கவிபாடாதவன்
பேரிகை கொட்டிப் பிழைப்பதே மேல்
19. தமிழுக்கு இருவர், தத்துவத்திற்கு ஒருவர்
20. படிக்கிறது திருவாசகம்
இடிப்பது சிவன்கோயில்
21. படிப்பது திருவாய்மொழி
இடிப்பது பெருமாள்கோவில்
22. புலவர்க்கு வெண்பா புலி
23. சாத்திரத்துக்குத் திருமந்திரம்
தோத்திரத்திற்குத் திருவாசகம்
24. செத்தும் கொடுத்தான் சீதக்காதி
25. தவத்துக்கு ஒருவர்
கல்விக்கு இருவர்
வழிக்கு மூவர்
26. தாரம் வாய்த்தது வள்ளுவருக்கு
தம்பி வாய்த்தது இராமருக்கு
27. படிக்கிறது சிவபுராணம்
இடிக்கிறது சிவன்கோயில்
28. படிப்பது இராமாயணம்
இடிக்கிறது பெருமாள்கோயில்
29. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே
30. அடியிலிருந்து பிடிடா பாரதபட்டா
31. கம்பன் போனவழி
32. கலம்பகத்திற்கு இரட்டையர்
33. குறிஞ்சிக்குக் கபிலர்
34. சதகங்களில் சிறந்தது வைராக்கிய சதகம்
35. சந்தத்திற்கு அருணகிரி
36. திருவாசத்திற்கு உருகார்
ஒருவாசகத்திற்கும் உருகார்
37. பரணிக்கு ஜெயங்கொண்டார்
38. விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்

39. செத்தும் கொடுத்தான் சீதக்காதி
40. விடியவிடிய இராமாயணம் கேட்டுச்
சீதைக்கு இராமன் சிற்றப்பன் என்றானாம்
41. ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி
42. கர்ணன் கொடை பாதி காவிரி பாதி
43. கார்த்திகைக்குப் பின் மழையில்லை
கர்ணனுக்குப்பின் கொடையில்லை
44. அறுத்தும் அரசாண்டாள் பொன்னுருவி
45. வில்லுக்கு விசயன்
46. ஆற்று மணலை எண்ணினாலும்
அர்ச்சுனன் பொண்டாட்டியை எண்ண முடியாது
47. இராமன் இருக்குமிடம் அயோத்தி
48. இராமன் இல்லாத அயோத்தி போல
49. இராமாயணத்திற்கு எதிர்பானம் உண்டா?
50. இராமன் பிறப்பு இராவணன் இறப்பு
51. தசரதன் மகன் தசகண்டனுக்கு எமன்
52. இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன?
53. இராமனைப் போல் அரசன் இருந்தால்
அனுமானைப் போல் சேவகன் இருப்பான்
54. இராமனேயானாலும் சீதைக்காக அழவில்லையா?
55. இராம நாமமே கற்கண்டு
அதன் ரசம் அறியாதவர் கற்குண்டு
56. சீதை பிறக்க இலங்கை அழிய
57. அசோகவனத்துச் சீதை போல
58. இலக்குவணன் போல இவனுக்கும் மூக்குமேலே கோபம
59. அனுமாருக்குத் தன்பலம் தெரியாததுபோல
60. இராவணனுக்கு இரத்தின சிம்மாசனம்
அனுமானுக்கு வாலே சிம்மாசனம்
61. எங்கே இராமாயணப் பிரச்சனம்
அங்கே அனுமார் பிரச்சனம்
62. அனுமார் இப்போது இங்கிருந்தால்
சஞ்சீவி பர்வதம் இங்கே வராதா?
63. இராமர் பட்டாபிஷேகத்தில்
வானரங்கள் விருந்து சாப்பிட்டது போல

64. இவன் என்ன பத்துத்தலை இராவணனா?
65. கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான்
இலங்கை வேந்தன்
66. வாலிக்கு இராவணன் பத்துத்தலைப் பூச்சி
67. ஒரு கூனி போதுமே ஒன்பது குடியைக் கெடுக்க
68. கைகேயி கேட்ட வரம்போல
69. மாரீசனைப் பார்க்க பொய்மான் காட்டுக்கா போகனும்
இவனைப் பார்த்தால் போதாதா?

புராண, இதிகாசம் பற்றிய பழமொழிகள்

1. ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி
2. அடியைப் பிடியடா பாரதபட்டா
3. அறுத்தும் அரசாண்டாள் பொன்னுருவி
4. வில்லுக்கு விசயன்
5. ஆற்று மணலை எண்ணினாலும்
அர்ச்சுணன் பொண்டாட்டிய எண்ண முடியாது
6. அல்லி பேரைக் கேட்டால்
அழுதபிள்ளை வாய் மூடும்
7. அழகால் கெட்டாள் சீதை
வாயால் கெட்டாள் திரௌபதி
8. இந்திரன் கெட்டதும் பெண்ணாலே
சந்திரன் கெட்டதும் பெண்ணாலே
9. இருந்தக்கால் சீதேவி
நடந்தக்கால் மூதேவி
10. காந்தாரி கண்பட்டால் கல்லும் கரிந்துவிடும்
11. சீதேவியுடன் மூதேவி பிறந்தாற்போல
12. சீதை பிறந்தது இலங்கையழிய
13. பிள்ளையாருக்குப் பெண் பார்த்தாற்போல
14. மகாலெட்சுமி பரதேசம் போனாற்போல
15. வறுமைக்கு மூதேவியும் செல்வத்துக்குச் சீதேவியும்
16. இராமன் ஆண்டாலென்ன?
இராவணன் ஆண்டாலென்ன?
17. கையிலே இருந்தால் எல்லோரும் கர்ணன்
18. பாரதம் முடிந்தால் படையுமில்லை
19. சித்திரபுத்திரனுக்குத் தெரியாமல் சீட்டுக் கிழியுமா?

20. துரியோதனன் குடிக்குச் சகுனிபோல
21. துரோபதையைத் துகில் உரித்ததுபோல
22. பத்தினியைத் தொட்டதும் துரியோதனன் பட்டதும்
23. இராமனைப் போல் இராஜன் இருந்தால்
அனுமானைப் போல் சேவகனிருப்பான்
24. வில்லுக்கு விஜயன், பரிக்கு நகுலன்
25. கார்த்திகைக்கு அப்பால் மழையுமில்லை
கர்ணனுக்கு அப்பால் கொடையுமில்லை
26. அகங்காரத்தால் அழிந்தான் துரியோதனன்
27. அனுமான் சீதையை இலங்கையில் தேடினாற்போல
28. அர்ச்சுனன் போல் அகமுடையானும்
அபிமன்யுபோல் பிள்ளையும்
29. அர்ச்சுனனுக்குப் பகை அரக்கு மாளிகை
30. அழகிலே அர்ஜுனனாம், ஆஸ்தியிலே குபேரனாம்
31. அனுமார் இலங்கையைத் தாண்டினாராம்
ஆனை எதைத் தாண்டும்?
32. ஆரும் அறியாத அரிச்சந்திரன் கட்டின தாலி
33. இராவணன் என்றால் படையும் நடுங்கும்
34. இலங்கையில் பிறந்தவன் எல்லாம் இராவணன் ஆவதில்லை
35. கொடைக்குக் கர்ணன்
படைக்குத் துரியோதனன்
36. கொடைக்குக் குமணன்
சத்தியத்திற்கு அரிச்சந்திரன்
37. சீதை அழகால் கெட்டாள்
திரௌபதி சிரிப்பால் கெட்டாள்
38. சீதை பிறந்தது இலங்கை அழிய
39. சொல்லுக்கு அரிச்சந்திரன்
40. தன்னால்தான் கெட்டான் பத்மாசுரன்
41. நாடு ஆண்டதும் பாண்டவர்
காடு ஆண்டதும் பாண்டவர்
42. பிரம்மதேவன் நினைத்தால் ஆயுளுக்குப் பஞ்சமா?
43. இராமர் இருக்குமிடம் அயோத்தி
44. வில்லுக்கு விஜயன், சொல்லுக்குக் கீரன்
45. வில்லுக்கு விஜயன், பரிக்கு நகுலன்
46. வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அரிச்சந்திரன்

47. ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனானாலும் முடியாது
48. அர்ஜுனன் மனைவிமாரையும்
ஆகாசத்து நட்சத்திரங்களையும் எண்ண முடியாது

உவமைப் பழமொழிகள்

1. அரிசியை அள்ளிய காகம்போல
2. ஆந்தை விழிப்பதுபோல
3. இஞ்சி தின்ற குரங்கு போல
4. இணைபிரியா அன்றில் போல
5. கள் குடித்த குரங்கு போல
6. கீரியும் பாம்பும் போல
7. சூடுகண்ட பூனைபோல
8. பச்சோந்தி போல
9. பாம்பின் வாய்த்தேரை போல
10. பூனையிடம் அகப்பட்ட எலிபோல
11. மதில்மீது பூனை போல

பழமொழிக் கதை

1. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. பாத்திரமறிந்து பிச்சையிடு
4. பேராசை பெரு நஷ்டம்
5. ச்சீ.. ச்சீ.. இந்தப் பழம் புளிக்கும்
6. பூனைக்கு யார் மணி கட்டுவது
7. வளர்த்தகடா மார்பில் பாய்கிறது
8. தீட்டிய மரத்திலே கூர்பார்க்கிறான்
9. பாம்புக்குப் பால் வார்த்த கதை

மனித இயல்புகள் பற்றிய பழமொழிகள்

அன்பு

1. அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்
2. அன்பிருந்தால் ஆகாததுமாகும்
3. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிராது
4. அன்பே சிவம்
5. அன்பிற்குத் திறக்காத பூட்டேயில்லை

6. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
7. அன்பிருக்குமிடம் அரண்மனை

அடக்கம் பற்றிய பழமொழிகள்

1. அடக்கம் ஆயிரம் பொன் தரும்
2. தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்
3. தேர்ஓடி தன் நிலையில் நிற்கும்
4. அடக்கமே பெண்ணுக்கழகு
5. தாழ்ந்து பணிதலே தலைமையாகும்
6. அடக்கமும் அறிவும் ஒன்றாகவே இருக்கும்
7. நிறைகுடம் தளும்பாது
   குறைகுடம் தளும்பும்

ஒழுக்கம் பற்றிய பழமொழிகள்

1. ஒழுக்கம் உயர் பண்பு
2. அறிவுடன் ஞானம்
   அன்புடன் ஒழுக்கம்
3. நேர்பட ஒழுகு

கடமை பற்றிய பழமொழி

1. செய்வன திருந்தச் செய்
2. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே

குணம் பற்றிய பழமொழிகள்

1. குணமில்லாக் கல்வி பாழ்
2. குணமில்லாத மங்கையுடன் கூடாதே
3. குலத்தளவே ஆகும் குணம்
4. கோபமுள்ள இடத்தில் குணமிருக்கும்
5. நாற்பது வயதுக்குமேல் நாய்க்குணம்
6. நிலத்திற்குத் தகுந்த கனியும்
   குலத்திற்குத் தகுந்த குணமும்

பொறுமை பற்றிய பழமொழிகள்

1. பூமியைப் போல் பொறுமை வேண்டும்
2. தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்

3. பொறுத்தார் பூமியாள்வார்
4. பொங்கினார் காடு ஆள்வார்
5. பொறுமை கடலினும் பெரிது
6. பொறுத்தல் கசப்பாயிருந்தாலும்
பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு
7. பொறுமை புண்ணியத்திற்கு வேர்
8. பொறுமைதான் வெற்றிக்கு முதற்படி
9. வைவார்க்கு இன்பமில்லை
பொறுத்தார்க்குத் துன்பமில்லை

மௌனம் பற்றிய பழமொழிகள்

1. பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை
2. மௌனம் மலையைச் சாதிக்கும்

முயற்சி பற்றிய பழமொழிகள்

1. அழுதபிள்ளை பால் குடிக்கும்
2. முயற்சி திருவினையாக்கும்
3. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
4. அடுத்து முயன்றாலும் ஆகும் நாளில் ஆகும்

மனஉறுதி பற்றிய பழமொழி

1. மனிதனின் மனஉறுதி மலைகளையும் தகர்த்து எறியும்

மனசாட்சி பற்றிய பழமொழிகள்

1. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
2. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
3. குற்றம் மறைப்பதால் மற்றொரு குற்றம் நேரும்

திருப்தி பற்றிய பழமொழி

1. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து

நட்பு பற்றிய பழமொழிகள்

1. ஆபத்திலே அறியலாம் அருமை நண்பனை
2. கடுஞ்சிநேகம் கண்ணைக் குத்தும்

3. கடுங்காற்று மழை கூட்டும்
   கடுஞ்சிநேகம் பகை காட்டும்
4. தூர இருந்தால் சேர உறவு
5. சிநேகஞ் செய்த பின் சோதி
   தெளிந்தபின் நம்பு
6. சிறியாரோடு இணங்காதே
   செம்புக்குப் புளியிட்டுக் கடையாதே
7. நல்லவன் உறவை நாலுபணம் கொடுத்து சம்பாதிக்க வேண்டு
   கெட்டவன் உறவைப் பத்துப்பணம் கொடுத்து நீக்க வேண்டு
8. அரும்பசிக்கு உதவாத அன்னமும்
   தாகத்துக்கு உதவாத தண்ணீரும்
   ஆபத்துக்கு உதவாத நண்பனும் ஒன்றே
9. நண்பர்களே அதிகம் நெருங்கிய உறவினர்
10. பெரியாரைத் துணைக்கொள்
11. உயிர் காப்பான் தோழன்
12. ஆபத்துக்கு உதவுபவனே நண்பன்
13. பள்ளிச் சிநேகிதம் பசுமரத்தாணி

நன்றி மறவாமை (gratitude) *பற்றிய பழமொழிகள்*

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
2. உண்ட வீட்டிற்கு ரெண்டகம் நினையாதே
3. நன்றி செய்தார்க்கு அபசாரம் செய்யாதே
4. நன்றி மறந்தவன் நாயினும் கீழானவன்
5. நன்றி மறந்தாரைத் தெய்வம் நின்று கொல்லும்
6. நன்றி மறந்தாரை நடுங்கக் கேட்குமே தெய்வம்

அனுபவம் பற்றிய பழமொழிகள்

1. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்
2. நிழலின் அருமை வெயிலுக்குப் போனால் தெரியும்
3. அப்பன் அருமை செத்தால் தெரியும்
   உப்பின் அருமை உப்பில்லாதபோது தெரியும்
4. பட்டால் தெரியும் பார்ப்பனுக்கு
   கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு
5. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்
6. முட்டை இடுகிற கோழிக்குத் தெரியும் வருத்தம்

ஒத்துப்போதல் (Adjustability) பற்றிய பழமொழிகள்

1. ஊர் ஓட ஒக்க ஓடு
   நாடு ஓட நடுவே ஓடு
2. ஊரோடு ஒத்து வாழ்

ஆசை பற்றிய பழமொழிகள்

1. அதிக ஆசை அதிக நட்டம்
2. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்
3. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
4. ஆசை உள்ளளவும் அலைச்சலுண்டு
5. ஆசை அறுபதுநாள்
   மோகம் முப்பது நாள்
6. ஆசை இருக்கிறது தாசில் பண்ண
   அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க
7. ஆசை வெட்கமறியாது
8. ஆசை வைத்தால் நாசந்தான்
9. கடல் தாண்ட ஆசையுண்டு
   கால்வாய் தாண்ட காலில்லை
10. கூழுக்கும் ஆசை
    மீசைக்கும் ஆசை
11. பண ஆசை தீமைக்கு வேர்
12. பொண்டாட்டி ஆசை திண்டாட்டத்தில் விட்டது
13. பெண்ணாசை ஒரு பக்கம்
    மண்ணாசை ஒரு பக்கம்
14. பேராசை பெரு நஷ்டம்
15. வட்டியாசை முதலுக்குக் கேடு
16. வண்ணானுக்கு வண்ணாத்தி மீது ஆசை
    வண்ணாத்திக்கு கழுதைமீது ஆசை
17. வாணியன் ஆசை கோணி கொள்ளாது
18. ஆசைக்கு அளவில்லை
19. பிள்ளை பெறப்பெற ஆசை
    பணம் சேரச்சேர ஆசை
20. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல
21. ஆசைகாட்டி மோசம் செய்தல்
22. கன ஆசை கன நஷ்டம்

23. ஆசை அணுவானாலும் ஆளை விடாது
24. ஆசைப்படு மோசம் போகாதே
25. ஆசையுள்ள இடத்தில் பூசை நடக்கும்

மகிழ்ச்சி பற்றிய பழமொழிகள்

1. பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல
2. புதையல் எடுத்தவனைப் போல
3. வயிற்றிலே பாலை வார்த்ததுபோல

அவசரம் பற்றிய பழமொழிகள்

1. அவசரத்துக்குப் பாவமில்லை
2. அவசரக்காரனுக்குப் புத்திமட்டு
3. அவசரம் அல்லலை விளைக்கும்
4. பதறிச் செய்கிற காரியம் சிதறிப்போகும்

விருந்தோம்பல் பற்றிய பழமொழிகள்

1. விருந்து வராத வீடு சுடுகாடு
2. விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு
3. அழையாத வீட்டில் நுழையாதே
4. பந்தியிலே உட்காரயிலே இலை பீத்தல் என்றானாம்
5. விருந்தில்லாச் சோறு மருந்தோடொக்கும்
6. விருந்திட்டால் பகைமை வளர்கிறது
7. தன் வீட்டுக்கு வந்த விருந்தாளியை
   அயல் வீட்டுக்குப் போகச் சொன்னால் போவானா?

தன்னைப் பற்றியது (self) என்ற பொருளைக் கூறும் பழமொழிகள்

1. தன் இச்சையை அடக்காவிட்டால்
   அது தன்னையே ஆளும்
2. தன் இனம் தன்னைக் காக்கும்
   வேலி பயிரைக் காக்கும்
3. தன் குற்றம் தனக்குத் தெரியாது
4. தன் கையே தனக்குதவி
5. தன் நிழல் தன்னைக் காக்கும்
6. தன் பாவம் தன்னோட

7. தன் முதுகு தனக்குத் தெரியாது
8. தன் வாயால் தான் கெட்டான்
9. தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை
10. தனக்கென ஒருத்தி இருந்தால்
    தலைமாட்டிலிருந்து அழுவாள்
11. தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்
12. தான் போகாத காரியத்திற்கு
    மற்றவர்கள் போனால் மட்டு
13. தன்னையறிந்தவன் தத்துவம் அறிந்தவன்
14. தன்னையறிந்தவன் தவசி
15. தன்னை அறிந்தவன் தத்துவஞானி

தற்புகழ்ச்சி **(self praise)** *பற்றிய பழமொழிகள்*

1. எனக்கு எதிரில்லை
   நெல்லுக்குப் பதரில்லை
2. உள்ளங் கையில் வைகுந்தம் காட்டுகிறேன்
3. நான் வாழ்ந்த வாழ்வைச் சொல்கிறேன்
   அண்டை வீட்டுக்காரன் இருக்கிறானா யார்?
4. குப்புற வீழ்ந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை
   என்கிறான்

கவலை பற்றிய பழமொழிகள்

1. உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை
2. மனக்கவலை பலக்குறைவு
3. ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை

வாய்மை (உண்மை) பற்றிய பழமொழிகள்

1. உள்ளதைச் சொன்னால் உடம்பு எரிச்சல்
2. உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை
3. யதார்த்தவாதி வெகுஜன விரோதி
4. கண்ட நியாயம்தான் சொல்லவேண்டும்
5. சத்தியமே வெல்லும் அசத்தியமே கொல்லும்
6. மெய் சொல்லிக் கெட்டவனுமில்லை
   பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை

7. பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை
   மெய்ச்சொல்லி தாழ்ந்தாருமில்லை
8. சத்தியமே நித்திய நெறி
9. சத்தியமே சித்தி
10. சத்தியமே நித்திய தெய்வம்
11. வாய்மைக்கு அரிச்சந்திரன்
12. உண்மை உயர்வு தரும்
13. நேர்பட ஒழுகு
14. உண்மைச் சொன்னால் உண்மை பலிக்கும்
15. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது

பொய் பற்றிய பழமொழிகள்

1. ஒரு பொய்க்கு ஒன்பது பொய்
2. அவனுக்குப் பொய்சத்தியம் பாலும் சோறும்
3. பொய் பொலையாடும் நிஜம் நின்றாடும்
4. வையகத்தில் பொய் சொல்லாதவன் இல்லை
5. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது

கலக்கம் பற்றிய பழமொழிகள்

1. காற்றிலே அகப்பட்ட கப்பல்போல
2. கன்றைத் தேடும் பசுபோல

துக்கம் பற்றிய பழமொழிகள்

1. சுகத்திற்குப் பின் துக்கம்
   துக்கத்திற்குப் பின் சுகம்
2. அற்ப சுகம் கோடி துக்கம்
3. ஆளனில்லாத துக்கம் அழுதாலும் தீராது
4. கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் வைக்காதே
5. சொன்னால் வெட்கம்
   அழுதால் துக்கம்
6. துக்கத்தைச் சொல்லி ஆற்றவேண்டும்
   கட்டியைக் கீறி ஆற்றவேண்டும்
7. துணிகிறவளுக்குத் துக்கமில்லை
8. நித்தம் சாவார்க்கு அழுவார் உண்டோ?
9. பிணம் போகிற இடத்தே துக்கமும் போகிறது

10. உரலுக்கு ஒரு பக்கம் இடி
மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி
11. கட்டை இருக்கிற மட்டும் கஷ்டமுண்டு
12. கொழு கொம்பில்லாத கொடி போலானேன்
13. சாகிற வரையில் கஷ்டமானால் வாழ்வதெப்போது?
14. சிறகில்லா பறவை போலானேன்
15. மூக்குள்ளவரை சளி போகாது
16. இன்பமும் துன்பமும் எடுத்த உடலுக்கு இயல்பு
17. மழைவிட்டும் தூவானம் விடவில்லை
18. ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை

மானம் பற்றிய பழமொழிகள்

1. அரைக்காசுக்குப் போன மானம்
ஆயிரம் கொடுத்தாலும் வராது
2. நாணமுமில்லை மானமுமில்லை
3. மரத்தை இலை காக்கும்
மானத்தைப் பணம் காக்கும்
4. மானம் பெரிதோ பிராணன் பெரிதோ?

வீரம் பற்றிய பழமொழிகள்

1. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?
2. தாய எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்
3. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

அறிவுரைப் பழமொழிகள்

1. பொறுமை கடலினும் பெரிது
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு
4. மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்காதே
5. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து

குற்றம் பற்றிய பழமொழிகள்

1. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது
2. தன்முதுகு தனக்குத் தெரியாது

3. வேண்டாத பெண்சாதி
கைப்பட்டால் குற்றம்
கால்பட்டால் குற்றம்
4. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
5. சூதும் வாதும் வேதனை செய்யும்
6. பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது

ஆத்திரம் பற்றிய பழமொழிகள்

1. ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு
2. பதறாத காரியம் சிதறாது
3. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு
4. அவரசக் கோலம் அள்ளித் தெளித்தாற்போல

வஞ்சகம் பற்றிய பழமொழிகள்

1. அடி நாக்கிலே நஞ்சும்
நுனி நாக்கிலே அமிர்தமும்
2. உண்கிற சோற்றில் நஞ்சைக் கலக்கலாமா?
3. உன்னை வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே
4. கழுத்திலிருப்பது ருத்திராட்சம்
கையிலிருப்பது கன்னக்கோல்
5. வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்
6. வாயிலே உறவு மனதிலே பகை

கோபம் பற்றிய பழமொழிகள்

1. ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் ஆகாது
2. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு
3. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்
இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்
4. கொள்ளைக்கு முந்து
கோபத்துக்குப் பிந்து
5. கோபம் பாபம் கண்டாளாம்
6. சினத்தால் அறுத்த மூக்கு சிரித்தால் வருமா?
7. சினந்தாலும் சீரழியப் பேசாதே
8. முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேல்
9. சாது மிரண்டால் காடு கொள்ளாது

வெட்கம் பற்றிய பழமொழிகள்

1. குளம் எத்தனை கூத்தைக் கண்டதோ?
   கூத்து எத்தனைக் குளத்தைக் கண்டதோ?
2. சொன்னால் வெட்கக்கேடு
   அழுதால் துக்கக்கேடு

வெட்கமின்மை பற்றிய பழமொழிகள்

1. கொழுக்கட்டைக்குத் தலையில்லை
   கூத்தாடிசிக்கு முறையில்லை
2. சிறைச்சாலைக்கு அழகில்லை
   தேவடியாளுக்கு முறையில்லை
3. திருடிக்குத் தெய்வமில்லை
   அவிசாரிக்கு ஆணையில்லை
4. பெற்ற தாயை பெண்டுக்கு அழைப்பான்

பொறாமை பற்றிய பழமொழிகள்

1. கணக்கன் பெண்சாதி கடுக்கன் போட்டுக் கொண்டாள் என்று
   காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக் கொண்டாளாம்
2. பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டாற்போல
3. அயலார் வாழ்ந்தால் அஞ்சு நாள் பட்டினி
4. அயலார் வாழ்ந்தால் அடிவயிற்றில் நெருப்பு

வீண்முயற்சி பற்றிய பழமொழிகள்

1. கொடுக்கிறது உழக்கு பால்
   உதைக்கிறது பல்லுப்போக
2. பட்டும் பாழ்கட்டும் சாவி

பலவந்தம் பற்றிய பழமொழிகள்

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2. அடி உதவுவதுபோல அண்ணன்தம்பி உதவமாட்டார்கள்
3. கண்ணைக் காட்டி அழைத்தால் வராதவள்
   கையைப் பிடித்து அழைத்தால் வருவாளா?
4. வெளுப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்

ஏமாற்றம் பற்றிய பழமொழிகள்

1. இலவு காத்த கிளிபோல
2. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை
3. வெண்ணை திரளும்போது தாழி உடைந்ததுபோல
4. கல்யாணம் செய்தும் சந்நியாசியா?

பிடிவாதம் பற்றிய பழமொழிகள்

1. பிடிவாதம் குடி நாசம்
2. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா
3. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்

பாசாங்கு பற்றிய பழமொழிகள்

1. எட்டினால் குடுமியைப் பிடி
   எட்டாவிட்டால் காலைப் பிடி
2. அடிநாக்கிலே நஞ்சும்
   நுனி நாக்கிலே அமிர்தமும்
3. உதட்டிலே உறவும் நெஞ்சிலே பகையும்
4. கண்டால் காமாட்சி நாயக்கன்
   காணாவிட்டால் பூனை தின்னி
5. கண்டால் முறை சொல்வது
   காணாவிட்டால் பேர் சொல்வது
6. கையில் ஜெபமாலை
   கக்கத்தில் கன்னக்கோல்
7. பார்த்தால் பூனை
   பாய்ந்தால் புலி

நொந்துபோதல் பற்றிய பழமொழிகள்

1. அவன் சிறகொடிந்த பறவை
2. ஆனை அரசாண்ட இடத்தில்
   பூனை புலம்பி அழுகிறது
3. கம்மாளன் பணம் கரியும் பொரியுமாகப் போய்விட்டது
4. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது
5. வாழ்ந்தவன் கெட்டால் வரையோட்டுக்கும் ஆகான்

சாபம் பற்றிய பழமொழிகள்

1. உன் வாயிலே மண் விழ
2. தொண்டையிலே கண்டமாலை புறப்பட

இளப்பம், தாட்சண்யம் பற்றிய பழமொழிகள்

1. ஏர் உழுகிறவன் இளப்பமானால்
   எருது மச்சான் முறை கொண்டாடும்
2. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இளக்காரம்
3. கொட்டினால் தேள்
   கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி
4. தாட்சண்யம் தனநாசம்
5. இத்தனை பெரியவர் கைப்பிடித்து இழுத்தால்
   மாட்டேன் என்று எப்படிச் சொல்வது?
6. ஆண் தாட்சண்யப்பட்டால் கடன்
   பெண் தாட்சண்யப்பட்டால் விபச்சாரம்

சிறியதைச் செய்யான் பெரியதைச் செய்யமாட்டான் என்னும் பொருள் பற்றிய பழமொழிகள்

1. ஆடு கொடாத இடையன் ஆவைக் கொடுப்பானா?
2. உள்ளூரில் ஓணான் பிடிக்காதவன்
   உடையார் பாளையத்தில் உடும்பு பிடிப்பானா?

காக்காய் பிடித்தல் பற்றிய பழமொழி

1. காக்காய் பிடிப்பவனை நம்பாதே

பல்பொருள் பற்றிய பழமொழிகள்

கஞ்சன்

1. எச்சில் கையால் காக்கா ஓட்டமாட்டான்
2. நாறவாயன் தேட, நல்லவாயன் தின்ன
3. அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு தரமாட்டான்
4. உலோபிக்கு இரட்டைச் செலவு

குள்ளன் பற்றிய பழமொழி

1. குள்ளன் குடி கெடுப்பான்
   குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள்

ஆண்டிப் பண்டாரம் பற்றிய பழமொழிகள்

1. ஆண்டி மடம் கட்டியதுபோல
2. ஆண்டிக்கு ஏன் அம்பாரக் கணக்கு
3. ஆண்டி மகன் ஆண்டியானால்
நேரமறிந்து சங்கு ஊதுவான்
4. கொட்டிக் கிழங்கைப் பறிக்கச் சொன்னால்
கோபித்துக் கொள்வார் பண்டாரம்
அவித்து உரித்து முன்னே வைத்தால்
அமுது கொள்வார் பண்டாரம்

சோம்பேறி பற்றிய பழமொழிகள்

1. அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்
2. இருந்தகால் மூதேவி, நடந்தகால் சீதேவி
3. உழுகிற நாளில் ஊருக்குப் போய்
அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டு வந்ததுபோல
4. குந்தித் தின்றால் குன்றும் கரையும்
5. நடந்தால் நாடெல்லாம் உறவு
படுத்தால் பாயும் பகை

வல்லவன் பற்றிய பழமொழிகள்

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
2. வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு
3. வல்லவன் வகுத்ததே வாய்க்கால்

தீயவனைப் பற்றிய பழமொழிகள்

1. அக்கிரமக்காரன் முகத்தில் விழியாதே
2. அவன் செய்த வினை அவனைச் சாரும்
3. ஈனர் சகவாசம் இறுதியில் தெரியும்
4. கெட்டவனுக்குக் கெட்டதுதான் தெரியும்
5. கெட்டவனுக்குக் கெட்டதுதான் கிடைக்கும்
6. பாதகர் பழக்கம் பாம்போடு பழகுதல்போல
7. பெண்வெறி கொண்டவன் புண்ணுற்றழிவான்
8. இருந்தும் கெடுத்தான் பாவி செத்தும் கெடுத்தான்
9. குட்டிக்கலகம் செய்பவன் குட்டுப்பட்டுச் சாவான்

அற்பனைப் பற்றிய பழமொழிகள்

1. அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்தராத்தியில் குடை பிடிப்பான்
2. கோவணத்தில் ஒரு காசு இருந்தால்
கோழி கூப்பிட பாட்டு வரும்

சமுதாயக் கேடர்கள் பற்றிய பழமொழிகள்

1. எரிகிற வீட்டிலே உருவுற வரைக்கும் லாபம்
2. தாடி தீப்பற்றி எரியும்போது
பீடிக்கு நெருப்பு கேட்டானாம்
3. இருக்க இடம் கொடுத்தால்
மடத்தையே பிடுங்குவான்

குமரி பற்றிய பழமொழிகள்

1. ஊருக்குள் நடக்கிற விஷயம் யாருக்குத் தெரியும்
உள்ளே இருக்கிற குமரிக்குத் தெரியும்
2. குமரி ஒரு பிள்ளைக்கு
கோடி ஒரு வெள்ளைக்கு
3. குமரியாக இருக்கையில் கொண்டாட்டம்
கிழவியாக இருக்கையில் திண்டாட்டம்
4. குமரிக்கும் நாய்க்கும் குடிபோகக் கொண்டாட்டம்
5. குமரிக்கு முதுகில் பிள்ளை
6. வாழும் குமரிக்கு வலப்புறத்தில் மச்சம்

செல்வம் பற்றிய பழமொழிகள்

1. அல்லல் ஒரு காலம்
செல்வம் ஒரு காலம்
2. செல்வம் சகடக்கால் போல வரும்
3. செல்வம் சீரழியும்
4. தாட்சண்யம் தனநாசம்
5. வீட்டுச் செல்வம் மாடு
தோட்டச் செல்வம் முருங்கை

ஏழை, பணக்காரன் பற்றிய பழமொழிகள்

1. ஏழைச் சொல் அம்பலம் ஏறாது

2. சிறுமீன் எல்லாம் பெருமீனுக்கு இரை
3. பணக்காரனுடன் பந்தயம் போடலாமா?
4. இல்லாதவன் பொல்லாதவன்
5. ஊன் அற்றபோதே உறவு அற்றது
6. கையிலே காசுமில்லை
   முகத்திலே களையுமில்லை
7. பசி வந்தால் பத்தும் பறந்துபோம்
8. மறைத்துக்கட்ட மாற்றுப்புடவையில்லை
9. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்
10. நம்பிக்கையே ஏழை மனிதனின் வருமானம்
11. கடன் வாங்கி ஏழையானாலும் கடன் கொடுத்து
    ஏழையாகாதே
12. ஏழை பணக்காரனானால் நடுப்பகலில் நட்சத்திரங்களைப்
    பார்ப்பான்
13. ஏழைக்குத் தெய்வமே துணை

வறுமை பற்றிய பழமொழிகள்

1. வறுமைக்கு மூதேவியும் செல்வத்திற்குச் சீதேவியும்
2. வறுமை உள்ளவர்க்குப் பொறுமையுண்டு
3. வறுமை வந்தால் பத்தும் பறந்துபோம்
4. அங்கேண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய்
   இங்கே வாடி காற்றாய் பறக்கலாம்
5. மறைத்துக்கட்ட மாற்றுப்புடவையில்லை
6. புடவை கொடுப்பாளென்று பெண்வீட்டுக்குப் போனால்
   கோணிப்பையைக் கட்டிக்கொண்டு குறுக்கே வந்தாளாம்
7. சீலை இல்லையென்று சின்னாயி வீட்டுக்குப் போனா
   அவள் ஈச்சம்பாயைக் கட்டிக்கொண்டு வந்தாளாம்
8. சிறகில்லாப் பறவைப் போலானேன்
9. ஒரு நாளும் சிரிக்காதவள் திருநாளில் சிரித்தாள்
   திருநாளும் வெறும் நாளாயிற்று
10. எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி
11. இரவல் சேலையை நம்பி இடுப்புக்கந்தையை எறிந்தாளாம்
12. அஷ்ட தரித்திரம் தாய்வீடு
    அதிலும் தரித்திரம் மாமியார் வீடு
13. அவள் பெயர் தங்கமாம் காதில் பீச்சோலையாம்

14. இல்லாதவன் பொல்லாதவன்
15. பசி வந்தால் பத்தும் பறந்துபோம்
16. ஏழைப்பேச்சு அம்பலம் ஏறாது
17. ஊன் அற்றபோதே உறவு அற்றது
18. கையிலே காசுமில்லை
முகத்திலே களையுமில்லை
19. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்
20. நம்பிக்கையே ஏழை மனிதனின் வருமானம்
21. கடன் வாங்கி ஏழையானாலும் கடன் கொடுத்து
ஏழையாகாதே
22. ஏழை பணக்காரனானால் நடுப்பகலில் நட்சத்திரங்களைப்
பார்ப்பான்
23. ஏழைக்குத் தெய்வமே துணை
24. குத்தின காதுக்குக் கொப்பு இல்லை
மத்தியானக் கஞ்சிக்கு உப்பு இல்லை

பசி பற்றிய பழமொழிகள்

1. பசி வந்திட பத்தும் பறந்துபோம்
2. பசித்துப் புசி
3. பசித்தவன் தின்னாததுமில்லை
பகைத்தவன் சொல்லாததுமில்லை
4. பசித்தவன் பழங்கணக்கைப் பார்ப்பதுபோல
5. பசித்தவன்மேல் நம்பிக்கை வைக்காதே
6. பசிக்குக் கறிவேண்டாம்
தூக்கத்துக்குப் பாய் வேண்டாம்
7. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்
8. எருது தன்நோயை நினைக்கும்
காக்கை தன் பசியை நினைக்கும்
9. தலைவலியும் பசியும் தனக்கு வந்தால் தெரியும்
10 பசி ருசி அறியுமா? நித்திரை சுகமடையுமா?

திருட்டு பற்றிய பழமொழிகள்

1. உளவில்லாமல் களவில்லை
2. கள்ளன் பெரிதோ, காப்பான் பெரிதோ
3. கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது

4. அதிகாரியும் தலையாரியும் கூடி
விடியமட்டும் திருடலாம்
5. திருடி தலையாளி வீட்டில் ஒளிந்ததைப் போல
6. இருட்டு வீட்டிற்குப் போனாலும்
திருட்டுக் கை நிற்காது
7. உதட்டுக்கு மிஞ்சின பல்லும்
திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது
8. கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை
9. கள்ளன் பிள்ளைக்கு கள்ள புத்தி
10. கள்ளன் பெண்சாதி கைம்பெண்
11. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
விலைமகளும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்
12. தான் கள்ளன் பிறரை நம்பான்
13. தான் திருடி அயல்வீடு நம்பாள்
கூத்திக் கள்ளன் பெண்சாதி நம்பாள்
14. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
15. திருடனுக்குத் திருட்டுப் புத்தி

தண்டனை பற்றிய பழமொழி

1. உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்
தப்பைச் செய்தவன் தண்டனை கொள்வான்

நீதி பற்றிய பழமொழிகள்

1. சத்தியமே வெல்லும் அசத்தியம் கொல்லும்
2. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது
3. பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை
மெய் சொல்லி கெட்டவனுமில்லை
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
5. பொறுமை கடலினும் பெரிது
6. பொறுத்தார் பூமியாள்வார்
7. எளியாரை வலியார் அடித்தால்
வலியாரைத் தெய்வம் அடிக்கும்
8. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
9. அடுத்தவரைக் கெடுக்கலாகாது

நீதிமன்றம் பற்றிய பழமொழிகள்

1. ஒருவன் நீதிமன்றம் போகிறானென்றால்
   ஒரு பூனையை மீட்டு ஒரு மாட்டை இழக்கப்போகிறான்
   என்று பொருள்
2. வக்கீல் வீட்டு கூரைகள்
   வழக்காடிகளின் தோலினால் வேயப்பட்டிருக்கின்றன
3. வழக்குத் தீர்ப்பதில் மரியாதைராமன் தான்

வழக்கு பற்றிய பழமொழிகள்

1. அஞ்சுபணம் கொடுத்து அழச்சொல்லி
   பத்துப்பணம் கொடுத்து நிறுத்தச்சொன்னானாம்
2. ஆறு போவதே கிழக்கு
   அரசன் சொல்வதே வழக்கு
3. தீரா வழக்கு போராய் முடியும்
4. வலிமைக்கு வழக்கு இல்லை

பிணையம் (surety) பற்றிய பழமொழி

1. துணை போனாலும் பிணை போகாதே

சிறை பற்றிய பழமொழிகள்

1. மணியடித்தால் சோறு
   மயிர் முளைத்தால் மொட்டை
2. சிறைச்சாலைக்கு அழகில்லை
   தேவடியாளுக்கு முறையில்லை

வீடு பற்றிய பழமொழிகள்

1. அசை போட்டுத் தின்னும் மாடு
   அசையாமல் தின்னும் வீடு
2. அழுகிற வீட்டிலிருந்தாலும்
   ஒழுகிற வீட்டில் இருக்கக்கூடாது
3. குடிக்கிற வீடு விடியுமா?
4. குச்சு வீடு கட்டியல்லவோ மச்சு வீடு கட்ட வேண்டும்
5. சிறுகக் கட்டிப் பெருக வாழ்
6. ஆனை அசைத்துத் தின்னும்
   வீடு அசையாமல் தின்னும்

7. கண்ணாடி வீட்டில் வாழ்பவர்கள் கல் எறியக்கூடாது
8. கட்டினவனுக்கு ஒரு வீடானால்
   கட்டாதவனுக்குப் பல வீடு
9. வாழ்கிற வீட்டிற்கு வாழையை வைத்துப்பார்
10. சிறுகுழந்தை இல்லாத வீடும் வீடல்ல
    சீரகமிட்டு ஆக்காத கறியும் கறியல்ல
11. வடக்குப் பார்த்த மச்சு வீட்டைக் காட்டிலும்
    தெற்குப் பார்த்த குச்சுவீடு நல்லது
12. விளக்கில்லா வீட்டில் பேய் குடிபுகும்
13. கட்டின வீட்டிற்கு வக்கனை சொல்வது என்று
14. வீடு கட்டும் முன்பு கிணறு வெட்டவேண்டும்
15. வீட்டுக்கு எலி, காட்டுக்குப் புலி
16. வீட்டுக்கு வீடு வாசற்படி
17. வீட்டைக் கட்டிப் பார்
    கல்யாணம் பண்ணிப் பார்
18. வேண்டும் என்றால் வீடு
    வேண்டாமென்றால் காடு
19. இருக்கிறவனுக்கு ஒரு வீடு
    இல்லாதவனுக்கு பல வீடு
20. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
21. வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை
22. உண்ணாமல் ஒன்பது வீடு போகலாம்
    உடுக்காமல் ஒருவீடு போகக்கூடாது

மது பற்றிய பழமொழிகள்

1. கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்
2. கள்ளைக் கொடுத்து காரியத்தை அறி
3. தண்ணீரில் இறந்தவரினும்
   சாராயத்தில் இறந்தவர் அதிகம்
4. கொலைகாரனை நம்பினாலும்
   குடிகாரனை நம்பாதே
5. குடி, சூது, விபச்சாரம் குடியைக் கெடுக்கும்
6. கள்ளை ஊற்றி உள்ளதைக் கேள்
7. குடி குடியைக் கெடுக்கும்

8. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
விலைமகளும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்
9. குடிக்கிறவன் கையைச் சூடுபோட்டாலும்
குடியை விடான்
10. குடிகாரன் வீட்டில் விடிய விடியச் சண்டை
11. சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேள்
12. குடியும் சூதும் குடியைக் கெடுக்கும்
13. மதுவும் மாதரும் தீமையின் அஸ்திவாரம்
14. கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிட
கற்பூரம் விற்று கால்பணம் சம்பாதிப்பதே மேல்
15. மதுக்கிண்ணமும் பெண்ணும் அருகிலிருந்தால்
பொழுது போவதே தெரியாது
16. மது உள்ளே போனால், மதி வெளியே போகும்
17. கள்ளு குடித்தவனுக்குச் சொல் புத்தி ஏறாது

கனவு பற்றிய பழமொழிகள்

1. ஊமை கண்ட கனாப்போல
2. கனவில் கண்ட பொருள் கைக்கு எட்டுமா?
3. கனவு கண்டவனுக்குப் பெண் கொடுத்தாற்போல
4. கனவில் கண்ட பணம் கடனைத் தீர்க்குமா?
5. கிடப்பது ஒட்டுத்திண்ணை கனவு காண்பது மச்சுவீடு
6. பகல் கனவு போல
7. கனவில் கண்ட பணம் கைச்செலவுக்கு உதவுமா?
8. காணாத கனவு கண்டால் ஒருவருக்கும் சொல்லாதே
9. கனவு கண்ட பணம் செலவுக்குதவுமா?
10. பகல் கனவு பலிக்காது
11. காலைக் கனவு கட்டாயம் பலிக்கும்

உழைப்பு பற்றிய பழமொழிகள்

1. உழைத்தால் ஊழையும் வெல்லலாம்
2. நடந்தகால் சீதேவி கிடந்தகால் மூதேவி
3. உறங்கின நரிக்கு உணவு கிடைக்காது
4. மாடுபோல உழைத்து மன்னர்போல வாழ்
5. தோட்டிபோல உழைத்து தொண்டமான்போல் வாழ்
6. அடிமையைப் போல் உழைத்து அரசனைப் போல் வாழ்

வேலை பற்றிய பழமொழிகள்

1. அரைக்காசு என்றாலும் அரண்மனைச் சேவகம் நல்லது
2. அரைக்காசு வேலையானாலும் அரசாங்க வேலை
3. உத்தியோகம் புருஷ லட்சணம்
4. தவிட்டுக்குச் சேவித்தாலும் சர்க்காருக்குச் சேவிக்க வேண்டும்
5. அரைப்பனச் சேவகமானாலும்
   அரண்மனைச் சேவகம்போல் ஆகுமா?

கூலி பற்றிய பழமொழிகள்

1. ஆண்டை கூலியைக் குறைத்தால்
   சாம்பான் வேலையைக் குறைப்பான்
2. முகத்தில் அடித்தால் பட்டுக்கொள்ளலாம்
   வயிற்றில் அடித்தால் படமுடியுமா?

பிரச்சனை பற்றிய பழமொழி

1. வீட்டுக்கு வீடு வாசற்படி

மனம் பற்றிய பழமொழிகள்

1. நெஞ்சறிவது பொய்யற்க
2. தன்னெஞ்சே தன்னைச் சுடும்
3. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
4. கள்ளமனம் துள்ளும்
5. மனமிருந்தால் மார்க்கமுண்டு
6. மனம் வெளுக்க மருந்தில்லை
7. மனக்காவல் பெரிதா? மதில் காவல் பெரிதா?
8. இல்லறமும் துறவறமும் மனதிலே
9. கடல் ஆழம் கண்டாலும் மனம் ஆழம் காணமுடியாது
10. மனம் கொண்டது மாளிகை
11. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
12. மனதுக்கு மனதே சாட்சி
13. நாறு அறுந்தால் முடியலாம்
    மனம் அறுந்தால் முடிய முடியாது
14. மலைச்சாரல் மழையும்
    மங்கையின் மனமும் திடீரென மாறும்

15. மனசுக்கு மனம் சாட்சி
    மற்றதற்குத் தெய்வம் சாட்சி
16. மனத்திலே பகை உதட்டிலே உறவு
17. மனம் போல் வாழ்வு
18. மனமிருந்தால் மாரியம்மா
    இல்லாவிட்டால் காளியம்மா
19. மனோ வியாதிக்கு மருந்துண்டா?
20. கடல் ஆழத்தையும் பெண் உள்ளத்தையும் அறியமுடியாது
21. மனக்கவலை பலக்குறைவு
22. அவரவர் மனசே அவரவர்க்கு சாட்சி
23. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து
24. நிம்மதியுள்ள மனம் நிலைகுலையாது

விதி பற்றிய பழமொழிகள்

1. எழுதிய விதி அழுதால் தீருமா?
2. வியாதிக்கு மருந்துண்டு
   விதிக்கு மருந்துண்டா?
3. எழுதிய எழுத்தை ஈசனாலும் மாற்ற முடியாது
4. வரும் விதி வந்தால் வழியிலே தங்காது
5. வெள்ளம் பள்ளத்தை நாடும்
   விதி புத்தியை நாடும்
6. தலை எழுத்து சிரைத்தால் போகுமா?
7. வரும் விதி எங்கிருந்தாலும் வரும்
8. வரும் விதி வந்தால் படும்விதி படவேண்டும்
9. அன்று எழுதியவன் அழித்தெழுத போவதில்லை
10. ஊத்தை போனாலும் ஊழ்வினை போகாது
11. பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும்
12. தாரமும் குருவும் தலைவிதிப்படி
13. எழுதின விதி அழுதால் தீருமா?
14. முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் மூண்டது
15. அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்தான் ஆகும்
16. வரும் வினை வழியில் நில்லாது
17. விதி எப்படியோ மதி அப்படி
18. விதி போகிறவழியே மதி போகும்
19. விதியை வெல்வாருண்டா?

அதிர்ஷ்டம் பற்றிய பழமொழிகள்

1. அதிர்ஷ்டக்காரன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்
2. அதிர்ஷ்டம் இருந்தால் அரசு பண்ணலாம்
3. அதிர்ஷ்டமுள்ளவன் நண்பனைச் சந்திக்கிறான்
   அதிர்ஷ்டமில்லாதவன் ஒரு அழகியைச் சந்திக்கிறாள்
4. வேலைக்காரி வீட்டுக்காரியானால் அதிர்ஷ்டம்
5. அதிர்ஷ்டம் தூக்கத்தில் வரும்
6. ஏழ்மையும் அதிர்ஷ்டமும் எட்டியே நிற்கும்
7. அழகிருந்தால் என்ன? அதிர்ஷ்டமல்லவா வேண்டும்
8. ஆசை இருக்கிறது தாசில் பண்ண
   அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க
9. முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை
   முப்பது வருஷம் தாழ்ந்தவனுமில்லை
10. அவனுக்கு சுக்கிரதிசை அடிக்கிறது
11. ராகு திசையில் வாழ்ந்தவனுமில்லை
    இராஜா திசையில் கெட்டவனுமில்லை

காலம் பற்றிய பழமொழிகள்

1. அல்லல் ஒரு காலம்
   செல்வம் ஒரு காலம்
2. ஆகும் காலம் ஆகும்
   போகும் காலம் போகும்
3. ஆவது அஞ்சிலே தெரியும்
   காய்ப்பது பிஞ்சிலே தெரியும்
4. பருவத்தே பயிர்செய்
5. வாழ்வு சில காலம்
   தாழ்வு சில காலம்
6. இருளும் ஒரு காலம்
   நிலவும் ஒரு காலம்
7. காலம் துக்கத்தை மாற்றும்
8. பணத்தை இழந்தால் சிறிது நஷ்டம்
   நேரத்தை இழந்தால் எல்லாம் நஷ்டம்
9. வாலிபத்திலும் வெள்ளைத் தாளிலும்
   எதை எழுதினாலும் பதிந்துவிடும்
10. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்

11. காலஞ் செய்வதை கோலம் செய்யாது
12. காலத்தில் செய்த நன்றி
13. காலத்திற்கேற்ற கோலம்
14. காலம் போகும்
    வார்த்தை நிற்கும்
    கப்பல் போகும்
    துறை நிற்கும்
15. வேளையும் நாழிகையும் வந்தால்
    வேண்டாமென்றாலும் நிற்காது
16. பொங்கும் காலம் புலி
    மங்கும் காலம் மா
17. நாற்பதுக்கு மேல் நாய்க்குணம்
18. பழம் பழுத்தால் கொம்பிலே தங்காது
19. காலம் பொன்னானது
20. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
21. அய்யர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?
22. கால கதியை யாரும் கடக்கமாட்டார்
23. காலத்தில் செய்த நன்றி
24. சாகிற வரையில் சஞ்சலமானால் வாழ்வு எக்காலம்

தருமம் பற்றிய பழமொழிகள்

1. தனக்கு மிஞ்சினது தருமம்
2. படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்
3. வானம் சுரக்க தானம் சிறக்கும்
4. தருமம் தலை காக்கும்
5. தருமத்திற்கு என்றும் அழிவில்லை
6. தனக்கு மிஞ்சினால்தான் தானமும் தருமமும்
7. பிறர்மனை புகாமை அறமெனப்படும்
8. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு
9. தருமமே ஜெயம்
10. தருமத்தைப் பாவம் வெல்லாது

வாக்கு பற்றிய பழமொழிகள்

1. அவள் சொல்தான் அவனுக்கு தேவ வாக்கு

2. எந்த வாக்கு பொய்த்தாலும்
சந்தை வாக்குப் பொய்க்காது
3. நால்வர் வாக்கு தேவ வாக்கு
4. பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை

அதிகாரம் பற்றிய பழமொழிகள்

1. அவன் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது
2. அவன் போட்டதே சட்டம்
3. அவன் நா அசைந்தால் நாடு அசையும்
4. அதிகாரி வீட்டு கோழிமுட்டை
குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கும்
5. அதிகாரமில்லாவிட்டால் பரிகாரம் வேண்டும்
6. நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால்
கெடைக்கு இரண்டு ஆடு கேட்குமாம்

அருமை பற்றிய பழமொழிகள்

1. அத்திப் பூ போல
2. கார்த்திகை பிறை கண்டதுபோல

சாக்கு (Excuses pretexts) பற்றிய பழமொழிகள்

1. ஆடமாட்டாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்
2. சட்டி சுட்டதும் கை விட்டதும்
3. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு
4. வேலைக் கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு

தேடல் (Inquisitiveness) பற்றிய பழமொழிகள்

1. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிராக வரும்
2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
3. நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் பார்க்கக்கூடாது
4. பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்

சிறியது பெரியவற்றைக் கெடுக்கும் என்ற பொருள் பற்றிய பழமொழிகள்

1. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்
2. காணி ஆசை கோடி கேடு

காப்பாற்றல் பற்றிய பழமொழிகள்

1. கண்ணை இமை காத்தது போல
2. காட்டுக்குப் புலி, வீட்டுக்குப் புலி
3. தேரோடு போச்சுது திருநாள்
   தாயோடு போச்சுது பிறந்தகம்

கைவிடல் பற்றிய பழமொழிகள்

1. கை கழுவ வேண்டியதுதான்
2. நட்டாற்றில் கை விட்டது போல
3. பாலை வார்த்து தலையை முழுகிவிடு
4. வைத்தியன் கைவிட்டதுபோல

எதிர்மறை செயல் (Reverse Action) பற்றிய பழமொழிகள்

1. ஏகாதசி விரதம் என்று நாக்கைப் பிடுங்கிச் சாவார்களா?
2. தகப்பன் வெட்டிய கிணறு என்று தலைகீழாய் விழலாமா?
3. தன் வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா?
4. சகுணம் நன்றாக உள்ளதென்று விடியும்வரை திருடலாமா?
5. பொன் கத்தி என்று கழுத்தை அறுத்துக் கொள்ளலாமா?

போலச் செய்தல் (Imitation) பற்றிய பழமொழிகள்

1. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டாற்போல
2. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற்போல

எதிர்பார்ப்பு ஒன்று நடப்பது ஒன்று என்பது பற்றிய பழமொழிகள்

1. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல
2. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல
3. பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது
4. விளையாட்டு வினையாயிற்று
5. பிள்ளை வரத்துக்குப் போய்
   புருஷனைப் பறி கொடுத்ததுபோல

கையிலிருப்பதை கைவிடாதே பற்றிய பழமொழிகள்

1. இரவல் சீலையை நம்பி இடுப்பு சீலையை எறிந்தாளாம்
2. கொண்டவன் இருக்க கண்டவனுடன் போகாதே

3. நாளைக்குக் கிடைக்கும் பலாக்காயை விட
   இன்றைக்குக் கிடைக்கும் களாக்காய் மேல்
4. வயிற்றுப் பிள்ளையை நம்பி
   கைப்பிள்ளையை விட்டதுபோல

வைத்துக்கொண்டு தேடல் பற்றிய பழமொழிகள்

1. ஆட்டுக்குட்டியை தோளில் வைத்துக்கொண்டு தேடினாற்போல
2. உறியிலே வெண்ணெய் இருக்க, நெய்க்கு அலைவானேன்
3. விளக்கு இருக்க, நெருப்புக்கு அலைவானேன்

இடமாற்றத்தால் பொருள் மாற்ற பழமொழி

1. சங்கிலே வார்த்தால் தீர்த்தம்
   சட்டியிலே வார்த்தால் தண்ணீர்

மற்றவர் செலவில் பெருந்தன்மை பற்றிய பழமொழிகள்

1. கடைத் தேங்காயை எடுத்து
   வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற்போல
2. பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்ததுபோல

சரிக்குச் சரி (tit for tat) *பற்றிய பழமொழிகள்*

1. ஆனைக்கும் பானைக்கும் சரி
2. ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கணும்
   பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்கணும்
3. காலுக்குத் தக்க செருப்பு
   கூலிக்குத் தக்க உழைப்பு
4. கொண்டைக்குத் தக்க பூ
5. நாலுக்கேற்ற சரடு
6. பெய்த மழைக்கும் காய்ந்த வெயிலுக்கும் சரி
7. விரலுக்குத் தக்க வீக்கம்
8. வரவுக்கேற்ற செலவு
9. அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி

ஆற்றாமை பற்றிய பழமொழிகள்

1. அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை

2. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
3. வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாச்சுது

காரண காரியம் (Cause and Effect) பற்றிய பழமொழிகள்

1. எங்கே புகை உண்டோ அங்கே நெருப்புண்டு
2. காற்றில்லாமல் தூசி பறக்குமா?

வாய்ப்பு (opportunity) பற்றிய பழமொழிகள்

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2. சூடுள்ளபோதே இரும்பையடி
3. வெயிலடிக்கும்போதே வைக்கோலை உலர்த்து

உதவுவது பற்றிய பழமொழிகள்

1. ஒதிய மரமும் சமயத்துக்குதவும்
2. சிறு துரும்பும் பல்குத்த உதவும்

உதவாதது பற்றிய பழமொழிகள்

1. கழுதைக்குத் தெரியுமா? கற்பூர வாசனை
2. குரங்கு கையில் பூமாலை அகப்பட்டதுபோல
3. நக்குகிற நாய்க்குச் செக்கு என்றும் சிவலிங்கம் என்றும் தெரியுமா?

உபயோகமின்மை பற்றிய பழமொழிகள்

1. உடையவன் பாராப்பயிர் உருப்படுமா?
2. உறவு போகாமல் கெட்டது
   கடன் கேளாமல் கெட்டது
3. பார்க்காத உடைமை பாழ்
4. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்

அதிகம் பற்றிய பழமொழிகள்

1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
2. படுக்கப் படுக்கப் பாயும் பகை
3. பழகப் பழகப் பாலும் புளிக்கும்

ஆகாது பற்றிய பழமொழிகள்

1. கங்கையிலே முழுகினாலும் காக்கை அன்னமாகுமா?
2. கறுப்புநாய் வெள்ளைநாய் ஆகாது
3. நாயைக் குளிப்பாட்டி நடுவில் வைத்தாலும் வாலை சுருட்டிக்கொண்டு வெளியே போகும்

முடியாதது (Impossible) பற்றிய பழமொழிகள்

1. எலி பூனையை வெல்லுமா?
2. காய்ந்த மரம் தளிர்க்குமா?
3. மலடி பிள்ளை பெறுவாளா?
4. வறுத்த பயிர் முளைக்குமா?

மாற்றிச் செய்யப்படாதது பற்றிய பழமொழிகள்

1. கறந்த பால் முலை ஏறுமா?
2. சுடுகாடு போன பிணம் திரும்பாது
3. சோறு சிந்தினால் பொறுக்கலாம் மானம் சிந்தினால் பொறுக்க முடியுமா?
4. முப்பது பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது

அகப்படுதல் பற்றிய பழமொழிகள்

1. பாம்பின் வாய்த்தேரை போல
2. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
3. எமன் கையில் அகப்பட்ட உயிர்போல
4. எலி அழுதால் பூனை விடுமா?

உடைமை (Possession) பற்றிய பழமொழிகள்

1. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
2. தனக்கென்று இருந்தால் சமயத்திற்குதவும்
3. மண்பிள்ளையானாலும் தன்பிள்ளை என்று இருக்கவேண்டும்

உடல்குறை (Physically Handicapped) பற்றிய பழமொழிகள்

1. ஆரக்கழுத்தி அரண்மனைக்கு ஆகாது
2. இளிச்ச கண்ணி பிளிச்சை வாங்காள்
3. குருட்டுப் பெண்ணுக்கு வறட்டு ஜம்பம்

4. பழைய குருடி கதவைத் திறடி
5. வயிற்று வலிக்காரிக்கு மாலைக்கண் அகமுடையான்
6. இறங்கும் படர்தாமரை
   ஏறும் தேமல்
   கூடும் புருவம் குடியைக் கெடுக்கும்
8. சுணுக்கால் பெருத்தால் கணவனுக்கு ஆகாது

அஞ்சலி பற்றிய பழமொழிகள்

1. கும்பிடு கொடுத்து கும்பிடு வாங்கவேண்டும்
2. உன்காலை நீயே கும்பிட்டுக் கொள்ளாதே

வாழ்த்து பற்றிய பழமொழிகள்

1. பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க
2. மார்க்கண்டாயுசாயிரு

தோற்றம் (appearance) *பற்றிய பழமொழிகள்*

1. பசு கருப்பு என்றால் பாலும் கருப்பா?
2. கோழி கறுப்பானால் முட்டையும் கறுப்பா?
3. நரைத்தவன் எல்லாம் கிழவனா?

குழந்தை வளர்ப்பு (Child rearing) *பற்றிய பழமொழிகள்*

1. ஆணை அடித்து வளா
   பெண்ணைப் போற்றி வளர்
2. செல்வம் சீரழிக்கும்
3. ஒரு பிள்ளை என்று ஊட்டி வளர்த்தாளாம்
   அது ஊர்மேல் போச்சுது

வெறும் பேச்சு பற்றிய பழமொழிகள்

1. ஏச்சிலும் பேச்சிலும் வல்லவன்
2. சர்க்கரை என்றால் தித்திக்குமா?
3. நெருப்பு என்றால் வாய் வெந்துபோகுமா?
4. வார்த்தைக்குத் தரித்திரமா?

இரகசியம் பற்றிய பழமொழிகள்

1. இலை மறைவு காய் மறைவு வேண்டாமா?
2. ஒருவர் அறிந்தால் இரகசியம்
   இரண்டுபேர் அறிந்தால் அம்பலம்
3. சாராயத்தை வார்த்து பூராயத்தைக் கேள்

பொய் வேடம் பற்றிய பழமொழிகள்

1. நாமம் போட்டவன் எல்லாம் தாதனா
   விபூதி பூசினவன் எல்லாம் ஆண்டியா?
2. முக்காட்டுக்குள்ளே மூடுமந்திரமா?

சண்டை பற்றிய பழமொழிகள்

1. அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி
2. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
3. சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட
   சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்

கேடு (evil) பற்றிய பழமொழிகள்

1. அரைக்காசுக்கு அழிந்த கற்பு
   ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிடைக்காது
2. ஆயிரம் சொன்னாலும்
   அவிசாரி சம்சாரி ஆகமாட்டாள்
3. குடிக்கிறவன் கையைச் சூடுபோட்டாலும் குடியை விடான்
4. திருடனுக்கு திருட்டுப் புத்தி போகாது

தொழில் நுணுக்கம் பற்றிய பழமொழிகள்

1. சிறு உளியானாலும் மலையைப் பிளக்கும்
2. இரும்புத்தூணை செல் அரிக்குமா?
3. தங்கம் புடம்போட்டாலும் மாறாது

தணிக்கை பற்றிய பழமொழி

1. கணக்குப் பார்த்தால் பிணக்கு வரும்

கூட்டு வியாபாரம் பற்றிய பழமொழி

1. கூட்டு வியாபாரம் குடுமிப்பிடி

கூட்டு வாழ்வு பற்றிய பழமொழி

1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

ஒற்றுமை (similarity) பற்றிய பழமொழிகள்

1. ஒரு அச்சில் உருக்கி வார்த்தாற்போல
2. தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சேலை

அகராதியியல் பற்றிய பழமொழி

1. அகராதி படித்தவனுக்கு எதிராகப் பேசாதே

பட்டணம் பற்றிய பழமொழி

1. கெட்டும் பட்டணம் சேர்

பரங்கியார் (ஆங்கிலேயர்) பற்றிய பழமொழிகள்

1. எத்தனை முறை சொன்னாலும் பரங்கி வெற்றிலை போடமாட்டான்
2. துரை நல்லவர், பிரம்பு பொல்லாதது
3. பரங்கிக்குத் தெரியுமா சடங்கும் சாஸ்திரமும்

4. தமிழ்ப் பழமொழிகள் காட்டும் சமுதாயமும் பண்பாடும்

பழமொழியைப் பழமையான மொழி என்றும் மூதறிவிலிருந்து தோன்றிய மொழி என்றும் பொருள் கொள்ளலாம். பேச்சு வழக்கில் பல்லாண்டு காலம் பயின்று வந்தமையால் பழமொழி எனப்பட்டது. ஆங்கிலத்திலுள்ள Saying, Old Saying நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். தொல்காப்பியர் பழமொழியை முதுசொல் என்றும் முதுமொழி என்றும் குறிப்பிட்டுள்ளார். இஃது பழமொழியின் தொன்மையைக் காட்டுகின்றது. பழமொழி பட்டறிவால் தோன்றிய அனுபவ மொழி. பலநூறு ஆண்டுகளாகப் பல்லாயிரம் மக்களால் வழிவழியாக வழங்கப்பட்டு வரும் பழமையான மொழி. பழமொழிகள் பழம் மொழிகளாகி வாழ்விற்கு வளமூட்டுகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் பழமொழிக்குள்ள தனிப்பண்பாகும். பழமொழிக்கு வழங்கப்படும் பெயர்களைக் கொண்டே அதன் இயல்புகளை அறியலாம். அனுபவத்தின் குழந்தைகள் பழமொழிகள். பழமொழிகள் முன்னோர்கள், வாழ்க்கையிலே அனுபவித்து கண்டு கொண்டதைச் சுருக்கமாகக் கூற வெளிவந்த அனுபவ முத்திரைகள். அவற்றிலே ஆழமும் அர்த்தமும் இருக்கின்றன. வாழ்வியல் நிகழ்ச்சிகளையும் நிகழ்ச்சிகளின் பயனையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்தும் இயல்புடையன பழமொழிகள். நமது சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, வாழ்வியல் கோட்பாடுகளை விளக்கும் கருவியாகப் பழமொழிகள் பயன்படுகின்றன. பழமொழி மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக்காட்டும் காலக்கண்ணாடியாகும்.

சமுதாயமென்பது மனித இனத்தின் சமூக பொருளாதார அரசியல் ஈடுபாடுகளினால் தொடர்புகளினால் இயங்கி வரும் ஓர் அமைப்பாகும் என்றும் இவ்வமைப்பு ஒரு குறிப்பிட்ட நாகரிக அமைப்பிற்குள் இயங்கி வருகிறது என்றும் சமூகவியல் பேரறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அந்தந்த மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் மூலமும்

நாட்டுப்புற இலக்கியங்கள் மூலமும் காணலாம். பண்பாடு என்பது அகவளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் வாழ்க்கை முறையே பண்பாடு என்பர். சமூகவழி சில கட்டுப்பாடுகளையும் இனவழிச் சில பண்புகளையும் சூழ்நிலையால் சில மாற்றங்களையும் அடையும் மனிதனின் எண்ண எழுச்சியும் வளர்ச்சியும் பண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன. மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதான் பண்பாடாக மலர்கின்றது என்கிறார் பேரறிஞர் டெய்லர் அவர்கள். (Culture is that complex whose which includes knowledge, belief, art, morals, law, custom and any other capabilities acquired by man as member of society) ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு. அது ஒரு சந்ததியாரிடமிருந்து பெற்ற நடத்தையாகும் என்பர். (Culture is the embodiment in customs, traditions etc of the learning of a social group over the generation)

வாழ்க்கை முறைகளின் கூட்டுக் சேர்க்கையே பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி (Malinowski) பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் பல சடங்குகள் இதன்கண் அடங்கி விடுகின்றன. அப்பண்பாடு அகப்பண்பாடு, புறப்பண்பாடு என வளர்ந்து இரு பிரிவாக இலங்குகின்றன. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையால் தோன்றியவைகளாகும். பழக்க வழக்கங்களைத் தனிமனிதனும் சமுதாயமும் இணைந்து உருவாக்குகின்றன. தனி மனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைப் பழக்கம் எனவும் குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது வழக்கம் எனவும் சமூகவியலாளர் கூறுகின்றனர். இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்க நிலை என்றும் வழக்கமென்பது சமுதாயம் சார்ந்த தொடக்க நிலை என்றும் கூறலாம்.

சமுதாயத்தின் பண்பாட்டினை அறிய நம்பிக்கைகளும் துணைசெய்கின்றன. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு

அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப் படுகின்றது. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலங்காலமாகப் பின்பற்றப்படுகின்றன. மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்வுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன. நம்பிக்கைகளே மனித வாழ்வை இயக்குகின்றன எனக் கூறுமளவிற்கு அவை வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன. மக்களின் நடைமுறை வாழ்வில் நம்பிக்கை தொடர்ந்து வருவதை நோக்கின் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். காலப்போக்கில் பழக்க வழக்கங்கள் அறிவியல் கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது அது சடங்காக மாறுகிறது.

சமுதாயத்தில் காணப்படும் பதிவுபெற்ற மரபுகளை (Recorded tradition) மானிடவியல், சமூகவியல் மூலமும் பதிவுபெறா மரபுகளை (unrecorded tradition) நாட்டுப்புறவியல் மூலமும் அறிகிறோம். பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (Material Culture) பொருள்சாராப் பண்பாடு (Non-Material Culture) என பகுப்பர். கூர்ந்து நோக்கின் பழமொழி பேசாத பொருளே இல்லை எனலாம். ஏறத்தாழ அனைத்துப் பொருட்களைப் பற்றியும் பழமொழி பேசுகின்றது. தமிழ் மக்களின் சமூக பண்பாட்டு வரலாற்றிலே பழமொழிகள் முக்கிய இடம் வகிக்கின்றது எனலாம். 'பழமொழிகள் சமூக வாழ்க்கையின் இருண்ட பகுதியை உணர்த்துவன வாகயுள்ளன. பழமையான நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் வரலாற்றினையும் மனித உயர் பண்புகளையும் காட்டுவன பழமொழிகளே' என பெர்சிவல் (percival) கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றுகளாக அமைகின்றன. அனுபவ முதிர்ச்சிக்குச் சான்றான பழமொழிகள் யாவும் சமுதாயத்தின் செழுமையான பட்டறிவின் அடிப்படையிலே விளைந்த அறிவுரைகளாகவும் சிந்தனைக் கருவூலங்களின் திரண்ட சாரமாகவும் அமைகின்றன. உள்ளார்ந்த பண்பாடும் வரலாறுமே மனிதனது முழுமையை

உணர்த்துவதாகும். மனிதனையும் சமுதாயத்தையும் மதிப்பிடும்போதுதான் முப்பரிமாணம் கொண்ட சமுதாயத் தோற்றம் புலப்படும். பழமொழிகள் மனித சமுதாய வரலாற்றை நன்கு விளக்க உதவும் வாயில்களாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். பழமொழி வாயிலாகச் சமுதாய அமைப்பிலுள்ள சாதி, சமயம், தொழில், உறவுமுறை, பொருளியல் நிலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை அறியலாம். பழமொழிகள் மக்களது சமூக பண்பாட்டுக் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பனவாகும். சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதில் பழமொழிக்கு ஈடு இணை ஏதுமில்லை எனலாம்.

பழமொழிகள் அனைத்துப் பொருட்களைப் பற்றியும் பேசுகிறது. வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் பழமொழியில் காணலாம்.

மனிதனைப் பற்றியது	(Human)
விலங்குகளைப் பற்றியது	(Animals)
தாவரங்களைப் பற்றியது	(Plants)
பல்பொருள் பற்றியது	(Miscellaneous)

பழமொழிகளும் அவற்றின்வழி அறியலாகும் செய்திகளும் கருத்துக்களும் *நூற்றுக்கு நூறு யதார்த்த நிலையில்* உள்ளதை அறிகிறோம். பழமொழிகள் சொல்லுக்குள் வாழ்க்கையையே சுருக்கி வைத்துள்ளனர். வாழ்க்கையில் கண்டுணர்ந்த உண்மைகளை, வாழ்க்கை அனுபவங்களை முதுமொழி ஆக்கியுள்ளனர். பழமொழிகளின் வாயிலாக மக்களின் பண்பாடு, சமுதாயம் முதலியவற்றை நன்கறிந்து கொள்ளலாம். *பழமொழிகள் நடப்பியல் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றது.*

கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட பழமொழிகளை 1. இயற்கை, 2. விலங்கு, பறவையினங்கள் 3. தாவர இனங்கள், 4. சமூகமும் பண்பாடும் 5. மனிதப் பண்புகள் 6. பல்பொருள் பற்றியவை என ஆறு பெரும்பிரிவுகளாகவும் முப்பத்திரண்டு உட்பிரிவுகளாகவும் வகைப்படுத்தியுள்ளேன்.

இயற்கை பற்றிய பழமொழிகள்

உலகிலுள்ள அனைத்து இனங்களிலும் இயற்கை பற்றிய பழமொழிகளைக் காணலாம். மனித இனம் தொடக்ககால முதற்கொண்டு இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்துகின்றது. இயற்கை மனித வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்துவிட்டது. பல்லாயிரம் ஆண்டுகளாக இயற்கையோடு வாழ்ந்து இயற்கையைப் பற்றி அறிந்ததை உற்றுநோக்கியதைப் பழமொழிகளாக உருவாக்கியுள்ளனர். சூரியன், சந்திரன், மின்னல், இடி, மழை, காற்று, நீர்நிலைகள் பற்றிப் பழமொழிகளை உருவாக்கியுள்ளனர்.

இவ்வுலகம் இயங்க சூரியன், சந்திரன், மழை, நீர், காற்று இன்றியமையாதது என்பதை மனித இனம் தோன்றியபோதே அறிந்து கொண்டது. உலக மக்களின் உயிர் வாழ்க்கைக்கு மழை இன்றியமையாதது. மனிதன் உயிர் வாழ உணவு அடிப்படை. அவ்வுணவை உற்பத்தி செய்யும் பயிர் வாழ்க்கைக்கு மழை இன்றியமையாதது. இயற்கையின் இன்றியமையாமையை உணர்ந்த பண்டை மக்கள் இயற்கை வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வான் நிலையையும் கோள்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்து மழையைப் பற்றி விளக்குவது இன்றைய அறிவியல். கோள்கள், கால இயல்பு, வானத்தின் தோற்றம் முதலியவற்றைக் கொண்டு மழை பெய்வது பற்றிய அறிவைப் பண்டைய கால மக்கள் பெற்றிருந்தனர் என்பதைப் பழமொழி காட்டுகின்றது. முன்காலத்தில் நமது முன்னோர்கள் பறவை, பூச்சி, விலங்கினங்கள் மற்றும் சில செயல்களின் இயக்கங்களைக் கண்டுணர்ந்து மழை பெய்வதற்குரிய அறிகுறிகளைக் கண்டுணர்ந்து அனுபவ அடிப்படையில் அவற்றையே பழமொழியாக்கியுள்ளனர்.

1. அந்தி ஈசன் பூத்தால் மழை வரும்
2. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை
3. கொக்கு மேடேறினால் மழை
4. தவளை கத்தினால் மழை
5. தட்டான் தாழப் பறந்தால் தட்டாது மழை

6. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
7. காலை செல் பூத்தால் அடுத்த மழையடங்கும்
8. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
9. அடிவானங் கறுத்தால் அப்போதே மழை
10. துலாத்தில் வெள்ளி உலாத்தில் பெய்யும் மழை
11. அகல்வட்டம் பகல் மழை
12. புற்றிலே ஈசல் புறப்பட்டாலும்
மண்ணிலே கரையான் கூடினாலும் மழை
13. ஐப்பசி அடைமழை
கார்த்திகை கனமழை
14. புரட்டாசி பெய்து பிறக்கணும்
ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
15. பனி பெய்தால் மழையில்லை
பழம் இருந்தால் பூ இல்லை

மழையோடு தொடர்புடையது இடியும் மின்னலுமாகும். இடி இடித்து மின்னல் மின்னி மழை பொழிதல் இயற்கை. மின்னுக்கெல்லாம் பின்மழை, சித்திரை மின்னல் ஆகாது, ஈசானிய மின்னலுக்கு எருதும் நடுங்கும், ஆகாய வல்லடி அதிர இடிக்கும் என்பன மின்னல் பற்றிய பழமொழிகளாகும். ஆவணி ஆறில் இடிஇடித்தால் நல்ல மழை, கோடை இடியும் மாரி மின்னலும் மழையதிகம் போன்றன இடி பற்றிய பழமொழிகளாகும். இடி, மின்னல், மழை ஆகியவற்றுடன் காற்றும் தொடர்புடையதாகும். காற்று வீசும் திசையையொட்டி கீழ்க்காற்று, மேல்காற்று, வாடைக் காற்று, தென்றல் காற்று எனக் கூறுவர்.

1. கடுங்காற்று மழைகாட்டும்
கடுநட்பு பகை காட்டும்
2. காற்றும் மழையும் கலந்தடித்தாற்போல
3. வடகாற்று அடிக்க வந்தது மழையே
4. கச்சானுக்கு (மேல்காற்று) மச்சான் மழை
5. ஆடி, ஆவணி கீழ்க்காற்றும்
ஐப்பசி மேல்காற்றும் அடித்தால் மழையில்லை

நீர் மனிதை வாழ்க்கைக்கு மிகமிக இன்றியமை யாததாகும். நீரின்றி மனிதன் வாழமுடியாது. உணவை நல்கும் வேளாண்மைக்கு நீர்தான் அடிப்படையாகும். நீரைச் சேமித்து குறைந்த செலவில் நிறைந்த வசதிகளைப் பெருக்கும் ஆய்வுகளில் ஈடுபடுவதை இன்று நீர்வள நிர்வாகம் (Water Management) என்பர். நமது முன்னோர்கள் அனுபவ அடிப்படையில் பின்பற்றிய நீர்வள நிர்வாக முறைகளைப் பழமொழிகள் மூலம் அறியலாம். ஏரி, கிணறு, ஆறு, குளம், வாய்க்கால், கடல் முதலியன நீர் நிலைகளாகும்.

1. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்
2. கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்
3. கிணற்றுக்கு அழகு தண்ணீர்
   பெண்ணுக்கு அழகு திலகம்
4. கிணறு இறைக்க இறைக்க சுரக்கும்
5. இறைத்த கிணறு ஊறும்
   இறையாத கிணறு நாறும்
6. ஏரி பெருகில் எங்கும் பெருக்கு
7. ஏரியின் நீரைக் கட்டுதல் அரிது உடைத்தல் எளிது
8. ஆறு போவதே கிழக்கு
   அரசன் சொல்வதே வழக்கு
9. ஆறு நீந்தினவனுக்கு வாய்க்கால் எம்மாத்திரம்
10. கடலைத் தாண்ட ஆசையுண்டு
    கால்வாயைத் தாண்ட கால் இல்லை
11. கடல்நீர் நிறைந்து என்ன?
    காஞ்சிரை பழுத்து என்ன?
12. கடலிலே ஏற்றம் போட்ட கதை

மழைக்காலங்களில் மிகுதியாகக் கிடைக்கும் நீரைச் சேமித்து பயன்படுத்தல் நீர்வள நிர்வாகத்திற்குரியதாகும். அணை கடந்த வெள்ளத்தை மறிப்பவர் யார்? ஓடுற வெள்ளம் அணையிலே நிற்குமா? நீரைத் தேக்குவதற்கு அணை கட்டினர், வெள்ளம் வருவதற்கு முன்னே அணைபோட வேண்டும், ஏரி உடைவதற்கு முன்னே அணைபோட வேண்டும். பண்டைக் காலத்தில்

இத்தகைய நீர்நிர்வாக முறைகள் நுட்பத்தோடு பின்பற்றப்பட்டன என்பதைப் பழமொழிகள் வாயிலாக அறிகிறோம்.

விலங்குகள், பறவைகள் பற்றிய பழமொழிகள்

விலங்கு, பறவை போன்ற உயிரினங்கள் மனித வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. விலங்கியலார் (Zoologist) விலங்கு, பறவைகளின் தோற்றம், அமைப்பு, வளர்ச்சி என்று அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்றனர். தொல்காப்பியரே பறவை, விலங்குகளை கருப்பொருளில் கூறியுள்ளார். அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்து நமது முன்னோர்கள் விலங்குகளையும் பறவைகளையும் கூர்ந்து நோக்கி அவற்றின் குணம் கண்டு அக்குணங்களின் அடிப்படையில் பழமொழிகளை உருவாக்கியுள்ளனர். நாட்டுப்புறக் கதைகளான பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப் கதைகள், விலங்கினத்தை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மனிதன் விலங்குகளை காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள் என வகைப்படுத்தினான். வீட்டு விலங்குகளை வேளாண் தொழிலுக்குப் பயன்படுமாறு பழக்கினான். உழவுக்குப் பயன்படும் காளைகள், எரு தரும் ஆடுகள், பால் தரும் பசு, எருமை, காவல் காக்கும் நாய், பொதி சுமக்கும் குதிரை, கழுதை ஆகியவை பழமொழிகளில் பெரிதும் போற்றப்படுகின்றன. விலங்கினங்களுடன் பழகி அவற்றின் குணநலன்களைக் கண்டு அவற்றைப் பழமொழியாக்கினான். உயிரினங்கள் பற்றிய பழமொழியாக இருந்தாலும் வாழ்க்கைக்கு வேண்டிய பல அடிப்படை உண்மைகளை எடுத்துரைக்கிறது. பாரதியாரே காக்கைக் குருவி எங்கள் சாதி எனப் பாடியுள்ளார். விலங்கு, பறவை பற்றிய பழமொழிகளாக இருப்பினும் நம் முன்னோர் கண்ட பல அனுபவ உண்மைகள் மறைந்திருப்பதை நம்மால் மறக்க முடியாது.

எறும்பின் சுறுசுறுப்பும்
எருதின் உழைப்பும்
நாயின் நன்றியும்
நரியின் தந்திரமும்

காகத்தின் கூட்டுறவும்
சிங்கத்தின் வீரமும்
மானின் வாழ்வும்
பகுத்தறிவுள்ள மக்களுக்குத் தேவை என அறிஞர்கள் குறிப்பிடுவதிலிருந்து விலங்கு, பறவையிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை உள என அறிகிறோம். தமிழ்ப் பழமொழிகளில் விலங்கு, பறவை இனத்தைப் பற்றி நூற்றுக்கணக்கான பழமொழிகள் உள்ளன. நாய், பூனையைப் பற்றியும் யானை, நரியைப் பற்றியும் நிறை பழமொழிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ, எறும்பு முதலியவை பற்றி எவ்வளவு தூரம் கூர்ந்துநோக்கி அவற்றின் குணநலன்களைக் கண்டிக்கின்றனர் என்பதை நம்மிடையே வழங்கும் பழமொழிகள் உணர்த்துகின்றன.

1. ஈக்கு விஷம் தலையிலே தேளுக்குக் கொடுக்கிலே
2. ஈ, எறும்பு நுழையாத இடமில்லை
3. எறும்பு போல சுறுசுறுப்பு
4. எறும்பு ஊரக் கல்லும் தேயும்

இதேபோன்று விலங்கு பறவையினங்களையும் கூர்ந்துநோக்கி அவற்றின் குணநலன்களைக் கண்டிருக்கின்றனர்.

1. காகம் இல்லாத ஊரில்லை
   துயரம் இல்லாத வீடில்லை
2. காகத்திற்கு ஐந்து குணம்
3. காக்கை கூட்டம்போல் கட்டுக்கோப்பு
4. காக்கை குளிப்பது போல்
5. ஆமை புகுந்த வீடும்
   அமீனா புகுந்த வீடும் உருப்படாது
6. அணில் கொம்பிலே ஆமை கிணற்றிலே
7. அணில் தன் வாயால் கெடும்
8. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

9. ஆனை அசைந்து தின்னும்
வீடு அசையாமல் தின்னும்
10. பாம்பின்கால் பாம்பறியும்
11. முதலையும் மூர்க்கனும் விடா
12. குழந்தையின் வயிறும்
பன்றியின் வயிறும் நிறைந்தே இருக்கும்
13. ஆடே எரு ஆரியமே வெள்ளாண்மை
14. மாட்டை நடையில்பார்
ஆட்டைக் கெடையில் பார்
15. ஆவுந் தேவும் ஐந்து வருடத்தில் பலன் தரும்
16. வடலியை வெட்டி ஆள்
எருமையைக் கட்டி ஆள்
17. ஆனை மதத்தால் வாழைத்தண்டு
ஆண்பிள்ளை மதத்தால் கீரைத்தண்டு
18. ஆனை விழுந்தால் தந்தம்
புலி விழுந்தால் தோல்
19. சிங்கத்திற்குக் காடு ஆதரவு
காட்டுக்குச் சிங்கம் ஆதரவு
20. பூனை திருடு யானை கவடு
21. குட்டிபோட்ட பூனைபோல் அலைகிறான்
22. பாம்பு என்றால் படையும் நடுங்கும்
23. பன்றிக்குப் பல குட்டி
சிங்கத்திற்கு ஒரு குட்டி
24. வௌவாலைப் போல தொங்குகிறான்
25. உயர உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி பருந்தாகுமா?
26. அரணைக் கடித்தால் உடனே மரணம்
27. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?
28. நரிக்கு இடம் கொடுத்தால்
கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்
29. ஊருக்கு அரசன் காவல்
வீட்டுக்கு நாய் காவல்
30. காட்டில் புலி கொல்லும்
நாட்டில் புளி கொல்லும்

31. கொண்டவன் குறிப்பு அறிவாள்
    குதிரை இருப்பு அறியும்
32. வீட்டுச் செல்வம் மாடு
    தோட்டச் செல்வம் முருங்கை
33. எலி பூனையை வெல்லுமா?
34. நாய் வேட்டையாடும்
    குதிரை ஓட்டம் ஓடும்
35. கூகைக்குப் பகலில் கண் தெரியாது

நாயைத் தின்றவன் நற்குருவை அடைவான்
பன்றியைத் தின்றவன் பரமயோகியாவான்
யானையைத் தின்றவன் பரமஞானியாவான்

தின்றவன் என்பது அக்குணத்தை விட்டொழித்தவன் எனப் பொருளாகும். நாய் என்றால் பொறாமை உணர்வும் பன்றி என்றால் குறிக்கோளின்றி வயிற்றைப் பற்றியே சிந்தனையும், யானை என்றால் பழிவாங்கல் உணர்வும் உடையது என்பது அறிந்ததொன்றாகும். பொறாமை படக்கூடாது, குறிக்கோள் வாழ்வு, நன்றி மறவாமை போன்ற கருத்துக்களை இப்பழமொழி விளக்குகின்றது.

கூறவந்த கருத்துக்களை விலங்கு, பறவையினத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதுமுண்டு.

1. முதலையும் மூர்க்கனும் விடா
2. மனைவி, கப்பல், குதிரை இம்மூன்றையும்
   மற்றவரை நம்பி ஒப்படைக்காதே
3. ஆணாய் பிறந்தால் அருமை
   பெண்ணாய் பிறந்தால் எருமை
4. காகமில்லாத ஊரில்லை
   துயரமில்லாத வீடில்லை
5. கீரிக்கும் பாம்புக்கும் தீராப்பகை
6. தாயைப் பார்த்து பெண்ணைக் கொள்
   பாலைப் பார்த்து பசுவைக் கொள்

7. படித்தவனுக்கும் படிக்காதவனுக்குமுள்ள வித்தியாசம்
   கொக்குக்கும் அன்னத்திற்குமுள்ள வித்தியாசம்
8. உபதேசியாரிடம் குதிரை வாங்காதே
   விதவையிடம் பெண் கொள்ளாதே
9. ஆடு மிதியாக் கொல்லையும்
   ஆளனில்லாப் பெண்ணும் வீண்
10. உழுகிற எருமையும்
    உள்ளூர் மருமகனும் ஒன்று
11. ஊருக்கு அரசன் காவல்
    வீட்டுக்கு நாய் காவல்
12. காட்டில் புலி கொல்லும்
    நாட்டில் புளி கொல்லும்
13. கொண்டவள் குறிப்பு அறிவாள்
    குதிரை இருப்பு அறியும்
14. பாம்புக்கு விஷம் பல்லிலே
    பரத்தைக்கு விஷம் உடம்பிலே
15. வெள்ளாளன் கால் வைத்த இடமும்
    வெள்ளாடு கால்வைத்த இடமும் உருப்படாது

நமது முன்னோர்கள் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்கு, பறவையினத்திற்கும் நாட்டுப்புற மருத்துவம் கண்டுபிடித்துள்ளனர்.

1. ஏறிய பாம்புக்குச் சிறியா நங்கை வேர்
2. நாய்க்கடிக்கு நாற்பது நாள் பத்தியம்
3. நாய்க்குப் புண் வந்தால் நக்கும்
   கோழிக்குப் புண் வந்தால் கொத்தும்
4. நாய்ப்புண்ணுக்குச் சாம்பல் மருந்து
5. குரங்குப் புண்ணிற்கு வைத்தியமில்லை
6. குரைக்கிற நாய்க்குக் குத்துச்சோறும்
   சிலைக்கிற புண்ணிற்குப் பொட்டுத் தேங்காய் [illegible]ணையும்

விலங்கு, பறவை இனம் தொடர்பான நம்பிக்கைகளும் எழுந்துள்ளன.

1. ஆமை புகுந்த வீடும்
   அமீனா நுழைந்த வீடும் உருப்படாது
2. குளவி கூடு கட்டினால் பிறப்பு
   நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
3. ஆமை புகுந்த வீடும்
   வெள்ளைக்காரன்புகுந்த ஊரும் உருப்படாது

விலங்கு, பறவை இனம் தொடர்பாக சகுணங்களும் தோன்றியுள்ளதைப் பழமொழிகள் மூலம் அறிகிறோம்.

1. காகம் வலமானால் ஆயுசு விருத்தியாகும்
2. கருடன் இடமானால் கையில் பொருள் சேரும்
3. காடை இடமானால் நாட்டை ஆளலாம்
4. மடியிலே பூனையைக் கட்டிக்கொண்டு
   சகுணம் பார்த்தாற்போல
5. நாய் உதறினால் நல்ல சகுணம்
6. நாய் ஊளையிட்டால் ஊர் நாசம்
7. நாய்க்குத் தெரியும் நமன் வருகை
8. காட்டுக்காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்
9. கருடன் இடமானால் எவர் கைப்பொருளும் தன்வசமாகும்
10. செம்போத்து வலமானால் ஆயுள் விருத்தியாகும்

உயிரினங்கள் வானிலையை முன் உணரும் திறமையுடையன என்ற கருதுகோளை அடிப்படையாக வைத்து அவ்வியக்கங்களின் அடிப்படையில் அறிகுறிகளின் அடிப்படையில் மழை பெய்வதைக் கண்டுணர்ந்து அவ்வுண்மைகளைப் பழமொழியாக்கியுள்ளனர்.

1. ஈசல் பறந்தால் மழை வரும்
2. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை வரும்
3. தும்பி பறந்தால் மழை வரும்
4. தவளை கத்தினால் உடனே மழை வரும்
5. மயில் இரவில் கத்தினால் தப்பாமல் மழை வரும்

6. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
7. கொக்கு மேடேறினால் உடனே மழை

தாவரங்கள் பற்றிய பழமொழிகள்

பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதனுக்கு மரம், செடி, கொடிகளுடன் தொடர்புண்டு. வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே இவைகள் கருதப்படுகின்றன. தாவரவியலார் (Botanist) தோற்றம், அமைப்பு, வளர்ச்சி என அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்றனர். அறிவியல் வளர்ச்சியில்லாக் காலத்து நமது முன்னோர்கள் தாவரங்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் இயல்பு, பயன்பாட்டை அனுபவ அடிப்படையில் கண்டு அவற்றின் அடிப்படையில் தாவரங்கள் பற்றிய பழமொழிகளை உருவாக்கினர். நமது முன்னோர்கள் மரங்களின் இயல்புகளையும் பயன்பாட்டினையும் நன்கு உணர்ந்திருந்தனர். தாவரங்களின் பல்வேறு பாகங்களின் பயன்பாட்டையும் மக்கள் அறிந்திருந்தனர் என்பதை மருத்துவ பழமொழிகள் மூலம் அறிகிறோம். சில பழமொழிகள் இக்காலத்தில் வளர்ந்துள்ள தாவரவியலில் நுண்ணிய அறிவியல் உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. தாவர வாழ்வில் பழகியதன் காரணமாகத் தாவரங்கள் நோய் தீர்க்கும் மருந்தாவதை உணர்ந்திருந்தனர். இன்றுபோல தாவரவியலில் அறிவியலறிவில்லாவிட்டாலும் செடிகளின் இயல்புகளையும் பயன்பாட்டையும் நன்குணர்ந்து அந்த அனுபவ அடிப்படையில் பழமொழிகளை உருவாக்கினர். மனித இனம் வேளாண்மைப் பயிர்களைக் கண்டு, அவற்றை உற்பத்தி செய்து மனித குல வளர்ச்சிக்குப் பயன்படுத்தியது. மரம், செடி, கொடிகளின் இயல்புகளைக் கண்டு, மருத்துவத் துறைக்குப் பயன்படுமாற்றைக் கண்டு அவற்றை வாழ்வில் பயன்படுத்தி அதனடிப்படையில் பழமொழிகளை மனிதன் உருவாக்கினான்.

தாவரங்களின் மரங்களின் தன்மையையும் பயன்பாட்டையும் பழமொழிகளின் அடிப்படையில் காண்போம். மரங்களைப பற்றிய பொதுவான பழமொழிகளும் உண்டு.

1. ஒரு மரம் தோப்பல்ல
2. காய்ந்த மரம் தளிர்க்குமா?

3. காய்ந்த மரம் வளைந்து நிற்கும்
நற்குணம் உடையவர் தணிந்து நிற்பார்
4. முற்றின மரத்தில் வைரம் பாய்ந்திருக்கும்
5. மரத்தை இலை காக்கும்
மானத்தை பணம் காக்கும்
6. நச்சு மரமானாலும் நட்டவன் தண்ணீர் ஊற்றுவான்
7. தழைத்த மரத்துக்கு நிழலுண்டு
பிள்ளைப் பெற்றவளுக்குப் பாலுண்டு
8. மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும்
மண் தோண்டுகிறவனுக்கு இடமும் கொடுக்கும்
9. நுனிமரத்தில் ஏறி அடிமரத்தை வெட்டின மாதிரி
10. ஒதி பெருத்துத் தூணாகுமா?
11. கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல

மரங்களின் பயன்பாடு பற்றி பழமொழிகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.

1. அத்தி பூத்தாற்போல
2. அரச மரத்தடியில் இருக்கும் கல் அனைத்தும் பிள்ளையார்தாம்
3. அரச மரத்தைச் சுற்றியதும் அடிவயிற்றைப் பார்த்துக்
கொண்டது போல (பிள்ளைப்பேறு)
4. சிறு விதையாகிய ஆலமரம் பெருநிழலைக் கொடுக்கும்
5. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
6. ஆல் பழுத்தால் வேடனுக்குக் கொண்டாட்டம்
7. ஆல்போல் விழுதுவிட்டு (வாழ்த்தல்)
8. ஈச்சங்கள்ளு எதிலும் குளிர்ச்சி
9. என்ன தின்னாலும் அதற்குமேல் நாலு பேரீச்சம்பழம்
தின்ன எல்லாம் அடிபடும்
10. உடையவன் சொற்படி கமுகடிகளை பறி
11. கள்ளன் உறவல்ல
காயா விறகும் விறகல்ல
12. தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாது
13. ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலன் தரும்

14. தென்னை செழித்தால் பண்ணை செழிக்கும்
15. தென்னை மரத்திற்குத் தண்ணீர் வார்த்தால் தலையாலே தரும்
16. பழந்தேங்காயில் தானே எண்ணெய்
17. பனை வைத்தவன் பார்த்துச் சாவான்
தென்னை வைத்தவன் தின்று சாவான்
18. முருங்கையும் ஓர் எருமையும் உண்டானால்
வருகிற விருந்தாளியை மனம் களிக்கச் செய்வேன்
19. பொங்குங் காலம் புளி
மங்குங் காலம் மாங்காய்
20. மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்
21. மூங்கில் பாயும் முரட்டுப் பெண்டாட்டியும்
22. வீட்டுப் பெண்சாதி வேம்பு
நாட்டுப் பெண்சாதி கரும்பு
23. மகனில்லாத வீடு பாழ்
மரமில்லாத தோட்டம் பாழ்
24. நாவல் பழுத்தால் நாடு செழிக்கும்

மரஞ் செடி கொடிகள் நாட்டுப்புற மருந்தாகப் பயன்படுவனவற்றைக் கண்டு உணர்ந்து அதைப் பயன்படுத்திப் பலன் கண்டபின் அதன் அடிப்படையில் பழமொழிகளை முன்னோர்கள் உருவாக்கினர்.

1. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி
2. ஆவாரை இலையும் ஆபத்துக்குதவும்
3. இளைத்தவனுக்கு எள்ளுவிதை
கொழுத்தவனுக்குக் கொள்ளுவிதை
4. கோழையை அறுக்கும் குப்பைமேனி
5. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி
6. தூதுவளை ஆயுளை விருத்தி செய்யும்
7. விடாச்சுரத்துக்கு விஷ்ணுகரந்தை
8. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்
9. வில்வம் பித்தம் போக்கும்

10. ஏழைக்குக் கரிசாலை
11. க ட லோர வேருக்குச் சாரமில்லை
கட்டாத உப்புகது வீரமில்ல '
12 வில்வப்பழம தின்பார் பித்தமபோக
பனம்பழம் தின்பார் பசிபோக
13. சிறியா நங்கை செ வம் போல
14. வேம்புக்குப் பல் அழகு பெருட
வேலுக்குப் பல் இறுகும்
15. தோட்டத்துப் பச்சிலை மருந்துக்குதவாது
16. மூலிகை அழுத்தால் மூன்றுலகு ஆளலாம்
17. பேராமுட்டி பேரை உரைத்தால்
காதவழி தூரம் கண் தெரியும்
18. பாலும் த ழையும் சேராத மருந்தும்
பாகும் நெய்யும் சேராத லேகியமும் வீண்
19. நன்னாரி மேனி யைப் பொன்னாக்கும்
20. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்க வேண்டும்
21. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்
ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்
22. கொடிமுள்ளி நாலும் கபத்தை அறுக்கும்
23. புழக்கடைப் பச்சிலை மருந்துக்குதவாது
24. மாதுளை வளர்ந்த வீடு
வயிற்றிலே நெஞ்சிலே களங்கமில்லை
25. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்

வேளாண்மை அனுபவத்தின் விளைவாக மரங்களை எவ்வளவு இடைவெளி விட்டு நடவேண்டும் என்பதையும் கண்டுணர்ந்துள்ளனர்.

எட்டடி வாழை
பத்தடி பனை
பதினாறடி தென்னை
வளர்க்கும் முறையையும் நன்குணர்ந்துள்ளனர்.

முருங்கையை ஒடித்து வளர்க்கணும்
பெண்ணை அடித்து வளர்க்கணும்

வேளாண்மைப் பயிர்களைப் பயிரிடும் முறை பற்றியும் நன்குணர்ந்து கண்ட அனுபவங்களைப் பழமொழியாக்கியுள்ளனர்.

1. ஆடிப் பருத்தியைத் தேடி விதை
2. ஆடி வாழை தேடி நடு
3. களர் நிலத்தில் கரும்பு வை
4. எட்டடி வாழையும் பத்தடி பிள்ளையும்
5. வைகாசி மாதம் வாழை பெருகும்
6. களர் முறிக்க வேப்பந்தழை
7. களர் கெடப் பிரண்டை இடு
8. நிலத்துக்குத் தகுந்த கனியும்
   குலத்துக்குத் தகுந்த குணமும்

பகல் உணவுக்குப் பாகல், மக்களைக் காக்கும் மணத்தக்காளி என்னும் பழமொழிகள் எழுந்துள்ளன.

காட்டில் மர வளங்கள் செழிப்பாகயிருந்தால் மழை பெருகும். கால்நடை பெருகும். வேளாண் தொழில்களும் சிறப்பாக நடைபெறும். காடுகளையொட்டி பல்வேறு சார்புத் தொழில்களும் உருவாகும். தொழில் வளங்களும் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். சுருங்கக் கூறின் தாவரங்கள் மனித குலத்துக்கு உற்ற துணைவனாக விளங்குவதைக் காண்கிறோம்.

தொழில்கள்

தன் தொழிலைப் பாராதவனுக்குத் தலையளவு
பஞ்சம் (பழமொழி)

தொழில்கள் பற்றியும் அத்தொழில் புரிவோரைப் பற்றியும் பல குறிப்புக்கள் பழமொழிகளில் காணப்படுகின்றன. தொழிலாளியின் இலக்கணமாக

தீரக் கற்றவன் தேசிகனாவான் (ஆசிரியர்)
சீட்டுடன் வாழ்பவன் செட்டி (செட்டியார்)

எனப் பழமொழி கூறுகின்றது. அக்காலத்தில் சாதியும் தொழிலும் இணைந்து காணப்படுவதைப் பழமொழிகள் சுட்டிக் காட்டுகின்றன. உழவும் நெசவும் முதன்மைத் தொழில்களாக இருந்ததைப் பழமொழிகள் மூலம் அறிகிறோம். சில தொழில் புரிவோர்க்குப் பேராசையுண்டு என்பதை வாணியன் ஆசை கோணி கொள்ளாது என்ற பழமொழி மூலம் அறிகிறோம். தொழிலில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்பதைத் தூண்டில்காரனுக்கு மிதப்பு மேலே கண் என்ற பழமொழி மூலம் அறிகிறோம். சில தொழில்கள் செய்ய மூலதனம் தேவையென்பதை வெறுங்கை முழம் போடுமா? என்பதன் மூலமும் ஈடுபாடின்றி வேலை செய்வதை கூலிக்கு மாரடிப்பு என்றும் தொழிலில் நாணயம் வேண்டும் என்பதைச் சூசகமாகச் செட்டி பணத்தைக் குறைத்தான், சேனியன் நூலைக் குறைத்தான் என்றும் உழைப்பின் பெருமையைத் தோட்டிபோல் உழைத்து துரைபோல் சாப்பிட வேண்டும் என்றும் அக்காலத்தில் தொழில் குலத்தொழிலாக இருந்ததென்பதை நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்ட வேண்டுமா? என்றும் பழமொழிகள் கூறுகின்றன. குலவித்தை கற்றுப் பாதி, கல்லாமல் பாதி என்பதிலிருந்து பரம்பரைத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிகிறோம்.

தொழில்களை வேளாண்மைத் தொழில்கள், வேளாண்மைசார் தொழில்கள், அரசு தொழில்கள், பிற தொழில்கள் என நான்காக வகைப்படுத்தலாம்.

வேளாண்மைத் தொழில்

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் வேளாண்மையைத் தங்கள் வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர்.

தொழில்கள்				
வேளாண்மைத் தொழில்கள்	வேளாண்மைசார் தொழில்கள்	அரசு தொழில்கள்	பிற தொழில்கள்	
	ஆடு மாடு மேய்த்தல் ஆசாரி தொழில் கூலிவேலை செய்தல்	கலெக்டர் போலீஸ் ஆசிரியர் அரண்மனை சேவகம் கணக்கன் தண்டல் தலையாரி தோட்டி	1. நெசவுத்தொழில் 2. சலவைத்தொழில் 3. முடிவெட்டும் தொழில் 4. குசத்தொழில் 5. நகைசெய்யும் தொழில் 6. வியாபாரம் செய்தல் 6.1. உப்பு வணிகம் 7. பாய்த்தொழில் 8. மருத்துவத்தொழில் (வைத்தியன்) 9. மீன்பிடிக்கும்தொழில் 10. மந்திரத்தொழில் 11. கள் இறக்கும் தொழில் 12. கப்பல் தொழில் 13. ஓடத் தொழில்	14. வேட்டையாடும் தொழில் 15. சோதிடம், பஞ்சாங்கம் பார்க்கும் தொழில் 16. திருட்டுத் தொழில் 17. கசாப்புத்தொழில் 18. சமையல் தொழில் 19. பாம்பாட்டித்தொழில் 20. யானைப்பாகன் தொழில் 21. கூத்துத்தொழில் 22. பரத்தைத் தொழில் 23. பிச்சையெடுக்கும் தொழில் 24. பால்விற்கும் தொழில் 25. செருப்பு தைக்கும் தொழில்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
(புறம். 18)

என்று தமிழர் கோட்பாட்டை இலக்கியங்கள் விளக்குகின்றன. உழவேதலை (1031) உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033) என்ற குறட்பாக்கள் வேளாண்மையின் சிறப்பையும் வேளாண் மக்களின் மேம்பாட்டையும் சிறப்புற உணர்த்துகின்றன. தமிழர்கள் கொண்டிருந்த வேளாண்மை பற்றிய நுட்ப அறிவு நம்மை பெருமிதம் கொள்ள வைக்கிறது. வேளாண்மை பற்றிய அடிப்படை கோட்பாடுகள் பெரும்பாலும் மாற்றமின்றியே உள்ளன. பழமொழிகளும் வேளாண்மைப் பற்றி சிறப்பாகவே பேசுகின்றன.

மேழிச் செல்வம் கோழை படாது
உழவின் மிகுந்த ஊதியமில்லை
வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை
பூமி திருத்தி உண்

வேளாணமை பற்றி நுணுக்கமான அறிவு இருந்ததையும் பழமொழிகள் காட்டுகின்றன

ஆடிப்பட்டம் தேடி விதை
அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்

வேளாண் பழமொழிகள் மூலம் வேளாண்மைத் தொழிலின் நுட்பத்தையும் வேளாண் சமுதாய வரலாற்றையும் நன்கறிகிறோம்.

உழவியல் செயல்முறைகள் (Agricultural practices) பற்றிய உழுதல் (Ploughing) உரமிடுதல் (Fertilization) களை நீக்கம் (weed control) நீர் பாய்ச்சல் (Irrigation) பயிர் பாதுகாப்பு

(Crop protection) பற்றிய பழமொழிகள் இன்றைய தொழில் நுட்பத்திற்கிணையாக விளங்குவதைக் காண்கிறோம்.

உழவியல் சிறப்பு
உழு முறைகள்
விதைப்பு முறை
நீர் பாய்ச்சல்
நாற்றுநடல்
பயிர் பாதுகாப்பு
களை நீக்கம்
விளைச்சல்
அறுவடை
நெல் தூற்றல்
சேமிப்பு
வேளாண் பொருளியல்
வேளாண் விரிவினை
வேளாண் பொறியியல்

என்றவாறு பகுத்து ஆராய்வோம்.

உழவியல் சிறப்பு

1. உழவின் மிகுந்த ஊதியமில்லை
2. ஏர் நடந்தால் பேர் நடக்கும்
3. உயிர்த் தொழில் எல்லாம் பயிர்த்தொழில் பின்னால்
4. வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை
5. அழுது கொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு
6. உழு தொழில் நிற்கில் மறுதொழில் நடவா
7. எண்ணிப்பார் குடித்தனத்தை
   எண்ணாமல் பார் வெள்ளாமையை
8. சேத்தில் முப்பது
   நாத்தில் முப்பது
   சாத்தில் முப்பது
   அது நூற்றுக்கு முப்பது

9. தொழுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையில்
   ஓதுவாரெல்லாம் உழுவான் தலைக்கடையில்

உழு முறைகள்

1. உழவியலில் உழுதல்தான் அடிப்படைச் செயலாகும். பல உழு முறைகளைப் பற்றி மக்கள் கண்டுணர்ந்த அனுபவங்கள் பழமொழிகளாக முகிழ்த்துள்ளன.

1. அகல உழுவதைவிட ஆழ உழுவதுமேல்
2. ஆழ உழுது தேடி எடு
3. ஆழ உழுது அடர விதை
4. அதிர அடித்தால் உதிர விளையும்
5. அமிஞ்சிக்கு உழுதால் சரியாய் விளையுமா?
6. ஆழ உழுதாலும் அடுக்க உழு
7. முன்ஏர் போனவழி பின்ஏர்
8. எருவிலும் வலியது உழுவே
9. வெண்ணெய் போல உழவு
   குன்றுபோல விளைவு
10. அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி
11. உழவில்லாத நிலமும்
    மிளகில்லாத கறியும் வழவழ
12. ஓடிஓடி நூறுகுழி உழுவதைப் பார்க்கிலும்
    அமர்ந்து அமர்ந்து ஆறுகுழி உழு
13. ஈர நிலத்தில் ஏரைப் பிடி
14. உழவிற்கு ஏற்ற கொழு
15. கார் அடித்தால்தான் கலப்பை உழும்
16. கையைப் பார்த்து கலப்பையை வெட்டு
    காலைப் பார்த்து மேழியை வெட்டு
17. உழவு பகையானால் எருவினால் தீராது
18. நஞ்சைக்கு ஏழு உழவு
    புஞ்சைக்கு நாலு உழவு
19. எள்ளுக்கு ஏழு உழவு
20. ஏழு உழவு உழுதால் எரு போட வேண்டாம்
21. கொம்பால் உழுது கொண்டியால் மாரடி

22. மண்ணைப் புரட்டும் பண்ணைக் கலப்பை
23. நாட்டுக் கலப்பையால் நான்குமுறை உழு

எரு

நிலத்திற்கு எரு இடுதல் இன்றியமையாத ஒன்றாகும். மிகுந்த விளைச்சலைப் பெருக்க எரு இடவேண்டும். இதனை உரமிடுதல் என்றும் கூறுவர்.

1. குப்பையில்லாத வெள்ளாமை சப்பை
2. எரு குழையின்றி ஏர் பிடியாதே
3. ஆடு ஊடாடாக் காடு விளையாது
4. ஆட்டு உரம் ஓராண்டு நிற்கும்
   மாட்டு உரம் ஆறாண்டு நிற்கும்
5. மாட்டெரு புஞ்சைக்கு
   தழையெரு நஞ்சைக்கு
6. நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்
7. வேப்பம் புண்ணாக்கு விலையுள்ள எருவாம்
8. புற்றுமணல் போட்டால் பூமி பலன்தரும்
9. ஆற்று வண்டல் தோற்றும் பயிரை
10. சேரி எரு எல்லா எருவைவிட சேகரமுண்டாகும்
11. ஈரம் போகாமல் எருவை இடு
12. காய்ந்த எரு காசுக்குதவாது

விதையும் விதைப்பும்

வேளாண்மையில் விதையைத் தேர்தலும் பட்டத்தில் விதைத்தலும் மிக முக்கியமாகும்.

1. வித்தைப் பொறுத்து விளைவின் திறமை
2. விதை பாதி வேலை பாதி
3. ஆய் விதை எனினும் காய்வது நன்று
4. காய்ந்த வித்திற்குப் பழுதில்லை
5. அந்து அரித்த வித்து முளையாது
6. ஓடுகள் விதையைக் கேடறக் காக்கும்
7. சொத்தைப் போல் வித்தை பேணு

8. விருட்சியிலே விதையேல்
9. ஈரம் தானே பீரம் பயிருக்கு
10. விதைகள் ஆழம் புதைவது பழுதாம்
11. தெளித்த விதையை மறைத்து முடு
12. விரை அகல இடு
13. அடர விதைத்தால் போர் உயரும்
    கலக்க விதைத்தால் களஞ்சியம்
14. பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு
15. காலத்து விரை கரம்பில் போடு
16. ஆடிப்பட்டம் தேடி விதை
17. காருக்குப் பின் பட்டமில்லை
    கார்த்திகைக்குப் பின் மழையுமில்லை

நீர் பாய்ச்சல்

1. வரப்புயர்ந்தால் நெல்லுயரும்
2. ஆள் ஏற நீர் ஏறும்
3. ஊற்றுப் பாய்ச்சல் ஆற்றுப் பாய்ச்சல் பத்துகுழியும்
   ஏரிப் பாய்ச்சல் நூறு குழியும் சரி
4. முடப்புல்லும் முக்குறுணித் தண்ணீரைச் செறுக்கும்
5. பாய்ச்சலும் வேண்டும் காய்ச்சலும் வேண்டும்

நாற்று நடவு

நாற்றைப் பாவும் காலம், நடுவதற்குரிய காலம், நடும் முறை ஆகியவற்றை முன்னோர்கள் நன்கு கண்டுணர்ந் திருந்தனர் என்பதைப் பழமொழி வாயிலாக அறிகிறோம்.

1. அடை மழையில் நாற்று நட்டால் ஆற்றோடு போகும்
2. அறுநான்கில் பெற்ற பிள்ளையும்
   புரட்டாசி பதினைந்துக்குள் நட்ட நடவும்
   பெரியோர்கள் வைத்த தனம்
3. ஆவணி முதலில் நட்ட பயிர்
   பூவணி அரசர் புகழ் போலும்
4. பிடிபிடியாய் நட்டால்
   பொதிபொதியாய் விளையுமா?

5. முடிமுடியாய் நட்டால்
   பிடிபிடியாய் விளையுமா?
6. முடிய முடிய நட்டால்
   கோட்டை கோட்டையாய் விளையுமா?
7. புரட்டாசி பதினைந்தில் நடவு
8. நண்டு நுழையாத நடவு

களை நீக்கம்

பயிர்ப் பாதுகாப்பில் களை நீக்கம் மிக முக்கியமான பணியாகும்.

1. களை பிடுங்காப் பயிர் கால் பயிர்
2. களை எடாதவன் விளைவு எடான்
3. களை எடாதவன் கபோதி
4. கார்த்திகைக்கு மேற்பட்டுக் கைப்பயிர் எறியவேண்டும்
5. கதிரைக் களைந்தும் களையைப் பிடுங்கு
6. வெட்டி களையெடுத்தால் கட்டு முக்கலங்காணும்
7. கவடிருந்த நெஞ்சும் களையிருந்த பயிரும் கடைத்தேறாது
8. கோரை குடியைக் கெடுக்கும்
9. அருகு முளைத்த கொல்லையும்
   அரசரோடெதிர்த்த குடியும் ஈடேறாது
10. கிளைக்கிறபோதே களையைக் கிள்ளு
11. ஈயந்தனையும் எருவை காயந்தனையும் களையெடு
12. கோரையைக் கொல்ல கொள்ளு விதை

பயிர்ப் பாதுகாப்பு

வேளாண்மையில் பயிர்ப் பாதுகாப்பு மிக முக்கியமானது. பயிர்ப் பாதுகாப்பில் வேலியடைத்தல், பூச்சி, நோயினின்றும் காத்தல் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

1. அடைத்தவன் காட்டைப் பார்
   மேய்த்தவன் மாட்டைப் பார்
2. இனம் இனத்தைக் காக்கும்
   வேலி பயிரைக் காக்கும்

3. உடையவன் பாராப்பயிர் உருப்படுமா?
4. காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்
5. வேலி வைத்து காப்பாற்றாத கண்ணும்
ஆலை வைத்து ஆட்டாத வாணியனும் சரியல்ல
6. வெக்கைக்கு வேலி மறைப்பு
7. அடைப்பில்லா காடும் விடுப்பில்லா ஏரும்
8. விதைப்பது முன் வேலி அடை
9. கள்ளிவேலியே வேலி
கரிசல் நிலமே நிலம்
10. நெல்லைக் கெடுக்கும் நாவாய்ப்பூச்சி
11. கரும்பைக் கெடுக்கும் நாவாய்ப்பூச்சி
12. கரையான் பட்ட பயிர் ஒரு முழம் கட்டை
13. கம்பளிப் புழு பயிர்த்தெம்பினை வாங்கும்
14. அசுவினைப் பூச்சி அவரைக்கு ஆகாது
15. கருக்கண்ணிப்பட்டால் கரையான் கண்ணாலும்
திரும்பிப் பாராது
16. புழுவைத் தின்று புள்ளினம் உதவும்
17. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்து

விளைச்சல்

1. விளையும் பயிர் முளையிலே தெரியும்
2. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் (நம்பிக்கை)
3. ஆழ உழுது அரும்பாடு பட்டாலும்
பூமி விளைவது புண்ணியவான்களுக்கே (நம்பிக்கை)
4. பாவம் பதராய் விளைந்தது (நம்பிக்கை)
5. அம்பா பாக்கியம் சம்பா விளைந்தது
பாவி பாக்கியம் பதராய் விளைந்தது
6. இடையனும் பள்ளியும் இறைத்த புலம் சாவி

அறுவடை

விளைந்து முற்றிய பயிரை உரிய காலத்தில் அறுவடை செய்தாக வேண்டும். பாடுபட்டவர்க்கே பலனுண்டு.

1. உழுகிற காலத்தில் ஊர் சுற்றிவிட்டு
அறுக்கிற காலத்தில் அரிவாளை எடுத்து புறப்படலாமா?
2. உழுகிற நாளில் ஊருக்குப் போனால்
அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை
3. கதிருக்கு முந்நூறு நெல் இருந்தால் முழு வெள்ளாண்மை

தூற்றுதல்

அறுவடை செய்ததைத் தூற்றிப் பதரையும் தானியத்தையும் பிரிக்க காற்றை நம்பினர்.

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2. அடிக்கும் காற்றிலே தூற்ற வேண்டும்
3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கரும்புள்ளபோதே ஆட்டிக்கொள்

சேமிப்பு

அறுவடை செய்து தூற்றிய நெல்லைச் சேமித்து வைக்கின்றனர். விதைக்காகச் சேமிப்பது, உணவுக்காகச் சேமிப்பது என இருவகை உண்டு.

குலுக்கையின் நெல்லும் குறையக் கூடாது
தான் தின்னத் தவிடு இல்லை
சம்பா நெல்லுக்குத் தொம்பை வைத்துக் கட்டுகிறான்
அம்மா குதிர் போல
அய்யா கதிர் போல

என்ற பழமொழிகளில் தானியத்தைச் சேமித்து வைக்கப் பயன்படும் குலுக்கை, தொம்பை, குதிர் போன்றவற்றைக் காண்கிறோம்.

தோட்டவியல்

அறிவியல் நோக்கோடு காய்கறிகள் பயிரிட்டமையை அறிகிறோம்.

ஆடி வாழை தேடிப் போடு
ஆடி அவரை தேடிப் போடு
எட்டடி வாழை கமுகு
ஈரடி கரும்பு கத்தரி
இருபதடி பிள்ளை
இஞ்சி லாபம் மஞ்சளில்

வேளாண் பொருளியல்

ஒரு வேலி நிலத்தைப் பராமரிக்க ஆள், விதை முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன.

'வேலி ஒன்றுக்கு ஈரணை மாடும் இரண்டு ஆளும்'
வேலி ஒன்றுக்கு பன்னிரண்டு கலம் விரைப்பாடு'
'கார்த்திகைக் கார் கடைவிலை
தைச்சம்பா தலைவிலை'
'சித்திரை மாதம் சிறந்து மழை பெய்யாது போனால்
வில்லாததை விற்று வெள்ளாடு கொள்'

வேளாண் விரிவினை

உழவுத் தொழில் சிறப்பாகச் செய்பவர்களை முன்னோடிகளாகக் கொள்வர்.

'உழுவற உழுதவன் ஊரில் பெரியவன்'

வேளாண் பொறியியல்

வேளாண் பொறியியலில் வேளாண் கருவிகள், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மைக் கட்டமைப்புகள், விளைபொருள் பதன் செய்தல் முதலியவை ஆராயப்படுகின்றன.

'கொம்பால் உழுது குண்டியால் மூடு
'மண்ணைப் புரட்டும் பண்ணைக் கலப்பை'
'நாட்டுக் கலப்பையால் நான்குமுறை உழு'

பண்டைச் சமுதாயத்தில் பின்பற்றப்பட்ட வேளாண் செயல் முறைகளையும் வேளாண் மக்களின் கூர்த்த மதி நலத்தையும் வேளாண் சமுதாய வரலாற்றையும் வேளாண் பழமொழிகள் மூலம் அறிய முடிகிறது.

வேளாண்மைசார் தொழில்கள்

வேளாண்மை சார்ந்த தொழில்களாக ஆடு மாடு மேய்த்தல், ஆசாரி தொழில், கூலி வேலை முதலியவை கருதப்படுகின்றன.

ஆடுமாடு மேய்த்தல்

நுனிப்புல் மேய்வதைப் போல
ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கணும்
பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கணும்

ஆசாரி தொழில்

ஆசாரி வீட்டுக்கு அடுப்பு இரண்டு
ஆசாரிக்கு வணங்கின தலை அம்பட்டனுக்கும் வணங்கும்

கூலி வேலை செய்தல்

கூலிக்கு அறுத்தாலும் குறுணிக்கு அறுக்கலாம்
வீணுக்கு அறுத்து வெளியில் நிற்கிறேன்

அரசு தொழில்கள்

கலெக்டர்

கலெக்டரோடு வழக்குக்குப் போனாலும்
கணக்கனோடு வழக்குக்குப் போகக்கூடாது

போலீஸ்

புகை நுழையாத இடத்தில் போலீஸ் நுழையும்
போக்கிரிக்கு ஏற்றது போலீஸ் வேலை
வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை
போக்கத்தவனுக்கு போலீஸ் வேலை

ஆசிரியர்

தீரக்கற்றவன் தேசிகன் ஆவான்
கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்
எழுத்தறிவித்தவன் இறைவன்
குருவாய் மொழியே திருவாய்மொழி

அரண்மனை சேவகம்

அரைப்பணச் சேவகமானாலும் அரண்மனைச் சேவகம்போல் ஆகுமா?
அரண்மனை காத்தவனும் அடுப்பாங்கரை காத்தவனும் வீண் போகமாட்டான்

கணக்கன்

கணக்கன் கணக்கறிவான்
தன் கணக்கைத் தானறியான்
கணக்கனைப் பகைத்தாயோ?
காணியை இழந்தாயோ?
கணக்கனைப் பார்த்தால் பிணக்கு வரும்
கல்லை இடறினாலும் கணக்கனை இடறாதே

தலையாரி

அதிகாரி வீட்டில் திருடி தலையாரி வீட்டில் ஒளிந்ததுபோல

தோட்டி

தோட்டி போல உழைத்து துரைபோல வாழவேண்டும்

பிற தொழில்கள்

பழமொழிகளில் தொழில்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

நெசவுத் தொழில்

உண்பத நாழி உடுப்பது நான்கு முழம்
காஞ்சிபுரம் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்

வேண்டும் என்று நூற்றால்
வெண்ணெய் போல் நூற்கலாம்

சலவைத் தொழில்

புதிய வண்ணான் பொந்துகட்டி வெளுப்பான்
தும்பைப் பூ சலவை
வெளுப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்

முடிவெட்டும் தொழில்

அம்பட்டக் கிருதாவும் வண்ணார ஒயிலும்
அம்பட்டன் வீட்டில் மயிருக்குப் பஞ்சமா?
அம்பட்டன் வேலை செய்தால் சரியாய் செய்யணும்
இருப்பவன் ஒழுகாயிருந்தால்
சிரைப்பவன் ஒழுங்காய்ச சிரைப்பான்

குசத் தொழில்

குசவனில் தூதன் இல்லை
ஆயரில் ஆண்டி இல்லை

நகை செய்யும் தொழில்

தட்டான் காற்பொன்னிலும் மாப்பொன் திருடுவான்
பொன் திருடாத ஆசாரியே இல்லை

வியாபாரம் செய்தல் (வணிகத் தொழில்)

வாணியன் ஆசை கோணி கொள்ளாது
உப்பு வாணிகன் அறிவானோ கற்பூர விலையை
முதல் உள்ளவனுக்கு லாபம்
வணிகர்க்கு அழகு வணிகம் செய்தல்
முதலை வைத்துப் பெருக்காத வணிகனைப்போல

பாய்த்தொழில்

பத்தமடைப் பாய்க்குப் பழுதா சொல்வார்கள்?

மருத்துவத் தொழில் (வைத்தியன்)

வைத்தியன் சொல்வதெல்லாம் மருந்து
வைத்தியன் பாராத நோய் தீருமா?
வைத்தியனுக்கும் அஞ்ச வேண்டும்
வம்பனுக்கும் அஞ்ச வேண்டும்
வைத்தியன் பெரிதோ? மருந்து பெரிதோ?
வைத்தியன் தகப்பனைப் போல

மீன் பிடிக்கும் தொழில்

தூண்டில் காரனுக்கு மிதப்பு மேலே கண்
கடல் மீனுக்கு நுளையன் இட்டதே பெயர்
தூண்டிலைப் போட்டு வராலை இழுக்கிறது
கருவாடு விற்ற பணம் நாறுமா?
ஏலேல சிங்கன் பொருள் ஏழுகடல் போனாலும் திரும்பும்

மந்திரத் தொழில்

மந்திரம் கால் மதி முக்கால்

கள் இறக்கும் தொழில்

ஊறிற்றாம் கள்
உதித்தாளாம் சாணாத்தி
வற்றிற்றாம் கள்
வறண்டாளாம் சாணாத்தி

கப்பல் தொழில்

கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு

ஓடத் தொழில்

ஆற்றைக் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு

வேட்டைத் தொழில்

உடும்பு போனால் போகிறது
கை வந்தால் போதும்

ஆனைக்கும் அடி தவறும்
வேடனுக்கும் குறி தவறும்

சோதிடம், பஞ்சாங்கம் பார்க்கும் தொழில்

சாகிற வரையில் வைத்தியன் விடான்
செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
பஞ்சாங்கம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்

திருட்டுத் தொழில்

கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை
திருடனுக்கு திருடன் புத்தி
கள்ளனுக்குக் களவிலே சாவு
இருட்டு வீட்டிற்குப் போனாலும்
திருட்டுக் கை நிற்காது

கசாப்புத் தொழில்

ஏன் பறக்கிறாய் ஆட்டுக்குட்டி
என் கையில் உள்ளது சூரி

சமையல் தொழில்

மாவிலும் புரளமாட்டேன்
பணியாரத்திலும் விழமாட்டேன்

பாம்பாட்டித் தொழில்

பாம்பாட்டிக்குப் பாம்பிலே சாவு

யானைப்பாகன் தொழில்

யானைப் பாகனுக்கு யானையாலே சாவு

கூத்துத் தொழில்

கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்

பரத்தைத் தொழில்

தேவடியாள செத்தால் பிணம்
தேவடியாள் தாய் செத்தால் மணம்
தேவடியாளுக்குத் தினமும் ஒரு கணவன்

பிச்சை எடுக்கும் தொழில்

ஆண்டிக்குப் பிச்ச . யா?
அவன் குடுவைக்குப் பிச்சையா?
ஆண்டி ம. 'ர் கட்டினது பே'

பால் விற்கும் தொழில்

என்ன மாயம் இடைச்சி மாயம்
பாலோடு தண்ணீர் கலந்த மாயம்
இடைச்சி சம்பத்தும் சாணாத்தி வாழ்வும் சரி

செருப்பு தைக்கும் தொழில்

சக்கிலியன் சாமிக்குச் செருப்படி பூஜை

பொருளாதாரம்

நமது முன்னோர்கள் பொருள் என்பதற்குப் பணம் அல்லது செல்வம் என்ற அடிப்படையில் பொருளாதாரத்தைக் கண்டுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் ஒரு காலத்தில் நிலமான்யமுறை தோன்றியது. அதையடுத்து ஆங்கில நாட்டில் வணிக வாதமும் பிரெஞ்சு நாட்டில் இயற்கை வாதமும் தோன்றின. ஆடம்ஸ்மித் (Adomsmith) மல்தூஸ் (Malthus) ரிக்கார்டோ (Ricardo) போன்ற தொல் பொருளியலாளர் தோன்றினர். பின்னர் உழைப்போருக்குரிய பங்கைத் தரவேண்டுமென்ற காரல்மார்க்ஸ் கொள்கையும் சோசலிசமும் தே.. எறின. மறுமலர்ச்சி பொருளாதாரம் ஆர்பர்ட் மார்ஷல் கொள்கையும் வேலை வாய்ப்பினைத் தரவல்ல கெயின்ஸ் கொள்கையும் பிகு (Pigou) என்பாரின் நலப் பொருளாதாரக் கொள்கையும் உருவாயின. வாழ்க்கையிலிருந்து விவசாயப் பருவத்திற்கும் பின் பண்டமாற்றுப் பருவத்திற்கும் மனிதன் கடந்ததனைப் பொருளாதார வளர்ச்சிநிலை எய்துதல் (Economic transition) என்பர். நிலம்,

மூலதனம், உழைப்பு, அமைப்பு ஆகியவை உற்பத்திக ஈன காரணங்களாகும் என ஆடம்ஸ்மித் (Adomsmith) கூறுகிறார். இன்று பொருளாதார வளர்ச்சியடிப்படையில் வளர்ந்த நாடுகள் (Developed Countries) வளரும் நாடுகள் (Developing Countries) எனப் பகுப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்களே பொருளியலுக்கு அடிப்படையாக அமைகின்றன. சங்க மருவிய கால திருக்குறளிலும் பொருளியல் பற்றிய கருத்துக்களைக் காண்கிறோம். நமது முன்னோரிடமும் பொருளியல் சிந்தனை இருந்ததை இலைமறை கா' ~கப் பழமொழிகளில் பொதிந்து கிடப்பதைக் காண்கிறோம்.

ஆடம்ஸ்மித் கூறுவது போல மூலதனம் உருவாக நிலம், செல்வம் (பணம்), உழைப்பு தேவைப்படுகிறது.

பணம் (Money)

உலகியல் வளர்ச்சிக்குப் பொருள் தேவைப்படுகிறது.

1. பணம் பத்தும் செய்யும்
2. பணம் இல்லாதவன் பிணம்
3. பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்
4. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே
5. ஈட்டி எட்டுகிற மட்டும் பாயும்
   பணம் பாதாள மட்டும் பாயும்
6. ஏழை சொல் அம்பலம் ஏறாது
7. பணத்திற்குப் பெயர் ஆட்கொல்லி
8. பணமிருந்தால் படையையும் வெல்லலாம்
9. பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை

நிலம்

1. நிலத்தை திருத்தி யுண்
2. நிலத்தை வைத்து உண்
   பொன்னை விற்று உண்

உழைப்பு

1. நடந்தகால் சீதேவி கிடந்தகால் மூதேவி
2. குந்தித் தின்றால் குன்றும் கரையும்

முதலீடு

1. வெறுங்கை முழம் போடுமா?

வணிகம்

1. திரைகடல் ஓடி திரவியம் தேடு
2. கொச்சியில் குறுணி விற்றாலும் இங்கே என் செய்வது?
3. கீரை கடையானாலும் எதிர்க்கடை வேண்டும்
4. இஞ்சி இலாபம் மஞ்சளிலே

பண்டமாற்று

ஒரு பண்ட இழப்பை மற்றொரு பண்டத்தில் ஈடு செய்தல்.

இஞ்சி லாபம் மஞ்சளிலே

மலிவுப் பண்ட வணிகன் உயர்ந்த பண்ட விலையை அறியமாட்டான்.

உப்பு வணிகள் அறிவானோ கற்பூரவிலை
வாணிபத்தில் போட்டியும் வேண்டும்
கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்

வரவு - செலவு

வரவுக்கேற்ற செலவு செய்தல் அடிப்படை பொருளாதாரக் கருத்தாகும். இதனை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதைப் பழமொழி மூலம் அறியலாம்.

1. விரலுக்குத் தகுந்த வீக்கம்
2. பாய்க்குத் தகுந்தபடி காலை நீட்டு

இன்றைய பொருளாதாரத்தில் பொது நிதியியலில் (Public Finance) வரவு - செலவு பேசப்படுகிறது.

சேமிப்பு (Savings)

ஈட்டிய பொருளின் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். சேமிப்பு பற்றிய முன்னோர் கருத்து பழமொழிகளில் தெள்ளத் தெளிவாக உள்ளது.

1. சிறுதுளி பெருவெள்ளம்
2. வட்டி குட்டி போடும்
3. ஒரு காசு பேணின் இருகாசு தேறும்

சந்தை

பண்டை நாளில் பண்டமாற்றுதான் அதிக அளவில் நடைபெற்றிருக்க வேண்டும். நம் நாட்டில் சந்தைகள் நாட்டுப் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதைப் பழமொழிகள் மூலம் அறியலாம்.

1. மலிந்த சரக்கு சந்தைக்கு வரும்
2. சந்தை கூட்டமும் பொம்மலாட்டமும்
3. யார் குடிகெட்டாலும் சந்தைக்குக் கால்பணம்
4. சந்தையில் துட்டுக்கு இரண்டு துக்காணிக்கு மூன்று

இன்று பொருளாதாரம் எனப் பேசப்படும் பொருளைப் பற்றி நமது முன்னோர்கள் சிந்தித்துள்ளனர். அவர்களது சிந்தனைதான் பழமொழிகளாக உருப்பெற்றுள்ளது. பணத்தின் பெருமையையும் பயனையும் நன்கறிந்திருந்தனர்.

கல்வி

நமது நாட்டில் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தைத் திருக்குறள் போன்ற நூல்கள் மூலம் அறிகிறோம். கல்லாத நாட்டுப்புற மக்களும் கல்வியின் சிறப்பையும் பெருமையையும் நன்குணர்ந்திருந்தனர். ஏடு படித்தவர்களையும் எழுத்தாணி தொட்டவர்களையும் பெருமைக்குரியவர்களாகக் கருதினர். முன்னோர்களின் நுண்மான் நுழைபுலத்தையும் கல்விச் சிறப்பையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பழமொழிகள் விளக்குகின்றன.

கல்வியின் சிறப்பு

1. கல்வியழகே அழகு
2. எழுத்தில்லாதவன் கண்ணில்லாதவன்
3. கற்கையில் கல்வி கசப்பு
   கற்றபின் கல்வி இனிப்பு
4. கறக்கச் சுரப்பது பசுவின் பால்
   படிக்கச் சுரப்பது கல்வி
5. உடைமை என்பது கல்வியுடைமை
6. கல்வியில்லாச செல்வமும்
   கற்பில்லா அழகும் கடுகளவேனும் பிரகாசிக்காது
7. கண்டதை கற்க பண்டிதன் ஆவான்
8. அறிவுடையானை அரசனும் விரும்புவர்
9. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு
10. சென்றவிடமெல்லாம் சிறப்பே கல்வி
11. செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும்
    கல்வியைச் செலவழித்தால் வளர்ந்துவிடும்
12. கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது
13. கல்வி அழியாச் செல்வம்
14. கீழ்க்குலத்தவன் ஆனாலும்
    கற்றவன் கற்றவன்தான்
15. நூல் கற்றவனே மேலவன் ஆவான்
16. பெத்தபிள்ளை பின்னுக்கு உதவும்
    கற்ற வித்தை காலத்துக்கும் உதவும்

கற்றற்குரிய வயது

1. இளமையிற் கல்
2. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து
3. ஐந்து வயதில் ஆதியை ஓது
4. இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்
5. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?

எழுதும் முறை

1. எழுதுகிறது பெரிதல்ல
   இனமறிந்து சேர்க்கிறது பெரிது

படிக்கும் முறை

1. நுனிப்புல் மேயாதே

நுனிப்புல் மேயாதே ஆழப்படிப்பு தேவை என்பதைச் சுட்டிக் காட்டப்படுகிறது.

பேசும் முறை

1. அரைச்சொல் கொண்டு அம்பலம் ஏறலாமா?
2. தான் கற்ற ஒன்றைத் தரிக்க உரை

செயல்முறை அறிவு

ஏட்டறிவுடன் செயல்முறை அறிவும் இன்றியமையாதது என நம் முன்னோர்கள் உணர்ந்திருந்ததைப் பழமொழிகள் காட்டுகின்றன.

1. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?
2. பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது.

கல்வியும் வாழ்வும்

கல்வியும் வாழ்வும் இணைந்தே இருத்தல் வேண்டும். அப்போதுதான் கல்வியின் நோக்கமும் குறிக்கோளும் நிறைவேறும். இல்லாவிட்டால் பயனில்லை என்பதைப் பழமொழிகள் உணர்த்துகின்றன.

1. படிப்பது திருவாய்மொழி
   இடிப்பது பெருமாள் கோயில்
2. படிப்பது இராமாயணம்
   இடிப்பது பெருமாள் கோயில்

ஆசிரியர்

ஆசிரியருக்குச் சமுதாயத்திலிருந்த இடத்தைப் பழமொழிகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆசிரியர்கள் கல்வியறிவால் ஒழுக்கத்தால் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றனர். மனிதன் முழு ஆளுமை பெற கல்வி துணைபுரிகின்றது. குணமில்லாத

வித்தை அவித்தை என்பது இக்கருத்துக்குச் சான்றாகத் திகழ்கின்றது. ஆசிரியர் தொழில் புனித தொழிலாகவும் கருதப்பட்டது.

1. எழுத்தறிவித்தவன் இறைவனாவான்
2. குருமொழி தெய்வமொழி
3. குருமொழிக்கு எதிர்மொழி இல்லை
4. கரு இல்லாத முட்டையும்
   குரு இல்லாத வித்தையுமில்லை
5. குணம் கொடுப்பான் குரு
6. குரு துரோகம் குலநாசம்
7. குருவாய்மொழியே திருவாய்மொழி
8. குரு என வந்தான் திருவுரைத்தந்தான்

பெண்கல்வி

1. அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு?
2. படித்தவள் புத்தி பானைக்குள்ளே

கல்வியின் சிறப்பையும் இன்றியமையாமையும் உணர்ந்த சமுதாயம் பெண் கல்வியை ஊக்குவிக்கவில்லை என்பதைப் பழமொழிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர்தான் பெண்கல்வி வளரத் தொடங்கியது. அன்றைய சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

தத்துவம்

வாழ்க்கை நெறியே தத்துவமாகும் என்கிறார் புளுடார்க். எல்லா அறிவியலையும் உள்ளடக்கிய அறிவியல் தத்துவம் என்கிறார் அரிஸ்டாட்டில். வாழ்க்கையின் பொருளறிய துணை செய்வதே தத்துவமாகும். தத்துவம் பெரும்பாலும் சமயத்தோடு தொடர்புடையதாக உள்ளது. உண்மையான தத்துவத்தின் அடிப்படை சமயம், பக்தி, ஒழுக்கமாகும்.

சமய அடிப்படை தத்துவம்

1. நம்பினோர்க்கு நடராசா
   நம்பாதவர்க்கு எமராசா
2. நம்பினோர் கெடுவதில்லை
   இது நான்மறை தீர்ப்பு
3. அவனன்றி ஓரணுவும் அசையாது
4. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
5. இறைவன் தூணிலும் இருப்பார்
   துரும்பிலும் இருப்பார்

ஊழ்வினை

நாம் செய்த வினைப்பயனை நாமே துய்க்க வேண்டும் என்பதைப் பழமொழிகள் சுட்டிக் காட்டுகின்றன. ஊழ்வினைப் பயனைத் துய்க்க வேண்டிய நிலை ஆன்மாவுக்கு உண்டு என இந்தியத் தத்துவம் விளக்குகின்றது.

1. தினை விதைத்தவன் தினை அறுப்பான்
   வினை விதைத்தவன் வினை அறுப்பான்
2. தன்னிழல் தன்னோடு வரும்
3. இல்லாதது வராது
   உள்ளது போகாது
4. எழுதின விதியை யாராலும் மாற்ற முடியாது
5. ஊத்தைப் போனாலும் ஊழ்வினை போகாது
6. ஐங்காதம் போனாலும் தன்வினை தன்னோடு
7. வியாதிக்கு மருந்துண்டு
   விதிக்கு மருந்துண்டா?

நிலையாமை

வாழ்க்கை நிலையாமையைப் பற்றி இப்பழமொழிகள் விளக்குகின்றன.

1. வாழ்வாவது பொய்
   மண்ணாவது திண்ணம்
2. இன்றிருப்பார் நாளையில்லை

3. நீரில் குமிழி யாக்கை
4. பிறந்தன இறக்கும்
   இறந்தன பிறக்கும்
5. நமன் அறியா உயிர் உண்டா?
   நாரை அறியா குளம் உண்டா?
6. எண்ணமெல்லாம் பொய்
   எமன் கைஓலை மெய்

தன்னை உணர்தல்

தன்னை உணர்தலே தத்துவத்தை உணர்தல் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

1. தன்னையறிந்தவன் தத்துவம் அறிந்தவன்
2. தன்னையறிந்தவன் தத்துவஞானி
3. தன்னையறிந்தவன் தவசி
4. ஐம்பொறி வென்றவன் தவசி
5. மெய்ஞ்ஞானம் உடையார்க்கு அஞ்ஞானமில்லை
   அஞ்ஞானிக்கு இல்லை ~~மறு~~பிறப்பு

தன்னையறிதல்

பந்த பாசங்களிலிருந்து விடுதலை பெற்று மனிதன் வீடுபேறு அடைகிறான். இதுவே இறைவனோடு இரண்டறக் கலக்கும் தன்னையறியும் நிலையாகும்.

1. நான் போனால் வீடு
2. செருக்கு நீக்கினால் வீடு
3. செருக்கொழிந்தால் சிவனைக் காணலாம்
4. பந்தம் விட்டால் மோட்சம்
5. சத்தியமே சத்தி
   தத்துவமே சித்தி
6. தன்னை உணர்ந்தவனே சிவத்தை உணர்ந்தவன்

பொதுவான தத்துவம் பற்றிய பழமொழிகள்

1. யார் யாருக்குச் சதம்

2. சட்டி சுட்டது கை விட்டது
3. சுடலை ஞானம் திரும்பிப்போகும் வரைக்கும்
4. அறியாத நாள் எல்லாம் பிறவாதே நாளே
5. அவனே இவனே என்பதைவிடச்
சிவனே சிவனே என்பதுமேல்

அரசு

மக்கள் வாழ்க்கையைப் பொதுவான சட்ட திட்டங்கள் மூலம் ஒழுங்குப்படுத்தும் சமுதாய நிறுவனத்தை அரசு என்பர். அரசமைப்பு என்பது

1. மேலான ஆட்சி அதிகாரம் பெற்றிருத்தல்
2. சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தல்
3. மக்களைப் போற்றிப் பாதுகாத்தல்

ஆகிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். திருக்குறளிலும் அரசு பற்றி விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. மனுதர்ம சாஸ்திரம், கௌடலீயம் ஆகிய வடமொழி நூல்களும் அரசைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. தமிழகம் பன்னிரண்டு கால மன்னராட்சியின் கீழ் இருந்தது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். தொடக்கக் கால கால்வழி அமைப்பே பின்னர் அரசமைப்பு தோன்ற மூலக்கூறாக இருந்தது என்பர். முடியாட்சிக் காலத்தில் அரசனே தலைவனாக இருந்து நாட்டை ஆண்டான். எனவே, மக்கள் அரசனைப் பற்றிய எண்ணங்களை பழமொழியாக்கியுள்ளனர்.

அரசன்

1. அரசனில்லாத நாடு அச்சில்லாத தேர்
2. அரசனில்லாத நாடு புருஷனில்லாத வீடு
3. அரசனுக்குச் செங்கோல், சம்சாரிக்கு உழலைக்கால்
4. ஊருக்கு அரசன் காவல்
வீட்டுக்கு நாய் காவல்
5. ஆறு போவதே போக்கு
அரசன் சொல்வதே தீர்ப்பு
6. அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்

7. அரசன் முதல் ஆண்டி வரை
8. மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி
9. அரசனும் நெருப்பும் சரி
10. அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிமகன்

அக்கால மன்னராட்சியில் நாட்டைப் பாதுகாக்க படை இருந்தது. அப்படையில் வீரர்கள் இருந்தனர். படையைப் பற்றியும் போரைப் பற்றியும் வீரனின் தன்மைப் பற்றி மிக நுணுக்கமாகக் கண்டறிந்ததைப் பழமொழியாக்கியுள்ளனர்.

படை

1. அரசனில்லாத படை வெல்வது அரிது
2. அரசனில்லாத படை வெட்டுமா?
3. ஆளில்லாத படை அம்பலம்
4. ஆள் கொஞ்சமாயினும் ஆயுதம் மிடுக்கு
5. உண்ணப் படையுண்டு, வெல்லப் படையில்லை
6. கையாளாத ஆயுதம் துருப்பிடிப்பது போல
7. சமிக்ஞை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறான்
8. துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது போல
9. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்
10. நடுப்படையில் சென்றால் வடுப்படாமல் மீள்வான்
11. படை மிகுந்தால் அரணில்லை.
12. படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்
13. படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்
14. மந்திரி இல்லாத யோசனையும்
    ஆய்தம் இல்லாத சேனையும் கெடும்

வீரன்

1. ஆயுதப் பரிட்சை அறிந்தவன் நூற்றில் ஒருவன்
2. ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மீது குறை சொல்வான்
3. உருவிய வாளை உறையிடாத வீரன்
4. சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு
5. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

6. வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு
7. வெற்றி பெற்றவன் சுத்தவீரன்

திருமணம்

மனித இனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். திருமணம் உயிரியல்பால் உணர்வை நிறைவு செய்வதற்கு மட்டும் வகை செய்வதாக அமையாமல் சமுதாயத்தில் ஒருவனை பண்பாட்டு உறுப்பினனாக ஏற்றுக்கொள்ளவும் வகை செய்கிறது. ஆண், பெண் ஒருவருக்கொருவர் துணையாக அமையவேண்டும் என்னும் தேவையை முன்னிட்டு இருவரும் சமூக அங்கீகாரத்துடன் இணையும் முறையே திருமணம் என்று கூறப்படும். திருமணம் மனித வாழ்வில் இன்றியமையாத சடங்காகும். இல்லறம் பெரிது துறவறம் சிறிது என்பதால் இல்லறத்திற்குத்தான் மக்கள் முக்கியத்துவம் அளித்துள்ளனர். தாய்க்கு முதலிடமும் தாரத்திற்கு இரண்டாமிடமும் கொடுத்துள்ளனர். திருமணம் செய்து இல்லற வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.

மனைவியில்லாத புருஷன் அரை மனிதன்
வீட்டுக்கு அலங்காரம் மனையாள்

என்றெல்லாம் திருமணத்தின் இன்றியமையாமை வலியுறுத்தப்படுகிறது. நமது முன்னோர்கள் திருமணத்தை ஆயிரங் காலத்துப் பயிராக எண்ணினர். பழமொழிகளில் திருமணம் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன.

திருமணம் என்பது சுலபமான காரியமல்ல. அஃது வீடு கட்டுவது போன்று கடினமான காரியமாகும்.

வீட்டைக் காட்டிப்பார்
கல்யாணம் பண்ணிப்பார்

சம்பந்தம்

ஒரு வீட்டுச் சம்பந்தம் பொருந்த
ஏழுகோடி செருப்பு தேயவேண்டும்

அக்காலத்தில் அனைத்துப் பொருத்தங்களையும் பார்த்ததோடு மட்டுமின்றி, எளிதில் சம்மதம் அளிக்கமாட்டார்கள். செருப்பு தேயுமளவு தொடர்ந்து தொடர்பு கொள்ளவேண்டும்.

புதிய உறவு கூடாது

நெருங்கிய உறவுக்குள்ளேதான் திருமணம் செய்து கொள்வார்கள். தூரத்து உறவை விரும்புவதில்லை.

பழங்கால் தூர்க்க வேண்டாம்
புதுக்கால் வெட்ட வேண்டாம்

பெண்ணின் குணம்

1. பணம் பார்த்துப் பண்டம் கொள்
   குணம் பார்த்துப் பெண்ணைக் கொள்
2. வேலையைப் பார்த்துப் பெண்ணைக்கொள்
   சாலையைப் பார்த்து ஊருக்கு நட
3. பாலைப் பார்த்து பசுவைக் கொள்
   தாயைப் பார்த்து பெண்ணைக் கொள்

பெண் கொடுக்கக் கூடாதவர்கள்

1. தாரம் உள்ளவனுக்குப் பெண் கொடுத்தாலும்
   தானே ஆக்கித் தின்னிக்குப் பெண்
   கொடுக்காதே
2. வளவிக்காரனுக்குப் பெண் கொடுக்காதே
3. மன்னார்குடியில் பெண் கொடுக்காதே

பெண் கொடுக்கக் கூடியவர்கள்

1. ரோசக்காரனுக்குக் கடனைக்கொடு
   மழுங்கப் பயலுக்குப் பெண்ணைக் கொடு

படித்த பெண் வேண்டாம்

1. சேலைமேல் சேலை கட்டும் தேவரம்பை ஆனாலும்
   ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது

உள்ளூர் பெண் வேண்டாம்

1. உள்ளூர்ப் பெண்ணும் அயலூரர் மண்ணும் ஆகாது
2. ஆரும் அற்றதே தாரம்

உள்ளூர்ப் பெண் வேண்டாம் என்பதற்கு இரண்டாவது பழமொழியும் சான்றாகத் திகழ்கிறது.

மேனாமினுக்கியும் வேண்டாம்

1. மேனாமினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்
2. குல ஸ்திரி தன் பர்த்தாவையும்
   பரஸ்திரி தன் மேனியையும் பேணுவர்

குலமகள் பிறர் கண்ணில் படும்படியான அலங்காரத்தைத் தவிர்க்க வேண்டும் என சமுதாயம் எண்ணுவது பழமொழியாக விளங்குகிறது.

கண் நிறைந்த கணவன்

1. கை நிறைந்த பொன்னைப் பார்க்கிலும்
   கண் நிறைந்த கணவனே மேல்

பொருளைக் காட்டிலும் அழகுள்ள கணவனையே பெண்கள் விரும்பினர் என்பதை அறியமுடிகிறது. கண் நிறைந்த கணவன் வயதில் இளைஞன் மட்டுமல்ல. ஒழுக்கங்களிலும் சிறந்தவன் என்று பொருள்படுகிறது.

கிழவன், அசத்து, எளியவனைத் திருமணம் செய்ய விரும்பாமை

1. கிழவனுக்கு வாழ்க்கைப்படுவதிலும் கிணற்றில் விழலாம்.

2. அசத்துக்கு வாழ்க்கைப்பட்டு ஆயிரம் வருடம் வாழ்வதைவிட
சத்துக்கு வாழ்க்கைப்பட்டு சட்டென்று தாலியறுப்பதே மேல்
3. எளியவனுக்குப் பெண்டாட்டியாய் இருப்பதைவிட
வலியவனுக்கு அடிமையாகிறது நல்லது
4. அவத்தனைக் கட்டி வாழ்வதைவிட
சமர்த்தனைக் கட்டி அறுத்துப் போடலாம்

கிழமானாலும் திருமணம் செய்தல்

1. கிழமானாலும் கட்டிக் கொண்டவள் பிழைப்பாள்

மேலே கண்டவற்றிற்கு எதிரிடையான கருத்தும் சமுதாயத்தில் நிலவுகிறது. திருமணமின்றி சமுதாயத்தில் பெண் வாழ்வது சிரமம். திருமணமில்லாமல் ஆடவர் துணையின்றி பெண் வாழமுடியாது.

ஆடு மிதியாக் கொல்லையும்
ஆடவனில்லாப் பெண்ணும் வீண்
ஆளன் இல்லாதவன் ஆற்று மணலுக்குச் சரி

என்ற பழமொழிகளும் இக்கருத்துக்கு அரண் செய்கிறது.

துருவி ஆராய்ந்து திருமணம் செய்தல்

துழாவிக் காய்ச்சாதது கஞ்சியுமில்லை
வினாவிக் கட்டாதது பெண்ணுமல்ல

கோத்திரத்தில் திருமணம் செய்தல்

ஒவ்வொரு இனமும் பல கால்வழிகளாகப் (Clan) பிரிக்கப்பட்டிருக்கும். அக்கால்வழியைக் கோத்திரம் என்றும் கூறுவர். அக்காலத்தில் திருமணங்கள் கோத்திரத்தின் அடிப்படையில் நடைபெற்றுள்ளதை அறிகிறோம். நமது சமுதாயம் அகமணப்பகுப்புச் (Endogamous) சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1. கோத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொள்
2. கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொடு
   பாத்திரமறிந்து பிச்சையிடு
3. கோத்திரத்தில் குரங்கானாலும் கொள்

அத்தைமகளைத் திருமணம் செய்தல்

கோத்திரத்திலும் மிக நெருங்கிய உறவு முறையான அத்தை மகளையே திருமணம் செய்துள்ளனர்.

1. அஞ்சும் மூணும் எட்டு
   அத்தை மகளைக் கட்டு
2. அத்தை மகளானாலும் சும்மா வருவாளா?
   அரிசி பருப்பு சீர் செனத்தி கொடுக்க வேண்டாமா?
3. பணமும் பத்தாயிருக்க வேண்டும்
   பெண்ணும் முத்தாயிருக்கவேண்டும்
   முறையிலே அத்தைமகளாய் இருக்கவேண்டும்

திருமணங்களில் பொருத்தம் பார்த்தல்

1. அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது
2. அவிட்டத்தில் பெண் பிறந்தால்
   தவிட்டுப் பானை பொன்
3. பூராடத்தின் கழுத்தில் நூல் ஆடாது

கலப்புத் திருமணங்கள் எள்ளல் முறையில் அமைந்துள்ளது

அன்றைய சமுதாயத்தில் கலப்புத் திருமணங்களுக்கு வரவேற்பில்லை. கலப்புத் திருமணங்களெல்லாம் எள்ளல் முறையில் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

1. பிச்சைக்கு வந்தவன்
   பொண்ணுக்கு மாப்பிள்ளை ஆனான்
2. ஆனைக்காரன் பெண் அடைப்பக்காரனுக்கு
   வாழ்க்கைப்பட்டாள்
3. சப்பானி மாப்பிள்ளைக்கு சந்தொடிந்த பெண்சாதி

திருமணத்தில் தாலி

1. மூன்று முடிச்சு கழுத்தில் விழட்டும்
   முப்பது இலை குப்பையில் விழட்டும்
2. கல்யாணப் பந்தலிலே தாலிகட்ட மறந்ததுபோல

திருமணம் பருப்பு, வானவேடிக்கையுடன் நடத்தல்

1. பருபபில்லாக் கல்யாணம் உண்டோ?
2. விடியற் காலம் கல்யாணம்
   பிடிடா வெற்றிலை பாக்கு
3. அரை பணத்திலே கல்யாணம்
   அதிலே கொஞ்சம் வானவேடிக்கை
4. ஊரிலே கல்யாணம் மார்பிலே சந்தனம்
5. அய்யா துரைக்குக் கல்யாணம்
   அவரவர் வீட்டிலே சாப்பாடு
   கொட்டு முழக்கு கோயிலிலே
   சுண்ணாம்பு சூளையிலே

குழந்தை மணம் (Child Marriage)

அக்காலத்தில் குழந்தை மணம் இருந்ததையும் அறிகிறோம்.

பத்துக்குமேலே ஒரு பறையனுக்காவது தள்ளவேண்டும்

பலதார மணம் (Polygamy)

சமூகத்தில் பலதார மணம் இருந்ததையும் காண்கிறோம்.

1. ஏதுமற்றவனுக்கு இரண்டு பெண்டாட்டி ஏன்?
2. இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டம்

பரிசம் போடல்

பெண் வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் பரிசம் போடும் வழக்கமிருந்ததையும் அறிகிறோம். இக்காலச் சமுதாயத்தில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு வரதட்சணை கொடுப்பதைக் காண்கிறோம்.

1. பரிசம் போட்டால் பாதி பொண்டாட்டி
2. பரிசத்துக்கு அஞ்சிக் குருட்டுக் கண்ணியைக் கொண்டாற்போல
3. அத்தை மகளானாலும் சும்மா கிடைப்பாளா?

சிக்கனக் கல்யாணம்

1. அரைத்துட்டிலே கல்யாணம்
   அதிலே கொஞ்சம் வானவேடிக்கை
2. கல்யாணம் பண்ணின வீட்டில்
   ஆறு மாசம் கருப்பு

கடன் வாங்கி கல்யாணம்

பலர் கூடும் திருமணத்திலே தனது செல்வச் செழிப்பை வெளிக்காட்டுவதன் விளைவே கடன் வாங்கிக் கல்யாணம்.

ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம்

திருமணம் மங்களகரமான காரியம். மங்களகரமான நல்ல காரியத்திற்குப் பொய் சொன்னாலும் பரவாயில்லை என எண்ணினர். அதனால்தான்,

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்

என்ற பழமொழி எழுந்தது.

வரிசை செய்தல்

திருமணத்திற்குப் பின் முக்கிய நாட்களில் வரிசை செய்வதுமுண்டு.

வரிசை கண்ட மாப்பிள்ளை வந்துவந்து நிற்பான்

குழந்தை மணம், பன்மனைவிமனம் வழக்கிலிருந்ததையும் பெண் விளையாகிய பரிசம் போடும் வழக்கம் இருந்ததையும் திருமணச் சடங்குகளைப் பற்றியும் பழமொழி மூலம் அறிகிறோம். முரண்பட்ட பழக்க வழக்கங்கள் வெவ்வேறு காலத்தனவோ பல்வேறு சமூகத்தினரிடையோ நிலவியிருக்கலாம்.

உறவுகள்

உறவுமுறை என்பது உரிமைகள், கடமைகள், கட்டுப்பாடுகள், பிள்ளைப்பேறு ஆகியவற்றைக் கொண்ட முறையாகும். உறவுமுறை என்பது இரத்தக் கலப்பாலும் பெற்றோர் கால்வழியாலும் மண- உறவாலும் ஒரே குழுவினர் ஒரு இடத்தில் வாழும் தன்னையாலும் அமைகிறது.

பண்டைக் காலந்தொட்டே சமூகத்தில் உறவுமுறை (Kinship) மரபுவழியாக வரையறுக்கப்பட்டு திருந்திய நிலையில் அமைந்து காணப்படுவதைப் பழமொழிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

மர்டாக் (Murdock)[1] இந்த உறவுகளை மூன்றாகப் பகுக்கின்றார்.

1. முதல்நிலை உறவுகள் (Primary Kins)
2. இரண்டாம் நிலை உறவுகள் (Secondary Kins)
3. மூன்றாம் நிலை உறவுகள் (Tertiary Kins)

முதல்நிலை உறவுகள்

குடும்பத்து உறவினர்களும் மனைவியும் முதல்நிலை உறவினராவர். நேரடி உறவுகள் அனைத்தும் முதல்நிலை உறவுகளாகும். கணவன் - மனைவி, தந்தை - மகன், தந்தை - மகள், தாய் - மகன், தாய் - மகள், அண்ணன் - தம்பி, அண்ணன் - தங்கை முதலிய உறவுகளாகும்.

இரண்டாம் நிலை உறவுகள்

முதல்நிலை உறவுகளுக்கிடையே ஒருவர் வாயிலாக நின்று அமையும் உறவு இரண்டாம் நிலை உறவுகளாகும்.

1. மாமியார் - மருமகள்
2. மாமியார் - மருமகன்

---

1. Majumdar, D.N. & Madan, T.N., & Introduction to Social Anthropology, p.8
2. Murdock, G.P., Social Structure, pp. 94-96

3. அண்ணி - நாத்தனார்
4. சக்களத்தி
5. ஓரகத்தி (ஓர்ப்புடியாள்)
6. மாற்றாந்தாய் மகள் / மகன்
7. பெரியம்மா மகன் / மகள்
8. சின்னம்மா மகன் / மகள்

மூன்றாம் நிலை உறவுகள்

ஒருவருக்கு ஒருவர் இடையில் நின்று அமையும் உறவு மூன்றாம்நிலை உறவாகும்.

1. பாட்டன் - பாட்டி
2. கொள்ளுப்பேரன், பேத்தி முதலியோர்

உறவுகளைக் கீழ்க்கண்டவாறும் வகைப்படுத்தலாம்.



அன்புறவாகும் இரத்த உறவுகள்

தந்தை - மகன், தந்தை - மகள் முதலியோர்.

போராட்ட உறவாகும் இரத்த உறவுகள்

அண்ணன் - தம்பி, அக்காள் - தங்கை (சொத்துரிமை காரணமாக)

மண உறவுகள்

1. *நெருங்கிய உறவுமுறைகள்*

    கணவன் - மனைவி

2. *மதிக்கத்தக்க உறவுகள்*

    தாத்தா - பாட்டி, தாய்மாமன்

3. *மதித்து விலகும் உறவுகள்*

    (Avoidoble Relations)

    மாமியார் மருமகன்

    மாமனார் - மருமகள்

4. *கேலி உறவுகள்* **(Joking Relations)**

    மச்சான் - கொழுந்தி

    அண்ணன் - கொழுந்தன்

    மாமன் மகன் - அத்தைமகள்

5. *போராட்ட உறவுகள்* **(Conflicting Relations)**

    மாமியார் - மருமகள்

    அண்ணி - நாத்தனார்

    சக்களத்தியர்

    மாற்றாந்தாய் - மகன் மகள்

6. *புறக்கணிக்கத்தக்க உறவுகள்*

    விதவையர்

    மலடியர்

    மணமுறிவுபட்டோர்

    பரத்தையர் / வைப்பாட்டி



மாமியார் மருமகள் உறவு

மனித வாழ்வில் திருமணம், திருமணத் தொடர்பாகக் குடும்பம், குடும்ப அமைப்பால் உறவு. அவ்வுறவுகளிலே பாச உறவும் உண்டு. போராட்ட உறவும் உண்டு. நம் சமூகத்தில் மாமியார் - மருமகள் உறவு போராட்ட உறவாக உள்ளது. தாழ்வு மனப்பான்மையும் (Inferiority Complex) தனக்குரியது என்ற மனப்பான்மையும் (Possessiveness) போராட்ட உறவுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன.

தான் பெற்ற மகனே செத்தாலும் பரவாயில்லை. மருமகள் தாலியறுக்க வேண்டும் என்று எண்ணுகின்ற மனித நேயமில்லாத கொடுமைக்கார மாமியாரைச் சமூகத்தில் காண்பதைப் பழமொழிகள் எடுத்துக் காட்டுகின்றன. மாமியாரின் குணங்களைப் பழமொழிகள் போல் எந்த இலக்கியமும் படம் பிடித்துக்காட்டவில்லை எனலாம்.

1. பானை ஒட்டினாலும் ஒட்டும் மாமியார் ஒட்டாள்
2. பொறுமையில் உயர்ந்தது பூமி
பொல்லாங்கில் உயர்ந்தவள் மாமி
3. மகன் செத்தாலும் பரவாயில்லை
மருமகள் தாலி அறுக்கவேண்டும்
4. மாமியார் உடைத்தால் மண்சட்டி
மருமகள் உடைத்தால் பொன்சட்டி
5. மாமியார் குற்றம் மறைப்பு
மருமகள் குற்றம் திறப்பு
6. மாமியார் மெச்சிய மருமகள் இல்லை
மருமகள் மெச்சிய மாமியார் இல்லை
7. மாமியார் செய்யும் கொடுமை
மருமகள் செய்யும் அடிமை
8. மாமியார் உடைத்தால் குழவிக்கல்
மருமகள் உடைத்தால் வைரக்கல்

இப்பழமொழிகளில் மாமியார் கொடுமைக்காரியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். நடைமுறை வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

அண்ணி - நாத்தனார்

மாமியார் மருமகள் உறவு போன்றே அண்ணி -நாத்தனார் உறவும் போராட்ட உறவாகவே உள்ளது. தான் பாசம் வைத்த அண்ணனின் அன்பைப் பங்குபோட ஒருத்தி (அண்ணி) வருவதை, கணவனுடன் பிறந்த சகோதரிகள் (நாத்தனார்கள்) விரும்புவதில்லை. அண்ணி கொடுமைக்காரி எனக்கூறும் நல்லதங்காள் கதையுண்டு. ஆனால், இவ்வுறவு பற்றி நான் சேகரித்த பழமொழிகளில் குறிப்புக்கள் இல்லை.

தாய் - மகள்

தாய் மகள் உறவு பாச உறவாக உள்ளது.
தாயைப் போல உறவில்லை என்பதை

1. தாய்க்கு மிஞ்சிய உறவும் இல்லை
   சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை
2. தங்கவேலை அறியாத ஆசாரியுமில்லை
   தாய்ப்பால் குடிக்காத குழந்தையுமில்லை
3. பிள்ளையின் அருமை பெற்றவளுக்குத்தான் தெரியும்
4. பேயானாலும் தாய் நீரானாலும் மோர்

போன்ற பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன.

தாய் அற்றால் சீர் அறும் என்ற கருத்தை கீழ்க்காணும் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன.

1. தாய் அற்றால் சீர் அறும்
2. தாய் உள்ளமட்டும் சீராட்டு
3. தாய் செத்தால் மகள் திக்கற்றவள்
4. தேரோடு போச்சுது திருநாள்
   தாயோடு போச்சுது பிறந்த வீடு

தாய்-மகன்

தாய் - மகன் உறவு மிகவும் நெருக்கமானது.

ஆரும் ஆரும் உறவு
தாயும் பிள்ளையும் உறவு

என்பதை மேற்கண்ட பழமொழி எடுத்துக்காட்டுகின்றது.

மகன் பெற்ற தாய்க்கு அடங்கி நடக்கவேண்டும் என்பதைப் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன.

1. தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான்
2. தாய் இட்ட பேரை ஊர் இட்டு அழைக்கும்
3. தாய்ச்சொல் துறந்தால் வாசகமில்லை
4. தாய் தூற்றினால் ஊர் தூற்றும்
5. தாயைப் பழித்த பிள்ளையை ஊர் தூற்றும்
6. தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா?
7. பேயானாலும் தாய் சொல்லைத் தட்டலாமா?
8. தாய்முகம் காணாப் பிள்ளையும்
   மழைமுகம் காணாப் பயிரும் உருப்படாது

தாய்ப்பாசத்திற்கு ஈடு இணை இல்லை என்பதை

1. பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்
   வந்தவள் மடியைப் பார்ப்பாள்
2. தேங்காய்க்கு மூன்று கண்
   தாய்க்கு ஒரே கண்

இப்பழமொழிகள் விளக்குகின்றன.

சகோதரர்கள் உறவு

உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்
தம்பியுடையான் படைக்கஞ்சான்
தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்

போன்றவை இரத்த பாசத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. ஆனால், அதே நேரத்தில்,

அண்ணன் தம்பி ஜென்மப் பகை

என்பதையும் கூறுகிறது.

இளம் வயதில் அண்ணன் தம்பியாக இருப்பவர், வயது வரும்போது பங்காளியாக (சொத்துக்கு) மாறுவதையும் பழமொழி சுட்டிக்காட்டுகிறது.

ஐந்து : ்தில் அண்ணன் தம்பி
பத்து வயதில் பங்காளி

என்பது மேலே கண்ட பழமொழிக்கு ...ாக அமைந்துள்ளன.

மனைவி உறவு

1. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
2. பெண் இல்லாத வீடு
   வாளி இல்லாத கிணறு மாதிரி
3. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்

மனைவி அமைவது விதிப்படி

1. குருவும் தாரமும் தலைவிதிப்படி
2. தாரம் வாய்ப்பது புண்ணியவானுக்கு

மனைவி பட்டிமாடு மாதிரி

1. கட்டின பெண்டாட்டி பட்டிமாடு மாதிரி

உள்ளூர் மனைவி கூடாது

உள்ளூர்ப் பெண்ணும் அசலார் மண்ணும் ஆகாது

கணவனுடன் வாழல் பெருமை

1. ஆடு மிதியாக் கொல்லையும்
   ஆளன் இல்லாப் பெண்ணும் வீண்
2. ஆளன் இல்லாத பெண்ணுக்கு வாழ்வு இல்லை
3. ஆளன் இல்லாத மங்கைக்கு அழகு பாழ்
4. உற்ற கணவனும் ஒரு நெல்லும் உண்டானால்
   சித்திரம்போல் குடும்பம் நடத்தலாம்

பணமிருந்தால்தான் மனைவியும் மதிப்பாள்

1. கைப்பொருளற்றவனைக் கட்டிய பெண்டாட்டியும்
   எட்டிப் பாராள்
2. கைப்பொருள் அற்றால்
   கட்டுக் கழுத்தியும் பாராள்

கொலையும் செய்வாள் பத்தினி

1. கொலையும் செய்வாள் பத்தினி

நம்பிக்கை

1. கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்

மனைவி உறவு வீடு வரை

1. வீடுவரை மனைவி
   காடுவரை பிள்ளை

மனையாள் மனம் அறிதல் அரிது

1. காட்டில் புதைந்த கனதனமும்
   பாட்டுள் புதைந்த பழம்பொருளும்
   வீட்டில் மனையாள் மனமும் அறிவது அரிது
2. கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்லர்

மச்சினன் உறவு

1. மச்சினன் உண்டானால் மலையேறிப் பிழைக்கலாம்

பிள்ளை உறவு

உலகிலுள்ள பாசங்களில் பிள்ளைப்பாசம் முக்கியமானது.

1. பிள்ளையில்லாத வீடு சுடுகாடு
2. மண்பிள்ளையானாலும் தன்பிள்ளை வேண்டும்
3. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
4. ஆணை அடித்து வளர்
   பெண்ணைப் போற்றி வளர்
   மீசையை முறுக்கி வளர்
5. சந்தன மரம்போல் மகனும்
   சம்பங்கி போல் பெண்ணும்
6. குழந்தையுள்ள வீடு கோயில்
7. குழந்தையே கண்கண்ட தெய்வம்

8. தாயைப் போல பிள்ளை
நூலைப்போல சேலை
9. பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை
10. அடிக்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் பாழ்
11. கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்துக்கு ஆகாது
12. உண்ட பிள்ளை உரம் செய்யும்

பாலின உறவு

உயிரினங்களுக்குப் பாலின உறவு இயற்கையானது. இன்றியமையாதது, இனப்பெருக்கத்துக்கு உதவுவது. மனித சமுதாயத்தில் பாலின உறவு இன்றியமையாத உறவாகும். சங்கப் பாடல்களில் பாலின உறவு இலைமறை காயாக வெளிப்படுகிறது. திருக்குறளிலுள்ள காமத்துப்பால் காம நுகர்வின் அருமையையும் அறிவையும் வெளிப்படுத்துவன. கலிங்கத்துப்பரணி, குற்றாலக்குறவஞ்சி, பட்டினத்தார் பாடல்களிலும் இலைமறைகாயாக வெளியிடப்பட்டுள்ளது. போகமும் யோகமும் தமிழகம் உலகிற்கு அளித்த கொடையாகும். போகத்தில் விளையும் உச்சகட்டமே யோகம் என்பதை உலகுக்கு அறிவித்தவர்கள் பழங்காலத் தமிழ்ச் சித்தர்கள். சிற்பங்களிலும் இவ்வுறவைச் சித்திரிக்கும் சிற்பங்களைக் காண்கிறோம். இலக்கியங்களில் இலைமறை காயாகக் கூறப்படுவது பழமொழிகளில் கொஞ்சம் வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது.

காமம்

1. காமத்துக்குக் கண் இல்லை
2. காமனுக்குக் கண்ட இடத்தில் கண்
3. காமத்துக்குப் பெத்த மகளுமில்லை
செத்த நாயும் இல்லை
4. தூமத் தீயைப் பார்க்கிலும்
காமத் தீ கொடியது

காமுகன்

1. பெண்டு ருசி கண்டவனும்
   உண்டு ருசி கண்டவனும் விடான்
2. எதுக்கும் உருகாதவன்
   இச்சைக்கு உருகுவான்
3. பெண்ணாசை ஒரு பக்கம்
   மண்ணாசை ஒரு பக்கம்
4. தின்றுருசி கண்டவன் திண்ணையை விட்டுப் போகான்
   பெண்டுருசி கண்டவன் பின்னையும் போகான்

ஆசையும் மோகமும்

ஆசை அறுபது நாள்
மோகம் முப்பது நாள்

இச்சையை அடக்கல்

1. தன் இச்சையை அடக்காவிட்டால்
   அது தன்னையே ஆளும்
2. சிற்றின்பம் எண்ணார்
   மற்றின்பம் காண்பார்

பெண்கள்

உயிரின தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள். துணிவின் ஊற்றாகவும் தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் இருப்பவள் பெண். வாழ்க்கைத் துணையாகவும் வாழவைக்கும் தாயாகவும் விளங்கி வழி நடத்திச் செல்பவள் பெண். அன்பின் பண்பே பெண்மை அறத்தின் வடிவே பெண். மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் கவிமணி. ஆடவர் முன்னேற்றமே பெண்ணாலே என்பர். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம் என மகளிர் சார்பாக வாதிட்டார் மகாகவி பாரதியார். எல்லாத் துறைகளிலும் மகளிர் ஈடுபட்டு வியக்கத்தக்க வகையில் முன்னேறி வருகின்றனர்.

அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என முழக்கமிட்ட பாரதியின் வாக்கை செயல்படுத்தி வருகின்றனர். ஆக்கப்பணிகள் மட்டுமின்றி நாட்டை ஆளவும் செய்கின்றனர். அறிவாற்றலாலும் திறமையாலும் உழைப்பாலும் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

ஆனால், பழமொழி காட்டும் பெண்கள் சமுதாயம் முற்றிலும் மாறுபட்ட சமுதாயம். அங்கே மகளிர் உரிமைகள் மறுக்கப்பட்டன. ஆடவரே அனைத்துத் துறைகளிலும் முன்னேறியிருந்தனர். அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு? என வினா எழுப்பிய காலம். அவற்றை விரிவாக ஆராய்வோம்.

பெண்ணின் பெருமை

1. குலத்திற்கேற்ற பெண்
   நிலத்திற்கேற்ற நெல்
2. வானத்திற்கு அழகு சூரியன்
   வீட்டிற்கு அழகு பெண்
3. ஆணாய்ப் பிறந்தால் அருமை
   பெண்ணாய்ப் பிறந்தால் பெருமை
4. கல்யாணம் பண்ணும் வரையில் பிள்ளை
   கண்ணை மூடும் வரையில் பெண்
5. ஆண் நிழலில் நின்றுபோ
   பெண் நிழலில் இருந்துபோ
6. பெண்ணுக்கு குணம்தானே சீதனம்
7. பெண் சம்பாதித்தால் பழங்கலம் ஏறும்
8. ஆணை அடித்து வளர்
   பெண்ணை போற்றி வளர்
9. ஆரம்பமாவதும் பெண்ணாலே
   அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே
10. ஆஸ்திக்கொரு ஆணும்
    ஆசைக்கொரு பெண்ணும்
11. பெண்ணின்றிப் பெருமையுமில்லை
    கண்ணின்றிக் காட்சியுமில்லை

12. பெண்ணுக்குப் பெண்தான் சீதனம்
13. பத்தினி உத்தமி வாக்குப் பலிக்கும்
14. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
15. பத்தினி வாக்கும் உத்தமி வாக்கும் பலித்தே தீரும்
16. பத்தினி வாக்குக்குப் பழுது வராது
17. பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்
18. புத்தியுள்ள மனைவி புதையலுக்குச் சமம்

பெண்ணின் சிறுமை

1. பெண் புத்தி பின் புத்தி
2. பெண்புத்தி கேட்கிறவன் பேயன்
3. அடுப்பே திருப்பதி அகமுடையானே குலதெய்வம்
4. பெண்டுகள் சமர்த்து சமையற்கட்டிலும்
   படுக்கையறையும் தான்
5. பெண் சிரித்தால் போச்சு
   புகையிலை விரித்தால் போச்சு
6. சிரித்தாயோ சேலையை அவிழ்த்தாயோ?
7. பிடிவாதமும் எதிர்வாதமும் பெண்களுக்கு ஆகாது
8. பத்துக்கு மேல் ஒரு பறையனுக்காவது தள்ள வேண்டும்
9. ஆளன் இல்லாதவள் ஆற்று மணலுக்குச் சரி
10. ஆளன் இல்லாத மங்கைக்கு அழகு பாழ்
11. சோற்றுக்குத் தண்டம் பூமிக்குப் பாரம்
12. வெட்கங்கெட்ட முண்டைக்கு முக்காடு எதற்கு?
13. சாக்கடைப்புழு என்றாலும்
    சக்களத்தி என்றாலும் போதும்
14. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
15. அரைக்காசுக்கு அழிந்த கற்பு
    ஆயிரம் பொன் கிடைத்தாலும் கிடைக்காது
16. காசுக்குப் போன மானம்
    கோடி கொடுத்தாலும் வராது
17. அங்கத்தைக் காட்டித் தங்கத்தைச் சேர்
18. தையல் சொல் கேளேல்

19. அரிவை மொழி கேட்டால்
அறிஞனும் அபத்தன் ஆவான்
20. பெண்சாதி பேச்சைக்கேட்டவன் பேய்போல்
அலைவான்
21. மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பாதே
22. பேயை நம்பினாலும் பெண்ணை நம்பாதே
23. அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும்
நம்பக்கூடாது
24. ஆண்பிள்ளை அழுதால் போச்சு
பெண்பிள்ளை சிரித்தால் போச்சு
25. மதுவும் மாதும் தீமையின் அஸ்திவாரம்
26. நாலு ஆண்கள் கூடினால் ஒற்றுமை
நான்கு பெண்கள் கூடினால் வேற்றுமை
27. பெண்கள் இருந்த இடம் சண்டை பெருத்த இடம்
28. பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை
29. பெண்சாதி கால்கட்டு பிள்ளை வாய்க்கட்டு
30. ஆம்பளை இரக்கப்பட்டால் கடனாளியாவான்
பொம்பளை இரக்கப்பட்டால் புள்ளத்தாச்சியாவாள்
31. ஒரு பெண் வாழ மற்றவள் பொறுக்க மாட்டாள்
32. கொலையும் செய்வாள் பத்தினி

பெண்களும் சோதிட நம்பிக்கையும்

1. எட்டாம்பேறு பெண் பிறந்தால்
எட்டிப் பார்த்த வீடு குட்டிச்சுவர்
2. அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது
3. ஆறாம் பேறு பெண்ணாய்ப் பிறந்தால்
ஆறான குடித்தனம் நீராய் விடும்

பெண் கல்வி

1. அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு?
2. சேலைமேற் சேலைகட்டும் தேவரம்பையானாலும்
ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது

3. எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்
பெண்புத்தி பின்புத்தியே

பெண் மனம்

1. தாமரை இலை நீர்போல்
பெண்மனம் நிலையற்றது
2. மலைச்சாரல் மழையும்
மங்கையர் மனமும் திடீரென மாறும்
3. சந்திரனின் பின் பக்கத்தைக் கண்டவர்களும் இல்லை
பெண்களின் உள்ளத்தை அறிந்தவர்களும் இல்லை

பட்டிக்காடு, பட்டணப் பெண்கள்

1. பாலைக்குடித்தாலும் பட்டைக் கட்டினாலும்
பட்டணத்துப் பெண்கள் பறக்கை (தட்டுவாணி)
2. கூழைக்குடித்தாலும் குப்பை சுமந்தாலும்
குப்பைக் காட்டுப் பெண்கள் உருக்குமணி

பெண்களும் அழகும்

1. அவணியில் இல்லை ஈடு அவளுக்கு அவளே சோடு
2. பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும்
3. பெண்ணுக்குப் பெண் பேராசை கொள்ளும் பேரணங்கு
4. அழகு இருந்து அழும்
அதிர்ஷ்டம் இருந்து உண்ணும்
5. ஆடவர் கண்ணுக்கு ரம்பை
6. காந்தளே ருசி கருப்பே அழகு
7. கிளியைப் போல பேச்சும்
மயிலைப் போல அழகும்
8. கூந்தலழகி குடியைக் கெடுப்பாள்
9. பறக்கிற கிளிபோல இருக்கிறாள்
10. மயில் போலும் கன்னி
11. பெண்ணுக்குச் சத்துரு அழகு
12. அவள் அழகுக்குப் பத்துபேர் வருவார்கள்
கண் சிமிட்டினால் ஆயிரம்பேர் வருவார்கள்

13. அவளைக் கண்ட கண்ணாலே
இன்னொருத்தியைக் காண்பதா?
14. கிளிபோல் இருக்கிறாள்
15. கற்பில்லா அழகு வாசனை இல்லாத பூ

வாழாப்பெண்

1. வாழாக் குமரி மூளா நெருப்பு
2. வாழாப் பெண் தாயோடே

மலடிப்பெண்

1. சக்களத்திக்கு ஆண்பிள்ளை பெற்றால் பொறாமை
மலடிக்கு எவர் பிள்ளை பெற்றாலும் பொறாமை
2. மலடி அறிவாளா பிள்ளையின் அருமை
3. பூக்காத பெண்ணும் பூக்காத மரமும்
மண்ணுக்குப் பாரம்

விதவைப்பெண்

1. தாலியை அறுத்தவள் ஏன் இருக்கிறாள்?
தாரந் தப்பினவனுக்குப் பொங்கிப்போட
2. நாழிப்பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது
3. தாலியை அறுத்த வீட்டில் ஆளுக்கு ஆள் அதிகாரம்
4. அமைச்சன் இல்லாத அரசும்
ஆமுடையான் இல்லாத ஆயிரிழையும் ஒன்றே
5. ஆளன் இல்லாதவள் ஆற்று மணலுக்குச் சரி
6. நூல் இழந்த நங்கை போல
7. கொழு கொம்பில்லாத கொடி போலானாள்

பெண்களைப் பற்றிய பழமொழிகளை கூர்ந்து நோக்கின் கீழ்க்கண்ட முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

1. பெண்ணடிமைச் சமுதாயத்தின் பிரதிபலிப்பாக உள்ளது
2. ஆணாதிக்க மனோபாவம் மிகுந்து காணப்படுகிறது
ஆணுக்காகவே பெண் படைக்கப்பட்டதாகத் தெரிகிறது

3. இப்பழமொழிகள் பெண்ணின் பெருமையைக் காட்டிலும் பெண்ணின் சிறுமையை மிகுத்துப் பேசுகிறது
4. பெண்களின் கற்பின்மையை மிகுதியாகப் பேசுகின்றது
5. தாய்மையைப் போற்றும் பழமொழிகளும் உள்ளன
6. பெண்களுக்கு அறிவுரை கூறுவது போன்றும் சில பழமொழிகள் உள்ளன
7. பெண்கல்வியை வெறுத்தமையும் காண்கிறோம்
8. பெண்கள் அடிமையாக நடத்தப்பட்டதையும் ஆணாதிக்க சமூகத்தையும் காண்கிறோம்
9. சுருங்கக் கூறின் நடப்பியல் சமுதாயத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

தாசி / பரத்தையர்

பரத்தையர் என்று கூறப்பெறும் ஒருவகைப் பெண்டிர் சங்க காலத்திலேயே இருந்துள்ளனர். பரத்தையராவார் யாவரெனில் ஆடலும் பாடலும் வல்லராகி அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார் என இளம்பூரணர் கூறுவது பரத்தையரைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பரத்தையர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. திருக்குறள் வரைவின் மகளிர் எனக் குறிப்பிடுகின்றது. பரத்தமை இல்லாத நாடே இல்லை எனலாம். பரத்தமை இயல்புடைய பெண்கள் இல்லாத சமூகத்தைக் காண்பதும் அரிது. காலங்காலமாகச் சான்றோர்களும் சமயங்களும் ஒழுக்கத்தை வற்புறுத்தி வந்தாலும், மனித இன வரலாற்றில் இது தொடர்கதையாகத் தொடர்ந்து கொண்டேயுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் கோயில்களில் தொண்டு செய்த தேவ அடியார் காலப்போக்கில் தேவடியாளாக மாறினர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

பழமொழிகள் பரத்தை ஒழுக்கத்தைக் கண்டிக்கின்றன. இம்மகளிரைப் பழிக்கின்றன. இழிமகளிராகத் தூற்றுகிறது. சமுதாயச் சீரழிப்பாளர்களாகக் கருதுகிறது. மவசி, தாசி,

தேவடியாள் எனும் இழிவான சொற்களால் குறிப்பிடுகிறது. பெரும்பாலான பழமொழிகள் வேசி உறவு காசிலே என்ற கருத்தைப் புலப்படுத்துகிறது. காசில்லாதவன் கடவுளே ஆனாலும் கதவைச் சாத்தடி என்ற நிலையினர். அன்பு, பற்று, பாசம் கிடையாது. பணந்தான் குறியாக வாழ்பவர்கள். முறையும் கிடையாது. கீழ்க்கண்ட பழமொழிகள் வேசியரின் இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

1. வேசி உறவு காசிலே
2. வேசி உறவும் வெள்ளாட்டி உறவும் காசு பணத்திலே காணலாம்
3. வேசிக்கு ஆசை பணத்து மேலே
4. வேசி காசு பறிப்பாள்
5. வேசிக்குக் காசுமேல் ஆசை
   விளையாட்டுப் பிள்ளைக்கு மண்மேலே ஆசை
6. பணம் கண்ட தேவடியாள்
   பாயில் படுக்க மாட்டாள்
7. தாய் இல்லாப் பிள்ளையென்றால்
   தேவடியாள் கேட்கமாட்டாள்
8. காசு கொடுத்தால் வேசி வருவாள்
   கலம் நெல் கொடுத்தால் அவள் ஆத்தாளும் வருவாள்
9. சிறைச்சாலைக்கு அழகில்லை
   தேவடியாளுக்கு முறையில்லை
10. தாசிக்குப் பணம் கொடுத்தால்
    தகப்பனும் போகலாம் பிள்ளையும் போகலாம்
11. தேவடியாளுக்குத் தினமும் ஒரு கணவன்
12. தேளுக்குக் கொடுக்கிலே விஷம்
    தேவடியாளுக்கு உடம்பெல்லாம் விஷம்
13. தேவடியாள் செத்தால் பிணம்
    தேவடியாள் தாய் செத்தால் மணம்
14. வேசியைப் பெண்டாக வைத்தால்
    விளக்குப் பிடிக்க வேண்டும்
15. ஊருக்கு ஒரு தேவடியாள்
    யாருக்கென்று ஆடுவாள்

16. கோயில் தாசிக்குச் சதிராடக் கற்றுக்கொடுத்ததுபோல
17. வேசி ஆடினால் காசு
    வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு
18. பட்டப்பகலில் போகிற தேவடியாளுக்கு மறைப்பு ஏன்?
19. தாசி பிள்ளைக்குத் தகப்பன் யார்?
20. வெற்றிலைக்குத் தண்ணீரும்
    வேசிக்கு மஞ்சளும் போல
21. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
    தாசியும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்
22. தாசிக்குப் பாளையம் கொடுத்தால்
    தகப்பனும் போகலாம் பிள்ளையும் போகலாம்
23. மிருகம் முறை பார்க்கிறதா
    வேசி முறை பார்க்க
24. விலைமகளுக்கு அழகு மேனி மினுக்குதல்
25. ஏழு அறைகட்டி அதில் வைத்தாலும்
    ஒரு அறையில் சோரம் போவாள்
26. வேசிக்கு விடியுமட்டும் உறவு
27. தேவடியாள் வீட்டுத் தாழ்ப்பாள்
    எப்போதும் திறந்திருக்கும்
28. வெய்யில் விதையும் சரி
    வைப்பாட்டி பிள்ளையும் சரி
29. அவிசாரிக்கும் ஆற்றில் விழுகிறவளுக்கும்
    காவல் போட முடியுமா?
30. ஊரைத் தேவடியாள் கெடுப்பாள்
    சீரை மூதேவி கெடுப்பாள்

சாதி (Caste), *இனஅவதூறு* (Ethnic Slur)

சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவாகும். சாதி என்பது அகமண முறை (Endogamy) சார்ந்ததாகும். சாதி என்பது அகமணம், பிறப்பு, தொழில் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டதாக உள்ளது. தொழிலடிப்படை சமுதாயப் பிரிவு, பிறப்பு அடிப்படை சமுதாயப் பிரிவாக மாற்றம் பெறுகிறது. இந்தியச் சமூக அமைப்பில் சாதி முக்கிய பங்கு

வகிக்கிறது. இந்தியாவில் சாதி தொன்றுதொட்டு வரும் சமூக அமைப்பாகும். சாதி வாழ்க்கையின் வழிமுறையாக ஆகிவிட்டது. இந்தியாவில் சமயம் மாறலாம். ஆனால், சாதி மாறமுடியாது. சாதி உடம்பு போன்றும் சமயம் சட்டை போன்றும் உள்ளது. வருணப் பாகுபாடு, நிறவேற்றுமை சாதிக்குக் காரணமாகின்றன. சாதிப் பிரிவுகள் பல்வேறு கட்டுப்பாடுகளோடு இருந்தமையும் அவை பூசல்களைத் தோற்றுவித்து வலங்கையர், இடங்கையர் என்ற பிரிவுகள் ஏற்படக் காரணமாக இருந்ததை வரலாறு காட்டுகிறது.

தனித்தன்மையும் உள்வேற்றுமை வேர்கொண்டு நிலைபெறச் சாதியமைப்பும் பயன்பட்டதைப் பழமொழிகள் காட்டுகின்றன. இந்தியச் சமூக அமைப்பில் ஆழமாக வேரூன்றியுள்ள சாதி மக்களுக்குள்ளேயே வேற்றுமைகளை விதைத்து ஏற்றதாழ்வுகளை விளைத்துவிட்டதோடு, சாதிகளுக்கிடையே ஒரு வெறுப்பையும் விளைத்துவிட்டது என்பது சமூக வரலாற்று உண்மையாகும். அத்தகைய பழமொழிகளை இன அவதூறு (Ethnic Slur) என்ற தலைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. சாதி பற்றிய பழமொழிகளையும் காண்கிறோம்.

1. அம்மாமி வாயைக் கிண்டினால் அத்தனையும் பழமொழிகள்
2. பாப்பாத்தி உப்புக்கண்டம் கடித்த கதை
3. இடைச்சிக்கு எட்டுத்தாலி
பறைச்சிக்குப் பத்துத் தாலி
4. இடைச்சிக்கு மாப்பிள்ளை என்றைக்கிருந்தாலும் வருவான்
5. இடைச்சி சம்பத்தும் சாணாத்தி வாழ்வும் சரி
6. கடல் தண்ணீர் வற்றினாலும் பள்ளிச்சி தாலி வற்றாது
7. பறையன் பாக்கு திண்பதும் பறைச்சு மஞ்சள் குளிப்பதும்
அரிப்பும் பழிப்பும் மட்டும்
8. குசத்தி நாக்கை அறுத்தாலும் குண்டு மூன்று காசு என்பாள்
9. வண்ணானுக்கு வண்ணாத்தி மேலே ஆசை
வண்ணாத்திக்குக் கழுதைமேலே ஆசை

10. தச்சன் பெண்சாதி தரையிலே
 கொல்லன் பெண்சாதி கொம்பிலே
11. சக்கிலியப் பெண்ணும் சாமைக் கதிரும்
 பக்குவத்தில் பார்த்தால் அழகு
12. வற்றிற்றாம் கள் வறண்டாளாம் சாணாத்தி
 ஊறிற்றாம் கள் உதித்தாளாம் சாணாத்தி
13. ஆசாரி பெண்ணுக்கு அழகா பார்க்கிறது
14. ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போவானோ?
15. எல்லாருஞ் செட்டின்னா எருது ஓட்டறது யாரு?
16. செட்டி நட்டம் ஊர்மேலே
17. கெட்டாலும் செட்டி செட்டியே
18. எண்ணிச் செய்கிறவன் செட்டி
 எண்ணாமல் செய்கிறவன் மட்டி
19. செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
20. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அத்தனையும் மயிர்
21. இடையன் புத்தி பிடறியிலே
22. மறவன் புத்தி தலை மறையும் மட்டும்
23. முதலியார் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு
24. ஆறுகெட நாணல் இடு
 ஊருகெட நூலை இடு
 காடுகெட ஆடு விடு
 மூன்றுங்கெட முதலியை விடு
25. கள்ளர் மறவர் கனத்ததோர் அகம்படியார்
 மெல்ல மெல்ல வந்து வெள்ளாளர் ஆனார்
26. நெல்லு வகையை எண்ணினாலும்
 பள்ளு வகையை எண்ண முடியாது
27. பஞ்ச காலத்தில் குடியானவனிடம் போ
 செழிப்பில் சேணியனிடம் போ
28. உப்புக்குக் கேடு சக்கிலியன் உறவு
29. ஆனை ஏறினால் மாவுத்தன்
 குதிரை ஏறினால் ராவுத்தன்

இன அவதூறு (Ethnic Slur)

இன அவதூறு (Ethnic Slur) பற்றி பழமொழி போன்று வேறு எந்த இலக்கியமும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இனத்தாரின் குறைகளை மட்டும் படம் பிடித்துக்காட்டுகின்றது. சாதிகளுக் கிடையேயான வேற்றுமையை, வெறுப்புணர்ச்சியை இஃது புலப்படுத்துகிறது. எல்லா இனத்து குறைகளையும் பழமொழிகளில் காணலாம். நிறைகளும் ஆங்காங்கு காணப்படுகிறது. குறைகளை மட்டும் இங்குக் காண்போம்.

1. இடைச்சி சம்பத்தும்
   சாணாத்தி வாழ்வும் சரி
2. கடல் தண்ணி வற்றினாலும் பள்ளச்சி தாலி வற்றாது
3. பறையனை நம்பலாம்
   பார்ப்பனை நம்பக்கூடாது
4. ஆத்தருகே போனாலும்
   அகம்படியான் அருகே போகாதே
5. ஊருக்கு ஒரு வெள்ளாளனும்
   காட்டுக்கு ஒரு வெள்ளாடும் போதும்
6. காயில் கெட்டது கத்தரிக்காய்
   சாதியில் கெட்டவன் சக்கிலியன்
7. கொலையாளியை நம்பினாலும்
   மலையாளியை நம்பாதே
8. தட்டினால் தட்டான்
   தட்டாவிட்டால் கெட்டான்
9. துலுக்கன் சொத்து துண்டத்துக்கு
   பிராமணன் சொத்து பிண்டத்துக்கு
   மறவன் சொத்து தண்டதுக்கு
10. பனை மரத்து நிழலும் சரி
    மறவன் உறவும் சரி
11. வேலியருகே குடியிருந்தாலும்
    வெள்ளாளன் அருகே குடியிருக்காதே
12. செட்டி நட்டம் ஊர் மேலே

13. பூசாரி புழுகிக் கெட்டான்
ஆசாரி அடிச்சுக் கெட்டான்
14. மறவன் புத்தி தலைமறையும் மட்டும்
15. எண்ணிச் செய்கிறவன் செட்டி
எண்ணாமல் செய்கிறவன் மட்டி
16. ஆதாயமற்ற செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானா?
17. செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
18. சாணனுக்கு ஏறுகையில் ஒருபுத்தி
இறங்குகையில் ஒரு புத்தி
19. செட்டி கூடிக் கெட்டான்
சேணியன் பிரிந்து கெட்டான்
20. கம்மாளன் பணம் கறியும் பொரியுமாய் போகும்
21. இடையன் புத்தி பிடறியிலே
22. பனைமரத்து நிழலும் சரி
பறவன் (மீனவன்) உறவும் சரி
23. பால் நக்காத பூனையும்
தானம் வாங்காத பிராமணனும் உண்டோ?
24. பத்து விதத்திலும் பறையனை நம்பலாம்
பார்ப்பானை நம்பக்கூடாது
25. பறைப்புத்தி அரைப்புத்தி
26. முட்டாள் துலுக்கனும் முரட்டு நாயக்கனும்
பட்டாளத்துக்குத்தான் இலாயக்கு
27. கொழுக்கடைக்குத் தலையும் இல்லை
குறவனுக்கு முறையுமில்லை
28. ஆறுகெட நாணல் இடு
ஊருகெட நூலை இடு
காடுகெட ஆடு விடு
மூன்றுங்கெட முதலியை விடு
29. எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது
பறையன் கொழுத்தால் பாயில் இரான்
30. தட்டான் தாய்ப் பொன்னிலும் மாப்பொன் திருடுவான்
31. வயிற்று வலியை நம்பினாலும்
வடுகனை நம்பாதே

32. பார்ப்பான் கறுப்பும் பறையன் சிவப்பும் ஆகாது
33. புலையனுக்குப் பூமுடி பொறுக்குமா?
34. வெள்ளாளன் மினுக்குப் பண்ணிக் கெட்டான்
வேசி தளுக்குப் பண்ணிக் கெட்டாள்
35. உண்டு கெட்டான் பார்ப்பான்
உடுத்திக் கெட்டான் துலுக்கன்
36. ஏற ஆசைப்பட்டால் சாணானாய்ப் பிறக்கவேண்டும்
37. வேல் மரத்துக்கு நிழலில்லை
வெள்ளாளனுக்கு உறவில்லை
38. சாணான் புத்தி சாணுக்குள்ளே
39. தட்டானும் செட்டியும் கண்
சட்டியும் பானையும் மண்
40. தேரோடு போனாலும் தெலுங்கனோடு போகாதே
41. பரிகாரி உறவு தெருவாசல் மட்டும்
42. பள்ளி முத்தினால் படையாட்சி
43. பார்ப்பானுக்கு பல்லிலே விஷம்
44. வெள்ளி எதிரில் போகக்கூடாது
வெள்ளாளன் எதிரில் போகக்கூடாது
45. கொங்கனுக்கு முறையுமில்லை
கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை
46. சக்கிலியனை நம்பினாலும் ஒக்கலியனை நம்பாதே
47. வேளாளன் புத்தி வேலிவரை
வடுகன் புத்தி வாயில்படி வரை
48. பசுவுக்கும் பார்ப்பானுக்கும்
இளக்காரம் காட்டக்கூடாது
49. மலை வாயிலே சூரியன்
மறவன் வாயிலே சோறு
50. உண்டு கெட்டான் பார்ப்பான்
உடுத்திக் கெட்டான் துலுக்கன்
இரண்டுங் கெட்டான் குடியானவன்

உணவு

மனித வாழ்க்கைக்கு உணவே அடிப்படையாகும். உணவு, உடை, இருப்பிடம் மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். உணவு உடலை வளர்ப்பதற்கு மட்டுமின்றி உள்ளத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதற்குத் துணைபுரிகிறது. வாழுமிடம், தட்பவெப்பநிலை, புறச்சூழ்நிலைகளைப் பொறுத்து ஒரு நாட்டு மக்களின் உணவுப் பொருள் அமைகிறது. உணவுக் கட்டுப்பாட்டிற்கு மதமும் காரணமாக அமைகின்றது. கிராமப்புறமக்களில் உணவு பற்றிய குறிப்புக்கள் பழமொழிகளில் காணப்படுகின்றன.

கூழ், களி

1. இறுகினால் களி
   இளகினால் கூழ்
2. அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒன்று குறையா?
3. குடிப்பது கூழ்
   ஏறுவது பல்லாக்கு
4. கூழ் என்றாலும் குடிக்கிறவன் பிழைப்பான்
5. கூழானாலும் குளித்துக்குடி
   கந்தையானாலும் கசக்கிக்கட்டு

கஞ்சி

1. கஞ்சி கண்ட இடம் கைலாசம்
   சோறு கண்ட இடம் சொர்க்கம்
2. கஞ்சி வார்க்க ஆள் இல்லாவிட்டாலும்
   கச்சை கட்ட ஆள் இருக்கிறது
3. கஞ்சி குடித்த மலையாளி
   சோற்றைக் கண்டால் விடுவாளா?
4. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
5. காடிக் கஞ்சியானாலும் மூடிக்குடி

சோறு

1. கஞ்சி குடித்த மலையாளி
   சோற்றைக் கண்டால் விடுவானா?

2. ஊரெல்லாம் உறவு
ஆனால், ஒரு வாய் சோறு இல்லை

நீராகாரம்

1. மகாராசன் கல்யாணத்திலே நீராகாரத்திற்கு வழியில்லை

கொழுக்கட்டை

1. ஓட்டைச் சட்டியானாலும்
கொழுக்கட்டை வெந்தால் போதும்
2. கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை
கோயிலாண்டிக்கு முறையுமில்லை

பணியாரம்

1. மாவுக்குத் தக்க பணியாரம்

கறி

1. பசிக்குக் கறி வேண்டாம்
தூக்கத்திற்குப் பாய் வேண்டாம்

அப்பம்

1. மாவைத் திண்றால் அப்பம் இல்லை

ஊறுகாய்

1. மாதா ஊட்டாத சோற்றை
மாங்காய் ஊட்டும்
2. சித்திரை மாவடு சிறக்க ருசிக்கும்
3. சாப்பிடும் கலம் பொன்னானாலும்
ஊறுகாய் கேளாமல் கடியுமா?

உப்பு

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
2. உப்புப் போட்டு சாப்பிட்டால் சுரணை இருக்கும்

தயிரும் மோரும்

1. தாயை மறக்கபிடிக்கும் தயிரும் பழைய சோறும்
2. கடைசிச் சோற்றுக்கு மோரும்
   கால்மாட்டிற்குப் பாயும் வேண்டும்
3. மொட்டைச் சோற்றை மோர் மறைக்கும்
   குறுமட்டைப் பெண்டாட்டியைப் பிள்ளை மறைக்கும்

உணவு (பொது)

1. கோடி வித்தையும் கூழுக்குத்தான்
2. பசித்தவன் தின்னாததுமில்லை
   பகைத்தவன் சொல்லாததுமில்லை
3. உண்டால் தின்றால் உணவு
   கொண்டால் கொடுத்தால் உறவு

ஆடை, அணிகலன்கள் (Dress and Ornaments)

தொழிலினடியாக நிகழும் நிகழ்ச்சிகளையும் அவ்வந்நிகழ்ச்சியால் உண்டாகும் பலன்களையும் செய்ய வேண்டிய முறைகளையும் மக்களுக்குக் குறிப்பாக உணர்த்த வேண்டி பழமொழிகளைத் தோற்றுவித்தனர். பழங்காலத் தொழில்களில் நெசவுத்தொழில் மனிதனின் மானங்காக்கும் தொழிலாகக் கருதி பேண! வளர்த்தனர். பருத்தி உடை, பட்டு உடை, கம்பளி உடை என்ற மூன்றையும் சிறந்த முறையில் தயாரித்தனர். இவ்வுடைகளைப் பற்றி பழமொழிகள் தோன்றியுள்ளன.

அணிகலன் என்ற சொல் சங்க இலக்கியங்களில் அழகு, ஒப்பனை, அணிமை, வரிசை, திரட்சி, ஆடை ஒப்புவமை, சூழ்தல், சேமை என்ற பல பெயர்களால் கையாளப்பட்டுள்ளன. பண்டைத் தமிழகத்தில் பொன்னும் பவழமும் முத்தும் மணியும் க[illegible] மாலை அணிந்தனர். அணிகலன்கள் கலையுணர்வு, கலைத்திறன், செல்வ மேம்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளன.

ஆடை இல்லாதவன் அரை மனிதன் என்பர். மக்கள் வாழ்வு முறையையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும்

எடுத்துக்காட்டுவதாக ஆடை விளங்குகிறது. மானத்தைக் காக்க உடையணிந்த மனிதன் நாளடைவில் நாகரிக வளர்ச்சிக்கேற்ப ஆடைகளில் மாற்றம் ஏற்படுத்தினான். ஒவ்வொரு காலத்து ஆடைகளையும் அணிகலன்களையும் அறிந்து கொள்ள அக்காலத்து சிற்பங்கள், சித்திரங்கள் உதவுவதுபோல, நாட்டுப்புற இலக்கியங்களும் உதவுகின்றன.

பருத்தி உடை

1. பருத்திச் செடியும் பாலும் உள்ளவனுக்குப் பஞ்சமில்லை
2. பருத்தி புடவையாய்க் காய்த்ததுபோல
3. பருத்திக்கு உழும் முன்னே தம்பிக்கு எட்டு முழம்
4. பருத்திக் காடு உழுவதற்கு முன்பே
   பொம்மனுக்கு ஏழுமுழம் திம்மனுக்கு ஏழுமுழம்

பட்டு உடை

1. பட்டு குலைந்தால் பொட்டு
2. பட்டு நூல் தலை கெட்டாற்போல
3. பட்டுப்புடவை இரவல் கொடுத்து
   மனை எடுத்துக்கொண்டு திரிவது போல
4. பட்டு மக்கினாலும் பெட்டியிலே
5. பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும்
   காற்காசுக் கந்தை ஓடி உலாவும்
6. பட்டும் பாழ் நட்டும் சாவி
7. பட்டு நூலுக்குள் சிக்கெல்லாம் இருக்கிறது
8. பட்டுப் புடவையில் ஊசித் தட்டுருவிப் பாய்ந்தாற்போல
9. பட்டு கத்தரித்தது போலப் பேசவேண்டும்

கம்பளி உடை

1. கம்பளி விற்ற பணத்திற்கு மயிர் முளைத்திருக்கிறதா?
2. கம்பளியில் ஒட்டின கூழைப்போல
3. கம்பளியில் சோற்றைப் போட்டு
   மயிர் மயிர் என்கிறதா?

நெய்வோர்

பருத்தி, பட்டு ஆடைகளை நெய்வோரை நெய்வோர் என்றும் கைக்கோளர் என்றும் கூறுவர்.

1. நெய்கிறதை விட்டு நினைத்துக் கொண்டானாம் கைக்கோளன்
2. கைக்கோளனுக்குக் காற்புண்ணும்
   நாய்க்குத் தலைப்புண்ணும் ஆகாது

உடைப் பழக்கம்

1. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
2. பருத்திக்கு உழுமுன்னே தம்பிக்கு எட்டுமுழம்
3. உடையவன் இல்லாச்சீலை ஒரு முழம் கட்டை
4. கிழிந்த சீலை காசுக்கு இரண்டு
5. சேலைமேற் சேலை கட்டும் தேவரம்பை ஆனாலும்
   ஒலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது
6. முந்தானை இருக்கிறது நாலு வீடு இருக்கிறது
7. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
   கூழானாலும் குளிததுக்குடி

அணிகலன்களை காதணி, கழுத்தணி, கையணி, விரலணி, இடுப்பணி, காலணி என்றெல்லாம் பகுத்து ஆய்வர். நான் தொகுத்த பழமொழிகளில் அணிகலன்களைப் பற்றிய பழமொழிகள் மிகவும் குறைவாகும்.

1. பெண்ணைத் திருத்தும் பொன்
2. சுவருக்கு மண் இட்டுப்பார்
   பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார்
3. பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்
4. ஆடை வாய்க்கவும், ஆபரணம் வாய்க்கவும்
   அதிர்ஷ்டம் வேண்டும்

நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கையே பண்பாடு என்கிறார் மாலினோ வீஸ்கி. பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இதன்கண் அடங்கி விடுகின்றன. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிகற்கள் எனலாம்.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகிறது. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையில் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாதபொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்து காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். மனித வாழ்வில் நம்பிக்கைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. தனிமனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுவதுமுண்டு.

பழக்க வழக்கங்களைத் தனிமனிதனும் சமுதாயமும் இணைந்து உருவாக்குகின்றன. தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைப் பழக்கம் எனவும் குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது வழக்கம் எனவும் சமூகவியலாளர் கூறுகின்றனர். பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்கநிலை என்றும் வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடக்கநிலை என்றும் கூறலாம். சமூகத்தின் பண்பாட்டினை அறிய நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் துணை புரிகின்றன.

குழந்தை பற்றிய நம்பிக்கைகள்

குழந்தை கொடி சுற்றிப் பிறத்தல்

1. மாலையுடன் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது
2. கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்துக்கு ஆகாது

கண்ணேறு கழித்தல்

1. விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது
2. கல்லெறிக்குத் தப்பினாலும்
   கண் எறிக்குத் தப்ப முடியுமா?

கர்ப்பம்

1. ஆலமரத்தைச் சுற்றிவந்து
   அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாளாம்

விலங்கு பறவைகள் பற்றிய சகுண நம்பிக்கைகள்

1. காட்டுக்காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்
2. கருடன் இடமானால் எவர் கைப்பொருளும் தன்வசமாகும்
3. காகம் வலமானால் ஆடுகள் விருத்தியாகும்
4. காடை கத்தினால் பாடை கட்டவேண்டி வரும்
5. செம்போத்து வலமானால் சம்பத்து உண்டு
6. நாரையும் விறகு வெட்டியும் வலமானால் நல்ல லாபம்
7. காடை இடமானால் நாட்டை ஆளலாம்
8. ஆந்தை பஞ்சையாய் இருந்தாலும்
   சகுணத்திற்குப் பஞ்சமில்லை
9. பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுணம்
   பார்த்தாற்போல
10. ஆமை புகுந்த வீடும்
    அமீனா புகுந்த வீடும் உருப்படாது
11. காலையில் எழுந்ததும் காக்கா முகத்தில் விழிக்காதே
12. குளவி கூடு கட்டினால் பிறப்பு
    நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
13. நாய்க்குத் தெரியும் நமன் வருகை

எண் பற்றிய பழமொழிகள்

1. நாலாம் பேற்றுப் பெண் நாதங்கியை விற்றுத் தின்னும்

2. ஆறாம் குழந்தை பெண்ணாகப் பிறந்தால்
ஆளான குடித்தனமும் நீராய் விடும்
3. அஞ்சாவது பெண் பிறந்தால்
அரசனும் ஆண்டியாவான்
4. நான்கு பிள்ளை பெற்றால் நாதங்கியும் இருக்காது

நட்சத்திரம் பற்றிய நம்பிக்கைகள்

1. அவிட்டத்தில் பெண் பிறந்தால்
தவிட்டுப் பானையெல்லாம் பொன்
2. ஆண் மூலம் அரசாளும்
பெண் மூலம் நிர்மூலம்
3. மகத்துப் பெண் முகத்துக்கு ஆகாது
4. மூலத்தில் பிறந்தவன் காலத்தில் வாழ்வான்
5. மகத்துப் பிள்ளை சகத்திலே கிடைக்காது
6. மகம் சகத்தை ஆளும்
7. கேட்டை கோட்டை கட்டும்
8. பரணி பிறந்தவன் தரணி ஆள்வான்
9. அவிட்டம் தொட்டதெல்லாம் பொன்
10. கேட்டையில் பிறந்தவன்
கோட்டை கட்டி ஆள்வான்
11. அஸ்வினி சர்வ நாசனம்
12. விசாகத்தில் மழை பெய்யின் பயிர்களுக்கு நல்லது
13. கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும்
14. குரு பார்க்க கோடி பலன் உண்டாகும்
15. குரு பார்வை கோடி தோஷம் நீங்கும்
16. ராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை
குரு திசையில் கெட்டவனும் இல்லை
17. பொங்கு சனிபோய் மங்கு சனி வந்தது
மங்கு சனிபோய் குங்கு சனி வந்தது
18. அஷ்டமத்துச் சனி நட்டம் வரச்செய்யும்
19. ஆறில் சனி முடி சூடும்
20. ராகுபோல் கொடுப்பாரும் இல்லை
கேதுபோல் கெடுப்பாரும் இல்லை

அங்கபலன் நம்பிக்கைகள்

1. கணுக்கால் பெருத்தால் கணவனுக்கு ஆகாது
2. சுருட்டைச் சோறு போடும்
   பம்பை பால்வார்க்கும்
   கோரை குடிகெடுக்கும்

கிழமை, மாதம், சூலம் பற்றிய நம்பிக்கைகள்

1. கொள்ளிக்கு எதிரே போனாலும்
   வெள்ளிக்கு எதிரே போகக்கூடாது
2. காலனுக்கு எதிரே போனாலும்
   சூலத்துக்கு எதிரே போகக்கூடாது
3. திங்கள் பயணம் திரும்பாப் பயணம்
4. தை பிறந்தால் வழி பிறக்கும்
5. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை
6. சித்தை மாதத்தில் செல்வன் பிறந்தால்
   சீரும் சிறப்பும் கூடும்
7. ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர் நாய் படாதபாடுபடுவர்
8. ஞாயிற்றுக்கிழமை ருதுவானால் நாய் படாதபாடு
9. திங்களும் சனியும் தெற்கே நோக்கவேண்டும்
10. சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனும் இல்லை
    ஐப்பசி மாதத்தில் பிறந்த அதிர்ஷ்டவானும் இல்லை

தெய்வம் தொடர்பான நம்பிக்கைகள்

1. ஐயனார் கோவிலே செங்கல் அத்தனையும் தெய்வம்
2. நம்பின பேருக்கு நடராசா
   நம்பாத பேருக்கு எமராசா

சாவு பற்றிய நம்பிக்கைகள்

1. சனிப் பிணம் தனியே போகாது
2. தாய்க்குத் தலைமகன்
   தகப்பனுக்குச் சின்னமகன் (கொள்ளி)

அதிர்ஷ்டம், விதி பற்றிய நம்பிக்கைகள்

1. அன்று எழுதியதை அழித்து எழுத முடியாது
2. தாரமும் குருவும் தலைவிதிப்படி

3. அதிர்ஷ்டம் இருந்தால் அரசும் பண்ணலாம்
4. அதிர்ஷ்டக்காரன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்

சத்தியம் செய்தல் பற்றிய நம்பிக்கைகள்

1. ஆணையும் வேண்டாம்
   சத்தியமும் வேண்டாம்
   துணியைப் போட்டுத் தாண்டினால் போதும்
2. குடப்பாலில் கையைவிட்டு சத்தியம் செய்

உண்ட இலை தொடர்பான நம்பிக்கை

1. உண்ட இலையில் உட்கார்ந்தால் சண்டை வரும்

கடுகு சிந்துதல் தொடர்பான நம்பிக்கை

1. கடுகு சிந்தினாலும் கலகம் வரும்

பழக்க வழக்கங்கள்

1. இளமைப் பழக்கம் சுடுகாடு மட்டும்
2. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
3. சித்திரமும் கைப்பழக்கம்
   செந்தமிழும் நாப்பழக்கம்
4. அடியந்திரம் எடுத்து கடன்பட்டவன்
   நாஞ்சில் நாட்டு மக்கள்
5. சேர்க்கைக்குத் தக்க பழக்கம்

தெய்வம்

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி நம் நாட்டில் வழங்குகிறது. நாட்டுப்புற மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் நோய் நொடிகளுக்கும் தெய்வமே காரணம் என்று நம்புகின்றனர். நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும், தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். படையல்களும் பலியுமிட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர். மக்கள் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சங்கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். இறை வழிபாடு மக்கள் வாழ்வோடு வாழ்வாகப் பிணைந்துவிட்டது. இயற்கை வழிபாட்டில் தொடங்கி, சிறுதெய்வ,

பெருந்தெய்வ வழிபாடு என வளர்ந்துள்ளது. இப்பழமொழிகளில் தெய்வம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இறை நம்பிக்கை பற்றிய பழமொழிகளையும் காண்கிறோம்.

மாரி

1. ஆர் கடன் வைத்தாலும்
   மாரி கடன் வாங்கக்கூடாது
2. மனமிருந்தால் மாரியம்மா
   இல்லாவிட்டால் காளியம்மா

அய்யனார்

1. அய்யனார் கோயில் ஆணையைப்போல்
2. அய்யனார் கோயில் செங்கல் அனைத்தும் தெய்வம்

அழகர்

1. ஆற்றைக் காணாத கண்களும்
   அழகரை வணங்காத கைகளும் இருந்தும் பயனில்லாதவை

கணபதி

1. கணபதி பூஜைக்கு கைமேல் பலன்

சுப்பரமணி

1. சுக்குக்கு மிஞ்சின மருந்தில்லை
   சுப்பிரமணி சுவாமிக்கு மிஞ்சின தெய்வமில்லை

சிவன்

1. சிவனுக்கு மேல் தெய்வமில்லை
   சித்திக்குமேல் சாத்திரமில்லை

அண்ணாமலை

1. அண்ணாமலையாருக்கு அறுபத்துநாலு பூஜை
   ஆண்டிகளுக்கு எழுபத்து நாலு பூஜை

ஸ்ரீரங்கநாதர்

1. எங்கும் சுற்றி ரங்கனைப்பாரு
2. விஷ்ணுவைப் பெரிது என்பர் ஸ்ரீரங்கத்தில்
   சிவனைப் பெரிது என்பர் அருணாசலத்தில்

தில்லை காளி

1. தில்லை காளி எல்லைக்கு அப்பால்

அனுமான்

1. உயிர் இருக்கும்போது குரங்கு
   இறந்த பின் அனுமார்

சூரியன்

1. சுக்குக்கு மிஞ்சின மருந்துமில்லை
   சூரியனுக்கு மிஞ்சின தெய்வமுமில்லை

குலதெய்வம்

1. கும்பிட்ட தெய்வம் குலதெய்வம்

இறை நம்பிக்கை

1. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
2. இறைவன் தூணிலும் இருப்பான்
   துரும்பிலும் இருப்பான்
3. நம்பினோர் கெடுவதில்லை
   இது நான்மறை தீர்ப்பு
4. நம்பினோர்க்கு நடராசா
   நம்பாதவர்க்கு எமராசா
5. அவனின்றி ஓர் அணுவும் அசையாது
6. தான் ஒன்று நினைக்க
   தெய்வம் ஒன்று நினைக்கும்
7. தெய்வத்திற்குச் சத்தியம்
   மருந்துக்குப் பத்தியம்
8. தெய்வமே துணை
9. யாரு குறையிருந்தாலும் சாமி குறைகூடாது

10. அரசன் அன்று கொல்வான்
    தெய்வம் நின்று கொல்லும்
11. எளியாரை வலியார் அடித்தால்
    வலியாரைத் தெய்வம் அடிக்கும்
12. மனதிற்கு மனதே சாட்சி
    தெய்வத்திற்குத் தெய்வமே சாட்சி
13. எல்லாம் ஈசன் செயல்
14. வையம்தோறும் தெய்வம் தொழு
15. விஷம் தீர வைத்தியன் வேண்டும்
    பாவம் தீர தெய்வம் வேண்டும்
16. கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும்
17. நடக்கிறது நடக்கட்டும்
    தெய்வம் இருக்கிறது
18. நீ பிறருக்கு உதவி செய்தால்
    தெய்வம் உனக்கு உதவி செய்யும்
19. நம்பினால் தெய்வம்
    நம்பாவிட்டால் கல்
20. ஆண்டவன் ஒருவன் இருக்கிறான்
21. ஆண்டவன் விட்ட வழி
22. உண்டு என்ற பேருக்கு ஈசன் உண்டு
    இல்லை என்ற பேருக்கு இல்லை

சைவ வைணவ வேறுபாடின்மை

1. அரியும் சிவனும் ஒண்ணு
   அறியாதவன் வாயில் மண்ணு

திருவிழா, பண்டிகை

மனித சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாவாகும். திருவிழாக்கள் சமயத்தின் கூறாக மட்டுமின்றி கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்கின்றது. திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. நாட்டுப்புற விழாக்கள் மூலம் மக்களின் பண்பாடும் நாகரிகமும் வெளிப்படுகின்றன. இவ்விழாக்களில் சிறு பாரம்பரிய மரபும்

பெரும் பாரம்பரிய மரபும் கலந்தே உள்ளன. கார்த்திகை, தீபாவளி, பொங்கல் பற்றிய குறிப்புகளைச் சேகரிக்கப்பட்ட பழமொழிகளில் காண்கிறோம். குமரி மாவட்ட பழமொழிகளில் ஓணம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

1. காஞ்சுபோன கார்த்திகை வந்தால் என்ன?
 தீஞ்சுபோன தீபாவளி வந்தால் என்ன?
 மகராசன் பொங்கல் வந்தால் மார்முட்டச் சாப்பாடு
2. கர்ணனுக்குப் பின் வள்ளலுமில்லை
 தீபத்திற்குப் பின் மழையுமில்லை
3. இருந்தால் ஓணம்
 இல்லாவிட்டால் ஏகாதசி
4. இருந்தால் துவாதசி
 இல்லாவிட்டால் ஏகாதசி
5. பெருமாள் இருக்கிறவரை திருநாள் உண்டு

சமயம்

நாட்டுப்புறச் சமயம் என்பது அமைப்புக்கு உட்படுத்தப்பட்டு நிறுவனமாக்கப்பட்டுவிட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது என்று டான்யோடர் (Don Yoder) கூறுகிறார். இயற்கையில் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டின் தோற்றம் என்கிறார் சிக்மண்ட் பிராய்டு. ஆதிகால மக்கள் கரு வளத்தையும் பயிர் வளத்தையும் ஒருங்கே பெறுவதற்காக மந்திரங்களைக் கையாண்டனர். அதன் தருக்கமுறையிலான முடிவாக வழிபாடு தோன்றலாயிற்று என்கிறார் டாக்டர் கைலாசபதி.

நாட்டுப்புற மக்களிடையே சமயப் பொதுமையையும் காண்கிறோம்.

அரியும் சிவனும் ஒண்ணு
அதை அறியாதவன் வாயில் மண்ணு

என்ற பழமொழி மூலம் சமயப் பொதுநோக்கு காணப்படுகிறது.

அனைத்துச் சமய அடிப்படையிலும் பழமொழிகள் எழுந்துள்ளன.

சைவம்	சிவனுக்கு மேல் தெய்வமில்லை சித்திக்கு மேல் சாஸ்திரமில்லை
வைணவம்	எங்கும் சுற்றி ரங்கனைப் பாரு
கிறிஸ்தவம்	உன்னைப்போல் பிறரை நேசி
இஸ்லாம்	எல்லாச் சொத்தும் அல்லாவுக்கு
பௌத்தம்	ஆசையை விட்டால் மோட்சம் கிட்டும்
சமணம்	தன்னுயிரைப் போல் மன்னுயிரை நினை

அதே நேரத்தில் நகர்ப்புற படித்த மக்களிடையே சைவ, வைணவ வேறுபாடு இருப்பதையும் பழமொழி எடுத்துக்காட்டுவதை மறுப்பதற்கில்லை. எழுத்திலக்கியத் தாக்கம் ஒரு காரணம் என்றும் கூறலாம்.

1. சிவனுக்கு மேல் தெய்வமில்லை
   சித்திக்கு மேல் சாஸ்திரமில்லை
2. அவனே இவனே என்பதைச்
   சிவனே சிவனே என்று சொல்லு
3. நீறில்லா நெற்றி பாழ்
4. எங்கும் சுற்றி ரங்கனைப் பாரு
5. ஆரூரில் பிறக்க முக்தி
   தில்லையில் தரிசிக்க முக்தி
   காசியில் இறக்க முக்தி
6. சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத்
   திருவாசகம் கற்றுத்தர வேண்டுமோ?
7. சைவர்க்கு அண்ணாமலை
   வைணவர்க்குத் திருவரங்கம்
8. திருவரங்கத்தில் பிறந்த பிள்ளைக்குத்
   திருப்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமா?
9. ஸ்ரீரங்கத்து உலக்கை மாற்றின கதை
10. திருப்பதி நடையழகு, குடையழகு, வடையழகு
11. திருப்பதியில் தாதனைத் தேடியகதை
12. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

13. பிள்ளை பாதி புராணம் பாதி
14. எந்தப் பொருளும் கந்த புராணத்திலே
15. படிப்பது திருவாசகம்
இடிப்பது சிவன்கோவில்
16. சிவ சொத்து குல நாசம்
17. சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை
சுப்பிரமணியருக்கு மிஞ்சிய தெய்வமில்லை
18. சைவப்பழம் வில்வக் கிளை
19. சித்தன் போக்கு சிவன் போக்கு
20. நினைக்க முக்தி அண்ணாமலை

உலகியல்பு

சான்றோர் நெறி, தொன்றுதொட்டு நிலவி வரும் மரபு முதலியவற்றை உலகியல்பு என இலக்கியங்கள் கூறும். சாதாரண நடைமுறை வாழ்வில் வழக்கில் வழங்குவதை இங்கு காண்கிறோம். அறக்கோட்பாடுகளுக்கு மாறாகவும் இருக்கலாம். நடைமுறை வாழ்வில் காணப்படுவதைப் பழமொழிகள் அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறது. உலகம் பலவிதம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. யதார்த்த நிலையைப் புலப்படுத்துகிறது. எனவேதான், பழமொழியை நாட்டு வாக்கியம் என்றும் அழைக்கின்றனர்.

பழமொழி காட்டும் உலகியல்பு

1. நாலுபேர் வாக்கு தெய்வ வாக்கு
2. ஒருவனைக் கொன்றால் தூக்கு
பலரைக் கொன்றால் பாராட்டு
(தனிமனிதன் - அரசன்)
3. உழுது பிழைப்பார் ஒருகோடி
ஏய்த்துப் பிழைப்பார் ஏழு கோடி
4. ஒரு வீட்டிலே மணக்கோலம்
மற்றொரு வீட்டிலே பிணக்கோலம்
5. பிணத்தை மறைத்து மணத்தை முடி
6. நன்றாக இருக்கவும் பார்க்கமாட்டார்கள்
கெட்டுப்போகவும் பார்க்கமாட்டார்கள்

7. வாழ்ந்தாலும் பொறுக்கமாட்டார்கள்
   தாழ்ந்தாலும் சகிக்க மாட்டார்கள்
8. இன்ப துன்ப சுழல் சக்கரம்
9. பொய்யிருந்து புலம்பும்
   மெய்யிருந்து விழிக்கும்
10. ஆபத்தும் சம்பத்தும் யாருக்கும் உண்டு
11. உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பொல்லாதவன்
12. வாழ்வு ஒரு காலம்
    தாழ்வு ஒரு காலம்
13. முப்பதாண்டு வாழ்ந்தாரும் இல்லை
    முப்பதாண்டு தாழ்ந்தாரும் இல்லை
14. வண்டியில் ஓடம் ஏறும்
    ஓடத்தில் வண்டி ஏறும்

சான்றோர் நெறியும் தொன்றுதொட்டு நிலவி வரும் மரபுகளும் பின்பற்றப்பட்டு வந்ததையும் பழமொழிகளில் காண்கிறோம்.

அளவறிந்த வாழ்வு

1. விரலுக்குத் தகுந்த வீக்கம்
2. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து
3. கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்
4. இன்பமும் துன்பமும் யாருக்குமுண்டு
5. சுகம் துக்கம் சுழல் சக்கரம்

வாழும் முறை

1. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து
4. சில்லறைக் கடன் சீரழிக்கும்
5. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே
6. வாழ்வதும் தாழ்வதும் வண்டி உருளைபோல

இல்லற நெறி

1. இல்லறம் பெரிது துறவறம் சிறிது
2. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
3. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்
4. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
5. தாய்க்குப் பின் தாரம்
6. பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு
7. பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்

மொழி / பேச்சு

பேச்சாலும் எழுத்தாலும் மனிதன் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் கருவி மொழியாகும். மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் அரிய கலை மொழியாகும். மொழி மனிதன் வாழ்க்கையில் இல்லையேல் மனிதன் மனிதனாக வாழமுடியாது. மொழியில்லாத சமுதாயத்தையோ சமுதாயம் இல்லாத மொழியையோ காண்பதரிது. நமது முன்னோர் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்களை நாம் கண்டு துய்ப்பதற்கும் நாம் பெற்றுள்ள அறிவுச் செல்வத்தை நமது வழித்தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் மொழி பெருந்துணையாகும். மொழி/பேச்சு பற்றிய குறிப்புக்களும் பழமொழிகளில் காணப்படுகின்றன.

மொழி

1. தேசங்கள் தோறும் பாஷை வேறு
2. பேசப்பேச எந்த மொழியும் வரும்
3. மொழி தப்பியவன் வழி தப்பியவன்
4. ஒரு மொழி அறிந்தவன் ஊமை
   பலமொழி அறிந்தவன் பண்டிதன்
5. வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழவழ

பேச்சு

1. நூற்றுக்கு ஒரு பேச்சு
2. கண்டால் ஒரு பேச்சு
   காணாவிட்டால் ஒரு பேச்சு

3. பல்லுப்போனால் சொல்லு போச்சு
4. வெட்டு ஒன்று துண்டு இரண்டு

சொல்

1. அன்றைக்குச் சொன்ன சொல்
   சென்மத்திற்கும் உரைக்கும்
2. சொல்லுக்கு அரிச்சந்திரன்
3. சொல்லம்போ வில்லம்போ
4. அரிசி சிந்தினால் அள்ளலாம்
   வார்த்தை சிந்தினால் அள்ள முடியுமா?
5. காலம் போகும் வார்த்தை நிற்கும்

நுண்கலைகள்

இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகள் நாட்டுப்புறக் கலைகள். மனித உணர்வுகளுக்கு கலைகள் வடிகாலாய் இருந்தன. அழகியல் உணர்வுகளின் மையமாக இக்கலைகள் விளங்குகின்றன. தொன்மைக் காலத்தில் சமயத்துடனும் பின்னர் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றது. கலைகள் சமய, கலாச்சார அம்சங்களிலிருந்து பிரிக்க முடியாதனவாகவும் உள்ளன. இத்தகைய கலைகளைப் பற்றி பழமொழிகளிலும் காண்கிறோம்.

இசைக்கலை

1. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இருக்காது
2. இங்கிதம் தெரியாதவனுக்கு சங்கீதம் தெரிந்து பயனில்லை
3. அவள் பாடுவது குயில்போல
4. பாடப்பாட ராகம் மூடமூட ரோகம்
5. பாடத் தெரியாத பாகவதருக்கு பக்கவாத்தியம் ஏன்?

கோலக்கலை

கோலம் தமிழர் வாழ்வில் பண்பாட்டுக் கலையாக வளர்ந்து வந்துள்ளது. தமிழர் பண்பாட்டிற்கு உரைகல்லாக விளங்குவதோடு தெய்வம் தொடர்பான செய்திகள், குடும்பச்சூழல்,

வாழ்க்கையின் வளங்கள், உயிரினங்களுக்கு உதவும் பண்பாடு, அழகுணர்வு, பரம்பரை மரபு ஆகியவற்றைப் புலப்படுத்திக் காட்டும் கண்ணாடியாகவும் திகழ்கின்றது. கோலம் என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் காணப்படாவிட்டாலும் ஆண்டாள் காலத்திலே காண்கிறோம். தொடக்க காலத்தில் விழாக்காலங்களில் போடப்பட்ட கோலம் நாளடைவில் நாளும் இடும் வழக்கமாகியுள்ளது. இன்று கோலம் தமிழர் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்துவிட்டது. கோலம் பெண்களின் மன இயல்பை, கற்பனை வளத்தை, அறிவுத்திறனை, அழகுணர்ச்சியை வெளிக்காட்டுவதாகும். கோலம் பற்றிய பழமொழிகளை இங்குக் காணலாம்.

1. நெற்றிக்குக் குங்குமம்
   முற்றத்துக்குக் கோலம்
2. திலகமில்லா நெற்றி பாழ்
   கோலமில்லா முற்றம் பாழ்
3. பூமிக்குத் திலகம் கோலம்
4. கோலமிடுவது கோழி கூவு முன்னே
   கோபுரம் காண்பது கதிரவன் பின்னே
5. வேகாத நெல்லை விரலாலே கீறிக் கோலமிட்டேன்
   சாகாத பிள்ளையாக வரந்தரவேண்டும்
6. சாணத்தானம் தங்கத்திற்குச் சமம்
7. நளனைச் சனிபிடித்த மாதிரி
   சானந் தெளிக்காத வீட்டைச் சனி பிடிக்கும்
8. ஏற்கனவே மாமி பேய்க்கோலம்
   அதிலும் கொஞ்சம் மாக்கோலம்
9. தெளித்துப் பெருக்கணும்
   பெருக்கித் தெளிக்கணும்
10. முற்றம் தெளித்தோம் மூதேவியே போ
    வாசல் தெளித்தோம் மகாலெட்சுமியே வா

நகைச்சுவை

பல்வேறு சுவைகளுக்கும் இடமளித்த பழமொழி, நகைச்சுவைக்கும் இடமளித்துள்ளது.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப
தொல். மெய்ப்பாட்டியல் 33

எட்டு மெய்ப்பாடுகளில் ஒன்றாகக் கொள்கிறார். சுவையில் நகைச்சுவையே தலை சிறந்து விளங்குவதாகும். இராபர்ட் பீட்டர் கோபின் என்பவர் நகைச்சுவை பயக்கும் நல்லதொரு கவிதை பழமொழி என்கிறார். வாழ்க்கையில் நகைச்சுவை மிகவும் இன்றியமையாததொன்றாகும்.

சிரிக்காத நாள் வீண் நாள் ஆகும்
சிரித்துக் கொழுத்துப் போ
வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்

என அறிஞர்கள் கூறுகின்றனர்.

நகை தோன்றுதற்குரிய காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுகின்றார்.

எள்ளல் இளமை பேதைமை மடமை என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப

நகைச்சுவை பழமொழிகளை ஓரளவு எள்ளல் என்பதன்கீழ் அடக்கலாம். எள்ளலின் முக்கிய நோக்கமே பிறர் மனம் புண்படாமல் இன்பத்தை விளைவித்து நல்வழிப்படுத்துவதாகும்.

1. கையைப் பிடித்து தூக்கிவிடு பிணக்காடாக்குகிறேன்
2. நாதசுரம் தெரியாதா?
   மத்தளம் போல கலகல என்றிருக்கும்
3. பஞ்ச பாண்டவர் என்றால் தெரியாதா?
   கட்டில்காலைப் போல் மூன்று என்று சொல்லி
   இரண்டு விரலைக் காட்டி
   ஒன்று எழுதி
   அதையும் அழித்துவிட்டார்களாம்
4. எழுந்திருப்பான் கால்தான் இல்லை

5. அவள் பெயர் கூந்தலழகி, தலை மொட்டை
6. இஞ்சி என்றால் தெரியாதா?
எலுமிச்சைப் பழம்போல இனிப்பாக இருக்கும்
7. மதுரையில் அடிபட்ட சூரனுக்கு
மானாமதுரையில் மீசை துடித்ததாம்
8. ஆண்டியும் ஆண்டியும் கட்டிப்புரண்டால்
சாம்பலும் சாம்பலும்தான் ஒட்டிக்கொள்ளும்
9. பழஞ்சோறு இருந்தால் போடு
பசிக்காமல் இருக்க வரந்தருகிறேன்
10. அரைப்படி அன்னதானம் விடியவிடியச் செய்தானாம்
11. காக்கைக்கு சோறுவைக்க காதவழி போனானாம்
ஒருவன்
12. ஏன் தென்னை மரத்தில் ஏறினாய் என்று கேட்டால்
புல் பறிக்க என்றானாம்
தென்னை மரத்தில் ஏதடா புல் என்றால்
அதனால்தான் இறங்குகிறேன் என்றானாம்
13. பட்டுப் புடவையைக் கொடுத்துவிட்டு
மனைக்கட்டையைத் தூக்கிக்கொண்டு
அவள் பின்னாலே திரிந்தாளாம்
14. யானை காணாமல் போய்விட்டது என்று
குண்டு சட்டியில் கைவிட்டுத் துழாவினானம்
15. ஆசை இருக்கு தாசில் பண்ண
அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க
16. காசில்லாதவனுக்கு வராகன் பேச்சு எதற்கு?
17. தாய் கிண்ணிப் பிச்சை எடுக்கிறாள்
மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்
18. தாய் சீலைக்குச் சாண் துணியில்லை
தலைக்கு மேலே சரிகை வேட்டி
19. அப்பன் சோற்றுக்கு அழுகிறான்
பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்
20. குடிக்கிறது கூழ்
கொப்பளிக்கிறது பன்னீர்
21. சூத்திலே கட்டத் துணியில்லை
கூத்தியார் இரண்டு

22. ஆண்டி அன்னத்திற்கு அலையும்போது
லிங்கம் பால்சோற்றுக்கு அழுததாம்
23. அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்
24. கும்பி கூழுக்கு அழுகிறது
கொண்டை பூவுக்கு அழுகிறது
25. தான் தின்னத் தவிடு இல்லை
வாரத்திற்கு இரண்டு பன்றிகுட்டி வளர்க்கிறான்

பொருட்கள்

பழமொழி பேசாத பொருட்களே இல்லை எனலாம். பெரும்பாலான பழமொழிகளில் பொருட்கள் மற்றவற்றுடன் இணைந்து வருகின்றன. தொகுக்கப்பட்ட பழமொழிகளில் கீழ்க்கண்ட பொருட்களைப் பற்றி பழமொழிகளைச் (சான்றுக்கு) கொடுத்துள்ளேன். அனைத்துப் பொருட்களையும் தொகுத்தளிப்பின் நூற்றுக்கணக்கான பக்கம் பெருகும்.

1. வீட்டில் பயன்படுத்துவது

1. ஒரு விளக்கைக் கொண்டு ஓராயிரம் விளக்கு ஏற்றலாம்
2. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் அவசியம்
3. வீட்டில் கடியாரமே எஜமானனாக இருக்கவேண்டும்
4. உரலுக்கு ஒரு பக்கம் இடி
மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி
5. வேப்பெண்ணெய் ஆபத்துக்கு உதவும்
6. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
7. உடைந்த கண்ணாடி ஒன்று சேருமா?

2. கடலில் பயன்படுத்துவது

1. ஓடம் வண்டியிலே, வண்டியிலே ஓடம்
2. ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
3. பாய்மரமில்லாத கப்பலைப் போல

3. வேளாண்மைக்குப் பயன்படுத்துவது

1. ஏணி ஒருவரைக் கொல்லும்
ஏற்றம் மூவரைக் கொல்லும்

4. மனிதன் பயன்படுத்துவது

1. செருப்புக்காகக் காலை குறைக்க முடியுமா?
2. புத்தகத்தையும் பெண்ணையும் இரவல் கொடுக்காதே

மனித உடல் உறுப்புக்கள்

மனிதனுடைய இயக்கமே மனிதனுடைய உடல் உறுப்புக்களைச் சார்ந்ததாகும். உடல் உறுப்புக்கள் இயங்காவிட்டால் மனிதனால் ஒன்றுமே செய்ய முடியாது. ஒவ்வொரு உடல் உறுப்புக்களும் மனிதன் இயங்க ஒரு வகையில் உதவி புரிகிறது. உடல் உறுப்புக்களின் தன்மையையும் பயன்பாட்டையும் கண்டுணர்ந்து பழமொழியாக்கியுள்ளனர். உடல் உறுப்புக்களில் கண், வாய், நாக்கு, கை, கால் பற்றிய பழமொழிகள் அதிகமுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலை

1. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று
2. என்சான் உடம்பிற்குச் சிரசே பிரதானம்
3. தலை இருக்க வால் ஆடுமா?
4. காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வான்
5. தலை எழுத்துக்குத் தலையைச் சிரைத்தால் போதுமா?

இமை

1. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது

கண்

1. கண் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?
2. கண்ணை இமை காப்பது போல
3. கண்ணுக்கு இமை, பெண்ணுக்கு நாணம்
4. கண்ணாலே கண்டாலும் மண்ணாலே மறைக்கவேண்டும்
5. வின்னேறு தப்பினாலும்
   கண்ணேறு தப்பாது (நம்பிக்கை)

காது

1. காதும் காதும் வைத்தாற்போல இருக்க வேண்டும்
2. வெறும் காதுகளுக்கு ஓலைக்காது மேல்

3. காதுக்கு இட்டால் முகத்துக்கு அழகு
4. சுவருக்கும் காதுகள் உண்டு

வாய்

1. வாயுள்ள பிள்ளை பிழைக்கும்
2. பூமலர்ந்து கெட்டது
   வாய் பிரிந்து கெட்டது
3. தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது
4. பெருமையும் சிறுமையும் வாயால் ஆறும்
5. வாய் கரும்பு, கை இரும்பு
6. உலை வாயை மூடலாம்
   ஊர் வாயை மூட முடியுமா?
7. கூனி வாயால் கெட்டதுபோல
8. வாயிருந்தால் மகளே வாழ்ந்து வருவாய்

நாக்கு

1. நா அசைய நாடு அசையும்
2. நாவால் பிறக்கும் நன்மையும் தீமையும்
3. எலும்பில்லா நாக்கு எல்லாப் பக்கமும் பேசும்
4. நல்லாரை பொல்லாரை நாவினால் அறியலாம்
5. நாவை அடக்கியாளாவிட்டால்
   அது தன்னையே ஆளும் (எச்சரிக்கை)
6. உடல் ஒருவனுக்குப் பிறந்தது
   நாக்கு பலருக்குப் பிறந்தது
7. நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பதியும்

மூக்கு

1. மூக்கு உள்ள மட்டும் சளி உண்டு (வாழ்க்கைத் தத்துவம்)
2. மூக்கைப் பிடித்தால் சிவன் போகிறது
3. மூக்கரையானுக்கு வாழ்க்கைப்பட்டால்
   முன்னும் போகான் பின்னும் போகான்

கழுத்து

1. மூன்று முடிச்சு கழுத்தில் விழட்டும்
   முப்பது இலை குப்பையில் விழட்டும் (திருமணம்)

முகம்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

முதுகு

1. தன் முதுகு தனக்குத் தெரியாது

குடல்

1. குருவுக்குத் துரோகம் செய்தாலும்
குடலுக்குத் துரோகம் செய்யாதே

முலை

1. கறந்த பால் முலை ஏறுமா?
2. குடிக்கிற முலையும் சரி
பிடிக்கிற முலையும் சரியா?
3. முலை சரிந்தால் வயிறு தாங்கும்
4. தாய் முலை குடித்து தாகம் தணிய வேண்டும்

இடுப்பு

1. இடுப்புக்கு மேலே அந்தரங்கம் இல்லை

கை

1. முன் கை நீண்டால் முழங்கை நீளும்
2. கை காய்த்தால் கமுகு காய்க்கும்
3. கை பட்டால் தான் கண்ணாடி
4. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
5. கையை ஊன்றித்தான் கரணம் போடவேண்டும்
6. கையிலே உண்டானால் காத்திருப்போர் ஆயிரம்பேர்

கால்

1. காலில் பட்டது கையிலும் படும் மூக்கிலும் படும்
2. காலுக்குத் தக்க செருப்பும்
கூலிக்குத் தக்க வேலையும்
3. முன் வைத்த காலைப் பின் வைக்காதே
4. காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது
5. ஒடிப் பழக்கமுள்ள கால் ஒடுங்காது

விரல்

1. விரலுக்குத் தகுந்த வீக்கம்

உடல்நலம்

உயிர் வாழ்வதற்கு உடல் இன்றியமையாதது. நோயற்ற வாழ்வே இன்பமான வாழ்க்கைக்கு முதற்படியாகும். தனி மனிதத் தூய்மை, பொது இடத்தூய்மை, நோய் தீர்க்கும் எளிய வழிமுறைகள் உடல் நலத்தைச் சார்ந்ததாகும். உடல் நலத்தைப் பேண சத்தான உணவுடன் உடற்பயிற்சியும் தேவை. மனித நல்வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் வாழ்க்கையை இயல்பாக அனுபவிக்கவும் உடல்நலம் இன்றியமையாதது. நமது முன்னோர்கள் இதையும் சிந்தித்துள்ளனர் என்பதைப் பழமொழி மூலம் அறிகிறோம்.

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2. சுத்தம் சோறுபோடும்
3. நொறுங்கத் தின்றால் நூறு வயது
4. கூழானாலும் குளித்துக்குடி
   கந்தையானாலும் கசக்கிக்கட்டு
5. சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுதவேண்டும்

இறப்பு

மனித வாழ்வில் இறப்பு தவிர்க்க முடியாததொன்றாகும். பிறப்பும் இறப்பும் மனித வாழ்வில் இன்றியமையாத நிகழ்வுகளாகும். மனித இன வரலாற்றில் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு மிக முக்கிய சடங்குகளாகும். இவற்றையொட்டி சமூகத்தில் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் எழுந்துள்ளன. முன்னைய மூன்றையும் வாழ்வியல் சடங்குகள் என்றும் இதனை ஈமச் சடங்குகள் என்றும் பகுத்தாராய்வர். இவற்றின் மூலம் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை நன்கறிந்து கொள்ளலாம். தொகுக்கப்பட்ட பழமொழிகளில் சாவு பற்றிய பொதுவான எண்ணங்கள் (தத்துவம்) வழக்கம், நம்பிக்கை முதலியவற்றைக் காணலாம்.

சாவு தொடர்பான பொதுவான எண்ணம் (தத்துவம்)

1. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
2. ஆறிலே செத்தால் அறியா வயசு
   நூறிலே செத்தால் நொந்த வயசு
3. தாயிலே கெட்டவளுமில்லை
   சாவிலே நல்லதுமில்லை
4. சாகிற வரையில் வைத்தியன் விடான்
   செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
5. சுடுகாட்டுத் தத்துவம் வீடுவரை வராது
6. செத்த பிணத்திற்கருகே
   நாளை சாகும் பிணம் அழுகிறது
7. சுடுகாடு போன பிணம் திரும்பாது
8. பிறந்தவன் இறப்பது உறுதி
9. தாய் செத்தபிறகு தகப்பன் சிற்றப்பன்
10. ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
    மாண்டார் மீளார்
11. சாகிறவன் சனியனுக்குப் பயப்படுவானா?

பழக்க வழக்கம்

1. சொல்லிப் போகவேணும் சுகத்துக்கு
   சொல்லாமல் போகவேணும் துக்கத்துக்கு
2. வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளக்கூடாது
3. பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை

தெய்வமாதல்

1. செத்துத் தெய்வமாக நிற்கிறான்
2. இறந்தவன் இருப்பவனுக்கு வழிகாட்டி

நாள்

1. ஏகாதசி மரணம், துவாதசி தகனம்

நம்பிக்கை

ஒருவன் பிறக்கும்போதே இவ்வளவு காலம்தான் உலகில் வாழ்வான் என்றும் அந்தக் காலம் முடிந்ததும் எமன் உயிரைப்

பிடித்துச் செல்வான் என மக்கள் நம்புகிற நம்பிக்கையைப் பழமொழிகளில் காணலாம்.

1. எமன் ஒருவனைக் கொல்லும்
   ஏற்றம் மூவரைக் கொல்லும்
2. எமன் வாயிலிருந்து மீள்வதுபோல
3. நமன் அறியாத உயிரும்
   நாரை அறியாத குளமும் உண்டா?
4. சனிப்பிணம் துணை தேடும்

ஊரும் பேரும்

மனித இனம் ஓரிடத்தில் நிலையாக தங்க முற்பட்டபோது அவ்விடத்தைக் குறிக்க, மற்றவர்களுக்குக் கூற பெயர் இன்றியமையாததாயிற்று. அதுவே ஊர்ப் பெயரின் தோற்றமாயிற்று. தொல்காப்பியர்கூட நிலப்பெயர் பற்றி குறிப்பிடுகிறார். ஊர்ப்பெயர்களைப் பொதுக்கூறு, சிறப்புக்கூறு என வகைப்படுத்தி ஆராய்வதுண்டு. ஆதிகால மக்கள் இடப்பெயர்களை இட வரலாற்றின் காலப்பெட்டகம் (time capsulc of local history) என்பர். ஊர்ப்பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்றன. ஒரு நாட்டின் பழங்கால வாழ்வையும் வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்று பெயராய்வும் துணை செய்யும். மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பல பெயர் இருப்பினும் 'ஊர்' என்ற பெயர் அனைத்தையும் சுட்டும் நிலையில் உள்ளது. ஊர்ப்பெயர் வரலாறு, தொல்பொருளாய்வு, பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழியியல் முதலிய துறைகளோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாக அல்லது பின்னொட்டாக (Suffix) அமைந்திருக்கும் கூறு பொதுக்கூறாகும் (generics). இக்கூறுகள் தான் முதலில் ஊர்ப்பெயராக அமைந்திருக்க வேண்டும். காலப்போக்கில் ஒரே பெயரில் பல ஊர்கள் தோன்றும்போது அவற்றை வேறுபடுத்த சிறப்புக்கூறுகள் (Specifics) தோன்றலாயின. சிறப்புக் கூறினை முன்னொட்டு (Prefix) எனலாம். ஊரின் முன்னொட்டாக அமைந்து ஒரு குறிப்பிட்ட ஊரை இனங்கண்டு கொள்ள உதவுகிறது

பழமொழிகளில் காணப்படும் ஊர்ப்பெயர்களைப் பகுத்து ஆராய்வோம். பழமொழிகளில் காணப்படும் ஊர்ப்பெயர்களில் பெரும்பாலனவை புண்ணிய ஸ்தலங்களாகும்.

புண்ணியஸ்தலங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி காலம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி பக்திப் பயிரைச் செழிக்க வைத்தனர். கோயிலைப் பற்றியும் கோயிலில் உறையும் இறைவனைப் பற்றியும் அவன் உறையும் ஊர் பற்றியும் எழுதப்பெற்றன. தமிழ் நாட்டில் புண்ணியஸ்தலங்கள் தோன்றின. தல புராணங்கள் எழுந்தன. ஊரும் பேரும் புகழ்பெற தலபுராணங்கள் அடிப்படையாக அமைந்தன. புண்ணிய ஸ்தலங்களின் பெருமைகூறும் பழமொழிகள் தான் அதிகம் காணப்படுகின்றன.

1. ஆரூரில் பிறக்க முக்தி
   தில்லையில் தரிசிக்க முக்தி
   காசியில் இறக்க முக்தி
   அண்ணாமலை நினைக்க முக்தி
2. காசி போயும் கருமம் தொலையவில்லை
   காசி விசுவநாதன் கருணை வேண்டும்
3. காசிக்குப் போனாலும் தன்பாவம் தன்னோடே
4. காசி முதல் இராமேசுவரம் தெரிந்தவன்
5. காசியில் கங்கா ஸ்நானம் பண்ணினால் மட்டும்
   பண்ணின பாவம் தொலையுமா?
6. காசி போனால் ஏதாவது ஒன்றை
   விட வேண்டாமா?
7. இராமேஸ்வரம் போயும் செய்த பாவம் தொலையவில்லை
8. குருவிக்கேற்ற இராமேஸ்வரம்
9. ஏழைக்கேற்ற இராமேஸ்வரம்
10. இராமேஸ்வரம் போகையிலே
    பாம்பன் குறுக்கிட்டாப் போலே
11. சிதம்பரம் ரகசியம் போல
12. சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத்
    திருவாசகம் சொல்லித்தர வேண்டுமா?

13. சைவர்க்கு அண்ணாமலை
வைணவர்க்குத் திருவரங்கம்
14. திருவண்ணாமலையில் பிறந்த பிள்ளைக்குத்
திருவெம்பாவை சொல்லித் தரவேண்டுமா?
15. திருப்பதி நடையழகு, குடையழகு, வடையழகு
16. திருப்பதியில் தாதனைத் தேடிய கதை
17. திருப்பதியில் எத்தனை மொட்டை?
18. திருப்பதி அம்பட்டன் கதை
19. திருப்பதி போயும் பரதேசி காலில் விழுந்தானாம்
20. காஞ்சிபுரம் குடையழகு
21. காஞ்சிபுரம் குடை
திருப்பதி வடை
ஸ்ரீரங்கத்து நடை
22. காஞ்சி காமாட்சி
மதுரை மீனாட்சி
காசி விசாலாட்சி
23. திருவாரூர் தேர் அழகு
24. திருவாரூர் தெரு அழகு
25. திருவாரூர் தேர் அசைகிற மாதிரி அசைகிறான்
26. ஸ்ரீரங்கம் நடை
பெருமாள் குடை
திருப்பதி வடை
திருநாராணபுரம் முடியழகு
27. மன்னார்குடி மதில் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
28. கங்கைக்கு நிகரான நதியுமில்லை
காசிக்கு நிகரான பதியுமில்லை
29. சிக்கலில் வேல்வாங்கிச் செந்தூரில் சங்காரம்
30. திருத்தணி முருகன் வழித்துணை வருவான்
31. திருவாரூர்த் தேர் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
மன்னார்குடி மதில் அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
கும்பகோணம் கோயில் அழகு

32. தில்லை மூவாயிரம் செந்தில் ஆறாயிரம்
33. விருத்தாசலம் போனால் திரண்ட பாவம் தொலையும்

வரலாறு

1. சீதை பிறக்க இலங்கை அழிந்தது
2. செஞ்சி அழிய சென்னை வளர்ந்தது

வாணிபம்

1. கொச்சியில் மிளகு குறுணி இரண்டு ரூபாய்க்கு
   விற்று என்ன லாபம்?
2. ஈழத்தில் தேங்காய் காசுக்கு இரண்டு என்று
   வாங்கப்போன கதை
3. திருப்பதி போனாலும் துடைப்பம் மூன்று காசுதான்
4. அவல் பெருத்தது ஆர்க்காடு
5. திண்டுக்கல் உப்பு இரண்டுக்கு ஒன்று
6. வெல்லம் பெருத்தது வேலூர்

ஏரி, குளம்

1. கடல் பாதி கடம்பங்குளம் பாதி
2. மாடக்குளம் உடைந்தால் மதுரை அழியும்

உபசாரம்

பழமொழிகளில் உபசார மரபு எள்ளல் பொருளில் காணப்படுகின்றது.

1. காஞ்சிபுரத்து உபசாரம்
2. திருநெல்வேலி உபசாரம்
3. திருத்துறைப்பூண்டி உபசாரம்
4. நாகூர் உபசாரமாய் உள்ளது
5. தென்காசி ஆசாரம்
   திருநெல்வேலி உபசாரம்

வேலை

1. காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிக்கொண்டு சாப்பிடலாம்

பெண் கொடுக்க மறுக்கும் ஊர்கள்

1. மயிலாடுதுறையில் பெண் எடுக்காதே
   மன்னார்குடியில் பெண் கொடுக்காதே
2. செக்குக்கு மாடு கொடுத்தாலும்
   சீவலப்பேரிக்குப் பெண் கொடுக்காதே

சிறப்பு

1. ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது

பொது

1. மதுரை ஆட்சியா? சிதம்பரம் ஆட்சியா?
2. அய்யம்பேட்டை சமாச்சாரம் பண்ணாதே
3. தில்லைப் பெண் எல்லை தாண்டாள்
4. தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும் ஒன்று சேர்ந்தாற் போல
5. விருதுபட்டி சனியனை விலைக்கு வாங்கிய கதைபோல
6. வேதாரண்யத்தில் பாம்பு கடிக்காதாம்
7. எட்டூரு தீய்ந்தாலும் நெட்டூரு தீயாது
8. குற்றாலத்து குரங்கே கொம்பை விட்டு இறங்கு
9. பாபநாச மீனாகப் பிறந்தால் பாவமெல்லாம் போகும்
10. பத்தமடைப் பாய்க்குப் பழுதா சொல்வார்கள்
11. நாங்குனேரி எண்ணெய்க்கிணறு போல
12. இதென்ன தென்காசி வழக்கா?
13. தூத்துக்குடி சந்தையிலே துட்டுக்கொரு வைப்பாட்டி
14. ஆளிலும் ஆள் அம்மாப்பேட்டை ஆள்
15. கழுதையாய்ப் பிறந்தாலும் காஞ்சிபுரத்திலே பிறக்கவேணும்
16. நெல்லூர் மாடுபோல இருக்கிறான்
17. மேலட்டூர் மீனுக்கு திருவாரூர் திப்பிசம்
18. பெய்து விளைகிறது மலையாளச்சீமை
    பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர்ச்சீமை
    காய்ந்து விளைகிறது இராமநாதபுரம் சீமை

கிழமையும் திங்களும்

கிழமையையும் திங்களையும் ஒட்டி பல பழமொழிகள் எழுந்துள்ளன. திங்களும் கிழமையும் மக்களது வாழ்வோடு

வாழ்வாகப் பின்னிப் பிணைந்தவை. ஒவ்வொரு திங்களைப் பற்றியும் கிழமைகளைப் பற்றியும் நம் முன்னோர்கள் கொண்டிருந்த எண்ணம், நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், சகுணம், நோன்பு, கோள், சோதிடம் முதலியவற்றைப் பழமொழிகள் உணர்த்துகின்றன.

ஞாயிறு

1. ஞாயிற்றுக்கிழமை பிறந்தால் நாய் படாதபாடு
2. ஞாயிற்றுக்கிழமை நாய்கூட எள்ளு காட்டுக்குப் போகாது
3. ஞாயிற்றுக்கிழமை இறப்புக்கு மறுபிறப்பில்லை
4. ஞானிக்கில்லை ஞாயிறும் திங்களும்

திங்கள்

1. திங்களும் சனியும் தெற்கே நோக்க வேண்டும்
2. ஆனால் ஆதிவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்

செவ்வாய்

1. செவ்வாயோ வெறுவாயோ
2. கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை
3. செவ்வாய் வெள்ளி செலவிடாதே
4. செவ்வாய் நட்டு புதன் அறுக்கலாகாது

புதன்

1. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
2. புதன் கோடி சேர்க்கும்
3. பொன்னோ? புதனோ?

வியாழன்

1. வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது
2. தங்கின வியாழன் தன்னோடு மூன்றுபெயர்
3. ஆடை வியாழன் ஆபரணம் வெள்ளி
4. வியாழப் பார்வை விவாகப் பார்வை
5. வியாழன் கூடினால் விவாகம் கூடும்

வெள்ளி

1. கொள்ளிக்கு எதிர் போனாலும்
   வெள்ளிக்கு எதிர் போகலாகாது
2. வெள்ளிக்கிழமை கொள்ளிக்கு ஆகாது
3. வெள்ளி எண்ணெய் கொள்ளிக்கு ஆகாது
4. வெள்ளி எதிரே போனாலும்
   வேளாளனுக்கு எதிரே போகலாகாது
5. வெள்ளிக்குப் போட்டதும்
   கொள்ளிக்குப் போட்டதும் சரி

சனி

1. சனி நீராடு
2. சனி விரதம் பீடை கழிக்கும்
3. சனிப் பிணம் தனியே போகாது
4. சனிப் பிணம் துணை தேடும்
5. சனியில் பிடித்த மழை சாமான்யமாகப் போகாது
6. சனி கோடி எடுத்தால் இனி கோடி இல்லை

கிழமைகள் மூலம் அறியலாகும் செய்திகள்

1. சோதிடமும் ஜாதகமும்

1. திங்களும் சனியும் தெற்கே நோக்க வேண்டும்
2. ஏழரை நாட்டுச்சனி எங்கு போனாலும் தொடரும்
3. வியாழன் கூடினால் விவாகம் கூடும்
4. சனி வக்ரகம்

2. கிரகப் பலன்

1. பொங்கு சனி செல்வத்தைப் பொங்கச் செய்யும்
2. மங்கு சனி செல்வத்தை மங்கச் செய்யும்

3. துறவு

1. ஞானிக்கில்லை ஞாயிறும் திங்களும்

4. மங்கலம்

1. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
2. வியாழப் பார்வை விவாகப் பார்வை

5. சகுணம்

1. வெள்ளிக்கு எதிரே போனாலும்
வெள்ளாளனுக்கு எதிரே போகக்கூடாது

6. பழக்க வழக்கம்

1. வெள்ளி எண்ணெய் கொள்ளிக்கு ஆகாது

7. நம்பிக்கைகள்

1. ஞாயிற்றுக்கிழமை இறப்புக்கு மறுபிறப்பில்லை
2. ஞாயிற்றுக்கிழமை பிறந்தால் நாய் படாதபாடு
3. புதன் கோடி சேர்க்கும்
4. வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது
5. சனி கோடி எடுத்தால் இனி கோடி இல்லை
6. சனிப் பிணம் தனியே போகாது

பொது

1. நான் செய்வது நல்லோர் செய்ய மாட்டார்
2. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை

பழமொழிகள் குறிப்பிடுவதைத் தவிர ஒவ்வொரு கிழமைக்கும் சில சிறப்புக்களும் உண்டு.

ஆவணி ஞாயிறு	- நோன்புக்குரிய நாள்
கார்த்திகைத் திங்கள்	- முருகனுக்கு உகந்த நாள்
ஆடிச் செவ்வாய் தை செவ்வாய்	- விசேஷமான நாட்கள்
செவ்வாய் நோன்பு	- சிறப்புடையது
வியாழன்	- குருவுக்கு உகந்த நாள்
ஆடிவெள்ளி, தை வெள்ளி	- சிறப்பான நாட்கள்
வெள்ளி	- சுக்கிரனுக்குரிய நாள்
சனி	- சனீஸ்வரனுககுரிய நாள்
புரட்டாசி சனி	- திருமாலுக்குகந்த நாள்

மாதங்கள்

சித்திரை

1. சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்
2. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்
3. சித்திரை அப்பன் தெருவிலே வைக்கும்
4. சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனும் இல்லை
5. சித்திரை மாதம் சீர் கூட்டும்
6. சித்திரை பெய்தால் பொன்னேர் கட்டலாம்
7. சித்திரை மின்னல் ஆகாது

வைகாசி

1. வைகாசி மழை வாழை பெருகும்
2. வைகாசி மாதத்தில் ஆற்றில் தண்ணீர்
3. வைகாசி மாதம் வாய்மடையில் ஏர் பூட்டப் பொய்யாமல் பூக்கும் புளி

ஆனி

1. ஆனி அடியிடாதே கூனி குடிபுகாதே
2. ஆனி ஆறாந்தேதி இடி இடித்தால்
   அறுபது நாளைக்கு மழையில்லை
3. ஆனி அடைச்சாரல் ஆவணி முச்சாரல்

ஆடி

1. ஆடிப்பட்டம் தேடி விதை
2. ஆடி விதை தேடிப்போடு
3. ஆடிப் பருத்தி தேடி விதை
4. ஆடி வாழை தேடி எடு
5. ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்துபோகும்
6. ஆடிக்காற்றிலே இலவம்பஞ்சு பறந்தாற்போல
7. ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
   அடுத்த அமாவாசை வரை மழையில்லை
8. ஆடி ஞாயிறு ஐந்தானால்
   அரிசி விற்றவிலை நெல் விற்கும்
9. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்

10. ஆடிக்காற்றில் உதிரும் சருகுபோல
11. ஆடிக்கு அழையாத மாமியாரைத்
    தேடிப்பிடித்து செருப்பால் அடி
12. ஆடி மழையில் ஆயிரம் காளான்கள்
13. ஆடி பதினெட்டில் விதைத்த விதையும்
    அறுநான்கில் பிறந்த பிள்ளையும்
    தேடாமல் தேடிய தனம்

ஆவணி

1. ஆவணி மாதம் அழுகைத் தூற்றல்
2. ஆவணி ஆறில் இடி இடித்தால் நல்ல மழை

புரட்டாசி

1. புரட்டாசி நடுகை திரட்சியான படுகை
2. புரட்டாசி மாத நடவு பெரியோர் தேடிய தனம்
3. புரட்டாசி பெய்தாலும் பெய்யும்
   காய்ந்தாலும் காயும்
4. புரட்டாசி பெய்து பிறக்கணும்
   ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
5. பொன்னுருகக் காயும்
   மண்ணுருகப் பெய்யும் புண்ணியப் புரட்டாசி

ஐப்பசி

1. ஐப்பசி மாதம் அடைமழை
   கார்த்திகை மாதம் கனமழை
2. ஐப்பசி மாதம் நடலாகாது
3. ஐப்பசி மாதத்தில் நெல் விதைத்தால் அவலுக்கும்
   ஆகாது

கார்த்திகை

1. கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை
   கர்ணனுக்கு மிஞ்சிய கொடையுமில்லை
2. கார்த்திகை பிறை கண்டவன் போல
3. கார்த்திகை மாதத்துப் பூமாதேவி போல

4. கார்த்திகை கால்கோடை
5. காயுங்கனி உண்டானால்
   கார்த்திகை மாதம் கல்யாணம்
6. கார்த்திகை மாதம் கனமழை
7. கார்த்திகை மாதத்து மழையில்
   கல்லுக்குள் உள்ள புல்லும் கதிராகும்
8. அசுவனி கார்த்திகையில் இடிஇடித்தால்
   ஆறு கார்த்திகையில் மழையில்லை
9. கார்த்திகை மாதத்தில் கால்கொள்ளு விதைத்தாலும்
   மேல்கொள்ளு முதலாகாது
10. கார்த்திகை மாதத்தில் கலக்கொள்ளு விதைத்தாலும்
   விதைக் கொள்ளுகூட காணாது

மார்கழி

1. மார்கழி மழை மண்ணுக்கு உதவாது
2. மார்கழி பிறந்தால் மழையில்லை
   பாரதம் முடிந்தால் படையில்லை

தை

1. தை பிறந்தால் வழி பிறக்கும்
2. தை மழை நெய் மழை
3. தை மாதம் தரையும் குளிரும்
4. தைப் பனி தரையைத் துளைக்கும்
5. தை பிறந்து தரை வறண்டது
6. தை வாழை தரையில் போடு
7. தை பிறந்தால் தலைக்கோடை
8. தையும் மாசியும் வையகத்துறங்கு

மாசி

1. மாசி மழை மாதுளைப் பூக்கும்
2. மாசி மின்னல் மரம் தழைக்கும்
3. மாசிப் பனி மச்சையும் துளைக்கும்

பங்குனி

1. பங்குனி மழை பத்துக்கும் நட்டம்
2. பங்குனி மாதம் மந்தலைத் தேடு
3. பங்குனி மாதம் பகல்வழி நடப்பவன் கொடும்பாவி
4. சித்திரை என்று சிறப்பதுவுமில்லை
   பங்குனி என்று பருப்பதுவுமில்லை

இரு திங்கள்

1. ஆனி அரை ஆறு
   ஆவணி முழு ஆறு
2. ஆடிக்கொரு விதை போட்டால்
   கார்த்திகைக்கு ஒரு காய் காய்க்கும்
3. ஆவணி தலை வெள்ளமும்
   ஐப்பசி கடை வெள்ளமும் கெடுதி
4. புரட்டாசி பெய்து பிறக்கணும்
   ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
5. அரிசி பருப்பும் இருந்தால் ஐப்பசி கல்யாணம்
   காய்கறி இருந்தால் கார்த்திகை கல்யாணம்

முத்திங்கள்

1. ஆடி முதல் பத்து
   ஆவணி நடுப்பத்து
   புரட்டாசி கடைப்பத்து
2. தை எள்ளு தரையில்
   மாசி எள்ளு மடியில்
   வைகாசி எள்ளு வாயில்

மாதங்கள் பற்றிய பழமொழிகள் மூலம் அறியலாகும் செய்திகள்

வேளாண்மை

வேளாண்மைக்குரிய காலம், விதை முதலியவற்றை மிக நுட்பமாகக் கண்டுணர்ந்ததை அந்தந்த மாதங்களுடன் இணைத்து பழமொழியாக்கியுள்ள திறன் பாராட்டுக் குரியதாகும். முன்னோர்களின் வேளாண் நுட்பம் தெளிவாகப் புலனாகின்றது.

1. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்
2. சித்திரை மழை பெய்தால் பொன்னேர் கட்டலாம்
3. வைகாசி மழை வாழை பெருகும்
4. வைகாசி மாத வாய்மடையில் ஏர்பூட்டப்
பொய்யாமல் பூக்கும் பூமி
5. ஆடிப்பட்டம் தேடி விதை
6. ஆடி விதை தேடிப்போடு
7. ஆடிப் பருத்தி தேடி விதை
8. ஆடி வாழை தேடி எடு
9. ஆடி பதினெட்டில் விதைத்த விதையும்
அறுநான்கில் பிறந்த பிள்ளையும்
தேடாமல் தேடிய தனம்
10. புரட்டாசி நடுகை திரட்சியான படுகை
11. புரட்டாசி மாத நடவு பெரியோர் தேடிய தனம்
12. தை வாழை தரையில் போடு
13. ஆடி மாதம் அவரை போட்டால்
கார்த்திகை மாதம் காய் காய்க்கும்
14. புரட்டாசி விதையாகாது
ஐப்பசி நடவாகாது
15. மாசிப் பங்குனியில் கரும்பரு
16. தை எள்ளு தரையில்
மாசி எள்ளு மடியில்
வைகாசி எள்ளு வாயில்

மின்னல் தொடர்புடைய மாதங்கள்

1. சித்திரை மின்னல் ஆகாது
2. மாசி மின்னல் மரம் தழைக்கும்

காற்று தொடர்புடைய மாதங்கள்

1. ஆடிக்காற்றிலே இலவம்பஞ்சு பறந்தாற்போல
2. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
3. ஆடிக்காற்றில் உதிரும் சருகுபோல

மழை தொடர்புடைய மாதங்கள்

1. வைகாசி மழை வாழை பெருகும்
2. ஆனி ஆறாந்தேதி இடி இடித்தால்
அறுபது நாளைக்கு மழையில்லை
3. ஆனி அடைச்சாரல் ஆவணி முச்சாரல்
4. ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்துபோகும்
5. ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
அடுத்த அமாவாசை வரை மழையில்லை
6. ஆடி மழையில் ஆயிரம் காளான்கள்
7. ஆவணி மாதம் அழுகைத் தூற்றல்
8. ஆவணி ஆறில் இடித்தால் நல்ல மழை
9. புரட்டாசி பெய்தாலும் பெய்யும்
காய்ந்தாலும் காயும்
10. புரட்டாசி பெய்து பிறக்கணும்
ஐப்பசி காய்ந்து பிறக்கணும்
11. ஐப்பசி மாதம் அடைமழை
கார்த்திகை மாதம் கனமழை
12. கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை
கர்ணனுக்கு மிஞ்சிய கொடையுமில்லை
13. கார்த்திகை மாதத்து மழையில்
கல்லுக்குள் உள்ள புல்லும் கதிராகும்
14. அசுவனி கார்த்திகையில் இடிஇடித்தால்
ஆறு கார்த்திகையில் மழையில்லை
15. மார்கழி மழை மண்ணுக்கு உதவாது
16. மார்கழி பிறந்தால் மழையில்லை
பாரதம் முடிந்தால் படையில்லை
17. தை மழை நெய் மழை
18. மாசி மழை மாதுளை பூக்கும்
19. பங்குனி மழை பத்துக்கும் நஷ்டம்

கல்யாணம்

1. காயுங்கனி உண்டானால்
கார்த்திகை மாதம் கல்யாணம்
2. அரிசி பருப்பும் இருந்தால் ஐப்பசி கல்யாணம்
காய்கறி இருந்தால் கார்த்திகை கல்யாணம்

பழக்க வழக்கம் (ஆடிக்கு அழைத்தல்)

1. ஆடிக்கு அழையாத மாமியாரைத்
   தேடிப்பிடித்து செருப்பால் அடி

நம்பிக்கைகள்

1. சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும்
   சிறப்பும் கெடும்
2. ஆனி அடியிடாதே கூவி குடிபுகாதே
3. சனிப் பிணம் தனியே போகாது
4. ஆடி ஞாயிறு ஐந்தானால்
   அரிசி விற்றவிலை நெல் விற்கும்
5. ஆடி பதினெட்டில் விதைத்த விதையும்
   அறுநான்கில் பிறந்த பிள்ளையும்
   தேடாமல் தேடிய தனம்

பழமொழிகளில் மாதங்களைப் பற்றியும், மாதங்களைப் பற்றிய செய்திகளை அறிந்தோம். பொதுவாக மாதங்களுக்கும் திருவிழாக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

சித்திரை வருடப்பிறப்பு
சித்திரா பௌர்ணமி
வைகாசி விசாகம்
ஆனி திருமஞ்சனம்
ஆடிப் பெருக்கு
ஆடி அமாவாசை
ஆவணி அவிட்டம்
ஆவணி மூலம்
புரட்டாசி சனி
கார்த்திகை தீபம்
மார்கழி நோன்பு
தைப் பொங்கல்
தை அமாவாசை
தைப் பூசம்
மாசி மகம்
பங்குனி உத்திரம்

நாட்டுப்புற மருத்துவம்

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ முறையைக் கொண்டுள்ளது. மனித இனம் தோன்றிய நாள்தொட்டே நோயும் அதற்குரிய மருத்துவ முறையைக் கண்டறிய ஆரம்பித்தான். நோயும் மருந்தும் மனித இன வரலாற்றில் பிரிக்க முடியாததொன்றாகும். நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பர். இதனை, Folk medicine, Ethno medicine, Popular medicine, Popular health culture, Ethnomoitary எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை வைத்தியம் என்றெல்லாம் கூறுவர். நாட்டுப்புற மருத்துவம் அதர்வன வேத காலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளது. இன்றும் கிராமப்புறங்களில் இம்மருத்துவமுறை நடைமுறையில் உள்ளது. மரியட் (Marrilot) அவர்கள் மருத்துவ நம்பிக்கைகொண்ட கிராமப்புற மக்கள் நாட்டுப்புற மருத்துவத்தைக் கையாளுகின்றனர் என்கிறார். மனித இன வரலாற்றை கூர்ந்து நோக்கின் நோய்கள் ஏற்படச் சில காரணங்கள் உண்டு எனத் தொல்பழங்கால மனிதன் எண்ணினான். நோயினைத் தீர்ப்பதற்காக வைத்தியனை நாடுவதைவிட பூசாரியையும், மந்திரவாதியையும் நம்பினர். மந்திர சமயச் சடங்குகளில் மந்திரித்தல், பேயோட்டுதல் முதலியவற்றைத் தூய மந்திரமாகவும், செய்வினை செய்தலைத் தீய மந்திரமாகவும் கருதினர். மக்களது நோயினைத் தீர்ப்பதற்கு மதமந்திரத்தைத் தழுவி நிற்பதனை மந்திர சமய மருத்துவம் (Magico religious medicine) என்பர். முறையற்ற உணவாலும் (Improper food) முறையற்ற சீதோஷ்ண நிலையாலும் இரத்தம் கெடுதலாலும் (impurity of blood) நீர்த்தோய்வினாலும் (dampness of locality) மிதமிஞ்சிய உடலுறவினாலும் (indulgence in sex) நோய்கள் உண்டாகின்றன என மக்கள் நம்பினர். ஒரு காலத்தில் நோய்களுக்கான காரணமாகத் தெய்வசினம், தீய ஆவிகளின் செயல், தீய பார்வை முதலியவற்றைக் காரணமாக நம்பினர். எனவேதான் டான்யோடர் (Don Yoder) நாட்டுப்புற மருத்துவத்தை

1. இயற்கை மருத்துவம் (Natural Folk Medicine)
2. மந்திர சமய மருத்துவம் (Magico-religious Medicine)

என இரண்டாக வகைப்படுத்துகிறார். மூலிகை, தாது போன்ற பொருட்கள் மருந்துகள் முதலியவற்றை நாட்டுப்புற இயற்கை மருத்துவம் என்பர்.

சங்கம் மருவிய நூல்களான திரிகடுகம், ஏலாதி, ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம் முதலியவற்றில் மருத்துவக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக மனித இனம் பலவித சோதனைகள் செய்து, கண்டுணர்ந்த மருத்துவ முறைகள் நாட்டுப்புற இலக்கியங்களிலும் எழுத்திலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. மனித இனம் தோன்றிய நாளிலிருந்து உலகத்தின் அனைத்துப் பகுதியிலும் நாட்டுப்புற மருத்துவமுறை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறங்களில் இன்றும் நாட்டுப்புற மருத்துவத்தைக் கையாளுகின்றனர். இன்றும் நாவிதப் பெண்கள் பேறுகால மருத்துவத்தில் சிறந்து விளங்குவதை நாட்டுப்புறங்களில் காண்கிறோம். அவர்களை 'மருத்துவச்சி' என்றே அழைக்கின்றனர். சித்த ஆயுர்வேத முறைகளைப் பதினென் சித்தர்கள் செப்பி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிலர் வைத்தியத்தைப் பரம்பரைத் தொழிலாக வைத்துள்ளனர். நாட்டுப்புற மருத்துவத்தில் 'பத்தியம்' (diet control) மிகவும் முக்கியமானதாகும். பழமொழிகளில் மருத்துவச் செய்திகள் இலைமறை காயாகப் பொதிந்து கிடக்கின்றன.

1. *மருத்துவக் கோட்பாட்டைக் குறிப்பன*

உணவு? உடல் வளம் பெறவும் நோய்க்குக் காரணமாகவும் சில உணவு நோயைத் தீர்க்கவும் பயன்படுகிறது. உணவு உண்ணும் அடிப்படையில் மனிதனைப் பழமொழி யோகி, போகி, ரோகி எனப் பிரிக்கிறது.

ஒருபோது உண்பான் யோகி
இருபோது உண்பான் போகி
முப்போது உண்பான் ரோகி

உணவே மருந்தாகவும் மருந்தே உணவாகவும் கண்டுணர்ந்தனர் நம் முன்னோர்கள்.

உணவே மருந்து மருந்தே உணவு

2. நோயில்லா நெறியைக் குறிப்பன

உண்ட உணவு செரிக்கவும் பழமொழி வழிவகை கூறுகிறது.

நொறுங்கத் தின்றா நூறு வயது
உண்டபின் ஒரு மைல் நட
என்ன தின்னாலும் பேரீச்சம்பழம் தின்ன
எல்லாம் அடிபடும்

நோயினின்றும் பாதுகாக்க கீழ்க்கண்ட முறையைப் பின்பற்ற வேண்டும் என பழமொழி அறிவுரை கூறுகிறது.

'நாள் இரண்டு' (மலம் நீர் கழிக்க)
'வாரம் இரண்டு' (எண்ணெய் தேய்த்து முழுக)
'திங்கள் இரண்டு' (உடலுறவு கொள்ள)
'ஆண்டுக்கு இரண்டு' (பேதி உணவு கொள்ள)

3. நோயும் மருந்தும்

1. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்
2. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி
3. பேராமுட்டிப் பேரை உரைத்தான்
   காதவழி தூரம் கண் தெரியும்
4. ஆற்றுநீர் வாதம் போக்கும்
   கிணற்றுநீர் பித்தம் போக்கும்
   சோற்றுநீர் இரண்டும் போக்கும்
5. பாலும் தழையும் சேராத மருந்தும்
   பாகும் நெய்யும் சேராத லேகியமும் வீண்
6. தூதுளை ஆயுளை விருத்தி செய்யும்
7. தன் காயம் காக்க வெங்காயம் வேண்டும்
8. பீதரோகிணி பேரையுரைத்திடில் காதவழி கண்தெரியும்

9. பேராமுட்டிப் பேரையுரைத்திடில் ஊரைவிட்டு ஓடுஞ் சுரம்
10. மாதுளை தூதுளை வளர்ந்த வீடு
வயிற்றிலே நெஞ்சிலே களங்கமில்லை
11. கடலோர வேருக்குச் சாரமில்லை
12. கொடிமுள்ளி நாலும் கபத்தை அறுக்கும்
13. நன்னாரி மேனியைப் பொன்னாக்கும்
14. மூலிகை அறிந்தால் மூவுலகும் ஆளலாம்
15. கட்டியைக் கீறி ஆற்ற வேண்டும்
16. விடாச்சுரத்துக்கு விஷ்ணுகரந்தை
17. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்கவேண்டும்
18. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்
ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்
19. வில்வம் பித்தம் தீர்க்கும்
20. வேப்பெண்ணெய் மருந்தெண்ணெய்
21. லங்கணம் பரம ஔஷதம்
22. கக்கின பிள்ளை தக்கும்
23. காலை இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலை கடுக்காய்
24. நோய் கொண்டார் பேய் கொண்டார்
25. ஏழைக்குக் கரிசாலை
26. இளைத்தவனுக்கு இரும்பைக் கொடு
27. கோழையை அறுக்கும் குப்பைமேனி
28. உயர் வாந்தி தீர நீருடன் கடுகு அரைத்திடு
29. வியாதிக்கு மருந்துண்டு
விதிக்கு மருந்துண்டா?
30. கறந்த பாலை காய்ச்சாமல் குடித்தால்
காசநோய் தானே வரும்
31. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்
இஞ்சி சுரம் போக்கும்
32. மூடி வைத்த புண் ஆறாது
33. சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை
சுப்பிரமணியருக்கு மிஞ்சிய சாமியும் இல்லை
34. ஆறின புண்ணிலும் அசடு நிற்கும்
35. ஆவிரை இலையும் ஆபத்துக்கு உதவும்
36. காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்துவிட்டால் நம்பக்கூடாது

37. அரவந் தீண்டினால் அமுருஞ்சி வேர்ப்பட்டை இடு
38. அரிப்புக்கு மூத்திரம் கைகண்ட ஔடதம்
39. அருஞ்சுனை நீர் உண்டால் அப்போதே ரோகம்
40. அனைத்து வியாதிக்கும் அருகம்புல் சாறு
41. ஆசன வெடிப்புக்குத் துத்திக்கீரை
42. ஆரம்ப க்ஷயத்திற்கு ஆகாசத் தாமரை கஷாயம்
43. இடுப்பு வலிக்குக் கண்டந் திப்பிலி லேகியம்
44. இருதய வியாதிக்கு வெண்தாமரைக் கஷாயம்
45. இளநீர் நீர்க்கடுப்புக்கு நல்லது
46. எந்த வீக்கத்திற்கும் எருக்கண்பாலை அடி
47. கடுப்பு வாதத்திற்கு வேம்புக் கஷாயம்
48. துளசி இலைச்சாறு கபத்தைப் போக்கும்
49. கழிச்சலைப் போக்க மாதுளம் பிஞ்சு
50. காமாலை சோகைக்குக் கையான் சாறேற்று
51. கீரைப் பூச்சிக்கு இருமா முருங்கைச்சாறு
52. கோழையை அகற்ற சித்தரத்தை
53. சீரகம் திண்ண சீரணமாகும்
54. சீரான மாதவிடாய்க்கு வெந்தயக்கீரை
55. நோயைக் கட்ட வாயைக்கட்டு
56. நரம்புத் தளர்ச்சியைப் போக்க மணத்தக்காளி கீரை
57. பாம்புக் கடிக்கு வாழைப்பட்டைச்சாறு
58. முடக்கு வாதத்திற்கு முடக்கத்தான்
59. வயிற்று இரணத்திற்கு வாழைப்பிஞ்சு
60. வாத நோய்க்குப் புளிச்ச கீரை
61. விரை வாதத்திற்கு வெந்தயக் கஷாயம்
62. இறங்கு பொழுதில் மருந்துகுடி
63. புழக்கடைப் பச்சிலை மருந்துக்கு உதவாது
64. நரம்புச் சிலந்திக்கு மல்லிகைப்பூ
65. மஞ்சள் காமாலைக்கு வேளைச் சாற்றைக் கண்ணில் பிழி
66. பித்தம் தணிய இலந்தைப்பழம் உண்ணு
67. சன்னிக்குக் கஸ்தூரி
68. மயிர் மாணிக்கம் ஆண்மையுண்டாக்கும்
69. நல்லெண்ணெய் காதில் ஊற்ற போதை நீங்கும்

70. பாதரட்சைத்தோல் பைத்தியம் நீக்கும்
71. வன்னியிலை உண்ண முதுமேகந் தீரும்
72. ஓமம் உண்டால் நோய் அணுகாது
73. வேளையைத் தின்ன பல் பிணிபோம்
74. வெக்கைக்கு வேலி மறைப்பு
75. ஆலுக்குப் பல் இறுகும்
வேலுக்குப் பல் துலங்கும்
76. அரணைக் கடித்தால் அப்போதே மரணம்
77. அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்
78. ஊத அறிந்தவன் வாதி
உப்பை ஒழித்தவன் யோகி
79. இளம்பிள்ளை தாய்ச்சிக்கு எட்டே கடுக்காய்
80. கோரைக் கிழங்கும் வேளையில் உதவும்
81. பேதியில்லை என்றால் சேர்வாளத்தைப் பார்
82. பாலும் தழையும் சேராத தைலம்
பாகும் நெய்யும் சேராத லேகியம்
நாலும் இரண்டும் பாராத கல்வி நன்றாயிராது
83. நாய்க்கடிக்குக் காடியைக் கொடு
84. திரிமலை தின்றால் துவரேறும்
கறிவேம்பு தின்றால் பசியேறும்
85. நாகம் சேராத மருந்தில்லை
காகம் இல்லாத ஊரில்லை
86. படமுள்ளு நாலும் திடவாயு போக்கும்
87. மருந்து கால் மதி முக்கால்
88. வெட்டிவேரில் விசிறியும்
விளமிச்சவேரில் தட்டியும் பண்ணு
89. தூங்கினவன் சாகிறதில்லை
வீங்கினவன் பிழைக்கிறதில்லை
90. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்

4. விலங்கு மருத்துவம்

1. எருது புண்ணிற்குச் சாம்பல் மருந்து
2. எருதுக்கும் தன் புண் அழற்சி
3. கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்து

4. எருதுக்குப் புண்ணாக்கு ஏழைக்குக் கரிசாலை
5. கைக்கோளனுக்குக் கால் புண்ணும்
நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறாது

5. வைத்தியம்

1. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்
2. பாலஜோசியம் விருத்த வைத்தியம்
3. தாது அறியாதவன் பேதை வைத்தியன்
4. வைத்தியன் பாராத நோய் தீருமா?
5. வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதம்
6. வைத்தியன் சொன்னதெல்லாம் மருந்து
7. வைத்தியன் மருந்திலும் கை வைத்தியமே நலம்
8. நாடிப் பார்க்கத் தெரியாத வைத்தியன்
நமனுக்கே சவால் விட்டானாம்
9. வாதி மகன் வைத்தியன்
10. வைத்தியனுக்குத் தன்மருந்து பலிக்காது
11. வைத்தியன் தகப்பன் போன்றவன்
12. வைத்தியனும் கைவிட்டால் ஆண்டவனே கதி
13. வைத்தியன் பெரிதோ, மருந்து பெரிதோ
14. வைத்தியனுக்கும் அஞ்ச வேண்டும்
வம்பனுக்கும் அஞ்ச வேண்டும்

6. மருத்துவம் பொது

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2. நோய்க்கு இடம் கொடேல்
3. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்
4. சனி நீராடு
5. தின்ற மண்ணுக்குத் தக்க சோகை
6. ஊனும் உறக்கமும் ஒத்தார்க்கு ஒத்தபடி
7. விருந்தும் மருந்தும் மூன்றுநாள்
8. விந்து விட்டவன் நொந்து கெட்டான்
9. அண்டத்திற்கு உள்ளது பிண்டத்திற்கு
10. உண்ட பின் ஒரு மைல் நட
11. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

12. மூக்கு உள்ளமட்டும் சளி தான்
13. மனக்கவலை பலக்குறைவு
14. உண்டவுடன் உடலுறவு ஆகாது
15. அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாது
16. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்
17. மனநோய்க்கு மருந்துண்டா?
18. கூழானாலும் குளித்துக்குடி
கந்தையானாலும் கசக்கிக்கட்டு
19. சளி பிடித்ததோ? சனி பிடித்ததோ?
20. இரச வாதிக்கு ஏது பஞ்சம்?
21. உப்பு கட்டினால் உலோகம் கட்டும்
22. உல்லாச நடை மேலுக்குக் கேடு
மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு
23. ஊழிக்காய்ச்சல் அதிகமானால்
சூன்யக்காரன் பாடு கொள்ளை
24. கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்
25. கண்ணில் புண் வந்தால்
கண்ணாடி பார்க்கலாகாது
26. சாப்பிணி மருந்தேற்காது
27. சாகிறவரையில் வைத்தியன் விடான்
செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்
28. கார்த்திகை மாதம் கருணைக்கிழங்கு சாப்பிடவேண்டும்
29. சூடலேற்றம் தெரியாமல்
கோடி பணம் செலவழித்தால் தீருமா?
30. நாய்ச்சூல் நாற்பது நாள்
31. நீர்ச்சோறு தின்று நிழலிலிருந்தால்
மலடிக்கும் மசக்கை வரும்
32. உள்ளங்கை புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?

இன்றும் மஞ்சள் காமாலைக்கு நாட்டுப்புற மருத்துவமே சிறந்தது என்கின்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனித இனம் கண்டு அனுபவித்ததைப் பழமொழியாக்கியுள்ளனர். நாட்டுப்புற மருத்துவம் பற்றி அறிவியல் முறையில் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்து முடிந்த முடிபுக்கு வருவது அரசின் கடனாகும்.

இலக்கியமும் இதிகாச புராணங்களும்

மக்கள் வாழ்வில் வழங்கும் இராமாயணம், பாரதம் பற்றி பல பழமொழிகள் தோன்றியுள்ளன. பாரதக் கதையும் இராமாயணக் கதையும் பாமர மக்களும் அறிந்த தொன்றாகும். அக்கதைகளின் திரண்ட கருத்தையும் அக்கதைகளில் காணப்படும் பாத்திரங்களின் இயல்புகளையும் பழமொழியாக்கியுள்ளனர். இதிகாச புராணங்களில் காணப்படும் தன்னேரில்லாத தலைவர்களைப் பற்றியும் பழமொழிகள் எழுந்துள்ளன. மக்கள், பக்தியில் ஈடுபாடு இருப்பதால், பக்தி இலக்கியங்களையும் அறிந்துள்ளனர். திருவாசகம், திருவாய்மொழி பற்றிய பழமொழிகளும் காணப்படுகின்றன. இலக்கியத் தாக்கத்தால் உவமைப் பழமொழிகளும் தோன்றியுள்ளன. பழமொழி தோன்றுவதற்குக் கதைதான் அடிப்படை. பழமொழிக்கே உபகதை என்ற பெயருமுண்டு. எழுத்திலக்கியத் தாக்கத்தையும் பழமொழிகளில் காண்கிறோம். எனவே தான் இலக்கியம் இதிகாசப் புராணங்களைப் பற்றிப் பேசும் பழமொழிகள் தோன்றியுள்ளன.

1. அவ்வை சொல் அமிழ்தம்
2. உலாவுக்கு ஒட்டக்கூத்தர்
3. கல்வியில் பெரியவன் கம்பன்
4. கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே
5. கந்தபுராணத்தில் எல்லாம் உண்டு
6. தமிழுக்கு இருவர் கதி
7. திருவாசகத்திற்கு உருகாதார்
   ஒருவாசகத்திற்கும் உருகார்
8. நைடதம் புலவர்க்கு ஔடதம்
9. பக்திக்குச் சேக்கிழார்
10. பரணிக்குச் செயங்கொண்டார்
11. வெண்பாவிற்குப் புகழேந்தி
12. ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்
13. காரிகை கற்று கவி பாடாதவன்
    பேரிகை கொட்டிப் பிழைப்பதே மேல்
14. படிப்பது திருவாசகம்
    இடிப்பது சிவன்கோவில்

15. படிப்பது திருவாய்மொழி
இடிப்பது பெருமாள்கோவில்
16. புலவர்க்கு வெண்பா புலி
17. சாத்திரத்துக்குத் திருமந்திரம்
தோத்திரத்துக்குத் திருவாசகம்
18. தாரம் வாய்த்தது வள்ளுவருக்கு
தம்பி வாய்த்தது இராமருக்கு
19. கலம்பகத்திற்கு இரட்டையர்
20. குறிஞ்சிக்குக் கபிலர்
21. சதகங்களில் சிறந்தது வைராக்கிய சதகம்
22. சந்தத்திற்கு அருணகிரி
23. விருத்தம் என்னும் ஒன்பாவிற்கு உயர்கம்பன்
24. வில்லுக்கு விசயன்
25. இராமன் இருக்குமிடம் அயோத்தி
26. இராமன் பிறப்பு இராவணன் இறப்பு
27. இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன?
28. சீதை பிறக்க இலங்கை அழிய
29. அனுமாருக்குத் தன்பலம் தெரியாததுபோல
30. கைகேயி கேட்ட வரம்போல
31. கடன்பட்டார் நெஞ்சம்போல
கலங்கினான் இலங்கை வேந்தன்
32. அழகால் கெட்டால் சீதை
வாயால் கெட்டால் திரௌபதி
33. காந்தாரி கண்பட்டால் கல்லும் கரிந்துவிடும்
34. பாரதம் முடிந்தால் படையுமில்லை
35. துரியோதனன் குடிக்குச் சகுணிபோல
36. துரோபதையைத் துகில் உரிந்ததுபோல
37. கார்த்திகைக்கு அப்பால் மழையுமில்லை
கர்ணனுக்கு அப்பால் கொடையுமில்லை
38. அகங்காரத்தால் அழிந்தான் துரியோதனன்
39. அர்ச்சுனன் போல் அகமுடையானும்
அபிமன்யுபோல் பிள்ளையும்
40. அர்ச்சுனனுக்குப் பகை அரக்கு மாளிகை

41. கொடைக்குக் கர்ணன்
படைக்குத் துரியோதனன்
42. கொடைக்குக் குமணன்
சத்தியத்திற்கு அரிச்சந்திரன்
43. சொல்லுக்கு அரிச்சந்திரன்
44. தன்னால்தான் கெட்டான் பத்மாசுரன்
45. அர்ஜுனன் மனைவிமாரையும்
ஆகாசத்து நட்சத்திரங்களையும் எண்ண முடியாது
46. ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும் முடியாது
47. வில்லுக்கு விசயன், சொல்லுக்கு கீரன்
48. நாடு ஆண்டதும் பாண்டவர்
காடு ஆண்டதும் பாண்டவர்

மனிதனின் இயல்புகள்

மனிதனைப் பற்றிய பேருண்மைகள் பழமொழிகளில் பொதிந்து கிடக்கின்றன என்று கிரேக்க நாட்டுப் பழமொழி கூறுவது தமிழ்ப் பழமொழிக்கும் பொருந்தும். நல்லன, கெட்டன பாகுபடுத்திக் கூறுவது பழமொழி என்கிறார் அரிஸ்டாட்டில். மனிதனின் நல்ல குணங்கள், கெட்ட குணங்கள் என பாகுபடுத்தியுள்ளார். அப்பாகுபாட்டைப் பழமொழிகளிலும் காணலாம். மனிதனைப் பற்றி அறிய பழமொழி அறிந்தால் போதும் என்கிறார் எரிக் பிரேம் அவர்கள். அவர் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பதைத் தமிழ்ப் பழமொழிகளும் கூறுகின்றன. மனித சமுதாயத்தில் மனிதனாக வாழாதவர்களும் உண்டு. அவர்களது இயல்புகளையும் பழமொழி சுட்டிக் காட்டத் தவறவில்லை. மனிதனிடம் காணப்படும் அனைத்து இயல்புகளைப் பற்றியும் பழமொழி இருக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட பழமொழிகளின் அடிப்படையில் மனிதனின் குணநலன்கள், சிறப்புக்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளது. பழமொழி காலக் கண்ணாடியாகும். அதன் மூலம் மனிதனைப் பற்றியும் சமுதாய மாற்றங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

அன்பு

1. அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்
2 அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்

3. அன்பே சிவம்
4. அன்பிற்குத் திறக்காத பூட்டே இல்லை எனலாம்
5. அன்பு இருக்குமிடம் அரண்மனை

அடக்கம்

1. அடக்கம் ஆயிரம் பொன் தரும்
2. தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்
3. அடக்கமே பெண்ணுக்கழகு
4. அடக்கமும் அறிவும் ஒன்றாக இருக்கும்
5. நிறைகுடம் தளும்பாது
   குறைகுடம் தளும்பும்

ஒழுக்கம்

1. ஒழுக்கம் உயர் பண்பு
2. அறிவுடன் ஞானம் அன்புடன் ஒழுக்கம்
3. நேர்பட ஒழுகு

கடமை

1. செய்வன திருந்தச் செய்

குணம்

1. குணம் இல்லாக் கல்வி பாழ்
2. குணமில்லாத மங்கையுடன் கூடாதே
3. கோபமுள்ள இடத்திலே குணமிருக்கும்
4. குலத்தளவே ஆகும் குணம்
5. நிலத்திற்குத் தகுந்த கனியும்
   குலத்திற்குத் தகுந்த குணமும்

பொறுமை

1. பூமியைப் போல் பொறுமை வேண்டும்
2. பொறுத்தார் பூமியாள்வார்
3. பொறுமை கடலினும் பெரிது
4. பொறுமை புண்ணியத்திற்கு வேர்
5. பொறுமைதான் வெற்றிக்கு முதல்படி

6. வைவார்க்கு இன்பம் இல்லை
   பொறுத்தார்க்குத் துன்பம் இல்லை
7. மௌனம் மலையைச் சாதிக்கும்.

முயற்சி

1. முயற்சி திருவினையாக்கும்
2. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
3. அடுத்து முயன்றாலும் ஆகும் நாளில் ஆகும்

மன உறுதி

1. மனிதனின் மன உறுதி மலைகளையும் தகர்த்து எறியும்

மனசாட்சி

1. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
2. குற்றம் மறைப்பதால் மற்றொரு குற்றம் நேரும்

திருப்தி

1. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து

நட்பு

1. ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை
2. கடுங்காற்று மழை கூட்டும்
   கடுஞ்சினேகம் பகை காட்டும்
3. தூர இருந்தால் சேர உறவு
4. சிறியாரோடு இணங்காதே
   செம்புக்குப் புளிவிட்டுக் கடையாதே
5. நண்பர்களே அதிகம் நெருங்கிய உறவினர்
6. உயிர் காப்பான் தோழன்
7. ஆபத்துக்கு உதவுபவனே நண்பன்
8. பள்ளிச் சிநேகம் பசுமரத்தாணி
9. அரும்பசிக்கு உதவாத அன்னமும்
   தாகத்துக்கு உதவாத தண்ணீரும்
   ஆபத்துக்கு உதவாத நண்பனும் ஒன்றே

10. நல்லவன் உறவை நாலு பணம் கொடுத்து
சம்பாதிக்க வேண்டும்
11. கெட்டவன் உறவை பத்துப் பணம் கொடுத்து
நீக்க வேண்டும்

நன்றி மறவாமை

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
2. நன்றி செய்தார்க்கு அபசாரம் செய்யாதே
3. நன்றி மறந்தவன் நாயினும் கீழானவன்
4. உண்ட வீட்டிற்கு ரெண்டகம் நினையாதே
5. நன்றி மறந்தாரை தெய்வம் நின்று கொல்லும்

அனுபவம்

1. காவடி பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும்
2. நிழலின் அருமை வெயிலுக்குப் போனால் தெரியும்
3. பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு
கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு
4. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்
5. முட்டையிடுகிற கோழிக்குத் தெரியும் வருத்தம்

ஒத்துப்போதல்

1. ஊர் ஓட ஒக்க ஒடு
நாடு ஓட நடுவே ஓடு
2. ஊரோடு ஒத்து வாழ்

ஆசை

1. அதிக ஆசை அதிக நட்டம்
2. அற்ப ஆசை கோடி தனத்தைக் கெடுக்கும்
3. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
4. ஆசை உள்ளளவும் அலைச்சல் உண்டு
5. ஆசை வெட்கம் அறியாது
6. பண ஆசை தீமைக்கு வேர்
7. பேராசை பெரு நஷ்டம்

8. பெண்ணாசை ஒரு பக்கம்
மண்ணாசை ஒரு பக்கம்
9. ஆசைக்கு அளவில்லை
10. பிள்ளைப் பெறப்பெற ஆசை
பணம் சேரச்சேர ஆசை

மகிழ்ச்சி

1. பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல
2. புதையல் எடுத்தவனைப் போல
3. வயிற்றிலே பாலை வார்த்தது போல

அவசரம்

1. அவசரத்துக்குப் பாபமில்லை
2. அவசரம் அல்லலை விளைக்கும்
3. பதறிச் செய்கிற காரியம் சிதறிப் போகும்

விருந்தோம்பல்

1. விருந்து வராத வீடு சுடுகாடு
2. விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு
3. விருந்தில்லாச் சோறு மருந்தோடொக்கும்
4. அழையாத வீட்டில் நுழையாதே

தன்னைப் பற்றியது

1. தன் இச்சையை அடக்காவிட்டால்
அது தன்னையே ஆளும்
2. தன் குற்றம் தனக்குத் தெரியாது
3. தன் கையே தனக்குதவி
4. தன்நிழல் தன்னைக் காக்கும்
5. தன்முதுகு தனக்குத் தெரியாது
6. தன் வாயால் தான் கெட்டான்
7. தன்னை அறிந்தவன் தத்துவம் அறிந்தவன்
8. தன்னையறிந்தவன் தவசி

தற்புகழ்ச்சி

1. எனக்கு எதிரில்லை நெல்லுக்குப் பதரில்லை
2. நான் வாழ்ந்த வாழ்வைச் சொல்கிறேன்
   அண்டை வீட்டுக்காரன் இருக்கிறானா பார்
3. குப்புற விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை
   என்கிறான்

கவலை

1. உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாக் கவலை
2. ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை
3. மனக்கவலை பலக்குறைவு

உண்மை (வாய்மை) பேசல்

1. மெய் சொல்லிக் கெட்டவனுமில்லை
   பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை
2. சத்தியமே நித்திய தெய்வம்
3. உண்மை உயர்வு தரும்
4. உள்ளதைச் சொன்னால் ஊருக்குப் பகை
5. பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது

கலக்கம்

1. காற்றிலே அகப்பட்ட கப்பல் போல
2. கன்றைத் தேடும் பசுபோல

துக்கம்

1. கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே
2. கட்டை இருக்கிறமட்டில் கஷ்டமுண்டு
3. இன்பமும் துன்பமும் எடுத்த உடலுக்கு இயல்பு
4. துக்கத்தைச் சொல்லி ஆற்ற வேண்டும்
   கட்டியைக் கீறி ஆற்ற வேண்டும்
5. மூக்குள்ளவரை சளி போகாது
6. சுகத்துக்குப் பின் துக்கம்
   துக்கத்திற்குப் பின் சுகம்

மானம்

1. அரைக்காசுக்குப் போன மானம்
   ஆயிரம் கொடுத்தாலும் வராது
2. மானம் பெரிதோ பிராணன் பெரிதோ
3. மரத்தை இலை காக்கும்
   மானத்தைப் பணம் காக்கும்

வீரம்

1. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?
2. தாய் எட்டடி பாய்ந்தால்
   குட்டி பதினாறடி பாயும்

குற்றம்

1. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
2. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது
3. தன்முதுகு தனக்குத் தெரியாது
4. சூதும் வாதும் வேதனை செய்யும்

ஆத்திரம்

1. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு
2. பதறாத காரியம் சிதறாது
3. ஆயிரம் வந்தாலும் ஆத்திரமாகாது

வஞ்சகம்

1. வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்
2. வாயிலே உறவு மனதிலே பகை
3. அடி நாக்கிலே நஞ்சும்
   நுனி நாக்கிலே அமிர்தமும்

கோபம்

1. கோபம் பாபம் சண்டாளம்
2. சினந்தாலும் சீரழிய பேசாதே

3. கொள்ளைக்கு முந்து
கோபத்துக்குப் பிந்து
4. முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே

வெட்கம்

1. சொன்னால் வெட்கக்கேடு
அழுதால் துக்கக்கேடு

பொறாமை

1. அயலார் வாழ்ந்தால் அஞ்சுநாள் பட்டினி
2. அயலார் வாழ்ந்தால் அடிவயிற்றில் நெருப்பு
3. பிள்ளைப் பெற்றவளைப் பார்த்து
மலடி பெருமூச்சு விட்டாற்போல
4. கணக்கன் பெண்சாதி கடுக்கண் போட்டுக்
கொண்டாளென்று
காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக்
கொண்டாளாம்

வீண் முயற்சி

1. கொடுக்கிறது உழக்குப்பால்
உதைக்கிறது பல்லுபோக
2. பட்டும பாழ்கட்டும் சாவி

பலவந்தம்

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2. வெளுப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்

ஏமாற்றம்

1. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
2. இலவு காத்த கிளி போல
3. வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்தாற்போல

பிடிவாதம்

1. பிடிவாதம் குடி நாசம்
2. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்
3. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

பாசாங்கு

1. உதட்டிலே உறவும் நெஞ்சிலே பகையும்
2. அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கிலே அமிர்தமும்
3. கையிலே ஜெபமாலை கக்கத்தில் கன்னக்கோல்
4. கண்டால் முறை சொல்வது
   காணாவிட்டால் பேர் சொல்வது
5. கண்டால் காமாட்சி நாயக்கன்
   காணாவிட்டால் பூனை தின்னி

சாபமிடல்

1. உன் வாயிலே மண்விழ
2. தொண்டையிலே கண்டமாலை புறப்பட

இளப்பம், தாட்சண்யம்

1. தாட்சண்யம் தனநாசம்
2. ஒடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இளக்காரம்
3. ஆண் தாட்சண்யப்பட்டால் கடன்
   பெண் தாட்சண்யப்பட்டால் விபச்சாரம்

சிறியதைச் செய்யான் பெரியதைச் செய்யமாட்டான்

1. ஆடு கொடாத இடையன்
   ஆவைக் கொடுப்பானா?
2. ஊள்ளூரில் ஓணான் பிடிக்காதவன்
   உடையார் பாளையத்தில் உடும்பு பிடிப்பானா?

காக்காய் பிடித்தல்

1. காக்காய் பிடிப்பவனை நம்பாதே

பல்பொருள் பற்றியது (Miscellaneous)

முன்னர் வகைப்படுத்தப்பட்டவற்றில் அடங்காத பழமொழிகளைப் பல்பொருள் 'பற்றிய பழமொழி என்ற வகைப்பாட்டில் காண்போம். பழமொழிகளின் பாடுபொருள் பரந்துபட்டது. ஏறத்தாழ ஒரே பொருளைப் பற்றிக் கூறுவனவற்றை இனங்கண்டு ஒன்றாக்குவது வகைப்படுத்தலாகும். சேகரிக்கப்பட்ட பழமொழிகளின் அடிப்படையில் இவ்வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பழமொழிகளையும் தொகுத்து வகைப்பாடு செய்தோமானால் பல்பொருள் பற்றிய பழமொழிகளில் பெரும்பாலானவை ஒருபொருள் பற்றிய பழமொழிகளில் வகைப்படுத்த வாய்ப்புண்டு. சேகரிக்கப்பட்ட பழமொழிகளை வகைப்படுத்தி ஆய்வு செய்வதே இவ்வாய்வுத் திட்டத்தின் நோக்கமாகும்.

கஞ்சன்

1. எச்சில் கையால் காக்கா ஓட்டமாட்டான்
2. அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு தரமாட்டான்
3. உலோபிக்கு இரட்டைச் செலவு

குள்ளன்

1. குள்ளன் குடிகெடுப்பான்
   குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள்

ஆண்டி / பண்டாரம்

1. ஆண்டி மடம் கட்டியதுபோல
2. ஆண்டிக்கு ஏன் அம்பாரக் கணக்கு
3. ஆண்டி மகன் ஆண்டியானால்
   நேரமறிந்து சங்கு ஊதுவான்
4. கொட்டிக் கிழங்கைப் பறிக்கச் சொன்னால்
   கோபித்துக் கொள்வார் பண்டாரம்
   அவித்து உரித்து முன்னே வைத்தால்
   அமுது கொள்வார் பண்டாரம்

சோம்பேறி

1. அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே
   ஐம்பத்தெட்டு அரிவாள்
2. நடந்தால் நாடெல்லாம் உறவு
   படுத்தால் பாயும் பகை
3. இருந்த கால் மூதேவி
   நடந்த கால் சீதேவி
4. குந்தித் தின்றால் குன்றும் கரையும்

வல்லவன்

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
2. வல்லவன் வகுத்ததே வாய்க்கால்
3. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு

தீயவன்

1. அக்கிரமக்காரன் முகத்தில் விழியாதே
2. கெட்டவனுக்குக் கெட்டதுதான் தெரியும்
3. ஈனர் சகவாசம் இறுதியில் தெரியும்
4. குட்டிக் கலகம் செய்பவன் குண்டுபட்டுச் சாவான்
5. பாதகர் பழக்கம் பாம்போடு பழகுதல்போல

அற்பன்

1. அற்பனுக்கு வாழ்வு வந்தால்
   அர்த்தராத்தியில் குடை பிடிப்பான்
2. கோவணத்தில் ஒருகாசு இருந்தால்
   கோழி கூப்பிட பாட்டு வரும்

சமுதாயக் கேடர்கள்

1. இருக்க இடம் கொடுத்தால்
   மடத்தையே பிடுங்குவான்
2. எரிகிற வீட்டில் உருவுற வரைக்கும் லாபம்
3. தாடி தீப்பற்றி எரிகிறபோது
   பீடிக்கு நெருப்புக் கேட்டானாம்

குமரி

1. குமரியாக இருக்கையில் கொண்டாட்டம்
   கிழவியாக இருக்கையில் திண்டாட்டம்
2. ஊருக்குள் நடக்கிற விஷயம் யாருக்குத் தெரியும்
   உள்ளே இருக்கிற குமரிக்குத் தெரியும்
3. குமரிக்கு முதுகில் பிள்ளை
4. குமரி ஒரு பிள்ளைக்கு
   கோடி ஒரு வெள்ளைக்கு
5. குமரிக்கும் நாய்க்கும் குடிபோகக் கொண்டாட்டம்

செல்வம்

1. செல்வம் சகடக்கால்போல வரும்
2. அல்லல் ஒரு காலம்
   செல்வம் ஒரு காலம்
3. செல்வம் சீரழியும்
4. வீட்டுச் செல்வம் மாடு
   தோட்டச் செல்வம் முருங்கை

ஏழை, பணக்காரன்

1. ஏழைச் சொல் அம்பலம் ஏறாது
2. இல்லாதவன் பொல்லாதவன்
3. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்
4. ஏழைக்குத் தெய்வமே துணை
5. பணக்காரனுடன் பந்தயம் போடலாமா?
6. கடன் வாங்கி ஏழையானாலும்
   கடன் கொடுத்து ஏழையாகாதே
7. ஏழை பணக்காரனானால்
   நடுப்பகலில் நட்சத்திரங்களைப் பார்ப்பான்

வறுமை

1. வறுமை வந்தால் பத்தும் பறந்துபோம்
2. வறுமை உள்ளத்துக்குப் பொறுமை உண்டு
3. வறுமைக்கு மூதேவியும்
   செல்வத்திற்குச் சீதேவியும்
4. மறைத்துக்கட்ட மாற்றுப்புடவை இல்லை

5. அஷ்ட தரித்திரம் தாய்வீடு
அதிலும் தரித்திரம் மாமியார்வீடு
6. கையிலே காசுமில்லை முகத்திலே களையுமில்லை
7. நம்பிக்கையே ஏழை மனிதனின் வருமானம்
8. குத்தின காதுக்குக் கொப்பு இல்லை
மத்தியானக் கஞ்சிக்கு உப்பு இல்லை
9. ஊன் அற்றபோதே உறவு அற்றது

பசி

1. பசி வந்திட பத்தும் பறந்துபோகும்
2. பசித்தவன் தின்னாததுமில்லை
பகைத்தவன் சொல்லாததுமில்லை
3. பசிக்குக் கறிவேண்டாம்
தூக்கத்திற்குப் பாய் வேண்டாம்
4. பசித்தவன் மேல் நம்பிக்கை வைக்காதே
5. எருது தன்நோயை நினைக்கும்
காக்கை தன் பசியை நினைக்கும்
6. பசி ருசி அறியுமா?
நித்திரை சுகம் அறியுமா?
7. தலைவலியும் பசியும் தனக்கு வந்தால் தெரியும்

திருட்டு

1. திருடனுக்குத் திருட்டுபுத்தி
2. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்
3. உளவில்லாமல் களவில்லை
4. இருட்டு வீட்டிற்குப் போனாலும்
திருட்டுக் கை நிற்காது
5. உதட்டுக்கு மிஞ்சின பல்லும்
திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது
6. கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை
7. கள்ளன் பிள்ளைக்குக் கள்ள புத்தி
8. கள்ளன் பெண்சாதி கைம்பெண்
9. தான் கள்ளன் பிறரை நம்பான்
10. கள்ளும் சூதும் இருக்குமிடத்தில்
விலைமகளும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்

நீதி

1. சத்தியம் வெல்லும் அசத்தியம் கொல்லும்
2. எளியாரை வலியார் அடித்தால்
   வலியாரைத் தெய்வம் அடிக்கும்
3. அடுத்தவரைக் கெடுக்கலாகாது
4. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

நீதிமன்றம்

1. ஒருவன் நீதிமன்றம் போகிறான் என்றால்
   ஒரு பூனையை மீட்க ஒரு பசுவை இழக்கப்
   போகிறான் என்று பொருள்
2. வக்கீல் வீட்டுச் சுவர்கள்
   வழக்காடிகள் தோலினால் கட்டப்பட்டிருக்கின்றன.
3. வழக்குத் தீர்ப்பதில் மரியாதைராமன்தான்

வழக்கு

1. ஆறு போவதே கிழக்கு
   அரசன் சொல்வதே வழக்கு
2. தீரா வழக்கு போராய் முடியும்
3. வலிமைக்கு வழக்கு இல்லை

பிணையம்

1. துணை போனாலும் பிணை போகாதே

சிறை

1. மணி அடித்தால் சோறு
   மயிர் முளைத்தால் மொட்டை
2. சிறைச்சாலைக்கு அழகில்லை
   தேவடியாளுக்கு முறையில்லை

வீடு

1. அசை போட்டுத் தின்னும் மாடு
   அசையாமல் தின்னும் வீடு
2. குடிக்கிற வீடு விடியுமா?

3. கட்டினவனுக்கு ஒரு வீடானால்
கட்டாதவனுக்கு பல வீடு
4. வாழ்கிற வீட்டிற்கு வாழையை வைத்துப்பார்
5. கண்ணாடி வீட்டில் வாழ்பவர்கள் கல் எறியக்கூடாது
6. வடக்கு பார்த்த மச்சு வீட்டைக் காட்டிலும்
தெற்குப் பார்த்த குச்சுவீடு நல்லது
7. கட்டின வீட்டிற்குக் கணை சொல்வது எளிது
8. வீடு கட்டுமுன்பு கிணறு வெட்ட வேண்டும்
9. வீட்டிற்கு வீடு வாசற்படி
10. வீட்டைக் கட்டிப்பார்
கல்யாணம் பண்ணிப்பார்
11. வேண்டும் என்றால் வீடு
வேண்டாமென்றால் காடு
12. வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
13. உண்ணாமல் ஒன்பது வீடு போகலாம்
உடுக்காமல் ஒரு வீடு போகக்கூடாது

மது

1. கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்வான்
2. கள்ளைக் கொடுத்து காரியத்தை அறி
3. கொலைகாரனை நம்பினாலும் குடிகாரனை நம்பாதே
4. குடி, சூது, விபச்சாரம் குடியைக் கெடுக்கும்
5. குடி குடியைக் கெடுக்கும்
6. குடிக்கிறவன் கையைச் சூடு போட்டாலும்
குடியை விடான்
7. குடியும் சூதும் குடியைக் கெடுக்கும்
8. சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேள்
9. மதுவும் மாதரும் தீமையின் அஸ்திவாரம்
10. கள் குடித்தவனுக்குச் சொல் புத்தி ஏறாது

கனவு

1. ஊமை கண்ட கனாப்போல
2. கனவில் கண்ட பொருள் கைக்கு எட்டுமா?
3. கிடப்பது ஒட்டுத் திண்ணை
கனவு காண்பது மச்சுவீடு

4. பகல் கனவுபோல
5. காலைக் கனவு கட்டாயம் பலிக்கும்
6. காணாத கனவு கண்டால்
ஒருவருக்கும் சொல்லாதே

உழைப்பு

1. உழைத்தால் ஊழையும் வெல்லலாம்
2. மாடுபோல் உழைத்து மன்னர்போல் வாழ்
3. தோட்டிபோல் உழைத்து தொண்டைமான் போல் வாழ்
4. அடிமையைப் போல் உழைத்து அரசனைப் போல் வாழ்

வேலை

1. அரைக்காசு என்றாலும் அரண்மனைச் சேவகம் நல்லது
2. அரைக்காசு வேலையானாலும் அரசாங்க வேலை
3. தவிட்டுக்குச் சேவித்தாலும்
சர்க்காருக்குச் சேவிக்கவேண்டும்
4. உத்தியோகம் புருஷ லட்சணம்

கூலி

1. ஆண்டை கூலியைக் குறைத்தால்
சாம்பான் வேலையைக் குறைப்பான்
2. முகத்தில் அடித்தாலும் பட்டுக்கொள்ளலாம்
வயிற்றில் அடித்தால் படமுடியுமா?

பிரச்சனை

1. வீட்டிற்கு வீடு வாசற்படி

மனம்

1. நெஞ்சறிவது பொய்யற்க
2. தன்னெஞ்சே தன்னைச் சுடும்
3. கள்ள மனம் துள்ளும்
4. மனமிருந்தால் மார்க்கமுண்டு
5. மனம் வெளுக்க மருந்தில்லை
6. மனக்காவல் பெரிதா? மதில் காவல் பெரிதா?
7. இல்லறமும் துறவறமும் மனதிலே

8. மனம் கொண்டது மாளிகை
9. மனதுக்கு மனதே சாட்சி
10. நாறு அறுந்தால் முடியலாம்
மனம் அறுந்தால் முடிய முடியாது
11. மலைச்சாரல் மழையும்
மங்கையின் மனமும் திடீரென மாறும்
12. மனதிற்கு மனம் சாட்சி
மற்றதற்குத் தெய்வம் சாட்சி
13. மனதிலே பகை உதட்டிலே உறவு
14. மனம் போல் வாழ்வு
15. கடல் ஆழத்தையும் பெண் உள்ளத்தையும்
அறிய முடியாது
16. மனோவியாதிக்கு மருந்துண்டா?
17. மனக்கவலை பலக்குறைவு
18. அவரவர் மனசே அவரவர்க்குச் சாட்சி
19. போதுமென்ற மனமே பொன்செய் மருந்து
20. நிம்மதியுள்ள மனம் நிலைகுலையாது

விதி

1. எழுதிய விதி அழுதால் தீருமா?
2. வியாதிக்கு மருந்து உண்டு
விதிக்கு மருந்துண்டா?
3. எழுதிய எழுத்தை ஈசனாலும் மாற்ற முடியாது
4. வரும் விதி வந்தால் வழியிலே தங்காது
5. தலை எழுத்து சிரைத்தால் போகுமா?
6. அன்று எழுதியவன் அழித்தெழுத போவதில்லை
7. ஊத்தை போனாலும் ஊழ்வினை போகாது
8. தாரமும் குருவும் தலை விதிப்படி
9. முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் மூண்டது
10. வரும் வினை வழியில் நில்லாது
11. எழுதின விதி அழுதால் தீருமா?
12. வரும் விதி வந்தால் படும் விதி படவேண்டும்
13. விதியை வெல்வார் உண்டோ?

அதிர்ஷ்டம்

1. அதிர்ஷ்டம் இருந்தால் அரசு பண்ணலாம்
2. அதிர்ஷ்டக்காரன் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்
3. அதிர்ஷ்டம் தூக்கத்தில் வரும்
4. ஏழ்மையும் அதிர்ஷ்டமும் எட்டியே நிற்கும்
5. அழகு இருந்தால் என்ன அதிர்ஷ்டமல்லவா வேண்டும்
6. முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை
   முப்பது வருஷம் தாழ்ந்தவனுமில்லை
7. வேலைக்காரி வீட்டுக்காரியானால் அதிர்ஷ்டம்
8. அவனுக்குச் சுக்கிரதசை அடிக்கிறது
9. ராகு திசையில் வாழ்ந்தவனுமில்லை
   இராஜா திசையில் கெட்டவனுமில்லை

காலம்

1. அல்லல் ஒரு காலம்
   செல்வம் ஒரு காலம்
2. ஆகும் காலம் ஆகும்
   போகும் காலம் போகும்
3. வாழ்வு சில காலம்
   தாழ்வு சில காலம்
4. இருளும் ஒரு காலம்
   நிலவும் ஒரு காலம்
5. காலம் துக்கத்தை மாற்றும்
6. பணத்தை இழந்தால் சிறிது நஷ்டம்
   நேரத்தை இழந்தால் எல்லாம் நஷ்டம்
7. வாலிபத்திலும் வெள்ளைத்தாளிலும்
   எதை எழுதினாலும் பதிந்துவிடும்
8. ஆனைக்கொரு காலம்
   பூனைக்கொரு காலம்
9. காலத்திற்கேற்ற கோலம்
10. காலம் போகும்
    வார்த்தை நிற்கும்
    கப்பல் போகும்
    துறை நிற்கும்

11. பொங்கும் காலம் புளி
மங்குங்காலம் மா
12. காலம் செய்வதை கோலம் செய்யாது
13. காலம் பொன்னானது
14. சாகிற வரையில் சஞ்சலமானால் வாழ்வது எக்காலம்
15. காலகதியை யாரும் கடக்க மாட்டார்கள்
16. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
17. காலத்தில் செய்த நன்றி

தருமம்

1. தனக்கு மிஞ்சினது தருமம்
2. படைக்கும் ஒருவர் கொடைக்கும் ஒருவர்
3. தருமம் தலை காக்கும்
4. தருமத்திற்கு என்றும் அழிவில்லை
5. தனக்கு மிஞ்சினால் தான் தானமும் தருமமும்
6. பிறர்மனை புகாமை அறம் எனப்படும்
7. தானத்திலே சிறந்தது அன்னதானம்
8. தருமத்தைப் பாவம் வெல்லாது

வாக்கு

1. நால்வர் வாக்கு தேவவாக்கு
2. எந்த வாக்குப் பொய்த்தாலும்
சந்தை வாக்குப் பொய்க்காது

அதிகாரம்

1. அவன் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது
2. அவன் நா அசைந்தால் நாடு அசையும்
3. அதிகாரி வீட்டு கோழி முட்டை
குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கும்
4. நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால்
கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்
5. அதிகாரம் இல்லாவிட்டால் பரியாரம் வேண்டும்

அருமை (Rarity)

1. அத்திப்பூ போல
2. கார்த்திகை பிறை கண்டது போல

சாக்கு (Excuses)

1. ஆடமாட்டாத தேவடியாள் கூடம் கோணல் என்றாளாம்
2. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைமேல் சாக்கு
3. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு
4. சட்டி சுட்டதும் கைவிட்டதும்

தேடல் (Pretexts)

1. அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிராக வரும்
2. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்
3. நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் பார்க்கக்கூடாது
4. பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்

சிறியது பெரியவற்றைக் கெடுக்கும்

1. அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்
2. காணி ஆசை கோடி கேடு

காப்பாற்றல்

1. கண்ணை இமை காத்ததுபோல
2. காட்டுக்குப் புலி, வீட்டுக்குப் புளி
3. தேரோடு போச்சுது திருநாள்
   தாயோடு போச்சுது பிறந்தகம்

கைவிடல்

1. வைத்தியன் கைவிட்டது போல
2. கைகழுவ வேண்டியதுதான்
3. நட்டாற்றில் கைவிட்டது போல
4. பாலை வார்த்து தலையை முழுகிவிடு

எதிர்மறை செயல் (Reverse Action)

1. ஏகாதசி விரதம் என்று நாக்கைப் பிடுங்கிச் சாவார்களா?
2. தகப்பன் வெட்டிய கிணறு என்று தலைகீழாய் விழலாமா?

3. தன்வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா?
4. பொன்கத்தி என்று கழுத்தை அறுத்துக் கொள்ளலாமா?
5. சகுணம் நன்றாக உள்ளது என்று விடியும்வரை திருடலாமா?

போலச்செய்தல் (Imitation)

1. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டாற்போல
2. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற்போல

எதிர்பார்ப்பு ஒன்று நடப்பது ஒன்று

1. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல
2. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல
3. பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது
4. விளையாட்டு வினையாயிற்று
5. பிள்ளை வரத்துக்குப் போய்
புருஷனைப் பறிகொடுத்ததுபோல

கையிலிருப்பதை கைவிடாதே

1. இரவல் சீலையை நம்பி இடுப்பு சீலையை எறிந்தாளாம்
2. கொண்டவன் இருக்க கண்டவனுடன் போகாதே
3. நாளைக்குக் கிடைக்கும் பலாக்காயை விட
இன்றைக்குக் கிடைக்கும் களக்காய் மேல்
4. வயிற்றுப் பிள்ளையை நம்பி
கைப்பிள்ளையை கைவிட்டதுபோல

வைத்துக்கொண்டு தேடல்

1. ஆட்டுக்குட்டியை தோளில் வைத்துக்கொண்டு தேடினாற்போல
2. உறியிலே வெண்ணெய் இருக்க
நெய்க்கு அலைவானேன்
3. விளக்கு இருக்க, நெருப்புக்கு அலைவானேன்

இடமாற்றத்தால் பொருள் மாற்றம்

1. சங்கிலே வார்த்தால் தீர்த்தம்
சட்டியிலே வார்த்தால் தண்ணீர்

மற்றவர் செலவில் பெருந்தன்மை

1. கடைத் தேங்காயை எடுத்து
   வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற்போல
2. பசுவைக் கொன்று
   செருப்புதானம் செய்ததுபோல

சரிக்குச் சரி (Tit for Tat)

1. ஆனைக்கும் பானைக்கும் சரி
2. நூலுக்கேற்ற சரடு
3. பெய்த மழைக்கும் காய்ந்த வெயிலுக்கும் சரி
4. ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கணும்
   பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கணும்
5. காலுக்குத் தக்க செருப்பு
   கூலிக்குத் தக்க உழைப்பு
6. வரவுக்கேற்ற செலவு
7. அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி

ஆற்றாமை

1. அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை
2. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
3. வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாச்சு

காரண காரியம் (Cause and Effect)

1. எங்கே புகை உண்டோ அங்கே நெருப்புண்டு
2. காற்றில்லாமல் தூசி பறக்குமா?

வாய்ப்பு (Opportunity)

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2. சூடுள்ளபோதே இரும்பை அடி
3. வெயில் அடிக்கும்போதே வைக்கோலை உலர்த்து

உதவுவது

1. ஒதிய மரமும் சமயத்துக்கு உதவும்
2. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

உதவாதது

1. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
2. குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல
3. நாய்க்குக் கிடைத்த தேங்காய் மாதிரி

உபயோகமின்மை

1. உடையவன் பாராப்பயிர் உருப்படுமா?
2. உறவு போகாமல் கெட்டது
   கடன் கேளாமல் கெட்டது
3. பார்க்காத உடைமை பாழ்
4. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்

அதிகம் (மித மிஞ்சியது)

1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
2. படுக்கப் படுக்கப் பாயும் பகை
3. பழகப் பழகப் பாலும் புளிக்கும்

ஆகாது

1. கங்கையிலே முழுகினாலும்
   காக்கை அன்னமாகுமா?
2. கறுப்புநாய் வெள்ளைநாய் ஆகாது

முடியாதது (Impossible)

1. எலி பூனையை வெல்லுமா?
2. காய்ந்த மரம் தளிர்க்குமா?
3. மலடி பிள்ளை பெறுவாளா?
4. வறுத்த பயிர் முளைக்குமா?

மாற்றிச் செய்யப்படாதது

1. கறந்தபால் முலை ஏறுமா?
2. சுடுகாடு போன பிணம் திரும்பாது
3. சோறு சிந்தினால் பொறுக்கலாம்
   மானம் சிந்தினால் பொறுக்க முடியுமா?
4. முப்பது பணம் கொடுத்தாலும்
   மூளிப்பட்டம் போகாது

அகப்படுதல்

1. பாம்பின் வாய்த் தேரை போல
2. எலி அழுதால் பூனை விடுமா?
3. எமன் கையில் அகப்பட்ட உயிர் போல
4. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்

உடைமை (Possession)

1. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
2. தனக்கென்று இருந்தால் சமயத்திற்கு உதவும்
3. மண்பிள்ளையானாலும் தன்பிள்ளை என்று இருக்கவேண்டும்

உடல்குறை (Physically Handicapped)

1. ஆரக்கழுத்தி அரண்மனைக் காகாது
2. இளிச்ச கன்னி பிரிச்சை வாங்காள்
3. குருட்டுப் பெண்ணுக்கு வறட்டு ஜம்பம்
4. பழைய குருடி கதவைத் திறடி
5. கணுக்கால் பெருத்தால் கணவனுக்கு ஆகாது
6. இறங்கும் படர்தாமரை
   ஏறும் தேமல்
   கூடும் புருவம்
   குடியைக் கெடுக்கும்

அஞ்சலி

1. கும்பிடு கொடுத்து கும்பிடு வாங்க வேண்டும்
2. உன்காலை நீயே கும்பிட்டுக் கொள்ளாதே

வாழ்த்து

1. பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க
2. மார்க்கண்டாயுசாயிரு

தோற்றம் (Appearance)

1. பசு கறுப்பென்றால் பாலும் கறுப்பா?
2. கோழி கறுப்பானால் முட்டையும் கறுப்பா?
3. நரைத்தவன் எல்லாம் கிழவனா?

குழந்தை வளர்ப்பு (Child Rearing)

1. ஆணை அடித்து வளர்
   பெண்ணைப் போற்றி வளர்
2. செல்வம் சீரழிக்கும்
3. ஒரு பிள்ளை என்று ஊட்டி வளர்த்தாளாம்
   அது ஊர்மேல் போச்சுது

வெறும்பேச்சு

1. சர்க்கரை என்றால் தித்திக்குமா?
2. நெருப்பு என்றால் வாய் வெந்து போகுமா?
3. வார்த்தைக்குத் தரித்திரமா?

இரகசியம்

1. ஒருவர் அறிந்தால் இரகசியம்
   இருவர் அறிந்தால் அம்பலம்
2. இலை மறைவு காய் மறைவு வேண்டாமா?

பொய் வேடம்

1. நாமம் போட்டவன் எல்லாம் தாதனா?
   விபூதி பூசினவன் எல்லாம் ஆண்டியா?
2. முக்காட்டுக்குள்ளே மூடுமந்திரமா?

சண்டை

1. அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி
2. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
3. சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட
   சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்

கேடு

1. அரைக்காசுக்கு அழிந்த கற்பு
   ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிடைக்காது
2. ஆயிரம் சொன்னாலும்
   அவிசாரி சம்சாரி ஆகமாட்டாள்
3. திருடனுக்குத் திருட்டுப்புத்தி போகாது

தொழில் நுணுக்கம்

1. சிறிய உளியானாலும் மலையைப் பிளக்கும்
2. இரும்புத்தூணை செல் அரிக்குமா?
3. தங்கம் புடம் போட்டாலும் மாறாது

தணிக்கை

1. கணக்குப் பார்த்தால் பிணக்கு வரும்

கூட்டு வியாபாரம்

1. கூட்டு வியாபாரம் குடுமிப்பிடி

கூட்டு வாழ்வு

1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

ஒற்றுமை

1. ஒரு அச்சில் உருக்கி வார்த்தாற்போல
2. தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை

சோதிடம்

1. பால்ய சோதிடம் விருத்த வைத்தியம்
2. சோதிடத்திற்குப் பால்யமே போதும்
3. சாஸ்திரம் பார்க்காத வீடு சமுத்திரம்
4. அஷ்டமத்து சனி நட்டம் வரச்செய்யும்
5. சனி கொடுத்தால் தடுப்பாரில்லை
6. பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்
7. மூலத்தில் பிறந்தவன் காலத்தில் வாழ்வான்
8. ஏழரை நாட்டுச் சனி எங்கு போனாலும் தொடரும்
9. சனி வக்ரகம்
10. வியாழன் கூடினால் விவாகம் கூடும்
11. பஞ்சாங்கம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்

அகராதியியல்

1. அகராதி படித்தவனுக்கு எதிராகப் பேசாதே

பட்டணம்

1. கெட்டும் பட்டணம் சேர்

ஆங்கிலேயர்

1. எத்தனை முறை சொன்னாலும் பாங்கி வெற்றிலை போடமாட்டான்
2. துரை நல்லவர் பிரம்பு பொல்லாதது
3. பரங்கிக்குத் தெரியுமா சடங்கும் சாஸ்திரமும்

வாழ்க்கையில் கண்டு உணர்ந்த உண்மைகள், வாழ்க்கை அனுபவங்கள் பழமொழிகளாகத் திகழ்கின்றன. பழமொழியில் அனைத்தும் இருக்கின்றன. பழமொழிகள் நமது பாரம்பரியத்தைக் காட்டும் களஞ்சியங்களாகும். பழமொழிகள் அடுத்த தலைமுறையினர்க்கு விட்டுச் சென்ற பொக்கிஷங்களாகும். வாழ்க்கைச் செய்திகளும் வரலாற்று நிகழ்ச்சிகளும் சமுதாய அமைப்பும் பண்பாட்டுச் செல்வங்களும் மறைந்து கிடக்கின்றன. ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, வாழ்வியல் கோட்பாடுகளை விளக்கும் கருவியாகப் பழமொழிகள் விளங்குவதையும் அவை நூற்றுக்கு நூறு யதார்த்த நிலையில் உள்ளதையும் அறிந்தோம்.

5. தமிழ்ப் பழமொழிகள் - நடையியல் ஆய்வு
(Stylistic Study of Tamil Proverbs)

நடையியல் என்பதை ஆங்கிலத்தில் Stylistics என வழங்குவர். Stylas என்ற இலத்தீன் சொல்லிலிருந்து Style என்ற சொல் உருவாயிற்று. கருத்து விளக்கத்தின் கருவி நடையாகும். 'பாஷையின் போக்கு' (Style in language) எனத் தமிழ் அகராதி கூறுகிறது. உரிய சொற்கள் உரிய இடத்தில் பொருந்தி நடப்பதே நடை. இதையே சுவிப்ட் (Swift) எனும் அறிஞர் பொருத்தமான இடங்களில் பொருத்தமான சொல் அமைவது நடை எனக் குறிப்பிடுகிறார். மொழியில் காணப்படும் வேறுபாடுகளே நடையாகும். எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப நடை மாறுவதுண்டு. ஒரு வகையான ஒழுங்கு முறைக்குட்பட்ட மொழியியல் வேறுபாடே நடையாகும். (A style is one type of systematic linguistic variation).

(1)

1. எதுகை

1. கரு இல்லாத முட்டையும்
   குரு இல்லாத வித்தையும் பாழ்
2. உண்டு ருசி கண்டவனும்
   பெண்டு ருசி கண்டவனும் விடான்
3. அரசன் இல்லாத நாடு
   புருஷன் இல்லாத வீடு
4. நாட்டை ஆண்டாலும்
   வீட்டை ஆள்வது கடினம்
5. ஊரைச் சொன்னாலும்
   பேரைச் சொல்லாதே

2. மோனை

1. மந்திரம் கால்
   மதி முக்கால்
2. சாகத் துணிந்தவனுக்கு
   சமுத்திரம் முழங்கால் மட்டும்

3. குற்றமுள்ள நெஞ்சு
குறுகுறுக்கும்
4. தாயை மறக்கடிக்கும்
தயிரும் பழஞ்சோறும்
5. பசியாமலிருக்க மருந்து கொடுக்கிறேன்
பழையது இருந்தால் போடு

3. இயைபு

1. அசைந்து தின்கிறது மாடு
அசையாமல் தின்கிறது வீடு
2. ஆறு போவதே கிழக்கு
அரசன் சொல்வதே வழக்கு
3. இறைத்த கிணறு ஊறும்
இறையாத கிணறு நாறும்
4. யானை வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே

4. உவமை

1. இஞ்சி தின்ற குரங்குபோல
2. குட்டிப்போட்ட பூனை போல
3. சிறகொடிந்த பறவைபோல
4. பாம்பின் வாய்த் தேரைபோல
5. பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல
6. இரண்டு ஓடத்தில் கால் வைத்ததுபோல
7. கண்ணாடி வீட்டில் கல் எறிந்ததுபோல
8. வெண்ணெய் திரண்டு வரும்போது
தாழி உடைந்தாற்போல

5. அந்தாதி

1. ஆனதுக்கு ஒரு ஆகாதது
ஆகாததற்கு ஒரு ஆனது

6. பிறிது மொழிதல் அணி

1. ஒரு கண்ணிலே வெண்ணெயும்
ஒரு கண்ணிலே சுண்ணாம்பும்

7. உயர்வு நவிற்சி அணி

1. அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே
   ஐம்பத்தெட்டு அரிவாள்

8. எடுத்துக்காட்டு உவமை அணி

1. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு
   நல்ல பொண்ணுக்கு ஒரு வார்த்தை

9. இல்பொருள் அணி

1. கத்தரிக்காய்க்குக் காலும் கையும் முளைத்ததுபோல

10. வஞ்சப்புகழ்ச்சி அணி

1. அரிச்சந்திரன் வீட்டிற்கு அடுத்த வீடு

11. சிலேடை அணி

1. சக்தியிருந்தால் செய்
   இல்லாவிட்டால் சிவனே என்றிரு

12. எதிரொலிச் சொல் **(Echo Word)**

1. புலி பிடித்ததோ
   கிலி பிடித்ததோ

13. ஒலி குறிப்புச் சொல் **(Onomatopoeia)**

1. வாய் வழவழ
   கை கரகர

14. ஒருபோகுநிலை, இருசொல் இயைபணி **(Parallelism)**

1. கழுத்தில் இருப்பது உத்திராட்சம்
   கையில் இருப்பது கன்னக்கோல்

15. **Coupling**

1. அக்காள் உடைமை அரிசி
   தங்கச்சி உடைமை தவிடு

16. Epistrophe

1. மரத்தை இலை காக்கும்
   மானத்தைப் பணம் காக்கும்

17. Anadiplosis

1. ஆனதுக்கு ஒரு ஆகாதது
   ஆகாததுக்கு ஒரு ஆனது

18. Epanalepsis

1. தினை விதைத்தவன் தினை அறுப்பான்
   வினை விதைத்தவன் வினை அறுப்பான்

(2)

மரபுத்தொடர் பழமொழி

1. அரசன் முதல் ஆண்டி வரை

2. ஏவல் தொடர் பழமொழி

1. தூர்த்த கிணற்றை தூர் வாறாதே
2. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

3. வியப்புத் தொடர் பழமொழி

1. அத்திப் பூவைக் கண்டவர் உண்டா?
   ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர் உண்டா?

4. வினாத் தொடர் பழமொழி

1. தீ என்றால் வாய் வெந்து விடுமா?
2. உதியம் பெருத்தால் உத்தரத்துக்கு ஆகுமா?
3. பனங்காட்டு நரி சலசப்புக்கு அஞ்சுமா?
4. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கணுமா?
5. எருதின் துன்பம் காக்கைக்குத் தெரியுமா?

5. அடுக்குத் தொடர் பழமொழி

காடு வாவா என்கிறது
வீடு போபோ என்கிறது

(3)

1. கூற்றாக அமையும் பழமொழி

1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல

3.1.1. நேர்க்கூற்று

1. எலும்பில்லாத நாக்கு எந்தப்புறமும் பேசும்
2. சொந்தப் புத்தியும் இல்லை சொல்புத்தியும் இல்லை

3.1.2. மறைமுகக்கூற்று

எருமைக்கடா என்றாலும்
குழந்தைக்குப் பால் ஒரு பீர் இல்லையா என்கிறான்

3.1.3. பிறர் கூற்று

1. தூக்கிப் போட்டதும் அல்லாமல் குதிரை குழி பறித்ததாம்
2. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தானாம்

2. குறிப்பாக அமையும் பழமொழி

அகத்தின் அழகு முகத்திலே

3. ஐயமாக அமையும் பழமொழி

சனி பிடித்ததோ? சனியன் பிடித்ததோ?

4. மேற்கோளாக அமையும் பழமொழிகள்

1. சேலை இல்லையென்று சித்தி வீட்டுக்குப் போனாளாம்
   சித்தி ஈச்சம் பாயைக் கட்டிக்கொண்டு எதிர்வந்து நின்றாளாம்
2. தாயைத் தண்ணித் துறையில் பார்த்தால்
   மகளை வீட்டில் பார்க்கவேணாம்
3. குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு
4. பட்ட காலிலேயே படும்
   கெட்ட குடியே கெடும்

5. கட்டளையாக அமையும் பழமொழி

பட்டு அறி கெட்டு அறி
பத்தும் இட்டு அறி

6. உரையாடலாக அமையும் பழமொழிகள்

1. தென்னை மரத்தில் ஏண்டா ஏறினாய்?
   கன்றுக்குப் புல் பறிக்க என்றானாம்
2. அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என்றால்
   அப்பா எனக்கொரு துப்பட்டி என்கிறான் பிள்ளை
   அதற்கு அப்பன்
   கைகால் பட்டுக் கிழிந்து போகப் போகிறது
   பத்திரமாய் மடித்துப் பெட்டியில் வை என்றானாம்

7. எதிரிடை அமைப்பு பழமொழி

1. கொன்றால் பாவம்
   தின்றால் போச்சு

8. ஒப்புவமைப் பழமொழிகள்

1. மலைபோல வந்து பனிபோல நீங்கியது
2. பொம்பளை சிரிச்சாப் போச்சு
   புகையிலை விரிச்சாப் போச்சு

9. அடுக்கிச் செல்லும் அமைப்புடைய நெடிய பழமொழி

அக்கு தொக்கில்லாதவன் ஆண்மையும்
மிக்க துக்கப்படாதவன் வாழ்வும்
வெக்கஞ் சிக்கில்லாதவன் தோஷமும்
நாய் நக்கிநக்கித் தின்னதுக்கு ஒக்கும்

(4)

பழமொழிகளை நுணுகி நோக்கின் இரண்டாகப் பிரிந்திசைத்தல் பழமொழியின் இயல்பு எனக் கூறலாம். பழமொழிகளை ஒலித்துப் பார்த்தால் இவ்வியல்பு தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

1. கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை
2. அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
3. அஞ்சு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்
4. இடம் அகப்படாத தோஷம் மெத்தப் பதிவிரதை
5. உண்டு ருசி கண்டவனும்
   பெண்டு ருசி கண்டவனும் விடான்
6. கடல் தண்ணி வற்றினாலும்
   பள்ளச்சி தாலி வற்றாது
7. ஆடிப்பட்டம் தேடி விதை
8. தை பிறந்தால் வழி பிறக்கும்
9. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
10. குந்தித் தின்றால் குன்றும் கரையும்
11. சிறுதுளி பெருவெள்ளம்
12. இஞ்சி லாபம் மஞ்சளிலே

(5)

பழமொழிகள் வாக்கியமாக இருக்கும். பொருள் மாற்றமின்றி இரண்டாகப் பகுக்க முடியும். மூன்று, நான்காகப் பகுக்கவும் முடியும்.

1. இரட்டைப் பகுப்பு

1. களவுக்கு ஒருவர்
   கல்விக்கு இருவர்
2. மரத்தை வச்சவன்
   தண்ணீர் ஊற்றுவான்
3. யானைக்கொரு காலம் வந்தா
   பூனைக்கொரு காலம் வரும்
4. உண்டு ருசி கண்டவனும்
   பெண்டு ருசி கண்டவனும் விடான்
5. கண்டால் காமாட்சி நாயக்கன்
   காணாவிட்டால் பூனைத்தின்னி
6. கண்டால் ரங்கசாமி
   காணாவிட்டால் வடுகப்பயல்

2. மூன்று பகுப்பு

1. நரி இடமாகப் போனால் என்ன?
   வலமாகப் போனால் என்ன?
   கடிக்காமல் போனால் சரி

3. நான்கு பகுப்பு

1. கூரைமேல் ஏறி
   கொக்கு பிடிக்காதவன்
   வானத்தில் ஏறி
   வைகுந்தம் காட்டுவானா?
2. எத்துவாரை எத்தி
   எலி பிடிச்சுக்கிட்டு வாரேன்
   கேட்பாரைக் கேட்டு
   நாழி கேப்பை வாங்கித் திரி
3. எருது கொழுத்தால்
   தொழுவத்தில் நிற்காது
   பறையன் கொழுத்தால்
   பாயில் இருக்கமாட்டான்

4. ஐந்து பகுப்பு

1. அய்யாசாமிக்குக் கல்யாணம்
   அவரவர் வீட்டிலே சாப்பாடு
   கொட்டு முழக்கு கோயிலிலே
   வெற்றிலை பாக்கு கடையிலே
   சுண்ணாம்பு சூளையிலே

(6)

கருத்து அடிப்படைப் பகுப்பு

கருத்து எண்ணிக்கை அடிப்படையில் பகுத்துக் காணலாம்.

1. ஒற்றை அல்லது தனிப்பழமொழி (Simple or Single Proverb)

1. முற்றத்து மல்லிகைக்கு மணமில்லை
2. கண் கண்ட தெய்வம்
3. அச்சம் ஆண்மையைக் குறைக்கும்

2. இரட்டைப் பழமொழி (Twin Proverb)

1. காட்டில் புலி கொல்லும்
   நாட்டில் புளி கொல்லும்
2. குளவி கூடு கட்டினால் பிறப்பு
   நாய் பள்ளம் தோண்டினால் இறப்பு
3. பெற்ற மனம் பித்து
   பிள்ளை மனம் கல்லு

3. மும்மடிப் பழமொழி (Triple Proverb)

1. பாராதே கெட்டது பயிர்
   ஏறாதே கெட்டது குதிரை
   கேளாதே கெட்டது கடன்
2. காசி விசாலாட்சி
   காஞ்சி காமாட்சி
   மதுரை மீனாட்சி
3. ஆரூரில் பிறக்க முக்தி
   தில்லையில் தரிசிக்க முக்தி
   காசியில் இறக்க முக்தி
4. சாதியில் கெட்டது பிள்ளை
   சாமியில் கெட்டது மாரியம்மன்
   காயில் கெட்டது கத்தரிக்காய்
5. காசியில் தண்டம்
   பிரயாகையில் முண்டம்
   கயையில் பிண்டம்
6. பெய்து விளைகிறது மலையாளச் சீமை
   பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர்ச். சீமை
   காய்ந்து விளைகிறது இராமநாதபுரம் சீமை

4. நான்மடிப் பழமொழி (Quadruple Proverb)

1. நாய்க்கு நாய் பகை
   கோழிக்கு கோழி பகை
   வைத்தியனுக்கு வைத்தியன் பகை
   தாசிக்கு தாசி பகை

2. காலைக் கடம்பர்
மத்தியானம் சொக்கர்
அந்தித் திருவெங்கிநாதர்
அர்த்தசாமச் சிங்கபுரீசுவரர்

5. ஐம்மடிப் பழமொழி (Quintuple Proverb)

1. திருவாரூத் தேர் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
மன்னார்குடி மதில் அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
கும்பகோணம் கோயில் அழகு

6. எண்மடிப் பழமொழி

1. பத்தில் பார்வை
இருபதில் ஏற்றம்
முப்பதில் முறுக்கு
நாற்பதில் நழுவல்
ஐம்பதில் அசதி
அறுபதில் ஆட்டம்
எழுபதில் ஏக்கம்
எண்பதில் தூக்கம்

6. தமிழ்ப் பழமொழிகள் - அமைப்பியல் ஆய்வு
(Structural Study of Tamil Proverbs)

அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே 1960ஆம் ஆண்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற கோட்பாடு அமைப்பியல் கோட்பாடாகும். இவ்வமைப்பியல் கோட்பாட்டின் தந்தை என விளாடிமிர் பிராப்பைக் (Viadimir Propp) குறிப்பிடலாம். ஆர்வி தாம்ஸனின் ஆய்வுமுறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்ற காரணத்தால் இக்கோட்பாட்டை உருவாக்கினார்.[1] 1928ஆம் ஆண்டு ரஷ்ய மொழியில் நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு (Morphology of Folktale) என்ற நூலை வெளியிட்டார். 1958ஆம் ஆண்டு இந்நூல் ஆங்கிலத்தில் வெளிவந்த பின்னர், நாட்டுப்புறவியலிலே ஒரு திருப்புமுனை ஏற்பட்டதெனலாம். ஆலன் டண்டிஸ் (Alan Dundes) பிராப்பின் கொள்கையைப் பின்பற்றி வட அமெரிக்க இந்திய நாட்டுப்புறக்கதைகளின் உள்ளமைப்பு (The Morphology of North American Indian tales) என்ற நூலை வெளியிட்டார். பிராப்பின் கொள்கையைப் பின்பற்றினாலும் அவற்றில் சில மாற்றங்களைச் செய்தார். பிராப்பின் Function என்ற சொல்லுக்கு பதிலாக கென்னத் பைக்கின் 'Motifeme'என்ற சொல்லைக் கையாண்டார்[2] லெவிஸ்டிராஸ் (Levi strauss) அவர்கள் மொழியியலை அடிப்படையாக வைத்து புராணங்களை

---

1. The most influential and enticising theory to emerge in American folklore circles in the 1960 was structure-alism. Propp is the true father figure of the new moment and the purposely introduced his scheme to displace the taxonomy of Antti Arane.
   - Richard M. Dorson, Folklore and Folklife - An Introduction, p. 34

2. Dundes made certain refinements of Propp's agenda. For Propp colourless term function he substitutes motifeme a coinage derived from the linguistic kenneth pike and heproposed allomotif to designate motifs occuring as part of motifeme.
   - Richard M. Dorson, Folklore and Folklife, p.35

ஆராய்ந்தார். லெவிஸ்டிராஸ் பிராப் கொள்கையினின்று சிறிது விலகிச் சென்றாலும் அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாக வைத்தே ஆராய்கின்றார். சசூரின் கருத்துக்களை லெவிஸ்டிராஸ் மானிடவியல் ஆய்வுக் கோட்பாடாக மலரச் செய்தார். லெவிஸ்டிராஸ் மானிடவியல் மற்றும் நாட்டுப்புறவியல் துறையிலும் லகன் உளவியல் துறையிலும் பர்த்ஸ், கிரெய்மஸ் குறியீட்டு மற்றும் இலக்கியத் துறையிலும் அமைப்பியல் ஆய்வுமுறையைப் பயன்படுத்தினர். லெவிஸ்டிராஸின் அமைப்பியல் ஆய்வினை வாய்பாட்டு முறை (Poradigmatic) என்பர். பியார் மராண்டாவும் எல்லி கொங்க மராண்டாவும் இத்துறையில் மேலும் பல ஆய்வுகள் செய்துள்ளனர். உலக அரங்கில் இவ்வாய்வுக்கோட்பாடே தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. இக்கோட்பாட்டினால் வகைப்படுத்தும் முறை எளிமையாகிறது என்றும் பண்பாட்டுக் கூறுகளைப் பிரித்தறியப் பயன்படுகிறது என்றும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அமைப்பியல் ஆய்வில் குறைந்தபட்ச அலகுகள் மீண்டும் மீண்டும் வந்து இணையும். இவ்வலகுகள் இணைந்து ஒருசில தனித்த வடிவங்களை உருவாக்குகின்றன. லெவிஸ்டிராஸ் குறிப்பிடுவதுபோல 'கருத்துக் கருவூலத்தினின்றும் ஒருசில குறிப்பிட்ட தேர்ந்த இணைப்புகளைக் கொண்டே உருவாக்கிப் பின்னர் மேலும் உருவாக்கிக் கொள்ளும் நிலையில் அமைகின்றன' என்கிறார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைப்பியல் பள்ளி (Structural School) ஒன்று உருவானது இங்குக் குறிப்பிடத்தக்கது.

(1)

அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர் ஆலன் டண்டீஸ் (Alan Dundes) அவர்கள் அமைப்பியல் அடிப்படையில் பழமொழிக்கு வரையறை செய்கிறார். குறைந்த பட்சம் ஒரு தலைப்பையும் (Topic) ஒரு முடிவுரையையும் (Comment) உள்ளடக்கியதே பழமொழி என்கிறார். இப்பழமொழிகளில் குறைந்த பட்ச அலகு விளக்கவுரைக் கூறாகும் (one discriptive element). விளக்கவுரைக்கூறு என்பது ஒரு தலைப்பையும் முடிவுரையையும் கொண்டதாக அமையும். இவ்வரையறை மூலம் ஒரு சொல் பழமொழி இல்லை என (There is no one word proverb) அறிந்துகொள்ள முடிகிறது.

1.1 தலைப்பு (Topic)	முடிபுரை (Comment)
1. அழுத பிள்ளை	பால் குடிக்கும்
2. அதிக ஆசை	அதிக நஷ்டம்
3. காய்த்தமரம்	கல்லடிபடும்
4. பணம்	பத்தும் செய்யும்
5. ஆடி வாழை	தேடி நடு
6. அஞ்சிலே வளையாதது	ஐம்பதிலே வளையாது
7. ஆனைக்கும்	அடி சறுக்கும்
8. உப்பு தின்றவன்	தண்ணீர் குடிப்பான்
9. கள்ளன் பெண்சாதி	கைம்பெண்டாட்டி
10. காலம்	துக்கத்தை மாற்றும்

1.2 இரு விளக்கவுரைக் கூறுடை பழமொழிகள்

1. ஆண்பிள்ளையை	அடித்து வளர்
முருங்கையை	ஒடித்து வளர்
2. ஆண்மூலம்	அரசாளும்
பெண்மூலம்	நிர்மூலம்
3. ஆனைக்கு	வாழைத்தண்டு
ஆளுக்குக்	கீரைத்தண்டு
4. மோகம்	முப்பதுநாள்
ஆசை	அறுபது நாள்
5. வாழ்வு	ஒரு காலம்
தாழ்வு	ஒரு காலம்
6. நாட்டுக்குக்	கரும்பு
வீட்டுக்கு	வேம்பு
7. கூத்தாடிக்குக்	கீழே கண்
கூலிக்காரனுக்கு	மேலே கண்
8. கொடைக்குக்	கர்ணன்
படைக்குத்	துரியோதனன்
9. வில்லுக்கு	விசயன்
சொல்லுக்கு	அரிச்சந்திரன்
10. மாமி குற்றம்	மறைப்பு
மருமகள் குற்றம்	திறப்பு
11. கோடி	ஒரு வெள்ளை
குமரி	ஒரு பிள்ளை

12. பசுவுக்குப்	பிரசவ வேதனை
காளைக்குக்	காம வேதனை
13. கூத்தியாள்	செத்தால் பிணம்
ஆத்தாள்	செத்தால் மணம்
14. மரத்தை	இலை காக்கும்
மானத்தைப்	பணம் காக்கும்
15. படிப்பது	இராமாயணம்
இடிப்பது	பெருமாள் கோவில்

1.3 மூன்று விளக்கவுரைக் கூறுடைய பழமொழிகள்

1.	ஆரூரில்	பிறக்க முக்தி
	தில்லையில்	தரிசிக்க முக்தி
	காசியில்	இறக்க முக்தி
2.	சாதியில்	கெட்டது பிள்ளை
	சாமியில்	கெட்டது மாரியம்மன்
	காயில்	கெட்டது கத்தரி
3.	தவத்துக்கு	ஒருவர்
	கல்விக்கு	இருவர்
	வழிக்கு	மூவர்
4.	அருள்	வேணும்
	பொருள்	வேணும்
	அடக்கம்	வேணும்
5.	ஆனி	அடைசாரல்
	ஆடி	அதிசாரல்
	ஆவணி	முச்சாரல்
6.	சோழநாடு	சோறுடைத்து
	பாண்டிநாடு	முத்துடைத்து
	சேரநாடு	வேழமுடைத்து
7.	தேளுக்குக்	கொடுக்கில் விடம்
	தேவடியாளுக்கு	உடம்பெங்கும் விடம்
	துஷ்டனுக்குச்	சர்வாங்கமும் விடம்
8.	நாற்பதுக்கு	நாய்க்குணம்
	ஐம்பதுக்கு	ஆட்டம்
	அறுபதுக்கு	ஓட்டம்

9. பாராதே கெட்டது பயிர்
ஏறாதே கெட்டது குதிரை
கேளாதே கெட்டது கடன்

10. பெய்து விளைகிறது மலையாளச்சீமை
பாய்ந்து விளைகிறது தஞ்சாவூர்ச் சீமை
காய்ந்து விளைகிறது இராமநாதபுரச் சீமை

1.4 நான்கு விளக்கவுரைக் கூறுடைய பழமொழிகள்

1. நாய்க்கு நாய் பகை
கோழிக்குக் கோழி பகை
வைத்தியனுக்கு வைத்தியன் பகை
தாசிக்குத் தாசி பகை

2. ஆறு கெட நாணல் இடு
ஊரு கெடப் பூணூல் இடு
காடுகெட ஆடு விடு
மூன்றும் கெட முதலியை விடு

3. பனைமரத்து நிழல்
பாம்பாட்டி வித்தை
தெலுங்கன் உறவு
தேவடியாள் சிநேகிதம் நாலும் பகை

1.5 ஐந்து விளக்கவுரைக் கூறுடைய பழமொழி

திருவாரூர்த் தேர் அழகு
திருவிடைமருதூர் தெரு அழகு
மன்னார்குடி மதில் அழகு
வேதாரண்யம் விளக்கு அழகு
கும்பகோணம் கோயில் அழகு

1.6 எட்டு விளக்கவுரைக் கூறுடைய பழமொழி

பத்தில் பார்வை
இருபதில் ஏற்றம்
முப்பதில் முறுக்கு
நாற்பதில் நழுவல்
ஐம்பதில் அசதி
அறுபதில் ஆட்டம்

எழுபதில் ஏக்கம்
எண்பதில் தூக்கம்

(2)

ஆப்ரஹாம் (Roger D. Abraham) அவர்கள் அமைப்பு அடிப்படையில் பழமொழிகளை நான்கு வகையாகப் பகுக்கின்றார்.

1. *நேர்சம மதிப்பு* (Positive Equivalence)
   காலம் பொன்னானது
   யானைக்கும் அடி சறுக்கும்

2. *எதிர்மறை சமமதிப்பு* (Negative Equivalence)
   ஏற்றப்பாட்டிற்கு எதிர்பாட்டில்லை
   ஏழைச்சொல் அம்பலம் ஏறாது

3. *நேரடி காரணகாரியத் தொடர்பு* (Positive Causational)
   பதறிய காரியம் சிதறிப் போகும்
   எறும்பு ஊரக் கல்லும் தேயும்

4. *எதிரிடை காரணகாரியத் தொடர்பு* (Negative causational)
   இரண்டு குற்றங்கள் நியாயமாகாது
   புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

(3)

அமைப்பியல் அடிப்படையில் பழமொழிகளை மூன்றாகப் பகுக்கலாம்.

1. எதிர்மறை பழமொழி (Oppositional Proverb)
2. உடன்பாட்டுப் பழமொழி (Non-oppositional Proverb)
3. எதிர்மறை உடன்பாட்டுப் பழமொழி (Oppositional and non-oppositional Proverb)

உடன்பாட்டுப் பழமொழி (Non-oppositional Proverb)

இப்பழமொழிகளில் தலைப்பு, முடிபுரைகளில் முரண் இருக்காது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
வீட்டைக் கட்டிப்பார்
கல்யாணம் பண்ணிப்பார்

சமநிலைப் பழமொழி (Equational Proverb)

உடன்பாட்டுப் பழமொழி வகைகளில் சமநிலைப் பழமொழிகளும் ஒருவகையென ஆலன்டண்டீஸ் குறிப்பிடுகிறார். சமநிலைப் பழமொழிகள் A = B என்ற சூத்திர அடிப்படையில் அமைந்திருக்கும். சில பழமொழிகளில் சரி என்ற சொல் சமநிலையை வெளிப்படையாகவே உணர்த்தி நிற்கும்.

அரசனும் பாம்பும் சரி
A B
உள்ளூர் மருமகனும் உழுகிற கிடாயும் சரி
A B

இரண்டு விளக்கவுரைக் கூறு பழமொழிகளில் முதல் விளக்கவுரை ஒரு பொருளைப் பற்றியும் இரண்டாவது விளக்கவுரை மற்றொரு பொருளைப் பற்றியும் கூறினாலும் அவற்றிற்கிடையே சமநிலையைக் காணலாம்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு
↓
நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை

கோடி ஒரு வெள்ளைக்கு
↓ ↓
குமரி ஒரு பிள்ளைக்கு

காரணச் சமநிலைப் பழமொழிகள் **(Causal Equational Proverbs)**

சமனிலைப் பழமொழிகளில் காரணச் சமநிலைப் பழமொழி வகை ஒன்றாகும். காரணச் சமநிலைப் பழமொழிகளில் A இருந்தால் B நிச்சயமாக அமையும் என்ற சூத்திர அடிப்படையாக கொண்டிருக்கும்.

சனப்பலம் இருந்தால் மனப்பலம் வரும்
A B

குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடிபாயும்
A B

அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்
A B

எதிர்மறைப் பழமொழி **(Opposition Proverb)**

பழமொழிகளில் எதிர்மறைப் பழமொழிகளே அதிகமுள்ளன. எதிர்நிலை என்பது நேர் சமநிலையை மறுப்பது. A + B என்ற வாய்ப்பாட்டில் அமைந்திருக்கும்.

கேட்டவை எல்லாம் நம்பாதே
நம்பினது எல்லாம் சொல்லாதே

பொய்சொல்லி வாழ்ந்தவனுமில்லை
மெய்சொல்லி கெட்டவனுமில்லை

Better than type

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட
சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்

ஆலையில்லாத ஊருக்கு
இலுப்பம்பூ சர்க்கரை

A becomes C instead of B

பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது
கிணறு வெட்ட பூதம் கிளம்பியது

வினாநிலை எதிர்மறைப் பழமொழி

பழமொழியின் ஈற்றில் வினா கொண்டு அமைவது. இவ்வினாக்களுக்கு விடை எதிர்மறையாக இருக்கும்.

உயர உயரப் பறந்தாலும்	ஊர்க்குருவி பருந்தாகுமா?
புலிக்குப் பிறந்தது	பூனையாகுமா?
கனமழை பெய்தாலும்	கருங்கல் கரையுமா?

ஒரு விளக்கக் கூறுடைய எதிர்மறைப் பழமொழிகள்

தமிழில் ஒரு விளக்கக் கூறுடைய பழமொழி பல முரண் அற்றவையாக அமைகின்றன. இதற்கு மாறாக, ஒரு விளக்கக்கூறுடைய எதிர்மறைப் பழமொழிகளும் தமிழில் காணப்படுகின்றன.

தனிமரம் தோப்பாகாது
பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது

தலைப்பிற்கு முடிபுரை எதிரிடையாக அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

தனிமரம்	x	தோப்பு
பள்ளிக்கணக்கு	x	புள்ளி

தமிழ்ப் பழமொழிகளின் [illegible]மை என ஜார்ஜ் குறிப்பிடுகிறார்.

நேர் எதிர்முரண் பழமொழிகள்
(Antithetical Contradition Proverbs)

இப்பழமொழிகளில் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு முரணாக அமைந்திருக்கும்.

A இருந்தால் B இருக்க முடியாது
B இருந்தால் A இருக்க முடியாது

போன்று அமைந்திருக்கும்.

கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம்

உடன்பாட்டு எதிர்மறைப் பழமொழி
(Non-oppositional & Oppositional Proverb)

சமநிலைப் பண்பும் முரணும் ஒரே பழமொழியில் அமையலாம்.

இணைப்பண்பும் முரணும் ஒரே பழமொழியில் அமைவதும் உண்டு.

ஞாபகம் இல்லை என்று	சொல்வான்
ஞானம் இல்லை என்று	சொல்லமாட்டான்
நமனுக்கு நாலுபிள்ளை	கொடுப்பான்
உற்றார்க்கு ஒருபிள்ளை	கொடான்
ஒட்டினால் தொட்டிலும்	கொள்ளும்
ஒட்டாவிட்டால் கட்டிலும்	கொள்ளாது

(4)

அமைப்பு அடிப்படையில் கீழ்க்காணுமாறும் பழமொழிகளைப் பாகுபாடு செய்யலாம்.

4.1. உடன்பாட்டுப் பழமொழிகள்

4.1.1 உடன்பாட்டுப் பழமொழி

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு

4.1.2 உடன்பாட்டு ஏவல் பழமொழி

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

4.1.3. இரட்டை உடன்பாட்டு ஏவல் பழமொழி

வீட்டைக் கட்டிப்பார்
கல்யாணம் பண்ணிப்பார்

4.1.4. உடன்பாட்டு வினாப் பழமொழி

உலை வாயை மூடலாம்
ஊர் வாயை மூடமுடியுமா?

4.2. எதிர்மறைப் பழமொழிகள்

4.2.1. எதிர்மறைப் பழமொழி

துணிந்தவனுக்குத் துக்கமில்லை

4.2.2. இரண்டை எதிர்மறைப் பழமொழி

பொய்ச்சொல்லி வாழ்ந்தவனுமில்லை
மெய்சொல்லி கெட்டவனுமில்லை

4.2.3. மும்மடி எதிர்மறைப் பழமொழி

உன் சொல்லில் உப்புமில்லை
புளியுமில்லை
பசையுமில்லை

4.2.4. எதிர்மறை ஏவல் பழமொழி

விருதுபட்டி சனியனை விலைக்கு
வாங்காதே

4.2.5. இரட்டை எதிர்மறை ஏவல் பழமொழி

கேட்டதை எல்லாம் நம்பாதே
நம்பினதெல்லாம் பேசாதே

4.3. உடன்பாட்டு எதிர்மறைப் பழமொழி

ஞாபகம் இல்லை என்று சொல்லுவான்
ஞானம் இல்லை என்று சொல்லமாட்டான்

உற்றார்க்கு ஒரு பிள்ளை கொடான்
நமனுக்கு நாலு பிள்ளை கொடுப்பான்

4.3.1. உடன்பாட்டு எதிர்மறை ஏவல் பழமொழி

நம்ப நட
நம்பி நடவாதே

4.4 வினாப் பழமொழி

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?

4.4.1 இரட்டை வினாப் பழமொழி

பணத்தைப் பார்க்கிறதா?
பழமையைப் பார்க்கிறதா?

4.4.2 மும்மடி வினாப் பழமொழி

இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன?
கூட இருந்த குரங்கு ஆண்டால் என்ன?

4.4.3 வினாவிடைப் பழமொழி

பணம் என்ன செய்யும்?
பணம் பத்தும் செய்யும்

4.5 நிபந்தனைப் பழமொழி

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா

4.5.1 இரட்டை நிபந்தனைப் பழமொழி

அரிசி உண்டானால் வரிசையும் உண்டு
அக்காள் உண்டானால் மச்சானும் உண்டு

4.5.2. இரட்டை நிபந்தனை எதிர்மறை பழமொழி

விடியாமூஞ்சி வேலைக்குப் போனால்
வேலை அகப்படாது
வேலை அகப்பட்டாலும் கூலி அகப்படாது

4.5.3. உடன்பாட்டு எதிர்மறை நிபந்தனைப் பழமொழி

ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும்
ஒட்டாவிட்டால் கட்டிலும் கொள்ளாது

4.5.4. நிபந்தனை வினாப் பழமொழி

பசு விற்றால் கன்றுக்கு வழக்கா?

4.6. பிரிநிலைப் பழமொழி

பணம் இருக்க வேணும்
இல்லாவிட்டால் பத்துசனம் இருக்கவேணும்

7. தமிழ்ப் பழமொழிகள் - உளவியல் ஆய்வு

நாட்டுப்புறவியல் இன்று தனியொரு துறையாக அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. இத்துறை ஆய்வு இன்று பல்துறை ஆய்வாக (Interdisciplinary Study) மலர்ந்துள்ளது. நாட்டுப்புறவியல் துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவஇயல், மொழியியல், வரலாறு முதலிய பல துறைகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இதனால்தான் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளை ஆராய்பவரைச் சமூக விஞ்ஞானி (Social Scientist) என்கின்றனர். இவ்வியலில் தமிழ்ப் பழமொழிகளை உளவியல் நோக்கில் அறிமுகக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டுள்ளது.

மனித நடத்தை பற்றிய ஆய்வு உளவியல் எனப்படும். சமூக வாழ்வில் மனித உறவுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உளவியல் அறிவு துணைபுரிகிறது. உளவியல் முதலில் ஆன்மாவையும் அடுத்து மனத்தையும் பிறகு நனவு நிலையையும் இழந்து தற்போது நடத்தையைக் கைக்கொண்டிருக்கிறது என்று உளவியலுக்கு உட்வொர்த் (Woodworth) விளக்கம் தருகிறார். மனிதனின் ஒவ்வொரு நடத்தையும் ஏதாவதொரு குறிக்கோளோடு அமைகிறது என்றும் மனிதனின் எல்லாவித நடத்தைகளையும் இயல்பூகங்களே ஆக்குகின்றன என்றும் வில்லியம் மக்டூகல் விளக்கம் தருகிறார். மரபினால் பெற்ற நடத்தை, சூழ்நிலையால் பெற்ற நடத்தை என இருவகைப்படும். மரபினால் பெற்ற நடத்தைக் கோலங்களே இயல்பூக்கங்கள் எனப்படுகின்றன. மனிதனின் எல்லாச் செயல்களுமே வாழ்க்கை இயல்பூக்கம், இறப்பு இயல்பூக்கம் என்ற இரண்டு இயல்பூக்கங்களின் அடிப்படையில்தான் இயங்குகின்றன என சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freid) கூறுகிறார்.

நாட்டுப்புறவியல் மரபு எச்சங்களைப் பற்றி ஆராய்கிறது. மரபு எச்சங்களைப் பற்றி மானிடவியல் அடிப்படையிலும் உளவியல்

அடிப்படையிலும் ஆராயலாம். பழக்கவழக்கங்கள், நம்பிக்கை, சடங்குகள் மரபினால் பாதுகாக்கப்படுகின்றன. மக்களது நடத்தையானது மரபு வழிப்பட்டதாகும். ஆப்ரஹாமும் ஓட்டரங்கும் (Abraham and Otta Rank) புராணவியலை உளவியல் பகுப்பாய்வு செய்துள்ளனர். சிக்மண்ட் பிராய்டின் லிபிடோ (Libido) கோட்பாட்டின்படி பாடல்களில் காணப்படும் சிற்றின்பத்தை ஆய்வு செய்யப்படுகின்றது.

இயற்கையைப் போல் செய்தால் இயற்கை தனக்குப் பணிந்து தன் ஏவல் கேட்கும் என மனிதன் நினைத்தான். இயற்கை தமக்கு உதவி செய்ய வேண்டுமாயின் தாமும் இயற்கையைப் போலவே நடக்க வேண்டுமென்றும் தாம் செய்வதைப் பார்த்து அதுபோலச் செய்யும் என நம்பினான். அந்த நம்பிக்கையின் விளைவே வளமைச் சடங்குகளும் வளமை வழிபாடுகளும் ஆகும். இது புணர்ச்சி சடங்கின் அடிப்படையாகும்.

கனவு என்பது தனிப்பட்ட மனிதனின் நிறைவேறாத ஆசை என்றும் கூறுவர். பிள்ளையார் தாயைப் போன்ற பெண் வேண்டும் என்றதும் பிரமன் கலைமகளையே மணந்து கொண்டதும் ஒடிப்பஸ் மனப்பாங்கைக் (Oodipus Complex) காட்டும் என்பர். சிக்மண்ட் பிராய்டு ஒடிப்பஸ் மனப்பாங்கைக் காட்டுவதற்காகப் புராணங்களையும் நாட்டுப்புறக்கதைகளையும் ஆராய்ந்தார். நாட்டுப்புற இலக்கியத்தை மக்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் களமாக உளப்பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர். மனிதனுடைய வாழ்வு முழுவதும் சூழ்நிலையாலும் மரபு நிலையாலும் உருவாக்கப்படுகின்றது. கற்பனைகளும் கனவுகளும் மக்களது வேலைகளையும் துன்பங்களையும் உளவியல் அடிப்படையில் மாற்ற வல்லனவாகும்.

நாட்டுப்புறவியலுக்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பினால் உளப்பகுப்பியல் பள்ளியே (Psycho analylic School) எழுந்தது. சிக்மண்ட் பிராய்டு அடிமனத்தைப் பற்றிய ஆய்வுக்குப் புராணக்கதைகள், தேவதைக் கதைகள், விலக்குகள் (taboos) பழக்கவழக்கங்கள் முதலியவற்றை ஆதாரமாகக்

கொண்டார். புராணக் கதைகளையும் நாட்டுப்புற வழக்காறுகளையும் கனவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளார். ஒடிப்பஸ் மனப்பாங்கினை ஆராய நாட்டுப்புறக் கதைகளையும் புராணக் கதைகளையும் எடுத்தாண்டுள்ளார்.

நாட்டுப்புற வழக்காறுகள் அனைத்தும் நாட்டுப்புற மக்களின் எண்ணங்கள் மற்றும் வேட்கைகளின் பிரதிபலிப்பாகும். நாட்டுப்புற வாழ்வியல் கூறுகள் ஒவ்வொன்றிலும் அவர்களின் மனப்பிரதியைக் காணலாம். இலக்கியமானவை இலக்கியமல்லாதவை மரபு வழிப்பட்டவை போன்றவற்றில் ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட உளப்பாங்குகள் வெளிப்பட்டிருக்கும். இலக்கிய வழக்காறுகளான கதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியவற்றில் வெளிப்படுகின்ற உள்ளத்தின் பாங்குகள் ஒரே தன்மை வாய்ந்தவை. உள்ளத்து எண்ணங்களே இங்கு இலக்கிய வடிவம் பெறப்பட்டுள்ளன. இலக்கியங்களின் அமைப்பு வெவ்வேறு பாணியாக இருந்தாலும் எண்ணங்கள் வெளிப்படும் முறை ஒன்றேதான். கதைகள், பாடல்கள் போன்றவை பல எண்ணங்களின் தொகுத்த வெளிப்பாடு என்றால் பழமொழிகள் ஓரிரு எண்ணங்களின் தனித்த வெளிப்பாடு ஆகும். கதைகள் மற்றும் பாடல்கள் வழியில் எவ்வாறு உணர்ச்சிகள் வெளிப்படுகின்றனவோ அவைபோல் பழமொழிகளிலும் வெளிப்படும்.

நாட்டுப்புற மக்கள் மனத்தில் கதை, பாடல், பழமொழிகள் போன்றவை கூறும் வேட்கை அல்லது வெளிப்படுத்தும் வேட்கை இயல்பானது. அப்படிக் கூறுவதால் உள்ளமானது ஒரு பரவச நிலை அடைகின்றது. எண்ணங்கள் வெளியே வருவதற்கு ஏதேனும் உள்ளக்கிளர்ச்சி வேண்டும். நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் உள்ளக் கிளர்ச்சி மன மகிழ்வே ஆகும். மன மகிழ்ச்சிக்காகவே கலைகள், இலக்கியங்கள் படைக்கப் படுகின்றன. மன மகிழ்ச்சியிருந்தால் தான் வாழ்க்கை இன்பமாக இருக்கும் என்பதை உணர்ந்த நாட்டுப்புற மக்கள் அம்மன மகிழ்ச்சிப் பெறவேண்டிய வழிகளை பல கண்டுணர்ந்தனர்.

நாட்டுப்புற மக்கள் உடலியல் அறிவு பெற்றவர்கள் என்பதை நாட்டுப்புற மருத்துவ முறையினின்றும் அறியலாம். அதேபோல் அவர்கள் உள்ளத்தின் அறிவும் பெற்றவர்கள் என்பதை அவர்களின் வாழ்வியற் கூறுகளிலும் வழக்காற்றியல் வழியில் நின்றும் காணமுடிகின்றது. அதற்குப் பல சான்றுகள் உள்ளன. பழமொழிகள் பலவற்றில் மனத்தின் தன்மைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன.

மனம் வெளுக்க மருந்தில்லை/
கடல் ஆழம் கண்டாலும்
மனம் ஆழம் காண முடியாது
மனத்துக்கு மனமே சாட்சி
நூல் அறுந்தால் முடியலாம்
மனம் அறுந்தால் முடியாது
மனம் போல் வாழ்வு
மனோவியாதிக்கு மருந்துண்டா
நிம்மதியுள்ள மனம் நிலை குலையாது

மேற்கண்ட பழமொழிகளில் மனத்தின் இயல்புகளை வெளிப்படுத்துகின்ற தன்மையினைக் காணலாம். பழமொழிகள் அனைத்தும் அனுபவத்தின் வழியில் உருவாக்கப்பட்டன. உள்ளத்தின் தன்மைகளை ஒருவன் அனுபவத்தின் வழியில்தான் அறிந்திட முடியும். கடல் ஆழம் கண்டாலும் மனம் ஆழம் காணமுடியாது என்று கூறும்போது மனத்தின் அளவைப் பற்றிய நாட்டுப்புற மக்களின் எண்ணத்தினைக் காணலாம். மனமானது வாழ்க்கைக்கு அடிப்படையானது. மனநிலை சரியாக இருந்தால் தான் வாழ்க்கை சரியாக இருக்கும். மனத்தில் நல்ல எண்ணம் இருக்க வேண்டும் நல்ல எண்ணங்களே நல்வாழ்வை உருவாக்கும். தீய எண்ணங்கள் அமைதியற்ற வாழ்க்கைக்கு மூலமாகும். இவைகளையுணர்ந்த நாட்டுப்புற மக்கள் 'மனம் போல் வாழ்வு' என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்துரைத்தனர். இவ்வாறாக மனம் பற்றிப் பலப்பல பழமொழிகள் நாட்டுப்புறங்களில் புழக்கத்திலிருக்கின்றன.

ஒவ்வொரு பழமொழிக்கும் பின்னணியாக ஓர் உண்மையுண்டு. அவ்வுண்மை அனுபவத்தின் வாயிலாகப் பெறப்பட்டவையாகும்.

பழமொழிகள் எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்பதில் ஐயமில்லை. எண்ணங்கள் வெளிப்படும்போது சூழலுக்கேற்ற உணர்ச்சிகளையே வெளிப்படுத்தும். இது உள்ளத்தின் இயல்பாகும். சூழலுக்குத் தக்கபடி கையாளப் படுகின்ற பழமொழிகளில் அச்சூழலின் உணர்ச்சிக்கேற்ற மொழி பொருந்தியிருக்கும். சான்றாக 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும்' என்பது வாழ்த்துகின்ற சூழலில் கூறும் மொழியாகும். பெரும்பாலும் திருமணத்தில் மணமக்களை வாழ்த்தும்போது இப்பழமொழி ஆளப்படுகின்றது. திருமணத்தின்போது மணமக்களும் வாழ்த்துவோரும் ஒருமித்த உளப்பாங்கில் இருப்பர். அதாவது அவர்களின் உள்ளங்களில் எதிர்காலம் பற்றிய உயர்ந்த கற்பனையில் இருப்பர். அவ்விடங்களில் மணமக்களை வாழ்த்தும்போது அவர்கள் கொண்ட கற்பனைக்குத் தூண்டுகோலாக இருந்து வழிநடத்தும். வாழ்த்துவோரும் மணமக்களின் எதிர்கால நலன் கருதியே இம்மொழியைப் பயன்படுத்துவர். எனவே இவ்விரு சாரார்க்கும் இடையேயுள்ள பொதுவான உளப்பண்பு எதிர்கால நலனேயாகும்.

ஒரு பழமொழி கூறுமிடத்தில் இருசாரர்க்கிடையே ஒருமித்த எண்ணவோட்டம் இருப்பது தவிர்க்க முடியாதது. மாறுபட்ட எண்ணமுடைய இடங்களில் ஒரு பழமொழியைக் கையாண்டால் அப்பழமொழி உயர்வுபடாது. அதாவது எதிரியிடம் முறையிடும்போது பதினாறும் பெற்று . . . . எனும் பழமொழியைக் கூறுவர். எனவே இருசாராரின் இடையே ஒருமித்த எண்ணவோட்டம் பழமொழிக்குத் தேவையாகும். இருசாராரிடம் காணப்படுகின்ற ஒருமித்த எண்ண ஓட்டங்களின் அடிப்படையில் பல பழமொழிகள் காணப்படுகின்றன. சான்றாக

சுத்தம் சோறு போடும்
கும்பிடப் போகிற தெய்வம் குறுக்கே வந்தாற்போல
ஒன்று செய்தாலும் உருப்படியாய் செய்ய வேண்டும்

போன்றவற்றைக் கூறலாம்.

இருசாராரிடமுள்ள இணைவரை போல் சூழல் இணைவரை மிகவும் முக்கியமான பண்பாகும். ஒரு சூழலில் பழமொழி கூறும்போது அச்சூழலின் தாக்கம் மனம் பெறுகின்றது. அதன் விளைவாக எழும் பழமொழிகள் பல உள்ளன. சான்றாக,

பந்திக்கு முந்திக்கோ, படைக்குப் பிந்திக்கோ

எனும் பழமொழியில் ஒரு சூழல்தான் பழமொழிக்கு ஆதாரமாகிறது. மேற்கூறிய பழமொழிகளிலிருந்து இவ்வகைப் பழமொழி வேறுபட்டது. காரணம் இப்பழமொழிகள் இருசாராரின் எண்ணங்களின் இணைவரை என்பதைவிட ஒரு சூழலுக்கும் ஒரு மனத்தின் எண்ணத்திற்குமிடையேயுள்ள இணைவரை என்பதே பொருந்தும். அதாவது சூழலும் எண்ணமும் ஒன்றாக இருப்பதையே குறிக்கிறது.

சாவுக்கு வரச்சொன்னால் பாலுக்கு வந்தார் போல
புடிச்சா குடுமி சிரைத்தால் மொட்டை
கொம்பெடுத்தால் குரங்கு ஆடும்
அடியாத மாடு படியாது

போன்ற பழமொழிகளில் ஒருவரின் மனநிலையும் சூழலும் அடிப்படையாகின்றது. எனவே இருசாரார் எண்ணங்களின் இணைவரையும் ஒரு சாரார் சூழல் இணைவரையும் பழமொழிகளில் காணப்படுவதை உணரலாம். இவ்விருவகை வெளிப்படுகளிலும் பழமொழிகளானவை வேறொன்றிற்கு சார்புடைய பொருளையே உணர்த்த வருகிறது. அதாவது அப்பழமொழிகள் கூறுகின்ற பொருள் அவையே அல்லாமல் வேறொன்றாகவே காணப்படுகின்றது. ஆனால் அப்பழமொழிகள் உணர்த்தும் உணர்ச்சிகள் அவையேதான் அன்றி வேறில்லை. சான்றாக,

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

எனும் பழமொழி கூறப்படும் சூழல் வேறாக இருக்கும். அதாவது ஒருவன் எதற்கெடுத்தாலும் அஞ்சுகின்றவனாக இருந்தால் அதைக் குறிக்கப் பயன்படும். ஆனால் இப்பழமொழி அச்ச உணர்ச்சியையே வெளிப்படுத்தும். வேறு உணர்ச்சியை வெளிப்படுத்தாது.

பிடித்த முயலுக்கு மூன்றே கால்

எனும் பழமொழியானது பிடிவாதத் தன்மையை வெளிப்படுத்தும் பழமொழியாகும். ஒருவன் பிடிவாதமாக இருந்தால் அவ்விடங்களில் கையாளப்படுகின்ற மொழியாகும். ஆனால் இப்பழமொழிகள் பொருளில் காணப்படும் 'முயலைப் பிடித்தல்' போன்றவை சூழலுக்குப் பதிலியாகவோ வேறு பொருளை உணர்த்துவதாகவோ வந்திருக்கிறது. ஆனால் அப்பொருள் உணர்த்துகின்ற உணர்ச்சியான பிடிவாதம் மாறாதது. அதாவது பொருள் மாறினாலும் உள்ளத்து உணர்ச்சி மாறாதது. இதுவே பழமொழியின் சிறப்பாகும். ஒரு பழமொழியைக் கூறுமிடம் உணர்த்துகின்ற உணர்ச்சியானது கூறுகின்றவன் உள்ளம், கேட்பவன் உள்ளம், சூழல் ஆகிய களன்களுக்கும் பொதுவானது ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறங்களில் வழங்கப்படுகின்ற பழமொழிகளில் சூழலுக்கேற்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தவல்ல பழமொழிகள் நிறைந்துள்ளன. உணர்ச்சிகள் உள்ளத்தில் இருந்து வெளிப்பட இருவழிகள் தேவை. ஒன்று உடல் வழி, மற்றொன்று கற்பனை வழி. உடல் வழியில் வெளிப்படுபவை மெய்ப்பாடுகள் என்பர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய மெய்ப்பாடுகள் இலக்கியத்தின் வழியிலும் வெளிப்படுவன. பழமொழிகள் மனத்திலிருந்து வெளிப்படும்போது அச்சூழலின் உணர்ச்சிக்கேற்ற பழமொழிகளாக விளங்குகின்றன. சான்றுக்கு சிலவற்றைக் காண்போம்.

ஒவ்வொரு மனிதனும் பல்வேறு சூழ்நிலைகளைச் சந்திக்கின்றான். அவன் சந்திக்கின்ற சூழ்நிலைகளே சூழல்கள்

ஆகின்றன. பழமொழிகளின் சூழல் என்பது மனிதனின் சூழ்நிலைக்கு இணையாகின்றன. அனைத்து மனிதனிடத்திலும் அனைத்து விதமான சூழ்நிலைகள் ஏற்படுவது நியதியாகும். ஒருசில கட்டங்களில் தான் சொல்ல விரும்புவதையோ அல்லது செய்ய விரும்புவதையோ செய்யவும் முடியாமல் செய்யாமல் இருக்கவும் முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை ஏற்படுவதுண்டு. அவ்வேளையில் இரண்டு பக்கங்களுக்கு இடையே தவிக்கின்ற சூழலைக் காணலாம். அந்தக் கட்டத்தில் காணப்படுகின்ற மனநிலை ஒருவித தவிப்பை கொண்டிருப்பதை உணரலாம். அச்சூழலில் கூறப்படும் பழமொழிகள் பல நாட்டுப்புற வழக்காற்றியலில் உள்ளன. குறிப்பாக,

விழுங்கவும் முடியவில்லை துப்பவும் முடியவில்லை
இருதலைக் கொள்ளி எறும்பு போல

போன்றவை கூறலாம். இரு கட்டங்களை உடைய பழமொழிகள் பல உள்ளன. ‘மதில்மேல் பூனை’, ‘ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்’ போன்றவை குறிப்பிடலாம். இவைகளில் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு மனநிலையைக் கொண்டு விளங்குவதை உணரலாம். மதில் மேல் பூனை என்றால் இரு கட்டங்களுக்கிடையே அவனின் மனம் எப்பக்கம் செல்வது என்கிற குழப்ப நிலையை உணரலாம். அதேபோல் ‘ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்’ எனும் பழமொழியில் இரண்டு கட்டங்களின்மீதுள்ள நாட்டத்தை வெளிப்படுத்தும் மனநிலையை அறியலாம்.

மனிதனுடைய உள்ளம் தன்னைத் தானே நிந்தித்துக் கொள்ளாது. தான் ஏதேனும் தவறு செய்துவிட்டால் அதற்கு மாற்றாக பிறர்மீது பழி போடுவதுண்டு. அல்லது தனக்குள்ளேயே சமாதானப்படுத்திக் கொள்ளுவதுண்டு. மனிதன் அன்றாடம் பல தீவினைகளைச் செய்கின்றான். ஒவ்வொரு தீவினைக்கும் பரிகாரம் தேடிக்கொள்கின்றான். மனிதனின் அன்றாட வாழ்வில் புலால் உணவு அத்யாவசியமாகிவிட்ட சூழ்நிலையில் உயிரினங்களைக் கொல்வது வாடிக்கையாகிவிட்டது. மனிதன் மரபு வழிப்பட்டவன்.

அதிலும் குறிப்பாக சமய மரபு வழிப்பட்டவன். சமயங்கள் கூறுகின்ற அறநெறிக் கருத்துக்களில் ஒன்றான உயிரினங்களைக் கொல்லாமை எனும் கருத்து உள்ளத்தில் தேங்கிவிட்ட ஒன்று. புலால் உணவை உண்ண கொலை செய்யப்படும்போது அச்செயல் பாவமென்று கருதுவதுண்டு. சிறு எறும்பினை நசுக்கவும் மனித மனம் நினைப்பதில்லை. அப்படி இருக்கின்ற வேளையில் உணவுக்காக உயிரைக் கொல்லுதல் பாவம் என்று மனம் எண்ணுகிறது. இந்த எண்ணம் உருத்திக்கொண்டிருந்த மனமானது சமநிலை அடையாமல் ஊசலாடுவதுண்டு. அவ்வேளையில் ஏதேனும் ஒரு சமாதானம் தேவைப்படுகிறது.

கொன்றால் பாவம் தின்றால் போச்சு

எனும் பழமொழி இவ்விடங்களில் காணப்படுகின்றது. வாழ்க்கையில் பிறரைத் துன்புறுத்தி முன்னேற வேண்டிய சூழலில்கூட இப்பழமொழி வெளிப்படுகின்றது. இதன் மூலமாக உள்ளத்தின் உருத்தல் நீங்கி உள்ளமானது மேன்மையடைகிறது. கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்று கூறுமிடத்தில் உள்ளத்தில் உறுத்தல் கட்டாயம் நிலவியிருக்கும் என்பதை உணரலாம்.

உள்ளத்தினுடைய செயல்களில் உணர்ச்சிகள் வெளிப்படுவது இயல்புதான். அவ்வுணர்ச்சி வெளிப்படுகின்ற களங்கள் பல உள்ளன. மனிதநேயம் அல்லது மனிதத் தன்மைகூட உள்ளத்து உணர்ச்சியில் ஓர் அங்கமே. இரக்க உணர்ச்சி, நன்றியுணர்ச்சி, வாழும் உணர்ச்சி போன்றவை மனிதத் தன்மையுள் அடங்கும்.

உண்டவன் வீட்டில் இரண்டகம் பண்ணலாமா?

எனும் பழமொழியில் காணப்படுவது நன்றியுணர்ச்சியாகும். உயிர் வாழ்தலுக்கு மிகவும் அவசியமானது உணவாகும். அந்த உணவைப் படைப்போனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்பது காலங்காலமாக மனித சமுதாயத்தில் காணப்படுகின்ற கருத்தாகும்.

இதனால்தான் உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பர். உணவு உண்ட வீட்டிற்குக் கேடு விளைவிக்கக் கூடாது என்பதற்காக சொல்லப்படுவது இப்பழமொழியாகும். இதில் நன்றியுணர்ச்சியே மேலோங்கி நிற்கின்றது. நன்றியுணர்ச்சி நாய்க்கு அதிகம் என்பதால் நாயை நன்றியுணர்ச்சியின் குறியாக நாட்டுப்புறங்களில் எண்ணுவதுமுண்டு.

ஒவ்வொரு மனித மனத்திலும் சிறப்பிக்கப்படுகின்ற உணர்ச்சிகளில் தலையாயது நகைச்சுவை உணர்ச்சியாகும். மனத்தின் உள்ளே நகைச்சுவைச் சூழல் உட்புகுவதால் நகைப்பு ஏற்படுகிறது. நகைச்சுவை உணர்ச்சி என்பது அதை மட்டும் குறிப்பிடுவதில்லை. உள்ளத்தின் உள்ளிருந்து வெளிப்படுகின்ற எண்ணங்களிலும் நகைச்சுவை உணர்ச்சி தாங்கியவையாக இருந்தாலும் அதையும் நகைச்சுவை உணர்ச்சியாகும். நகைப்பை சுவைப்பது மட்டும் நகைச்சுவை ஆகாது. நகைப்பை சுவைக்கச் செய்வதும் நகைச்சுவை உணர்ச்சியாகும். அப்படி உள்ளிருந்து வெளிப்படுகின்ற எண்ணங்கள் நகைப்பைத் தாங்கியிருந்தாலும் அதனுள் நகைச்சுவை உணர்ச்சி மட்டும் ஆதாரமாக இருக்கும் என்பது கிடையாது. சான்றாக,

செய்வது சிரைக்கிற வேலை
நினைப்பது சிரஸ்தார் வேலை

எனும் பழமொழி ஒருவனின் மிகைக் கற்பனையை எள்ளி நகையாடுவதைக் காட்டுகிறது. இதில் எள்ளல் உணர்ச்சியே ஆதாரமாக உள்ளது.

ஆசை இருக்கு தாசில் பண்ண
அம்சமிருக்கு கழுதை மேய்க்க

எனும் பழமொழி முன்னது மொழி போன்று நகைச்சுவை உணர்ச்சியை வெளிப்படுத்தினாலும் விரக்தியடைந்த மனநிலையை மனம் கொண்டிருப்பதை உணரலாம். எனவே பழமொழிகள்

வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளுக்குப் பின்னணியாக வரும் காரணிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு விளங்குகின்றதைக் காணலாம்.

மனித உள்ளமானது தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் இயல்பு கொண்டதில்லை. தான் தோல்வி அடைந்தாலும் பலருக்கு அதை ஒப்புக்கொள்கின்ற தன்மை இருப்பதில்லை. அதற்குக் காரணம் தன்னைப் பற்றிய உயர்வு எண்ணமேயாகும். இந்த எண்ணம் சிலருக்கு அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் இருக்கும். அவரவர் அளவைக்கு ஏற்ப உள்ளத்தின் நெகிழ்வு காணப்படும். தான் இருக்கின்ற நிலையிலிருந்து தவறி விட்டால் அதை ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் இல்லாதவர்களைக் கண்டு,

தடுக்கி விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை

என்று கூறுவர். இப்பழமொழி ஒருவனுடைய உள்ளத்தின் நெகிழ்வின்மையைக் காட்டுகிறது. இதேபோல் இன்னொரு பழமொழியும் உள்ளது.

ஆடத்தெரியாத கூத்தாடி மேடை கோணல் என்றானாம்

இப்பழமொழியில் ஒருவன் தனது இயலாமையை ஒப்புக் கொள்ளாமல் வேறொன்றின்மீது குறையைக் கூறுவதாகும். இச்செயல் புறத்தேற்றம் போன்றது. உள்ளத்தின் எண்ணங்கள் புறத்தோற்றம் பெற்று வெளிப்படுவதும் உண்டு. புறத்தேற்றம் செய்கின்ற உள்ளம் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாத மனநிலையைக் கொண்டதாக இருக்கும். பெரும்பாலும் தற்பெருமை கொண்ட உள்ளங்களே புறத்தேற்றம் செயலினைப் பெறும். இப்படி ஒவ்வொரு பழமொழியிலும் உள்ளத்தின் பாங்குகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற மக்கள் படைக்கும் பழமொழிகள் வாழ்க்கையின் அனுபவத்தை ஆராய்ந்து படைப்பவையாகும்.

ஓயாது சிரிப்பவள் உன்னையே கெடுப்பாள்

எனும் பழமொழிக்குப் பின்னால் ஒருவனின் அனுபவம் இருக்கிறது என்பதை உணரலாம். பெரும்பாலும் பெண்கள் சிரிப்பதை யாரும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

பொம்பளை சிரிச்சாப் போச்சு
புகையிலை விரிச்சா போச்சு

எனும் பழமொழியும் பெண்ணின் சிரிப்பை விமரிசிக்கும் பழமொழியாகும். பெண்களின் உள்ள நிலையைக் கணிக்கப் பல வழிகள் உள்ளன. அவைகளில் சிரிப்பும் அடங்கும். பெரும்பாலும் உள்ளத்தின் இயல்பை வெளிப்படுத்த சிரிப்பு பயன்படுகிறது. அதிலும் பெண்களின் சிரிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதனால் பெண்களின் மனநிலையை சிரிப்பின் வழியால் அறியலாமென்று நாட்டுப்புற மக்களும் உணர்ந்துள்ளனர். அதையே பழமொழிகள் காட்டுகின்றன.

ஒவ்வொரு பழமொழியும் ஏதேனும் உளக் கூற்றினை வெளிப்படுத்துவதாக உள்ளன. அது எந்த உணர்ச்சியினை வெளிப்படுத்துகின்றதோ அதுவே அப்பழமொழியில் காணப்படுகின்ற உளக்கூறாகும்.

இளம் கன்று பயமறியாது

எனும் பழமொழி பயமின்மையான துணிச்சலை உள்ளடங்கிய பழமொழியாகும். அதேபோல் இளஞ் சிங்கம் மத யானைக்கு அஞ்சுமா எனும் பழமொழியும் துணிவை உணர்த்துகின்ற மொழியாகும்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல

எனும் பழமொழியில் ஏமாற்றவுணர்வு வெளிப்படுகின்றது.

எலியும் பூனையும் போல

எனும் பழமொழி பகைமையை உணர்த்தும் பழமொழியாகும். சில பழமொழிகளில் உருவகத் தன்மை சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

புலியை விட கிலி பெரியது

என்கிற பழமொழி காட்டும் உணர்ச்சி சிறப்பானதாகும்.

பழமொழிகளில் விலங்குகள் கையாளப் பட்டிருந்தாலும் அவை மறைமுகமாக மனிதனைக் குறிக்கும். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்கிற பழமொழியில் கழுதை என்பது வேறொரு மனிதனையே குறிப்பதாகும். இதுபோல் விலங்குகளைக் கையாண்டுள்ள பழமொழிகள் மனிதனுக்கு உவமையாகவோ உருவகமாகவோ உணர்த்தப்படுகின்றது. விலங்குகள் வழியிலான உவமையிலும் உருவகத்திலும் அடிப்படை உணர்ச்சிகள் வெளிப்படுவது இயல்பாகும்.

இஞ்சி தின்ற குரங்குபோல

எனும் பழமொழியில் குரங்கு மனிதனுக்கு உவமையாகப் படைக்கப்பட்டுள்ளது. உவமானப் பொருள் வெளிப்படுத்து கின்ற உணர்ச்சி மனிதனின் உணர்ச்சியாகும். குரங்கு அதிர்ச்சியில் முழிப்பதுபோல் மனிதன் முழிப்பதையே இப்பழமொழி காட்டுகிறது.

உள்ளச் செயல்களிலேயே கனவு மிகவும் முக்கியமானதாகும். பழங்காலந்தொட்டே கனவு பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன. பழங்கால மக்களிடமும் நாட்டுப்புற மக்களிடமும் கனவு பற்றிய சிந்தனைகள் நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அந்நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளாகவே காணப்படுகின்றன. சான்றாக,

காலைக் கனவு கட்டாயம் பலிக்கும்

எனும் பழமொழி ஒரு நம்பிக்கை அடிப்படையிலானது. கனவு நம்பிக்கைகளில் சில பழமொழிகளாக வழங்கப்படுவதை உணரலாம். மேலும் கனவு தொடர்புடைய பழமொழிகள் பல உள்ளன. அவை ஒவ்வொன்றும் கையாளப்படுகின்ற விதத்தில் ஏற்றம் பெறுகின்றன. அவைகளில் பல கருத்தாழம்மிக்கதாக உள்ளன.

ஊமை கண்ட கனவு போல

எனும் பழமொழியில் பேச்சு வழியில் வெளிப்படுத்த முடியாத ஊமை தான் கண்ட கனவை வெளிக்காட்ட முடியாமல் தவிக்கின்ற தவிப்பை கருவாகக் கொண்டுள்ளது. மனம் தவிக்கின்றபோது கையாளப்படும் பழமொழியாக இது விளங்குகிறது.

கிடப்பது ஒட்டுத் திண்ணை, கனவு காண்பது மச்சுவீடு

எனும் பழமொழியில் கனவை கருப்பொருளாகக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒருவனுடைய பேராசை, விருப்பம் அல்லது இயலாத ஒன்றை கனவு காண்பதன் வழியால் பெறுவதையே இப்பழமொழி குறிக்கிறது. இவைபோல்,

பகல் கனவு போல
கனவில் கண்ட பணம் கடனைத் தீர்க்குமா?
கனவில் உண்ட சோறு பசி தீர்க்குமா?

போன்ற பழமொழிகளைக் கூறலாம். நாட்டுப்புற மக்கள் தங்களின் அறிவுத் திறனுக்கேற்ற சிந்தனைகளை வழங்காறுகளில் வழங்கியுள்ளனர். எந்த ஒரு சிந்தனையிலும் அறிவு மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் இருக்கும். அவை வெளிப்படுகின்ற சூழலைப் பொருத்து அதன் அளவுகள் மாறுபடும். நாட்டுப்புற வாழ்வியல் கூறுகளான சமுதாய மற்றும் குடும்ப உறவுகளின் பல கட்டங்களில் பழமொழிச் சிந்தனைகள் வழங்கப்படுகின்றன. சான்றுக்கு சிலவற்றைக் காண்போம்.

சமுதாய உறவுகளுக்கு மூலமாக விளங்குவது குடும்ப உறவு முறைகளாகும். தாய் வழிச் சமுதாயம் என்று கூறும்போது சமுதாயத்திற்கு ஆணிவேராக குடும்பம் இருப்பதையே உணர்த்துகின்றது. குடும்ப உறவுகளில் பல உள்ளன. நெருங்கிய உறவு, தூரத்து உறவு எனும் இரண்டு பிரிவுகளுள் அவைகளை அடக்கலாம். உறவு முறைகள் என்றும் ஒரே மாதிரியாக இருப்பவையல்ல. ஒருவன் கொள்கின்ற உறவு அனைவரிடத்திலும் ஒரே தன்மையில் இல்லாமல் அந்தந்த உறவுகளுக்கு ஏற்ப முறைகள் மாறுபடுகின்றன. அதாவது தாய்மீது கொண்ட உறவு முறைக்கும் மனைவிமீது கொண்ட உறவு முறைக்கும் வேறுபாடு உண்டு. குடும்ப அமைப்பில் காலம் காலமாக சில உறவு முறைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. அவைகளில் சில உறவுமுறைகள் சில குடும்பங்களில் முரண்பட்டு விளங்குவதை நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகிறது. அண்ணன் தம்பி உறவுமுறை, மாமியார் மருமகள் உறவுமுறை, அண்ணி நாத்தி உறவுமுறை போன்றவை பலவிடங்களில் முரணாக இருப்பதைக் காணலாம். பழமொழிகளில் பல இம்முரண்பட்ட உறவுகளைக் காட்டுகின்றன. குறிப்பாக மாமியார் மருமகள் பற்றிய பழமொழிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

மாமியார் உடைத்தால் மண்குடம்
மருமகள் உடைத்தால் பொன்குடம்
மகன் செத்தாலும் பரவாயில்லை
மருமகள் தாலி அறுக்க வேண்டும்
மாமியார் குற்றம் மறைப்பு
மருமகள் குற்றம் திறப்பு

போன்ற பழமொழிகளில் மாமியார் மருமகள் உறவு முறைகளிலுள்ள முரணை எடுத்துக்காட்டுகின்றது. நடைமுறை வாழ்க்கையில் மாமியார் மருமகள் முரண் மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது. இது அவர்களிருவருக்குள் இடையேயுள்ள போட்டி மற்றும் பொறாமை உணர்ச்சியே காரணமாகும். இவ்விருவரில் மாமியாரின் ஆதிக்க உணர்ச்சி மேலோங்கியிருப்பதை பழமொழிகள் வாயிலாக அறியலாம். அதாவது மாமியார் உடைத்தால் மண்குடம்,

மருமகள் உடைத்தால் பொன்குடம் எனும் பழமொழியில் மாமியாரின் மேலாண்மையை உணரலாம்.

மகன் செத்தாலும் பரவாயில்லை
மருமகள் தாலி அறுக்க வேண்டும்

எனும் பழமொழி மருமகள்மீது கொண்ட கடுமையான வெறுப்புணர்ச்சியையே இது காட்டுகிறது. ஒரு பெண் தனது பிள்ளை பாசமே உயர்வாகக் கொள்வாள். தான் வாடினாலும் பிள்ளையைக் கவனிப்பதே தாய்ப்பாசமாகும். அப்படிப்பட்ட நிலையில் வாழும் ஒரு பெண் தனது மகன் செத்தாலும் பரவாயில்லை மருமகள் விதவையாக வேண்டும் என்று கூறுவது மருமகள் மீதுகொண்ட வெறுப்புணர்ச்சியின் ஆழத்தை உணர்த்துகிறது. அதாவது பிள்ளைப் பாசத்தைவிட மருமகள் வெறுப்பே அத்தாயின் மனதில் மேலோங்கிய உணர்ச்சி என்ற இப்பழமொழி வாயிலாக அறியமுடிகிறது.

குடும்ப உறவுக் கூறுகளில் மட்டுமல்லாமல் சமுதாய உறவு முறைகளிலும் விருப்பு மற்றும் வெறுப்பு உணர்ச்சிகள் காணப்படுவது இயல்பு. அவைகள் பழமொழிகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. சமுதாய உறவு முறைகளில் சாதிய உறவு முறைகள் சிறப்பிடம் வகிக்கின்றது. சாதிகளில் ஏற்றத்தாழ்வு இருப்பதால் அவை முரண்பட்டிருப்பது இயல்பே. அப்படி முரண்படும்போது ஒரு சாதியினர் மீது மற்றொரு சாதியினர் வெறுப்பைக் காட்டும் போக்கில் பழமொழிகள் உள்ளன. சான்றாக,

கண்டால் காமாட்சி நாயக்கன்
காணாவிட்டால் பூனைத் தின்னி
சக்கிலியன் உறவு உப்புக்குக் கேடு
சாணான் புத்தி சாணுக்குள்ளே
வயிற்று வலியை நம்பினாலும்
வடுகனை நம்பக்கூடாது
திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு
திரவியம் தேடி தேவடியாளுக்குப் போடு

போன்ற பழமொழிகளில் உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரைப் பழிப்பதாகவும் அதேபோல் தாழ்ந்த சாதியினர் உயர்ந்த

சாதியினரைப் பழிப்பதாகவும் வந்திருக்கின்றன. இப்படிச் சாதியினர் தனக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு கருதி முரண்பட்டு *ஒருவரையொருவர் பழித்து அவதூறு செய்யும் வழக்குகளை* இனஅவதூறு என்று மானிடவியலார் கூறுவர்.

மனத்திற்குள் உள்ள உணர்ச்சிகளால் வலிமையான உணர்ச்சிகளுள் வெறுப்புணர்ச்சியும் ஒன்று. வெறுப்புணர்ச்சியை *சிலரிடம் அல்லது சில சமூகத்திடம்* நேரடியாகக் *காட்ட முடியாத* பட்சத்தில் வழக்காறுகள் வாயிலாகக் காட்டும் இயல்பு நாட்டுப்புற மக்களிடம் இருந்து வருகின்றது. மேலோர் கீழோர் மீது காட்டும் வெறுப்புணர்ச்சியும், கீழோர் மேலோரிடம் காட்டும் வெறுப்புணர்ச்சியும் ஒரே நோக்கமுடையவையே. ஒருவன் மீது வெறுப்புணர்ச்சியைக் காட்டினால் கேடு வரும் என்றால் அவ்வுணர்ச்சியைப் பழமொழி வாயிலாகக் காட்டி நிறைவு கொள்வான். இதனால் கண்டிப்பிலிருந்து தப்புவதோடு மட்டுமல்லாமல் உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கும் பழமொழிகள் கையாளப்படுகின்றன.

இவ்வியலில் பழமொழிகளை உளவியல் ஆய்வை அறிமுகக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பழமொழிகளைப் பல்வேறு அணுகுமுறைகளிலும் ஆய்வு செய்யலாம். அவ்வாறு செய்யும்போது ஒரு அணுகுமுறையில் புலப்படாதது மற்றொரு அணுகுமுறை மூலம் புலப்படுவதைக் காண்கிறோம். இதனால்தான் அண்மைக் காலத்தில் பல்துறை அணுகுமுறை விரும்பி வரவேற்கப்படுகின்றது. நாட்டுப்புறவியலில் பல்துறை அணுகுமுறையும் கோட்பாட்டு ஆய்வு அணுகுமுறையும் தொடக்கம் பெற்றுள்ளது. நாட்டுப்புறவியல் ஆய்வு என்பது இன்று பல்துறை இணைந்த ஆய்வாகப் பரிணமித்துள்ளது.

8. பின்னிணைப்பு

தகவலாளர் பட்டியல்

வ. எண்	தகவலாளர் பெயர்	பால்	வயது	ஊர்
1.	சிதம்பரம்	ஆண்	50	தாழையூத்து
2.	இசக்கி	ஆண்	42	தாழையூத்து
3.	சிவசுப்பிரமணியம்	ஆண்	30	அம்பா சமுத்திரம்
4.	சங்கரன்பிள்ளை	ஆண்	48	அம்பா சமுத்திரம்
5.	கோமதி	பெண்	50	சேரன்மாதேவி
6.	ஜெயராமன்	ஆண்	25	”
7.	ராமநாதன்	ஆண்	40	பாபநாசம்
8.	சரசு	பெண்	46	”
9.	பெருமாள்	ஆண்	25	களக்காடு
10.	ராமசுப்பிரமணியம்	ஆண்	65	”
11.	வானமாமலை	ஆண்	42	நாங்குநேரி
12.	இராமானுஜம்	ஆண்	55	”
13.	சுப்பிரமணியம்	ஆண்	22	வள்ளியூர்
14.	இராஜேந்திரன்	ஆண்	36	”
15.	கோமதி	பெண்	40	இராதாபுரம்
16.	ஜெயந்தி ஈஸ்வரன்	ஆண்	52	”
17.	தங்கவேல்	ஆண்	45	முந்நீர்பள்ளம்
18.	மாணிக்கம்	ஆண்	36	”
19.	இலக்குவன்	ஆண்	62	ஸ்ரீவைகுண்டம்
20.	சண்முகசுந்தரம்	ஆண்	39	”
21.	சுப்பையா கம்பர்	ஆண்	44	”
22.	சுந்தரம்	ஆண்	25	பழுவூர்
23.	சரோஜா	பெண்	40	ஆள்வார் திருநகரி
24.	காளியம்மாள்	பெண்	28	”
25.	இராதாகிருஷ்ணன்	ஆண்	52	”
26.	தோத்தாத்திரி	ஆண்	48	”
27.	கோமதி நாயகம்	ஆண்	29	இலஞ்சி

28.	சுப்பிரமணியப்பிள்ளை	ஆண்	62	”
29.	கருப்பையா பாண்டியன்	ஆண்	32	”
30.	தங்கசாமி	ஆண்	52	கீழப்பாவூர்
31.	ஜோசப்	ஆண்	38	நாசரத்
32.	டேனியல்	ஆண்	58	”
33.	ஜோசபின் கலா	பெண்	42	”
34.	வில்லியம்ஸ்	ஆண்	35	டோனாவூர்
35.	மேரி	பெண்	48	”
36.	சாந்தி	பெண்	56	கல்லிடைக்குறிச்சி
37.	முருகதாஸ் தீர்த்தபதி	ஆண்	50	சிங்கம்பட்டி
38.	இராசாமணி	ஆண்	46	பாளையங்கோட்டை
39.	சீத்தாராமன்	ஆண்	55	”
40.	சுந்தரம்	ஆண்	22	”
41.	நடராச சுவாமி	ஆண்	65	”
42.	சிவசுப்பிரமணியம்	ஆண்	51	தூத்துக்குடி
43.	பழனிச்சாமி	ஆண்	56	”
44.	ஆஸ்வால்ட் பெர்ணான்ட்	ஆண்	43	”
45.	மிராண்டா	ஆண்	48	”
46.	பிலிப் மச்சாது	ஆண்	34	”
47.	தெருவீதி நாடார்	ஆண்	58	செட்டியாபத்து
48.	வேல்பாண்டியன்	ஆண்	36	தளவாய்புரம்
49.	ஒத்தையா	ஆண்	52	தங்கம்மாள்புரம்
50.	செல்லம்மாள்	பெண்	28	ஈராச்சி
51.	ஆறுமுகந்தம்மாள்	பெண்	46	”
52.	பிச்சை	ஆண்	25	மாணிக்கவாசல்
53.	பாஸ்கரன்	ஆண்	35	”
54.	பிரபா	பெண்	20	ஆச்சாள்புரம்
55.	வாலாம்மாள்	பெண்	50	”
56.	பானுமதி	பெண்	28	கழனிவாசல்
57.	காந்திமதி	பெண்	45	ஆணைக்குப்பம்
58.	கோவிந்தராஜ்	ஆண்	38	”
59.	ஞானம்	ஆண்	24	”
60.	சந்தானம்	ஆண்	38	பூதலூர்
61.	சீனிவாசன்	ஆண்	45	”

62.	மணி	ஆண்	55	”
63.	மங்கையர்க்கரசி	பெண்	58	”
64.	கோவிந்தராஜ்	ஆண்	25	வல்லம்
65.	கண்ணன்	ஆண்	42	”
66.	நடேசன்	ஆண்	60	”
67.	ரவிச்சந்திரன்	ஆண்	28	”
68.	சாந்தி	பெண்	34	”
69.	தனம்	பெண்	30	”
70.	கமலா	பெண்	46	ஆலக்குடி
71.	இராஜன்	ஆண்	28	திருமலைசமுத்திரம்
72.	பாஸ்கரன்	ஆண்	48	”
73.	இராமலிங்கம்	ஆண்	32	”
74.	அஞ்சம்மாள்	பெண்	43	திருக்கனூர்பட்டி
75.	இராஜமாணிக்கம்	ஆண்	22	”
76.	நடராசன்	ஆண்	36	ஆலக்குடி
77.	இராமன்	ஆண்	42	”
78.	இராமசாமி	ஆண்	55	”
79.	இராசாராம்	ஆண்	55	திருவையாறு
80.	கல்யாணராமன்	ஆண்	32	”
81.	காந்திமதி	பெண்	41	”
82.	இரத்தினம்	ஆண்	28	சரபோஜிபுரம்
83.	இராதாகிருஷ்ணன்	ஆண்	48	”
84.	சீத்தாராமன்	ஆண்	40	மானோஜிப்பட்டி
85.	சந்தானம்	ஆண்	58	”
86.	இராமசாமி	ஆண்	40	பிள்ளையார்பட்டி
87.	கமலா	பெண்	22	”
88.	இராமானுஜம்	ஆண்	62	”
89.	வேணுகோபால்	ஆண்	42	”
90.	பெருமாள்	ஆண்	32	”
91.	தங்கவேல்	ஆண்	48	தஞ்சாவூர்
92.	கமலவேணி	பெண்	42	”
93.	வெங்கிடாச்சலம்	ஆண்	55	”
94.	வசந்தா	ஆண்	46	”
95.	மணி	ஆண்	48	”

96.	கண்ணையன்	ஆண்	42	”
97.	கங்கா	பெண்	28	”
98.	உருக்குமணி	பெண்	34	”
99.	திருநாவுக்கரசு	ஆண்	36	”
100.	சுந்தரேசன்	ஆண்	40	”
101.	வேலுச்சாமி	ஆண்	58	கோத்துலூத்து
102.	கந்தவேல்	ஆண்	52	”
103.	தங்கவேல்	ஆண்	50	”
104.	சண்முகவேல்	ஆண்	62	”
105.	பொம்மையன்	ஆண்	60	”
106.	பெருமாள்	ஆண்	45	”
107.	சுப்பு	ஆண்	48	”
108.	சண்முகவேல்	ஆண்	65	”
109.	சுப்பையன்	ஆண்	62	”
110.	பழனியம்மாள்	பெண்	68	”
111.	பாப்பாத்தி	பெண்	50	”
112.	ஞானவடிவு	பெண்	44	”
113.	தங்கராசு	ஆண்	28	பிச்சம்பட்டி
114.	போஜன்	ஆண்	36	”
115.	சுப்பையா	ஆண்	48	முல்லையம்பட்டி
116.	முல்லைதாசன்	ஆண்	50	”
117.	மோகன்	ஆண்	40	கும்பாம்பட்டி
118.	வைரமுத்து	ஆண்	45	”
119.	மணிமுத்து	ஆண்	50	”
120.	இராசம்மாள்	பெண்	45	”
121.	பெருமாள்	ஆண்	51	கண்ணியப்ப பிள்ளைபட்டி
122.	தொட்டையசாமி	ஆண்	60	”
123.	சுப்பிரமணி	ஆண்	55	”
124.	வேலுச்சாமி	ஆண்	40	”
125.	தமிழ்ச்செல்வி	பெண்	38	”
126.	பானுமதி	பெண்	30	”
127.	மல்லையசாமி	ஆண்	56	”
128.	வெள்ளைச்சாமி	ஆண்	48	கொப்பையம்பட்டி

129.	கந்தசாமி	ஆண்	55	மொட்டனூத்து
130.	மணி	ஆண்	50	”
131.	திருமல் ராஜ்	ஆண்	65	”
132.	கணேசன்	ஆண்	45	பெரியபுதுப்பட்டி
133.	நடராசன்	ஆண்	52	”
134.	கோவிந்தராசு	ஆண்	48	”
135.	தாசு	ஆண்	68	”
136.	சண்முகவேலு	ஆண்	42	”
137.	தொப்பணன்	ஆண்	48	வரதராஜபுரம்
138.	துரைராஜ்	ஆண்	65	”
139.	சத்தியமூர்த்தி	ஆண்	48	”
140.	கருப்பதேவர்	ஆண்	50	”
141.	அலகுசேர்வை	ஆண்	60	மறவப்பட்டி
142.	விருமாண்டி	ஆண்	48	”
143.	இராஜு	ஆண்	55	”
144.	சேதுராமன்	ஆண்	50	போடிதாசன்பட்டி
145.	உமா	பெண்	49	”
146.	குருசாமி	ஆண்	40	”
147.	தங்கவேல்	ஆண்	58	சித்தைய கவுண்டன்பட்டி
148.	இராமுதாய்	பெண்	47	”
149.	மல்லக்கா	பெண்	42	”
150.	சுப்பையா	ஆண்	55	”
151.	அமாவாசை	ஆண்	48	கதிர் நரசிங்கபுரம்
152.	பொம்மக்காள்	பெண்	42	”
153.	பொம்மையன்	ஆண்	68	”
154.	அழகர்சாமி	ஆண்	60	கொண்டம்ம நாயக்கன்பட்டி
155.	வெங்கடசாமி	ஆண்	28	”
156.	ரெங்கசாமி	ஆண்	42	”
157.	இராமராஜு	ஆண்	36	”

9. துணைநூற்பட்டியல்

ENGLISH

1. Abrahams, Roger, D.	1972	'Proverbs & Proverbial Expressions' In Folklore and Folklife An Introduction, Ed., Richard M. Dorson, Chicago University Press
2. Bascam, William	1970	'Proverb Collecting in Africa' Proverbium 15, 434 - 435
3. Bech, Brenda, E.F.	1979	'Body imagery in the Tamil Proverbs of South India' Western Folklore XXXVIII 21 - 41
4. Dorson, Richard (Ed)	1972	Folklore and Folklife An Introduction, Chicago University Press.
5. Dundes, Alan	1965	The Study of Folklore, New Jersey, Prentice Hall Inc.
6.	1978	Essays in Folkloristics, Folklore Institute.
7.	1975	'On the structure of the Proverbs' Proverbium 25, 961-973
8. Dundes, Alan & Ojo Arewa	1964	'Proverbs and Ethnography of speaking Folklore' American Anthropologist, 66:6, 70 - 85

9. Handoo, Jawaharlal	1978	Trends in Folklore Institute of Kannada Studies, University of Mysore.
10. Jensen, Herman	1897	A Classified collection of Tamil Proverbs Trubner &Co., London.
11. Lazarus, John	1894	Dictionary of Tamil Proverbs, Madras.
12. Leach, Maria (Ed)	1972	Standard Dictionary of Folklore, Mythology & Legend, Funk & Wagnalls, New York.
13. Long, J.	1881	Eastern Proverbs & Emblems, London.
14. Maranda, Pierre & Kongas Maranda, (Eds)	1976	Structural analysis of Oral Tradition, University of Pensyloania Press
15. Meenakshi Sundaram (Mrs.)	1984	Konku Proverbs A Study, M. Guhen & M.Adi, Vellakinaru
16. Milner, George	1970	'From Proverb to Riddle and Vive Versa' Proverbium 15, 500 - 501.
17. Percival, P.	1874	Tamil Proverbs with their English Translation, Madras.

18. Propp, Vladimir	1984	Theory and History of Folklore, Manchester University Press
19. Ray B. Browne		'The wisdom of many - The Proverb & Proverbial expression American Folklore
20. Sakthivel, S.	1976	Folklore literature in India, Meena Pathipagam, Kothaloothu
21. Sakthivel, S.	1984	'A Study of Tamil Proverbs' 16th Ayvuk Kovai, Vol. 3, 202 - 207, New Delhi.
22. Sakthivel, S.	1984	'History of South Indian Folk Literature', Indian and Japenese Folklore Kansai University of Foreign Studies, Japan.
23. Sakthivel, S.	1989	Folklore study of Tamil Nadu, Tamil Folklore Association of India, Annamalai Nagar.
24. Sakthivel, S.	1995	Glimpses into Tamil Folklore, Tamil Folklore Association of India, Annamalai Nagar
25. Shanthi, G.	1980	'Proverbs - A brief Sketch' Ayvukkovai, III.
26. Taylor, Archer	1967	'The Collection and Study of Proverbs' Proverbium 8, 161 - 176.

27. Taylor, Archer 1975 Selected writings on Proverbs, Ed. by wolfgang Mieder.

28 Vatuk, V.P. 1979 Studies in Indian Folk Traditions, Manohar Publications, New Delhi.

தமிழ்

29. அனவரதவிநாயகம் பிள்ளை 1913 பழமொழி அகராதி

30. இலட்சுமணன் கே.எஸ். 1962 தமிழகப் பழமொழிகள்

31. சக்திவேல், சு. 1989 திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறவியல் அளவாய்வு (திட்ட அறிக்கை) தமிழ்ப் பல்கலைக்கழகம்

32. 1995 நாட்டுப்புறவியல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

33. சண்முகசுந்தரம் சு. 1988 நாட்டுப்புற இலக்கிய வரலாறு மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

34. 1989 நாட்டுப்புற இயல் மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

35 சரளா இராசகோபாலன் 1992 பழமொழிகளில் பெண்மை ஒளிப் பதிப்பகம், சென்னை

36. சாலை இளந்திரையன் 1975 சமுதாய நோக்கில் பழமொழிகள்

37. செயராமன், ந.வீ. 1980 பழமொழிகளில் வேளாண்மை அறிவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.

38. சேதுப்பிள்ளை, ரா.பி முதலானோர் (தொ) 1962 தென்மொழிகளில் பழமொழிகள், சாம்ராஜ் பிரசுரம், சென்னை.

39. சௌந்தர பாண்டியன், எஸ். 1988 தமிழில் பழமொழி இலக்கியம் ஸ்டார் பிரசுரம், சென்னை.

40. தட்சிணாமூர்த்தி,அ. 1987 தமிழர் நாகரிகமும் பண்பாடும் ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

41. பக்தவத்சல பாரதி, சீ.1990 பண்பாட்டு மானிடவியல் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

42. பெருமாள், வ. 1987 பலநோக்கில் பழமொழிகள், இலக்கிய பதிப்பகம், சென்னை.

43. மீனா, ச 1983 தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், எம்ஃபில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்

44. முருகன், இ.ப. 1992 புதிய நோக்கில் பழமொழி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை.

45. லூர்து, தே. 1988 நாட்டார் வழக்காறுகள் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

46. வர்னமாமலை, நா 1987 பழங்கதைகளும் பழமொழிகளும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை.

47. வெற்றிச்செல்வன் 1986 உடையியல்
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.

48. ஜெகந்நாதன், கி.வா. 1990 தமிழகப் பழமொழிகள்

இலக்கியம்

49. 1990 அகநானூறு
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை.

50. 1922 இனியவை நாற்பது
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

51. 1944 இன்னா நாற்பது
சக்தி காரியாலயம், சென்னை

52. 1980 ஐங்குறுநூறு
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை.

53. 1958 கம்பராமாயணம்
மர்ரே அண்டு கம்பெனி
சென்னை.

54. 1949 கலித்தொகை
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

55. 1973 காப்பியம்
(வளையாபதி, குண்டலகேசி,
உதயணகுமார காவியம்)
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

56. 1904 குமரேச சதகம்
பத்மனாப அவிலாச
அச்சுக்கூடம்
சென்னை.

57. 1955 குறுந்தொகை
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை.

58. 1960 குற்றாலக் குறவஞ்சி
மர்ரே ராஜம் பதிப்பகம்
சென்னை.

59. 1985 சிலப்பதிகாரம்
(உ.வே.சா. ஆராய்ச்சி குறிப்பு
உரையுடன்) தமிழ்ப்
பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

60. 1986 சீவகசிந்தாமணி
(உ.வே.சா. ஆராய்ச்சி குறிப்பு
உரையுடன்) நிழற்படப்பதிப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

61. 1926 தண்டலையார் சதகம்
வாவிள்ள இராமசாமி
சாஸ்த்ருலு சன்ஸ்
சென்னை.

62. 1963 தாயுமான சுவாமிகள்
திருப்பாடல்கள்
ஆறுமுக நாவலர் அச்சகம்,
சென்னை.

63. 1982 திருக்குறள்
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

64. 1977 திருத்தொண்டர் கதை
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

65. 1992 திருவருட்பா
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.

66. 1981 பெரும்பாணாற்றுப்படை
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

67. 1987 பொருநராற்றுப்படை
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

68. 1981 மணிமேகலை
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை

69. 1977 மதுரைக் காஞ்சி
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

70. 1977 வில்லிபாரதம்
வர்த்தமாணன் பதிப்பகம்,
சென்னை.

71. 1896 ஜெயங்கொண்டார் சதகம்
ஆறுமுக விலாச புத்தகசாலை
சென்னை.

72. 1988 தேவாரம் (1 முதல் 7 திருமுறை)
ஸ்ரீ காமகோடி ஆய்வு மையம்
கும்பகோணம்.

73 1943 தொல்காப்பியம்
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

74. 1968 நந்திக் கலம்பகம் (மறுபதிப்பு)
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

75. 1989 நற்றிணை
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை.

76. 1950 பதிற்றுப்பத்து
தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை

77. 1980 பரிபாடல்
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம், சென்னை.

78. 1985 புறநானூறு (நிழற்படப்பதிப்பு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

79. 1992 பாரதியார் கவிதைகள்
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

அண்மைவெளியீடுகள்

அறிவியல் களஞ்சியம் தொகுதி – 13	700.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 5	150.00
உயிர்வேதியியல்	270.00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 1	210. 00
குழந்தை நல மருத்துவம் தொகுதி – 2	170. 00
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 2 (மறுபதிப்பு)	400.00
வாழ்வியல் களஞ்சியம் தொகுதிகள் 5 – 9 (மறுபதிப்பு) ஒவ்வொன்றும்	700.00
அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு)	600.00
திருமுறைத் திருநெறி தொகுதி – 1	105.00
தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி–2	85.00
வைத்திய சிந்தாமணி	80.00
அயல்நாட்டவர்க்குத் தமிழ் – கருத்துப் பரிமாற்ற இலக்கணம்	70.00
சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை	70.00
தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 1 (மறுபதிப்பு)	200.00
உலகநாடுகளில் தமிழ்ப் பண்பாடு	50.00
108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும்	50.00
தமிழக அறிவியல் வரலாறு	60.00
இசைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1	60.00
தன்வந்தரி வைத்தியக் கும்மி	50.00

தொடர்பு முகவரி :

இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)

தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221